# SWARNA SUNDARAM

## AN ILLUSTRATED DETECTIVE TAMIL NOVEL.

# சுவர்ண சுந்தரம்

நான்கு சித்திரப்படங்களுடன்
கூடிய ஓர் துப்பு அறியும்

## இனிய தமிழ் நாவல்

முதல் பாகம்


*By* **S. P. K. NANJAPPA COUNDER**
Author of "RATHAI"


---

இஃது
பசுவேகவுண்டன்புதூர் 'ராதை' அல்லது
"தைரியமுள்ள கன்னிகை" என்னும்
நாவலை இயற்றிய
**S. P. K. நஞ்சப்ப கவுண்டர்**
அவர்களால் இயற்றப்பட்டது.


கோபிசெட்டிபாளையம்
'மணியன்' அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.



Rights Reserved]



1925 [விலை ரூ. **1-0-0**
Postage Extra.

# விளம்பரம்.

---

## 'ராதை'

### அல்லது

## தைரியமுள்ள கன்னிகை.

நண்பர்களே!

இந்நாவலின் குண விசேஷத்தைக்குறித்து அதிகமாகக் கூறவேண்டுமென்னும் அபிப்பிராயம் எனக்கில்லையாயினும், இதனிற் பொதிந்துள்ள குணங்களிற் சிலவற்றைக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இதனுள், குழந்தைகளுக்குக் கொடுமை செய்யும் மாற்றாந்தாய்களின் மான ஆனியும், பொறாமைக்காரர்கள் பிறருக்குத் தாம் வெட்டிய குழியில் தற்செயலாய் தாமே வீழ்ந்து தத்தளிப்பதும், குடியரிடம் கொஞ்சி உறவாடும் பிறர் கடைசியில் கோவிந்தம் போடும் சிங்காரமும், நூதன நாகரீகமடைந்த நாரீமணிகள் நாசமடைந்த சோகமும், களவுத் தொழிலைக் கடைப்பிடித் தொழுகுபவர் கடைசியில் எப்படியும் காலிற்றளை பூண்டு கல்விக் கழகத்திற்குச் செல்வதும், கற்பு நலம், கல்வி, பரோபகாரம் முதலிய சற்குணம் நிறைந்த ஸ்திரி புமான்கள் கஷ்டமுறினும், கடைசியில் அற்புதானந்த மடைவதும், மிக்க நவநவமாய்க் கூறப்பட்டிருப்பதுடன், கதையினூடே ஆங்காங்கு அநேக உலகானுபவ ஆராய்ச்சிகளும் ஸ்திரி புருஷர்களுக்கு அவசியமான பல நீதிகளும், கூறப்பட்டுள்ளன. இதிலுள்ள ஒவ்வொரு விஷயமும் ரசம் நிறைந்த கற்கண்டுத் துண்டுகள் வாசிக்க மிகு ருசிகரம். தவிர பிரபஞ்ச விலாசமென்னும் 143 குறிப்புகளும் அடங்கியதாய், எளிய நடையில் உன்னதமான கடிதத்தில் அச்சிடப்பட்டு ஆசிரியர் படத்துடன் தயாராயிருக்கிறது. உடனே அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள். புஸ்தகம் 1-க்கு விலை ரூ 1-4-0 வி.பி. சார்ஜ் வேறு.

S. P. K. நஞ்சப்ப கவுண்டர்,

ஹார்மோனியம் மேக்கர் & ரிப்பேரர்,

கள்ளிப்பட்டி போஸ்டு

கோபிசெட்டிபாளையம் மார்க்கம்,

# SWARNA SUNDARAM

## AN ILLUSTRATED DETECTIVE TAMIL NOVEL.

# சுவர்ண சுந்தரம்

நான்கு சித்திரப் படங்களுடன்
கூடிய ஓர் துப்பு அறியும்
இனிய தமிழ் நாவல்

முதல் பாகம்


*By* **S. P. K. NANJAPPA GOUNDER**
Author of "'RATHAI"


---


ACL-MD
00884


இஃது
பசுவேகவுண்டன்புதூர் 'ராதை' அல்லது
"தைரியமுள்ள கன்னிகை" என்னும்
நாவலை இயற்றிய


S. P. K. நஞ்சப்ப கவுண்டர்
அவர்களால் இயற்றப்பட்டது.



கோபிசெட்டிபாளையம்
'மணியன்' அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.


Rights Reserved] 1925 [விலை ரூ. 1-0-0

Postage Extra.

மதுரை காமராசர் பல்கலைக்கழ...
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழ்த்துறை

PRINTED AT

THE 'MANIAN' PRESS,

GOBICHETTIPALAYAM.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 694
நன்கொடை எண்: 694



S. P. K நஞ்சப்ப கவுண்டர்.

# முகவுரை.

எப்படியோ குமர குருபரனது இன்னருளால் இந் நவீனகம் முற்றுப் பெற்று வெளியேறி உலவலாயிற்று. இந் நூலை அச்சேற்ற ஆரம்பித்த சில காலத்திற்குப் பிறகு கால வித்தியாசத்தால் பல இன்னல்கள் ஒன்றன் பின் ஒன்ருய்த் தோன்றி அடியேனை மிகவும் அவஸ்தைக் குள்ளாக்கின. அத்தருணம்—பகலேயன்றி இரவிலும் கூடக் காகிதம் பென் சலுடன் படுக்கையில் சயனித்த வண்ணம் சிலவேளை உறங் குவதும் உறக்கம் நீங்கிய வேளை மனதுக்குத் தோற்றமாகும் விஷயங்களை அப்போதைக்கப்போது எழுதுவதுமாக அரும் பாடுபட்டு நெடுநாள் முயற்சி செய்து பூரணப்படுத்திய—இந்நூல் ஒரு வேளை பிரசுரமாகாமலே நின்றுவிடுமோ என் றும் கூடப் பலமுறை எண்ணினேன். அவ்வாறு நினைக் கும் போதெல்லாம் அடியேனது மனம் அனலிடுமெழுகென உருகும். எனினும், கஷ்டங்களையும் துயரங்களையும் பொ ருள் விரையத்தையும் சிறிதும் இலட்சியஞ் செய்யாமல் ஒரே பிடிவாதமாய் இறைவனருளை முன்னிட்டு முயற்சி செய்து இந்நூல் அச்சிட்டுப் பூரணப்படுத்தலாயிற்று. அடி யேன் நோயுற்று பாயும் படுக்கையுமாக இருக்கும் போது அச்சுயந்திரசாலையிலிருந்து பிழை திருத்துவதற்காக வரும் புரூப்புகளை அடியேன் திருத்த இயலாமல் பிறரால் இந் நூலின் பெரும்பாகமும் திருத்தும்படி நேரிட்டதால் இதில் சிற்சில எழுத்துப் பிழைகள் நேர்ந்தன. ஆயினும், இவ் வாறு நிகழ்தல் சர்வசாதாரணமென்பதை நூலொடு பழகிய

நுண்ணறி வாளர்க்கு அடியேன் கூற வேண்டுவதில்லை. இதற்குமுன் அடியேன் எழுதிய "ராதை" என்னும் நவினகத்தை பல சகோதர சகோதரிகள் மிக்க உள்ளன்புடன் ஆதரித்ததுமன்றி நேரிலும் கடித மூலமாகவும் மிகவும் புகழ்ந்துரைத்தார்கள். சில பத்திரிகைகளும் கூட இந்நூலைக் குறித்து மேன்மையாக மதிப்புரைகள் எழுதியிருக்கின்றன. அதைப்போலவே இந்நவினகத்தையும் ஆதரிப்பார்களென்று நம்புகிறேன். இந்நூலைக் குறித்துச் சகோதர சகோதரிகள் செய்யும் இகழ்ச்சியோ புகழ்ச்சியோ யாவும் சர்வலோக ரக்ஷகனாகிய ஜெகதீசனை சேர்ந்ததேயன்றி அடியேனைச் சார்வனவல்ல. இந்நவினகத்தை அச்சிடத் துவக்குமுன் பரிசோதித்து கால சகாயம் புரிந்த கோபிசெட்டிபாளையம் மணியன் பிரஸ் மானேஜரான மகா-ா-ா-ஸ்ரீ N. வெங்கிடரமணய்யங்கார் அவர்களுக்கும், கூடியவரை குறைந்த சார்ஜுக்கு அடியேனது அபிப்பிராயப்படி அச்சிட்டுக் கொடுத்த மணியன் பிரஸ் புரொப்ரைட்டரான மகா-ா-ா-ஸ்ரீ K. S. சுப்ரமண்ய அய்யர் அவர்களுக்கும், அடியேன் மனப்பூர்வமான வந்தனம் செய்கிறேன். எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பானாக.

சுபம்! சுபம்! சுபம்!

S. P. K. நஞ்சப்பகவுண்டன்.

# மதிப்புரை.

ஏழைகள் மாட்டு மிக்க இரங்கிய மனமுடையவராய் கல்விக் கழக ஸ்தாபிதத்தின் பொருட்டும், பிணியாளர்க்குப் பேரமுதன்ன பெரியவைத்தியசாலைஸ்தாபிதத்தின் பொருட்டும் பெரும்பொருள் உதவியவராய்,இலமாயிருக்கும் கோவிலை ஜீரணோத்தாரணம் செய்து சேர்த்திவசித்தவராய், ஆற்று வெள்ளத்தால் அடிபட்டு அவஸ்தையடைந்த பல அனுதைக்குடிகளுக்கும் மற்றும் பல எளியோர்கட்கும் வீடுகள் கட்டுதற்குப்போதிய நிலமும் தனமும் கொடுத்து ஓர் ஊரையே உற்பத்தி செய்த உன்னத குணமுடையவராய் மற்றும் பல சத்கருமங்களுக்குத் தம்மாலியன்ற உதவி புரிந்தவராய், சாந்தஸ்தராய், லக்ஷ்மீ கடாக்ஷ முடையவராய் லோகோபகாரமான எனது காரியங்களில் மிகுந்த பிரேமையும் பற்றுதலுமுடையவராய், என்மீது அளவற்ற பிரியமும் வாத்ஸல்யமும் ததும்பி நிற்கும் உள்ளத்தினருமான பங்களாப்புதூர்.

ஸ்ரீமான்

**தாசப்ப கவுண்டர் அவர்கள்.**

அடியேன் நெடுநாள் சிரமப்பட்டெழுதிய இந்நூலை, நமது அன்பர்களின் கரங்களில் நின்றுனந்தத் தாண்டவம் புரியுமாறு அற்புதாலங்கிர்தமாய் அச்சுவாகன மேற்றுதற்கு

ஆன பெரும் பொருட் செலவில், ஒரு பகுதியாம் 100 ரூபாய் கொடுத்து உதவியிருக்கின்றார். அரிது அரிது மானிடராய் பிறத்தலரிது. என்று அரியது கூறிய ஔவையாரது அமிர்த வாக்கின்படி, நம் குலத்தில் பரோபகார குணத்துடன் அரிதாய் அவதரித்த இவருக்குத் தீர்க்காயுளையும், சர்வ போக பாக்கியங்களையும், பரோபகார குணத்தையும், மென்மேலும் பாலிக்குமாறு இறைவனடியை எஞ்ஞான்றும் இறைஞ்சுகின்றேன்.

**S. P. K. நஞ்சப்ப கவுண்டன்.**

# அர்ப்பணம்.

உயர் நலஞ்சார்ந்த உத்தமியாய், உள்ளம் உவப்ப வந்த விருந்தோம்பும் வனிதையாய், இனி வரும் விருந்தை எதிர் பார்க்கும் ஏந்திழையாய் அடியேற்கு இனியளாய், அன்புடைய ளாய், பதி சொற்றவறாத பாவையாய், அடிவருடிப் பின் தூங்கி முன்னெழுந்த பெண்மணியாய், சேற்றில் செந்தா மரை உதித்தது போலச் சிறந்த குணமுடையவளாய், பர்த்தா வுக்கேற்ற பதிவிரதையாய், பாருலகோர் கொண்டாடும் பணி தல் குணமுடையவளாய் பரிமளித்திட்ட

## கெம்பம்மாள்.

எனும் கண்ணே! கண்ணின் மணியே! கண்ணுக்குள் நின்றாடும் பாவாய்! செல்வம் சிறந்தோளிர் சிறப்புற்ற குடும்பத்தில் பிறந்தும் சிறிதும் கர்வமற்ற மங்கையே!



நின் போல் பொறுமையற்ற குணம் டைத்த பூவையரைப் பூவுலகில் காண்பதருமை. ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்க்கும் உன்னத குணமுடையாய்; நின் அருமைக் குழந்தைகளை அவனியிலநாதையா யலையவிட்டு அவ்வுலகெய்தினை; அறுசுவை யுண்டியை என் அருகிலமர்ந்தன்புடன் ஊட்டினை; நின்னொடு என் சுகம் சந்தோஷம் உற்சாகம் யாவும் அகன்றன. இம்மண்ணகத்தில் நீ என் கண்ணகத்தே காணாயாயினும் என் மனத்தகத்தே நின்னை மறவாது வைத்துளேன்; மணிவல்லியே! இச் சுவர்ண சுந்தரமென்னும் சுந்தரநவீனகத்தை நின் ஞாபகார்த்தமாக என்றும் நிலவிடுமாறு ஸமர்ப்பிக்கிறேன்.

அவ்வுலகில் என்றுமே நீ வாழி! வாழி!

S. P. K. நஞ்சப்பகவுண்டன்.

காமராசர் பல்கலைக்கழகம் ... தமிழ்ப்பல்துறை

சுந்தர கணேசாய நம:

# சுவர்ண சுந்தரம்.

சுந்தரஞ்சேர் செந்தமி ழாற்,சுவர்ண சுந்தரமாம்
விந்தைமிகு மிச்சரிதம் விள்ளுதற்கு—வந்துதவும்
மும்மதத்து வாரணமாம் முக்கண்ணன் றாள்மலரை
நம்மகத்து வைப்பாம் நிதம்.

பூவுலகில் யாவருமே பூரித்துப் போற்றவல்ல
தாவுபுக ழிக்கதையைச் சாற்றுதற்கு—யாவுநிறை
அம்பிகையா ளீன்றெடுத்த அங்குச பாசமேந்தும்
தும்பிமுகன் றாளே துணை.

## 1-வது அத்தியாயம்.

## மையலிற் பட்டார்க்கு மதியுண்டோ?

பரம்பொருளின் படைப்பிற் றோன்றியதும், பொறுமையும் சத்தியமும் அமையப்பெற்றதும், பூவுலகையே பஸ்மீகரமாய் எரிக்கும் சக்திவாய்ந்த வடவைக் கனலை அத்து மீறவொட்டாமல் அடக்கிக்கொண்டிருக்கும் ஆற்றலுடையதும், தனது மெய்ம்மீது தவழ்ந்து வரும் தென்றலிலுலாவும் மாந்தர்க்குப் பெரிதும் சுகமும் ஆரோக்கியமும் அளிக்கும் ஆற்றலுடையதும், பிரபஞ்சத்திற்கே

ஆடையெனத்திகழும் அழகுடையதுமான பரந்த கடலினருகேயுள்ள விசாலமாகிய மணற்றரையில், ஒருநாள் சாயங்காலம் 5 மணிக்கு பாலர் பாலிகைகள் முதல் யௌவனர் வயோதிகர்வரை அநேக ஜனங்கள் உலாவிக்கொண்டிருந்தனர். ஆங்கு குழுமியிருந்த மக்களின் திரளிலிருந்து பிரிந்து, செவ்விய நிறமும் அழகிய தோற்றமும் 18 அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத்தக்க வயதுடையவனுமான ஒரு வாலிபன் காதுகளிலும் கைகளிலும் சீமைக்கமலங்கள் இழைத்த கடுக்கன் தோடா முதலிய அணிகளும், கல்லிழைத்த பொன்கடியாரம் சங்கிலி முதலியவைகளுடன் நாணயமான உடைதரித்து, கடலின்னோரம் மணற்றரையினூடே உல்லாசமாக நடந்து சென்றான். அவன் கூட்டத்தைவிட்டு சிறிது தூரம் சென்றதும், அவனுக்குச் சொற்பதூரத்தில் பளீரெனத்தோன்றி மறையும் மின்னற்கொடிபோல, உருக்கிவார்த்த தங்கப்பிரதிமையொத்தவளும், சோபிதமும் இனிமையும் இங்கிதமும் திரண்டுருவெடுத்ததென ஒரு மங்கைநல்லாள் ஒரு வயோதிகரின் கரத்தைப்பற்றிக்கொண்டு அவருடன் கொஞ்சிக்கொஞ்சி—சிரித்துச்சிரித்து—சம்பாஷித்துக்கொண்டும், அவளுடைய பரந்த மார்பில் பூரித்துப் பூரித்து விம்மி கச்சால் இறுக்கப்பெற்று, இளமையும் மேன்மையும் மழமழப்பாயதுமான பருத்த ஸ்தனங்களின் பாரத்தை சுமக்க வாற்றாது மெல்லிய இடைதுவள, மானெனமருண்டு மயிலென நடந்து வந்தாள்.

இப்பெண்ணின் அழகிய தோற்றத்தைக் கண்ட வாலிபன் மயங்கி அப்படியே ஸ்தம்பித்து நின்றான்.

அவனது தேகத்தில் ஓடிக்கொண்டிருந்த இரத்தம் உறைந்து சிறிதுநேரம் இரத்த ஓட்டம் நின்றது. மனம் கலங்கியது. அறிவு தடுமாறியது. அவனது தடுமாற்றத்தையும் தவிப்பையும் கண்டு அவ்விள நங்கையுடன் வந்த, —பருத்த தலையும் சிறுத்த குடுமியும், ஜப்பான் என்ற கருப்புச் சாயம் போலக் கரிய நிறமும் நல்ல மணற்றரையில் பிடுங்கிய வள்ளிக்கிழங்குபோல் உப்பிப் பருத்தவருமாகிய அவ்வயோதிகர் தமது தோளைச்சற்றுக் களிப்போடு குலுக்கிக்கொண்டு வாலிபனருகில் சென்று தம்பி! உன்னை எங்கோ பார்த்ததுபோல் இருக்கிறது. ஆனால் எவ்விடமென்று ஞாபகமில்லை. எனப்புன் முறுவலோடு பகர்ந்தார்.

வாலிபன் உறங்கி விழித்தவனைப்போல உணர்வுபெற்று, ஐயரே! நான் இவ்வூரிலுள்ள பிரக்யாதிபெற்ற இலட்சாதிபதியான காலஞ்சென்ற சிங்காரவேலு கவுண்டர் குமாரன். என் பெயர் சுந்திரராஜு கவுண்டனென்று கூறுவார்கள்; என்றான்.

அடடா! சிங்காரவேலு கவுண்டர் குமாரனா!! அப்படிச்சொல்லு. நான் யாரோவென்றல்லவா இருந்தேன். சிங்காரவேலு கவுண்டர் மகா தாதா. எனக்கும் அவருக்கும் பாலிய நேசம். என் வார்த்தையை அவர் வேதவாக்காக மதிப்பார். உன்னைக்கண்டது எனக்கு மெத்த சந்தோஷம். இனி உன்னை என் குமாரனாகவே பாவிப்பேன்; என்றார் வயோதிகர். சுந்திரராஜு கவுண்டன் சிறிது வெட்கத்துடனும் அச்சத்துடனும் வயோதிகரை நோக்கி ஐயரே!

தாங்கள் யார் என்பதையும், தங்களருகில் நிற்கும் அணங்கு யாவளென்பதையும், என்னிடம் கூறக்கூடுமாயின் தயை செய்து தெரிவிக்கக்கோருகிறேன்; என்றான்.

ஆ சுந்திரராஜா! உன்னிடம் கூறுவதில் யாதும் ஆக்ஷேபமிலது. இதோ என்னருகில் நிற்கும் இச்சுந்தராங்கி இவ்வூரிலுள்ள பெயர்பெற்ற தாசி கமலாம்பாளின் குமாரத்தி கோகிலாம்பாள். இவள் மிகவும் நன்னடக்கையுடையவள். தேவகிரி ஜமீன்தாரென்ன, பட்டுக்கோட்டை மிட்டாதாரரென்ன, வங்கம்பட்டி வெங்கிடராம பிரபுவென்ன, எத்தனையோ ஐஸ்வரியவான்களெல்லாம் இவளை மணந்துகொள்வதாகவும் வைப்பாக வைத்துக்கொள்வதாகவும் ஜமீனையே எழுதிக்கொடுத்து விடுவதாகவும் ஆனமட்டும் கூறி அடிப்போட்டுப்பார்த்தனர். ஆனால் இவள் ஒன்றுக்கும் அசையவில்லை. இதைக்குறித்து இவளது தாயார் பெண்ணே நமது குலத்தொழிலைக்கைவிடலாமா? நமக்கு யாராயிருந்தாலுமென்ன? பணம் கொடுப்பவரன்றோ பிரதானம். தனம் காட்டித் தனம் பறிப்பது நமது வழக்கமன்றோ? அப்படியிருக்க உன்னை விரும்பி வரும் பிரபுக்களையெல்லாம் அலட்சியித்துத் திரஸ்கரிக்கின்றனையே. இப்படி நடந்தால் நாம் எப்படி முன்னுக்கு வருவது? என்று எவ்வளவு நீதிகூறிக் கோபித்தும் கேளாமல், அம்மா நான் சென்ற ஜென்மத்தில் செய்த வினைப்பயனால் தாசியாகிய உனது வயிற்றில் பிறந்தேன். பிறந்தாலும் உன்னைப்போல் கற்பை விற்கும் நீசத்தொழில் புரிந்து ஜீவிக்கமாட்டேன். அப்படி ஜீவிப்பதைக்காட்டிலும பிராணனை விட்டுவிடுவேன்.

என் மனம் விரும்பிய ஒருவரைச் சேர்ந்து இல்லறம் நடத்துவேனேயன்றி வேறு விதம் நடக்கேன் ; என்று கண்டிப்பாய் உரைத்த உத்தமியாகும் இவள். பாடுவதில் இவளுக்கிணை இவளேயன்றி வேறில்லை. யாழின் இசையையும் தோற்கச்செய்யும் இனிமையும், சுகமும், ஆனந்தமும், ததும்ப அமிர்தத் துளிகளை அள்ளி அள்ளித் தெளிப்பாள். இவள் பாடலைக்கேட்டால் பட்டமரமும் துளிர்க்கும் நட்ட கல்லும் கரையும் ; எனின், இவள் பாடுவதைக் குறித்து நான் விஸ்தரிக்கவேண்டியதில்லை. நான் இவளுக்கு சங்கீத சாஸ்திரம் கற்பிக்கிறேன். என் பெயர் தஞ்சாவூர் தாந்தோணி ஐயங்கார என்று சொல்லுவார்கள் என்றார்.

சுந்தரராஜு கவுண்டன், ஐயங்கார் கூறிய விஷயத்தை அமைதியோடு கேட்டு யாதும் பதில் கூறுனாகி வாயைமூடி மௌனயோகம் செய்ததுமன்றி உத்தமகுணமுள்ளவரான எனது தந்தை இயற்றிய அருந்தவத்தின் பயனாய் அவதரித்த நான்! கற்றோரும் மற்றோரும் கொண்டாடும் நான்! நகரத்தார் யாவரும் நன்று நன்றெனக் கொண்டாடும் நடக்கையுடயவனாகிய நான்! மறுமாதரைக்கண்டு மயங்காத, வன்மனங்கொண்டவனாகிய நான்! கேவலம் பெண்பால் அதிலும் பலபேர் தொடும் எச்சிற்பாண்டமாகிய தாசியினெதிரில் நிற்பது—அவளழகில் ஈடுபட்டு நிற்பது—எனது ஒழுக்கத்திற்குச் சிறிதும் எற்றதாகாது. இந்நிமிடமே இவ்விடம் விட்டுக் கரந்துறைதல் தகுதியாகும், எனக் கருதினனாயினும், அம்மடமயிலின் தோற்றப்பொலிவாலும், அந்நங்கையின் சேலைநிகர் வாள் விழி மருட்டலாலும், அவ

ளது அந்தமிகு சுந்தரமுள்ள காசரூதி அவயவங்களைச் கண்ணுறுதலாலும், விதிவலியாலும் மனமயங்கி மதிகுன்றி ஏதும் தோற்ருது இடம் விட்டுப்பெயராது நின்றனன்.

பால்யனது மனப்பான்மையை ஒருவாறு அவனது வதனத்தின் தோற்றத்தால் உணர்ந்த தாந்தோணி ஐயங்கார் சுந்தரராஜு கவுண்டன் கரத்தைப்பற்றிக்கொண்டு குழந்தாய்! ஆங்குக்காக்கைபோல் கரையும் கூட்டத்தினிடையே தரித்திருக்கப் பொருராகி ஈண்டுத் தனித்துறைந் துரையாடி மகிழும்பொருட்டு யானும் இச்சிங்காரச் சிறுமியும் இங்குற்றேம். நீயும் அத்தகைய ஆர்வத்துடனேயே இங்குற்ருய் என எண்ணுகின்றேன்; அற்ருயின், நாம் மூவரும சில நிமிஷம் ஈண்டு மதுரச்சுவைமிகு மொழிகளை உரையாடி மகிழ்ந்து பின் இல்விற்கேகுவோம். என்று கூறி மற்ருெரு கரத்தால் கோகிலாம்பாள் கரத்தையும் பற்றிக்கொண்டு, சிறிது தூரம் சென்று மூவரும் அழகிய மணற்றரைமீது அமர்ந்தனர்.

சுந்தரராஜு கவுண்டன், மதிகலங்கி செய்வகை தோற்ருது இடையனைத்தொடர்ந்து செல்லும் ஆட்டுக்குட்டிபோல ஐயங்காரரைத் தொடர்ந்து அம்மதிவதன மங்கையினது மதுரமிகு சொற்சுவையினைப்பருக அவளருகில் அமர்ந்திருந்தனன். அக்கிளிமொழியாள் தனது அகன்ற வேல் போன்ற மை விழியால் அடிக்கடி சுந்தரராஜு கவுண்டனை நோக்கிக்கொண்டும் புன்னகை புரிந்துகொண்டுமிருந்தாள். அவள் நகைக்குந் தோறும் அவளது செவ்விய இதழ்களுக் கிடையில் விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் பல்வரிசைகள் பவ

ளப்பெட்டியிற் பதித்துள்ள முத்துச்சரங்கள் போன்று திகழ்ந்தன. கோகிலாம்பாளின் வதனமெனும் தாமரை மலரிலுள்ள அழகென்னும் மதுவை சுந்தரராஜ கவுண்டனது நயனமென்னும் வண்டுகள் சதா பருகியவண்ணமிருந்தன. கோகிலாம்பாள் தனதழகிய விசாலமாகிய மைதோய்ந்த நயனங்களால் சுந்தரராஜவை நோக்கி இளமுறுவலுடன் அவனது கரத்தைத்தனது மென்மையும் இளமையும் அழகும் பொருந்திய கரத்தால்பற்றி அழகிய பிரபுவே! தம்மை கண்டுச் சந்தித்தலால் என் மனம் அமைதியும் ஆனந்தமும் உடைத்தாய் ஒளிர்கின்றது. ஆயின், நுமது மனம் எவ்வாறேயோ. என்னிடம் விளம்புதி? என வினவினுள்.

கோகிலாம்பாளின், கரம் சுந்தரராஜ கவுண்டன்மீது பட்ட தக்ஷணமே ஜில்லென்று ஒருவித உணர்ச்சி உண்டாகி அவனது சுவாசம் தடைபட்டது. அவளின் உடலினின்றும் ஓர் சக்தி சுடலெனப்புரண்டு அவன் உடலிற் பாய்ந்து நல்ல பாம்பின் விஷம்போன்று சரசரவென உச்சிக்கேறியது. அதனுல் மூளை கலங்கியது, கண்கள் சுழன்றன, மேனி முழுதும் வியர்வை உதிர்த்தது, இதுவரை யௌவன மடமங்கையரின் ஸ்பரிச உணர்ச்சி இத்தகையதென அறியாதவனுதலால் அம்மடமயிலினது ஸ்பரிசத்தால் ஒருவித மனோஹரமான இன்பம் அவன் மனத்துள் பொங்கியெழுந்தது. அந்த இன்ப சாகரத்தில் அமிழ்ந்து அமிழ்ந்து கரைகாணும் வகையிலனுய் சுந்திரராஜ தத்தளித்துத் தவித்தான். அவனது மனம் குங்கிலிய தீபம் போட்ட கொள்ளிவாய்ப் பிசாசுபோலப் பேயாட்டம் ஆடிப்பெரும்போர் விளைத்தது. அவ

ளிடம் எவ்விதம் பாஷிப்பதென்பதை யறியாது தடுமாறி ஞன். அவளை அப்படியே இறுக அணைத்துத் தனது மடியில் உட்காரவைத்து அவளது கன்னத்தில் முத்தியிடலாமா வென எண்ணினுன். இவ்வாறு மயங்கிய மனத்துடன் யாது மொழியவும் இயலாளுகி ஒருகணம் மெய்ம்மறந்து மௌன யோகத்திலிருந்து பின் நிஷ்டை கலைந்து மனதை நிலைப்படுத்திக்கொண்டு மின்னெளி நிகர் ஆகத்தாய்! தண்மதிநிகர் வதனத்தாய்! கார்முகில் நிகர்கேசத்தாய்! தென்னிளங்குரும்பை நிகரிருதனத்தாய்! ஈண்டு நின் வரவு மிக்க ஆனந்தமாகவும், மனோஹரமாகவும், விளங்குகின்றது. உனது ஸ்பரிசத்தால் என்மனம் ஆநந்தசாகரமெனும் அலைகடலில் அமிழ்ந்து ஓடியாடிக்களிக்கின்றது. என அப்பாவையினது பாட்டிற்கிணங்கத்தான் பாத நாட்டியமாடி அவளது அஸ்தத்தை யெடுத்து அன்புடன் முகர்ந்தான்.

சுந்திரராஜா கவுண்டனின், வார்த்தையைக்கேட்ட கோகிலம் சந்தோஷத்துடனும் சிறிது வெட்கத்துடனும் தனது அழகிய முகத்தைக் கவிழ்ந்து பூமிதேவியைக் கடாக்ஷித்துக்கொண்டு யாதொரு மொழியுமின்றி மௌனம் சாதித்தாள். இவர்கள் சம்பாஷணையின் சாரத்தை உணர்ந்த தாங்தோணி ஐயங்கார் ஜலவிசர்ஜனத்திற்குச் செல்லுமாறு அவ்விடமிருந்து அகன்று அப்பால் மறைந்தார். அவர் மறைந்தது சுந்தரராஜா கவுண்டனுக்கு மிக்க ஆனந்தமாகவும் உற்சாகமாகவும் இருந்தது. அந்த அன்னநடை மின்னல் இனிதன்னிடம் மிகு அன்பாகவும்,பக்ஷமாகவும் கொஞ்சிப்பேசுவாளென அவன் மனம் பெரிதும் குதூகலித்துக்

கும்மாளம் போட்டது. ஆயினும் அம்மடந்தை யாதும் மொழியாளாகி வாளாவிருந்தாள்.

கோகிலாவின் அழகிய இன்னிசை மொழிகளைக்கேட்க ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த சுந்தரராஜ கவுண்டன் அவளது மௌனத்தைக்கண்டு மயங்கினான். ஒருவேளை பேசாமலே இருந்துவிடுவாளோவெனப் பெரிதும் ஏங்கினான். ஆயிரம் யோசனைகள் அவன்மனதில் அடுக்கடுக்காய் உதித்தன. அவன் மனத்திலுள்ள ஒருவன் சீ! இத்தீத்தொழிலை நீ செய்யாதொழிப்பது மிக நன்று. இனறேல் அது உன் யோக்பத்திற்கும், கண்யத்திற்கும், ஒழுக்கத்திற்கும், மிக்க இழுக்காகும் என்று கண்டித்தான். மற்றொருவன் ஓ. அதைக்குறித்து அக்கரையில்லை. அவனது "புத்தியும் சரி கழுதை லத்தியும் சரி" மேட்டிமை தங்கிய மும்மூர்த்திகளே மோகவலையிலகப்பட்டு விழிபிதுங்கத் தலையிலும், நெஞ்சடைக்க மார்பிலும், வாய்பிளக்க நாவிலும் தாங்கவியலாது தாங்கிவிழிக்க நமக்குக் கேட்கவேண்டுமா? ஆசைதீர அனங்கன் பூஜை செய்வதே அறமாகும் என்று; போராடினான். இவர்களில் பின்னவன் போராட்டமே பலமாயிருந்ததால், அவன் கட்சியே ஜயமடைந்தது. ஆகையால் எப்படியும் அவளுடன் இன்னுரையாடவேண்டுமென்னும் அவா அவன் மனத்துள் பொங்கி யெழுந்தது. அவளுடன் எப்படியாவது வார்த்தையாடவேண்டுமென்னும் நோக்கத்துடன் அவளை நோக்கி "கோகிலம்! உனது தாயாரின் வார்த்தையைக்கேட்டு உங்கள் குலத்தொழிலை நடத்தாமல் தடை செய்ததின் தாத்பரியமென்ன?" என்றான் சுந்தரராஜ கவுண்டன்.

இளநகை தோன்றும் அழகிய முகத்தினரே! பலருடைய ஏச்சுகளுக்கும் பேச்சுகளுக்கும் காரணமாகவுள்ள தாசிகள் குலத்தில் பிறப்பதே பாவம். அதிலும் அவர்கள் குலத்தொழிலை அநுசரித்துப் பலருடைய சொத்துகளைப் பாசாங்குகளால் பறித்து அவர்களின் பெண்டு பிள்ளைகளைத் திண்டாடவைப்பது பெரும் பாதகம். இதற்கு ஒவ்வொரு நரகத்திலும் தண்டனை கிடைக்கும். ஆதலின் அத்தீத்தொழிலைச் செய்ய எனக்கிஷ்டமில்லை; என்று இனிமையாகவும் நயமாகவும் மொழிந்தாள் கோகிலாம்பாள். இயற்கையிலேயே கோகிலாம்பாள் என்று பெயர் பெற்ற அவளது கோகிலத்வனியின் மதுர பாஷிதங்களையும், கடைந்தெடுத்த செம்பொற்சிலைபோன்ற அவளது சுந்தர உருவத்தையும், மென்மையும் அழகும் பளபளப்புமுடைய அவளின் ஒவ்வொரு அங்கத்தையும் காணக்காண சுந்திரராஜ கவுண்டனின் உள்ளத்தில் காதல்தீ மூண்டெழுந்தது. அதனால் தேகமெங்கும் வெம்பி வியர்த்தது. அவனது உதடுகளும் நாவும் உலர்ந்து உரையாட வன்மையற்றன. இதற்குமுன் அவனிடமிருந்த பரநாரி சகோதரனெனும் பக்தி காற்றாய்ப் பறந்து விட்டது. தன்னுடைய காதலைப்பற்றி அவளுக்குத் தெரிவிக்கலாமாவென எண்ணினான். ஆயினும், அவன் மனம் வெட்கத்தாலும் அச்சத்தாலும் வாதைப்பட்டதினால் கூறமுடியாமல் தயங்கினான். இருப்பினும் தன்னால் இயன்றவரை மனதைத் திடப்படுத்தித் தன் எண்ணத்தை வாயால் தெரிவிக்க முடியாவிடினும் அவயவங்களால் தெரிவிக்க எண்ணினான். அதற்கிணங்க ஐயங்காரும் அருகிலில்லாததால் அவன் மனம் பின்னும் வன்மை கொண்டது. தனது

துடைக்கும் அவளது துடைக்கும் இடையிலுள்ள தூரத்தைக் கவனித்தான். அது ஒரு சாணிற்குக் குறைந்தே இருந்தது. உடனே மெதுவாகவும் சிறிது சிறிதாகவும் அவனது கால்கள் நகர ஆரம்பித்தன. அவ்வாறு காலை நகர்த்திக்கொண்டே அவன் கோகிலாம்பாளை நோக்கி கோகிலம்! அவ்விதமாயின் கிடைத்தற்கரிதாகிய உனது அழகிய தேகத்தையும், உனது வாழ்நாட்களையும் எவ்விதமாக்க யோசித்திருக்கிறாய்? என்னிடம் செப்புதி என, குதலை மொழியால் கொஞ்சிப் பேசினான். அச்சமயம் அவனது துடை கோகிலாம்பாள் துடையைச்சந்தித்து மெதுவாகத் தொட்டு முத்தம் கொடுத்தது. தனது துடையின் ஸ்பரிசத்தால் அவளது மனப்பான்மை எவ்விதமிருக்கிறதென அறிய அவள் முகத்தைக் கவனித்தான். அவள் வதனத்தின் தோற்றத்திலிருந்து வெறுப்பு, அச்சம், வெட்கம், முதலியவை ஒன்றும் இல்லையென உணர்ந்தான். பின்னும் அவன் மனம் திடம்கொண்டு, மேலும் மேலும் காரியத்தைச் செய்யத்தூண்டிற்று. உடனே கோகிலாம்பாள் துடையைத் தொட்டுக்கொண்டிருந்த அவனது துடை மெள்ள மெள்ளக் கள்ளத்தனமாய் மேலே ஏறத்தொடங்கியது. அப்பொழுதும் அவள் அதைக்குறித்து ஏதாவது ஆசங்கை அடைகிறாளா வெனக்கவனித்தான். அப்போதும் அப்பாவை முன் போலவே யாதொரு களங்கமின்றித் தரையைப் பார்த்த வண்ணம் புன்சிரிப்புடன் இருந்தாள். இதற்குள் அவனது துடை அப்பெண்மயிலாளின் துடைமீது முற்றும் ஏறி அவ்விடம் ஆரோகணித்துச் சவாரிசெய்யத் தொடங்கிற்று. அப்பொழுதும் அவ்வணங்கு அருவருப்

பின்றிப் புன்னகையுடன் தனது கடைக்கண்ணால் சுந்தரரா ஜுவைக் கடாக்ஷித்துக்கொண்டிருந்தாள். அதனையறிந்த அவன் மனம் மேன் மேலும் திடமடைந்தது. தன் எண்ணத்தை அவள் அறிந்து அதற்கு முற்றிலும் இணங்கியே இருக்கிறளென நிச்சயித்தான். தான் இதுவரை அடையாத ஒரு நூதன பதவியை அடைந்துவிட்டதாக அவன் மனம் பொங்கிக்குதித்தது. இவ்வுலக நடையையே முற்றும் மறந்தான். இவ்வித ஆர்பாடத்துடன் மேலும் காரியங்களைச் செய்யத்துவக்கி அவளை இருகரங்களாலும் அணைத்து மடிமீதிருத்திக்கொள்ளலாமாவென எண்ணினன். அவன் கரங்கள் நடுங்கி இரும்பு குண்டைப்போல் மிக்க பளுவாகத் தோன்றின. ஆயினும் இயன்றவரை மனதைத் திடப்படுத்திக்கொண்டு அழகிய பெண் பாவாய்! நான் கேட்ட கேள்விக்கு நீ இதுகாறும் விடை இறுத்தாயில்லை. என்மேலென்ன கோபமா? உன் அழகிய வாயைத்திறந்து அமிர்தத்துளிகளை நிகரான வார்த்தைகளை ஆடாயா? நான் அதை உள்ளம் குளிர அள்ளிக்குடித்து ஆனந்தமடையேனு? கட்டிக்கரும்பே! கரும்பிற்குள் கனிந்துறையும் முத்தே!! முத்தின்மேல் திகழும் மினமினுளியே!!! என்று கூறிக்கொண்டே தனது இருகரங்களையும் அம்மடவன்னத்தின் நுண்ணிய இடையின் இருமருங்கிலும் வளைத்து அணைத்தெடுத்துத் தன் மடிமீதிருத்திக்கொண்டு அவளது அங்கங்களைத் தழுவித்தழுவிக் கன்னத்தைக் கடித்துச் சுவைத்து முத்திமாரிபெய்து, பரந்தாமனின் பாதத்தில் பதிந்த பக்தர்களது மனம்போல் பரமானந்தமடைந்து சுகானந்த வாரிதியில் முற்றிலும் மூழ்கித்திளைத்தான் சுந்தரராஜுலுவுடன்.

சுந்தரராஜ கவுண்டனுல், அணைத்துத் தழுவப்பட்ட கோகிலாம்பாள் மிகுந்த வெட்கமும், அச்சமும், அடைந் தாள். ஆயினும், அவனது ஸ்பரிசத்தால் ஒருவித மனோஹரமான இன்பம் பொங்கிக் கரைகடந்து சென்றது. அவளது கண்கள் கிறுகிறுத்து மூளை கலங்கின. தேகமுழுவதும் ஓர்வித புளகாங்கிதம் உதித்தது. கலைகள் கலைந்தன. இவ்வித கோலத்துடன் ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்து களித்தாளெனினும் சமாளித்துக்கொண்டு அச்சோ! ஆருயிர்காதலரே! ஐயங்கார் வந்துவிடுவார். அவமானம், விடுங்கள்; என்றுகூறி அவனது பிடியினின்றும் புரண்டெழுந்து நின்ருள்; கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளினது, மென்மையும், இளமையும், சுகுமாரமும், ஒருங்கே திரண்ட அழகிய ஆகத்தின் ஸ்பரிசத்தினுல் ஆனந்த பூரிதனுயிருக்கும் சுந்தரராஜ கவுண்டன், தன்னெதிரில் சிறிது அச்சத்துடனும், நாணிய பார்வையுடனும், புஷ்பம் நிறைந்த பூங்கொம்புபோல நிற்கும் அணங்கினது அழகினை மிக்க அவாவுடன் நோக்கிக்கொண்டிருந் தான்.

அழகிய ஆகத்தினரே! நும் ஆலிங்கனத்தால் யான் பெரிதும் ஆனந்த பூரிதையாயினேன். அநேக ஜமீன்தாரர் களையும் பிரபுக்களையும் திரஸ்கரித்த என் மனமாகிய காளை நுமது அன்பென்னும் அணைகயிற்ருற் கட்டுண்டு அடிமையாயிற்று. அந்தோ ஆருயிர் மஞளரே! எனது காதலைக் கொள்ளை கொண்ட கட்டழகரே! நான் இதுவரை மிக்க அருமையாய்ப் போற்றிவந்த எனது அரிய கற்பை நுமக்கு

அற்பணம் செய்தேன். அடியாளை அரை நிமிடமும் பிரியாது ஆதரித்தருளல் வேண்டும். இன்றேல் அக்கினியிற் பாய்ந்தாயினும், அலைகடலில் வீழ்ந்தாயினும், அன்னத்தைத் துறந்தாயினும், நஞ்சைத்தின்றாயினும் நான் உயிர் துறப்பது சத்தியம். அப்பால் இப்பெண்பாவம் உம்மைப் பற்றி எரிக்காமல் போகாது. அன்பரே! அடியாளை மறக்க வேண்டாம். மறக்கவேண்டாம். என்று தனது அழகிய வாயால் அமிர்தத் துளிகள் போன்ற வார்த்தைகளைக்கூறி கண்களில் நீர் ததும்ப முகம்சோரக் கலக்கத்துடன் குறையிரந்தாள் கோகிலாம்பாள்.

மதுரபாஷித மாங்குயிலே! நின் மனச்சஞ்சலத்தை நீக்குதி. அலைகடல் வற்றினும் அருக்கன்மேற் குதித்திட்டாலும் நின்னை அனுதாவு செய்வேனென்றஞ்சேல். அழகிற் சிறந்த எனதாருயிர்க்காதலி! நினது சல்லாபத்தைக்கோர ஹரி ஹர பிரம்மாதியரும் அருந்தவங்கிடப்ப ரென்றால் யான் நினது அந்தமிகு சுந்தரத் திருவுருவத்தை அரைநிமிடமாவது காணுகிருக்கும் ஆற்றலுடையவனோவேனோ? என்னைக் கைவிடாதிருக்குமாறு யானன்றோ நின்னைக் குறையிரத்தல் வேண்டும். கருப்புதின்னக் கைக்கூலி கோரும் கசடனோ யான் நினது வேண்டுகோளை எதிர்நோக்க. அடி என் அன்பே! அன்பிற்குள் கலந்த அருளே!! அருள் திரண்டு வடிவெடுத்த ஆரணங்கே!!! என்று எழுந்து அவளைத் தனதிருகரங்களாலும் அழுந்தத்தழுவி அவளது கன்னத்தை மெதுவாகக் கடித்துச் சுவைத்தான், சுந்தரராஜகவுண்டன்.

என் மனங்கவர்ந்த மன்மதத்துரையே! நுமது திருவுளப்பான்மை அற்றாயின் யான் பெரும் பேறு பெற்றவளே. எனது பயனற்ற ஜென்மம் சாபல்யமாயிற்று. அடியேனது நெடு நாளைய எண்ணம் நிறைவேறியது. என்று அவனது ஆகத்தினை, அங்கஜன் அமர்ந்து விளையாடும் குன்றாகிய தனது பருத்த கொங்கைகள் அமுங்கிக் குழையும்படி தன திரு அஸ்தங்களாலும் அழுந்த அணைத்து, சுந்தரராஜுவின் முகத்தோடு முகம்வைத்து முசர்ந்து அவனது அதரத்தினை மென்மையாய்க் கடித்துச் சுவைத்து சிறிது நேரம் இருவரும் மன்மதனைக் குறித்து மௌனயோகம் செய்து, பின் அவர் அருளைப்பெற்றதுபோல் அப்பால் விலகி நின்றார்கள். இத்தருணம் கண்டவர் கலியுக கும்பகர்ணனெனக் கூறும் படியான கனத்ததும் கரியதுமானதேகத்தோடு தாந்தோணி ஐயங்கார் தமது தேகத்தைத் தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு யானைக்குட்டிபோல ஆடி ஆடி அவ்விடம் வந்து சேர்ந்தார். பின்பு கோகிலாம்பாள் சுந்தரராஜுவை நோக்கி ஆசைக்குகந்த நேசக்காதலரே! நுமது அன்பிற்கும் நுமக்கும் எண்ணிறந்த வந்தனம் இபற்ற யான் கடமை பூண்டுள்ளேன். யானும் ஐயங்காரும் இங்குற்று நெடுநேரமாயது. யான் திரும்பிச்செல்ல நுமது அருமைத்திரு மனமிரங்கி விடையீந்தருளல் வேண்டும். மீண்டும் எப்பொழுது, எவ்விடம், நுமது சுந்தரத்திருவுருவ தரிசனம் கிடைக்குமோ வென என் மனம் ஏங்குகின்றது. அன்பரே! உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன் என்று அவனது கரத்தைப்பிடித்து விரல்களைச் சற்று அமுக்கியவாறு நசுக்கிக்கொண்டே மேலேஎடுத்து அன்புடன் முத்தியிட்டாள் கோகிலாம்பாள்.

தாங்தோணி ஐயங்கார் :—கோகிலம் வருந்தற்க. சுந்தர ராஜு மிக நல்லவன். கன்மனத்தோனன்று. மீண்டும் சீக்கிரத்தில் நாம் அவனைச் சந்திப்போம் ஒருவேளை இஷ்டமிருந்து நமது இல்லிற்கு அவனே வந்தாலும் வருவான். இனிமேல் அவனை நெடுநாள் காணமல் இருக்க என் மனம் தரியாது. என்று அவள் பாட்டிற்குத் தகுந்தபடி பலவிதமாய் மத்தளங் கொட்டினர் ; ஐயங்கார்.

சுந்தரராஜு கவுண்டன் :— அழகிய பயோதரத்தையுடைய ஆரணங்கே ! இத்துணைச் சீக்கிரம் நினது சல்லாபத்தைத் துறக்க எனது மனமிணங்குகின்றதில்லை. ஆயினும், சமயம் நேர்ந்துழி யான் நினது இல்லிற்கே வந்தாலும் வருவேன். ஆதலின் நீ வருத்தமுறல் வேண்டாம். நினது இல்லத்தின் அடையாளத்தை செப்புதி ; என்று அவளது அழகிய கரத்தைத் தூக்கி அன்புடன் முகர்ந்தான்.

அழகிய நண்பரே ! தமதிஷ்டம் அவ்விதமாயின் யான் பாக்கியம் பெற்றவளே. இவ்விஜய நகரத்தில் தாசித்தெருவினுள்ள, 389, நெம்பர் வீடு எனது வாஸஸ்தானமாகும். வீட்டிற்குமுன் நான்கு தென்னைமரங்கள் இருக்கும். பிரபுவே சென்றுவருகிறேன். என புன்முறுவலுடன் ஒருமுறை சுந்தரராஜு கவுண்டனை நோக்கிவிட்டு அவனது மனம் தன்னைப் பின்தொடர ஐயங்காரை அழைத்துக்கொண்டு அவ்விடம் விட்டு நிங்கினள் ; அம்மாது நல்லாள்.

## 2-வது அத்தியாயம்.

# புத்திவான் பலவான்.

விசாலமாகிய கடலினருகேயுள்ளதும் மிகுந்த பரப்பும் அழகும் அமைய நிர்மாணிக்கப்பெற்றதும், அநேக மாட மாளிகை கூட கோபுரங்களுடன் கூடிய பன்னெடுந் தெருக்களையுடையதும், வலியவர், எளியவர், யோக்கியர், அயோக்கியரெனக் கூறப்பட்ட சகலரும் வசித்துக்கொண்டிருப்பதுமாகிய "விஜயநகரம்" என்னும் நகரத்தில் செல்வவான்கள் வசிக்கும் ஓர் தெருவில் அழகிய பெரிய மாளிகையொன்றிருந்தது. அம்மாளிகையினுள் அனேக அழகிய அறைகளும் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்ததுடன் அதன் ஓர் பாகத்தில் ஓர் அச்சுயந்திரசாலையும், அம்மாளிகையை அடுத்து ஒரு பூங்காவும் அமைக்கப்பெற்றிருந்தது. மாடியினுள் சிறந்தசிங்காரம் செய்யப்பட்ட ஒரு அறையில், யௌவன லாவண்ய சுகுமாரியொருவள், ஒரு சாய்வு நாற்காலியின்மேல் தன் கரத்திலுள்ள புஸ்தகத்தைக் கூர்ந்து—ஆழ்ந்து—கவனித்தவண்ணம் வீற்றிருந்தாள். அத்தருணம் தற்கால நாகரீகப்படி உடைகளும், காதுகளிலும் கைகளிலும் விலையுயர்ந்த கற்கள் பதித்த பல அணிகளும் அணிந்தவனாகிய ஒரு பால்யன் உள்ளே வந்தான். அவனது வரவைக்கண்ட அம்மடந்தை அத்தான்! வரவேண்டும் என்று முகமன் கூறிக்கொண்டே சற்று

மரியாதையாகவெழுந்து தனக்குச் சற்றுத் தூரத்திலுள்ள ஆசனத்தில் அமரும்படி கூறி விட்டுத்தானும் உட்கார்ந்தாள்.

வாலிபன் ஆசனத்திலமர்ந்ததும் கன்னிகையை நோக்கி "சுவர்ணு"! நீ எப்பொழுதும் புஸ்தகமும் கையுமாகவே இருக்கிறாய். எனக்கென்னவோ வாசிப்பென்றால் எட்டி போல் கசக்கிறது. இதென்ன வெறுப்பான உழைப்பு; என்றான்.

சுவர்ணம்பாள் :—அத்தான்! என்ன அவ்விதம் கூறுகிறீர்கள்.?

"கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருவள்ளுவர்.

என்ற விதம் கற்றோர் எத்தகைமையுடையரே பாயினும் அவர்கள் சிறப்பாக மதிக்கப்படுகின்றனரன்றோ? செல்வப் பொருளினும் கல்விப்பொருள் சிறந்ததென்று தாங்கள் வாசித்துணர்ந்திருக்கிறீரன்றோ? தங்கள் தகப்பனார் பெருத்த செல்வவந்தராயிருப்பதுமன்றிக் குடும்ப காரியத்தையும், மேற்கொண்டு தங்களுக்கு யாதொரு தொந்தரவுமின்றி உண்பன உடுப்பன முதல் சகலமு மளிக்கிறார்கள். அப்படியிருக்க தாங்கள் உண்பதும் உறங்குவது மொழிந்தவேளைகளில் ஏன் வாசிக்கலாகாது?

வாலிபன் :—சுவர்ணு! நீ யாதொரு விசாரமுமற்றிருப்பதால் அவ்விதம் கூறுகிறாய். நீ கூறியபடி எனது தந்தை பணக்காரர்தான். இருந்தாலும் தற்சமயம் சிலவுக்கின்றி யான் மிக்க வருந்துகிறேன்; என்றான்.

சுவர்ணும்பாள் :—ஆச்சர்யத்துடன் அத்தான்! தங்களுக்கென்ன அப்படிப்பட்ட அவசரமான செலவு ஏற்பட்டிருக்கிறது?

வாலிபன் :—சுவர்ணு! என்ன அப்படிக் கேட்கிறாய்? நான் ஒரு பெரியபணக்காரரின் குமாரனன்றே? நான்வெளியில் சென்றால் குறைந்தது ஐந்தாறு நேயர்களாவது என்னைத் தொடர்ந்து வருவார்கள். நாங்கள் உல்லாசமாய்ச் செல்லும்போது ஒருவன் சிநேகரே உடம்பு ஒரு மாதிரியாயிருக்கிறது ஒரு டம்ளர் காபி சாப்பிட்டுப் போவோம் என்றால், உடனே யாவரும் காபிகடைக்குள் சென்று சிற்றுண்டியும் காபியும் அருந்துகிறோம். பிறகு கடைக்காரனுக்கு கல்லென்று ரூபாயை நான் வீசி எறிந்தாலல்லவா எனக்கு சன்யமும், பெருந்தன்மையும், மதிப்பும் கிடைக்கும். இன்றேல் அவர்கள் என்னை மிக கேவலமாக அவமதித்துக் கூறுவார்களல்லவா? இப்படி எத்தனையோ விதமான செலவுகளிருக்கின்றன.

சுவர்ணும்பாள் :—அத்தான்! காலையில் காபி அருந்திவிட்டு வெளிச்சென்று சிறிது நேரத்தில் திரும்பிவருவதற்குள் மறுபடி காபி சாப்பிடவேண்டுமென்பதென்ன கட்டாயம்?

வாலிபன் :— சுவர்ணு! என்ன நீ சுத்த கர்னாடகமாயிருக்கிறாய்? நாகரீகமென்பதே உனக்குத்தெரியாது.

சுவர்ணும்பாள் :— (நகைத்துக்கொண்டே) அத்தான்! சற்றுத் தயைசெய்து நான் கூறுவதைச் செவிக்கொள்ள

வேண்டும். தங்களுடைய பாட்டனாராவது, அல்லது எனது பாட்டனாராவது காபியைக் கண்டதுண்டா? கேட்டதுண்டா? குடித்ததுண்டா? அப்படியிருந்தும் காபி குடிக்கும் நம்மை விட அவர்கள் எந்தவிஷயத்திற் குறைவுற்றிருந்தனர்? அவர்களுக்கு அழகில்லையா? ஆண்மையில்லையா? ஆரோக்ய திடகாத்ரமில்லையா? பல நூல்களை ஆராய்ச்சி செய்யவும் நூதன நூல்களை இயற்றவும் ஆற்றலில்லையா? நம்மைவிட ஒவ்வொரு விஷயத்திலும் அவர்கள் மிகுந்தவராயிருந்தார்கள். அப்படியிருக்க நாம் மட்டும் காபி காபி என்று ஏன் காபியைக் கட்டிக்கொண்டழவேண்டும்? மேலும் நாகரீக முதிர்ந்த மேனாடுகளில் இதை—காபியை—அதிகமாய் உபயோகிக்கிறார்களே எனின் அவர்கள் வசிப்பது குளிர்மிகுந்த தேசமாதலின் தமதுடம்பை உஷ்ணப்படுத்திக்கொள்ள கோதுமை போன்ற சூடான உணவுகளையும் பிராந்தி, உஸ்கி, காபி, தேத்தண்ணீர் முதலிய சூடான பானங்களையும் உபயோகிக்கிறார்கள். உள்ளங்கால் முதல் உச்சிவரை நெருப்பாயெரிக்கும் இந்தியாவில் அந்தப்பானங்களை எதற்காக உபயோகிக்கவேண்டும்? மேலும் காபிக் குடியும் கட்குடியும் ஏறக்குறைய ஒன்றாகவே இருக்கின்றன. கட்குடியன் காசில்லாவிடினும் கடன் வாங்கியாவது திருடியாவது, தன்னை அடகுவைத்தாவது, குடிப்பான். காபிக்குடியனும் ஒரு வேளை இல்லாவிட்டால் ஆ! தலைவலிக்கிறது. தேகம் குடைகிறது. என்னால் பொறுக்கமுடியாது பாலில்லாவிடினும் வெறும் கஷாயமாவது போட்டுக்கொடுங்கள் என்று கதறுகிறான். சென்ற சில வருஷங்களுக் குள்ளாக நமது இந்தியாவில் காபிக்குடியென்னும் இந்தத்தொத்

துவியாதியானது தோட்டிமுதல் தொண்டமான்வரை பரவி அவர்களை ஆட்டி அல்லற்படுத்துகிறது. மேலும் "நான் காபி சாப்பிடுவதுதான் வழக்கம் எங்கள் வீட்டில் கூட எல்லோரும் அப்படியே" என்று கூறிக்கொள்வது தான் கண்யம் என்று நினைக்கிறார்கள் சிலர்! அப்படிக் கூறுவதால் இவர்களுக்கு என்ன கிரீடம்—கௌரவம்—வந்துவிடுகிற தென்று நினைக்கிறார்களோ தெரியவில்லை! போகட்டும் காபி தான் குடித்து வழக்கப்படுத்தி விட்டாலும் காலையில் ஒரு தரம் குடித்தால் போதாதா? நடுப்பகல் காபி இடைவேளை க்காபி மாலைக்காபி இராக்காபி தூங்கும்வேளைகாபி படுக்கை யினின்றும் கண்களை துடைத்துக்கொண்டெழுந்தது முதல் படுக்கையில் சாய்ந்து உறங்கும்வரை காபிடம்ளரை கையில் பிடித்துக் கொண்டிருப்பது தான் நாகரீகமோ! எத்தனை யோவித நலவழிகளில் நமது நாகரீகத்தைச் செலுத்துவது அவசியமாயிருக்க அதைவிடுத்து ஆவசியகமில்லாத ஆபாச ங்களில் தலையிட்டுக்கொள்ளுகிறார்கள் நம்மவர்கள்!

"உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்" என்றபடிநான் கூறுவது உங்களுக்குக்கூடவருத்தமாயிருக்கும். ஆகையால் இத்துடன் நிறுத்துகிறேன்.

வாலிபன்:— சுவர்ணு! நீ கூறுவதென்னமோ ஒரு விதத்தில் நன்மையுடையதெனத் தோன்றினாலும் என் மனம் மட்டும் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அது கிடக்கட்டும். இவ்வருஷத்தில் எனது குதிரைதான் முதல்பந்தயம் ஜெயிக்கப்போகிறது. எனது சேவலும் அவ் விதம்தான். நான் இதற்குப் பந்தயமென்ன வைக்கப்போகி

காமராசர் பல்கலைக்கழக
அவ்வை

றேன் தெரியுமா? குதிரைக்கு ரூபாய், 1500 சேவலுக்கு ரூபாய் 200 பந்தயம்; என்றான்.

இச்சமயம் சுவர்ணாம்பாள்! சுவர்ணாம்பாள்!! என்று கூப்பிடும் சத்தம் கேட்கவே சுவர்ணாம்பாள் எழுந்து அத்தான் எனது அன்னை அழைக்கிறார்கள், நான் போகவேண்டும் என்று கூறிக்கொண்டே வெளிச் சென்றாள்.

இவ்வாலிபனை இன்னானென்றறிய வாசகர்கள் விரும்புவார்களாகையால், அவன் வரலாற்றைக் கூறிச் சுவர்ணாம்பாளைக்குறித்து இன்னொரு சமயம் சொல்லுவோம். இவ் விஜயநகரத்தில் வசிக்கும் அநேக லக்ஷாதிபதிகளுள் வெங்கிடுபதிக் கவுண்டரென்பவரும் ஒருவர். அவருடைய ஏக புத்திரனாகிய கனகாசல கவுண்டனென்பவனே. நாம்மேலே கூறிவந்த வாலிபனென்பவன். கனகாசலம், சுவர்ணாம்பாளினது தாயாரின் உடன்பிறந்த சகோதாரின் குமாரன். கனகாசலம், உருவத்தில் மிகு அழகனாயினும் குண அழகில் குறைவுள்ளவன். கல்வியில் ஆவலில்லாதவன். பரோபகாரமும் பொறுமையும் இரக்கமும் இல்லாதவன். படாடோபத்தில்—டாம்பீகத்தில் மிக விருப்பமுள்ளவன். ஆனால் இண்டர்மீடியேட் வகுப்புவரை வாசித்துள்ளவன். இரசாயன சாஸ்திரத்தில் மிக்கவிருப்பமுள்ளவன். மிகுந்த நுட்பமான அறிவைப் பெற்றவன். தான் நினைத்த எக்காரியத்தையும் செய்துமுடிக்கும் ஆற்றலும் அறிவும் உள்ளவன். நாடகப் பிரியன். அந்நகரத்தில் நடக்கும் நாடகங்களுக்கு ஒவ்வொரு நாளும் தவறாது ஆஜராகப்பட்டவன். மேலும் நாடகத்தில் வேடம் போட்டு நடிப்பதில் அதிக ஆவலுள்ளவன். அவன்

எந்தச்சரித்திரத்திலும் தனக்கிஷ்டமானால் எந்த வேடம் வேண்டுமாயினும் அணிந்துகொண்டு மிக்க சமத்காரமாக நடிப்பான். அவனது காயனங்களும் நடிப்புகளும் கண்டோர் கரக்கம்பம் சிரக்கம்பம் செய்யும் கண்யமுடையனவாயிருந்தன. சுமார் 20 அல்லது ஒன்றிரண்டு அதிகமென்று மதிக்கத்தகும் வயதுடையவன். இவ்வளவே கனகாசலக் கவுண்டனின் இயற்கை குணங்கள். இவனது தகப்பனார் வெங்கிடுபதிக் கவுண்டரின் மேன்மைக் குணத்தை விவரிக்கப்புகின் "அம்பட்டன் குப்பையைக் கிளரின் அவ்வளவும் மயிர்" என்றபடி அது மிக்க ஆபாசகரமாக முடியும். ஆயினும் உண்மையைக்கூருதுவிடுவது சரியல்ல. வெங்கிடுபதிக் கவுண்டரின் முன்னோர்கள் தலைமுறை தலைமுறையாய் கூலிவேலைசெய்து ஜீவித்தவர்கள். வெங்கிடுபதிக் கவுண்டரும் தமது 20 வயதுவரை அவ்வூராரின் எருமை மாடுகளை மேய்த்தும் விறகு வெட்டியும் தமது மனைவியும் தங்கையும் அடங்கிய சிறு குடும்பத்தைப் போஷித்து வந்தார். அவர் தங்கைக்கு அப்போதே விவாகம் ஆயிருந்தது. அவரது மனைவி ஒரு ஆண்குழந்தையை ஈன்றதும் சிலது நாட்களில் சிவலோகப் பிராப்தியடைந்தாள். பிறகு அவர், தம் குழந்தையுடன் கஷ்டஜீவனம் செய்து வந்தார். அவர் சிறுவயது முதல் தமது உடம்பைப் பலவிதத்திலும் கஷ்டப்படுத்தி உழைத்து வந்ததால் அவர்தேகம் நல்ல வாட்டசாட்டமான கட்டுமஸ்துள்ளதாகவும் கரணை கரணையாய்த் தடித்த தசைப்பற்றுள்ளதாகவும் கன்னிகைகளின் கருத்தைத் தன் வயமாக்கும் கட்டழகுள்ளதாகவும் இருந்தது. அவரது வனப்பில் அறிவைச்செலுத்திய அவ்வூரிலுள்ள அதிக ஐஸ்வரிய

முள்ள அம்புஜம் என்னும் ஒரு இளங்கைப்பெண் அவரைக் காதலித்தாள். எதிர்பாராத விதமாய்க் கிடைத்த இந்த இந்தரலோக போகத்துக்கிணையான இன்பத்தை விட்டுவிடு வாரோ நம் வெங்கிடுபதிக் கவுண்டர்! அவர்கள் அன்று முதல் மிக்க அன்புடனும் ஆவலுடனும் " காய்ந்தமாடு கம் பிற் புகுந்ததுபோல" மேளதாளத்துடன் மனம்போல மன் மத பூஜைபுரிந்து வந்தார்கள். பூசை நடத்தும் புளகாங்கித த்தால் அம்புஜம் மிக்க ஆனந்தமடைந்து வெங்கிடுபதிக் கவுண்டர் செய்யும் பூசைக்குத்தகுந்தபடி சிறிது சிறிதாகப் பொருள் கொடுத்து அவரை பணக்காரனுக்கினுள். அவர் அதுமுதல் தமது பணத்தைப் பலவித வியாபாரங்களில் போட்டும், பல திருடர்களைச் சேர்த்து திருடச் செய்து தாம அதில் பங்கு பெற்றுப், அனேக ஏழைகளைக் கெடுத் தும், சமயம் நேர்ந்தபோது பலரைக் கொலை செய்தும், பொய்ச்சாக்ஷி சொல்லியும், மற்றும் பல அதமச் செய்கை கள் செய்தும், தமது பொருளை விர்த்தி செய்து தற்போது லட்சாதிபதியானுர். நாளுக்கு நாள் அவர் தனம் விர்த்தியா னதற்கு எதிரிடையாய் அவர் நற்குணம நாளுக்கு நாள் குறைந்து கரைந்து போய்விட்டது. மறந்தும் ஒரு பைசா வையாவது நல்வழியில் நழுவவிட மாட்டார். தர்மம் என் பது இவர் பெயரைக் கேட்டால் தலைகாட்டாம லோடிப் போகும். தர்மத்தின் வழியில் ஒருபைசா செலவு செய்யா விடினும் தாசிகள் விஷயத்தில் தாராளமாய்ச் செலவு செய் வார். நல்ல பல்லவி பாடும் பாடகனுக்கு 10 ரூபாய் கொடுக் கப் பஞ்சாய்ப்பறப்பவர், தெம்மாங்குபாடும் தேவடியாளுக் குத் திரண்ட செல்வ மீவார். தமது தனத்தைத் தாசிகள்

விஷயத்திலன்றி வேறு எவ்விதத்திலும் வினியோகிப்பதில்லையென்றுவிரதம் பூண்டிருப்பவர்.

இவர் இவ்விஜய நகரத்தின் பொதுஜனத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இவரது வசத்தில் சில உத்தியோகப் பிரிவுகள் விடப்பட்டிருந்தது. இவரது மேற்பார்வையிலிருக்கும் உத்தியோகப் பிரிவுகளிலுள்ள சில்லரை அதிகாரிகளும் பொது ஜனங்களும் தங்கள் குறைகளைத்தெரிவித்துக் கொள்ளவேண்டுமாயின் புருஷர்கள் பகலிலும் பெண்கள் இரவிலும் வந்து தம்மைக் காணவேண்டுமென்று ஒரு சட்டமேற்படுத்தினர். சம்பளமில்லாது பொதுஜன நன்மையைக் கோரிச் செய்யும் உத்தியோகமென்ற வியாஜத்தை முன்னிட்டுக்கொண்டே தினத்திற்கு பத்து ரூபாய் வீதம் பத்தா தட்டிவிடுவார். இவ்வாறு இவர் செய்த ஊழல்கள் எண்ணிறந்தன. எவர் எப்படிப் போயினும் சரி; தன்னைப் பொருத்த மட்டில் சந்தோஷகரமாயிருக்க வேண்டுமென்றெண்ணும் சுயநலப்பிரியர். செய்ந்நன்றி மறப்பவர். நமது கதை நடந்தது வெகுநாளைக்கு முந்திய மகம்மதிய இராஜாங்க காலமானதாலும் அப்போதைய ஆட்சி முறைகள் தற்காலத்திய ஆட்சி முறையைப்போல அவ்வளவு சீரும் சிறப்புமாக நடைபெறுமையாலும் அவரது ஊழல்கள் வெளிக்குத்தென்படவில்லை. பொதுஜனங்களும் இவரது உள்ளத்தின் கள்ளத்தனத்தை உணராது இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். இவ்வளவே நமது வெங்கிடுபதி கவுண்டரின் பூர்வ சரித்திரம்.

இப்படிப்பட்ட தனவந்தர்கள் எதற்காக இந்தத்தரணியில் உதித்தார்களென்பது தெரியவில்லை. பூமிக்குப் பெருஞ்

சுமையாகவும் உணவுக்குக்கேடாகவும் மென்மையும் கொழு மையும் உருட்சி திரட்சியும் பெற்ற தங்கள் அன்னைகளின் அழகிய அங்கங்களின் இளமை வனப்பைக் கெடுத்து ஒவ் வொரு அங்கங்களையும் அவலக்ஷணப் படுத்துவதற்குமே இவர்கள் அவதரித்தார்கள் என்று சொல்லுவது மிகவும் பொருந்தும். இத்தகைய உலுத்தர்கள், தமது தனத்தை உபயோகிக்கும் நல்வழியறியாமல் வைத்துக்கொண்டு ஓல மிடும் லோபிகள், இருப்பதைக்காட்டிலும் இறப்பது சால வும் நன்மையன்றோ? ஒரு வேலைக்கும் பயன்படாத ஒரு வண்ணனுடைய நொண்டிக்கழுதை இறந்துவிட்டால் அதை க்குறித்து ஊராராவது உலகத்தாராவது எவ்விதவருத்த மாவது, விசனமாவது, அநுதாபமாவது, காட்டுகிறார்களா? உண்மையில் கழுதைக்குச் சொந்தக்காரனான வண்ணனும் கூட, அதை அடிக்கடி தேடிப்பிடித்து தொழுவத்தில் கட் டும் வேலையும் அதன்நொண்டிக்காலுக்கு அடிக்கடி மருந்து வைத்துக்கட்டும் வேலையும் அன்றுமுதல் அடியோடுதொலை ந்ததென்று எண்ணி ஆனந்தமடைவான். அதுபோல்மெலி ந்தவர் அங்கஹீனர் முதலியவர்களை போஷித்தல், கல்விதா னம் செய்தல், தாய்ப்பாஷைகாத்தல் முதலிய சத்கர்மங் களில் ஈடுபடாத தனவான்கள் இறந்தால் அதைக்குறித்து யாருக்கும் எவ்விதமான வருத்தமும் அநுதாபமும் ஒரு சிறிதும் இராது. ஊரைப்பிடித்த சனி ஒழிந்ததென்று உற்சாகத்துடன் அன்று பண்டிகை கொண்டாடுவார்கள். பிறருக்கு விசனமில்லாவிடினும் பெண்டு, பிள்ளை, முதலிய வர்களுக்காவது விசனமிருக்கலாமென சிலபேர் சொல்லக் கூடும். ஆயினும் அவர்களுக்குக்கூட விசனமிராதென்று

நாம் அவசியம் சொல்லலாம். ஏனெனில் இத்தகைய உலுத்தர்களின் போஷணையில் இருப்பவர் ஒரு பங்கு சுகம் பெற்றிருப்பினும் ஒன்பது மடங்கு கஷ்டமும் அடைந்திருப்பார்களென்பதில் சிறிதும் ஆக்ஷேபமின்று. ஆகையால் அவர்கள் அழும் அழுகையும் முற்றும் வெளிப்பூச்சேயன்றி உண்மை வியாகூலமன்று. மேலும் சில தனவான்கள் மற்ற சாமான்ய ஜனங்கள் யாவரும் தமக்குக் கீழ்படிந்து தாம காலால் இட்ட வேலையை பிறர்கலைபால் செய்யவேண்டுமென்றும், தம்மை மிகவும் பூஷித்தும் புகழ்ந்தும கௌரவிக்க வேண்டுமென்றும் மனப்பால் குடித்துப் பேராசை கொள்ளுகிறார்கள். ஆனால் "ஆசையிருக்கிறது தாசில் பண்ண அதிர்ஷ்டமிருக்கிறது கழுதைமேய்க்க" என்றபடி ஆசைக்குகந்தவாறு பரோபகாரம், இரக்கம், சமநோக்கம், முதலிய சற்குணங்களிருந்தாலன்றோ, புகழும் புண்ணியமும் கிடைக்கும். "கொடுப்பது உண்டானால் கும்பிடுநடக்கும்" என்றவிதம் சர்வ ஜீவராசிகளுக்கும் தம்மாலியன்றவளவு உதவிசெய்தால்தான் மனித ஜென்மமெடுத்ததற்கு—அதிலும் பெரிய பிரபுஸ்தானத்திலிருப்பதற்குப் பயன் ஆகும். இன்றேல் லோபகுணமுடைய எத்தகைய தனவந்தரையும் அலட்சியித்து ஜனங்கள் எட்டியென எண்ணிஎட்டிநடந்து விடுவார்களேயன்றி புகழ்ச்சியும் மரியாதையும் ஒருபோதும் செய்யவேமாட்டார்கள் என்பதை அவர்கள் ஒரு சிறிதும் அறிவதில்லை.

## 3-வது அத்தியாயம்.

# எட்டுநாளெனினும் மட்டிலாஇன்பம்

:O:

கோகிலாம்பாளின் குதலை மொழிகளாலும், அழகும் மிருதுவும் பொருந்திய அவளது அவயவங்களின் ஆலிங்கன சுகத்தினாலும், அறிவு மயங்கிய சுந்தரராஜு கவுண்டன் அன்றிரவு முழுதும் துயிலாமல் அவளைக் கூடிச் சுகிக்கும் நோக்கத்துடன் அனங்கனைக் குறித்து ஹடயோகம் செய்திருப்பானென்று நாம கூறவேண்டியதில்லை. வாசகர்கள் முன்னமே அவ்விதம் ஊகித்திருப்பார்கள். சுந்தரராஜுக்கு அவனது அன்னையைத்தவிர வேறு மேலதிகாரிகள் வீட்டில் இல்லை. அவளும் இன்றோ, நாளையோ எமனுலகுக்கு யாத்திரை செய்யும் நோக்கத்துடனிருப்பவள்போல நிரம்பவும் மெலிந்திருந்தாள். இயற்கையிலேயே சுந்தரராஜு பரோபகாரம், பொறுமை, இரக்கம், தயை, தர்மம், என்னும் சற்குணங்கள் நிரம்பப்பெற்ற உத்தமனாயிருந்தும் கோகிலாம்பாளின் ஸ்பரிச உணர்ச்சியினால் யாவும் மழுங்கப்பெற்றுப் பரஸ்திரிகமனம் என்னும் பாபத்தொழிலில் மனதைச் செலுத்தினான். அவன் அன்றிரா முழுதும் ஒவ்வொரு வினாடியையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்தான். இரவு சீக்கிரம் ஒழியவில்லையேயென அவன் மனத்தில் ஆத்திரமும் ஆவலும் பொங்கியது. மாலைநேரமே

தான் அவள் மனைக்குச் செல்லாமலிருந்தது தனது முழு முட்டாள் தனமென்று தன்னையே நிந்தித்துக்கொண்டான். இத்தனை உபத்திரவங்களுக்கிடையில் மெள்ள மெள்ள இரவும் தொலைந்தது. சுந்தரராஜு அதிகாலையில் எழுந்ததும் பிறர் தன்னைக் காணுதிருக்கத் தலைமேல் தனது வஸ்திரத்தை முக்காடுபோட்டுக்கொண்டு வில்லினின்றும் விடுபட்ட அம்புபோல் பறந்து சென்று கோகிலாம்பாள் கூறிய அடையாளத்தைக் கவனித்து அவள் வீட்டண்டை நெருங்கினான். அச்சமயம் யாராவது தன்னைப் பார்க்கிறார்களாவென்று சுற்றிலும் திரும்பிப்பார்த்து ஒருவருமில்லாதிருக்கவே திருப்தி அடைந்தான். இது முதன் முதல் புதிதாய் தாசி வீட்டுக்குச்செல்லும் தடியன்களுக்கு ஏற்படும் ஒருவித அச்சம். ஒருவருமில்லாதிருக்கவே சந்தோஷத்தோடு சரசரவென்று உள்ளே நுழைந்து கூடத்திலிருந்த நாற்காலி அருகிற்சென்றான். அங்கிருந்த மற்றோர் நாற்காலியில் பிளாக்வர்ணம் தீட்டிய பீப்பாவைப்போல் உட்கார்ந்திருந்த தாந்தோணி ஐயங்கார் சுந்தரராஜுவைக் கண்டதும் மிகுந்த சந்தோஷத்துடன் தமது பளுவு மிக்க தொந்தியையும் சட்டைசெய்யாமல் ஒரு குதிகுதித்து ஒட்டமாய் ஓடிவந்து சுந்தரராஜுவின் கரத்தைப் பற்றிக்கொண்டு பேஷ்! குழந்தாய் சுந்தரராஜு!! உனது வாக்குறுதியின் ஒப்பற்ற வன்மையே வன்மை! இதுதான் பெரிய மனுஷத்தன்மைக்கு லட்சணம்! நினது அன்பு மிக்க காதலி நேற்று முதல் அன்னம் தண்ணீரில்லாமல் அவதிப்படுகிறாள்; என்று கூறிக்கொண்டே அவனை அழைத்துப்போய் நாற்காலியில் உட்காருவித்து தானும் மற்றொரு நாற்காலியில் அமர்ந்தார்.

இத்தருணம் நாற்பது அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத்தகும் வயதுடையவளும் அழகுள்ளவளுமாகிய ஒருபெண் பிள்ளை கூடத்தின் அருகிருந்த அறையிலிருந்து வெளிவந்து சுந்தரராஜுவைக் கண்டதும் வாருங்கள்! வாருங்கள்! என்று முகமன் கூறி திரும்ப வீட்டிற்குள் புகுந்து வெள்ளித்தட்டில் வெற்றிலை, பாக்கு, ஏலம், கிராம்பு முதலியவைகளை எடுத்துவந்து சுந்தரராஜுவின் அருகில் வைத்து உபசரித்து அண்டையில் நின்றுகொண்டு அவனை யாரென்று கேட்கும் பாவனையாய் ஐயங்காரரைப்பார்த்தாள்.

ஐயங்காரும், அவள் குறிப்பறிந்து ஏண்டி இவனை இன்னானென்று அடையாளம் கண்டுகொள்ளாமல் ஆந்தைபோல் விழிக்கிறாய்? லட்சாதிபதியான சிங்காரவேலு கவுண்டர் குமாரனும், நமதுகுழந்தை குணமிகுந்த கோகிலாம்பாளின் கணவனும், உனது மருமகனுமாகிய சுந்தரராஜுவென்பதை அறியாமல் மரம்போல் நிற்கிறாய்; என்றார். அதைக் கேட்ட கமலாம்பாள் மிகுந்த திகைப்பும், வியப்பும் அடைந்தவளாய் வாயைப்பிளந்து ஆ! ஆ!! தெரிந்தது. தெரிந்தது. இவர் வருகைக்காகத்தான் என் மகள் அன்னமின்றி அருந்தவமிருக்கிறாள். அப்பா என்ன அழகு! இவரின் ஒப்பற்ற அழகைக்கண்டு என்மனமே மயங்குகிறதென்றால் குழந்தை கோகிலா மயங்கினது ஆச்சரியமல்ல. இந்நிகரற்ற அழகனை என் மகள் பர்த்தாவாக அடைந்தது அவள்செய்த பெரும்பாக்கியமே, என்று கூறிவிட்டு மீண்டும் சுந்தரரா ஜுவை நோக்கி தம்பி! எனது புத்திரிக்கு எங்கள் குலத் தொழிலை அனுசரிக்கும்படி நான் எவ்வளவு மதிகூறியும்

கேளாமல் வலியவந்த அநேக ஜமீன்தாரர்களையும் பிரபுக்களையும் தள்ளிவிட்டதுமன்றி, தன் மனதுக்கேற்ற மணவாளனைக்கூடி இல்லறம் நடத்துவேனேயன்றி வேசித்தொழில் புரியேனென்று மறுத்துவிட்டவள் நேற்று சமுத்திர தீரத்தில் உம்மைக்கண்டனளாம் மையல் கொண்டனளாம். அது முதல் இதுவரை உமது நினைவாகவே இருக்கிறாள். நீ அவளை ஆசைக்கண்ணுட்டியாக்கி நேசத்தைக்காட்டி பாசத்தை ஒட்டினாலன்றி அன்ன ஆகாரம் அருந்துவதில்லையென நேற்றுப் படுத்தவள் இன்னும் எழுந்திருக்கவில்லை. நீ மனது வைத்தாலன்றி என் மகள் தேறமாட்டாள். எனக்குக் குழந்தைப் பிச்சை நீதான் கொடுக்கவேண்டு மென கோவென்று புலம்பினாள் கமலாம்பாள். அச்சமயம் ஐயங்கார் கமலம் ஏண்டி அழுறாய்? சுந்தரராஜு மிக்க நல்லவன். அவ்வளவென்ன அவர்கள் வம்சமே பரோபகாரம் நிறைந்தது. சுந்தரராஜு கோகிலாவைக் கைவிடமாட்டான். தைரியமாயிரு; என்று அவளது ஒத்துக்கிணங்க நாகசுரத்தை ஒழுங்காய் ஊதினார்.

அம்மா! ஊராரனைவரும் உத்தமனெனக் கொண்டாடப்பட்டவனும், மறுமாதரைக் கனவிலும் கருதாதவனுமாகிய என்னுடைய மனம் எக்காரணத்தாலோ கோகிலாவைக் காதலித்து விட்டது. யோசிக்கின் எங்களுக்குள் பூர்வபந்த சேஷம் இருக்கும் போலிருக்கிறது. இன்றேல் இப்படி நேரக் காரணமில்லை. இனிமேல் நான் விவாகம் செய்து கொள்ளப் போவதில்லை. நானும் அவளும் எங்களுயிரிருக்கும் வரை சதிபதியென மருவி வாழ்வதே கருமமெனக்

கொண்டேன். ஆகையால் உனது துன்பத்தை விடுவாய்; என்று கூறிவிட்டு கோகிலா எங்கே என்று கேட்டுக்கொண்டு அவளிருக்கும் அறையை நண்ணினுன்; சுந்தரராஜு.

ஆங்கு அம்ச தூளிகா மஞ்சத்தில் வதங்கி—நுடங்கி—கலைகள் கலைய, கச்சு நெகிழ்ந்து கனதனம் தோன்ற, குழல்கள் சரிந்து புரள, கலங்கிய கண்கள் கொவ்வையை நிகர, கண்ணீர் மல்கிய கரைகள் மின்ன, அலங்கோலமாய் ஒடிந்து விழுந்த பூங்கொம்பெனக் கோகிலாம்பாள் சயனித்திருந்தாள்.

உண்மையாகவே மிக்க மனவருத்தத்துடனும் துக்கத்துடனும் ஆயாசத்துடனும் சயனித்திருந்த கோகிலாவைக் கண்ட சுந்தரராஜு மிக மனங்கலங்கி ஆ! எனதாருயிர்க் காதலி! நினது துன்பத்தை நீக்குதி. அன்று என்னைக் கண்டதும் உனதுள்ளத்திற் காதலனென்றென்னை எண்ணினையோ! நான் மீண்டும் உனை நாடிவருவேனே வரமாட்டேனேவென யோசனை பண்ணினையோ! என்னை சீக்கிரம் காணுததால் மனம் குன்றினையோ! யான் வரமாட்டேனென்றபேக்கத்தால் இப்படுக்கையை நண்ணினையோ! அடி எனதாசைக்குகந்த நேசக்கண்ணாட்டி! என்று அவளை அணைத்தெடுத்து அகம் உறத்தழுவி அவளது அதரத்தினும் கன்னங்களிலும் அனேக முத்தியளித்தான்; சுந்தரராஜு.

மனத்துயரத்தால் மயங்கியிருந்த கோகிலாம்பாள் சற்று புன்னகையுடன் சுந்தரராஜுவை இன்புற நோக்கி அழகில் மிகுந்த மார! அனங்கனைப்புறம் கண்டிடும் வீர! அங்கனைகளை மயக்கிடும் ஒய்யார! கன்னிகைகள் மனமகிழ

க்கலவி செய்யும் தீர! இன்று நும் மனமகிழ்ந்து எனைக் கூட வந்தீரா! எனது ஆற்ருெணுத்துயரங்கள் தீர! என்று சுந்தரராஜு சவுண்டனின் கழுத்தில் தனது கைகளைப் பிணைத்து அகில் மரத்தைச் சுற்றிய அல்லிக்கொடிபோல கட்டிக்கொண்டாள் கோகிலாம்பாள்.

"அடி என் மனதைக்கவர்ந்த மாங்குயிலே! நினது சல்லாபத்தையன்றி சந்திர ஜடாதரனது தரிசனமே கிடைப்பதாயினும் யான் விரும்புகின்றிலேன். இன்று முதல் ஒரு நிமிடமும் பிரியாமல் சதிபதியென நாமிருவரும் மகிழ்ந்து வாழ்வோம்; என்று கூறி அவளை மகிழச் செய்தான் சுந்தரராஜு கவுண்டன்.

அன்று முதல் அவர்கள் உடலும் உயிரும் போலவும் நகமும் சதையும் போலவும் மிக்க அன்புடன் உயிர் ஒன்றும் உடலிரண்டுமாக மதித்து வாழ்ந்தார்கள். அவர்களின் அன்னியோன்னிய தாம்பத்தியத்தை அளவிடுதல் அசாத்தியம். அதிகம் கூறுவானேன். சுந்தரராஜு கவுண்டன் ஜலவிசர்ஜனத்துக்குச் செல்லவெழுந்தாலும் அவனைக் கோகிலம் கட்டிக்கொண்டு ஆசைமிக்க நேசரே! தாம் சென்று மீண்டுவர ஐந்துநிமிடம் செல்லுமே! அவ்வைந்து நிமிடமும் எனக்கு ஐந்து வருடங்களாகவன்ருே தோன்றும்; அதுவரை உம்மைப்பிரிந்து நான் யாங்ஙனம் உய்வேன். என்ருல் ஒரு சிறிதும் இயலாது இதோ இப்பாத்திரத்தில் பெய்துவிட்டால் எனதன்னை அதை அப்புறப்படுத்திவிடுவாள், என்று அவனை அணைத்தணைத்து ஆலிங்கனம் செய்

வாள், என்றால், அவர்களது அன்பு முதிர்ந்த நேசம் எத்தகையதென்பதை வாசகர்களே உணரக் கடவார்கள். இவ்வாறு அவர்கள் பெரும்பாலும் எக்காரணத்தாலும் சிறிதும் விலகாமல் சதா ஆடுவதும் பாடுவதும் கூடுவதும் விளையாடுவதுமாக ஆநந்த சாகரத்தில் அமிழ்ந்து கரைகாண முடியாமல் ஒரு வருஷத்தை ஒரு நிமிடமெனக் கழித்தார்கள். இதற்கிடையில் தாந்தோணி ஐயங்காரும் அடிக்கடி வந்து இவர்களுடன் கலந்து ஆனந்த சம்பாஷணை புரிய ஆசைப்பட்டார். ஆயினும் இவர்கள் சிறிதும் அவரிஷ்டத்திற்கு இடம் தரவில்லை. இவ்வாறு வருஷம் இரண்டும் சென்றது. நாள் ஆக ஆக இவர்களின் காதலும், அன்பும், நேசமும் மேன்மேலும் பெருகினவேயன்றி ஒரு சிறிதும் குறையவில்லை. இதுவரை சுந்தரராஜு கவுண்டனிடமிருந்து அவர்கள் ஒரு பைசாவாவது பெற்றுக்கொள்ளவுமில்லை.! பெற்றுக்கொள்ள நினைக்கவுமில்லை! என்னே ஆச்சரியம்! ஆசைகாட்டிக் காசு பறிக்கும் தாசிகள்! பணத்திலேயே பெரும்நோக்கம் வைத்த தாசிகள்! பணம் கொடுப்பவர் யாவராயினும் பர்த்தாவெனக் கூறும் தாசிகள்! ஒவ்வொரு நிமிஷத்தையும் காசு வாங்குவதிலேயே கழிக்கும் தாசிகள்! காசுவருவதென்றால் கழுதையையும் புருஷனெனக் கட்டிக்கொள்ளும் தாசிகள்! ஆயிரம் புருஷரையுடையவராயிருந்தும் நான் அறியாப் பெண்ணெனப் பகரும் தாசிகள்! இரண்டு வருஷமாகத் தங்கள் கையில் ஒருவன் சிக்கியிருக்க —அதிலும் கொழுத்த பணக்காரனுகக்கிடைத்திருக்க— பணம் பறிக்காமல் பட்சம் காட்டி வந்தார்களென்றால் இதைவிட ஆச்சரியமும், அதிசயமும், நூதனமும் வேறுண்டோ?

இஃது குதிரைக்குக் கொம்பு முளைத்தது போன்ற ஆச்சரிய மன்ரு? இவர்களைத் தாசிகள் என்று கூறுவது தர்மமா? குலமகளினும் மேன்மை தங்கிய குணமகளிரென்று கூறவும் தடையுண்டா? பிறப்பில் தாசியேயன்றி கறப்பில் (கறத்த வில்) தாசியல்லவெனக் கூறும்படி இருந்தார்கள். இத்தகைய உத்தமஸ்திரிகளும் உலகில் இருக்கிறார்களென்பது மெச்சத் தக்கதே! நிற்க.

"இவ்வித உல்லாசத்திருக்கையில் ஒருநாள் காலை மணி 9-க்கு சாதாரண உடையணிந்தவனும் பூணூல் போன்று மஞ்சளும் கருப்பும் கலந்த ஒரு பட்டையை மார்பில் அணிந்தவனுமாகிய ஒரு சேவகன் வந்து கமலாம்பாள் குமாரத்தி கோகிலாம்பாள் யார், என்று அவர்கள் வீட்டுவாயிலில் நின்று கூவினன்.

அச்சமயம் தன் காதலனுடன் கொஞ்சிக்கொண்டிருந்த கோகிலாம்பாள் வாயிற்படி அருகில் சென்று யாரையா கேழ்க்கிறது? வந்த காரியத்தை தயவு செய்து சீக்கிரம் சொல்லும்; என்ருள்.

அம்மா! சீ. வா. பெ. கொ. செட்டியார் பாங்கியில் நீங்கள் வாங்கிய ரூபாய் (2000) இதுவரை செலுத்தப்பட வில்லை ஆகையால் செட்டியார் கோர்ட்டில் தாவா செய்து உமது வீடு ஏலத்திற்கு உத்தரவாயிருக்கிறது. இதோ ஏல நோட்டீஸ் பெற்றுக்கொள்ளுங்கள்; இந்த மாதம் 29—தேதி ஏலம் என்று நோடீஸைக்கொடுத்து வெளிச் சென்ருன்; சேவகன்.

இவர்கள் சம்பாஷணையை முற்றும் கேட்டிருந்த சுந்தரராஜு கவுண்டன் கோகிலாம்பாளை விளித்து கோகிலம்! என்ன உனது வீடா! ஏலத்திற்கா! என்ன பெருமோசமாயிருக்கிறது. உன் வீடு ஏலமானல் எனக்கு அவமானமில்லையா? பிறகு நானும் பிராணனை வைத்துக்கொண்டிருக்கவேண்டுமா? சீ. இதோ இந்நிமிடமே செட்டியார் பாக்கியைச் செலுத்தி விடுகிறேன்; என்று எழுந்தான்.

கோகிலாம்பாள், அவனைத் தாவிப்பிடித்துக்கொண்டு என் மனங்கவர் காதலரே! வேண்டாம், வேண்டாம், ஒரு போதும் கூடாது. தங்களிடமிருந்து நான் ஒரு பைசாவேனும் பெற்றுக்கொண்டாலும் மற்ற விலைமாதர்களைப் போலவே இகழப்படுவதுமன்றி நரகமும் எனக்குச்சொந்தமாகுமன்றோ? எனது சிற்றன்னை மகன் கொஞ்சம் செல்வவான். அவன் எனக்கு அவசியம் உதவி செய்வான். ஆதலின் தங்களிடமிருந்து யாதொரு உதவியும் வேண்டேன். தமது அன்பும், காதலுமே, எனக்கு இலட்சாந்தரம்; என்று அவனைத் தடுத்தாள்.

இத்தருணம் சமையல் கட்டிலிருந்த கமலாம்பாள் அங்குற்று சங்கதி அறிந்துகொண்டு அப்பா! மருமகனே! உன்னிடமிருந்து ஒரு காசும் நாங்கள் விரும்பமாட்டோம். நான் ஆசைப்பட்டாலும் என் மகள் இடங்கொடாள். நீங்கள் இரண்டுபேரும் ஆடிப்பாடி விளையாடி இருப்பதை என் கண்களால் பார்த்து ஆனந்தமடைவதே எனக்குப் போதுமானது என்று அன்புடன் கூறினள்.

இவ்விஷயங்கள் நடந்த ஒரு வாரத்திற்குப் பின்னுல் ஒருநாள் பக்கத்து வீட்டு பாக்கியரத்தினம் என்பவள் கோகிலாம்பாள் வீட்டிற்கு வந்து அடி கமலா! அடி கோகிலா! தட்டுவாணிப் பட்டிமுண்டைகளே! ஏண்டி உங்களுக்கு மதியில்லே. இடைப்பயல், மடைப்பயல், பாப்பர் பயல், பட்டிக்காட்டு முட்டாள்பயல், ஒருவனை வீடுசேர்த்துக் கொண்டு பொங்கிப்பொங்கிப்போட்டு எல்லாம் பாழாக்கி விட்டீர்கள். வீடும் தொலேந்தது. நகைகள் எல்லாம் நாசமடைந்தன. அன்று ஆகாரத்திற்கில்லேயென்று அட்டிகையை அடகு வைத்து வாங்கிய அசலும் வட்டியும் அதிகமாகிவிட்டது. இப்போது தொகையைக் கொடுத்தால் நகையைப்பெறலாம் இன்றேல் அதுவும் தொலேந்து விடும்; நானுயிருந்தால் வேசி வீட்டுக்கு வந்தால் இப்படி இருக்க வேண்டும், இப்படிக் கொடுக்கவேண்டும் என்பதை அறியாத வெங்கன்களே விளக்கு மாற்றுல் அடித்து வீட்டை விட்டு ஓட்டிவிடுவேன்; நீங்கள் எப்படிப் போனுல் எனக்கென்ன, குலத்தொழிலே நடத்தத் தெரியாமல் இப்படி கோவிந்தம் போடுகிறீர்களே என்றுதான் கூறவந்தேன்; என்று சொல்லிக்கொண்டே கோபத்துடன் வெளிப்போந்தாள்.

இவ்வார்த்தைகளேக் கேட்ட சுந்தரராஜுவின் மனம் பதைத்தது. நெஞ்சு துடித்தது. கோபம் பொங்கியது. கண்கள் சிவந்தன. இவனது கோபத்தைக்கண்ட அருகிருந்த கோகிலாம்பாள் அன்புமிக்க அருமைக்காதலரே! நீர் அவள் கூறிய வார்த்தைகளே மனதிற் கொள்ளவேண்

டாம். அவள் கூறியதனைத்தும் அபத்தமே. நான் சுகப் படுவதைக்கண்டு பொறாமையால் அவள் அவ்விதம் கூறினாள். என்று அவனை தன் மடிமீது சாய்த்து கன்னங்களைத்தனது கையால்தடவி உபசரித்து சாந்தப்படுத்தினாள்.

இத்தருணம் கமலாம்பாள் கடுகி வந்து இவர்கள் முன் நின்றாள். சுந்தரராஜு கவுண்டன் கமலத்தை நோக்கி மாமி! அந்தப்பட்டி முண்டை பாக்கியம் என்னென்னவோ உளரிக் கொட்டினாளே அதென்ன? கோகிலாம்பாளைக் கேட்டால் ஒன்றும் இல்லையென்று கூறுகிறாள். நீ அவசியம் உண்மையைக் கூறவேண்டும்? என்றான்.

அப்பா மருமகனே! உனக்கு மனவருத்தம் உண்டாக்கக்கூடாதென்றே என்மகள் ஒளிக்கிறாள். ஆயினும் நீ உண்மையைக் கூறவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதால கூறுகிறேன். வீடும்போயிற்று, வாசலும்போயிற்று, நகைகள் யாவும் நாசமடைந்தன. இனி நாம் மூவரும் தான் மிகுந்தோம். ஆயினும் நீங்கள் வருந்தவேண்டாம். தினம் ஒருகலம் நெல்லுக் குத்தியாவது குடும்பத்தை சம்ரக்ஷிக்க என்னால் முடியும். நீங்கள் எப்போதும்போல் ஆடிப்பாடி விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்ப்பதே எனக்கு ஆனந்தம்; என்றாள் கமலாமபாள்.

போடி போ இங்குவந்து பொய்யும் புரட்டும் கொட்டியளக்கிறாள்; என்று கமலாவின் கழுத்தைப் பிடித்து கோகிலாம்பாள் தள்ளிக்கொண்டுவந்து வெளியேவிட்டாள். இச்சமயம் தாந்தோணி ஐயங்கார் தமது வழுக்கைத்தலை

யைத்தடவிக்கொண்டு கோபிகை நந்தன! கோபாலகிருஷ்ண எனக் கூறிக்கொண்டு தமது தொந்திதத்திமி திமியெனத் தாளம்போட ஆடியாடி உள்ளே வந்தார். பின்பு ஐயங்காரும் சுந்தரராஜனும் வார்த்தையாடிக்கொண்டிருக்கவிட்டு கோகிலாம்பாள் நீராடச் சென்றாள்.

ஐயரே! கோகிலத்தின் வீடு, நகைகள், யாவும் போய் விட்டன போலிருக்கிறது. தாசியாயிருந்தும் இதுவரை ஒரு பைசாவையும் எதிர்பாராமல் எனக்குச் சகல பணி விடைகளும் செய்ததுமன்றி எனக்கின்பமும் கொடுத்திருக் கிறாள். இத்தகைய உத்தம குணமுள்ளவளுக்கு நான் இதுவரை ஒரு சகாயமும் செய்யாததைக் குறித்து என் மனம் வருந்துகிறது. கோகிலமோ ஒன்றும் வேண்டா மென்கிறாள். இதற்கு என்ன செய்யலாம்? என்றான் சுந்தரராஜன்.

அப்பா சுந்தரராஜா! நான் முன்னமே கூறவில்லையா? இவளைப்போல் உத்தமி வேறெவருமில்லையென்று; நீ இயற்கையிலேயே கருணையும், பரோபகாரமும் உள்ளவன். ஆகையால் அவளுக்கு உதவிசெய்ய எண்ணுவது ஞாயம் தான். உனக்குப் பிரியமிருந்தால் உனது பூமியிற் சிலதை அவளுக்கு எழுதிக்கொடுக்கலாமேயன்றி பணம் கொடுக்க எண்ணுவது சரியன்று. ஆனால், அவள் எதையும் வேண் டாமென்றுதான் சொல்லுவாள். ஆயினும் அவளை நிர்ப்பந் தப்படுத்தி பெற்றுக்கொள்ளும்படி நீ கூறவேண்டும். நான் சப்ரிஜிஸ்திராரையும் சாக்ஷிகளையும் இங்கேயே அழைத்து வருகிறேன் ரகசியமாய் முடித்துவிடலாம். சங்கதி பிறர்

அறிந்தால் அவள் பெற்றுக்கொள்ள ஒப்பவே மாட்டாள். என்றார்.

சரி, அப்படியே செய்துவிடலாம். எனது 50* வேலி நிலத்தில் 5 வேலி நஞ்சை கொடுத்துவிடுகிறேன். அதற்குவேண்டிய கடிதம் முதல் சகலமும் தயார் செய்து கொண்டுவந்து விடும்; அதன் செலவு யாவும் நான் கொடுத்துவிடுகிறேன்; என்றான் சுந்தரராஜு. ஐயங்காரும் அவ்விதமே செய்வதாக ஒப்புக்கொண்டு வெளியே சென்றார்.

## 4-வது அத்தியாயம்.

# விவாக மந்திராலோசனை.

:(o):

சுவர்ணம்பாளின் தந்தையாகிய கதிர்வேலுகவுண்டர் என்பவர் விஜய நகரத்திலுள்ள மிகவும் புராதனமும் கண்யமும் புகழும் படைத்த ஓர் நற்குடும்பத்தில் பிறந்தவர். அவரது முன்னோர்கள் செல்வத்திலும், கீர்த்தியிலும், அதிகம் செல்வாக்குற்றிருந்தாலும் அவரது தந்தையின் அந்திய காலத்தில் அவரது தனங்கள் அழிந்து போயினவாதலால் தற்போது அவர் சாதாரண அந்தஸ்துள்ளவராகவே இருந்தார். அவர் வாசம் செய்யும் மாளிகையும் அதன் அருகே உள்ள பூங்காவும் அம்மாளிகையின் ஓர் பால் உள்ள அச்சுயந்திரசாலையுமே கதிர்வேலு கவுண்டரது தற்போதைய குடும்ப சொத்துக்கள். அச்சாபீஸ்

* 1—வேலி =6 எக்கர்.

அவரது முயற்சியால் சில வருஷங்களுக்கு முன் சுமார் 10 ஆயிரம் ரூபாய் முதல்வைத்து ஸ்தாபிக்கப்பட்டது. அதில் 10 ஆட்கள் சதா வேலை செய்துகொண்டிருப்பார்கள். அவ் வாபீஸின் வரும்படியிலிருந்து ஆட்கள் சம்பளம் முதல் சகல செலவுகளும் நீங்கி மீதி இருக்கும் சொற்பத்தொகை யைத் தமது குடும்பச்செலவுக்கு உபயோகப்படுத்திவந்தார். இவருக்கு நற்குணமிக்க மனைவியும் சுவர்ணும்பாள் என்ற ஒரு குமாரத்தியும் உண்டு. சுவர்ணும்பாள் பூர்ண மதிநிகர் வதனத்தாள்; கருணையும், கம்பீரமும், நிறைந்த கண்ணி னுள். பாரித்த தனமுடையாள், அல்லிக்கொடியை நிகர்த்த அழகிய ஆகத்தாள், இவள் பூமகளோ நாமகளோ, எனப் புகலும் அழகோடு சரஸ்வதியேயெனக் கொண்டாடும் கல்வி யறிவும் கலந்த மேன்மையுடையாள். இவள் தன் தந்தை யுடன் சம்பாஷிக்கும் வேளையும், பூங்காவில் சற்றுஉலாவும் வேளையும், உண்பதும் உறங்குவதும் ஆகிய சமயங்கள் தவிர மற்ற நேரமெல்லாம் புஸ்தகமும் கையுமாயிருப்பாள்.

ஒருநாள் தந்தையும் தனயையும் சந்தோஷமாய் சம் பாஷித்துக் கொண்டிருக்கும்போது, கதிர்வேலு கவுண்டர் சுவர்ணும்பாளை நோக்கி குழந்தாய்! ஒரு முக்கியமான விஷயத்தை உன்னிடம்கூற உத்தேசித்திருக்கிறேன். நான் கூறுவதைக்கேட்டு உனது அபிப்பிராயத்தை எனக்குத் தெரிவி; என்றார்.

வணக்கத்திற்குரிய தந்தையே! தாங்கள்விஷயத்தைப் பகர்ந்தால் என்னுலியன்ற பதில் விளம்புகிறேன்; என்றுள் சுவர்ணும்பாள்.

குழந்தாய்! நமது ஆபீஸ் வரும்படியோ சொற்பம். அதிலும் ஆட்களுக்குக் கூலிபோக மிஞ்சுவது மிகச்சொற்பம். அதைக்கொண்டு நமது குடும்பத்தைத் தாட்டமுடியாமல் அடிக்கடி கடன்பட்டு இதுவரை சுமார் (8) ஆயிரம் ரூபாய்வரை ஏறிவிட்டதுமன்றி சில வருஷங்களாக வட்டியும் செலுத்தப்படவில்லை. இனி இதை அடைக்க என்றால் முடியாது. இப்படியே விட்டுவிட்டால் மேலும் மேலும் வட்டி ஏறிச் சிலநாளில் நமது குடியே அடியோடு முழுகிப் போம். ஆதலின் நின்னை நமது நகரத்திலுள்ள இலக்ஷாதிபதியாம வெங்கிடுபதி கவுண்டர் குமாரன் கனசாசலமாகிய நினது அத்தானுக்கு நின்னை மணம் செய்து கொடுத்து அதன்பயனாக நமது வறுமையைக்களைய யானும் உனது அன்னையும் உத்தேசித்திருக்கிறோம்; என்றார்.

என்னைப்பெற்று அன்புடன் வளர்த்து ஆதரித்த என தருமைத்தந்தையே! பொறுமையும், இரக்கமும், சீலமும், ஒரு சிறிதும் இல்லாதவர்களும், நற்குணம் இன்னதென்பதையே அறியாதவர்களுமாகிய பணக்காரர்களென்னும் பாஷாண்டிகளுக்குப் பணத்துக்காக என்னை விற்பதைக் காட்டினும், குற்றேவல் புரியும் குணவந்தருக்கு என்னைக் கூழுக்கு விற்றாலும் குற்றமில்லை. தற்கால சௌக்கியத்திற்காக நீங்கள் விற்று விட்டால் என் ஆயுள் முழுதும் துஷ்டனாயினும் சிஷ்டனாயினும் அவனுடன் இணங்கி, கஷ்டமோ, சுகமோ, எதுவரினும் நான் அனுபவிக்க வேண்டியவளன்றோ? பந்துத்வம் விட்டுப்போகுமென்ற பயனற்ற எண்ணத்தாலும், இது பணக்காரர் வீடு இந்த இடம் விட்டால்

நமக்கு நல்ல இடம் கிடைக்காது இங்குக் கொடுத்தால்—கொண்டால் நமது மகள்—மகன்—உண்டு சுகித்துக் கஷ்டமின்றிக் காலங் கழிப்பார்கள் என்ற குருட்டு எண்ணத்தாலும், பணத்தாசையாலும் தமது அருங்கிளி யொத்த அருமைப் பெண்களுக்கு மூடர்களேயும் திருடர்களேயும் குடியர்களேயும், தமதருமைக் குமாரர்களுக்கு அடக்க ஒடுக்கம் கற்புநலம் இல்லாத தண்டு பஜாரிகளாகிய ஆபாசக் களஞ்சியங்களேயும், சேர்த்துவைக்கும்—விவாகம் செய்து வைக்கும்—தாய்தந்தையராகிய நம்மவர்களின் மடமையை நாம் என்னென்று கூறுவது? இத்தகைய சம்பந்தத்தால் தாலிகட்டிய நாலாம்நாளே தாய்வீடோடியவர் எத்தனை பெண்கள்! மாமியார் வீடேகிய மறுநாள்முதல் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகக் காலம் கழிக்கும் அங்கனைகள் எத்தனை பேர்! முகூர்த்தம் நடந்த மூன்றும் நாளே அவ்விடம் விட்டு அன்னை வீடோடி பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெரும்பழியைத்தந்து பக்கத்தில் பாய்ந்து பதிவிட்டோடிய பைங்தொடிகள் எத்தனை பேர்! கொண்ட கணவனுக்கிரண்டகம் நினைத்துக்கொலை செய்ய ஏவிடும் குமரிகள் எத்தனை பேர்! மாமி நாத்திகளின் மடத்தனம் சகியாமல் தூக்குப்போட்டுக்கொண்ட அரிவையர்கள் எத்தனை பேர்! தாசி வீடேகும் தம் கணவரை மடக்க அருமருந்திடும் அபலைகள் எத்தனை பேர்! அப்பப்பா இவைகளேயெல்லாம் விடாது கூறுவதென்றால் எண்ணத்தொலையுமா? எழுத்தில் அடங்குமா? இத்தகைய அலங்கோலங்களும் ஆபாசங்களும் நடப்பது சதிபதிகளின் மனதையறிந்து சேர்த்துவைக்காததே தகுந்தகாரணமன்று

ஆதலின் எனதன்புமிக்க தந்தையே! தங்களுடைய அபிப்பிராயத்தோடு எனது அபிப்பிராயத்தையும் கலந்து, எனக்கிதமான வழியில் விவாகத்தை முடியுங்கள். அப்படியின்றி எனதிஷ்டத்தை அலக்ஷியித்து விவாதம் என்ற வீண்தொந்தாவில் என்னை சிக்கவிடாதீர்கள்; என்று நயமாகக்கூறினாள் சுவர்ணம்பாள்.

## 5-வது அத்தியாயம்.

# நாமொன்று நினைக்கத் தெய்வம் தானென்று நினைக்கும்

———:(0):———

வசந்த காலத்தின்போது ஒருநாள், ஆம். சித்திரை மாதம் 27-ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோகிலாம்பாளும் கமலாம்பாளும் அவர்கள் வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அப்போது தெருக்கதவைத்திறந்து கொண்டு அரே கிருஷ்ண! மாதவா! மதுசூதன! என்று ராம நாமஸ்மரணை செய்துகொண்டு தமது பருத்த தொந்தியை தூக்கமாட்டாமல் தவளைபோல் தத்தித்தத்தி தநிங்கண தோம் வைத்துக்கொண்டு தாங்தோணிஐயங்கார்உள்ளே வந்தார். அவரைக் கண்ட அம்மடவார்களிருவரும் தம

திருக்கையை விட்டுக் குதித்தெழுந்து மாமா! வாருங்கள் மாமா!! வாருங்கள். என்று வரிசையுடன் கூவிக்கொண் டோடி இருகரங்களையும் இருவரும் பற்றி மிக உபசாரமா கவும் மெதுவாகவும் அழைத்து வந்து ஒரு நீண்ட சோபா வில் உட்காரச் செய்தார்கள். ஐயங்கார் தமது கால்களை அகல விரித்துக்கொண்டு ஆடம்பரமாக உட்கார்ந்தார். அவ ரது பருத்ததொந்தி தேனடையைப்போல இரண்டு தொடை களின்மேலும் தொங்கித் தொந்தரவு செய்துகொண்டிருந் தது. நடந்துவந்த அலுப்பால் அவரது சுவாசம் கொல்ல னுலைத் துருத்திபோல் ஊதிற்று. கோகிலாம்பாள் அந்தச் சுவரில் வைக்கப்பட்டுள்ள ஒரு மயிலிறகு விசிறியை எடு த்து மெதுவாக வீசி ஐயங்காரின் ஆயாசத்தைத் தணித் துக்கொண்டிருந்தாள். இத்தருணம் கமலாம்பாள் கடுகிச் சென்று தெருக்கதவைத் தாளிட்டுவிட்டு ஒரு வெள்ளித் தட்டில் வாசனைத் திரவியங்களுடன் தாம்பூலம் கொண்டு வந்து ஐயங்கார் முன்வைத்து அண்டையில் மிக மரியாதை யாக நின்றாள். அவர்களின் உபசாரத்துக்கும் வணக்கத் திற்கும் அன்பிற்கும் பெரிதும் மகிழ்ந்த ஐயங்கார் அடி கோகிலம்! உனது உபசாரமெல்லாமிருக்கட்டும் முதலில் சுந்தரராஜு எங்கே சீக்கிரம் சொல்? என்றார். கோகி லாம்பாள் தனது புன்னகை ததும்பிய இனிய வதனத்தைச் சற்றுமேலெடுத்து ஐயங்காரை ஆவலுடன்நோக்கி அருமை மாமாவே! சற்று நேரத்துக்கு முன் தான் அவன் தனது இல்விற்குச் சென்றான்; என்றாள். அதைக்கேட்ட ஐயங் கார் மிக ஆனந்தத்துடன் அப்பா தொலைந்தானு! அந்தப் பாழும் சுந்தரம் வந்ததும் போதும் இந்த இரண்டு

வருஷமாக உனது மெல்லிய ஆகத்தின் ஆலிங்கன சுகத்தை எதிர்பார்த்தும் கிடையாமல் யான் பரதவித்ததும் போதும்; என்று படபடப்பாய் மொழிந்தார். இத்தருணம் அவர்களை தனியேவிட்டுத் தான் அப்பால் சென்றாள் கமலாம்பாள். அவரின் ஆவல் மிகுந்த வார்த்தையைக்கேட்ட கோகிலாம் பாள் புன்சிரிப்புடன் அவாருகில் மிக நெருங்கி அவாது கட்டைமயிர் அடர்ந்த சொர சொரப்பான மோவாயைத் தனது மென்மையும் இளமையும் வனப்பும் மிகுந்த வலக் காத்தால் தாங்கி அழகினில் அனங்கனை பின்னடையச் செய்யும் என் அருமை மாமாவே! தங்களின் அநுமதியின் பேரிலன்றோ நான் அவனை அண்டையிற் சேர்த்துக்கொண் டேன். இன்றேல் அத்துடைப்பக்கட்டையை அவமதித்து அப்புறப்படுத்தியிருக்கமாட்டேனா? இதைத் தமதுசித்தம் அறியாத தென்னே. அன்புள்ள காதலனே! என் கலி தீர்க்க வந்த கண்ணாளரே! என் மையலைத்தணிக்கும் மன் மதத்துரையே! என மழலை மிழற்றி பனைமரத்தின் மேற் பாகம் போன்ற கரடு முரடான அவாது கன்னத்தோடு தனது அழகிய வதனத்தைப் பொருத்தி மெல்லக்கடித்துச் சுவைத்தாள் கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளின், இனிய ஸ்பரிசத்தினின்றும் தோன் றிய ஒருவகை சக்தி ஐயங்காரின் ஆகத்தில் பிரவேசித்து அலைகடல்போல் கொந்தளித்துக் கொதித்து அவாது தலை யில் அரையணு அளவு விடப்பட்டிருந்த எலிவால் போன்ற உச்சிக்குடுமியைப் பிடித்து உலுக்கியது. அதன் ஆற்றலைச் சகிக்க இயலாமல் ஐயங்கார் தத்தளித்துத் தவித்தார். அவ

ரது மூளை குழம்பியது. அறிவு தடுமாறியது. தடுமாற்ற த்துடன் அடி என் பொன்னே? பொன்னிற் கடைந்தெடு த்த பொற்சிலையே!! சிலையின்மேல் திகழும் தண்சுடரே!!! உனது அழகிய அஸ்தங்களால் அழுந்த அணைத்து இன் னொரு அன்பு முத்தியிடுவாயடி அன்னமே; எனத் தழு தழுத்த குரலில் கொஞ்சிப்பேசி அப்படியே சொக்கிச் சோபாவில் சாய்ந்தார் ஐயங்கார். அவரின் கொஞ்சுதலுக் கிரங்கிய கோகிலாம்பாள் குதித்துத்தாவி அவரது பருத்த தொந்தி மீது வீழ்ந்து அவரது பெருத்த ஆகத்தைத்தழுவி கட்டைவிரற் பருமனுள்ள ஐயங்கார் அதரத்தைத் தனது பறகளால் கடித்துச் சுவைத்து கற்கண்டே! கனிரசமே! என்று குழைந்து குழைந்து கொஞ்சிப்பேசி முத்திமாரி பொழிந்தாள். பின்னும் அவளது ஆலிங்கன சுகத்திலமிழ் ந்து அறிவுமயங்கிய ஐயங்கார் சிறிது நேரத்துக்குப் பின் தேறி எழுந்து ஆவென வாயைப்பிளந்து தமது 32 பற் களில் ஏறக்குறைய 28 பற்கள் வெளியே விளக்கமாய் தோன்றும்படி பல்லையிளித்து, பேஷ்! இன்றே என் ஜென் மம் சாபல்யமாயிற்று. இச்சுகத்திற்கு இந்திர போகமு மிணையாமோ! அடி என் கட்டிக்கரும்பே! கரும்பிலுறும் கனிரசமே!! ரசத்திலுறைந்திருக்கும் இன்சுவையே!!! என்று தமது பருத்த பானைத்துதிக்கை போன்ற கரத்தால் கோகிலாவை அணைத்தெடுத்து மடிமீதிருத்திக் கொண்டு கன்னத்தில் முத்தியிட்டு பட்டிமகன் உடும்புப் பிடியாய் பிடித்து அழகிய என்கண்மணியின் ஆகத்தினை அவஸ்தைப் படுத்தி விட்டானே அவனுக்குத் தகுந்த தண்டனை செய் தாலன்றி என்மனம் சாந்தமுறாது; என்று கூறிக்கொ

ண்டே அவளது அவயவங்களை மெதுவாகத் தமது கையால் வருடி ஆயாசப்பட்டார் ஐயங்கார்.

அவரது அன்பிற்கும், கருணைக்கும் பெரிதும் அக மகிழ்ந்த கோகிலாம்பாள், ஐயங்காரின் அடிவயிற்றைதடவி. ஆ! என் அன்பே! அமிர்தமே! நீர் புசித்து நெடுநேர மாகிறதுபோலிருக்கிறது அந்தோ எனதன்பரின் வயறு குழைகிறது. அம்மா! ஏதாவது சிற்றுணவிருந்தால் சீக் கிரம் கொண்டுவா எனது கண்ணாளன் புசிக்கட்டும்; சுடச் சுடச் சாதம் வடித்திருந்தால என் அன்பர் மிக்க அவா வுடன் புசிப்பரே. காலையில் சமைத்த ஜில்லென்று குளிர்ந் திருக்கும் சாதம் எனது கண்மணியின் வாய்க்குப்பிடிக் குமா? அந்தோ என் காதலரின் அருமை வயறு வாடுகி றதே; என்று மிகவும் பரிதபித்து அவர் மடியினின்றும் அகன்று அப்பால் நின்றாள். கோகிலாம்பாளின் முதிர்ந்த அன்பிற்கும், விரிந்த நோக்கத்திற்கும் பேருவகை பூத்த ஐயங்கார் அவளை தம் நெஞ்சோடு அணைத்துக்கொண்டு எனதாருயிர் காதலி! நீ ஆயாசமடையவேண்டாம். நான் வரும்போது தான் கோடிஆத்து கோபாலையங்கார் வீட்டில் பிராமணார்த்தம் சாப்பிட்டு வந்தேன்; நேக்கு கொஞ்சமும் பசியில்லை. பொகு திருப்தியாயிருக்கிறது; என்றார். இவர் கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் கமலாம்பாள் ஒரு பெரிய வெள்ளித்தட்டில் மூன்று சீப்பு வாழைப்பழங் களும் அன்று அவர்கள் இல்லிற்கு வந்த விருந்தினர்களுக் காகச் செய்திருந்த பக்ஷணங்களில் 15 ஜோடி ஒப்பட்டு களும் 6 டஜன் ஆமைவடைகளும் 22 அதிரசங்களும்

64 அப்பளங்களும் அழகுபெற ஒழுங்காய் வைத்து எடுத்துக்கொண்டு வந்து ஐயங்கார் முன்னுல் வைத்துநிவேதனம் செய்து அப்பால் சென்ருள். அவைகளைக்கண்ட ஐயங்கார் ஆனந்த பூரிதராகி அடி கமலம்! நேக்கு முன்னமே வயிறு பூரணமாய் நிறைந்து மந்தித்திருக்கிறது. அப்படியிருக்க எதுக்கு இவ்வளவு பிரசாதித்திருக்கிருய்? என்று கூறிக்கொண்டே ஒரு வடையை எடுத்து கற்கண்டே! கனிரசமே! இப்பக்ஷணத்தை அன்புடன் ருசி பாரடி என்று தமது அருகில் நின்ற கோகிலாவை மெதுவாய் அணைத்து அவளது முகத்தோடு தமது முகத்தைப் பொருத்தி மிக்க அன்புடன் அவள் வாயில் ஊட்டினுர். அவற்றை அவாவுடன் ஏற்றுக்கொண்ட கோகிலாம்பாள் அன்பரே! ஆருயிர் காதலரே! போதும் எனக்குவேண்டாம். நான் முன்னமே புசித்திருக்கிறேன். தாங்கள் அவற்றைப் பக்ஷித்தருளுங்கள் என்று ஒரு அதிரசத்தை எடுத்து கண்ணே! வாயைத்திற, கற்கண்டே! வாயைத்திற, என்று கூறி ஆவென்று திறந்த ஐயங்கார்வாயில் அதிரசத்தைச் சொருகி அவரைத் தனதிருகரங்களாலும் அழுந்தத் தழுவி அவரது கன்னத்தில் முகர்ந்து முத்தமிட்டாள். அவளது அழகிய கொங்கைகள் ஐயங்கார் மார்பில் அமுங்கிக் குழைந்து அவரது ஆகத்தை மிக்க பரவசப்படுத்தியது. கோகிலாவின் சரசத்தில் சொக்கி ஆனந்தமடைந்த ஐயங்கார் அடி என்கண்ணே! கண்ணின் மணியே!! கண்ணிற்குள்உறையும் கருவிழியே!!! நீ மிக்க பரிவோடும். அன்போடும், ஈந்த முத்தத்திற்கு, இவ்வதிரசமல்ல ஆயிரங்கண்ணுடையோன் அனுபவிக்கும் ஆனந்தமும் இதற்கிணையாமோ? என்று அதிரசம் நிறைந்த

வாயைத்திறந்து வழவழ கொழகொழ வெனக் கொஞ்சிப் பேசினார்.

ஐயங்கார், தமது வயது முதிர்ந்த வரட்டு மோகத்தால் கூறும் அமிர்த மொழிகளை அள்ளி அள்ளிப் பருகித் திருப்தியடைந்த கோகிலாம்பாள் அவர் அருகில் உட்கார்ந்துகொண்டு அன்பு மிக்க காதலரே! இப்பக்ஷணங்களைத் தாம் பக்ஷித்தருளுக; என்று மிகுதியும் உபசரித்தாள். இந்த அன்னநடை மின்னாளின் அன்பு முதிர்ந்த முத்தியினையும், உபசாரத்தையும் ஏற்றுக்கொண்ட ஐயங்கார்—குண்டோதரனுக்கு முன்னால் குவித்த அன்னமலை போன்று—தமக்கு முன்னால் குவித்திருந்த பக்ஷணமலையின் மீது யானைத்துதிக்கை போன்ற தமது கைகளாகிய நாராசபாணங்களை பிரயோகித்துச் சரமாரி பொழிந்து அவைகளை வந்தவழி போனவழி தெரியாமல் சிறிது நேரத்தில் வாறிவாறி வீசி தொம்சம் செய்து தொலைத்துவிட்டார். பக்ஷண மலையின்மீது பாணப் பிரயோகம் செய்ததால் மிகுதியும் களைப்படைந்த ஐயங்கார் தமது களைப்பை நிவர்த்திக்க அருகிருந்த பெரிய செம்பை எடுத்து அதிலுள்ள உதகத்தை கடகடவெனக் குடித்து இடி இடித்தாலன்ன ஏப்பம் விட்டு நாராயணா! வாசுதேவா! பொகுதிருப்தி. பொகுதிருப்தி. பக்ஷணங்கள் மிக்க ஸ்வாரஸ்யமாயிருக்கின்றன. என்று புகழ்ந்துவிட்டு என் வயிறு திருப்தியானது போல் உங்கள் காரியங்களும் கடவுள் அநுக்கிரகத்தால் கைகூடும்; என்று ஆசீர் வதித்தார். அவரது ஆசீர்வாதத்திற்ககமகிழ்ந்த கோகிலம் ஐயங்கார் அருகில் நெருங்கி தட்

டிலிருந்த வெற்றிலையை மடித்து மடித்து ஆவெனத்திறந்த ஐயங்கார் வாயில் சொருகிக்கொண்டே அன்பரே தமது பெருமுயற்சியாலும் ஆசீர்வாதத்தாலுமே எங்கள் காரியம் அநுகூலமாகவேண்டும். இந்த வீட்டில் எரியும் தீபம் நீங்கள் வைத்தது. உங்கள் அன்னத்தையே நாங்கள் இன்றும் புசிக்கிறோம். நீங்கள் செய்யும் உபகாரத்திற்கு நன்றியறிதலாக நாங்கள் தலைமுறை தலைமுறையாக உம்மைக் குலதெய்வமாக எண்ணிக் கும்பிட்டு வருவோம். இதுவே எங்களால் செய்யக்கூடியது. மேலும் அந்தங்கெட்ட மந்தப் பயலாகிய சுந்தரத்திடம் எத்தனை நாளுக்கு நான் அவஸ்தைப்படவேண்டுமென்று நினைக்கிறீர்? மிக்க அன்புடையவள்போலும் ஆவலுடையவள்போலும் பொய் நடிப்பு நடித்துச்சலித்துப் போய்விட்டேன். உங்கள் இஷ்டத்திற்கிணங்கியே நான் இதுவரை கஷ்டப்பட்டேன். அந்தோ! இனி ஒரு நிமிடமும் இத்துன்பத்தைச் சகிக்க என்னால் இயலாது; என்று கூறி மிக்க ஆயாசப்பட்டாள்.

அழகிய அன்னநடை அணங்கே! நினது ஆயாசத்தை நீக்குதி. இன்னும் சில நாட்களில் உனது துன்பத்தைத் தொலைத்து விடுகிறேன். நாமிருவரும் பெரும்பாலும் ஏழைகளாயிருப்பதால் எப்படியாவது பொருள் சேர்த்துக்கொண்டு பிறகு நாம் மதனாகமத்தை மனம்போல் பாராயணம் செய்யலாமென்றும், ஆதலின் அதற்குத் தக்க பணக்கார வாலிபர்களை நான் பார்த்துப் பிடிக்கவேண்டுமென்றும் நீ கூறியதாலன்றோ நான் அவனைக் கூட்டிவைத்ததுமன்றி, சுந்தரத்திடம் சிறிது சிறிதாகப் பொருள் கவர்வதைக்

காட்டிலும் நமது காலட்சேபத்திற்குப் போதுமான வருவாயுள்ள பூமிகளையாவது, அல்லது அதனிலும் அதிகமான பூமியையாவது நமது திறமைக்குத் தகுந்தவாறு அவனிடமிருந்து கவரவேண்டுமென்றும் யோசித்துத்தான் உங்களுக்குச் சில தந்திரங்களையும் கற்பித்துக் கொடுத்தேன். நீங்களும் நான்கூறிய யோசனைப்படியே இதுவரை சிறிதும் பணத்தாசை இல்லாதவர்கள் போன்று மிக சாகசமாய் நடந்து வந்திருக்கிறீர்கள். நானும், நமது காரியத்தை அனுகூலப்படுத்திக் கொள்ளத்தகுந்த தந்திரங்கள் சிலவற்றைச் செய்திருக்கிறேன். கூடிய சீக்கிரம் எல்லாம் நம்மிஷ்டம் போல் நிறைவேறும்; என்றார் ஐயங்கார்.

இத்தருணம் இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டு ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்து அமிழ்ந்து மிதந்துகொண்டிருந்த கமலாம்பாள் அங்குவந்து ஐயங்காரை நோக்கி அன்புமிக்க ஐயரே! என் பிரிய குழந்தை கோகிலம் அதிருஷ்டனிடம் சிக்கித் துரும்பாயிளைத்துவிட்டாள். அந்த இடமடையன் இரவு பகலின்றி என்னருமைக் கண்மணியை இரும்புக் குறடுபோல் பிடித்து இம்சித்துவிட்டான். கிளியை வளர்த்துப் பூனைகையில் கொடுத்தது போல் என் அருமைக் குழந்தையை அந்த அடிமுட்டாளிடம் அடைக்கலப்படுத்தி விட்டீர். பெரிய மனம் வைத்து இனியாவது நம் அருமைக் காதலியை மீட்டுவிடும். குழந்தை இரவு பகலாய் உம்மை நினைத்து உருகுவது அந்த ஈசனுக்கல்லவோ தெரியும். இப்படியும் தமது காதலியைத் தவிக்க வைப்பார் உலகிலுண்டோ? அந்தோ! என் அருமை கோகிலக்கண்ணின் அவயவங்கள் எவ்வளவு

தளர்வுற்றிருக்கின்றன. என்று கூறிக் கண்களில் சிறிது நீர் விட்டுக் கலங்கினாள்.

கமலாம்பாளின், கண்கலக்கத்தைக் கண்ட ஐயங்கார் மிகுந்த துயரமும் இரக்கமும் உடையவராகி அடி கமலம்! அழாதேயடி. நமது கண்மணி கோகிலாம்பாளின் குறையை இன்னும் கொஞ்ச நாட்களில் தீர்த்துவிடுகிறேன். இந்த என் வார்த்தையை நீ முற்றிலும் நம்பலாம். பல தனவான் களின் தனத்தைத் தட்டிப் பறித்து தாசிகளுக்குக் கொடுப் பவனாகிய நான்! தாசிகளுக்கு தனம் சேர்த்துக் கொடுத்த தற்குப் பிரதியாக அனேக தாசிகளால் அடிக்கடி தழுவப் படுபவனாகிய நான்! அப்படித்தழுவ இஷ்டமில்லாத தாசி களை 5 நிமிடத்தில் தலைகீழாகக் கவிழ்ப்பதிலும் கியாதி பெற்ற தாந்தோணி ஐயங்காராகிய நான்! மனப்பூர்வமாய் ஒருவனைக் கெடுக்கவேணுமென்று எண்ணிக் கங்கணம் கட் டிக்கொண்டால்—பிறகு என் மாயா வஞ்சத்தினின்றும் அவன் மீள்வதுண்டோ? அடி கமலம்! அந்த இரண்டு ரூபாய் காசுக்காக கோர்ட்டு சேவகன் செய்த வேலையைப் பார்த்தாயா? உண்மையாய் ஏலநோட்டீஸ் கொண்டுவந்த வனைப் போலவே எவ்வளவு சமத்காரமாய் நடித்தான். அவன் செய்த வேலைக்கு இரண்டு ரூபாயல்ல 20 ரூபாய் கொடுத்தாலும் தகும் இக்காரியம் ஒன்றினாலேயே எனது சமர்த்து இப்படிப்பட்டதென்று நீ அறிந்து கொள்ளலா மல்லவா? என்றார் ஐயங்கார். இவ்வார்த்தையைக்கேட்ட கோகிலாம்பாள் குலுங்க நகைத்து ஆம் ஆம் அந்த மூடச் சுந்தரன் அதை முற்றும் உண்மையெனவே நம்பி செட்

டியார் பாக்கியைச் செலுத்தி விடுவதாக வெகு சூரத்தன மாய் எழுந்தான். நான் கூடவே கூடாதென்று தடுத்து விட்டேன். இப்படிப்பட்ட மூளையில்லா முண்டங்கள் இருப்பதும் நமக்கு நற்காலந்தான். என்று கூறி மீண் டும் நகைத்தாள். இவ்வார்த்தைகளைக் கேட்ட கமலாம் பாள் மிகுந்த சந்தோஷத்துடன் ஐயங்காரை நோக்கி அந்தோ! பாவம். அந்த மடச்சுந்தரத்தின் மூடத்தனத் தையும், பேதமையையும் என்னென்று சொல்வேன்; நாங் கள் செய்யும் ஒவ்வொரு பாசாங்கையும் முற்றிலும் உண் மையானவை யென்றும், தூய்மையுடையவை யென்றும், ஆழ்ந்த அன்புடன் செய்யும் பிரேமைச் செய்கைகளென் றும் பிறழ நினைத்து தேனில் விழுந்த ஈயைப்போல மதி மயங்கி, அருக்கன் சுடர்பட்ட மெழுகைப்போல இளகிப் பக்குவ நிலையிலிருக்கிறான். இத்தருணம் அவனை எவ்விதப் பாவையாக மாற்றவும் இயலும். ஆதலின் "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற விதம் நம் காரியங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ள நீர் முயற்சிக்கவேண்டும். தெய்வ அருளால் காரியம் கைகூடினபிறகு நமக்கென்ன குறை யிருக்கிறது? ஒன்றுமில்லை. நீரும் எனது குழந்தையும் மதனும் ரதியும் போல எப்பொழுதும் ஆடிபாடிக் கேளிக் கையாடி ஆனந்த நீர்சுழலில் அமிழ்ந்து அமிழ்ந்து விளை யாடுவதையும் அடியாள் அவற்றைக் கண்ணாரக்கண்டு பேருவகைபூத்து அகமகிழ்வதையுமே காலப்போக்காகக் கொள்வோம். என்று தனது காரியத்தைச் சாதிக்கத்தக்க விதமாய்ப் பக்குவமாகவும், பழத்தில் ஊசி சொருகுவதைப் போல் நயமாகவும், பகர்ந்தாள் தட்டிப் பறிப்பதில கைதேர் ந்த பழம் பெருச்சாளியாகிய தாசி கமலாம்பாள்.

அடி! போடி போ பைத்தியக்காரீ. நேக்கு அதெல்லாம் நன்றாய்த் தெரியும். நான் வெறுமனே கற் பிள்ளையார் போலிருக்கிறே னென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நமது நாடகத்தில் பெரும்பாகமும் முடிந்துவிட்டது. இனி சொற்பபாகமே மீந்திருக்கிறது. அதையும் சீக்கிரம் முடித்துப் பட்டாபிஷேகமும் முடித்துவிடுகிறேன்; நீ கவலைப் படாமலிரு. அதெல்லாமிருக்கட்டும், அன்று கோர்ட்டு சேவகனை நமதிஷ்டப்படி ஆக்டு செய்யும்படி கூறியதன்றி நமது பக்கத்தாத்து பாக்கியரத்தினத்துக்கு உங்கள் வீடு முதல் சகல சொத்துகளும் போய்விட்டதென்றும், அட்டிகையை அடகுவைத்து வாங்கிய அசலும் வட்டியும் அதிகமாகிவிட்டதென்றும், அதை இப்போதே கொடுக்கவேண்டுமென்றுஉங்களை நன்றாய் திட்டும்படியும், சுந்தரம் உங்களுக்கு ஒன்றும் கொடாமலிருப்பதுபற்றி அவனையும் நன்றாய்த் திட்டும்படியும், தந்திரம் சொல்லிக் கொடுத்தது நான் தானே! பாக்கியரத்தினமும் தன்னால் இயன்றவரை வஞ்சனையின்றி மிக்க சமத்காரமாகவும் சாகஸமாகவும், நயவஞ்சகமாகவும் நன்றாய் நடித்தாள். அதிலிருந்து தான் நமது காரியம் அனுகூலத்திற்கு வர ஆரம்பித்தன. ஆகையால் பாக்கியரத்தினத்துக்கு நமது காரியம் முடிந்தபிறகு (200) ரூபாவில் ஒரு பனாரிஸ் பட்டுப்புடவை வாங்கிக் கொடுக்க வேணுமென்று யோசித்துக்கொண்டிருக்கிறேன். அவள் செய்த சாகஸ வேலைக்கு நாம்கொடுக்கும் இருநூறு ரூபாய் பரிசு மிகவும் சொற்பமேயன்றி அதிகமல்ல. நான் இவ்வளவு காரியங்கள் செய்ததுமன்றி மற்ற வேலைகளையும் சீக்கிரம் முடிக்க யோசித்துக்கொண்டிருந்தும் நீ எனக்கு

யுக்தி கூறவருவது உனது அடி முட்டாள்தனமல்லவா? என்றார். இவ்வார்த்தைகளைக்கேட்ட கோகிலாம்பாள் கச்சணிந்த தனது பருத்த கொங்கைகள் விம்மி விம்மிக் குலுங்கப் பெருநகை புரிந்து தனது மென்மையும், இளமையும், சுகுமாரமும், பொருந்திய அழகிய ஸ்தனங்கள் ஐயங்காரின் மார்பில் அமுங்கி ஒத்திடம் கொடுக்க அவர்மீது தாவி விழுந்து அவரது கன்னங்களில் அநேக முத்தமீந்து என் அன்பே! ஆருயிரே! கண்ணே! கற்கண்டே! உமது பேரறிவின் வன்மையையும், தந்திரங்களையும், யுக்திகளையும் ஸாகஸங்களையும், என்னொரு நாவாற் புகழுதல் தரமோ! தங்கள் சாமர்த்தியமனைத்தும் உள்ளபடி என்னுள்ளம் அறியுமேயன்றி எனதன்னை அறியமாட்டாள். அவள் அறியாமொழிக்காகத் தாங்கள் சினத்தல் கூடாது. தமது பேரருளைப்பெற்ற எங்கட்கு யாதும் குறையுறாது. ஆ. ஆ. அந்தப் பாக்கியரத்தினம் எவ்வளவு சொகுசாகவும், சோபிதமாகவும், யக்குவமாகவும் முற்றும்உண்மை போலவே பாசாங்கு நாடகமாடினாள்! இப்போது அதை நினைத்தாலும் எனக்குப் பெருநகைப்பு வருகிறது. அவள் செய்த ஸாகஸத்திற்கு 200 ரூபாயல்ல 500 ரூபாய் கொடுத்தாலும் தகும்; நமது தந்திரங்களையும் பாசாங்குகளையும் அந்த முட்டாள் சுந்தரம் முற்றிலும் உண்மையெனவே நம்பி ஏமாந்திருக்கிறான். இச்சமயம் நமது காரியத்தை முடித்துக்கொள்ள கண்ணே! நீர் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டும்; என்று கூறினாள் கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளின், கொஞ்சுமொழியிலும் ஆலிங்கன தாடன சுகங்களிலும் அறிவு மயங்கிய ஐயங்கார் மிகுந்த

ஆனந்த பரவசமடைந்து கோகிலாம்பாளைத் தமதிரு கரங்களாலும் கட்டிப்பிடித்துத் தமது நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அந்த ரத்தவர் நின் சுந்தரத்துக்கு தினம் வந்து பணிந்திடும் வர்ண மாமயிலே! நினது விருப்பப்படி நடக்க யான் தவறுவேனோ? அன்று பாக்கியரத்தினம் கிட்டியதால் மிகுந்த கோபமும் வெட்கமும், அவமானமும் அடைந்த சுந்தரம் நெடுநாளாக நீ அதிக அன்பாகவும், பக்ஷமாகவும், யாதொரு பிரதிபலனையும் எதிர்பாராமல் பலவிதபணிவிடைகள் புரிந்து வந்ததுமன்றி, அவன் மனத்திற்கிசைந்தவாறு மன்மதக் கிரீடை இயற்றி வந்தாயென்றும், இவ்வளவு பிரியத்துடனும், பிரேமையுடனும் வாத்ஸல்யத்துடனும், நேசித்துவந்த உனக்கு இதுவரை யாதொருவிதமான நன்மையும் தான் செய்யாதது பற்றியும், தனது போஷிப்பின் காரணமாகவே உனது செல்வம் முற்றிலும் செலவானது பற்றியும், தான் மிகுந்த வருத்தப்படுவதாகவும் ஆதலின் உனக்குத்தன்னால் இயன்ற சகாயம் செய்யவேண்டுவது அவசியமென்றும் கூறியதுமன்றி, நான் அதற்குத் தகுந்த யோசனை கூறவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். அதற்குநான், அப்பா சுந்தரராஜா அவளைப்போல் உத்தமி இவ்வுலகில் எவளும் இராள். மற்ற தாசிகளைப் போல் தனம் பறிக்கும் குணம் இவளிடம் இல்லை. இத்தகைய உத்தமகுணப் பெண்ணுக்கு நீ சகாயம்செய்ய நினைப்பது உண்மையானால் உனது பூமிகளிற் சிலதை அவள் பேருக்கு எழுதிவைக்கலாமே யன்றிப் பணம் கொடுக்க எண்ணுவது கூடாது. நீ பணம் கொடுத்தாலும் அவள் ஒருபோதும் பெற்றுக்கொள்ளவே மாட்டாள்; என்றும்

பகர்ந்தேன். அதற்கு அவன் மிகுந்த சந்தோஷமடைந்து என்னுடைய உத்தேசப்படிக்கேதான் நடப்பதாகவும் தனது 50 வேலி நிலத்தில் 5 வேலி நிலம் உனக்கு எழுதிவைத்து விடுவதாகவும் ஒப்புக்கொண்டான்; என்றூர்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட ஐயங்காரால் அழுந்தத்தழுவப்பட்டிருந்த—கோகிலாம்பாள் அதிக கோபம் கொண்டு தன்னைத் தழுவியிருந்த ஐயங்கார் கைகளை அகலவீசி மிக்க துயரத்தோடும் கோபத்தோடும் தளர்வோடும் தரையில் வீழ்ந்து அந்தோ தெய்வமே! தாலிகட்டிய மனைவியைக் காட்டினும் நூறுபங்கதிகமாய் இவர்களுக்குப் பணிவிடை செய்தும் பாவியானேனே. புருஷர்கள் காரியமாகும்வரை காலைப்பிடித்து காரியமான பின் வீரியம் பேசும் கசடர்களென்றறியாமற் போனேனே. எனதழகிய ஆகத்தை இவர்களுக்கடிமைப் படுத்தியதுமன்றி அல்லும் பகலும் இவர்கள் மனதை ஆனந்தப்படுத்துவதில் அக்கரை கொண்டொழுகினேனே, நான் பட்ட கஷ்டங்களுக்கும் கொடுத்த சுகங்களுக்கும் இந்த 5 வேலி நிலம் தானு சன்மானம்? தூ. தூ. இந்த அற்ப சம்பத்தைப்பெற்று ஆனந்திப்பதைக் காட்டிலும் ஒன்றும் பெருமலே இறந்தொழிவது உத்தமம். இந்தப் பெண்பாவம் உங்களைப்பற்றி எரிக்கட்டும். புருஷர்கள் பல்லையிளித்துப் பாசாங்குமொழி பேசி பாவையர்களின் பால்போன்ற மனதைக்கெடுக்கும் பக்காத் திருடர்களென்றறியாமற் போனேனே. என்று மிக்க ஆற்ருமையோடும் சோகத்தோடும் அழகிய நயனங்களில் நீர் பெருகி வழிந்தோட அலறி அழுதாள்; கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளின், துயரத்தையும் அழுகையையும் கண்ட ஐயங்கார் மனம் பாகாய் நைந்துருகிப் பக்கமெல்லாம் ஓடியது. அவர்மிக்க பரிவோடும் கருணையோடும் ஒரே தாவாய்த் தாவி யானைக்குட்டிபோலோடி கோகிலாம்பாளைத் தமதிருகரங்களாலும் வாரித் தழுவியெடுத்து அடி என தாசைக்குகந்த நேசக் கோகிலக் கண்ணே! வருந்தற்க. நினது சோகத்தை நீக்குதி. அந்தோ! தாமரைப்புஷ்பம் போன்ற நினதழகிய வதனமும் நயனங்களும் கலங்கிச் சிவந்து வாடிப்போயின. வேண்டாம். அழகிய வாள் விழியினின்றும் நீரைப் பெருக்கிடேல். நினதிஷ்டம் எத்தகையதாயினும் பூர்த்தி செய்ய இதோ தாசன் காத்துக் கொண்டிருக்கிறேன். நின் மனக்குறையைச் செப்புவாய்; என மிகுந்த கனிவோடும், இரக்கத்தோடும், கூறி அவளை ஓர் பஞ்சணையில் படுக்கவைத்து அருகில் உட்கார்ந்து அவளது அங்கங்களை வருடினார் தாந்தோணி ஐயங்கார்.

இயற்கையிலேயே ரமணிகள் எனச் சிங்காரப் பெயர் புனைந்த பெண்மணிகள் எத்தகைய மனிதர்களையும், விலங்குகளையும், பறவைகளையும், ஏன் மரங்களையும் கற்களையும் கூட நெக்கு நெக்குருகிக் கரையும்படி ரம்யப்படுத்தும் ரசிகைகளாகவும், சரச ரஞ்சனிகளாகவும், லாவண்ய சோபிதைகளாகவும் இருக்குமாறு பிரமன் படைத்ததன்றி அவர்களின் இஷ்டத்தை எவ்விதத்தும் பரிபூர்த்திசெய்யும் ஆற்றல் வாய்ந்த அழுகையென்னும் அம்மையையும் அவர்களினுடன் பிறப்பாய்ப் படைத்துள்ளார். ஆகவே ஒரு கன்னிகை தன் அபிப்பிராயத்தை நிறைவேற்றிக் கொள்ள

வேண்டுமானால் முதலில் தன் கணவனிடம் இனிமையும் இங்கிதமும் சுகுமாரமும் தன் வதனத்தில் தோன்ற புன் முறுவலுடன் கொஞ்சிக் கொஞ்சிக் கிள்ளையென மொழிந்து அவனைப் பரவசப்படுத்திச் சமயம் பார்த்துப் பக்குவமாய்த் தன் இஷ்டத்தைத் தெரிவிப்பாள். ஒருவேளை அவன் அத ற்கு இணங்காவிடில் பிறகு முகத்தை இழுத்துக்கொண்டும் உதட்டைப் பிதுக்கிக்கொண்டும், மூக்கைத் தூக்கிக்கொண் டும் சிடு சிடு வெடு வெடெனச் சுடுசொல் பேசிக்கொண்டும் சட்டியைப் பானையின்மீதும் பானையைப்பாத்திரங்கள்மீதும் போட்டுப் பலவிதத்திலும் கணவன் இஷ்டத்துக்கு இடக் காகநடப்பாள்—இப்படிப்பட்ட சமயங்களில்தான் பெண்கள் பெரும்பாலும் தமது கணவர்களிடம் உதைப்பூஜை பெறு கிறார்கள். புருஷன் பிடிவாதக்காரனாயிருந்து அவள் இஷ் டத்திற்கு இப்போதும் இணங்காவிடில் பிறகு பதினாயிரக் கணக்கான ரூபாய்களைப் பறிகொடுத்தவள் போல பல பல வெனக் கண்ணீர் விட்டழுவதுமன்றிப் பார்த்தவர்களையும், பக்கத்தில் நின்றவர்களையும் ஏனென்று கேட்க வந்தவர் களையும் இறைச்சலிட்டழும்படி செய்து விடுவார்கள். இச் சமயம இவர்களது முகத்தையும் கண்களையும் ரோதனத் தையும் பார்த்தால் எத்தகைய மூர்க்கனாயினும் முன்கோபி ஆயினும் பிடிவாதக்காரனாயினும் மனமிளகாமலிருக்க முடி யாது. ஏதோ இன்றொரு தடவை மட்டும் அவள் இஷ்ட த்தை நிறைவேற்றி விடலாம்; என்று சிறிது இரக்கம் காட்டியே தீரவேண்டும். "பெண்ணென்றால் பேயும் இரங் கும்" என்றபடி மனிதரைக் கொல்லுதல் பயமுறுத்துதல் முதலிய துர்க்குணங்களுள்ள பேயே பெண்டுகளுக்கிரங்

கும்போது மனிதர் இரங்கக் கேட்கவேண்டுமா? மேலும் குலமாதர்கட்கே இவ்வளவு வசீகரிப்பும் சக்தியும் பாசாங்கும் இருக்கிறதென்றால் விலைமாதருக்குச் சொல்லவும் வேண்டுமா? அவர்கள் மட்டும் முழுமனம் வைத்து அம்பினும் கொடிய தமதழகிய கண்களை இன்புறவிழித்து ஒரு சுழற்றுச் சுழற்றினால் இப்பூவுலகமே சுழலும். இரண்டு முறை சுழற்றினால் இந்திரலோகமும் சுழலும். மூன்று முறை சுழற்றினால் மும்மூர்த்திகளும் ஆடிக்காற்றிலகப்பட்ட இலவம் பஞ்செனச் சுழன்று அழன்று சுருண்டு விடுவார்கள். நான்குமுறை சுழற்றினால் யாவும் நாசமடைந்துவிடும்; என்று கூறுதலும் மிகையாமா? இத்தகைய சுழற் கண்ணிகளின் வலையகப்பட்ட இளைஞர்கள் மீள்வதின்றி மாள்வதே நிச்சயமெனக் கூறலாமன்றோ? அப்படியிருக்க நமது ஐயங்கார் கோகிலாம்பாளின் சாதுர்யமும், சாகசமும், இனிமையும், இங்கிதமும், கனிவும், ததும்பிய ஆலிங்கன தாடன சுகங்களில் அமிழ்ந்து அறிவு மயங்கியது ஆச்சர்யமல்ல. நிற்க.

ஐயங்காரால், அணைத்தெடுத்து ஆறுதல் கூறப்பட்ட கோகிலாம்பாள் சிறிது அமைதியோடும், ஆறுதலோடும் விசாலமாகிய மைதோய்ந்த தனது வாள் விழியினின்றும் நீரைப்பெருக்குதல் தவிர்த்துக் கலங்கிச் சிவந்த தனது கடைக்கண்ணால் ஐயங்காரை கடாக்ஷித்துக்கொண்டே என தன்பையும், காதலையும் கொள்ளைகொண்ட கண்ணாளரே! அல்லும் பகலும் உம்மையே நினைத்துச் சதா உமது நாமத்தை ஸ்மரித்துக்கொண்டிருக்கும் அடியாளை உபேக்ஷிக்க

லாகாது. யான்செய்த பணிவிடைகளுக்கும் கொடுத்த சுகங்களுக்கும் இவ்வுலகையே வெகுமதியாக அளிப்பினும் தகுமன்றோ? அந்தப்பயல் சுந்தரத்தை ஒரு மனிதனாகப்பாவித்து அண்டையிற் சேர்ப்பேனா? உமது வார்த்தைக் கிணங்கியன்றோ அவனை அருகில் சேர்த்தேன். உம்மையே என் மனம் மெச்சிய மன்மதனாகவும், உமதாலிங்கன சுகத்தையே அஷ்டைஸ்வரியமாகவும் உம்முடன் இரதி கேளியாடுவதே இந்திரபோகமெனவும் எண்ணியிருக்கும் அடியாளுக்கு இந்த அற்ப சம்பத்தாகிய 5 வேலி நிலமா சன்மானம் செய்விப்பது? நீர் எப்பாடு பட்டாயினும் எவ்வித தந்திரம் செய்தாயினும், சுந்தரத்தின் சொத்து முழுமையும் என் பெயருக்கு எழுதிவைக்கவேண்டும்; இன்றேல் இந்நிமிடமே என் உயிர் நீங்குதல் நிச்சயம்; என்றாள்.

அடி கண்மணி! நீ கூறுவது முற்றும் முழு மோசமாயிருக்கிறது. என்ன மூடனாயிருந்தாலும் தன் சொத்து முழுமையும் பிறருக்கு எழுதிக்கொடுக்க எந்த அடி முட்டாள்தான் சம்மதிப்பான்? இந்த வேலையை என்னால் எப்படிச்செய்யமுடியும். என்று சற்றுத் தயங்கினார்; ஐயங்கார்.

ஐயங்காரின், தயக்கத்தை அறிந்த அவரருகில் சயனித்திருந்த அம்மடமயிலாள் திடுக்கென்றெழுந்து இளமையும் மிருதுவும், அழகும், செறிந்த தனது வலக்கரத்தால் அவரது கன்னங்களையும் மோவாயையும் வருடிக்கொண்டே நேசக்காதலரே! மலையின் உயரம் மலைக்குத் தெரியாதது போலவும், ஆஞ்சநேயரின் சௌரிய வீர பராக்கிரமங்கள் அவருக்குத் தெரியாதிருந்தது போலவும், தமது தந்திரங்

களினுடையவும், ஸாகஸங்களினுடையவும், யுக்திகளினுடையவும், யோசனைகளினுடையவும் வன்மை இத்தகையதெனத் தாம் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. தம்முடன் ஒன்றுபட்டுப்பழகிய அடியாளுக்குத் தமது ஆற்றலின் வன்மை இத்தன்மைத்தெனத்தெரியும். நீர் மனம் வைத்தால் என் இஷ்டம் சீக்கிரமாகவும் சுலபமாகவும் எளிதாகவும் நிறைவேறுவதற்கையமில்லை. கண்ணே! நும் அருமைக்காதலிக்குதுரையே நும் அருமைக்கண்ணாட்டிக்கு, பிரேமைக்காதலரே! நும் அன்புள்ள பெண்ஜாதிக்கு, மன்மதரே! உம்மையே ஆளாக அல்லும் பகலும் நினைத்திருப்பதுமன்றி அப்படியே ஆயுளளவும் இருக்கவேண்டுமெனச் சதா பரமனைக் குறித்துப் பக்தி செய்துகொண்டிருக்கும் தமது பத்தினிக்கு இவ்வுபகாரம் செய்யவேண்டுவது அவசியமன்றோ? என்று மிக நளினமாகவும் கனிவாகவும் இன்பமாகவும் கொஞ்சிக் கொஞ்சி பாஷித்தாள்; கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளின், கொஞ்சு மொழியைக் கேட்கக் கேட்க ஐயங்காரின் தயக்கமும் சோம்பரும் ஒழிந்து உற்சாகமும், குதூகலமும் ஓங்கி வளர்ந்தன. அவர் மிகு ஆநந்தத்தோடும், அழகிய பெண்ணமிர்தமே! இதோ தெய்வத்தின்மேல் ஆணையிட்டுச் செப்புகின்றேன். கடவுள் சாக்ஷியாக உன் இஷ்டப்படி காரியத்தை முடித்துவைப்பதில் யாதும் தடையில்லை. நீ கொடுக்கும் இணையற்ற இச்சுகங்களுக்கு யான் செய்யும் இச்சிறிய உபகாரம் சரியான கைமாறாமோ? எனதாயுள் முடிவுறும்வரை நான் நினதடிமையாக விரும்பினும் தகுமன்றோ? ஆனால் சுந்தரத்தின்

சொத்துகளுக்கு அதிகாரியாகி பெரிய அந்தஸ்து வந்த போதும் நீ என்னை அலட்சியம் செய்யாமல் உன் ஆயுள் முடிவுறும் வரை என்னை அபிமான நாயகனாக ஏற்றுக் கொள்வதுமன்றி, சுந்தரத்தின்சொத்துக்களில் சரிபாதியை எனக்குக் கொடுத்துவிடவும் வேண்டும. மேலும் எக்காரணத்தைக்கொண்டும் இந்த நிபந்தனைகளைத் தவறி நடப்பதில்லையென நீ சத்தியம் செய்து உறுதி வாக்களிக்கவும் வேண்டும்; என்றார் ஐயங்கார்.

ஐயங்காரின், அன்பு மொழிகளைக் கேட்ட அம்மடமயிலாள் மிக்க பேருவகையோடு அவரைநோக்கி அருமைக் காதலரே! நுமதிஷ்டம்போல் நடக்க அடியாள் காத்திருக்கிறேன். இதோ ஜல உபாதையை நீக்கிவந்து தமதுள்ளம திருப்தியுற உறுதிவாக்களிக்கின்றேன்; எனக்கூறி வெளிச் சென்று சில நிமிடத்தில் மீண்டும் திரும்பிவந்து ஐயங்காரின் எதிரில் முத்தனைய வெள்ளிய பற்கள் சற்றே தோன்ற இளநகையுடனும், இன்பமும் இங்கிதமும் ததும்பிய அழகிய வதனத்துடனும், காற்றடைத்த சற்றே பருத்த ரப்பர் பந்துகளைப் போன்ற அழகிய கொங்கைகள் புடைத்துப் பருத்துத் தோன்ற மிகு ஒய்யாரமாக ஒடுங்கிய இடையுடனும், ஒல்லிய ஆகத்துடனும், புஷ்பம் நிறைந்த பூங்கொம்பு போலநின்று தன்னுடைய அழகிய வலக்கரத்தை யெடுத்துத்தனது நெஞ்சின்மீது வைத்து எனதாருயிர் மணாளரே! இவ்வுயிரிருக்கும் தனையும், தன்சிரசை தொட்டுக்காண்பித்து இவ்வோடு இருக்கும் வரையும், நுமதுசல்லாபத்தை ஒருபோதும் தவிர்க்காதிருப்பதுமன்றி எனக்குக்கிடைக்கும்

சுந்தரத்தின் சொத்துக்களில் சரிபாதியையும் தங்களுக்குக் கொடுப்பேன்.

இவ்வார்த்தையை சந்திரஜடாதரனது பாதசாக்ஷியாகவும், பன்னக சயனனின் பாதபத்ம சாக்ஷியாகவும், குன்றுதோராடும் குமரகுருபரன் சாக்ஷியாகவும், பூமிதேவி சாக்ஷியாகவும், ஆகாயவாணி சாக்ஷியாகவும், முப்பத்துமுக்கோடி தேவர்கள் சாக்ஷியாகவும், செப்புகின்றேன். எனத் தனக்குத் தெரிந்த தெய்வங்களின் பெயர் ஒன்றும் விடாமல் கூறிச் சத்தியம் செய்தாள் சித்தினி ஜாதிச் சிங்காரியாகிய கோகிலாம்பாள்;

கண்மணி! வேண்டாம். வேண்டாம். இத்தனை தெய்வங்களைக் குறித்துச் சத்தியம் செய்வது நினக்கழகன்று. தேவர்களான மூவரின் மொழிக்கு நினது மொழியே மீசுரப்பட்டதென எண்ணுகின்றேன். ஆதலின் இனிச் சத்தியம் செய்யற்க. என்று கூறிவிட்டு மீண்டும் அவளை நோக்கி அடி சிங்காரி! நாம் இதுவரை காலதாமதம் செய்தது போதும். இனி காரியத்தைக்குறித்து யோசிக்கவேண்டும் அடி கமலம்! இப்படி அருகே வந்து உட்கார்ந்து சுந்தரத்தின் சொத்து முழுமையும் பறிக்க ஏதாவது தந்திரம் தெரிந்தால் யோசித்துச் சொல்லு பார்க்கலாம்; என்றூர் தாந்தோணி ஐயங்கார்.

ஐயங்காரின், வார்த்தைகளைக்கேட்ட கமலாம்பாள் அப்பொழுதே சுந்தரத்தின் சொத்து முழுமையும் அடைந்தவளைப்போல் மிகுந்த ஆனந்தமும், பூரிப்பும், உற்சாகமும்

அடைந்தவளாய் வேகமாய் வந்து ஐயங்கார் அருகில் உட்கார்ந்து ஆவென வாயைப்பிளந்து பல்லையிளித்து ஆ! தங்களுக்குத் தெரியாத தந்திரங்களும் யுக்திகளும் யோசனைகளும் எனக்கென்ன தெரியப்போகிறது? முன் செய்த தந்திரம் மாதிரி ஏதாவது செய்யுங்கள். தாங்கள் மனம் வைத்தால் ஒருநிமிடத்தில் காரியம் நிறைவேறுவதில் தடையில்லை. என்று பக்குவமாய்ப் பகர்ந்தாள் கமலம்.

அடி கமலம்! இப்போது செய்யவேண்டிய தந்திரம், முன் செய்த கோர்ட்டு சேவகன் நோட்டீஸ் கொடுத்தது போன்றதும், பாக்கியரத்தினம் பாசாங்கு செய்தது போன்றதுமன்று. அவனது பூமி முழுமையும் எழுதிக்கொண்டு அதில் அவனிட கையொப்பமும் வாங்கவேண்டும். அது தான் யோசிக்கவேண்டியிருக்கிறது. பத்திரமென்னவோ எழுதிவிடலாம். அவன் கையொப்பம் வைக்கவேண்டுமே அதற்கென்ன செய்கிறது? என்றார் ஐயங்கார்.

கமலம் :—இதென்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? இதற்குக்கூட யோசனையா? சுந்தரம இரவில் குறட்டை விட்டுக் கும்பகர்னப்படலம் வாசிக்கும்போது அவன் விரலிடுக்கில் பேனாவை வைத்து அவன் கையைப்பிடித்து நாம எழுதிவிடுகிறது. இதுகூடத் தங்களுக்குத் தெரியாதென்று சொன்னால் யார்தான் நம்புவார்கள்?

ஐயங்கார் :— அடி போடி முட்டாள்! உன்னைப்போல் அசடு நான் எங்கும் கண்டதில்லை. உனது புத்தி உலக்கை நுனிபோல் தளிர்விட்டிருக்கிறது. இத்தகைய தப்பிலிப்

புத்தியுடன் தாசித்தனம் செய்த உனக்கென்ன குறைவிருக்கப்போகிறது. அன்னத்திற்கில்லை யென்ற விசாரத்தைத் தவிற பின்னையொரு விசாரமும் இருந்திராது. என்று ஏளனமாகவும் இழிவாகவும் பேசிக் கேலி செய்தார்.

ஐயங்காரின், ஏளனத்தைக் கண்ட கோகிலாம்பாள் அவரை நோக்கி என் மனதுக்கேற்ற அருமை மாமாவே பேதைகளாகிய எங்களுக்கென்ன யுக்தி தோன்றப்போகிறது. தாங்கள் தான் பெரிய மனம் வைத்து எங்கள் காரியத்தை ஈடேற்ற வேண்டுமேயன்றி எங்கள் யுக்தியைக் கேட்டுக் காரியத்தை முடிக்க நினைப்பது "நரிவாலைக் கொண்டு கடலாழம் பார்க்க" நினைத்தது போலாகுமேயன்றி சிறிதும் பிரயோஜனப்படாது என்றாள்.

ஐயங்கார் :— அடி அன்னநடை மின்னே! நினது மொழி மெத்தவும் உண்மையே. ஆபினும் உங்கள் அபிப்பிராயத்தை அறியக் கேட்டதேயன்றி வேறன்று. எனக் கூறிவிட்டு தமது மூக்கின்மேல் விரலைவைத்து நெடுநேரம் யோசித்துக் கடைசியில் தாம் ஒரு முடிவிற்கு வந்தவராய் குதிரைக்குட்டிபோல் கனைத்துக்கொண்டு அடி என் பிராணேஸ்வரி எனக்குத் தெரிந்த உபாயத்தைச் செப்புகிறேன் கவனித்துக்கேட்டு ஒரு இம்மியளவாவது தவறுமல் அதன் படியே நடக்கவேண்டும். அடி கமலம்! தூங்கி வீழ்ந்து விடாதே. கவனித்துக்கேள். இன்றைக்கு எட்டாம் நாள் வரும் வியாழக்கிழமை நமது பிரிய கோகிலத்தின் பிறந்த நாளாகும். அன்றையதினத்தைச் சென்ற வருடத்தைவிட மிக்க சிறப்பாகக் கொண்டாடவேண்டுமெனச் சுந்தரராஜ—

விடம் முன்னாடியே கூறிவிட்டு நாம் குறிப்பிட்ட அன்றைய தினம் விசேஷ பதார்த்த பக்ஷணங்களுடன் சமையல் செய்து நமக்கு மிகவும் வேண்டியவர்களான பக்கத்தாத்து பாக்கியரத்தினம் கோடியாத்து கோமளம் எதிராத்து லக்ஷிமி முதலியவர்களையும் வரும்படி செய்து சுந்தரத்துடனே அனைவரும் உல்லாசமாகவும் குதூகலமாகவும் போஜனமுண்ணும்படி செய்து பிறகு இதற்கு முன்னமே தயார் படுத்தி வைத்திருந்த சாம்பெயின் புட்டிகளையுடைத்து பானத்தை ஒவ்வொருவருக்கும் கொடுத்து பின்பு சுந்தரத்திற்கும் கொடுக்கவேண்டும். அவன் மறுத்தால் மிக்க நயமாகவும் பக்குவமாகவும் தாஜாப்படுத்தி எப்படியும் மதுவை அருந்தும்படி செய்யவேண்டும். மதுவருந்திய சில நிமிஷத்துக்கெல்லாம் வெறி தலைக்கேறி மயக்கமுண்டாகி விடுகிறது. அத்தருணம் நமதிஷ்டப்படி நாம் பாடும் பாட்டிற் கிணங்க சுந்தரம் பரதநாட்டியமாடும் தன்மையி விருப்பானேயன்றி, சுய அறிவுடன் இரான். அச்சமயத்தை வீணாக்காமல் மேன்மேலும் இரண்டுமுறை பானத்தைக் குடிக்கச்செய்யவேண்டும். நீங்கள் இவ்வித நிலைமையிலிருக்கும்போது நான் முன்னமே சுந்தரத்தின் பூஸ்திதிகளனைத்தும் கோகிலத்தின் பெயருக்குக்கிரயமாக எழுதிவைத்திருக்கும் பத்திரத்துடனும், இரண்டு சாக்ஷிகள் சப்ரிஜிஸ்திரார் சகிதமாய் இங்கு வருகிறேன். வந்த பிறகு சுந்தரம் என்னிடம் முன்னமே கூறியபடிக்கு, 5 வேலி நிலத்தை கோகிலத்தின் பெயருக்குக் கிரயம் எழுதியிருப்பதாகவும் அதை இப்பொழுதே ரிஜிஸ்தர் செய்துவிடவேண்டுமென்றும்; கூறுகிறேன். என் வார்த்தையைக்கேட்ட அவன்

நான் விளம்பிய விஷயம் உண்மையா, பொய்யா, எனயோசிக்கவாவது பத்திரத்தை வாங்கி வாசித்துப்பார்க்கவாவது எத்தனப்படமாட்டான். அப்படி எத்தனித்தாலும் மது மயக்கத்தால் மூளைகலங்கி இருப்பதால் பத்திரத்தில் உள்ள விஷயங்கள் அவனுக்குப் புலப்படா; ஆகவே பத்திரத்தின் உண்மையைச் சுந்தரம் அறிந்து கொள்வானென்ற பீதி நமக்கில்லை. அச்சமயம் கையொப்பமிடும்படி கூறினல் உடனே தடையின்றிக் கையொப்பமிட்டு விடுவான். சப்ரிஜிஸ்திராரும் சாக்ஷிகளும் அருகிலிருப்பதால் ரிஜிஸ்தர் வேலையையும் முடித்துப்பிறகு சுந்தரத்தை அந்தரத்தில் தொங்கும்படி தூரத்திவிடுவோம்; என்றார்.

ஐயங்காரின், வார்த்தைகளை அருகிருந்து உற்றுக்கேட்ட கோகிலாம்பாள் அவசரமாய் எழுந்து ஐயங்கார் அருகில் நெருங்கி எனதாவலைக் கொள்ளைகொண்ட அருமை மாமாவே! தங்களுடைய அபூர்வமான தந்திரங்களையும் நுட்ப விவேகத்தையும் நுண்ணிய யோசனையையும் கண்ட எவர்தான் ஆச்சரியமுறார்? காதலரே எனது திருஷ்டியே தாக்கினும் தாக்கும்; என மென்மையும் வனப்பும் மிகுந்த தனதிரு கரங்களாலும் ஐயங்காரின் கன்னத்தை தடவித் தனது விரல்களை தன் நெற்றிப்பூட்டில் மடக்கி நெட்டி முறித்து திருஷ்டி தோஷம் தீர்த்தாள்; கோகிலாம்பாள்.

ஐயங்கார் :— அடி பிரியே! நான் உன்னிடம் நேசம் பூண்டு சுமார் 2 வருஷங்களுக்கு மேலாகியும் இதுவரை நின்பால் கலவியின்பத்தை அனுபவித்தேனில்லை. இன்றேதோ தெய்வச் செயலால் உனதழகிய ஆகத்தின் ஆலிங்கன

சுகத்தைப்பெற்று ஆனந்தமடைந்தேன். எனினும், இன்றெப்படியும் என்னைக் கட்டிச் சுகித்து நான் நெடுநாள் கொண்ட ஆவல்தாகத்தைத் தணிக்கவேண்டும் ஆயிழையே என்றார்.

கோகிலாம்பாள் :— என் மனங்கவர்ந்த மன்மதரே! தாங்கள் அவசரப்படவேண்டாம். கிணற்றுநீரை வெள்ளம் கொண்டுபோகாது. சுந்தரத்தின் சொத்துகளைப் பறித்த பின்பு நாம் மதனலீலைகள் மனம்போல் நடத்தலாம். மேலும் சுந்தரம் தற்போது சதா என்னைவிட்டு விலகாமலிருப்பதால் நமக்குப்போதிய சந்தர்ப்பமுமில்லை. இன்னும் சிறிதுநாள் தாங்கள் மனம் பொருத்திருக்கவேண்டும்; என்றாள்.

அழகிய கோகிலக் கண்ணே! நின் இஷ்டப்படியே ஆகட்டும். ஆனால் சுந்தரத்தின் சொத்து முழுமையும் அடைந்த பிறகு என்னை அலட்சியம் செய்து விடாதே. கவனமிருக்கட்டும். யான் சென்று வருகிறேன்; என்றார் ஐயங்கார்.

இன்பமும் இனிமையும் ததும்பும் லாவண்ய சுகுமாரத்தோடு ஐயங்காரின் எதிரில் நின்ற கோகிலாம்பாள் என தன்பே! தாம் இவ்வாறுரைப்பது தகுதியா? நான் ஆயிரம் சத்தியங்கள் அடுத்தடுத்துச் செய்தும் அடியாள் வார்த்தையைத்தாம் நம்பாதிருப்பது ஞாயமா? இந்த அடியாளைத் தாங்கள் மறவாதிருக்கும்படி ஆயிரம் நமஸ்காரங்கள்செய்து கேட்டுக்கொள்ளுகிறேன். சென்று வாருங்கள். ஞாபகமிருக்

கட்டும். நாம் யோசித்தவாறு சகல காரியங்களையும் எப்படியாவது ஒழுங்கு செய்துகொண்டு இன்றைக்கு எட்டாம்நாள் வியாழக்கிழமைகாலை சரியாய் 10 மணிக்கு இங்கு வந்து சேருங்கள். நாங்கள் எங்கள் பங்கு வேலையை மிக்க ஒழுங்காக முடித்து உங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். என் கண்மணி சென்று வரட்டும். என் காதலன் சென்று வரட்டும். என்று அவரை அழுந்தத்தழுவிப் பல அன்பு முத்திகளை கன்னத்தில் பொழிந்து போய்வரும்படி விடை ஈந்தாள். ஐயங்காரும் அவளது ஆலிங்கனத்தால் பரவசமடைந்து பல்லையிளித்துச் செல்ல மனமில்லாமல் தயங்கித் தயங்கித் தொந்தி குலுங்க நடந்து வெளிப்போந்தார்.

ஐயங்கார், அப்பால் சென்றதும் கமலாம்பாள் கோகிலாம்பாளை நோக்கி அடி கோகிலம்! இப்படியும் தட்டுக்கெட்டுத் தாசித்தனம் செய்யும் தையலருலகிலுண்டா? ஒருவேளை அன்னத்திற்கு வழியின்றி ஊர் ஊராய் அலைந்து திரியும் பார்ப்பானுக்கு உயிரிருக்கும் தனையும் உன்னைக் கைவிடுவதில்லையென்று சத்தியம் செய்து கொடுக்கலாமா? என்று மிகவும் கோபித்துக் கொண்டாள். அன்னையின் கோபத்தை அறிந்த அம்மடமயிலாள் தன தன்னையை நோக்கி என் பால் மிக்க அன்பு பெருக்கிடும் அம்மவோ! நீ கூறியவாறு நான் தாசித்தனம் செய்யத் தெரியாத தப்பிலிப் பெண்ணன்று. பவிஷு கெட்ட பார்ப்பானுக்கு நான் உறுதிமொழி சொன்ன சில நிமிஷங்களுக்கு முன்பே வெளிச்சென்றேனல்லவா? அப்போது ஒரு எறும்பைப்

பிடித்து என் வலக்கை விரலிடுக்கிலும், உடைந்த சிறு மண்பாண்ட ஓட்டினைச் சிகையினிலும் வைத்துக்கொண்டு அவன் எதிரில் வந்து நின்று எனது வலக்கையை எடுத்து என் மார்பின்மேல் வைத்து "இந்த உயிர் இருக்கும் தனையும்" அதாவது என் விரலிடுக்கிலிருக்கும் எறும்பின் உயிர் இருக்கும் வரைக்கும், என் சிரசைத் தொட்டுக்காண்பித்து இந்த ஒடு இருக்கும் வரைக்கும், அதாவது என் சிகையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் மண்பாண்டத்தின் ஒடு இருக்கும் வரைக்கும், ஐயங்காரின் நேசத்தைத் துறப்பதில்லையென்றும் சுந்தரத்தின் சொத்துக்களில் சரிபாதியைக் கொடுக்கிறேனென்றும் சத்தியம் செய்து கொடுத்தேன். அப்படி சத்தியம் செய்து கொடுத்ததினுல் இப்போதென்ன முழுகிப்போயிற்று. சத்தியம் முடிந்ததும் விரலிடுக்கிலிருந்த எறும்பைக்கொன்று விட்டேன். சிகையினிலிருந்த ஓட்டையும் எடுத்துவிட்டேன். அத்துடன் என் சத்தியம் முடிந்தது. அந்நிமிடமுதல் எனக்கும் ஐயங்காருக்கும் எவ்விதமான சம்பந்தமுமில்லை. இந்தச் சூதை அந்த அந்தம் கெட்ட மந்தப் பார்ப்பான் உணராமல் எனதுயிரும் என் சிரசு ஓடும் இருக்கும்வரை கைவிடுவதில்லையெனச் சத்தியம் செய்ததாய் எண்ணி ஏமாந்திருக்கிறுன். நம் காரியம் கைகூடிய பிறகு சுந்தரத்திற்கு எந்த கதி கிடைக்குமோ அந்த கதியே ஐயங்காருக்கும் கிடைக்குமென்பதில் யாதும் ஆக்ஷேபமின்று. ஆதலால் என தன்னையே நீ சிறிதும் கவலற்க. என்று சமாதானம் கூறினுள். இச்சமயம் யாரோ தெருக்கதவைத் தட்டும் சப்தம்கேட்டது. உடனே கோகிலாம்பாள் வார்த்தையை

நிறுத்தி அம்மா! கதவைத்தட்டுவது ஒரு வேளை சுந்தரமாகத்தான் இருக்கவேண்டும். நான் போய் சயனித்துக் கொள்ளுகிறேன். நீ சென்று கதவை திற; என்று மெது வாய்க் கூறிவிட்டுத்தான் படுக்கையறையிற் சென்று சயனித்துக்கொண்டாள்.

கமலாம்பாள், கடுகச்சென்று கதவைத்திறந்து "யார் அது" எனக்கேட்டுக்கொண்டே வெளியே எட்டிப்பார்த்தாள். அப்போது "மாமி"! வேறொருவருமில்லை நான்தான் என்று கூறியவண்ணம் சுந்தரராஜு வெளியே நின்ருன். கமலம் அவனை நோக்கி தம்பி! உன்னையே அல்லும் பகலும் சதா அறிவிலிருத்தி ஆனந்தசாகரத்திலமிழ்ந்திருந்த நினதாருயிர் காதலியை இப்படி அவஸ்தைக்குட்படுத்தலாமா? துணைபிரிந்த அன்றிலைப்போல் உன்னைப் பிரிந்தது முதல் இதுவரை அன்னம் தண்ணீரில்லாமல் வேரறுந்த வல்லிக்கொடிபோல வதங்கிச்சுருண்டு நீ வரும் திக்கையே சதா எதிர்நோக்கி எனது கண்ணாளன் எங்கே? எனதாருயிர்க்காதலனெங்கே? எனதாவியைத் தாவிச்சென்ற அன்பனெங்கே? எனப்பிதற்றிக்கொண்டே படுக்கையிற்கிடக்கிருள். நீ என்ன மருந்திட்டு என் குழந்தையின் மனதைக் கவர்ந்தாயோ தெரியவில்லை. உனது சல்லாபத்துக்காக எனது அருமைக கண்மணி படும் அவஸ்தையையும் அல்லலையும் இந்தப் பாவி கண்ணால் பார்க்கச் சகிக்கவில்லை. பெற்ற மனம் பற்றியெரிகிறது. என மிகுந்த தயக்கத்தோடும் தளர்வோடும் துக்கத்தோடும் கூறிக்கொண்டே கண்களில் நீரைப்பெருக்கினுள் கபட நாடகத்தில் கைதேர்ந்த கமலாம்பாள்.

கமலாம்பாள், கண் கலக்கத்துடன் கழறிய வார்த்தைகளை முற்றிலும் உண்மையென்றே நம்பிய சுந்தரராஜன் மிக்க வருத்தமும், இரக்கமும் உடையவனாகி மாமி! நான் வேண்டுமென்று எனதருமைக் கோகிலக்கண்ணை அவஸ்தைக் குள்ளாக்குவேனா? எனதன்னை இறந்து விட்டாளென்றும், நான் வந்தாலன்றி தகனக்கிரியைகள் நடைபெறாதென்றும், எனது பந்துக்களில் எத்தனை பெயர் இன்று காலையில் வந்து என்னை அழைத்தார்களென்ற விஷயமும் நீயறிவாயன்றோ? அத்தனை பெயர்கள் அழைத்தும் எனக்கு உடம்பு சௌக்கியமில்லை என்றும், நான் வரமுடியாதென்றும், பிரேதச் சடங்குகளை எனது பந்துக்களில் யார் வேண்டுமாயினும் செய்யலாமென்றும், அதனால் ஏற்படும் செலவை நான் கொடுப்பதுடன் செய்வோருக்கு வேண்டிய பொருள் உதவி செய்வதாகவும் கூறி ஒரே பிடியாய் நான் வரமுடியாதென்று சொல்ல, அதைக்கேட்ட கோகிலம் நான் அப்படிக்கூறுவது சரியல்லவென்றும், நான் எனது அன்னையின் தகனக்கிரியைகளைச்செய்ய உடன்படமாட்டேனென்பதை ஊரார் அறிந்தால், என்னை, தான் முற்றிலும் மயக்கித் தன் மாயவலையில் சிக்கவைத்துக் கொண்டாளெனப் பலரும் தன்னைச் தூஷிப்பார்களென்றும், ஆதலின்நான் அவசியம் சென்று எனதன்னையின் தகனக்கிரியைகளை முடித்து வர வேண்டுமென்றும், பலவாறு கோகிலம் வேண்டிக்கொண்டதின் பேரிலன்றோ யான் சென்றேன். ஆதலின் எனதாருயிர் காதலி படும் அவஸ்தைக்குக் காரணம் அவளேயன்றி யானன்று; எனப்பகர்ந்துகொண்டே மிக்கப் பரபரப்புடன் பள்ளியறை புக்கு ஆங்கு அம்ஸ தூளிகா சயனத்தில் மிக்க

அயர்வோடும், தளர்வோடும், சோகத்தோடும் கலைகள் கலைய அலங்கோலத்துடனும் அடி அன்னாய்! எனதன்பரெங்கே? ஆருயிர் காதலரெங்கே? மதத்த மத்தக நிகரென திருபயோ தரங்களைப்பற்றி உயிரும் மனமும் ஒருங்கே மகிழக் கலவிப் போரியற்றும் கண்ணாளரெங்கே? யெனப் பலவிதம் அரற் றிக்கொண்டிருக்கும் அவ்வன்னநடை மின்னாளைத் தனதிரு கரங்களாலும் தழுவி எடுத்து அடி எனதாகத்திலுறுமாரு யிரன்னாய்! நின் மனச்சஞ்சலத்தை நீக்குதி. இனியொரு கணமும் யான் நின்னைப் பிரிந்திருக்கு மாற்றலுடையேனல் லேன். ஆதலின் நீ கவலற்க. என மிக்க பரிவோடும், கனி வோடும், காதலோடும், கோகிலாம்பாளின் இரு கன்னங்க ளினும் அதரத்தினும் அநேக முத்தமீந்து அவளுக்காறுத லுண்டாக்கினான் சுந்தரராஜு.

சுந்தரராஜுவால், அணைத்து ஆறுதல் கூறப்பட்ட கோகிலாம்பாள் சிறிது கோபமும் தளர்வும் துயரமும் உடையளாய் சுந்தரராஜுவின் கரத்தினின்றும் அகன்று அப்பால் நின்று என் உள்ளத்தைவிட்டு அகலாத அன்பரே! என்னை இவ்வாறல்லற்படுத்தியது நுமக்கழகோ? நும் அன் பியை, நுமது ஆருயிர்காதலியை, நுமதன்பையே சதா எதிர்நோக்கியிருக்கும் அருமை மனைவியை, இவ்வா றல்லற்குட்படுத்துவதாகாது. என்று கூறி மீண்டும் சுந்தர ராஜுவின் அருகில் நெருங்கி அவனது கரங்களை மெது வாய்ப் பற்றிக்கொண்டு கண்ணே! தாம் மீண்டுவரத்தாம தித்த காரணமென்னே? கற்கண்டே! நின்னை எவள் மயக் கித்தன் மாயவலையிற் கட்டினாள். அந்தோ நீவிர் இன்னும்

சில நிமிடம் ஈண்டுவரத் தாமதித்திருப்பின் எனது உயிர் பிரிந்த உடலையேதான் கண்டிருப்பீரென்பதிற் சிறிதும் ஐய மின்று. எனமிக்க சோகத்தோடும் துயரத்தோடும் நாத் தழுதழுப்பக்கூறிய வண்ணம் தனதழகிய நயனங்களில் நீரைப்பெருக்கி தான் முற்றிலும் உண்மையன்புள்ளவளைப் போன்று பாசாங்கு செய்தாள் கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளின், சாதுர்யமிக்க சரசவார்த்தைகளை யும் பக்குவமாகக் கூறும் பாசாங்கு மொழிகளையும், மிக்க காதலுடையாள் போன்று நடிக்கும் கபட நாடகங்களையும், முற்றும் உண்மையென்றே நம்பிய சுந்தரராஜன், அவள் பால் அதிகஇரக்கமும், கருணையும், கனிவும் உதித்தோனாகி அடி அன்னநடை மின்னே! நீ ஆயாசமுறல் வேண்டாம். உனதழகிய நயனங்களினின்றும் நீரைப் பெருக்கிடேல். நினது அழகிய தாமரைப் புட்பம் போன்ற வதனம் வாடி வதங்கி ஒளியமுங்கிப்போயிற்று. இனியும் நின்னை விட்டு ஒரு நிமிடமும் அகலுவதில்லையென உறுதிவாக்களிக்கின் றேன். ஆதலின் கண்மணி! நீ கவலற்க. என்று கூறிக் கொண்டே தனது சட்டைப்பையிலிருந்த மெல்லிய துவாலை எடுத்து கோகிலாவின் கண்களையும் வதனத்தையும் மெது வாகத் துடைத்து அவளைத் தனதிருகரங்களாலும் அழுந்தத் தழுவிக் கன்னங்களில் கணக்கற்ற முத்தியளித்து அவளின் மனச்சஞ்சலத்தை மாற்றினான் சுந்தரராஜன். நிற்க.

தாங்தோணி ஐயங்காரின் ஜென்மபூமி தஞ்சாவூர். அவர் அவ்வூரிலுள்ள ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அவ ருக்கு எவ்விதமான பிதுரார்ஜித சொத்துக்களுமில்லாமை

யால் அதிகம் கஷ்டப்பட்டு ஜீவித்து வந்தார். அப்படியிருந்தும் அவரது சுபக்கோளின் வன்மையினுல் எப்படியோ விவாகமும் நடந்தேறியது. ஏற்கனவே வறுமை நோயால் வாடியிருந்த ஐயங்கார் தமது சிறு குடும்பத்தைப் போஷிக்கமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். அவரால் வருந்தி வேலைசெய்ய முடியாமல் வறுமையை அதிகப்படுத்தி வாதனையுண்டாக்க அவருக்கு வாத தேகமும் வந்துற்றது. அதனுல் அவர் கஷ்டப்படமுடியாமல் தந்திரமாகப் பொருள் தேட எத்தனித்து அந்நகரத்தின் பிரதான தெருக்களில் சாயங்கால வேளையில் இங்குமங்கும் திரிந்தலையும் பிரபு வீட்டுப்பிள்ளைகளை தந்திரமாய் தாஜாப்படுத்தி அழைத்துக்கொண்டு போய் தாசிகள் வீடு சேர்ப்பதும், அதற்குப் பிரதியுபகாரமாக அவ்விரு பாலார்களிடத்தும் சிறிது பொருள் பெற்று ஜீவிப்பதுமாக "டாபர் மாமா" வேலைசெய்து வந்தார். இவ்வாறு நெடுநாள் கழிந்தது. பிறகு இருக்க இருக்க நாளுக்கு நாள் அவரது வரும்படி குறையத் தொடங்கியது. ஆகையால் அவர் அவ்வூரைவிட்டு இந்த விஜயநகரத்திற்கு வந்து சேர்ந்தார். இவர் இவ்வூருக்கு வந்தும் கூட வெகுநாளாகவில்லை. கோகிலாம்பாளும் ஐயங்காரும் சுந்தரராஜனவை கடற்கரையில் சந்தித்ததினத்திற்கு சுமார் ஆறு மாதத்திற்கு முன்தான் ஐயங்கார் இவ்வூருக்கு வந்தார். அவர் சீக்கிரத்தில் அநேக தாசிகளையும் அநேக பிரபுக்களையும் சிநேகித்துக் கொண்டார். கோகிலாம்பாளும் ஐயங்காரைப்போலவே தனது சொந்தவூராகிய ஸ்ரீ வில்லிப்புத்தூரை விட்டு விஜயநகரம் வந்துசேர்ந்தாள். தனது சொந்தவூர் சிறிய கிராமமானதாலும் அங்குத் தங்கள்

குலத்தொழில் சிறப்பாக நடைபெறாததால் தகுந்த வருமானமின்றி இந்த நகரத்தையடைந்தாள். இவள் சுந்தரராஜுலுவைக் கடற்கரையில் சந்தித்த தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்தான் விஜயநகரம் வந்து சேர்ந்தாள். அவள் அங்கு வந்ததும் உடனே ஐயங்கார் நேசமானார். அவர் அன்று முதல் கோகிலாம்பாளின் வேண்டுகோளின்படி பிரபு வீட்டுப் பிள்ளைகளாகிய கொழுத்த மீன்களைப் பிடிக்கத் தந்திர சாகசமாகிய வலையைத் தமது தோளில் தாங்கி அந்நகர முற்றும் சுற்றித்திரிந்தார். ஏதோ தெய்வச் செயலாய் கோகிலாம்பாளும் ஐயங்காரும் கடற்கரை பக்கம் உலாவச் சென்றதினம் அவர்கள் இஷ்டத்திற்கிணங்க தற்செயலாக சுந்தரராஜுலு அங்குற்று அவர்கள் மாயவலையில் மாட்டிக்கொண்டான்.

## 6-வது அத்தியாயம்.

# கூழுக்கேற்ற பழம்புளி.

---

விஜய நகரத்தின் வடபாகத்தில் பெரிய பிரபுக்கள் வசிக்கும் ஓர் வீதியில் அரசர் அரண்மனையே போன்று மிகச்சிங்காரம் வாய்ந்ததும் சுமார் அரைமைல் விஸ்தீரணம் உள்ளதுமாகிய அழகிய மாளிகையொன்றிருந்தது. அம்மாளிகையினுள் அநேக அறைகளும் கூடங்களும் வகுக்கப்பட்டு ஒவ்வோரிடத்திற்கும்

தருந்தவாறு பல அழகிய சாமான்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆயினும் மாளிகையின் மத்தியிலுள்ள சுமார் 60 அடி சதுரமுள்ள பெரிய கூடமொன்று, மற்ற கூடங்களையும் அறைகளையும்விட மிக்க அழகாகவும் சோபிதமாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அக்கூடத்தில் புதிதாய் பிரவேசிக்கும் ஒருவர் தம்முருவைப்போன்ற பல உருவங்களை நாற்புறங்களினும் கண்டு கலங்கித் திகைக்கும்படி நாற்புறச் சுவர்களிலும் பெரிய நிலைக்கண்ணாடிகள் பல வைக்கப்பட்டிருந்ததுமன்றி, சித்திரம் தீட்டுவதில் மிக்கப்புகழ் படைத்த ராஜா ரவிவர்மா அவர்களால் சித்திரிக்கப்பெற்ற பல அழகான படங்களும் பொருத்தப்பெற்றிருந்தன. அப்படங்களுள் மிக்க எழிலும், இங்கிதமும், கனிவும் பொருந்திய ஸ்திரி ரத்தினங்களில் ஓவியங்களே அதிகமாய் இருந்தன. தரைகளெங்கும் இரத்தினக்கம்பளம் பரப்பப்பெற்றிருந்தது. கறுப்பு மரத்தால் செய்யப்பட்டு வர்ணம் தீட்டிய பல நாற்காலிகளும், தந்தவேலை செய்த சில சாய்வு நாற்காலிகளும், அக்கூடத்தின் மத்தியிலிருந்த பெரிய மேஜையைச் சுற்றிலும் போடப்பட்டிருந்தன. இன்னும் அக்கூடத்துள் பல கிளை விளக்குகளும், மின்சார விளக்குகளும், மின்சார விசிறிகளும் பொருத்தப்பெற்றிருந்தன. மேஜையின்மேல் காதலை வளர்க்கும் அநேக விசித்திரப் பொருள்களும், ரோஜா அத்தர் முதலிய சுதேச வாசனைச் சாமான்கள் நிறைந்த பல பெட்டிகளும், செண்ட் முதலியவைபோன்ற அன்னிய தேசத்து வாசனைச் சாமான்கள் நிறைந்த பல பெட்டிகளும் இருந்தனவன்றி, உயர்ந்த வாசனை வத்திகள் கொளுத்தப்பட்டு மிக்க மனோஹரமும்

இன்பமுமான பரிமளம் அறை முற்றும் பாவியிருந்தது. மேஜையின் ஓரத்திலுள்ள ஒரு அழகிய தந்த வேலைசெய்த சாய்வு நாற்காலியில் சுமார் 40 அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத்தகுந்த வயதையுடைய ஓர் கம்பீர புருஷர் சாய்ந்து படுத்திருந்தார். இவரது தேகம் நல்லகட்டுமஸ்தாகவும் கருணை கருணையாய்த் தடித்த தசைப்பற்றுள்ளதாகவும் இருந்தது. இவரை யாரோவென வாசகர்கள் ஐயுற வேண்டுவதில்லை, இவரே நாம் இரண்டாம் அத்தியாயத்தில் கூறிவந்த வெங்கிடுபதி கவுண்டர். இவரது பிறப்பு வளர்ப்பையும் இவர் ஆதியில் மிக்க ஏழையாயிருந்து பின்பு இலட்சாதிபதியானதையும், மற்றும் இவரின் குணவிசேஷங்களையும் அவ்வத்தியாயத்திலேயே விரிவாகக் கூறிப்போந்தமையின் ஈண்டும் அவ்விஷயங்களைக் கூறாது விடுக்கின்றனம். இவர் தற்போது நாற்காலியில் சாய்ந்த வண்ணம் தமது கண்களை மூடிக்கொண்டு யோக நித்திரையிலிருக்கிறார். இவர் அவ்வாறு நயனங்களை மூடிக்கொண்டிருந்த காரணம் வாசகர்களுக்கு விளங்காவிடினும் நமக்கு நன்றாகத்தெரியும். அவர், யௌவன லாவண்ய சுகுமாரிகளுடைய சுருண்டு கருத்தடர்ந்த அழகிய கூந்தலையும், அன்றலர்ந்த செந்தாமரை போன்ற சுந்தர வதனத்தையும், திரண்டுருண்டு கச்சிற் கடங்காது பூரித்த இரு ஸ்தனங்களையும், ஒடுங்கிய இடையையும் ஒப்பார நடையையும் மனத்துள் ஓர்ந்த வண்ணம் அவற்றையே தம் ஜென்ம சாபல்ய மந்திரமென எண்ணி ஜெபித்துக் கொண்டிருக்கிறார். இவர் சாப்பிடும் வேளை தவிர மற்ற நேரமெல்லாம் மேற்சொன்ன ஆனந்த ஜெப வாரிதியில் அமிழ்ந்து அமிழ்ந்து நீந்துவார். அவர்

இவ்வாறு தமது நயனங்களை மூடிக்கொண்டு அன்னநடை மின்னார்களின் ஆலிங்கன சுகத்தைக் குறித்து இன்பக் கனவு கண்டு கொண்டிருக்கும்போது அதற்கிடையூராக அரே கிருஷ்ணா! மாதவா! கோவிந்தா! என பகவத் நாமங்களை யுச்சரித்துக்கொண்டே கண்டவர் கும்பகர்ணனுக்குத் தம்பியிவரெனக் கூறும்படி கரிய நீலமலை போன்ற காத்திரமான தேகமுள்ள ஒரு வயோதிகர் தமது சென்னியிலுள்ள ஐந்தாறு ரோமங்களும் காற்றில் ஆடிப் பறந்து அல்லற்படவும், பட்டை நாமம் நெற்றியிற் பளபளவென பிரகாசிக்கவும், அவரது பருத்த தொந்தி தத்திமிதிமி யெனக்குதித்துத்தாளம் போடவும், தத்தித் தத்தி நடந்துவந்தார்.

வயோதிகரின் வரவைக்கண்ட வெங்கிடுபதிக் கவுண்டர் தமது கரங்களைக் குவித்துக்கொண்டு சுவாமிகள் வருக வருகவென நமஸ்காரம் செய்தார். வெங்கிடுபதிக் கவுண்டரின் நமஸ்காரத்தை யேற்றுக் கொண்ட அவ்வயோதிகர் தீர்க்காயுஷ்ய மஸ்து. கவுண்டரவர்கள் இப்போதைப்போல எப்போதும் கோடி கோடியாய்ப் பெருகி வாழக்கடவர்; என ஆசீர்வதித்தார். அவர்செய்த ஆசீர்வாதம் மனமொழி மெய்களாதிய திரிகரண சுத்தியாகச் செய்யப்பட்டனவென்றும், அல்லது மனம்வேறு சொல்வேறு மன்னு தொழில் வேறு என்றபடி பாசாங்கு ஆசீர்வாதமென்றும் பகர நாம் தயாராயில்லை. வயோதிகரின் வாழ்த்தலுக்கு அகமகிழ்ந்த வெங்கிடுபதிக் கவுண்டர், அவரைத்தமது அருகிலுள்ள ஓர் சோபாவில் அமரும்படி கேட்டுக்கொண்டார். இவ்வயோதிகரை நமது வாசகர்கள் பலமுறை சந்தித்திருக்கின்றார்களா

தவின் இன்னாரென முன்னமே ஊகித்துக்கொண்டிருப்பார்கள். இவரே நமது தஞ்சாவூர் தாந்தோணி ஐயங்கார்.

வெங்கிடபதிக் கவுண்டர், ஐயங்காரரை நோக்கி சுவாமிகாள்! தாம் இவணுற்று நெடுநாளாகியது. இத்தனை நாள் தாமதத்திற்கு காரணம்யாதோ? நம் கோடியாத்துக் கோமளமும், அம்புஜாக்ஷியும், பாக்கியரத்தினமும், சுட்புலக்ஷிமியும், சுகமாய் இருக்கின்றார்களா? ஆ! அவர்கள் என்மேற்கொண்ட அன்பும் அபிமானமும் பிரேமையும், புகலுந்தரமுடையனவல்ல. அவர்களின் க்ஷேமத்தை நீர் செப்புக. எனமிக்க ஆவலோடுஐயங்காரை வினவினர்.

ஐயங்கார் :—ஆ! ஆ! தங்கள் அன்பும் கருணையும் அவர்கள் பால் பரிபூரணமாயிருக்கும்போது அவர்களின் க்ஷேமத்திற்குக் கேட்கவேண்டுமா? ஒண்டிக்காரன் வளர்த்த கைக்கடாபோல நன்றாய்ப் பருத்துக்கொழுத்து அளவுக்குமீறிய அதிக்ஷேமாபி விர்த்தியில் அவர்கள் இருக்கின்றனர்

வெங்கிடபதிக் கவுண்டர் :—சரி! மிக்க சந்தோஷம். தாசிகள் நம்மால் எவ்வளவுக் கெவ்வளவு போஷிக்கப்படுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு நல்ல பெயரும் கீர்த்தியும் புண்ணியமும் கிடைக்குமென்பதில் ஆக்ஷேபமுண்டா?

ஐயங்கார் :—பேஷ்! தங்கள் அபிப்பிராயத்திற்குக் கூட ஆட்சேபம் சொல்லுகிறவர்கள் உண்டா? தங்களுக்குத் தெரியாத சாஸ்திரங்களேயும்நீதிகளேயும் தர்மங்களை

யும் எவர் கற்றிருக்கிறார்கள்? நீதி அறியாத சிலர் சத்திரமென்றும் சாவடியென்றும் கட்டிக்கொள்வதும், சாமியார் என்றும் தம்பிரான் என்றும் வழியில் வருவாரும் போவாருமாகிய தடியன்களுக்கெல்லாம் அன்னமிடுவதும், கடந்த ஜென்மத்தில் செய்த வினைப்பயனால் அன்னவஸ்திர மின்றி அலைந்து திரியும் அனாதிப் பிரேதங்களை ஆதரிப்பதுமாகிய பல தகாத வழிகளில் செலவிட்டுத் தமது காசைக் கரியாக்கிக் காற்றுக்குத் தூற்றி விடுகிறார்கள். இதனால் இவர்களுக்கு ஒரு போதும் நல்லபெயர் கிட்டப்போவதில்லை. தாங்களோ இந்நகரத்திலுள்ள தேவ அடியார் என்று கூறப்படும் தாசிகளுக்கு வேண்டிய தன மீந்து அவர்களைத் தனவதிகளாக்குவதும், தாசிகளின் இல்லந்தோறும் தாராளமாய்ப் புகுந்துலவும் விட சிகாமணிகளுக்கு வேண்டிய சகாயம் புரிவதும், அளவற்ற தனத்தை அமுக்கிவைத்துக்கொண்டு தாசிகள் விஷயத்தில் தாராளமாய்ச் செலவு செய்யாத தனவந்தர்களின் தனத்தை தக்க ஆட்களைக்கொண்டு கவர்வதும் தங்களை அடுத்துள்ள என் போன்றார் வறுமையைத் தனமழை பொழிந்து ஓட்டுவதும், ஆகிய தர்ம கைங்கரியங்களில் ஈடுபட்டிருப்பதால் தங்கள்பெயரும் புகழும், கீர்த்தியும், எவ்வளவு தூரம் பரவியிருக்கிறதென்பதை எடுத்துச் சொல்ல யாரால் முடியும்? இந்நகரத்தில் தங்களைப்போல் புகழ் படைத்தார் எவரும் இல்லை. என்று துரியோதனனுக்குச் சகுனி மாமன் துர்ப்புத்தி போதித்ததுபோல நம் வெங்கிடுபதிக் கவுண்டருக்குத் தகாத புத்திகளை போத்தித்தார் தாந்தோணீ ஐயங்கார்.

இயற்கையிலேயே வெங்கிடுபெதி கவுண்டருக்குப் போதிய நுண்ணறிவில்லை. அவரின் சிறு வயது முற்றும் எருமை மாடுகளை மேய்ப்பதில் கழிந்தொழிந்தது. தனவந்தரான பின்பு தமதில்லத்திலேயே ஒரு உபாத்தியாயரை வைத்துக்கொண்டு கல்வி பயின்று வந்தார். ஆயினும் அக்கல்வி அதிகமாய் விர்த்தி பெறவில்லை. அப்படி விர்த்தியடையாததற்கு அநேக காரணங்களுண்டு. அவற்றுள் தாம் அதிக தனவந்தராயிருக்கிறோமென்ற தகாத கர்வமும், தாம் வாசிக்கும் நீதி சாஸ்திரங்களாகிய ஒவ்வொரு நூலையும் முழுதும் பொய்யென்றும், கட்டுக்கதையென்றும் குதர்க்க வாதம் செய்வதுமாகிய தகாதகுணங்களே முக்கியமானவை இத்தகைய கல்வியறிவில்லாக் கசடருக்கு, தந்திரங்களேதிரண்டோருருவெடுத்தாற் போன்ற தாந்தோணி ஐயங்காரன்ன தகல் பாஜிகள் மந்திரிகளாயமைவது சர்வ சாதாரணமே.

வெங்கிடுபேதிக் கவுண்டர் :— பலே! நம் ஐயங்காருக்கிணையாக யாரைச் சொல்லலாம்? மெத்தவும் கெட்டிக்காரர். அதுவெல்லாமிருக்கட்டும். நமது நகரத்தின் தென்பாகத்திலுள்ள சிங்காரத்தெருவில் “மதனபூஷணம்” என்றொரு பெண் வந்திருப்பதாகவும் அவள் மிகக லாவண்ய சோபிதமுள்ள சிங்காரியென்றும் கேள்விப் பட்டேன். அப்படி அவள் வந்திருந்தால் அவ்விஷயம் தங்களுக்குப் பெரும்பாலும் தெரிந்தே இருக்கும். ஆகையால் அதுவிஷயமான உண்மையை எனக்குச் சொல்லவேண்டும்; என்றார்.

ஐயங்கார் :—ஓ. அவளா? சிங்காரத்தெருவில் 386-நெ. வீட்டிலிருக்கும் மைபடிந்த கண்களையுடைய மதன பூஷணம் தானே? எதேஷ்டமாய்த்தெரியும். பருப்பில்லாத கல்யாணம் எப்படி இல்லையோ அப்படியே ஐயங்காரின் தயவைப் பெறாத விலைமாதர்கள் இந்நகரத்திலிருந்து ஜீவிப்பது கடினம். இவ்விஷயம் தங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது. இப்போது தான் அவள் வீட்டிலிருந்து வருகிறேன். மதனபூஷணத்தைத் தாங்கள் கூறியபடி அழகி என்றுகூற என் 'நா' எழவில்லை. ஆயினும் "சிறந்த அழகி" என்று யாரைக்கூறலாமென்றால் இந்நகரத்தில் தாசித்தெருவிலுள்ள 389. நெ. வீட்டில் "கோகிலாம்பாள்" என்ற ஒரு இளங் கன்னிகா ரத்தினம் இருக்கின்றாள். ஆ! அவளின் அழகை எடுத்துரைக்க என்னால் இயலாது. பிரமன் படைப்பிற் தேர்ச்சியடைந்த பின் இவ்வுலகிலுள்ள அழகையெல்லாம் ஒரு சேரத்திரட்டிப் பலநாள் முயன்று இப்பொற்கொடியைப் படைத்தான் என்று கூறுதல் மிகையாகாது. அம்மடமயிலின் சுருண்டு கருத்தடர்ந்த நீண்ட குழலினழகையும் செந்தாமரை மலர்போல் திகழும் வதனத்தினழகையும், திரண்டுருண்ட புயங்களினழகையும், காற்றடைத்த சற்றே பருத்த ரப்பர் பந்துகளைப்போன்ற இளமையும், செழுமையும் வாய்ந்த அழகிய அவளிரு ஸ்தனங்களினழகையும், ஒல்லிய இடையையும், ஒய்யார நடையையும், வருணிக்க என்னொரு நாவால் இயலாது. இவள் அழகைக்குறித்து எத்தனை அத்தியாயங்கள் வருணிப்பினும் வாயும் வலிக்காது கேட்பவர் செவியும் சலிக்காது. இவளினழகுக்கு ஒப்பாரு மிக்காருமில்லை. உண்மையாய் இவளழகை வரு

ணிக்கவேண்டுமானால் நம் பண்டைக்கால வித்வான்களாகிய கம்பர் காளமேகம் போன்றவர்களால் முடியுமேயன்றி தற்கால வித்வான்களால் ஒரு சிறிதும் உரைக்க இயலாது. இக்கன்னிகா ரத்தினத்தைத் தம் கைவசமாக்கிக்கொள்ள எத்தனையோ பிரபுக்களும், ஜமீன்தார்களும், சிற்றரசர்களும் எண்ணமிட்டும், அவள் சிறிதும் இணங்கவில்லை. இத்தகைய உத்தமப்பெண்ணை அழகி என்று கூறுதல் முற்றிலும் பொருந்தும். அதைவிட்டு காத்தாயி முருகாயி முதலிய தலைவிரிச்சான் பட்டாளங்களையெல்லாம் அழகி என்று கூறுவது அவிவேகமேயாம். என்று வெங்கிடுபதி கவுண்டரின் மனம் பாகாய் நைந்துருகும்படி நல்ல பக்குவமாகவும், சிங்காரமாகவும், வருணித்துக் கூறினார் தாங்தோணி ஐயங்கார்.

ஐயங்கார், கூறிய அழகும் ருசிகரமும், செறிந்த வருணனை வார்த்தைகளைக் கேட்கக் கேட்க வெங்கிடுபதிக் கவுண்டரின் நாவில் உமிழ்நீர் ஊற்றுப்போல் சுரந்தது. கிடைத்தற் கரிதாகிய அத்தகைய அழகிய கற்கண்டுக் கட்டியை அப்படியே கடித்துத்தின்று விடலாமாவென எண்ணினார். அவரது உள்ளத்தில் அளப்பரிய காதல் தீ மூண்டு அச்சுடர் சிரசுக்கேறியது. அதனால் மூளை குழம்பி சிரம் சுழன்றது. அச்சுந்தராங்கியைத் தாம் எப்படியாவது அனுபவிக்கவேண்டுமென ஆத்திரத்துடன் ஐயங்காரை நோக்கி சுவாமிகாள்! அம்மடமயிலாளது மாந்தளிற் மேனியின் ஸ்பரிச சுகத்தால் யான் பரவசமடையும்படி செய்தல் நும் கடமையாகும். தாம் செய்யும் இவ்வுபகாரத்தை யான் என்றும் மறவேன். என்று ஐயங்காரைக் கேட்டுக்கொண்டார்.

ஐயங்கார் :—ஆ! ஆ! தாங்களிடும் கட்டளையைத் தலையால் செய்ய தாசன் காத்துக்கொண்டிருக்கையில் தாங்கள் எனக்கு இவ்வளவு உபசாரம் கூறவேண்டுமோ? தங்களிஷ்டப்படி அப்பெண்மயிலை தமதாசை நாயகியாக்க நான் முயற்சி செய்கிறேன்; ஆனால் முன்னாடியே ஒரு சங்கதி கூற மறந்துவிட்டேன். நமது நகரத்தில் சிங்காரவேலுகவுண்டர் குமாரன் சுந்தரராஜு என்றொரு பயல் இருக்கிறானல்லவா? ஏன் அவனை தங்களுக்குக்கூட நன்றாய்த் தெரியுமே?

வெங்கிடபேதிக் கவுண்டர் :— ஓ அந்தப்பயலா? அவன் மிகவும் போக்கிரிப்பயலாச்சுதே. எனது குணமும், நடக்கையும் மிக்க ஒழுங்கீனமென்று எப்பொழுதும் பிதற்றிக்கொண்டு திரிகிறவன். சரி, மேல் நடந்த விஷயத்தைக் கூறுங்கள்.

ஐயங்கார் :—அந்த சுந்தரராஜு நாலைந்து நாட்களாக நான் மேலே கூறிய மடமயிலாகிய கோகிலாம்பாளின் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்ததைக்கண்டு நான் சந்தேகமுற்று, என்ன விசேஷமென்று கோகிலாவை விசாரித்தேன். அதற்கவள், சிலநாட்களாக சுந்தரராஜு அடிக்கடி தன் வீட்டிற்கு வருவதாகவும், பணத்திலும் குணத்திலும் தனக்கு ஒப்பாரு மிக்காருமாகிய பிரபுக்கள் இந்நகரத்தில் எவருமில்லையென்றும், எவரும் தன் பாத தூளிக்கிணையாக மாட்டார்களென்றும், அவனது சொத்து முழுமையும் வேண்டுமானால் தனக்குக் கொடுத்து விடுவதாகவும் ஆதலின், அவனை தான் ஆசைநாயகனாகக் கொள்ளவேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்வதாகவும் கூறி

ளுள். நான் அவள் வார்த்தை எவ்வளவுவரைக்கும் உண்மை யென்பதை அறிய சுந்தராராஜுலுவைச் சந்தித்து நீ அடிக்கடி கோகிலாம்பாளின் இல்விற்குச்செல்லக் காரணமென்ன வென்று வினவினேன். அதற்கவன், அழகில் ஒப்புயர் வற்றவளாகிய கோகிலாம்பாளை எனது ஆசைநாயகியாக்கிக் கொள்ள எண்ணிக்கொண்டிருக்கின்றேன். இதற்கிடையில் இவ்வூரிலுள்ள சில பிரபுக்களாகிய போக்கிரிப்பயல்கள் அடிக்கடி கோகிலாவின் வீட்டிற்கு வருவதையும் அவளுடன் ஆனந்த பரவசராய் சரசமொழிகளாட எத்தனிப்பதையும் காண என்மனத்துள் கோபத்தீ கொழுந்து விட்டெரிகிறது. ஆதலின் என் சொத்து முழுமையும் ஈந்தாவது அவளை எனது ஆசை நாயகி யாக்கிக்கொண்டு இப்பிரபுப்பயல்களை இவ்வீட்டு வழி வரவொட்டாமல் துரத்தித்துரத்தி அடிக்கா விட்டால் என் பெயர் சுந்தராராஜுலு அல்லவென்று சபதம் கூறினான். அதற்கு நான் அப்பா சுந்தராராஜுலு கனம் வெங்கிடுபதிக் கவுண்டரென்ன, சாரங்கபாணிக் கவுண்டரென்ன, சோமசுந்தரக் கவுண்டரென்ன, பெரும் தனவந்தரான பிரபுக்களையெல்லாம் போக்கிரிப்பயல்களென்று திட்டுவது சரியல்லவென்று கூறினேன். அதற்கவன் சுவாமிகளே இவ்வூரிலுள்ள பிரபுக்களில் தாங்கள் கூறிய இம்மூன்று பேரும் தான் முழுத்திருடர்கள். இவர்களைக் காட்டிலும் போக்கிரிகளும், அயோக்கியர்களும், இவ்வுலகத்திலேயே இல்லை; என்றான். இவ்வார்த்தையைக் கேட்டவுடன் எனக்கடங்காத கோபமுதித்து, அடே சுந்தராராஜுலு எனது பிராண சிநேகரும் பெரிய பிரபுவுமாகிய வெங்கிடுபதி கவுண்டரைக் கூடவா அவ்வாறு சொல்லுகிறாய்? என்றேன். அதற்கவன்

அடே பார்ப்பான் உன்சிநேகனுன வெங்கிடுபதி கவுண்டனை மாத்திரமன்று. அவனது பாட்டனையும்கூட அப்படியே சொல்லுகிறேன். நீங்களிருவரும் சேர்ந்தால் தான் எனக்கு எம்மாத்திரம் ஒருகை பார்த்துக்கொள்ளுகிறேனென்று உதறிப்பேசிக்கொண்டே போய்விட்டான். இவனைத் தகுந்த படி தண்டித்தாலன்றி என் மனம் சாந்தமுருது; என்று முற்றிலும் பொய்யாய் முழுப்புளுகைப் புளுகி வெங்கிடுபதி கவுண்டரின் உள்ளத்தில் ஆத்திரமுப், கோபமும், கொதித் தெழும்பச் செய்தார் ஐயங்கார்.

வேங்கிடுபேதிக் கவுண்டர்:—ஆ! ஆ! அந்த அயோக் கியப்பயல் அப்படிக்கூறினுை? எவ்விதத்தும் அப்பெண் மணியை நானே அனுபவிப்பதுமன்றி, அவனையும் அல்லற் குட்படுத்துகிறேன்; என்று மிக்க கோபத்துடன் இரைந்து கூவி, சுவாமிகளே! எவ்வளவு திரவியம் சிலவாகினும் அக் கரையில்லை. அவ்வன்னநடை மின்னுளை என்னவளாக்க ஏற்ற முயற்சியை தாம் இப்பொழுதே செய்வதுமன்றி அவ னுக்கும் தகுந்த தண்டனை விதிக்க ஏற்பாடு செய்யவேண் டும். என ஆத்திரத்தோடும் கோபத்தோடும் இயம்பினுர்.

ஐயங்கார்:—அதற்கென்ன ஆட்சேபமிருக்கிறது? இப் பொழுதே ஏற்ற சூழ்ச்சியைச் செப்புகிறேன். முதலில் கோகிலாம்பாளை நம்மிஷ்டப்படி நடக்க வசப்படுத்திக்கொ ண்டு, அவளுக்கு நம் அபிப்பிராயத்தைப் போதித்து அவ் வாறு நடக்கச் செய்தல் வேண்டும். என்னவெனில், சுந்த ரராஜ— கோகிலாம்பாளைத் தன் சொந்த நாயகியாயிருக்கக் கேட்டுக்கொள்ளும்போது, அவள் சுந்தரத்தின் சொத்து

முழுமையும் தன் பெயருக்குக் கிரயம் எழுதிக்கொடுத்தா லன்றி, அவனுக்குத் தான் இன்பநாயகியாக இருக்கமுடியா தென்று அவள் பக்குவமாய்க் கூறவேண்டும். அப்படிக் கூறினால் அவள் மீதிருக்கும் மிகுந்த மோகத்தினால் அவன் அவசியம் எழுதிக்கொடுத்தே தீருவான். ஒருவேளை அப் படி அவன் எழுதிக்கொடுக்கப் பின்வாங்கினாலும் ஏதாவது தந்திரம் செய்து மதுபானம் கொடுத்துமயக்கி அவனிடம் எழுதிவாங்கிக்கொண்டு பின்பு அவன் வீட்டுக்கு வந்தால் விளக்குமாற்றாலடித்து அவனை வெளியே துரத்தும்படி செய்யவேண்டும். பிறகு தாம் இதுவிஷயமாகச் செய்த பெருத்த உபகாரத்திற்காக அவள் தமது ஆசைநாயகியாக எப்பொழுதும் தம் மருகிலேயே இருக்கவேண்டும். இவ்வ ளவே என் அபிப்பிராயம்; என்றார்.

வெங்கிடபேதிக் கவுண்டர்:—பேஷ்! நீர் கூறிய யோ சனை வெகு சொகுசாய் இருக்கிறது. ஆனால் கோகிலாம் பாள் நம்மிஷ்டப்படி நடக்க ஒப்புக்கொள்ள வேண்டுமே?

ஐயங்கார்:—ஓ! அந்தக்கவலை தங்களுக்கு வேண்டாம். தாந்தோணி ஐயங்காரின் தயவின்றி, எந்த தாசியும் இந்நக ரத்திலிருக்க முடியாதென்பதை இன்னொருமுறை வற்புறு த்திக் கூறுவதுமன்றி, அவளை நம்மிஷ்டப்படி நடக்கச் செய்ய என்னுலியலுமென்றும் கூறுகிறேன்; என்றார்.

வெங்கிடபேதிக் கவுண்டர்:—சரி; மெத்த சந்தோஷம். இக்காரியத்தை நிறைவேற்ற இப்பொழுது எவ்வளவு தொகை வேண்டும்?

ஐயங்கார் :—இப்பொழுது அதிகமான தொகையொன்றும் வேண்டாம். ஆயினும் சுந்தரம் ஒருவேளை தன் சொத்துக்கள் முழுவதையும் கோகிலாவிற்கு எழுதிக்கொடுக்கப்பயந்து பின் வாங்கினால் அப்போது அவனை ஏமாற்றி அவனது ஐம்பது வேலி நிலத்தையும் கிரயம் எழுதிக்கொள்ளத் தேவையான ஸ்டாம்பு பேபர் வாங்குவதற்குத் தகுந்த தனமும் சப்ரிஜிஸ்திராருக்கும் சாக்ஷிகளுக்கும் கொடுக்க வேண்டிய தக்ஷணைக்குரிய தனமும் இப்போது கொடுப்பதுமன்றி நான் எவ்விதம் கூறியபோதிலும் சப்ரிஜிஸ்திரார் அவ்விதம் நடக்கும்படி தாங்கள் முன்னடியே ஒருமுறை அவருக்கு வற்புறுத்திக்கூறவும் வேண்டும். இவ்வளவே இப்போது போதுமானது. பிறகு கோகிலாம்பாள் நம்மிஷ்டப்படி நடந்து தங்களின் ஆவலைத்தணிக்க குறைந்தது ஐம்பதினாயிரம் ரூபாயாவது கொடுக்கவேண்டும். அதுவும் அந்த ரூபாய்களை என்னிடமே கொடுக்கவேண்டும். தாங்கள் நேரில் கொடுத்தால் ஒருவேளை அவள் பெற்றுக்கொள்ளமாட்டாள். அப்போதுதான் தாங்கள் கூறியசபதம் முடிந்ததாகும். அப்புறம் என் சிரமதக்ஷணை தாங்கள் எவ்வளவு கொடுத்தாலும் பெற்றுக்கொள்ளுகிறேன். என்று அதிக பக்குவமாகவும் தந்திரமாகவும் கூறினர் தாந்தோணி ஐயங்கார்.

ஐயங்காரின், மாயவலையிலகப்பட்ட வெங்கிடுபதி கவுண்டர் அவர் கோரிய தொகையைக் கொடுத்ததுமன்றி, சப்ரிஜிஸ்திராருக்கும் கூறுவதாக ஒப்புக்கொண்டார். நிற்க,

சுந்தரராஜு கவுண்டன், சொத்துக்களை எப்படியாவது தந்திரமாகப் பறித்துக்கொண்டு தாமும் கோகிலாம்பாளும்

மதனும் ரதியும்போல, வைபோகமாக வாழவேண்டுமென்றும், அவர்கள் அப்படிச் சுகப்படுவதைக் கமலாம்பாள்கண்டு கரைகடந்த சந்தோஷமடைவதென்றும் முன்னுடியே இவர்கள் பேசித்தீர்மானித்திருக்க, மீண்டும் கோகிலாம்பாளின் மாயவலையில் வெங்கிடுபதி கவுண்டரை மாட்டி ஆட்டிவைக்க தாந்தோணி ஐயங்கார் தலைப்படக் காரணமென்னவென்று வாசகர்கள் ஐயுறலாம். "சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்றபடி தகுந்த காரணமின்றி இத்தகைய காரியங்களிலெல்லாம் நமது தாந்தோணி ஐயங்கார் தலையிட மாட்டார் என்பது திண்ணம். ஐயங்காரின் உளப்பான்மையை நமது வாசகர்கள் முற்றிலும் அறியாவிடினும் நமக்குச் செவ்வனே தெரியுமாகையால் கூறுகிறேம்.

ஒரு மனிதன் இப்பூவுலகிலுள்ள சுகபோகாதிகளாகிய கிடைத்தற்கரிய இன்பங்களை ஒன்று விடாமல் அனுபவிக்க ஆதாரமாயிருப்பது தனமென்றும், அத்தகைய தனமுள்ள ஒருவன் கூடுமானல் தரையில் நடக்காமல் தங்கப்பலகையின் மீதுகூட நடக்கலாமென்றும் கோகிலாவின் தூண்டுதலால் ஐயங்காரின் உள்ளத்தில் கள்ளத்தனமான பேராசை ஒன்று பிறந்தது. ஆதலின் அவர் சுந்தரராஜுவுக்கு மதுபானம் கொடுத்து மயக்கி அவனது தனத்தை முற்றும் கவரயோசித்தார். ஆயினும் அதற்கிணங்க அவனது சொத்துக்களைக் கிரயம் எழுதிக்கொள்ள அவனது ஐம்பது வேலி நிலத்திற்கும் போதிய ஸ்டாம்பு பேபர் வாங்குவதற்கும், சாக்ஷி சப்ரிஜிஸ்திரார்களைத் தம் இஷ்டம்போல் ஆட்டுவதற்கும் அதிகப்படியான தனம் வேண்டியிருந்ததாலும், ஏற்கெ

னவே இவரிடமும் கோகிலாம்பாளிடமும் போதிய தனமின்மையாலும், இக்காரியத்திற்கு வேண்டிய பொருளை எப்படியாவது தந்திரம் செய்து வெங்கிடுபதி கவுண்டரை ஏமாற்றி வாங்கிக் காரியத்தை முடித்துக்கொண்டுபின், கோகிலாம்பாள் வெங்கிடுபதி கவுண்டரை கட்டி காடாலிங்கனம் செய்வதற்கு பதில் தாங்களிருவரும் சேர்ந்து அவரின் நெற்றியில் நாமமிட்டு விடவேண்டுமென்றும், தவிர கோகிலாம்பாளுக்காக வெங்கிடுபதி கவுண்டர் தம்மிடம் கொடுக்கும் 50 ஆயிரம் ரூபாயையும் தாம் அவளுக்குக் கொடாமல் அப்படியே அமுக்கிவிடவேண்டுமென்றும், பிறகு தாமும் தம கருமைக்கண்ணுட்டியாகிய கோகிலாம்பாளும் சுநதரராஜனிடம் கவர்ந்த தனத்தைப் பங்கிட்டுக்கொண்டு மனிதர்களால் எவ்வளவு சுகம் அனுபவிக்கக்கூடுமோ அவ்வளவு சுகத்தையும் அனுபவிக்கவேண்டுமென்றும், கூடுமானல் அவளைத் தம் மடிமீதே சதா உட்காரவைத்துத் தழுவித் தழுவி முத்தமிடவேண்டுமென்றும் தாமும் தம் ஆசைக்கண்ணுட்டியும் தினம் தவராது மாலை நேரங்களில் மகத்தான மோட்டார் வண்டியில் உல்லாசமாகப் பவனி வரவேண்டுமென்றும், ஆகிய இத்தகைய யோசனைகளையே தம் சந்தியான மாத்தியான மந்திரங்களென்றெண்ணி இருவரை ஜபித்துக்கொண்டிருந்தவராதலால் தமது காரியங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காகவே நம் வெங்கிடுபதி கவுண்டரை அடுத்து அவரது அறிவென்னும் காலைப்பற்றி துஷ்கிருத்தியங்களென்னும் சேற்றுக்குட்டையில் இழுத்துத் தள்ளினர் தந்திர ஜாலவித்தையில் கைதேர்ந்த தாந்தோணி ஐயங்கார்.

---

## 7-வது அத்தியாயம்.

# தாசி நேசம் மோசப்படுகுழி.

"தம்பி சுந்தரராஜா! இன்றையதினம் உனது அருமைக்கண்ணாட்டியாகிய கோகிலாவின் பிறந்த தினம், எங்கள் குடும்பத்தில் இவளைத்தவிர வேறு குழந்தைகள் இல்லாமையாலும், இவள் பிறந்தது முதல் இவளை அதிக செல்வமாய் வளர்த்து வந்ததாலும், நான் ஒவ்வொரு வருஷமும் இவள் பிறந்த தினத்தை ஒரு பெருநாளாகிய திருநாளாகக் கொண்டாடி வருகிறேன். தவிர சென்ற வருடத்திய பிறந்த நாளைக்கூட ஒருவாறு சிறப்பாகக் கொண்டாடியதை நீயும் அறிந்திருக்கிறாய். ஆயினும் கோகிலாவின் குணத்திற்கும் தூய்மையான நடத்தைக்கும், பரிசுத்தமான உள்ளத்திற்கும், கலங்காத கற்பிற்கும் தகுந்தவாறு மிக்க எழிலும் உன்னத குணங்களும் வாய்ந்த உத்தமனாகிய நீ அவளுக்கேற்ற ஜோடியாம் இன்பநாயகனாக அமைந்தது பற்றியும், காரிய முடிந்தபின் வீரியம் பேசி வெளிப்பட்டோடும் சில வீணர்களைப் போலன்றித் தாலி கட்டிய புருஷனைக்காட்டிலும் நூறு பங்கதிகமாய் நேசித்து நிலையாய் நிற்கும் உன்னுடைய உறுதியான உள்ளன்பைக் குறித்தும் இவ்வருஷத்திய பிறந்தநாளைக் கடந்த வருஷத்தைவிடச் சற்று விமரிசையாகக் கொண்டாடவேணுமென்று நானும் குழந்தையும் மெத்த ஆசைப்படுகிறோம். ஆயினும்,

நீ எங்கள் குடும்பத்தலைவனுகையால் உன் உத்தரவுப்படி நடக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆதலின் உன் சம்மதத்தைத் தெரிவிக்கவேண்டுமென்றாள் ; கமலாம்பாள்.

மாமி ! உங்கள் இஷ்டத்திற்கிடையூருக நான் ஒரு போதும் நடக்கமாட்டேன். என் அருமைக்காதலியாம் சோகிலாவின் பிறந்தநாள் கொண்டாடுவதென்றால் அதைவிட எனக்கு ஆனந்தமும் இன்பமும் பயக்கும் அரிய திருநாள் வேறென்றில்லை. ஆதலின் இக்கொண்டாட்டத்தைச்சென்ற வருஷத்தைக்காட்டிலும் மிக்க சிறப்பாகவும், விமரிசையாகவும், விசேஷ விருந்துகளுடனும் நடத்த வேணுமென்று நானும் அதிக ஆசைப்படுகிறேன் ; என்றான் சுந்தரராஜ கவுண்டன்.

தம்பி ! இக்காலத்தில் எவன் ஏமாந்திருக்கிறனே அவனிடம் தட்டிப்பறிக்கலாமென்று தலை கிறுகிறுத்துத் திரிகிறார்கள் அநேக தகல்பாஜிகள். ஆதலின் நாம் அளவுக்கு மீறிய வீண் ஆடம்பரம் செய்யவேண்டாம். முக்கியமாக ஒரு சாதம், ஒரு ரசம், ஒரு குழம்பு, ஒரு பச்சடி, சிலசிற்றுண்டிகள், இவைகள் அடங்கிய சிறிய விருந்தே நமக்குப் போதும். விருந்தினர்களாக, இவ்வூரிலுள்ளோர்களனைவரையும் நாம் விருந்திற்கழைக்கவேண்டாம். முக்கியமாய் நம் நேசிகளான பக்கத்தாத்து பாக்கியரத்தினம், கோடியாத்து கோமளம், எதிராத்து லட்சுமி, இவர்களைமட்டும் அழைத்தால் போதுமானதென்று எண்ணுகிறேன் ; என்றாள் கமலாம்பாள்.

சரி; அப்படிச்செய்வது எனக்கு மிகவும் சந்தோஷமே; என்றான் சுந்தரராஜு கவுண்டன். உடனே கமலாம்பாள் சில வேலைக்காரர்களோடு விருந்திற்குத்தகுந்த பதார்த்த பக்ஷணங்களைத் தயார் செய்ய சமையற் கட்டிற்குச் சென்றாள். சுந்தரராஜுவும் கோகிலாம்பாளும் விருந்தினர்கள் உல்லாசமாயிருப்பதற்காகக் கூடத்தில் ஓர் பெரியரவுண்டு மேஜையிட்டு, அதைச்சுற்றிலும் ஐந்தாறு அழகிய நாற்காலிகள் போட்டு, முன்னமே அழகிய படங்களாலும், அற்புதமான சாமான்களாலும், அலங்கரிக்கப்பட்ட கூடத்தை மீண்டும் நன்றாய் அலங்கரித்ததுமன்றி, முக்கிய விருந்தாளிகளுக்கு அழைப்புக்கடிதமும் அனுப்பி அவர்களை அன்புடன் வர வேற்க அவ்விடமே காத்திருந்தனர். மணியும் எட்டடித்தது. விருந்தினர்களாகிய பாக்கியரத்தினமும், கோமளமும் லட்சுமியும் மேன்மையான உடைகளாலும், உன்னதமான பல அணிகளாலும் தங்களை அழகு பெறச் சிங்காரித்துக்கொண்டு அன்னம்போல் அசைந்தசைந்து வந்தார்கள். அவர்கள் நம் கோகிலாவைப்போன்ற இயற்கையழகிகளல்லலாராயினும் செயற்கை அழகினால் மிகவும் சிங்காரரமணீரத்தினங்களாகத் தோன்றினர். அவர்கள் வரவைக்கண்ட நம் கோகிலாவும், சுந்தரராஜுவும் மிக்க குதூஹலத்தோடு வருக வருகவென முகமன் கூறிக்கொண்டே எழுந்து போய் அவர்களின் கரங்களைப்பற்றி மிக்க உபசாரத்தோடும் அன்போடும் அழைத்து வந்து நாற்காலிகளில் அமரச்செய்து, தாங்களும் சேர்ந்தாற்போல இரண்டு ஆசனங்களில் அமர்ந்து பாஷித்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் கமலாம்பாள் கடுகி வந்து கூடத்திலிருந்த கடிகாரத்தைப்

பார்த்து ஓ! மணி ஒன்பது அடித்துப் பத்து நிமிஷமாயி ற்று. குழந்தைகளுக்கெல்லாம் பசி அதிகமாயிருக்கும். இதோ வந்து விட்டேன்; என்று கூறிக்கொண்டே வேக மாய்ச்சென்று தெருக்கதவைத் தாளிட்டுவிட்டு போஜன பதார்த்தங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கொண்டுவந்து யாவருக்கும் மேஜையின்மேல் பரிமாறியதுமன்றி, ஜிலேபி,லட்டு, அல்வா, பிஸ்கோத் முதலிய பக்ஷணங்களையும் மேஜையின் மேல் நிறைத்து பின்னும் இரண்டுபுட்டி நன்னாரி ஷர்ப்பத் தும், அத்துடன் அவர்களின் முன் தீர்மானப்படி தயார் செய்திருந்த இரண்டு புட்டி "ஓயின் சாராயமும்" ஐந் தாறு கண்ணாடிக் கோப்பைகளும் கொண்டுவந்து மேஜை யின்மேல் வைத்து குழந்தைகளே! நீங்கள் மிகவும் பசியோ டிருப்பீர்கள், ஆகையால் நிதானமாகவும் சந்தோஷமாகவும் முன்னே புசியுங்கள், போஜனமானபின்பு சிறிது நேரம் சந்தோஷமாகச் சங்கீதக்கச்சேரியும் சதுர்க்கச்சேரியும் செய்யலாம்; என்று நயமாகவும் கனிவாகவும் கூறினாள் கமலாம்பாள்.

கமலாம்பாளின், உபசார வார்த்தைக்கு உவப்படைந்த விருந்தினர்கள், உடனே பதார்த்தங்களின் மீதும் பக்ஷணங்களின்மீதும் முனிவுகொண்டு, பெருத்த யுத்தம்செய்ய ஆரம்பித்தார்கள். ஆ, சுந்தரராஜ கவுண்டனின் யோகமும் அதிர்ஷ்டமும் யாருக்குத்தான் கிடைக்கும்? இனிய புன்னகை ததும்பிய சிங்கார வதனத்தையும், வாசனைத் தைலங்களிட்டு பக்குவமாய்ச்சீவி இங்கிலீஷ் பேஷன்படிக்கு சொகுசாய் முடியப்பெற்ற கருத்தடர்ந்த கேசங்களையும்,

திரண்டுருண்ட அழகிய புயங்களையும், பாரித்துப்பூரித்து கச்சிற்கடங்காது விம்மியிருக்கும் கனதனங்களையும், ஒடுங்கிய இடையையும், உடைய இளவன்னப்பேடுகளை யொத்த நவயௌவன சிங்கார ரமணீ ரத்தினங்களாகிய நாரீமணிகள் தன்னைச்சூழவிருந்து அன்பரே! இந்த லட்டைப்புசியுங்கள் ஆருயிர்காதலரே! இந்த அல்வாவைப் புசியுங்கள், கன்னியரை மகிழ்விக்குமிளங்காளையரே! இந்த ஜிலேபியைப் புசியுங்கள். என்று அவர்கள் தமது — இன்னமுது கனிபாகு கற்கண்டு முதலியவைகளின் தீஞ்சுவையையும் தோற்கச்செய்யும் இனிமை வாய்ந்த—மழலை மொழிகளால் கல்லுங்கரையப்பேசி உபசாரணை கூறுவதும, அவர்களின் அழகிய கரங்களால் பக்ஷணங்களை எடுத்து மிக்க பரிவோடு பக்குவமாகவும், மென்மையாகவும் கொஞ்சிக்கொஞ்சி ஊட்டும் ஸ்பரிச உணர்ச்சிகளின் பரமானந்தமும், எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதா! இத்தகைய சல்லாப உல்லாச விநோதத்தால் சுந்தரராஜுவின் உள்ளம் பாகாய் நைந்துருகி மிக்க பரவசமடைந்தது. தான் செய்வதின்னதென்பதையே முற்றிலும் மறந்தான். அவனுடைய கைகள் சதா பக்ஷணங்களைச்சலியாமல் எடுத்த வண்ணமும், அவனது வாய் அப்போதைக்கப்போது திறந்து திறந்து மூடிய வண்ணமுமிருந்ததேயன்றி பக்ஷணங்கள் போனவழி வந்தவழியும் பசிபடங்கினவழியும் தெரியவே இல்லை. சுந்தரராஜுவின் இத்தகைய இன்ப மயக்கத்தைக்கண்டு வாசகர்கள் ஒருவேளை நகைக்கலாம். ஆயினும் சுந்தரராஜு தற்சமயமிருக்கும் ஸ்தானத்தில் வேறு எந்த ஆடவரிருப்பினும் அவனைப்போலவோ — அவனினும் அதிகமாகவோ மதிமயங்கி

மல்லாடி இருப்பார்களென்பதில் யாதும் ஐயமின்று. ஆதலின் சுந்தரராஜுலுவைக்குறித்து நாம் குறை கூறுவது சரியன்று. இவ்வித ஆரவாரங்களுடன் போஜனம் முடிந்ததும் அனைவரும் மேஜையின் கீழிருந்த தொட்டிகளில் கையலம்பிக்கொண்டார்கள்.

கோகிலாம்பாள், நாற்காலியினின்றும் எழுந்து மேஜையின்மீதுள்ள ஷர்ப்பத்து புட்டியை எடுத்து அங்குள்ள கண்ணாடிக்கோப்பையில் ஷர்ப்பத்தை வார்த்து அப்பெண்மணிகளுக்கெல்லாமீந்து கடைசியில் சுந்தரராஜுலுவுக்கும் கொடுத்தாள். அனைவரும் அதிக அன்புடனேற்று பருகியபின் ஷர்ப்பத்து மிக்க ருசிகரமாகவும், இன்பமாகவும், இருப்பதாகத் தெரிவித்தார்கள். மீண்டும் கோகிலாம்பாள் மேஜையின்மீதுள்ள ஒயின் சாராய பாட்டலை எடுத்து பானத்தைக் கிளாசில் வார்த்து தன் பிரியகாதலனிடம் நெருங்கி ஆருயிரன்பரே! இதைத்தாம் அன்புடனருந்துக; என்றாள். சுந்தரராஜுலு கோகிலாவை நோக்கி அடி இன்ப வடிவே! நாம் இப்பொழுதுதானே ஷர்ப்பத்தைப் பருகினோம்? மீண்டும் எதற்காக எனக்கு அளிக்கின்றாய்? இன்னும் சிறிது நேரம் தாழ்த்து அனைவரும் அருந்துவோம்; என்றான்.

கோகிலாம்பாள் :— அன்புடனெனக்கின்பமளித்திடும் தலைவா! நாம் முன்னம் பருகியது பண்டைக்கால ஷர்ப்பத்தாகும். இதுவோ தற்காலத்திய நவீன நாகரீக ஷர்ப்பத்தாகும். இதனின் சிறப்பை எவராலும் வருணிக்க

வொண்ணுமகிமைபெற்றது. ஆதலின் இதனை அன்புடன் ஏற்றுப்பருகுக; என்றாள்.

சுந்தரராஜ ன் :—கண்மணி! நீ புகல்வது இன்னதென எனக்கொன்றும் விளங்கிற்றில்லை. ஆதலின் சற்று விவரிப்பாயாக; என்றான்.

கோகிலாம்பாள் :—பிரிய! இந்த ஷர்ப்பத்து பெரும்பாலும் மேனாடுகளிலேயே தயாரிக்கப்பெருகின்றது. இதன் சக்திமிக்க அபாரமானது. இதை அருந்திய மறுநிமிஷமே எத்தகைய அலுப்பையும் களைப்பையும் சோம்பலையும் பற்றற ஒழித்து, உற்சாகத்தையும் குதூஹலத்தையும், பேரின்பத்தையும் ஓங்கிவளரச்செய்யும் உறுதி பெற்றது. மாணிடரின் பலவித துன்பங்களையும், சஞ்சலங்களையும் சடுதியில் அகற்றி மனதிற்கு மிக்க அமைதியையும், ஆனந்தத்தையும், தென்பையும் அளிக்கவல்லது. இளவயதுத் தம்பதிகளின் கலவிப்போரில் இணையற்ற இன்பம் பயப்பது. இதன் உன்னதமான குணங்களாலும் அபாரமான வல்லமையாலும் "ஒயின்" என்னும் சிங்காரப்பெயர் புனைந்தது. இப்போது தங்கட்கு நன்றாய் விளங்கியிருக்குமென நம்புகின்றேன்; என்றாள்.

சுந்தரராஜ ன் :—பிரியே! என் சிறு வயது முதல் இதுவரை யான் மத்யபானம் செய்தவனல்லேன். இது துஷ்கிருத்தியங்களென்னும் வீட்டிற்கு அஸ்திவாரமானதும், சான்றோர்களால் நிஷேதிக்கப் பட்டதும், பாபப்படுகுழிக்குப் பாதையாயிருப்பதும், ரௌரவாதி நரகத்துக்கு இறங்குபடி போன்றதுமாகிய இம்மத்யபானத்தை எனது திரிகரண

சுத்தியாக நீக்கியிருக்கின்றேன். ஆதலின் இதனைப் பருகும்படி வற்புறுத்தல் வேண்டாம். ரமணீ! நினது ஆவலை அலட்சியித்தேனென்று கோபம் கொள்ளற்க; என்முன்.

கோகிலாம்பாள், தன் கையிலுள்ள மத்ய பாத்திரத்தை மேஜையின்மேல் வைத்துவிட்டு சுந்தரராஜுவின் அருகில் சென்று தன் இடக்கரத்தால் அவனது தோளைத் தழுவிக்கொண்டு அழகிய வலக்கரததால் அவனது மோவாயைத்தாங்கி கன்னத்தில் முத்தமிட்டு அன்ப! அனுதினமும் உனைத்தழுவும் ஆசைகொண்டுயிர் பெற்றிருக்கும் அடியாளின் ஆவலை அவலமாக்குதல் நன்றன்று. மத்யபானம் செய்வது மஹா பாதகமென்று இயற்கையிலேயே யான உணராவிடினும், தங்கள் ஸ்நேக விசேஷத்தால் சிறிது உணர்ந்திருக்கின்றேன். அனுதினமும் தவருது அதனைப் பருகுவது பல ஆபத்துக்களுக்கு அடிப்படை யென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆயினும் அவ்வாறு நாம் அனுதினமும் மத்யத்தை அருந்துதல் வேண்டாம். ஏதோ இன்றொரு நாள்மட்டும் எனது இஷ்டத்தைப்பூர்த்திசெய்க. எனது பிறந்த நாள் கொண்டாட்டத்தில் நாம் யாவரும் சிறிது மத்யபானம் செய்து மனம்போல் உல்லாசமாகவும் கேளிக்கையாகவும், மனோஹரமாகவும், ஆடிப்பாடி விளையாடிட வேண்டுமென்பது எனது நெடுநாளைய அவா. ஆதலின், எப்படியும் தாங்கள் பெருமனம் செய்து எனது நெடுநாளைய ஆவல் தாகத்தைத் தணித்திடல் வேண்டும். இன்றேல், எனது பிறந்த நாள் கொண்டாட்டம் ஒருவேளை இறந்தநாள் கொண்டாட்டமாக முடியினும் முடியும். ஆருயிர்

பண்ணாளா! என் ஆவி அகன்று அடியாள் படிமிசைப் பிணமாய்க் கிடப்பதைக்காண உமது உள்ளம் சகிக்குமா? அச்சோ! யான் இறந்தபின் உம்மை அனுதினமும் அணைத்தணைத்து—தழுவித்தழுவி—ஆலிங்கனாதிகள் புரிந்து ஆனந்தசாகரத்தில் ஆழ்த்துவிக்கும் அரிவையர் ஆரிருக்கின்றனர்? அந்தோ! அன்ப! யான் என் செய்வல்; எனமிக துயரத்தோடும், சோகத்தோடும் சுந்தரராஜுலுவின்மீது சாய்ந்து அவன் கன்னத்தில் தனது இளமையும் மென்மையும் தவழும் அழகிய கன்னத்தைப் பொருத்திக்கொண்டு தனது வாள் விழியினின்றும் நீரைப் பெருக்கினாள்.

கோகிலாம்பாளின், பிரலாபிப்பையும், சஞ்சலத்தையும், கண்ட அவள் அந்தரங்கநேசிகளான அங்கனைகள் மூவரும் சுந்தரராஜுலுவை நோக்கி மிக்க எழிலும், இளமையும், வாய்ந்த இங்கிதமே! தமது ஆருயிர்க்காதலியாம் கோகிலாவை இவ்வாறு அவஸ்தைக்குட்படுத்துதலடாது அந்தோ! அவள் இளமையும, செழுமையும், வாய்ந்த சுந்தரவதனம் எவ்வளவு மங்கி ஒளியிழந்திருக்கிறது. தாம் இதுகாறும் அவள் உள்ளத்தைச் சோதித்தது போதும். இனியும் இத்தகைய சோதனைகள் வேண்டாம். மதுபானம் மகாதீங்கிற்குக் காரணம் என்பதுண்மையே. ஆயினும், நாம் அனுதினமும், அருந்தவாபோகிறோம்? இன்றொரு நாள்மட்டும் மத்யத்தைச் சிறிதருந்தி நம் மனையாட்டியின் மனத்தை மகிழச்செய்யும. அவள் ஆறுதலுக்காகவும், சந்தோஷத்திற்காகவும் இதுவரை மதுவையே அருந்தி அறியாத நாங்களும்கூட இன்று மத்யபானம் செய்ய உடன்படுகிறோம்.

ஆதலின் தாங்களும் அவள்பால் சிறிது இரக்கம் காட்டுக; என மிக்க பக்குவமாகவும், நயமாகவும் பகர்ந்தனர். என்ன செய்வான் சுந்தரராஜு? "கல்லோடரிசி மெல்லவும் முடிய வில்லை விழுங்கவும் முடியவில்லை" இதுவரை மதுவருந்தா திருந்த தன் தூய நடக்கையை மாற்ற சுந்தரராஜுவின் மனம் இடம் தரவில்லை. மதுவருந்தாவிடிலோ மங்கையின் சஞ்சலமும், பிரலாபிப்பும் பெருகுமேயன்றி ஒரு சிறிதும் தணியா, இவ்வித நிலைமையில் என்னசெய்வதென்றறியாமல் திகைப்படைந்திருந்தான் சுந்தரராஜு, இத்தருணம் சுந்தர ராஜுவின் கன்னத்தோடு தன்னழகிய கன்னத்தைப் பொருத்தி இருந்த கோகிலாம்பாள் சற்று நிமிர்ந்து தன் இடது கரத்தால் சுந்தரராஜுவின் கழுத்தை வளைத்திழுத்து தன் மார்பில் புடைத்துப் பருத்துக் கடினமிருதுவாகியிருக்கும் தனது அழகிய ஸ்தனங்களுக்கிடையில் அவனது சிரத்தை பக்குவமாகவும் இணக்கமாகவும் அழுத்திக்கொண்டு ஆருயிர்காதலரே! தாம் சிறிது மத்ய மருந்தி எங்களுடன் ஆடிப்பாடி விளையாடி மனமகிழ்ச்சி அடையவேண்டுமென்னும் என் நெடுநாளைய அபீஷ்டத்தை நிறைவேற்றியருளுக. இதனால் தங்களுக்கொருபோதும் கெடுதி நேரிடாதென நான் உறுதியாய்க் கூறுகின்றேன். ஆதலின் அன்பா! தாம் அவசியம் என்வார்த்தையை ஆதரித்தருளுக. துரையே! என்னிஷ்டத்தை நிறைவேற்றுக. தலைவா! நும் ஆருயிர்க் காதலியின், நும் அருமை மனையாட்டியின, நுமக்காவலுண்டானபோது அணைத்தணைத்து இங்கிதமொழிபேசி இன்பத்தைத் தந்திடும் அடியாளின் அபீஷ்டத்தை நிறைவேற்ற தாம் இச்சிறிய காரியத்தைச் செய்வதொரு கஷ்டமாகாது.

எனத்தத்தை மொழிபோலத் தித்திக்கும் மழலை மொழியால் பக்குவமாய்க்கூறினாள் கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளின், கொம்மைசேர் ஸ்தனத்தின் ஒத்திடத்தாலும், அவள் அழகிய ஆகத்தினின்றும்வீசும் ஒருவகை மனோஹரமான இயற்கைப்பரிமளத்தாலும், சுந்தரராஜுவின் உள்ளத்தில் இன்பமும் இங்கிதமுமான மின்சாரம் போன்ற ஒருவகையுணர்ச்சியுண்டாகியது. அவ்வுணர்ச்சி அவன் உடலிற்பரவி உச்சிகசேறியது. அதனால் அவன் சிரம் சுழன்றது. மூளைகலங்கியது. அறிவு மழுங்கியது. ஒருவித மனோரம்மியமான பாவசத்தினால் மெய்மறந்து சித்திரம்போல் அசையாது வாயைத் திறந்து மௌனயோகத்திலிருந்தான் சுந்தரராஜு.

இத்தகைய பக்குவ நிலையை உணர்ந்த கோகிலாம்பாள் சமயத்தை வீணாக்காது மீண்டும் மீண்டும் சுந்தரராஜுவின் சிரத்தைத் தன் பருத்த ஸ்தனங்களின்மீது அழுத்தி அழுத்தி ஆவலையூட்டிய வண்ணம் கண்ணே! நீர்தாம் குழந்தையாம், கற்கண்டே! நான்தான் அம்மாவாம், துரையே! அம்மாபுகட்டும்பாலை நீர் அழாமல் அருந்துவீராம். எனக்குதலைமொழியால் கொஞ்சிக்கொஞ்சி பாஷித்துக்கொண்டே மேஜைமீதிருந்த மத்யபாத்திரத்தை யெடுத்து சுந்தரராஜுவின் ஆவெனத்திறந்தவாயில் மத்யத்தைப்புகட்டினாள்.

ஏற்கனவே ஆனந்தசாகரத்திலமிழ்ந்து மூழ்கியிருந்த சுந்தரராஜுவின் அறிவு மத்திய மருந்துவதைத்தடுக்க வன்மையற்றதாயிருந்தது. ஆகையால் அவை ஒரு சிறிதும்

தடையின்றி உட்சென்றன. கோப்பையிலிருந்த மதுபானம் குடித்து முடிந்ததும் கோகிலாம்பாள் கோமளத்தைப்பார்த்து கண்ஜாடை காட்டவே, அவள் மீண்டும் மற்றொரு கோப்பையில் மதுவை வார்த்துக் கோகிலாம்பாளிடம் நீட்டினாள். கோகிலாம்பாள் தன் கரத்திலிருந்த காலிடம்ளரை மேஜைமீது வைத்துவிட்டு கோமளம் கொடுத்த கோப்பையை வாங்கி அதிலுள்ள மத்தியத்தையும் தன் போலி மணாளனுக்குத் தாராளமாய்ப் புகட்டினாள்;

அந்தோ! இத்தகைய இன்பமும் கனிவும் பொருந்திய பாசாங்கு மொழிகளாலும், பரவசமும், மனோஹரமும் அளித்திடும் ஸ்பரிச உணர்ச்சிகளாலும் ஆளை தாஜாபடுத்தினால் எத்தகைய ஆடவர்தான் ஏமாறாமலிருக்கமுடியும்? ஸ்திரீமாய்கை எவ்விஷயத்தைப்பார்க்கினும் படுமோசமானது. உயிரினைக்கொண்டேகும் எமனினும் கொடிது. அவ்வின்பத்தை எத்தனை காலம் அநுபவித்திருப்பினும் மீண்டும் பலமடங்கு ஆவலை மனத்தில் அதிகரிக்கச்செய்யும் ஆற்றலுடையது. பிரமன் பெண்களைப் படைக்காமல் தானே தரணியிலிருந்து இவ்வுலக ஜீவராசிகளை இயங்கச்செய்யினும் இந்த ஜீவகோடிகள் ஒரு சிறிதும் இயங்காவென்பதை உணர்ந்தே புருஷரூபமாம் இரும்புக்கட்டிகளின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு தம்மிஷ்டப்படி ஆட்டுவிக்கும் காந்தக்கட்டிகளாம் கன்னிகா ரத்னங்களைப் படைத்தனன் போலும்! நிற்க.

தன்னுடைய இஷ்டப்படி அநேக காரியங்கள் பெரும்பாலும் நடந்து விட்டமையாலும், மற்றுமுள்ள சொற்ப

காரியங்களும் அவசியம் நடக்குமென்ற உறுதியாலும், கோகிலாவின் உள்ளத்தில் கள்ளத்தனமான உற்சாகமும குதூஹலமும் ஓங்கி வளர்ந்தன. அவள் மிக்க சந்தோஷத்தோடு மீண்டும் பானத்தைக் கோப்பைகளில் வார்த்து தன் நேசிகளான பாக்கிய ரத்னத்துக்கும் கோமளத்துக்கும் லட்சுமிக்கும் வேண்டியமட்டும் தாராளமாய் விநியோகித்தாள். அப்பெண்களும தங்கள் சோரநாயகரோடு அடிக்கடி மதுவருந்திய அநுபவத்தாலும், பணச்செலவின்றி இலவசமாய்க் கிடைக்கிறதென்ற எண்ணத்தாலும், வேண்டியவளவு மூக்குவரைக்கும் மெட்டினார்கள். ஆனால் கோகிலாம்பாள் மட்டும் தானும் மதுவருந்துவதாக பாசாங்கு செய்து ஷர்ப்பத்தை வார்த்து வார்த்துக்குடித்தாளே ஒழிய உண்மையில் சிறிதும் மதுவருந்தவில்லை. சாராயம் குடித்த சற்று நேரத்துக்கெல்லாம் சுந்தராஜனுக்கு வெறி சிரசுக்சேறியது. மூளை குழப்பியது. அவனது உண்மையறிவு சிறிது சிறிதாக உள்ளத்தினின்றும் வெளிப்பட்டு ஆகாயலோகத்திற்கு அவசரமாய்ப்பறந்து கொண்டிருந்தது. தான் எங்கே இருப்பதென்றும் அறியாது தடுமாறினான். அவ்விடமுள்ள மேஜை நாற்காலிகளெல்லாம் கிறு கிறுவெனச் சுழல்வதாகத் தோன்றின. தான் ஆகாய விமானத்திலேறி அந்தரலோகத்திற்குச் செல்வதுபோலும் அங்குள்ள ஸ்திரீ ரத்தினங்களோடு தான் ஆடிப்பாடி விளையாடுவதாகவும் அவன் மனத்துள் இன்ப நினைவுகள் ஏகமாய் எழுந்தன. உடனே தட்டென்று நாற்காலியை விட்டெழுந்து நின்று கால்களை நீட்டியும் குறுக்கியும் விரித்தும் மெல்ல மெல்ல ஒய்யாரமாக ஆனந்த நடனம் புரிந்தான். அவன் அவ்வாறு

நடித்துக்கொண்டே விருந்தினர்களாகிய அப்பெண்களை நோக்கி அடி கோபிகைகளே! உங்களுடன் கலவிப்போர் செய்யும் கருத்துடன் கண்ணபிரானே வலுவில் வந்தும் நீங்கள் அவரைச் சிறிதும் மதியாமலும் துதியாமலும் அலட்சியிக்கின்றீர்களாதலின் உங்கட்குத் தகுந்த மதி ஊட்டுகின்றேன்; என்று கூறிக்கொண்டே அப்பெண்களருகில் நெருங்கி அவர்களின் சேலைகளைப்பிடித்திழுத்தும் கரங்களைப் பற்றி இழுத்தும் கூந்தலைப்பிடித்திழுத்தும், அவஸ்தைப் படுத்தியதுமன்றி அவர்களை வலிய இழுத்து அழுந்த அணைப்பதும், முகத்தோடு முகம் வைப்பதும், முத்தங்களிடுவதும் அதரங்களை அழுந்தக்கடித்துச் சுவைப்பதும் தானே ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவென்றும் அப்பெண்களே கோபிகாஸ்திரீகளென்றும் மனத்துள் எண்ணி அநேக பாலலீலைகளைச்செய்து பரவசமடைந்தான் சுந்தரராஜு.

அப்பெண்களும் சுந்தரராஜுவின் சாராய வெறிக்குத் தாழ்ந்த வெறியுடையவர்களல்லராதலால் சுந்தரராஜுவின் ஆடையைப்பற்றியிழுப்பதும் அங்கவஸ்திரத்தைப்பற்றியிழுப்பதும் அவனது கழுத்தைக்கரத்தால் வளைத்திழுத்து அவனது சிரத்தைத்தமது பருத்த ஸ்தனங்கள்மேல் அழுந்த அமுக்கி அவன்சுவாசம்விடமுடியாதபடி அல்லற்படுத்துவதும் அனைவரும் ஏககாலத்தில் கரங்களைக் கோர்த்துக்கொண்டு ஆனந்த நர்த்தனம் புரிவதுமாக ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்து அமிழ்ந்து மிதந்தார்கள்.

இவர்களின் ஆட்டபாட்டங்களைக் கண்டு ஆனந்தமுற்ற வண்ணம் சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்தாள்

கோகிலாம்பாள். கிருஷ்ணகோபிகைகளின் ஆட்டம் முடிந்ததும் சுந்தரராஜு அவ்விடமிருந்து திரும்பி கோகிலாவை நோக்கிஅடி ! என் கண்ணே !! கண்ணின் மணியே !! கண்ணுக்குள் நின்றாடும் பாவாய் !!! என்ன காரணத்தால் நீ எங்களுடன் விளையாடவில்லை ? என்று கூறிக்கொண்டே கோகிலாவின் அருகில நெருங்கி அவளைத்தன் நெஞ்சோடு அழுந்த அணைத்து முகத்தில் எண்ணிறந்த முத்தியிட்டு அவளின் இளமையும் மென்மையும் பொருந்திய அழகிய கன்னத்தை மெதுவாய்க் கடித்துச் சுவைக்க ஆரம்பித்து மதுவெறியால் நிதானமின்றி அவள் குய்யோ முறையோவெனக் கூவியழும்படி பலமாய் அழுந்தக்கடித்தான் சுந்தரராஜு.

சுந்தரராஜுவின், கடிவன்மையைச் சகிக்கவாற்றாது கூகூவெனக் கூவியழுதாள் கோகிலாம்பாள். அவளின் பெருத்த கூச்சலைக்கேட்ட சுந்தரராஜுவின் வெறி உடனே சற்று தணிந்தது. தான் மதுவெறியால் தன் பிரிய காதலிக்கிழைத்த இன்னலைக் குறித்துப் பெரிதும் மனமிளகினான். அந்தோ ! எனதாருயிர்க் கண்ணாட்டி ! நின்னை இவ்வவஸ்தைக்குள்ளாக்கியதுபற்றி யான் பெரிதும் வருந்துகிறேன் ; மதுமயக்கத்தால் யான் மதிமோசம் போயினேன். ஆதலின் என் குற்றத்தை க்ஷமித்தருள்க ; என்று தன் கரங்களைக்கூப்பி நமஸ்கரித்ததுமன்றி அவள் பாதத்தினும் கூட வீழ்ந்து வணங்க எண்ணி சற்று குனிந்தான். அவன் தன்னிஷ்டப்படி நடக்குமுன்னமே மதுவின்மயக்கமானது அவளின் பாதங்களில் சாஷ்டாங்கமாக அவனைக்குப்புற விழச்செய்தது. கடியின் உபாதை அதிகமாயிருப்பினும்,

(111-ம் பக்கம் பார்க்க)



கோகிலாம்பாள்—அன்பா! தாங்கள் இதுவரை பாஷித்த வார்த்தைகளால் முற்றும் களைத்துப்போய்விட்டீர்கள். ஆதலின் இம்மத்யத்தை சிறிதருந்தி ஆயாசம் நீங்குக; என்று—குடிப்பாட்டினாள்.

கோகிலாம்பாள் தன்னுலியன்றவரை சமாளித்துக்கொண்டு குனிந்து இருகரங்களாலும் அவனைத்தழுவியெடுத்து துரையே! தாம் துன்பமுறுதல் வேண்டாம். அடியாளைத் தாங்கள் நமஸ்கரித்தலடாது. தலைவா! இச்சம்பவம் அகஸ்மாத்தாக நடந்ததாதலின் அடியாளுக்குக் கோபமில்லை. என்று கூறிக்கொண்டே பக்குவமாய் அவனை அழைத்துப்போய் நாற்காலியிலமரச்செய்து மீண்டும் கோப்பையில் மதுபானத்தை வார்த்து கண்ணே! தாங்கள் இதுவரை பட்ட சிரமத்திற்குப் பரிகாரமாக இதைப் பானம்செய்யுங்கள்; என்று கூறியவண்ணம் குடிக்கச் செய்தாள்.

கூடத்திலிருந்த கடியாரமும் டங் டங் என்று மணி பத்தடித்தது. இத்தருணம் தெருக்கதவை யாரோ தபதபவென்று தட்டிச் சப்தம் செய்தார்கள். இச்சப்தத்தைக் கேட்ட கோகிலாம்பாள் கதவைத்தட்டுவது பெரும்பாலும் ஐயங்காராரரயிருக்குமென்றே அநுமானித்தாள். இன்னும் சில நிமிஷங்களில் தன் இஷ்டப்படி காரியம் முடிந்துவிடுமென்றும், பிறகு தான் ஒரு பெரிய சீமாட்டியாக வாழலாமென்றும் பேராசை கொண்டாள். அதனுல் ஆத்திரமும் படபடப்பும் அதிகரித்து நெஞ்சு பக்பக் என்று அடித்துக்கொண்டது. அவள் சிறிதும் தாமதியாமல் விரைந்து சென்று தெருக்கதவைத்திறந்து வெளியே எட்டிப்பார்க்க ஐயங்கார் வெளியே நின்ருர். கோகிலா மெதுவாக காதலரே! தாம் முந்திக்கூறியபடி சரியாய் பத்துமணிக்கே வந்து விட்டீர்கள்; மெத்த சந்தோஷம். தாங்கள் கூறிய தந்திரப்படிக்கு சர்வமும் ஒழுங்கு செய்துவிட்டேன்.

நம்மை முற்றிலும் நம்பிய மூட்டாள் சுந்தரம் மதுவெறியால் மல்லாடிக்கொண்டிருக்கிறுன்; என்ருள்.

ஐயங்கார், பேஷ்! நம்காரியத்தை ஒழுங்காய் முடிக்க இதுவே ஏற்றசமயம்; என்று கூறிக்கொண்டே ஜப்பான் வர்ணம் தீட்டிய கருப்பு பீப்பாய் கால் முளைத்து நடந்து வருவதுபோல—ஐயங்கார் கோவிந்தா! மாதவா! என்று கூறியவண்ணம் குலுங்கிக்குலுங்கி நடந்து கூடத்திற்குச் சென்ருர். அங்கு ஏற்கனவே "ஓயின்" என்னும் கருப்புக் குதிரையின்மீதாரோகணித்து குஷாலாயிருக்கும் சுந்தரராஜுவின் வெறியேறிய கண்களுக்கு ஐயங்காரைப்பார்க்க ஒருபெரும் யானை நடந்துவருவதுபோல் தோன்றிற்று. அவன் ஐயங்காரரை நோக்கி அடே அப்பா! இந்தயானை இரண்டு காலைமேலே எடுத்துக்கொண்டு இரண்டுகால்களால் நடந்துவருவது பார்க்க வேடிக்கையாய் இருப்பினும் துதிக்கைமட்டும் காணேமே என்று நகைத்தான் சுந்தரராஜு.

ஐயங்கார்:—என்ன சுந்தரராஜு! என்னை இன்னும் அறிந்துகொள்ளவில்லையா? நன்ருய் கவனித்துப்பார். நான் தஞ்சாவூர் தாங்தோணி ஐயங்காரரல்லவா? என்ருர்.

சுந்தரராஜு:—ஓ. ஓ. நீங்களா? நான் யாரோவென்றல்லவா இருந்தேன். அடடா, என்ன சுந்தரம்! என்ன ஒய்யாரம்! அழகு வழிந்தொழுகுதடா. ஆசை துரையே! இத்தகைய ஆணுக்கு ஆண் ஆசைகொள்ளும் அழகு புருடனைக்கண்டால் எத்தகைய பெண்கள்தான் ஏமாருமல் இருக்கமுடியும்! கெட்ட சேட்டுக்கு வட்டம் கால்பணம் என்ற

படி இந்த லட்சணத்துக்கு இவ்வளவு சிங்காரம் செய்து கொள்ளவேண்டுமா? பார்ப்பான் குடுமியைப்பாரடா பஞ் சாய்ப்பறக்குது. இவன் தொந்தி சரிந்த தொப்பை வயிற் றைக்கண்டால் தும்பிக்கை ஆழ்வாரும்கூட பயந்து ஊரை விட்டு தூரஓடிப்போவார் போலிருக்கிறது. என்றுமிக்க ஏளனமாகவும் இழிவாகவும் பேசி கேலி செய்தான் மதுபா னம் செய்த சுந்தரராஜுலு கவுண்டன்.

சுந்தரராஜுலுவின், ஏளனவார்த்தையைக்கேட்ட ஐயங் காருக்கு அதிக கோபமுதித்தது. ஆயினும் யாதும்மொழிய இயலாதவராய் அடே சுந்தரராஜுலு உனது போக்கிரித்த னத்திற்கும் துஷ்டத்தனத்திற்கும் தகுந்தவாறு சீக்கிரம் தண்டித்துவிடுகிறேன் என்று உள்ளத்தில் முனிவுகொண்டு அதை வெளிக்குக் காட்டாமல் புன்சிரிப்புடன்கூடிய மலர் ந்தமுகத்தோடு அப்பா சுந்தரராஜுலு! நீ என் குழந்தைக் குச்சமானம். நீ, யாது கூறினும் அது எனக்கின்பத்தை யளிக்கும் இன்னுரையாகும். என்று சம்பாஷித்துக் கொண்டே சுந்தரராஜுலுவுக்கருகிலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

இத்தருணம் கோகிலாம்பாள் மேஜைக்கருகில் சென்று மீண்டும் மதுபானத்தை ஒரு கோப்பையில் வார்த்து சுந்தர ராஜுலுவிடம் நெருங்கி அன்பா! தாங்கள் இதுவரை பாஷி த்த வார்த்தைகளால் முற்றும் களைத்துப்போய்விட்டீர்கள். ஆதலின் இம்மத்யத்தைச் சிறிதருந்தி ஆயாசம் தணிக; என்று கொஞ்சிக் கொஞ்சிக் கூறியவண்ணம் குடிப்பாட் டினாள். ஏற்கெனவே மதுவெறியால் மயங்கியிருந்த சுந்தர

ராஜு மீண்டும் மத்ய மருந்தியதால் அக்கினியில் நெய் யபிஷேகம் செய்தவாறு அவனது வெறி அநேக மடங்கு அதிகப்பட்டு ஆவேசம் உண்டாக்கியது. சிரம் சாய்ந்தது. நயனங்கள் சுழன்றன. அவன் பார்வையிற் படும் ஒவ்வொரு பொருளும் பலப் பலவாகத் தோன்றின. நாற்காலியிலிருந்த வாறே கைகளை ஆட்டி நடனம் செய்யத் தொடங்கினுன். விருந்தினர்களாகிய அம்மூன்று வனிதைகளும் மதுவெறி யால் நாற்காலியிலிருந்த வண்ணம் தலைசுற்றி பேயாட்டம் ஆடி ஒருவருக்கொருவர் பெரும்போர் விளைத்துக்கொண்டி ருந்தனர். இவர்களின் சாமியாட்டத்தை கவனித்த கோகி லாம்பாள் சுந்தரராஜுவை ஏமாற்ற இதுவே ஏற்ற தருண மென்று யூகித்து ஐயங்காரரை நோக்கி கண்களால் ஜாடை காட்டினுள். கோகிலாவின் குறிப்பறிந்த ஐயங்கார் தமது கஷ்கத்தில் பக்குவமாய் வைக்கப்பட்டுள்ள சிறிய மூட்டை யையெடுத்து மெதுவாய் அதை அவிழ்த்து தாம் முன்னமே சுந்தரராஜுவின் 50 வேலி பூமியையும் கோகிலாவின் பேரு க்குக்கிரயம் எழுதித்தயாராய் வைத்திருந்த தஸ்தாவேஜை எடுத்து கையில் விரித்துப்பிடித்துக்கொண்டு சுந்தரரா ஜுவை நோக்கி குழந்தாய் சுந்தரம்! நீ சில நாட்களுக்கு முன், உன் ஆருயிர்க்காதலி கோகிலாவின்பேருக்கு உனது பூமிகளில் 5 வேலி நிலத்தை கிரயம் எழுதிவைக்கவேண்டு மென்றும், அதை நானே எழுதிக்கொண்டு வரும்படிக்கும் கூறியவாறு, இதோ எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன். நின் பிரேமைக் காதலியின் பிறந்ததினக் கொண்டாட்ட மாகிய இன்று, இந்த தஸ்தாவேஜின்விவாக மஹோற்சவ மாகியரிஜிஸ்டர் வேலையையும் செய்து முடித்துவிட்டால்,

பழம் நழுவிப் பாலில் வீழ்ந்து அங்கிருந்து நழுவி வாயில் விழுந்ததுபோல நின் அருமைக்கண்ணாட்டி ஆனந்த பூரிதையாவாள். சப் ரிஜிஸ்திராரும் சாக்ஷிகளும் கூட சிறிது நேரத்தில் வந்துவிடுவார்கள்; என்றார்.

சுந்தரராஜுவுக்கு, வெறி அதிகமாயிருப்பினும் ஐயங்கார் கூறிய வார்த்தை அவனுக்குச் செவ்வையாய் விளங்கியது. அவன் உடனே கோகிலாவின் பக்கமாய்த்திரும்பி அடி ஆசை நாயகி! இதோ என்னருகில் வருவாய் என அவளை சமீபத்திலழைத்து அவளின் இடையை தன் கரத்தால் வளைத்திழுத்து தன்மார்போடு அணைத்துக்கொண்டு கண்மணீ! இவ்விரண்டு வருஷமாய் நீ எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் எனக்கின்பத்தை யளித்ததல்லால் எல்லாப்பணிவிடைகளையும் யாதொரு குறைவுமின்றி ஏற்றபடி செய்துவந்தாய். ஆதலின், நின் குணத்திற்கும் பொறுமைக்கும், கண்ணியத்திற்கும் பேருவகைகொண்ட நான் உனக்கு என் பூமிகளில் சிலதைக் கொடுக்கிறேன்; நீ மறுக்காது பெற்றுக்கொள்வாய் என்றான்.

சுந்தரராஜுவால், அணைக்கப்பட்ட கோகிலாம்பாள் சிறிது நாணமும் புன்முறுவலும் ஒருங்கே அடைந்தவளாய் சீக்கிரம் தன் காரியம் அநுகூலமாகவேணுமென்ற ஆத்திரமுடையவளாயிருப்பினும் சற்று பிகுவாக ஆருயிர்மணாளரே! தாங்கள் அடியாளின் உள்ளத்தை முன்பே அறிந்திருந்தும் மீண்டும் அடியேனை அருநரகில் வீழ்த்தும் ஆசை வார்த்தையைப்புகல்கின்றீர். பிறருடைய சொத்துக்களை யான் பெற்றுக்கொள்ளலடாது. ஆதலின் தம் எண்ணத்தை

பின்னமாக்கினேனென்று ஆயாச முறல் வேண்டாம். என்று மிக்க அன்பாகவும் பணிவாகவும் முழுப்பொய்யைக்கூறினுள் கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளின், பாசாங்கு வார்த்தையை முற்றிலும் உண்மையென்று நம்பிய சுந்தரராஜு அவளை நோக்கி அடி பெண்பாவாய்! நான் பிரியமாய்க்கொடுக்கும் பரிசை நீ நிரா கரித்தல் ஞாயமன்று. அவசியம் நீ பெற்றுக்கொண்டாலன்றி என் மனம் ஆனந்தமடையாது. மேலும் நீ என்னை ஏமாற் றிப்பொருள் பெற்ருலன்ரு அது என்னை மோசம் செய்த தாகவும் ஏமாற்றியதாகவும் உனக்கபவாதம் ஏற்படுவது மன்றி அருநரகில் வீழ்த்தும் பெரும்பாவமும் உன்னைத் தொடரும். அவ்வாறின்றி, நான் மனப்பூர்வமாய் உனக்களி ப்பதை நீ பெற்றுக்கொள்ளுதல் ஒரு சிறிதும் பிழையா காது. நீ, எனதாருயிர்காதலி யென்பதுண்மையாயின் எனது க்ஷேமத்தையும் களிப்பையும் சதா கோருபவளா யின், என்வார்த்தையை அலட்சியம் செய்யாமல் ஏற்றுக் கொள்க. இன்றேல் இன்றுடன் நமது நேசமும் பாசமும் நீங்கிவிடுமென்பது முற்றிலும் நிச்சயம். என்று கண்டிப்பா கவும் சிறிது கோபமாகவும் கூறினுன் சுந்தரராஜு கவுண்டன்.

ஐயங்கார் :—கோகிலாவை நோக்கி குழந்தாய்! நின் பிரேமைக்காதலனின் பிரியப்படி நடந்து அவனை அகமகிழச் செய்வதே உன்போன்ற கற்பிற் சிறந்த காரிகைகளின் கட மையாகும். மேலும், குழந்தாய் சுந்தரராஜு! நின் அருமை மனைவியின் மனம் மிக்க உத்தமமானது. பர்த்தாவுக்கடங்கி நடக்கும் பான்மை மிகுந்த பதிவிரதா சிரோன்மணி. நின்

இஷ்டப்படி நீ கொடுப்பதை அவள் பெற்றுக்கொள்ளத் தடை செய்யாள். ஆதலின் நீ, சீற்ற முறற்க. என்று அத் தம்பதிகளினது சம்பாஷணையின் இடையில் தாம்புகுந்து கோகிலாவை ஆகாயத்தில் தூக்கிவைத்துப் பேசியதுமன்றி, ஐயங்கார் தம் கையில் வைத்திருந்த தஸ்தாவேஜையும் சுந்தாராஜுவிடம் கொடுத்தார். அவன் அக்கடிதத்தினை வாங்கி மதுவெறியால் தலைப்பக்க மின்னதென்றும் அடிப் பக்கமின்னதென்றும் ஆராய்ந்தறிய வன்மையின்றி அதைத் தலைகீழாகப்பிடித்து வாசிக்கத்தொடங்கினுன். அக்கடிதத்திலுள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அவனுக்குச் செவ்வனே விளங்கிற்றில்லையாயினும் ஆ! எழுத்துக்கள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன. வரிகள் எத்தனை ஒழுங்காய் இருக்கின்றன. ஐயங்காரின் ஒப்பற்றவன்மையே வன்மை. என் அருமைக்காதலிச்கு இப்போது எழுதிக்கொடுத்திருக்கும் ஐந்துவேலி நிலமே போதும். பின்னும் சிறிது நாட்களில் என் கண்மணிக்கு வேண்டியதைக் கொடுப்பேனென்பதிலையமில்லை; என்று கூறியதுமன்றி ஐயரே! நான் கூறியவாறு ஐந்துவேலி நிலத்தைக் கோகிலாவின் பேருக்குத் தாமெழுதியதுபறறி நான் மிக்க ஆனந்தமடைகிறேன்; என்ருன்.

எங்கே தம்முடைய திருட்டுத்தனம் வெளிப்பட்டுப் போகுமோவென்று ஆத்திரமும் படபடப்பும் கொண்டிருந்த ஐயங்காருக்கு ஐம்பது வேலி நிலம் என்று எழுதப் பட்டிருப்பதை சுந்தாராஜு கவனியாது ஐந்து வேலி நிலமென்று கூறுவதைக்கேட்டு மெத்த ஆனந்தம் கொண்டார்.

அடங்கி மெதுவாய் வந்துகொண்டிருந்த அவரது சுவாசம் தாராளமாய் தாவிவரத் தொடங்கியது. தமது காரியம் அநுகூலமாகிவிட்டதென்று கண்களால் கோகிலாவிற்கு ஜாடை காட்டினார். அக்குறிப்பறிந்த கோகிலாவும் பேரானந்தமடைந்து சீக்கிரம் கையொப்பம் வாங்கும்படி ஜாடை காட்டித் தூண்டினாள்.

உடனே ஐயங்கார் கனைத்துக்கொண்டு குழந்தாய் சுந்தரராஜு! இனித்தாமதிப்பது சரியன்று. சீக்கிரம் கையொப்பமிடு. சப்ரிஜிஸ்திராரும் வந்து விடுவார் என்று கூறிக்கொண்டே அவனது கையிலுள்ள பத்திரத்தை வாங்கி அதைச்சரியாய்த்திருப்பி அவன் கையில்கொடுத்து கையொப்பமிடவேண்டிய இடத்தையும் குறிப்பிட்டுக்காட்டினார். அதற்குள் ஐயங்காரரின் நாற்காலி யண்டையிருந்த எழுதுகருவியை எடுத்து அவற்றின் மேல்மூடியைக் கழற்றி பின்பக்கம் சொருகி அதைச்சுந்தரராஜுவின் கையில் கொடுத்தாள் கோகிலாம்பாள்.

பேனாவைப் பெற்றுக்கொண்ட சுந்தரராஜு தன்னிஷ்டப்படி ஐந்துவேலி நிலமே எழுதப்பட்டிருக்குமென்றும் நெடுநாளைய நேசர்களாகிய தன் காதலியும் ஐயங்காரும் தன்னை மோசம் செய்வார்களென்ற எண்ணமின்மையாலும் தாராளமாய் “சுந்தரராஜு கவுண்டர்” என்று கையொப்பமிட்டான். இத்தருணம் தெருக்கதவை யாரோ தடதடவெனத் தட்டும் சப்தம் கேட்டது. உடனே ஐயங்கார் கோகிலாம்பாளை நோக்கி குழந்தாய்! கதவைத்தட்டுவது பெரும்பாலும் சப்ரிஜிஸ்திராராக இருக்கலாம். சீக்கிரம்

சென்று கதவைத்திற என்றார். கோகிலாம்பாள் அதிக ஆத்திரத்தோடும் சந்தோஷத்தோடும் ஒரே குதியாய்க் குதித்து ஓட்டமாய் ஓடிக்கதவைத்திறந்தாள். வெளியே இருந்து நான்கு மனிதர் உள்ளே வந்தார்கள். கோகிலாம்பாள் மீண்டும் முன்போலக் கதவைத் தாளிட்டாள். வந்த மனிதர் நால்வரைப்பற்றியும் சிறிது விவரிப்போம். எல்லாருக்கும் முன்னால் வந்தவர் சுமார் ஐந்தடி உயரமும் சிவந்த நிறமும் உடையவராயிருந்தார். அவர் சலவை செய்த 1703. மல் உள் சட்டையும் அதன்மேல் நன்றாய்ச் சலவை செய்த சில்க் கோட்டும் அணிந்திருந்தார். அவரது தலையிலுள்ள அழகிய தலைப்பாகை அவரது அழகைப் பன்மடங்கு பிரகாசிக்கச் செய்தது. இடுப்பில் காஞ்சீபுரம் பட்டுக்கரை வேஷ்டியை பஞ்சகச்சம் வைத்து உடுத்தியிருந்தார். அவரது காலில் அழகிய பூட்சுகளைப் போட்டுக்கொண்டிருந்தார். இவரை அவ்வூரார் யாவரும் சப்ரிஜிஸ்திரார் சதாசிவ ஐயர் என்று கூப்பிடுவது வழக்கம். இவருடைய குணங்களை விவரிப்பதென்றால் ஒரு அத்தியாயம் பிடிக்கும். இவரது அகராதியில் எவ்வளவு புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் இலஞ்சம் என்ற பதத்தைத் தவிர வேறு பதம் அகப்படுவது மிகவும் தொல்லை. எவ்வளவு ஏழையாயிருப்பினும் விடாமல் நாலணா முதல் அந்தஸ்த்துக்குத் தகுந்தபடி இலஞ்சம் வாங்கியே தீருவதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர். அப்படி இலஞ்சம் கொடுக்க இஷ்டப்படாதவர்களின் பத்திரங்களை இன்று அதிக பத்திரம் வந்து விட்டதென்றும் இன்று ரிஜிஸ்தர் செய்ய இயலாதென்றும் நாளை மறுநாள் வரவேண்டுமென்றும் கூறி பத்திரத்தை வெளியே

எடுத்து வீசி எறிந்து விடுவார். இவருக்குப் பின்னால் வந்த மனிதன் சுமார் ஆறரையடியுயரமும் கருப்பு நிறமும் உள்ளவன். சாதாரண சட்டையும் தலைப்பாகையும் அணிந்திருந்தான். அவன் தோளில் பூணூல்போல மஞ்சளும் கருப்பும் கலந்த ஒரு நாடாவைப் போட்டுக்கொண்டிருந்தான். இடையில் ஒரு சாதாரண காடாவேஷ்டியும் காலில் சாதாரண தோல்ச் செருப்பும் அணிந்திருந்தான். இவனுக்குசப்ரிஜிஸ்திரார் ஆபீஸில் பியூன் வேலை. இவனை இலஞ்சம் வாங்கி நாராயணசாமி முதலி என்று யாவரும் கூப்பிடுவது வழக்கம். இவன் இலஞ்சம் வாங்குவதில் சப்ரிஜிஸ்திரார் சதாசிவையரின் அப்பனைப்பெற்ற பாட்டனாவான், ரிஜிஸ்தருக்கு வரும் ஒவ்வொருவரிடமும் தவறாது அரையணா முதல் அந்தஸ்த்துக்குத் தகுந்தபடி வாங்கியே தீருவான். இல்லையென்று பல்லைக்காட்டிக் கெஞ்சிக் கூத்தாடினாலும் பலவந்தமாக மடியைப்பிடித்திழுத்தாவது அவனுக்குச் சேரவேண்டிய கட்டணத்தை எடுத்துக்கொள்வான். இவன் தயவின்றேல் ஆபீஸின் கேட்டிற்குள்கூட நுழைய யாருக்கும் அநுமதி தரமாட்டான். "பிள்ளையார் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுப்பதில்லை" யென்றபடி சப்ரிஜிஸ்திரார் எடுத்துக்கொள்ளலாமென்று எண்ணிய பத்திரங்களைக்கூட இவன் எடுக்கவேண்டிய ரூல்ஸ்படி பத்திரங்கள் எடுத்தாய்விட்டதென்றும், இனி எவர் பத்திரங்களையும் வாங்க முடியாதென்றும், கண்டிப்பாய்க் கூறி அட்டகாசம் செய்வான். இவன் தன் வலதுகையில் சில நோட்டுப்புஸ்தகங்களையும், இடதுகையில் Thumb-impression விரல்ரேகை எடுக்கும் மையுள்ள பெட்டியையும் வைத்திருந்தான். இவ

னுக்குப் பின்னால் வந்த மற்ற இருவரும் சுமார் ஐந்தரையடி உயரமும் நல்ல சிவப்பு நிறமும் உடையவர்கள். இடுப்பில் பொத்தல்கள் நிறைந்ததும் சாவியேறியதுமான பழைய வேஷ்டிகளை மூலைக்கச்சம் போட்டுடுத்தி மேலே பழைய துண்டுகளைப் போட்டுக்கொண்டிருந்தார்கள். சிரசில் ஐந்தாறு ரோமங்களைவிட்டு மற்ற பாகங்கள் முழுதும் மழுங்க மொட்டையிடப்பட்டிருந்தன. இவர்களில் ஒருவனை மோசக்கார மொண்டிராயரென்றும் மற்றொருவரை காசுபறிக்கும் கஜபதிராயர் என்றும் கூறுவார்கள். இவர்களுக்கு ஊரில் ஒருவேலையும் கிடையாது பொய்பத்திரமெழுதுமிடங்களிலும் சீட்டாடுமிடங்களிலும் தாசி வீட்டுக்குச் செல்லும் தம்பிரான்கள் இருக்குமிடத்திலும் தயாராயிருந்து அவர்களிடம் சமயத்திற்குத் தகுந்தவாறு காசுபறிப்பதே இவர்கள் வேலை. காலணா கிடைப்பதாயிருந்தாலும் பொடிமட்டைக்காகுமென்றெண்ணி பொய்ச்சாக்ஷி சொல்லப் பின் வாங்கமாட்டார்கள். இத்தகைய குணங்கள் உள்ள உத்தமர்கள் நால்வரும் ஒரே ஊரிலிருக்கும் பொழுது அவ்வூரின் யோக க்ஷேமத்தைக் குறித்துக் கேட்கவேண்டுமோ!

இந்த நால்வரும் கூடத்திற்கு வந்ததும் ஐயங்கார் அவர்களை மிகுதியும் உபசரித்து சப்ரிஜிஸ்திராரையும் சாக்ஷிகளாக வந்த மொண்டி ராயரையும் கஜபதிராயரையும் நாற்காலிகளில் அமரும்படி கேட்டுக்கொண்டார். சுந்தரராஜனும் வந்தவர்கள் இன்னாரின்னாரென்று ஐயங்காரால் அறிந்துகொண்டு அவர்களை உட்காருப்படி கூறினான். அவர்கள் அவ்வாறே உட்கார்ந்தபின் லஞ்சம் வாங்கி நாராயணசாமிமுதலி

சப்ரிஜிஸ்திரார் நாற்காலிக்குப் பின்புறமாக நின்றுகொண்டிருந்தான். இவர்களின் வரவை நெடுநேரமாய் எதிர்பார்த்திருந்த கோகிலாம்பாள் ஓர் அறைக்குள் ஓட்டமாயோடி ஒரு வெள்ளித்தட்டில் நல்ல வெற்றிலே, வாசனைப்பாக்கு, ஏலம், கிராம்பு, கலர்சுண்ணும்பு, கலர் தேங்காய்சீவல், முதலியவைகளை எடுத்துவந்து சதாசிவையரின் முன்னுவிருந்த மேஜைமீது வைத்து தான் மிகவும் நாணிக்கோணி அவருக்கு இடப்புறத்தில் சிறிது தூரமாக நின்று மிக்க கற்புடையாள் போலும் தன் பாதத்தின் கட்டைவிரலைப் பார்த்த வண்ணம் தனது கச்சணிந்த பருத்த வலது புறத்து அழகிய ஸ்தனத்தின் பெரும்பாகமும் சப்ரிஜிஸ்திராருக்கு நன்ருய்த் தோன்றும்படி திறந்து விட்டுக்கொண்டு ஒன்றுமறியா உத்தமி போல நின்றிருந்தாள். சப்ரிஜிஸ்திரார் உள்ளே வரும்போதே கோகிலாவைக்கண்டு அவளழகில் ஈடுபட்டிருந்ததால் மீண்டும் அவளைக்காண வேண்டுமென்னும் அவா அவருக்கு அதிக மெழுந்தது. தாம்பூலம் தரிக்கவும் மனம் செல்லாமல் மெதுவாகத் தமது கண்களை அவள் பக்கமாய்ச் சற்று மெல்லத்திருப்பி அவளை உற்று நோக்கிஞர். அவளது அந்தமிகு ஆகிருதியுள்ள அழகிய ஸ்தனம் அவரின் கண்களுக்குப் புலப்பட்டது. உடனே அத்தோற்றத்தின் மகிமையால் சதாசிவையரின் வாயில் உமிழ்நீர் ஊற்றுப்போல் சுரந்தது. கிடைத்தற் கரிதாகிய அந்தச் சர்க்கரைக் கட்டியைக் கண்டு வாயைச் சப்பினர். சுந்தரராஜுவின் பூமிகள் முழுதும் கோகிலாவின் பேருக்குக் கிரயம் எழுதிய தஸ்தாவேஜை சுந்தரத்திற்கு உண்மைத் தகவலின்றி தாம் ரிஜிஸ்தர் செய்து கொடுப்பதற்குப் பிர

திப் பிரயோஜனமாகவும் ரிஜிஸ்தரேஷன் கட்டணத்துக்காக வும் தமக்கு (5000) ரூபாய் கொடுக்கவேண்டுமென்று ஒப்ப ந்தம் செய்துகொண்டதைவிட, அவளைத் தாம் அழுந்தக் கழுவி அவளது மென்மையும் இளமையும் பொருந்திய அழகிய கன்னத்தில் மெதுவாக முத்தியிட அவள் சம்மதிக் கும்படி ஏற்பாடு செய்திருப்பின் அதுவே தகுந்த பிரதி பிரயோஜனமாக இருக்குமென்றும் உன்னினர். ஆயினும், தாம் செய்யும் இந்தப் பெருத்த உபகாரத்தை அவள் ஒரு போதும் மறக்கமாட்டாளென்றும், சில நாள் சென்ற பின்பு சாவகாசப்பட்டபோது அங்குவந்து தாம் செய்ப அரியவுப காரத்தை அவளுக்கெடுத்துக்காட்டி அதற்குப் பிரதியாகத் தம்மை கட்டி ஆலிங்கனம் செய்யவேண்டுமென்றும் கேட் டுக்கொண்டால் அவள் மறுக்காமல் அப்படியே தம்மை அணைத்தணைத்து—தழுவித்தழுவி—அழுந்தப் புல்லுவாளெ ன்றும், அவர் உள்ளத்தில் ஆகாயக் கோட்டை கட்டினர். அதனால் அவர் மனம் மிக்க பரவசமடைந்தது. உள்ளம் நெகிழ்ந்தது. தாம் செய்வதென்னவென்பதையும், தாம் எவ்விடத்திலிருக்கிறரென்பதையும் அறியாராய் அம்மட மயிலின் தோற்றமாகிய மாற்றத்தில் மயங்கியிருந்தார். அத் தருணம் ஐயங்கார் தம்மிருக்கையை விட்டெழுந்து சுந்தர ராஜுவின் கரத்திலுள்ள பத்திரத்தை வாங்கி வந்து சதா சிவையரிடம் கொடுத்து சுவாமிகளே! சுந்தரராஜு கோகி லாம்பாளுக் கெழுதிக்கொடுத்த இக் கிரயப் பத்திரத்தை தாங்கள் ரிஜிஸ்தர் செய்தருளல் வேண்டும்; என்று பல்லைக் காட்டிக் கெஞ்சிக் கூத்தாடினர். அவர் வார்த்தையைக் கேட்ட சதாசிவையர் மயக்கத்தினின்றும் உறங்கிவிழித்த

வர்போல் உணர்வு பெற்று ஓ! எஸ்-தங்களிஷ்டப்படியே சீக்கிரம் செய்து விடலாம்; என்று கூறிக்கொண்டே பத்திரத்தை வாங்கி வாசித்துப் பார்க்க ஆரம்பித்து கடிதத்தின் இடப்புறத்திருந்து வலப்புறத்திற்கும் வலப்புறத்திருந்து இடப்புறத்திற்கும் தலையை இப்படியும் அப்படியும் அசைத்துக்கொண்டிருந்தாரே ஒழிய உண்மையில் சுய அறிவுடன் ஒருவரியைக்கூட வாசித்துணரவில்லை. முக்கியமாக தேதி, கிரயத்தொகை, பெற்றுக்கொள்ளுபவர் பெயர், கொடுப்பவர் பெயர், காலை நெம்பர், முதலியவைகளின் கீழ் அண்டர் லைன் செய்வது வழக்கமாயிருக்க அவர் அதைவிட்டு அவள் பேரிலிருக்கும் நினைவினால் கோகிலாம்பாள் என்று பெயரிருக்குமிடங்களில் மட்டும் அண்டர்லைன் செய்தார். அவர் எண்ணம் முழுதும் அவ்வன்னநடை மின்னாளின் மீதே சென்றிருந்தது. அவர் அவ்வாறு வாசித்து முடிந்ததும் சுந்தரராஜுவை விளித்து சுந்தரராஜுக்கவுண்டரே! தாங்கள் கோகிலாம்பாளுக்கு தங்கள் பூமிகளிற் சிலதைக் கிரயம் செய்திருக்கின்றீரா வென்று கேட்டார். சுந்தரராஜுவும் ஐயர் கூறியதை இன்னதென்றறியாது மதுவெறியால் ஆம் என்று ஒரு வார்த்தை மட்டும் சொன்னான். சதாசிவையர் உடனே கோகிலாவின் பக்கமாகத் திரும்பி புன் சிரிப்புடன் கூடிய மலர்ந்த முகத்தோடும் அவளை இன்புற நோக்கி பெண்ணே! சுந்தரராஜுக கவுண்டர் கிரயத்துக்குக் கொடுத்ததாகச் சொல்லும் பூமிகளை நீ கிரயத்துக்குப் பெற்றுக் கொண்டதுண்டா? என்று கேட்டார். அதற்கவள், ஆம் நான் அவர் பூமிகளைக் கிரயத்துக்குப் பெற்றுக்கொண்டேன்; என்று வீணையின் இன்னிசையைப்போல மிக்க

மதுரமாகவும் இனிமையாகவும் பாஷித்தாள். அம்மொழிகள் சப்ரிஜிஸ்திராரை மிக்க ஆனந்தப் படுத்தியது.

உடனே சப்ரிஜிஸ்திரார் அவர்களின் முன் ஏற்பாட்டின்படி வேறு கேள்வியொன்றும் கேட்காமல் சுந்தரராஜுலுவை அருகில் வரும்படி கூறினர். உடனே சுந்தரராஜுலு எழுந்து ஐயங்காரின் சகாயத்தால் அருகே வந்து சதாசிவையரின் மேஜைக்கருகிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தான். அக்குறிப்பையறிந்த லஞ்சம் வாங்கி நாராயணசாமி முதலி விரற் குறியிடுவதற்காக மைப்பெட்டியைத் திறந்து மேஜைமீது வைத்தான். ஆச்சுது இன்னும் இரண்டொரு நிமிஷத்தில் சுந்தரராஜுலுவை பக்கிரியாக்கி கையில் கப்பறை கொடுத்து தபசு செய்யக் காட்டுக்கு அனுப்பப் போகிறார்கள். பிறகு சுந்தரராஜுலுவின் கதி என்னவாகு மென்பதை நாம்கூறவேண்டியதில்லை. என்னே வஞ்சத்தின் வன்மை. நிற்க. சதாசிவையர் நாராயணசாமியைப் பார்த்து அடே சீக்கிரம் ஆகட்டும் ஏன் தாமதிக்கிறாய்? என்றார். உடனே நாராயணசாமி முதலி சுந்தரராஜுலுவினது இடக்காத்தின் பெருவிரலைப் பிடித்து மெதுவாக இங்கிப்பிளேட்டில் அமுக்கி அதை அப்படியே எடுத்துப் பத்திரத்திலும் அநேக விரற் குறிகளிடப்பட்ட ஒரு புஸ்தகத்திலும் அழுத்தி பத்திரத்தின் விவாக மகோற்சவத்தை முற்றிலும் சம்பூரணமாய் முடித்துவிட்டான். சாக்ஷிகளாக வந்த மொண்டிராயரும், கஜபதிராயரும் கைக்கூலி (லஞ்சம்) பெற்றவர்களாகையால் யாதொரு கலகமின்றி சாக்ஷிக் கையொப்பமிட்டனர். ஆச்சுது சுந்தரராஜுலுவின்பாடு அடியோடு தீர்ந்தது.

இல்லறத் தொல்லைகளாகிய சர்வத்தையும் துறந்து உத்தம சன்யாசத்திற்குத் செல்லும் பாதையிலிருக்கிறான். ஆனால் அவனது மனோபீஷ்டம் மட்டும் அப்பாதையிற் செல்லும் நோக்கத்துடனில்லை என்றுநாம் கூறவேண்டியதில்லை. நிற்க. சிறிது நேரத்திற்குப்பின் சுந்தரராஜனுவை தவிர ஆடவர்சகலரும் தங்கள் தங்கள் இல்லங்களுக்குச் சென்றனர்.

ஓ! சகோதர சகோதரிகளே! நீங்கள் இவ்விடத்தில் அவசியம் அறிந்துகொள்ள வேண்டிய சில நீதிகளிருக்கின்றன. எத்தகைய தஸ்தாவேஜுகளையும் ஏன் சாதாரண கடிதங்களையும் கூட முதலிருந்து கடைசிவரை நன்றாய் வாசித்து அவற்றிலுள்ள விஷயங்களை மனதில் வாங்கிக் கொள்ளாமல்—தெரிந்துகொள்ளாமல்—அவசரப்பட்டு—தாஜா வில்மயங்கி எக்காரணத்தை முன்னிட்டும் நீங்கள் சாக்ஷியாகக் கூடக் கையொப்பமிடவேண்டாம். முன் பின் யோசியாமல் கையொப்பமிட்டுக் கெட்டவர்கள் அனந்தம் கோடி நீங்கள் உங்களுடைய பூமிகளின் காலை நெம்பர்களையும்கூட அவசியம் அறிந்து அவற்றை மறக்காமல் மனதில் வைத்திருப்பது சாலவும் நன்று. ஒருவருடைய பூமிகளை பிறரொருவருக்குக் கிரயம் எழுதும் போது—கைப்பிசகாகவோ—வேண்டுமென்றே மோசம் செய்யவோ—அதில் உங்கள் பூமிகளையும் சேர்த்து எழுதப்பட்டு அதில் நீங்களும் கையொப்பமிடும்படி நேர்ந்து போனால் அக்காரியம் கடைசியில் எவ்வளவு ஆபத்தில்—கஷ்டத்தில்—துயரத்தில் கொண்டு போய் விடுமென்பதை ஆழ்ந்து கவனியுங்கள். இன்னும் சிலர் தம்பி மகாயோக்கியன். மிகுந்த கருணையும் இரக்கமும்

உள்ளவன். பரோபகாரி. கொடையில் கர்னன், எத்தகைய பணக்காரர்களும் நமது தம்பியின் பாத தூளிக்கிணையாக மாட்டார்கள்; என்று ஆளை ஆகாயத்தில் தூக்கிவைத்து தாஜாப்படுத்தி பாங்குகளில் ஜாமீன் கையொப்பமிடும்படி செய்து சந்தியில் நிறுத்தி விடுவார்கள். இப்படி எத்தனையோ பேயர்கள் தட்டுக்கெட்டு ஜாமீன் கையெழுத்திட்டுத் தலையில் கையைவைத்துக்கொண்டழுதிருக்கிறார்கள். பின்னும் சிலர் மதுபானத்தை நிறைய வாங்கிக்கொடுத்து நம் சுந்தரராஜனை ஏமாற்றியது போல மயக்கி கையொப்பம் வாங்கிவிடுவர். இப்படி எத்தனையோ விதங்களில் ஏமாற்றி கையொப்பம் வாங்கமுடியுமாதலின் நீங்கள் ஒருபோதும் யோசியாமல் கையெழுத்திட்டுப்பின் கண் கலங்கவேண்டாம்.

## 8-வது அத்தியாயம்.

# கொடுப்பதையும் கொடுத்து குருட்டுத்தாசி சகவாசம்.

முன் அத்தியாயத்திற் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த மூன்று நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் முற்பகல் சுமார் 9 மணிக்கு கமலாம்பாளும் கோகிலாம்பாளுமா அவர்கள் வீட்டுக்கூடத்தில் உட்கார்ந்து இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களைக் குறித்து யோசித்துக்கொண்டிருந்தார்கள்.

கமலாம்பாள் :—குழந்தாய் கோகிலம்! சுந்தரத்திடம் பத்திரமென்னவோ எழுதி வாங்கிவிட்டோம். ஆயினும் நம் காரியம் இத்துடன் பூரணமாய் அனுகூலமாகிவிட்ட தென்று கூறுதற்கு இடமில்லை; என்றாள்.

கோகிலாம்பாள் :—அதென்ன அவ்வாறு கூறுகிறாய்? பத்திரமெழுதியதுமன்றி ரிஜிஸ்தர் வேலையும் கூட முடிந்து விட்டதே; இன்னும்கூட உனக்கு சந்தேகமா? நீ ஒரு பெரிய சந்தேகப் பேர்வழியாயிருக்கிறாய்; என்றாள்.

கமலாம்பாள் :—போடி விளையாட்டுப் பிள்ளை. உண்மை யில் நீ மெத்த புத்திசாலியாயினும் உலகானுபவம் மட்டும் உனக்குப் போதாது. பத்திரம் எழுதிக்கொண்டதற்கிண ங்க அதில் கண்ட பூமிகள் முழுவதையும் நம் சுவாதீனம் செய்துகொண்டாலன்றி நமக்கு ஒருபோதும் கிரய பாத்தி யம் செல்லமாட்டாதென்று யாவரும் சொல்லுகிறார்களே; என்றாள்.

கோகிலாம்பாள் :—ஏன் பூமிகளை சுவாதீனம் செய்து கொள்வதில் ஒரு கஷ்டமும் இல்லையே? சுந்தரத்திடம் குத் தகைச் சாகுபடிக்கு ஒப்புக்கொண்டு சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களை அழைத்து இவ்வருஷத்தில் சுந்தரத்தி ற்கு அவர்கள் செலுத்தவேண்டிய குத்தகைத் தாணி''யத்தை அவனுக்குச் செலுத்தக்கூடாதென்றும், அவன் பூமி முழு மையும் நாமே கிரயத்துக்குப் பெற்றிருப்பதால் நமக்கே குத்தகை செலுத்தவேண்டுமென்றும் கூறுவதுமன்றி அடு த்த வருஷத்திய சாகுபடிச் சீட்டை அவர்கள் நம்மிடமே பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் கூறி அவ்விதமே ஏற்

பாடும் செய்துவிட்டால் தீர்ந்தது; இதுவும்கூட ஒரு கஷ்டமா? என்றாள்.

கமலாம்பாள் :—ஆம். நீ கூறியபடி தான் நாம் செய்ய வேண்டும். ஆயினும் நாம் குத்தகைக்காரரிடம் அவ்வாறு கூறினால், இந்தச் சமாச்சாரம் உடனே சுந்தரத்துக்கு கிடைத்து, நம்மால் தான் முற்றிலும் ஏமாற்றப்பட்டிருப்பதை தெரிந்துகொண்டு சாகுபடிக் காரர்களிடம் நாம் அவனை ஏமாற்றி மோசம் செய்துவிட்டிருப்பதாகவும், ஆதலால் பூமிகளை நம் ஸ்வாதீனத்தில் விடக்கூடாதென்றும், குத்தகை தானியங்களையும் கூட தன்னிடத்திலேயே கட்ட வேண்டுமென்றும், தகரார் செய்து கலகமுண்டாக்குவதுமன்றி நமக்குங்கூட கெடுதிசெய்ய எத்தனிப்பான். ஆதலால் அப்படிப்பட்ட சமயத்தில் நமக்கனுகூலமாகவிருந்து சுந்தரராஜுவிடம் எதிர்த்து நின்று யுத்தம்புரிய ஓர் ஆசாமி நமக்கவசியம் வேண்டியிருக்கிறது; என்றாள்.

கோகிலாம்பாள் :—ஐயங்காரர் சதா நம்மருகிலிருக்கும்போது நாம் வேறு ஆசாமியை ஏன் தேடவேண்டும்? என்றாள்.

கமலாம்பாள்:—சரி. சரி. ஐயங்காரரால் இக்காரியத்தை அநுகூலப்படுத்திக்கொள்ள முயற்சிப்பது, மண் குதிரையைக்கொண்டு ஆற்றைக்கடந்து அக்கரைசேர முயற்சிப்பதை யொக்கும். தந்திரம் செய்யவும், பிறரை ஏமாற்றவும் வஞ்சிக்கவும், அதிரசம் 50 ஜோடியாயினும் ஒரே அமுக்காய் அமுக்கவும், ஐயங்காரருக்குத் தெரியுமேயன்றி இத்

…கைய காரியங்களில் தலையிட்டு வாய் வார்த்தைகளாலோ—கத்தி, தடி, முதலிய ஆயுதங்களாலோ—எதிர்த்து நிற்க—ஆட்களைக்கொண்டு எதிர்க்கும்படி செய்ய—ஐயங்காரரால் இயலாது. பணத்திலும் போக்கிரித்தனத்திலும் மிகுந்த ஓர் ஆசாமியே இதற்கு ஏற்றவன். ஆதலின் அத்தகைய மனிதனை நாம் தேடிப்பிடிக்கவேண்டும்; என்றாள்.

கோகிலாம்பாள், இவ்வளவு காரியங்களையும் நமக்கு அநுகூலப்படுத்திய கடவுள் இனியும் நம்மை.................. என்று கூறி மீண்டும் தன் வார்த்தையை கூறி முடிப்பதற்குள் யாரோ தெருக்கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. உடனே அவர்கள் சம்பாஷணை அத்துடன் முற்றுப்புள்ளி பெற்றது. கமலாம்பாள் விரைந்து சென்று தெருக்கதவைத் திறந்து வெளியே எட்டிப்பார்த்தாள். அங்கே சுமார் 6 அடி உயரமும் நல்ல சிவந்த நிறமும் உள்ள ஒருவர் நின்றிருந்தார். அவர் தேகம் நன்றாய் தடித்துத் தசைப்பற்றுள்ளதாக விருந்தது. அவரது இரு செவிகளிலும் உயர்ந்த சீமைக்கமலங்கள் இழைத்த அழகிய கடுக்கன்கள் சுடர்விட்டுப்பிரகாசித்தன. பத்துவிரல்களிலும் உயர்ந்த கற்களிழைத்த அழகிய மோதிரங்கள் மின்னின. நாகரீகமானதும் மிக்க விலையுயர்ந்ததுமான அழகிய ஆடைகளை உடுத்திருந்தார். அவரது தோற்றத்தைக் கண்ட யாவரும் அவரை ஓர் பெருத்த பிரபுவென்றெண்ணச் சிறிதும் தடையில்லை. அம் மனிதரைக் கண்டதும் கமலாம்பாள் ஒரு கொழுத்த கடா தங்கள் மாயவலையில் மாட்டிக்கொள்ளத் தானே வந்திருக்கிறதென்று உள்ளூற மகிழ்ந்து தனது முப்பத்திரண்டு பற்

களில் ஏறக்குறைய இருபத்தெட்டுப் பற்கள் வெளியே தோன்றும்படி பல்லையிளித்து ஆ! தாங்களா? வாருங்கள். வாருங்கள். தங்களின் வருகைக்காக நாங்கள் நெடுநாளாய் சாதகிருக்கிறோம். இன்றுதான் தெய்வம் கூட்டிவைத்தது. என்று நெடுநாளாய் அவரை அறிந்தவள் போலப் பசப்பி, மிக்க பணிவாகவும் கனிவாகவும் உள்ளே வரும்படி கூறினாள். அவள் பல்லையிளித்துக் கூறும் பாசாங்கு மொழிக்ககமகிழ்ந்த அம்மனிதர் உள்ளே வந்ததும், கமலாம்பாள் முன்போலக் கதவை மூடித்தாளிட்டுவிட்டு, அவரை அதிக உபசாரத்தோடு அழைத்துக்கொண்டு கூடத்திற்குச்சென்று அங்குள்ள ஒரு நாற்காலியைத் தன் முன்தானையால் தூசி தட்டி, அதில் அமரும்படி கேட்டுக்கொண்டாள். அந்த நூதன மனிதரின் வரவைக்கண்ட கூடத்திலுட்கார்ந்திருந்த கோகிலாம்பாள் தனது உடைகளை வாரிச்சுருட்டிக்கொண்டெழுந்து மிகுந்த கற்புடையாள் போலும் நாணமுடையாள் போலும் நாணிக் கோணி நடித்துச் சிறிது தூரம் சென்று அருகிருந்த தூண் மறைவில் நின்றாள். அந்த மனிதர் நாற்காலியில் அமர்ந்ததும் கோகிலாம்பாளை நோக்கி கோகிலம்! என்னைக்கண்டு ஏன் இவ்வளவு அச்சமடைகிறாய்? நானென்ன பேயா பிசாசா எடுத்துவிழுங்கி விடுவேனென்று அச்சமடைய? நானும் உன்னைப்போல ஒரு மனித உருவம் தானே? என்றார். அவரின் வார்த்தையைக் கேட்ட கமலாம்பாள், மிக்க பெருந்தன்மையும் கண்ணியமும் உடைய பிரபுவே! ஏதுமறியாப்பேதையான என் குழந்தை கோகிலம் இதுவரை எத்தகைய ஆடவர் முன்னின்றும் பாஷித்தவளன்று. ஆகவின் இவ்வளவு அச்சமும் நாணமும் அடை

கிருளேயன்றி தங்களை அலட்சியித்து அவ்வாறு நடப்பதாசுத் தாங்கள் ஆயாசமுறுதல் கூடாது. என்று முதலெடுத்ததே ஒரு பெரும் பொய்யைக் கூறினுள்.

அம்மனிதர் :—ஓ. இல்லை. இல்லை. கோகிலாவின் குணங்களேயும் உன்னதமான நடக்கைகளேயும் நான் முன்னமே அறிந்திருக்கிறேன். ஆயினும், இதுவரை உங்களுக்கு எவ்வளவோ உபகாரங்களேச் செய்தும், இனிச் செய்யவும் எண்ணியிருச்கும் என்னேயும் கூட ஒரு அன்னிய மனிதனுகப் பாவித்தது பற்றி என் மனம் பாதிக்கிறது. இந்நகரத்திலிருந்த போக்கிரியும் என்னிடம் எப்போதும் பகைமை பாராட்டும் தன்மையுடையவனுமாகிய சுந்தரமென்பவன் அடிக்கடி உங்கள் வீட்டுக்குவந்து இந்நகரத்திலுள்ள பல பிரபுக்களேக்காட்டிலும் தானே மேலானவனென்றும் மற்ற பிரபுக்கள் தனது பாததூளிக்கிணையாக மாட்டார்களென்றும் ஆதலின் கோகிலா தன்னே ஆசை நாயகனுக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அதற்காக அவன் தன் பூமிகளே முழுவதும்கூட கோகிலாவுக்கு எழுதிக் கொடுத்துவிடுவதாகவும் கூறி அடிக்கடி கோகிலாவை கெஞ்சிக் கேட்பதாகவும், அதற்கு கோகிலா ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டேனென்று கூறுவதாகவும், இருந்தாலும் எப்படியாவது கோகிலாவை தன் இஷ்டநாயகியாக்கிக்கொண்டு இந்நகரத்துப் பிரபுக்களே இவ்வீட்டுவழி வர வொட்டாமல் துரத்தித் துரத்தியடிப்பதாக சபதம் கூறியதுமன்றி என்னேயும் பலவிதம் திட்டியதாகவும் நான் ஐயங்காரரால் கேள்விப்பட்டு மிகுந்த கோபம் கொண்டு அவனே நன்றுய்த் தண்டிக்கத் தகுந்த சூட்சிமைக்

கூறும்படி கேட்டதுமன்றி கோகிலாவையும் என் இஷ்ட நாயகியாக்க வேண்டுமென்றும் ஐயங்காரரைக் கேட்டுக்கொண்டேன். அதற்கவர் சுந்தரம் தன் சொத்து முழுமையும் கோகிலாவின் பேருக்கு எழுதிக்கொடுப்பதாயிருந்தால் கோகிலா தான் அவனுக்கு ஆசை நாயகியாயிருப்பதாக சுந்தரத்துக்குக் கூறி ஆசை காட்டி நடிக்கவேண்டுமென்றும் அவ்வாறு கூறும் கோகிலாவின் நடிப்பில் மயங்கிய சுந்தரராஜ‌ன் அவ்விதமே தன் சொத்துக்களை கோகிலாவுக்கு எழுதிக்கொடுத்தால் பிறகு சில நாட்களில் கோகிலம் அவனை வீட்டை விட்டு அடியோடு துரத்திவிடவேண்டுமென்றும், அவ்வாறு அவன் கோகிலாவின் நடிப்பில் மயங்காமல் ஒரு வேளை எழுதிக்கொடுக்கப் பின் வாங்கினாலும் மதுபான முதலியவைகளால் மயக்கியாவது அவனிடம் எழுதி வாங்கிக்கொண்டு பிறகு முற் கூறியபடி அவனைத் துரத்திவிட வேண்டுமென்றும், ஐயங்காரர் கூறியதுமன்றி, இவ்விதமான நம் போதனைப்படி கோகிலம் நடக்க நாம் முதலில் அவளை வசப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும், ஆனால்எப்படியும் கோகிலாம்பாளை மேற் கூறியபடி நடக்கச்செய்யத் தம்மால் இயலுமென்றும், தவிர சுந்தரராஜ‌னின் சொத்துக்களை கவரும் விஷயத்தில் ஏற்படும் சகல செலவுகளுக்கும் போதுமான தனத்தை நான் கொடுக்க வேண்டுமென்றும், அப்படி நான் செய்யும் உபகாரத்திற்குப் பிரதியாக கோகிலாவை என் ஆசை நாயகியாயிருக்கதாம் உடன் படுத்துவதாகவும் ஐயங்கார் கூறினார். அவர் யோசனைக்கிணங்கி பத்திரங்கள் வாங்குவதற்கும் சப்ரிஜிஸ்திரார், சாக்ஷிகள் முதலிய சகல செலவுகளுக்கும் வேண்டிய தனத்தை நான் கொடுத்தது

மன்றி ஐயங்காரரின் அபிப்பிராயப்படி நடக்குமாறு சப்ரி ஜிஸ்திராருக்கும் கூறியிருக்கிறேன். இவ்விஷயங்களை ஏற்க னவேநீங்கள் ஐயங்காரரால் அறிந்திருக்கலாம். ஆதலின் இவ்வளவு உபகாரங்களைச் செய்த என்னை நீங்கள் முற்றி லும் அன்னிய மனிதனைப் பாவித்து அலட்சியமாய் நடத்தி னது உங்களுக்குச் சிறிதும் யோக்கியமன்று. என்று சற்று வருத்தத்தோடும், மனத்தாங்கலோடும், கூறினார் அம்மனிதர். இதற்குள் இவரை இன்னாரென வாசகர்கள் உணர்ந்திருப்பார் கள். இவரே வெங்கிடுபதி கவுண்டர்.

வெங்கிடுபதி கவுண்டரின், வெள்ளைத்தனமான வார்த் தைகளைக் கேட்ட தூண்மறைவில் நின்ற கோகிலாம்பாளு க்கு உள்ளத்தில் அளவிலா ஆச்சரியமும் ஆனந்தமும் பொங் கிப் பெருகி வழிந்தது. தாங்கள் சிறிதும் எதிர்பாராத இப் பேருதவியை ஈசன் தங்களுக்கு இலவசமாய் அளித்தது பற்றி அவரது பெருங்கருணையையும் அன்பையும் மனத்துள் ஏத்தி ஏத்தித்துதித்தாள். வெங்கிடுபதி கவுண்டர் இதுவரை கூறிய வார்த்தைகளில் ஒருவார்த்தை கூட ஐயங்கார் தன்னி டம் கூறுவிடினும் கவுண்டர் கூறிய வார்த்தை முழுவதும் தான்ஐயங்காரரால் அறிந்திருப்பதாகநடிக்கவேண்டுமென்று மனத்துள் எண்ணி முற்றிலும் தூண்மறைவிலிருந்த தனதழ கிய மதிவதனத்தைச் சற்று திருப்பிதனது கடைக்கண்ணால் கவுண்டரை கடாக்ஷித்துக் கொண்டே மிக்க எழிலும் மிகு ந்தஈகையும் பரோபகார எண்ணங்களும் நிறைந்த பிரபுவே, தங்களுடைய வீரப்பிரதாபங்களையும் உன்னதமான குணங் களையும் கற்பகத்தருவைத் தாழச் செய்யும் தங்கள் கொடை

த்தன்மையின் தாராள சிந்தையையும் விஸ்தாரமாக ஐயங் காரர் என்னிடம் கூறியதுமன்றி சுந்தரராஜுலுவை தண்டிக் கும் விஷயத்தில் தங்களிஷ்டப்படி நான் நடக்கவேணு மென்று தாங்கள் பலதடவை கேட்டுக்கொண்டதாகவும், தவிர இவ்விஷயமாய்த் தாங்கள் செய்தசகல உதவிகளையும் விபரமாகக் கூறினாரேயன்றி தங்களுக்கு நான் ஆசை நாயகி யாக இருக்கும்படி என்னை உடன்படுத்துவதாகத் தங்களு க்கு அவர் வாக்குக் கொடுத்திருப்பதாக என்னிடம் கூற வில்லை. இதுவரை நான் இப்படிப்பட்ட மோசடியான விஷ யங்களிலும் அற்பத்தனமான நடவடிக்கைகளிலும் இறங் காதவளாயிருந்தும் தங்களது வேண்டுகோளுக்கிணங்கியே இக்காரியத்தில் தலையிட்டு தாங்களும் ஐயங்காரரும் கலந்து யோசித்த உயரிய இரண்டாவது அபிப்பிராயப்படிக்கும் யோசனைப்படிக்கும் காரியங்களை முற்றும் முடித்திருக்கி றோம். இவ்விஷயங்களைக் குறித்து தங்களுக்கு உடனே தகவல் கொடுக்கும்படிக்கு ஐயங்காரரிடம் நான் அப்போதே கூறியிருக்கிறேன். இனியும் இவ்விஷயமாய்ச் செய்யவேண் டிய சில காரியங்கள் தங்கள் தயவினால் தான் ஆகவேண்டும். பெண் பேதையாகிய யான் தங்களை இன்னாரென்று அறி யாது உபசரியாமலிருந்து விட்டேன். ஆகலின் நான் செய்த இச்சிறு பிழையைத் தங்கள் அருமைத் திருவுளமிரங்கி மன்னித்தருளுக; என்று கூறிக்கொண்டே கூடத்திற்குப் பக்கத்திலுள்ள ஒரு அறைக்குள் புகுந்து வெற்றிலை, வாச னைப் பாக்குத்தூள், வாசனைப்புகையிலை, கலர்ச்சுண்ணாம்பு, கலர்த்தேங்காய்ச்சீவல் ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப் பத்திரி, முதலியவைகளை ஒரு வெள்ளித்தட்டில் வைத்து

எடுத்துக்கொண்டு வெங்கிடுபதி கவுண்டரின் அருகில்வந்து அவருக்கு முன்னிருந்த மேஜைமீது தட்டத்தை வைத்து இனிய புன்முறுவல் ததும்பிய தனதழகிய முகத்தைச்சற்று மெல்லெனத் திருப்பி வெங்கிடுபதி கவுண்டரை நோக்கி அழகிய பிரபுவே! தாங்கள் தயைசெய்து தட்டிலிருக்கும் தாம்பூலத்தைத் தரித்துக்கொள்ளுங்கள். புகழும் பெருமையும் தங்கிய புண்ணிய புருஷரே! ஏதுமறியாப் பேதையான என்பால் கோபம் கொள்ளலடாது. அன்பா! அடியாளிழைத்த இச்சிறு பிழையைத் தாங்கள் பெருமனம் வைத்துத்தம் அழகிய வாயால் மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை கூறினலன்றி என் மனம் சாந்தமுறாது. என இன்னமுது கனி பாகு கற்கண்டு முதலிய தீஞ்சுவைகளையும் பின்னிடச்செய்யும் இனிமையும் இங்கிதமும் வாய்ந்த குளிர்ந்த இள மழலைச் சொற்களை வெங்கிடுபதி கவுண்டரின் இரு செவிகளிலும் ஊட்டினுள்; கோகிலாம்பாள்.

கோகிலாம்பாளின், மாதுர்ய சொற்களால் மனமகிழ்ந்த வெங்கிடுபதி கவுண்டர் மிகுந்த பேரவாவோடும் பரிவோடும் கோகிலாம்பாளை இன்புறநோக்கி கற்பிற்சிறந்த காரிகையாம் கண்மணியே! மிகுந்த தூய்மையும் உன்னதமுமான குணங்களையும் பெற்ற நீ யாதும் பிழை புரிந்தாயில்லை. ஆதலின் நின்னை யான் எதற்காக மன்னிக்கவேண்டுமென்பது எனக்குப் புரியவில்லை. ஆயினும், நின்னுறுதலுக்காக என்றன் திரிகரண சுத்தியாக நின்னை மன்னித்தேன். அநேக பிரபுக்களையும் ஜமீன்தாரர்களையும் அலக்ஷியித்த நின் உள்ளத்தின் ஒப்பற்ற ஆற்றலைக்கண்டு யான் ஆனந்த பூரிதனுயினேன்.

அழகும் மென்மையும் பொருந்திய நின் மெல்லிய கரத்தால் மடித்துத் தாம்பூலம் தந்தாலன்றி நான் ஒருபோதும் தரியேன் என்பது நிச்சயம்; என்றார்.

இச்சமயம் இவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த கமலாம்பாள் கோகிலாவை நோக்கி அடி குழந்தாய்! நின் மேலாடையிலென்னவோ தேள் போன்று ஊறுகிறதடியென ஆ! வென்று கூவினள். இவளின் கூச்சலைக் கேட்ட கோகிலாம்பாள் ஓ! ஓ! வென்று பின்னும் இறைந்து கூவி, அச்சத்தோடும் நடுக்கத்தோடும் தன் மேலாடையை மிக்க பரபரப்போடு பிடுங்கி தூர எறிந்துவிட்டு கச்சணிந்த தனது பருத்த ஸ்தனங்களை தன்னிருகரங்களாலும் மாறிமாறிமறைத்து மிகவும் வெட்கம் அடைந்தவளாய் நாணிக்கோணி அந்தோ! அன்னாய்! மேலாடையின்றி வெறுமனே நிற்க எனக்கு மிகுந்த வெட்கமாயிருக்கிறது. வேறு ஆடை எடுத்து வாடியெனக் கூவினள். இச்சம்பவத்தைக்கண்ட வெங்கிடுபதிகவுண்டர் திகைப்பும் வியப்பும் அடைந்தவராய் கோகிலாவை உற்று நோக்கி அவளது அழகிய அவயவங்களின் வனப்பில் ஈடுபட்டவராய் கண்மணி! ஆபத்திற்குப் பாவமில்லை. ஆகையால் நீ இதைக்குறித்து ஆயாசம் கொள்ளல் வேண்டாம். இங்கு என்னையன்றி வேறு யாருமில்லையாகையால் நீவெட்கமடைய வேண்டுவதில்லை. என்று சமாதானம் கூறிக்கொண்டே அருகிலுள்ள தம் கைத்தடியை எடுத்துக்கொண்டு தேளின்மேல் யுத்தம் புரியச் சென்றார். அவர் அவ்வாடையின் அருகில் நெருங்காமல் சுமார் நான்கடி தூரத்திற்கு அப்பால் எட்டி நின்று வெகு சூரத்தனமாய் அக்கோலின்

நுனியால் அவ்வாடையை இப்புறமும் அப்புறமும் புரட்டிப் பார்த்தார். அப்பெண்களிருவரும் அவர் தேளின்மேல் யுத்தம் புரிவதைப்பார்த்து ஆனந்திக்கப் பக்கத்தில் நின்றிருந்தார்கள் வெங்கிடுபதி கவுண்டர் தப்மாவியன்றமட்டும் அவ்வாடையைப் புரட்டிப் பார்த்தார், தேளுமில்லை, நட்டுவாய்க்கிளியுமில்லை உண்மையில் தேளிருந்தாலன்றோ தேடினால் அகப்படும்! அப்பெண்கள், தமது அழகும் இளமையும் பொருந்திய அவயவங்களைக் காட்டி, அவரை முற்றினும் மயக்கிப் பேயாண்டியாக்கித் தங்கள் பாதத்தில் விழுந்து கிடக்கச் செய்யத் தங்கள் குலத்தொழிலாகிய தாசிகள் செய்யும் அநேக தளுக்குகளில், தற்போது செய்ததுவும் மொன்றாகையால் அங்கு தேளில்லாமற் போனதில் யாதும் ஆச்சரியமில்லை. இச் சூதையறியாத விவேக சூனியரான நம் வெங்கிடுபதி கவுண்டர் ஓடியோடித் தேளைத்தேடினார் இவரின் செயலைக்கண்ட அம்மடவார்களிருவரும் ஒரு கொழுத்த விவேகமற்ற வெள்ளாட்டுக்கடா தங்கள் வலையில் வந்து விழுந்ததைக் குறித்து உள்ளுற மகிழ்ந்து ஆநந்தித்தார்கள். வெங்கிடுபதி கவுண்டர் வேண்டிய மட்டும் தேடிப்பார்த்தும் தேள் அகப்படாமையால் சிறிது தைரியம் கொண்டு அவ்வாடையின் நுனியைப்பிடித்து மெதுவாக மேலேதூக்கி விசையாக உதறினார் அப்போது தான்வெட்ட வெளிச்சமாகத் தேளில்லை என்பது தென்பட்டது. அதைக் கண்ட கோகிலாம்பாள் அடி அன்னப்! ஆடையில் தேளிருக்கிறதென்று அபத்தம் கூறி என் அன்பரை இவ்வளவு அல்லல் படுத்தியது நினக்கழகன்று; என கோபித்துக் கொண்டாள். அதைக்கேட்ட வெங்கிடுபதி கவுண்டர். கண்

மணி! நின் அன்னை கூறியது ஒரு போதும் அபத்தமாயிராது. ஒருவேளை நமக்குத் தெரியாமலே தேள் எங்கேயாவது போய்விட்டிருக்கலாம், என்று கமலாம்பாளின் கக்ஷியில் சேர்ந்து சமாதானம் கூறிக்கொண்டே அவ்வாடையை எடுத்துவந்து மிகுந்த உவப்போடும், ஆனந்தத்தோடும், பரவசத்தோடும், கோகிலாம்பாளின் அவயவங்களைக்கண்டு ஆனந்தமடைந்தவராய் ஆடையை நீட்டினர். கண்ணபிரான் கொடுத்த ஆடைகளை நிர்வாணிகளாயிருந்த கோபிகைகள் கூசாமல் தங்கள் கரங்களை நீட்டிப் பெற்றவாறு கவுண்டர் கொடுத்த ஆடையை அரை நிர்வாணமாயிருந்த கோகிலாம்பாள் தனதிருகரங்களையும் நீட்டிமிக்க இன்பத்தோடும் பேருவகையோடும் பெற்றுத் தரித்துக்கொண்டாள்.

இப்போலித் தம்பதிகள் தங்களிஷ்டப்படி சம்பாஷித்துச் சந்தோஷமடையட்டுமென ஜாடையாக அவர்களைத் தனிக்கவிட்டுத்தான் அப்பால் நழுவினாள்; கமலாம்பாள்.

கமலாம்பாள், அப்பால் நகர்ந்ததும் தனித்திருக்கும் தம்பதிகளின் உள்ளத்தின் உவப்பைக் கூறுதல் சாமான்யமன்று. ஆயினும் நமக்குத் தெரிந்ததைக் கூறுகிறோம். வெங்கிடபதி கவுண்டர் தாம் அவ்விள மடமயிலாளோடு தனித்துறைந்துரையாடி மகிழ ஒப்பற்ற சமயம் வாய்த்ததைக் குறித்துப் பெரிதும் பரவசமானார். அவரது உள்ளம் ஆனந்தத்தால் துள்ளித் துள்ளிக் குதித்தது. அழகில் ஒப்புயர்வற்றவளாகிய அக்கற்கண்டுக்கட்டியைத் தாம் அனு

பவிக்கச் சில நாளாகச் செய்து வந்த நோன்பு அன்றே பலித்ததென்று ஆனந்தம் கொண்டார்.

கிடைத்தற்கரிய அவ்விள நங்கையுடன் கூடிக்குலாவிக் கொள்ளேகொள்ளேயாய் இன்பம் நுகர பிரமன் படைத்த பல புருஷரூபங்களிலும் தாமே சிறந்தவரென்று சந்தோஷமடைந்தார். பல பிரபுக்களேயும் ஜமீன்தாரர்களேயும் துரும்பாய் எண்ணி அலக்ஷியம் செய்த கற்பரசியாம் கோகிலாவைத் தமது காதலியாகப் பெறறோமென்று கர்வமடைந்தார். அவளே அழுந்தத்தழுவி அன்புடன் முத்தியிட்டு முகாலாமென அவரது அவயவங்கள் பதறின. இவரின் உளப்பான்மை இவ்விதமிருக்க, சுந்தரராஜு சொத்தெல்லாமிழந்து தொலேயும் சமயத்தில் “அவன் கிடக்கிறான் அடி முட்டாள் அரைக்கோவணத்தோடு சென்றவன், நானிருக்கிறேன் அதுவுமின்றி அம்மணத்தோடு செல்ல” என்று கூறிய வண்ணம் ஒரு தடிமுட்டாள் வந்து தன் வலேயில் சிக்கியதைக்குறித்து கோகிலா சாலவும் சந்தோஷமடைந்தாள். கடவுள் இத்தகைய நுண்ணறிவில்லாப் பேதைப் பணக்காரர்களேப்படைத்தது தங்களின் சம்ரட்சணைக்காகவேயெனப் பெரிதும் புளகாங்கிதமுற்றாள். இத்தகைய தகாதவழிகளிற்செல்லும் தனவந்தர்களேத் தக்கவாறு தண்டிக்கத் தங்களேயே நியாயாதிபதிகளாக்க் கடவுள் தேர்ந்தமைத்திருப்பதாக வெண்ணி ஆனந்த பூரிதையாயினாள். இனிச் சுந்தரம் தன்னோடெதிர்க்கும் சண்டையில் முன்னால் தள்ளிவிட ஒரு முழு முட்டாள் கிடைத்ததைக் குறித்து முற்றிலும் பூரித்தாள். இந்த ஏமாளியைக்கொண்டே தன் பங்காளியாகவரப் பதுங்

யிருக்கும் ஐயங்காரரையுங்கூட அடியோடு தொலைக்க வேண்டுமென்றெண்ணினாள். தங்களிருவரின் நன்மைக்காக ஐயங்காரர் அநேக விஷயங்களை வெங்கிடுபதி கவுண்டரிடம் தந்திரமாய் பேசிக் காரியத்தை அனுகூலப்படுத்தியதைக் குறித்து அவர்மீது அளவு கடந்த அன்பு கொள்ளவேண்டி யிருக்க அதை விட்டு இக்காரியத்திற்காகக் கவுண்டர் கொடுத்த தனத்தில் பெரும்பாகத்தை ஐயங்கார் அமுக்கியிருப்பாரென்றெண்ணி அவர்மீது அதிக ஆத்திரமும் கோபமுமுடையவளாய் அவரை எப்படியும் அவமானப்படுத்தாமலிருப்பதில்லையெனச் சபதம் கூறிக்கொண்டாள். கோகிலாவின் உள்ளக்கருத்து நம் வெங்கிடுபதி கவுண்டரின் அபிப்பிராயத்துக்கு முற்றும் எதிரிடையாய்—அவர்பால் சிறிதும் அன்பிலதாய்—இருப்பதை அந்தோ! நம் கவுண்டர் அறிந்து கொள்ளவில்லை. அகத்திலுள்ள கசப்பான பாகத்தை வெளிவே காட்டாது புறத்தேயுள்ள பளபளப்பான தன் மேற்றோலின் தன்மையினால் பார்ப்பவர் கண்களைக் கவர்ந்து மயக்கும்—எட்டிப்பழம் போன்றவர்கள்—வேசையரென்பதை நம் வெங்கிடுபதி கவுண்டர் அறியவில்லை. அவர் கோகிலாம்பாளின் அகத்தோற்றத்தை ஆராயாது புறத்தோற்றமாகிய பாசாங்கில் மயங்கினார். அவள்மேல் தாம் வைத்திருக்கும் அன்பையும் அபிமானத்தையும்விட பன்மடங்கு பட்சமும் பிரேமையும் கோகிலாம்பாள் தம்மிடம் வைத்திருப்பாளென்று பிறழ நினைந்தார். அவரது உள்ளத்தில் உதித்த அளவற்ற ஆவல் பிடரி பிடித்துந்தத் தாம் அவளருகில் நெருங்கி அவளது வலக்கரத்தைத் தம் இடக்கரத்தால் பற்றி மெதுவாக இழுத்து அவளது அழகிய ஸ்த

ணங்கள் தமது பரந்த மார்பில் ஊடுருவிப்புதையுமாறு அழுந்தத்தழுவினர். அவாது காத்திலகப்பட்ட கோகிலம் வேடன் வலைப்பட்ட மானென மருண்டு அப்பால் நழுவி அந்தோ! பிரபுவே! தாங்கள் அடியாளை அவமானப் படுத்துதல் நியாயமன்று. இதுவரை எத்தகைய பிரபுக்களுடைய கரங்களும் என்னைத் தீண்டவில்லை. எத்தனையோ, பிரபுக்களும் ஜமீன்தாரர்களும், என்னைத் தங்களுக்கு ஆசை நாயகியாக இருக்கவேண்டுமென்று பல்லைக்காட்டிக் கெஞ்சிக் கூத்தாடிக்கேட்டும் நான் சிறிதும் இணங்கினேனில்லை. பிறப்பில் தாசியாயிருப்பினும் நடக்கையில் தாசியல்லேனென்பதைத் தாங்கள் ஐயங்கார் மூலமாய் அறிந்திருப்பீர்கள். இதுவரை யான் எவ்வளவோ கஷ்டப்பட்டு என்னுயிரினும் மேன்மையாய்ப் போற்றிவந்த அறிய கற்பினை நான் யாங்கணம் நுமக்களித்தல் கூடும்? எனச் சாலவும் பரிதபித்தாள். ஆயினும், அத்தருணத்தில் அவருக்கிருந்த ஆத்திரத்தாலும், பேராவாலும் அளப்பரிய மோகத்தாலும் கோகிலாம்பாள்கூறிய சொற்கள் அவர் செவியிலேறவில்லை. அவர், அவள் சொற்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அடி அன்னநடைமின்னே! நின் அபூர்வ குணங்களையும் ஒப்பற்ற கற்பின் வன்மையையும் நான் ஐயங்காரரால் அறிந்திருக்கிறேன். ஆயினும் நீ என்றன்பால்மிக்க அன்புகாட்டி ஆதரித்தாலன்றி அடியேனுக்குய்யும் வழியேயில்லை, என்று கூறிக்கொண்டே ஒரு நாற்காலியில் அமர்ந்து அவளை அணைத்தெடுத்து தன் மடிமீதிருத்திக்கொண்டு நெளிந்துநெளிந்து படிப்படியாய் அமைந்திருக்கும் அவளது அழகிய கருங்கூந்தலைத் தம் கையால் மெல்லெனத் திருத்தினர்.

சந்திரன்போன்ற அழகிய நெற்றியை அடிக்கடி தடவினர். பளிங்கனைய அவளது கன்னங்களைப் பக்குவமாய் நீவினர். இனிமையும் செழுமையும் பெற்ற அழகிய கன்னங்களை அடிக்கடி முகர்ந்து முத்தியிட்டார். அங்கங்களை வருடினர். ஆனந்தங்கொண்டார். புயங்களைத் தழுவினர். புளகாங்கித மெய்தினர். அவளின் இளமையும் மென்மையும் பொருந்திய அழகிய ஸ்தனபாரங்களின் முகடுகள் தம்மார்பில் அழுந்தும் வண்ணம் அடிக்கடி அவளைக் கட்டியணைத்து இறுகத் தழுவினர். கன்னத்தைக் கடித்தார். அதரத்தைச் சுவைத்தார். அவரது உள்ளத்தில் அளப்பறிய காதல்தீ மூண்டெழுந்தது. தேகம் பரவசமடைந்தது. உள்ளம் பூரித்தது. வியர்வை கசிந்தது. அளவிலா ஆனந்தத்தால் அவரதுசொற்கள் குழறின. அவர் குழறிய சொற்களோடும் அடி என்னுயிரினும் மிக்க பெண்பாவாய்! நின்னையானடைய நெடுநாள் நோற்ற நோன்பு இன்றே பலித்து இன்பமெய்தினேன். ரமணீ! இன்று முதல் நாமிருவரும் சதியும் பதியுமென மகிழ்ந்துவாழ என் மனம் மிக்க அவாவுறுகின்றது. சுந்தரீ! யான் செய்த நிகரற்ற பேருதவியை முன்னிட்டும், யானுன்னைப் பெரிதும் இரந்து கேட்கும் வேண்டுகோளை முன்னிட்டும், என் அபீஷ்டப்படி நடப்பாயென்று நான் முற்றிலும் நம்புகிறேன். பிரியே! நின்னை யான் என்றும் என்னுயிர்நிலைபோல் பாவித்துப் பெரிதும் போற்றிப் பாதுகாப்பேனென்பதை நீ முற்றும் நம்புக. காதலி! நின்பால் இன்னொரு விஷயம்கூற மறந்தேன். நீ என்னிஷ்டப்படி நடந்து என் ஆவலைத்தணிக்க உனக்கு ஓர் ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும், அதுவும் நான் நேரே கொடுத்

தால் நீ பெற்றுக்கொள்ளமாட்டாயென்றும், ஆதலால் தன்னிடமே அந்த ரூபாயைக் கொடுக்கவேண்டுமென்றும் கூறினார் ஐயங்கார். ஆயினும் நான்கு நாளாக அவரைக் காணாமையால் உன்மேலிருக்கும் ஆசைப் பெருக்காலும் அபிமானத்தாலும் நானே நேரில் வந்தேன். இதோ இந்தா ஓர் இருபத்தையாயிரம் ரூபாய் எடுத்துக்கொள். மற்ற இருபத்தையாயிரமும் நாளைக்குத் தருகிறேன்; என்று கூறிக்கொண்டே தன் சட்டைப்பையில் கை வைத்து ஒரு கற்றை நோட்டெடுத்து கோகிலாவின் கரத்தளித்து கண்மணீ! இதில் ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக இருபத்தைந்து நோட்டுகளிருக்கின்றன; என்று கூறி மீண்டும் ஒரு முத்தமீந்தார். பணத்தைப் பெற்றுக்கொண்ட கோகிலாம்பாளுக்குப் பின்னும் பலமடங்கு சந்தோஷமுதித்தது. அவள் மிக்க பெருவகையோடும் அழகிய பிரபுவே! எவர் வார்த்தையினும் கலங்காத என் மனம் இன்று நும் அழகிய அமிர்த மொழிகளால் கலங்கி நும் மீது காதலை மூட்டிவிட்டது. காதலரே! இதுவரை நான் அருமையாய்ப் போற்றிவந்த அரிய கற்பினை நுமக்கர்ப்பணம் செய்கின்றேன், துரையே! இனி எக்காலத்தும் என்னை விட்டரைக்கணமும் நீர் பிரிதல் கூடாது. என்று கூறிக்கொண்டே வெங்கிடுபதி கவுண்டரைத்தன் இரு கரங்களாலும் அழுந்தத்தழுவி அவரது முகத்தில் எண்ணிறந்த முத்தங்களீந்தாள்.

ஹா! கண்மணீ! இன்றே என் ஜென்மம் சாபல்யமாயிற்று; எனப் பரவசமடைந்து வாயைப்பிளந்தார் வெங்கிடுபதி கவுண்டர். கோகிலாம்பாள் தட்டிலிருந்த வெற்றிலையை

ஒவ்வொன்ருக எடுத்து சுண்ணத்தைத் தடவி தன் விரலிடுக்குகளில் வைத்துக்கொண்டு துரையே! தயவு செய்து தாம்பூலம் தரித்துக்கொள்ளுங்கள்; என்று வாசனைப்பாக்குத்தூளை எடுத்து அவரது வாயில் போட்டாள். என் பாக்குத்தூளையன்றி பள்ளத்து மணலைப் போட்டாலுங்கூட அத்தருணம் அதை அன்புடன் ஏற்றுக்கொள்ளும் நிலைமையிலிருந்தார் நம் கவுண்டர். பிறகு கோகிலாம்பாள் மடித்து வைத்திருந்த வெற்றிலைச் சுருள்களை ஒவ்வொன்ருக அவர் வாயில் திணித்தாள். கவுண்டர் ஆனந்தத்தாலும் பரவசத்தாலும் தாம்செய்வதின்னதென்பதை உணராது தம்வாயில் திணிக்கப்பட்ட வெற்றிலைச்சுருள்களை ஓயாது எந்திரத்தில் மாவரைப்பதுபோல அரைத்துக்கொண்டேயிருந்தார். அரைபட அரைபட அவற்றின் ரசம் அவரையும் அறியாமல் உள்ளே இறங்கிக்கொண்டிருந்தது. கவுண்டர் வெற்றிலைச் சுருள்களை அரைத்த வண்ணம் அடிக்கடி கோகிலாவைத் தழுவுவதும், அணைப்பதும், முத்தியிடுவதும், முகத்தைத் திடைப்பதும், கன்னத்தைக் கடிப்பதும், அதரத்தைச் சுவைப்பதுமாக ஆலிங்கனுதிகள் புரிந்து கொண்டிருந்தார். கோகிலாம்பாளும் அவர் செய்யும் தொந்தரவைச் சகித்துக்கொண்டே வெற்றிலைச்சுருளை வாயில் திணிப்பதை நிறுத்தாமல் கவுண்டரின் ஏமாளித்தனத்தை அளவிட நினைத்து தட்டிலுள்ள வெற்றிலைகளை அப்போதைக்கப்போது மடித்து மாறி மாறித் திணித்துக்கொண்டேயிருந்தாள். அவளின் அழகிய அவயவங்களின் ஸ்பரிசானந்தம் அவரை முற்றிலும் மயக்கியதால் காலம் கடப்பதையும் கவனியாமலிருந்தார் கவுண்டர். தட்டிலிருந்த அரைக்கட்டு வெற்றிலையின்

பெரும்பாகமும் தீர்ந்தது. அப்போதும் கவுண்டர் வாயை அசைப்பதையும் கோகிலா வெற்றிலைச் சுருளைத் திணிக்கும் போது வாயைத் தாராளமாய் ஆ, வெனத்திறப்பதையும் நிறுத்தினரில்லை. இவ்வித ஆனந்தத்திலேயே எத்தனை நேர மிருப்பினும், ஏன்? எத்தனை நாளிருப்பினும், கூடச் சிறிதும் சளைக்கமாட்டாரெனத் தோன்றியது! இவ்வாறு நம் வெங் கிடுபதி கவுண்டர் ஆனந்த சாகரமாம் நீர்ச்சுழலில் அமிழ்ந்து அமிழ்ந்து மிதந்துகொண்டிருக்கும்போது கமலாம் பாள் அவசரத்தோடும் மேல்மூச்சுவாங்க அங்குத் தோன் றினள். அவள் வரவைக்கண்ட கோகிலாம்பாள் மிகுந்த நாணமடைந்தவளாய் கவுண்டர் மடியினின்றும் அகன்று அப்பால் நின்றாள். கமலாம்பாள் கவுண்டரை நோக்கி பிரபுவே! தங்களின் ஆனந்தகால க்ஷேபத்தை அடியாள் பின்னமாக்கியதைக் குறித்து மன்னிக்க வேண்டுகிறேன். அடுத்த தெருவிலிருக்கும் எனது அண்ணன் குமாரனுக்கு உடம்பு ரொம்பவும் அசௌக்கியமாயிருப்பதாகவும் என்னையும் குழந்தை கோகிலாவையும் உடனே அழைத்து வரும் படியும் ஆள் வந்திருக்கிறது. தாங்கள் தயவு செய்து எங்களை அனுப்பிவைக்கவேண்டும்; என்றாள்.

வேங்கிடுபதி கவுண்டர் :—ஓ! அப்படியானால் அவசியம் போகவேண்டியதுதான்; நான் வீட்டிற்குச் சென்று மீண்டும் நாளைக்கு வருகிறேன்; என்று கூறிக்கொண்டே நாற்காலியை விட்டெழுந்தார். ஆயினும் அம்மடமயிலாளை விட்டு இத்துணைச் சீக்கிரம் பிரிய அவரது மனமிணங்கிற் றில்லை. ஆகையால் கோகிலாவைப் பார்த்த வண்ணமே நின்

ஞர். அவரது பார்வையினின்றும் அவரது உள்ளக்கருத்தை உணர்ந்த கோகிலாம்பாள் அன்றிரவு அவர் வீட்டுக்கு தானே அவசியம் வருவதாக ஜாடை காட்டினுள். அக்குறிப்பையறிந்த நம் கவுண்டர் சிறிது சந்தோஷத்தோடுபோய் வருகிறேனெனக் கூறிக்கொண்டு சென்ருர். கோகிலாம்பாளும் அவரைப்பின் தொடர்ந்து சென்று தெருக்கதவைத் திறந்தாள். கவுண்டர் அவளை நோக்கி கண்மணீ! இன்று அவசியம் என் வீட்டிற்கு வரவேணுமென்று கூறி ஒரு அவசர முத்தம் கொடுத்துவிட்டு வெளியே நடந்தார். கோகிலாம்பாள் அன்பா! நான் அவசியம் வருகிறேன் என்று கூறி அவரை அனுப்பிவிட்டு முன்போலக் கதவைத் தாளிட்டுவிட்டு கூடத்திற்குச் சென்ருள்.

கமலாம்பாள் :— அடி கோகிலா! நீ சுத்த அசடு. அந்த அறிவில்லா மூடனை இவ்வளவு நேரம் இங்கு வைத்துக்கொண்டிருப்பதா? என்று கோபித்துக்கொண்டாள்.

கோகிலாம்பாள் :—அம்மா! நான் என்ன செய்வேன்? அவன் பெண்பித்துப் பிடித்த பெரும் பயித்தியகாரனுயிருக்கிருன். என்னை இப்புறமும் அப்புறமும் நகரவிடாமல் பிடித்து அல்லல் படுத்திவிட்டான் என்ருள்.

கமலாம்பாள் :—நானும் அந்த மூட்டாளை அப்பால் ஓட்டுவதற்குத் தான் அண்ணன் மகனுக்கு உடம்பு சௌக்கியமில்லையென்று அபத்தம் கூறினேன். தவிர ஏதோ அவசரமென்று வெளியே சென்ற சுந்தரமும் கூட வருகிற நேரமாயிற்றல்லவா? ஒருவேளை அவனும் இவனும்

நமது வீட்டில் சந்தித்துச் சண்டையிட்டுக் கொண்டால் நாம் சாக்ஷி சொல்லக் கோர்ட்டுக்குப் போகவேண்டும். அப்படிப்பட்ட அடிதடி விஷயங்களுக்கு நாம் இங்கு இடங்கொடாமலிருப்பதே புத்திசாலித் தனம் என்றாள்.

கோகிலரம்பாள் :— ஓ! ஆம். நீ செய்த வேலை மிக்க நன்மையானதே; என்று தன் அன்னையின் வேலையைப் புகழ்ந்து கொண்டாள்.

## 9-வது அத்தியாயம்.

# தட்டுக்கெட்டவனுக்குத் தடியடிப் பூஜை சற்குரு.

---

கோகிலாம்பாளின் குணமும், காதலும், அன்பும் அன்று முதல்—(பூமி எழுதிக்கொடுத்தது முதல்)—சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்ததென்று கூறும்படி சில சம்சயங்கள் சுந்தரராஜுவுக்குத் தோன்றின. அவள் வெங்கிடுபதி கவுண்டர் தன் வீட்டிற்கு வந்துபோன நாள் முதல் அடிக்கடி வீட்டினின்றும் வெளிச் செல்வதுடன் ஒவ்வொரு சமயம் இரவு முழுதும்கூட வீட்டிற்குத் திரும்பாமலே இருந்துவிடுவாள். இவள் நடக்கையைக்குறித்து சுந்தரராஜு கவுண்டன் சந்தேகித்து அவள் அப்படி அடிக்கடி வெளிச்செல்லும் காரணமென்னவென்று கேட்க, அன்பரே! எனது பந்துக்களின் இல்லத்தில் சில

விசேஷங்கள் நடந்ததாலும் என் சிற்றன்னையின் குமாரனுக்கு உடம்பு சௌக்கியமில்லாமையாலும் யான் அடிக்கடி வெளிச்செல்ல நேர்ந்தது; தாங்கள் அதற்காக என்மீது அவநம்பிக்கை கொள்ளல் தகாது; என்று சமாதானம் கூறினள். அவள் கூறியது உண்மையில் ஒப்பக்கூடியதேயாயினும் சுந்தரராஜு கவுண்டனுக்குச் சற்றுச் சந்தேகமே இருந்தது. ஒரு நாள் இரவு சுமார் எட்டு மணிக்கு, கோகிலாம்பாள் வீட்டினின்றும் வெளிச்சென்றாள். சுந்தரராஜுவும் அவள் வார்த்தையின் உண்மையை உணர அவளைப்பின் தொடர்ந்து அவளுக்குத் தெரியாமல் சென்றான். கோகிலாம்பாள் மிகவும் விரைவாக நடந்து அத்தெருவின் கோடியிலிருந்த ஒரு பெரிய வீட்டின்முன் வந்து பாட்டையில் நின்றாள். சுந்தரராஜுவும் அவள் பின்வந்து மறைந்து நின்றான். முன் வாசல் கேட்டுத் திறந்திருந்தது. அதன் வழியாய் மங்கலான தீபத்தினொளி வெளியே பிரகாசித்துக்கொண்டிருந்தது. அப்போது காவலர் யாரும் இல்லை. கோகிலம் மெதுவாய் உள்ளே சென்றாள். அவள் உள்ளே புகுந்த சிறிது நேரத்தில் சுந்தரராஜுவும் மெதுவாக உள் நுழைய இருவரும் ஒருவர் பின் ஒருவராகக் கொஞ்சதூரம் சென்று வீட்டு வாயிலருகில் நெருங்கினார்கள். அச்சமயம் வாயிற்காவலர் ஒருவரும் அங்கில்லை. கோகிலம் சிறிதும் தயக்கமின்றித் தாராளமாய் உள்ளே சென்றாள். சுந்தரம் சிறிது தயக்கத்துடன் நெருங்காது சற்றுப் பின்னாகவே கோகிலாம்பாளைத் தொடர்ந்து சென்றான். இவ்வாறு இவர்கள் இரண்டு கூடங்களையும் ரேழியையும் தாண்டி உட்சென்றார்கள். அங்கே முன்னால்

சென்ற கோகிலம் யாருடனே பேசும் சப்தம் போலவும், பிறகு தானிருக்கும் திக்கை நோக்கி யாரோ நடந்து வருவது போன்ற காலடி யோசையும், பின்னால் சென்ற சுந்தரராஜுவுக்குக் கேட்டது. ஆகையால் உடனே சுந்தரம் அங்கு பதுங்க இடம் தேடினன் சிறிது தூரத்திற்கு அப்பால் ரேழியின் வலப்புறம் ஒரு அறை இருந்தது. அதன் கதவு மூடப்பட்டிருந்ததாயினும் பூட்டிடப்படாமல் இருந்தது. சுந்தரராஜு அதைத் திறந்து பார்க்க உள்ளே அதிக இருட்டாயிருந்தகால் அங்கு பதுங்க உட்சென்றான். ஆனால் அவ்வறையிலுள்ள ஜன்னலின் சந்திலிருந்து அடுத்த அறையில் எரியும் விளக்கு வெளிச்சம் மயிரிழைபோல் தோன்றியது. அவ்வறையின் ஓர் மூலையில் சுந்தரராஜு பதுங்கிக்கொண்டு பலபல எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். அவ்வாறு பதுங்கியிருந்தது சிறிது நேரமாயினும் அது கஷ்டமாயிருந்தது. கைகால்கள் இரத்தம் கட்டி அசைக்கவும் முடியாதிருந்தன. ஆயினும் பொறுமையுடன் சகித்திருந்தான். சிறிது நேரத்திற்குப்பிறகு யாரோ பேசும் சப்தம் கேட்டது. நன்றாய் உற்றுக்கேட்டான் சுந்தரராஜு. அந்தச்சப்தம் தானிருக்கும் அறைக்குப் பக்கத்திலுள்ள அறையிலிருந்து வருகிறதென உணர்ந்தான். உடனே எழுந்து பலகணி அருகில் சென்று அதன் சந்தில் தனது ஒரு கண்ணை வைத்து உற்று நோக்கினான். உடனே. ஆ! என்று அலறி விடுவான் போன்று தடுமாறினான். நெஞ்சு படபடவெனத்துடித்தது. கோபம் மேன்மேலும் வளர்ந்தது. உடனே அவ்வறைக்குள் ஓடலாமாவென்று எண்ணினான். அப்படிப்பட்ட சம்பவமென்னவெனின் அவ்வழகிய

அறையினுள் பட்டினால் மெத்தைகள் தைத்த ஒரு நீண்ட சோபாவில் சுந்தரயுவதியாகிய கோகிலாம்பாள் ஒய்யாரமாய் வீற்றிருந்தாள். சுமார் 40 அல்லது ஒன்றிரண்டு அதிகம் வயதுள்ள ஒரு புருஷன் அவள் மடிமீது சாய்ந்து தனது கரத்தால் அவளது தோளைத் தழுவிய வண்ணம் படுத்திருந்தான். இச்சம்பவத்தைக்கண்ட சுந்தரராஜு கவுண்டனுக்குக் கடுங்கோப மூதித்தது. ஆயினும் சமாளித்துக்கொண்டு எ. மூடமனமே! சற்றுப்பொறு. ஆத்திரப்பட்டு ஆருயிர்க் காதலிமேல் அசூயைகொள்ளாதே. இன்னும் என்ன நடக்கிறதென அறிவோம்; என்று தன்னால் ஆனவரை பொறுமையோடிருந்தான். அப்போது அடியில் வரும் சம்பாஷணைகள் அவன் செவியில் விழுந்தன.

பிரியகோகிலம்! அந்தப்பயல் சுந்தரம் இப்போது எப்படியிருக்கிறான்? என்றான் அம்மனிதன்.

அந்த மடப்பயல் சுந்தரம் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறான். அவன்பாடு அடியோடு தீர்ந்தது. இனி கையில் கப்பறை எடுத்துக்கொள்ளவேண்டுவதுதான் பாக்கி; என்றாள் கோகிலாம்பாள்.

அன்று உங்கள் வீட்டிற்கு வந்திருந்தபோது இவ்விஷயத்தை நான் ஸ்தூலமாகக் கேட்டிருக்கிறேன். ஆயினும் உனது அழகிய வாயால் இன்னொருமுறை விஸ்தரித்துக்கூறு கேட்கலாம்; என்றான் அம்மனிதன்.

சுந்தரம் முதலில் என்னைத்தன் ஆசைநாயகியாக இருக்கவேணுமென்று அடிக்கடி கேட்டுக்கொண்டதின்பேரில்

நான் தாசிகளைப்போல காசுவாங்குவதில்லையென்றும், குலஸ்திரீகளைப்போல நடக்க நான் ஆசைப்படுவதாகவும் ஆதலின் நான் அவனை அபிமான நாயகனாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும்கூறி என் விரதப்படி உண்மையாய் நடந்து வந்தேன். இவ்வாறு சிலநாள் சென்றதும், பிறகு தாங்கள் ஐயங்காரரிடம் வேண்டிக் கேட்டுக்கொண்டபடிக்கு நான் சுந்தரத்தை நோக்கி அவனது பூஸ்திதி முழுதும் என் பெயருக்கு எழுதிக்கொடுப்பதாயிருந்தால் நான் அவனது ஆசை நாயகியாக இருப்பதாகவும், இன்றேல் முடியாதெனவும் கூறினேன். அதற்கவன் தனது ஐம்பதுவேலி நிலத்தையும் என் பேருக்கெழுதிக் கொடுக்கப்பயந்தவனாய்ச் சற்று யோசித்து முதலில் ஐந்துவேலி நிலம் எழுதிவைப்பதாகவும், பிறகு சில நாளான பின்பு மற்ற பூமிகளெல்லாம் எழுதிவைத்துவிடுவதாகவும் கூறினான். நான் தங்கள் இரண்டாவது யோசனையை அனுசரித்து நடக்கலாமென—மதுபானம் கொடுத்து மயக்கி ஏமாற்றலாமென—யோசித்து ஒப்புக்கொண்டேன். அவன் ஐயங்காரரைப்பார்த்து தனது ஐந்து வேலி நிலத்தை என்பேருக்கு கிரயபத்திரமொன்றெழுதும்படி ஆக்யாபித்தான். உடனே ஐயங்கார் தங்களுடன் கலந்து யோசித்த யோசனைப்படி சுந்தரராஜுவின் ஐம்பது வேலி நிலத்திற்கும் வேண்டிய கடிதம் காலை நெம்பர் முதல், சாக்ஷிகள் சப்ரிஜிஸ்திரார் சகிதம், தாங்கள் கொடுத்த தனத்தாலும் தங்கள் வாக்கு சகாயத்தாலும் தயார் செய்து பத்திரமும் எழுதி முடித்தார். பிறகு எனது பிறந்த நாள் கொண்டாட்டத்தன்று விசேஷ விருந்துகள் செய்து அன்று மதுபானத்தை மிக்க சாகஸமாய் அவனுக்கு

ஏராளமாய் குடிப்பாட்டி அவன் மதிமயங்கியிருக்கும்போது முன்னமே தயார் படுத்திவைத்திருந்த பத்திரத்தை ஐயங்காரர் அவனுக்குக் காண்பித்து ஐந்துவேலி நிலம் கிரயமெழுதி இருப்பதாகவும் அதில் அவன் கையொப்பமிடும்படியும் கூறினூர். சுந்தரராஜு மதுவெறியால் ஐம்பதுவேலி நிலம் எழுதியிருப்பதை அறியாது கையொப்ப மிட்டான். சிறிது நேரத்தில் சாக்ஷிகளும் சப்ரிஜிஸ்திராரும் அங்குவர உடனே ரிஜிஸ்தர்வேலேயும் நிறைவேறியது. இனிமேலவனே தங்களிஷ்டப்படி என் வீட்டுவழி யெட்டிப்பாராது ஓட்டவேண்டியதுதான்; என்று அநேக விஷயங்களைக் கூட்டியும் கழித்தும் பெருக்கியும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு ஜாலவித்தை செய்தாள் தாசி கோகிலாம்பாள்.

பேஷ்! கோகிலம்! நல்லவேலே செய்தாய், உனது சாமர்த்தியமே சாமர்த்தியம்; என்ருன் அம்மனிதன்.

என் சாமர்த்தியம் ஒன்றும் இல்லே. தங்கள் உதவிதான் விசேஷம்; என்று குதலேமொழியால் கொஞ்சிக்கூறி அவனது கன்னத்தில் முத்தியிட்டாள் கோகிலாம்பாள்.

நேயர்களே! இவ்வார்த்தைகளைக்கேட்ட சுந்தரராஜு கவுண்டனின் மனோநிலேமை எவ்வாறிருக்குமென நீங்களே ஆழ்ந்து யோசித்துக்கொள்ளுங்கள். இவ்விஷயங்கள் அவன் செவியில் புகுந்ததும் ஸ்தம்பித்துச் சிலேயெனச்சில நிமிஷம் நின்று தியங்கினுன். மயங்கினுன். தன்னேயறியாமல் தண்ணீர் கண்களில் ஒழுகிற்று. அவர்களின் மோசத்தை நினேக்க நினேக்க அவனுக்கு அடங்காக்கோபம் மேன்மேலும்

வளர்ந்தது. ஒரேபாய்ச்சலாய்ப்பாய்ந்து ஓடினான் அவ்வறைக்குள். அடி தட்டுவாணிப்பட்டி முண்டை! என்னைத் தழுவித் தழுவி அணைத்தணைத்து அடியோடு கெடுத்து அனாதையாக்கிய குடிகேடி! உன்னை விட்டேனா? அடே இனத்தானென்றும் எண்ணிப்பாராமல் அவளுடன் சேர்ந்து அடியோடு குடிகெடுத்த வெங்கிடுபதி உன்னையும் விட்டேனா பார்; என்று கூறிக்கொண்டு முஷ்டி யுத்தத்துக்கு—(கைச்சண்டைக்கு) நின்றான் சுந்தரராஜன்.

இவனது கோலத்தைக்கண்ட வெங்கிடுபதிக் கவுண்டரும் கோகிலாம்பாளும் முகவில் சற்று திடுக்குற்றுக் கலவரமடைந்தனரெனினும் சமாளித்துக்கொண்டு அடே பாப்பர் பயலே! நீயாவது என்னை அடே என்று அழைக்கவாவது. என்று கூறிக்கொண்டே சுந்தரராஜனைப் பிடித்துத்தள்ளி நன்றாக நையப்புடைத்தார் வெங்கிடுபதி கவுண்டர். கோகிலாம்பாளும் சமயத்தை வீணாக்காமல் இதற்குமுன் அவனைத் தான் எத்தனை தரம் அணைத்தணைத்து—தழுவித்தழுவி அழுந்தப்புல்லினாளோ அவ்வளவுக்கும் நூற்றுக்கு 10 வீதம் லாபம் சேர்த்து வட்டியும் முதலுமாக வஞ்சனையில்லாமல் தன்னால் இயன்றமட்டும் மனப்பூர்வமாய் அவன் முதுகில் மொத்தினாள் கோகிலாம்பாள்.

இவர்கள் கொடுத்த கும்மலைத் தாங்கமுடியாமல் தளர்வடைந்த சுந்தரராஜன் சற்றுதேறி எழுந்து அடி கோகிலம்! இப்படி என்னை அடியோடுகெடுக்கலாமா? நாம் இருந்த நேசத்தைக்கூட எண்ணிப்பார்க்கவில்லையே? அடி சண்

டாளி! குடிகேடி! உன்னைக் கொன்றாலும் தோஷமில்லை; என்றான் சுந்தரராஜன்.

அடே மானங்கெட்ட ஈனப்பயலே! என்னடா கூறினாய்? நீயும் நானும் நேசம் கொள்ளவாவது, இருக்கவாவது, என்னிடமா இந்த இந்திரஜால வித்தையெல்லாம் காட்டி வீண்வம்புபேச வந்துவிட்டாய். திருட்டுப்பயலே. இனி க்ஷணநேரம் இங்கு நின்றால் துடைப்பத்தால் உன் நெஞ்சு அடைப்பெடுக்க அடித்து அபிஷேகம் செய்து விடுவேன் என்று கூறினாள்; கோகிலம்.

என்ன செய்வான் சுந்தரராஜன்? வெங்கிடுபதி கவுண்டர் சகாயம் கோகிலாவிற்குப் பூரணமாயிருக்கிறது. ஆகையால் செய்வகை ஒன்றும் இலனாய் அடே வெங்கிடுபதி! அடி கோகிலம்! சமயம் வரும்போது உங்களைப் பழிவாங்காமல் விடேன் என்பதை உங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; என்று கண்கள் சுழலக் கடுங்கோபத்தோடு கூறினான். அசசமயம் அங்குக் கிடந்த துடைப்பத்தை எடுத்துக்கொண்டு ' என்னடா சொன்னாய் ஈனப்பயலே, என்று இரண்டடி நடந்து வந்தாள் கோகிலாம்பாள்." அதைக் கண்ட சுந்தரராஜன் இனி இங்கிருந்தால் பாக்கியத்தை இழந்ததுமன்றி யோக்கியத்தையும் இழக்கவேண்டி வரும் என நினைத்து அவ்விடமிருந்து குதிரையை வேகமாய் தட்டி விட்டான். கோகிலாம்பாளும் அவனை மிகு பக்ஷமாய் உபசரிக்கக் கையில் துடைப்பத்துடன் வெங்கிடுபதி கவுண்டர் சகாயத்திற்குத் தன்னைப் பின் தொடரத் தான் சுந்தரராஜன் கவுண்டனை பின்தொடர்ந்து ஓடினாள். சுந்தரராஜன்

கவுண்டனும் தனது ஆண்பிள்ளை சமர்த்தையும், ஓட்டத்தில் தனக்கவளிணையல்ல வென்பதையும் காட்டும் அறிகுறியாய் தன்னை அவள் நெருங்காவண்ணம் முழுப்பலத்தையும் உபயோகப்படுத்தி காற்ருய்ப் பறந்தான்.

உலகீர்! என்னே மாந்தரின் மடமை! என்னே மதியின்மை! "அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார் இன்சொ லிழுக்குத் தரும்" என்றபடி வேசிக்குக் காசுமேல் ஆசையல்லால் தன்னை விரும்பிவந்த புருஷன்மேல் ஆசையில்லை. நமது கையிலிருக்கும் தனத்தைக் கவருப்வரை அன்பரே! ஆருயிர்க்காதலரே! என்று அருகில் மிக நெருங்கி அணைத்திடுவாள். தனம் தீர்ந்துவிட்டால் நாயே, பேயே, இடையனே மடையனே என நாலுபேர் நகைக்க நாராச பாணம்போல் சொற்களைப்பொழிந்து நமது மானத்தைக்கெடுத்து வீட்டைவிட்டு வெளியே ஓட்டிவிடுவாள் என்பதை எண்ணிப்பாராமல் விலைமாதர்களின் வலையிலகப்பட்டு வீட்டையும் விலையில்லா கௌரவத்தையும் இழந்து வேசாரித்திரியும் அறிவிலிகள் எத்தனை பெயர்! சொந்தப் பெண்ஜாதியையும் குழந்தையையும் சோற்றுக்குத் தவிக்கவிட்டு தாசிவீடேகிக் காசுகளைக் கொடுக்கும் தடியர் எத்தனை பெயர்! வேசிவீடேகி வேணதெல்லாம் கொடுத்துப் பின்னுமவள் காலில் விழும் பேதையர்கள் எத்தனை பெயர்! வேசிக்குக்காசீந்து வினையை விலைக்கு வாங்கி வேப்பிலையும் கையுமாய் வீற்றிருக்கும் வீணர்கள் எத்தனை பெயர்! தாசிக்குத் தனது தனமெல்லாம் ஈந்துவிட்டுப் பின்னையும் கொடுக்கவெண்ணிப் பிறர் பொருள்

கவர்வார் எத்தனை பெயர்! மூத்தோர் தேடிய மேலான திரவியத்தைத் தாசிக்குக்கொடுத்து சோற்றுக்குத் திண்டாடும் துஷ்டர்கள் எத்தனை பெயர்! தாசிவீடேகி தனமெல்லாம் கொடுத்துவிட்டு தாசிக்கு தாசனாய் தாள் பிடிக்கும் தம்பிரான்கள் எத்தனை பெயர்! இத்தகைய துஷ்கிருத்தியத்தால் வீடுமுதல் சகலமும் இழந்து ஓட்டாண்டிகளாகி சத்திரத்திலும் சாவடியிலும் தங்கி ஒருவேளை உணவுக்கும் வழியின்றி இஞ்சி தின்ற குரங்குபோல ஏங்கித் தவித்திருக்கும் ஏமாளிகளை தினந்தினமும் கண்ணுற் கண்டும் மறந்து விட்டு அவர்கள் சென்ற வழியைப் பின்பற்றுவது—தனத்தைக் கவரும் தாசிகளின் இல்லம் செல்வது—செல்ல நினைப்பது—எவ்வளவு மடமையும் அவிவேகமுமென்பதை ஆழ்ந்து கவனித்துப் பாருங்கள்.

---

## 10-வது அத்தியாயம்.

# மூடவனுக்குக் கொம்புத் தேன் ஆசை.

நறுமணங்கமழும் மல்லிகை முல்லை ரோஜா முதலிய புஷ்பச் செடிகளும், மா, பலா, வாழை, முதலிய இனிய பழந்தரு தருக்களும் நிறைந்து, அழகிய புட்கள் ஆடிப்பாடி இராகங்கள் இசைக்கும் இன்னிசை ஒலிகளும் நிறைந்த அழகிய பூங்காவினுள் பெரிய மாமர

த்து நிழலில் உள்ள ஒரு பெஞ்சியில் மாரனது மனைவியோ எனதிகழும் எழில் மிகுந்த சுந்தராங்கி ஒருவள் தனது கரத்துள்ள புஸ்தகத்தை கவனித்த வண்ணம் உட்கார்ந்திருந்தனள். கன்னிகை புஸ்தகத்தில் கவனத்தைச் செலுத்தி வாசித்துக்கொண்டிருக்கும்போது பூங்காவினுள்ள ஒரு காலடிப்பாதையிலிருந்து ஒரு யௌவன வாலிபன் மெதுவாய் வந்து வனிதை முன் நின்றான். வாசித்துக்கொண்டிருந்த கன்னிகை திடுக்கென்று நிமிர்ந்து நோக்க, ஆ! அத்தான்! தங்களை இங்கு அகஸ்மாத்தாக சந்திக்க நேர்ந்தது. மிக்க ஆச்சர்யம் என்றாள். இவளை இன்னாளென வாசகர்கள் முன்னமே ஊகித்திருப்பார்கள். இவளே நம் சுவர்ணும்பாள். சுவர்ணும்பாளின் அத்தான் இன்னானென்றும் இவன் பெயர் கனகாசலமென்றும் வாசகர்கள் முன்னமே அறிந்திருக்கிறார்களாதலின் நாம் அவனைப்பற்றி ஒன்றும் கூறவேண்டியதில்லை.

கனகாசலம், அவளுக்கெதிரிலுள்ள மற்றொரு பெஞ்சியில் உட்கார்ந்துகொண்டு கன்னிகையை நோக்கி சுவர்ணு உன்னையொரு புஸ்தகப்புழுவென்றே கூறவேண்டும். பாழும் படிப்பால் என்ன பாக்கியம் அடையப்போகிறாயோ தெரியவில்லை; என்றான்.

அத்தான்! உலகில் மனித ஜென்மமெடுத்தவர்கள் பொதுவாய்ப் பொருள் என்ற செல்வப் பொருளையாவது கல்விப்பொருளையாவது பெற்றிருக்கவேண்டும். இவ்விரண்டினுள் செல்வப்பொருளிலும் கல்விப்பொருள் சிறந்ததாயினும் தக்கபடி உபயோகிக்கப்பட்டால் செல்வப்பொருளுக்

கும் மேன்மை இல்லாமற் போகவில்லை. ஆகவே இவ்விரண்டிலொன்றையடைய மனிதன் ஒவ்வொருவனும் முயற்சி செய்யவேண்டும். தங்களுக்கோ ஏராளமான செல்வமிருக்கிறது. கல்வியைப்பற்றி அக்கரையில்லை. நீங்கள் விரும்பினாலும் பொருளின் மாய்கை உங்களை கல்வியிற் பிரவேசிக்கவொட்டாது. நானோ ஏழை. நான் சுலபத்தில் சம்பாதிக்கக்கூடிய பொருள் கல்விப் பொருள்தான். ஆகையால் நான் இதில் அக்கரையுடையவளாயிருக்கிறேன். என்றாள்.

கனகாசலம், சற்று ஆத்திரத்துடன் சுவர்ணு! நீ ஏழையென்று கூறிக்கொள்வது எனக்கு மிகவும் மனவருத்தத்தை உண்டாக்குகிறது. நான் உன்னை ஒரு பெரிய சீமாட்டியாகச் செய்யவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்; இனிமேல் ஏழையென்று கூறிக்கொள்ளாதே.

சுவர்ணம்பாள், நகைத்துக்கொண்டே அத்தான்! உலகில் ஒருவனை—ஒருவளை—சீமானுக்குவது—சீமாட்டியாக்குவது மனிதரால் கூடும் காரியமன்றே. அஃது கடவுளாலன்றோ நடைபெறல் வேண்டும். ஆயினும் தாங்கள் என்னை எவ்விதத்தில் சீமாட்டியாக்குவீர்களோ தெரியவில்லை?

கனகாசலம், இன்னும் உனக்குச் சங்கதி எட்டவில்லையோ? நானே கூறுகிறேன். உன்னுடைய அழகைப்பற்றியும் உன்மேல் எனக்கிருக்கும் ஆசையைப்பற்றியும் எனது தந்தையிடத்தில் கூறி உன்னையே எனக்கு விவாகம் செய்துவைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன். முதலில் அவர் நீங்கள் அதிக ஏழையென்றும், உங்கள் வீட்

டில் சம்பந்தம் செய்வது தமக்கு அவமானமென்றும், கூறி மறுத்தார். நான் விடாப்பிடியாய் வற்புறுத்தவே அவர் உனது பெற்றோரைக் கேட்டு விவாகத்திற்கு யத்தனம் செய்வதாக ஒப்புக்கொண்டார். என்னை விவாகம் செய்து கொள்ளும் விஷயத்தில் நீயும்கூட பூரண சம்மதமுடைய வளாகவே இருப்பாயென்று நம்புகிறேன். ஏன் நான் ஒரு பெரிய பணக்காரனல்லனோ? என்னை மணம்செய்துகொண் டால், நீ பெரிய சீமாட்டியாகத் தடையென்ன?

சுவர்ணம்பாள்:—அத்தான்! தயவுசெய்து நான் கூறு வதைக் கவனிக்கவேண்டும். இவ்வுலகில் பணக்காரர்களில் பெரும்பாலோர் தமது முன்னோர்கள் கஷ்டப்பட்டோ, களவு செய்தோ, மோசம் செய்தோ, பலபேர் தலையிற் கல்லைப் போட்டோ, கொள்ளையடித்தோ, சம்பாதித்த திரவியத்தை உபயோகிக்கும் வழியறியாமல் வைத்துக்கொண்டு குடிப்ப திலும் குடிகெடுக்கும் கோதையராகிய விலைமாதர் வீடே கதியென்று திரிவதிலும் காலம் கழிக்கின்றனர். திருடர்க ளோடும் கொள்ளைக்காரரோடும் கூட்டாயிருந்து வேட்டை யாடும் தனவான்கள் எத்தனைபெயர்! தமது விரோதிகளான பேரை வேலைமுடிப்பதிலும் தமது சொல்லைக் கடப்போ ரைக்குடி கெடுப்பதிலுமே கண்ணுயிருக்கும் கண்ணியவான் கள் எத்தனை பெயர்! ஊரிலுள்ள உத்தமஸ்திரிகளையும் (கட்டாயத்திலாயினும்) கலந்து சுகமனுபவிக்கும் பணக்கா ரர் எத்தனை பெயர்! பட்டப்பெயரைக் கட்டிக்கொண்டழப் பல்லாயிரக்கணக்காய்ச் செலவு செய்யும் பணக்காரர் எத் தனை பெயர்! அங்கஈனரான அநேக ஏழைகள், வாயிலில்

நின்று கூவிக்கொண்டிருக்க அறுசுவையன்னம் அமிதமாக உண்டு பன்றிபோல் திணரும் பணக்காரர் எத்தனை பெயர்! அளவற்ற தனத்தை அமுக்கி வைத்துக்கொண்டு தாமும் அனுபவியாமல் பிறர்க்கும் கொடாமல் பூதம்போல் காக்கும் பிரபுக்கள் எத்தனை பெயர்! தெய்வமே இல்லையென்றும் சகலமும் தமது சமர்த்தாலேயே நடப்பதென்றும் டாம்பீக மடிக்கும் தனவந்தர் எத்தனைபெயர்! இவ்வித பிரபுக்களை யெல்லாம் விடாமற் கூறுவதென்றால் இப்புஸ்தகமே இடம் பெறாது. இத்தகைய தூர்த்தச் செயல்களையும், துஷ்ட காரியங்களையும், செய்யும்படியாகவா கடவுள் இவர்களுக்கு இத்தனை தனத்தையளித்தார்! என்னே மூடமதி! சுய நலப்பிரியரும், பிறர்க்கிட்டுண்ணாப்பேதையரும் நற்கருமத்தை நாடாதவருமாகிய இம்மதிக்குருடரை பணக்காரர் என்று பகர்வதைவிடப் பணங்காக்கும் பைசாசங்கள் என்று சொல்வதே பொருத்தமன்றோ? தாங்களே மிகுந்த தரும சாலிகளென்றும், தமக்கு மரியாதை செய்யவும் கீழ்ப்பட்டு நடக்கவுமே மற்ற ஜனங்களைக் கடவுள் படைத்திருக்கிறாரென்றும், தமது விவேகமும் கல்வியுமே மிகச்சிறந்தனவென்றும், பூவுலகிலேயே தாம் ஒரு புதிய நாகரீகப்படைப்பென்றும் எண்ணியிருக்கும் இம்மௌடீகரைப்பிறர் எவ்வளவு கேவலமாக—இழிவாக—மதித்திருக்கிறார்களென்பதை இவர்கள் ஒரு சிறிதும் அறிவதில்லை. இப்படிப்பட்ட மூடர்கள் முகத்தில் தூங்கிவிழித்தால், பாலன்னம் உண்போனாயினும் அவனுக்குக் கூழ் கிடைப்பதும் அன்றைக்குக் குதிரைக்கொம்பாகிவிடும். மேலும் மூடர் சிலர், ஐந்தும் இரண்டும் ஏழென்றெண்ணத்தெரியாத எத்தகைய மூடராயிரு

ப்பினும், துஷ்டராயிருப்பினும், கொலைப்பாதகராயிருப்பினும், அத்தகையர் செல்வவான்களாயிருப்பின் அவர்களுடன் தாங்கள் சிநேகிக்கவேண்டுமென்றும்—மனம் கலந்து உறவாடவேண்டுமென்றும்— அவர்களுக்களவற்ற உபசாரங்கள் புரிந்து ஆனந்தப்படுத்த வேண்டுமென்றும் அவை தங்கள் கௌரவத்திற்கும்—படாடோபத்திற்கும் - ஏற்றதென்றும், பிரபல தனவந்தரல்லாத சாதாரண மனிதர் எவ்வளவு சர்ஜனராயிருப்பினும் தமது நெருங்கிய பந்துவாயிருப்பினும் கூட அவருடன் அளவளாவி நேசித்தல் தங்கள் அந்தஸ்துக்குக் குறைவென்று எண்ணுவதுமன்றி நடக்கையிலும் கூடக் காட்டுகின்றனர். ஆனால் ஆளைமயக்கும் சொக்குப்பொடிகளாகிய அரிவையர்கள்—லாவண்யயுவதிகள்—இருக்குமிடம்—குடும்பம்—சாதாரண அந்தஸ்துவாய்ந்ததாயிருப்பினும் அங்கு யாவருடனும் (பெண்களிடம்கூட) மனங்கலந்துறவாட விடுவதாயிருப்பின்—யதேச்சையாக மேயவிட்டவிவேதாயிருப்பின் (தங்கள் கௌரவம் படாடோபம் முதலிய அந்தஸ்துகளை அப்பாலெறிந்துவிட்டு) அக்குடும்பத்து மனிதர்களுடன் அளவளாவிப்புனலிற் புனல் கலந்தாற்போல ஒன்றுபட்டுக் கூடிக்குலாவிக்கொஞ்சுவார்கள். அப்போது அவர்கள் அந்தஸ்தும் கௌரவமும் எங்கு செல்லுமோ? ஏனோ இந்தப்பாசாங்கு? எதற்கோ இந்த பக்ஷபாதம்? இதுவா உத்தமர்களுக்கேற்ற நடக்கை? குணத்தைக் கண்டு கொஞ்சாது பணத்தைக்கண்டு கொஞ்சுவது பாமரர்களின் செய்கையல்லவா? மேலும் நமது பயனற்ற தேகம் எந்தச்சமயத்திலும் இறந்து படும் தன்மையுள்ளதென்றும், செல்வமும் அவ்வாறே நம்மைவிட்டுச் சீக்கிரம் செல்லக்

கூடியதென்பதையும் எண்ணிப்பார்த்து, கடவுள் தமக்களித்த தனத்தில் தமக்கு அவசியமானதுபோக மீதியை மெலிந்தவர் அங்க ஹீனர் முதலிய ஏழைகளைக் காப்பாற்றவும், தகுந்த கல்விக்கழகங்களை ஏற்படுத்தி நம் சிறுவர் சிறுமியர்க்கு கல்விதானம் செய்வதிலும், தலை சாய்ந்து வீழ்ந்துபோயிருக்கும் தாய்பாஷையாகிய தமிழை நிலைநிறுத்த (மூளையாலும் தனத்தாலும்) நூல்களை இயற்றவோ—ஒருவர் இயற்றிய நூலைப்பிரசுரிக்கவோ—முன் வந்துதவுவதிலும், செலவழித்தல் விவேகமும், ஒழுக்கமுமுள்ள மனிதராய்ப் பிறந்ததற்குப் பயன் ஆகும். சிலர், ஒருவர் இயற்றிய நூலை தனச்செலவு செய்து தாம் பிரசுரிப்பதால் தமக்கு எவ்வித நன்மையும், கௌரவமும், ஏற்படமாட்டாதென்று எண்ணுகிறார்கள். இது முற்றும் மடமையே என்று மதியூகிகள் உணருவார்கள். இவ்வித எண்ணமே நமது முன்னோரும் கொண்டிருப்பாராயின் தற்போது நாம் வாசித்து ஆனந்திக்கும் அநேக அருமையான நூல்கள் யாங்ஙனம் நமக்குக்கிடைக்கும்? நமது நாட்டில் புண்யசரிதமெனக் கொண்டாடும் "இராமாயணம்" வெண்ணெய்நல்லூர் சடையப்ப கவுண்டரின் நன்முயற்சியாலும் அளவற்ற தனவிரயத்தாலுமன்றோ நமக்குக் கிடைத்தது. நாம் வாசித்துக் கிருதார்த்தர்களாகக் காரணமாயிருக்கிறது. அந்நூலை அவர் இயற்றாவிடினும் பிரசுரிப்பதற்கேதுவாய் இருந்ததால் அவருக்குப் புண்ணியமும் புகழும் கண்யமும் ஏற்படவில்லையா? அவர் இறந்தும் இன்றைக்கும் இருப்பவராகவன்றோ கருதப்படுகிறார். இதுவன்றோ மனிதஜென்மமெடுத்ததற்குப்பயன். தற்காலத்திய நூல்கள் அவ்விதப்புண்ணிய சரித்

திரமன்றாயினும் உலகத்தவர்க்குச்சிற்சில நன்மைகளைத் தரக்கூடியனவாதலால் இந்நூல்களையும் பிரசுரிப்பவர்க்கு ஏற்றமும், புகழும், புண்ணியமும் உண்டாகுமென்பதில் ஐயமின்று. நான் பெண்பாலாயிருந்து இவ்வளவு தூரம் வார்த்தையாடியது தனவந்தரில் ஒருவராகிய தங்களுக்குக் கோபமுதிக்கலாம். ஆயினும் மூ--ரும் குடிகேடருமாகிய போலிப்பணக்காரர்களின் இயற்கைக் குணத்தைக் கூறுகிறேனேயன்றி அறிஞரைப் பழிக்கவில்லை. தருமம், கல்வி, தாய்பாஷையைக் காத்தல் முதலிய சத்கருமத்தில் ஈடுபட்டிருக்கும் சர்ஜ்ஜனராகிய தனவந்தரைத் திரிகரண சுத்தியாகப் போற்றிப்புகழ்ந்து வாழ்த்துகின்றேன்; என்றாள்.

சுவர்ண! நீ கூறிய விஷயங்கள் கூடியவரையில் நியாயமாகவே இருப்பதால் எனக்குக் கோபமில்லை. மேலும் என்மனைவி—(என் காதலி—) ஆகப்போகிற நீ யாது கூறினும் எனக்குச் சந்தோஷமே. என்னை விவாகம் செய்து கொள்ள உனக்குச் சம்மதம் தானே?

சுவர்ணம்பாள் :— அத்தான் விவாக விஷயத்தைக் குறித்துத் தங்கள் கேள்விக்கு பதிலளிக்க எனக்குப்பூரண சுதந்தரமில்லை. எனது பெற்றோரின் இஷ்டப்படி நான் நடக்கவேண்டியவளாயிருக்கிறேன்; என்றாள்.

இவ்வார்த்தையைக்கேட்ட கனகாசலம் ஆச்சர்யமும், பிரமிப்பும், அதிசயமும், அடைந்தவனாய், கண்களை அகல விரித்து மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு ஆ! என்ன!! என்ன!!! சுவர்ண! நீ ஏதோ மறதியாகக் கூறு

கின்ருய். இன்னொருமுறை நன்ருய் யோசித்துச்சொல்லு. உண்மையில் நீ உள்ளத்தில் நினைத்ததை விட்டு எதையோ கூறிவிட்டாய். ஒரு ஏழையான கன்னிகைக்கு இலக்ஷாதிபத்தியம் கிடைப்பதென்ருல் அதை அவள் விரும்பாமலிருக்க முடியாது; என்ருன்.

சுவர்ணும்பாள் :—ஓ. இல்லை. இல்லை. நான் உள்ளத்தில் நினைத்ததையே உறுதியாய்வெளியிட்டேன். இலக்ஷாதிபத்தியமல்ல கோடீஸ்வரியாவதாயினும் எனக்கு அக்கரையில்லை. எனது பெற்றோரைக்கேட்காமல் பதில் கூற முடியாது; என்ருள்.

அவள் அதிக ஏழையென்பதையும் கவனியாமல் தான் விவாகம் செய்துகொள்வதாகக் கூறியதால் முன்னிருந்ததை விடப்பன்மடங்கு கௌரவமும், பிரேமையும், தன்னிடம் சுவர்ணும்பாள் வைத்திருப்பாளென்றும், தான் செய்யப்போகும் இந்தப்பெரிய உதவிக்காக அவள் தனது நன்றியுள்ள வந்தனத்தைச் செலுத்துவாளென்றும், எண்ணிக்கொண்டிருந்த கனகாசலத்துக்கு, சுவர்ணும்பாளின் பதில் மிக்க ஏமாற்றத்தையும், அவமானத்தையும், உண்டாக்கியது. ஆகையால் அவன் யாதும் கூறவகையற்றவனுய் வாயைமூடி மௌன யோகத்திலிருந்தான்.

சுவர்ணும்பாள் :—அத்தான்! நான் இங்குற்று நெடுநேரமாகிறது. எனது அன்னையார் என்னைத்தேடுவார்கள், நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்; என்று கூறிவிட்டு அவ்விடம்விட்டு நீங்கினுள்.

ஒரு பெண் நம்மை அடிக்கடி சந்திப்பதையும், குளிர்ந்த பார்வையாய் அடிக்கடி உற்று நோக்குவதையும், புன்சிரிப்புடனும், சந்தோஷத்துடனும், மந்தஹாசமாய்ச் சம்பாஷிப்பதையும் முன்னிட்டு, அவள் நம்மைக் காதலிக்கிருளென்றெண்ணுவது பெரும் மூடத்தனம். மேற்பார்வைக்குத் தோன்றும் மாதிரிக்கு முற்றும் எதிரிடையாய் ஒருசமயம் அவளுடைய உள்ளம் இருக்கக்கூடுமென்பதை யோசியாமல் அநேக வாலிபர்கள் அவமானமடைவதுடன் சிலசமயம் உதையும், குத்தும், கொடுத்து உபசரிக்கப்படுகிருர்கள்.

---

## 11-வது அத்தியாயம்.

# எதிராளிகுடியை உறவாடிக் கெடுத்தல்.

---

எட்டாம் அத்தியாயத்திற் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒருநாள் ஆம் (பதினைந்தாம் தேதி வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு கமலாம்பாளும் கோகிலாம்பாளும் அவர்கள் வீட்டின் கூடத்தில் உட்கார்ந்து சுந்தரராஜுலுவைத்துரத்திய விஷயத்தைக் குறித்துச் சம்பாஷித்துக்கொண்டும் இடையிடையே நகைத்துக்கொண்டும் இருந்தார்கள். அப்போது யாரோ கமலம் கமலம் என்று

கூவிக்கதவைத்தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் தட்டி யவரின் கண்டத்வனியால் அவரை ஐயங்காரென்று அப்பெண்கள் அறிந்துகொண்டார்கள். உடனே கோகி லாம்பாள் அங்கு திருநீற்றுப்பெட்டியிலிருந்த விபூதியை எடுத்துச் சிறிது நீர்விட்டுக்குழைத்து நெற்றியில் பட்டை யாய்ப் பற்றுப்போட்டுக்கொண்டு ஓர் பாயில் படுத்துக்கொ ண்டாள். கமலாம்பாள் 'யாரது, எனக்கேட்டுக்கொண்டே மெதுவாய்ச்சென்று கதவைத்திறந்தாள். ஐயங்காரர் ஏன் ஒருவருமில்லை நான்தான்; என்று கூறிக்கொண்டே உள்ளே வந்தார். கமலாம்பாள், தாங்களா? வாருங்கள். வாருங்கள். தங்களை நெடுநாளாய்க் காணாமல் தங்கள் ஆருயிர்க்காதலி மிக்க அவஸ்தைப்படுகிறாள். என்று அவரை அன்பாகவும், உபசாரமாகவும், அழைத்துச் சென்றாள். ஐயங்கார் கூடத் திற்கு வருவதை யுணர்ந்த கோகிலம் அந்தோ அம்மா, அப்பா, எனப் பலவாறு பிதற்றிக்கொண்டு படுக்கையிற் புர ண்டாள். அவளின் அவஸ்தையைக்கண்ட ஐயங்கார் ஆ! கண்மணி! சுந்தரராஜுவின் பத்திரம் ரிஜிஸ்தரான மறு நாளே நான் ஒரு அவசர காரியமாக வெளியூர் சென்றேன். அங்கு சிலநாள் தாமதிக்கவேண்டியிருந்தபடியால் உன்னை மீண்டும் காண இத்தனை நாட்களாகிவிட்டன. ஆதலின் நீ ஆயாசமுறல் வேண்டாம். உனக்கு யாரால் என்ன ஆபத்து சம்பவித்தது? நினது அழகிய தாமரைப்புட்பம் போன்ற வதனம் ஏன் வாடி ஒளியிழந்திருக்கின்றது? மேலும் உன் நெற்றியில் யாதோ பற்றுப்போடப்பட்டிருக்கிறது அதன் விபரத்தை விளப்புவாய்? என்றார்.

கோகிலாம்பாள், நோயால் தான் கஷ்டப்படுவதைப்

போல் பாசாங்குசெய்துகொண்டு ஆருயிர்க்காதலரே! அடியாள் காலை முதல் இதுவரையில் தலைவலியால் தவிப்பாய்த் தவிக்கிறேன்; என்று மிக வருத்தத்தோடும் சோகத்தோடும் கூறினாள். ஐயங்காரர் பிரியே! இதற்காக நீ வருத்தப்படவேண்டாம். ஏதாவது ஓர் ஔடதம் தடவினால் சீக்கிரம் சௌக்கியமாய் விடுகிறது; என்று சமாதானமுரைத்து மீண்டும் அவளைநோக்கி சுந்தரி! நீ சுந்தரராஜுலுவைச் சீக்கிரமாய்த் துரத்தியதைக்குறித்து நான் ஆனந்தம்கொண்டேன்; என்று கூறிவிட்டு, வெங்கிடுபதிக் கவுண்டர் கோகிலாவின் வீட்டிற்கு வந்த விஷயத்தைத் தாம் எப்படியோ அறிந்திருந்தவராதலால் "கோகிலாம்பாள் நம்மிஷ்டப்படி நடக்க ஓர் 50000 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று" தாம் முன்னமே வெங்கிடுபதி கவுண்டரிடம் கூறியபடிக்கு ஒருவேளை ரூபாயை அவர் கோகிலாம்பாளிடம் கொடுத்துவிட்டாரோவென்ற தமது சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளும் உத்தேசத்துடன் கோகிலாவை நோக்கி காதலீ! இவ்வூர் வெங்கிடுபதி கவுண்டர் இங்கே வந்திருந்ததாகக் கேள்விப்பட்டேன். அவர் ஏதாவது உனக்குச் செலவிற்கு ரூபாய் கொடுத்தாரா? என்னென்ன விஷயங்கள் கூறினர்? அதன் விபரத்தை விளம்புவாய்? என்றார். ஐயங்கார் தன்னிடம் உண்மையாய்நடந்து கொள்பவராயிருந்தால் உனக்கு ஓர் ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுக்கவேணும்மென்று முன்னாடியே நான் வெங்கிடுபதி கவுண்டரிடம் கூறியிருந்தேன்; அந்த ரூபாய்களைக் கொடுத்தாரா என்று கேட்டிருக்கவேண்டுமென்றும், அப்படிக்கின்றி "உனக்குச் செலவிற்கு ஏதாவது பணம் கொடுதாரா" என்று சந்தேகமாய்க் கேட்டதை

யும், வெங்கிடுபதி கவுண்டரிடம் அந்த ரூபாய்களைத் தம்மி டமே கொடுக்கவேண்டுமென்று ஐயங்கார் கேட்டுக்கொண்ட தையும் யோசிக்கின், அவர் தன்னை ஏமாற்றி ரூபாய் ஐம்பதி னுயிரத்தையும் அவரே அமுக்கிவிடவேணுமென்று எண் ணியிருந்ததாகவும் கோகிலாம்பாளுக்கு ஐயமற விளங்கியது. இருப்பினும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் அந்தோ அன்பரே! அடியாளை அடிக்கடி இப்படிப்பட்ட விஷயங்களில் சம்பந்தப்படுத்துவதைக் குறித்து மிகவும் சஞ்சலப்படுகிறேன். சுந்தரத்தின் சொத்து முழுமையும் நாம் எழுதிவாங்கிக்கொள்வதில் வெங்கிடுபதி கவுண்டர் உத வியாயிருந்தால் அதற்குப் பிரதியாக நான் அவர் ஆசை நாய கியாயிருக்க என்னை உடன்படுத்துவதாகத் தாங்கள் வாக்கு றுதிசெய்ததின்பேரில் அவர், தான் பணத்தாலும் வாக்கா லும் உதவி செய்ததாகவும், அதற்காக நான் அவரின் அபி மான நாயகியாயிருக்கவேண்டுமென்றும், மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். ஆனால் நான் இப்படிப்பட்ட அற்பர் களை அருகில் சேர்ப்பவளல்ல. ஆயினும் தங்கள் வாக்குத்தத் தம் தவறிப்போகுமே என்று ஒருவாறு அவருக்கு உடன்ப டுவதாக ஒப்புக்கொண்டேன். இவ்வளவேயன்றி அவர் ஒரு பைசாவும் எனக்குக் கொடுக்கவில்லை. முன்னை நான் சுந்த ரத்திடம் சிக்கித் துரும்பாய் இளைத்தது போதாதென்று பின்னுமொரு பிசாசின் கையில் பிடித்துக்கொடுத்து விட் டீர். எனச் சில விஷயங்களைக் கூட்டியும் கழித்தும் பாசா ங்குபேசி மிகவும் பரிதபித்தாள். ஐயங்காரர் அவளருகில் நெருங்கிக் கண்மணீ! ஆயாசப் படவேண்டாம். சந்தர்ப் பம் அப்படியிருந்தது. சுந்தரத்தின் பூமி முழுதும் கிரய

மெழுதப் போதிய ஸ்டாம்பு பேபர் வாங்குவதற்கும், சப் ரிஜிஸ்திரார் சாக்ஷிகள் முதலானவர்களுக்குத் தக்ஷிணை கொடுக்கவும் ஏராளமான தனம் வேண்டியிருந்தது. நம்மிடமோ பணமில்லை. ஆகையால் வெங்கிடுபதி கவுண்டரைக் கொண்டு ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது. ஆயினும் பாதகமில்லை. இன்னும் சில நாட்களுக்குப் பிறகு வெங்கிடுபதி கவுண்டர் அவரது சொத்துக்கள் முழுமையும் உன் பெயருககு எழுதிவைக்கவேண்டுமென்றும், இன்றேல் நீ அவரின் ஆசை நாயகியாக இருக்கமுடியாதென்றும், இதற்கு முன் அவர் அக்காரிய விஷயமாய்க் கொடுத்த சொற்ப தனமும் இதுவரை அவர் இங்கு வந்து போனதற்குச் சரிப்பட்டுப்போயிற்றென்றும், ஆதலின் இனிமேல் அவர் உன் வீட்டிற்கு வரக்கூடாதென்றும் கண்டிப்பாய் கூறினல், அவர் முன்னமே சுந்தரராஜு ஏமாற்றப்பட்டிருப்பதை நன்கு உணர்ந்திருப்பதால், தாமும் அவனைப்போல எழுதிக்கொடுத்து எமாறுவதைக் காட்டிலும் இங்கு வராமலிருப்பதே உசிதமென்றும், தவிர தாம் இப்போது அடைந்த சொற்ப ஏமாற்றமே போதுமென்றும் எண்ணி, இங்கு வராது நின்றுவிடுவார், இவ்விஷயங்களை முன்னடியே உன்னிடம் கூற சாவகாசப்படாமல் போயிற்று. இவ்வாறு வெங்கிடுபதிகவுண்டரையும் எமாற்றிய பிறகு, நானும் நீயும் மதனும் ரதியும்போல் மனமகிழ்ச்சியோடு வாழலாம். ஆயினும், ரமணீ! மேற்கூறிய சம்பவங்கள் யாவும் ஒழுங்காய் நடைபெற்று நமது இஷ்டம் நிறைவேற சிறிதுநாள் தாமதமாகும். இனியும் உன்னைக்கூடிச் சுகிக்காமல் அவ்வளவு நாள் தாமதிக்க என்னால் இயலாது. தவிர நான் இதுவரை

உன்பால் கலவியின்பத்தையடைய எவ்வளவோ முறை கோரியும் நீ சுந்தரராஜு இங்கேயே சதா தங்கியிருப்ப தால் தகுந்த சமயம் கிடைப்பதில்லையென சமாதானம் கூறி வந்தாய். இப்போது சுந்தரமும் அடியோடு தொலைந்தத ஞல் இனி ஒரு நிமிடமும் தாமதியாது என்னைக் கட்டிச் சுகித்துக் காமனுடைய பாதையை தீர்க்கவேண்டும் கண் மணி என்று கூறி அவளைத் தழுவயத்தனித்தார்.

கோகிலம் :—அன்பா! என் உடம்புமிக அசௌக்கிய மாயிருப்பதால் அடியாளைத் தீண்டவேண்டாம். நாளையிரவு சரியாய் 11 மணிக்கு நீர் வெங்கிடுபதி கவுண்டரின் மாளி கையிலுள்ள அவரது சயன அறைக்குவந்தால் நாம் நெடு நாளாகக்கொண்ட ஆசையெல்லாம் வட்டியும் முதலுமாக நம்மிஷ்டம்போல் அனுபவித்து ஆனந்தமடையலாம். நான் முன்னமே அங்கு வந்திருக்கிறேன். வெங்கிடுபதி கவுண் டர் தமது உத்தியோக நிமித்தம் வெளியூர் சென்றிருக்கி ருர். நாளை மறுநாள் வந்துவிடுவார். ஆகையால் நாளை இரவு தான் நமது சேர்க்கைக்குத் தகுந்த சந்தர்ப்பம். அன்றிரவு முழுதும் நம்மிஷ்டம்போல் ஏகபோகமாய்க்கூடிக் கொள்ளை கொள்ளையாய் இன்பமனுபவிக்கலாம். தாங்கள் நாளை வருவதாகக்கூறி என் மனத்துள் காமத்தீயை வளர் த்துவிட்டுப்பின் வராமலிருந்துவிடக்கூடாது. நான் நாளை இரவு இங்கேயே சயனித்துக்கொள்ளலாமென்றும்கூட யோசித்தேன். ஆயினும் அது முடியாது. ஏனெனில் வெங்கிடுபதி கவுண்டர் தாம் ஊரில் இருப்பினும் இல்லா விடினும் எக்காரணத்தைக்கொண்டும் நான் என்வீட்டில்

சயனிக்கலாகாதென்றும், ஒரு வேளை சுந்தரராஜு வந்து தொந்தரவு செய்வானென்றும், ஆகையால் தமது வீட்டிலேயே சயனிக்கவேண்டுமென்றும் கூறியிருக்கிறார். உண்மையில் வெங்கிடுபதி கவுண்டரின் நேசம் நமக்கிருப்பதினாலேயே சுந்தரராஜு இங்கு வந்து தொந்தரவு செய்யாமலிருக்கிறான். ஆதலின் அவனது கோபம் முற்றிலும் அடங்கி நம்மைக்கண்டு அவன் பயப்படுகிறவரையிலும்—அவன் பூமி நம் சுவாதீனமாகும் வரையிலும்—நாம் வெங்கிடுபதி கவுண்டரின் நேசத்தைத் துறவாதிருந்து காரியமான பிறகு வேண்டுமானால் தங்களிஷ்டப்படி வெங்கிடுபதி கவுண்டரை ஏமாற்றிவிட்டு நாமிருவரும் சதிபதியென மருவி வாழ்ந்து மட்டில்லா இன்பத்தை அனுபவிப்போம். ஆதலின் நாளையிரவு நீர் அவசியம் அங்கேயே வரவேண்டும். இன்றேல் நம்நேசம் இன்றுடன் இறந்துவிடும். ஆகையால் நான் குறிப்பிட்ட நேரம் தாங்கள் வரத் தவறக்கூடாது; என்றாள். ஐயங்காரருக்கு கோகிலாவின் வார்த்தைமிக்க ஆனந்தத்தையும், இன்பத்தையும், மனோஹரத்தையும், அளித்தது. அவர் மிக்க பரவசத்தோடு ஆ! எனது அன்புறு உளமாம் கோவிலில் அமர்ந்திடும் அணங்கே! நின் கட்டளைப்படி சரியாய் நாளை இரவு 11 மணிக்கு நான் வரத்தவறமாட்டேன். என்று கூறிவிட்டு, பிரியே! சுந்தரராஜுவின் சொத்துக்களைக்கவர்ந்த பிறகு அதில் பாதியை என்பேருக்கு எழுதிக்கொடுத்துவிடவேண்டுமென நாம் செய்துகொண்ட ஒப்பந்தப்படிக்கு அதை எப்போது எழுதி வைக்கப் போகிறாய்? எனக்கேட்டார்.

கோகிலம்:— பிராணபதி! அடியாள்மீது தாங்கள்

அவநம்பகம் கொள்ளுதல் கூடாது. இன்னும் சிறிது நாட்களில் சுந்தரராஜுவின் பூமிகள் நம் சுவாதீனமானவுடன் தங்களிஷ்டப்படி எழுதிவைப்பதில் தடையில்லை. என்று கூறித்தனக்குத்தலைவலி அதிகமாய் இருப்பதால் தான் சற்று நிம்மதியாயிருக்க உத்தரவு கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டாள்.

ஐயங்கார்:—கண்மணி! அப்படியே செய். எனக்கும் சில அலுவல்களிருப்பதால் சென்று நாளை இரவு 11 மணிக்குச் சரியாய்த்தவறுமல் வருகிறேன். நீயும் அவ்வாறே வரவேண்டும் என்றுகூறி விட்டுத் தம் இல்லமேகினர்.

ஐயங்காரருக்குத்தான் முன் கூறிய வாக்குத்தத்தப்படி பாதி சொத்துக்களைக்கொடுக்க கோகிலாவிற்கு முதலிலிருந்தே மனமில்லை. தான் கொடாவிடில் ஒருவேளை ஐயங்காரர் தன்மேல் பகைகொண்டு சமயம் பார்த்துத் தனக்கும் வெங்கிடுபதி கவுண்டருக்கும் விரோதத்தை மூட்டிவைக்க முயற்சிப்பதுமன்றி, சுந்தரராஜுவிடம் சேர்ந்து நான் அவனை முற்றிலும் மோசம் செய்து கிரயபத்திரம் எழுதிக்கொண்டதாகவும், பணம் ஒரு பைசாகூடக் கொடுக்கவில்லையென்றும், அது விஷயமாய்க் கோர்ட்டில் தாவா செய்தால் தான் அவனுக்கனுகூல சாக்ஷியம் கூறுவதாகவும் ஐயங்காரர் தூண்டுதல் செய்யக்கூடுமென்றும், ஆகையால் ஐயங்காரரின் தொந்தரவின்றித்தான் நிம்மதியாக வாழவேண்டுமாயின் ஐயங்காரரை எப்படியாவது அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்றும், சிலநாட்களாக யோசித்ததுமன்றி அதற்குத் தகுந்த ஏற்பாடுகளில் சிலவற்றைச் செய்தும் பாக்கியிருக்

கும் சில ஏற்பாடுகளைச் செய்யவும் எண்ணியிருக்கும் கோகிலாம்பாள், தனதன்னையை நோக்கி அம்மா! நம் வெங்கிடுபதி கவுண்டர் வீட்டிலிருக்கும் மல்லகஜெட்டியாகிய மாரப்ப நாயுடுவைச் சீக்கிரம் அழைத்துவா என்றாள் கமலாம்பாள். அவ்வாறே வெளியே சென்று சிறிது நேரத்தில் ஓர் வாலிபனை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தாள். அவன் சுமார் இருபது வயதுள்ளவனாகவும், நல்ல சிவந்த மேனியுடையவனாகவுமிருந்தான். அவனது முகம் மிக்க சுந்தரமாகவும் மீசை தாடிகள் முளையாமலுமிருந்தது. அவனது தேகம் அதிக தடிப்பின்றியும் அதிக ஒல்லியாயில்லாமலும் நடுத்தரமாயிருந்தது. அவன் வரவைக்கண்ட கோகிலாம்பாள் மாரப்ப நாயுடுவை உட்காரும்படி செய்து, நாயுடு! நேற்று கவுண்டர் உன்னிடம்கூறிய விஷயம் முற்றிலும் எனக்குத் தெரியும். அக்காரியத்தில் பிரத்தியேகமாக நீ எனக்கொரு உதவிசெய்யவேண்டும். அப்படிச்செய்தால் அதற்காக நான் உனக்கு 1000 ரூபாய் இனும் அளிப்பேனென்று கூறி மீண்டும் அவன் செய்யவேண்டிய காரியங்களையும் மெதுவாய் அவன் செவியில் கூறினாள். மாரப்ப நாயுடுவும் மிக்க சந்தோஷத்துடன் அவள் வார்த்தைக்கிணங்கித்தான் அப்படியே செய்வதாய் ஒப்புக்கொண்டு அவளிடம் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டை நோக்கி நடக்கலுற்றான்.

## 12-வது அத்தியாயம்.

# துட்டிழந்த தொத்தனுக்குத் தொண்டுவேஷ காயம்.

காலை சுமார் 9 மணிக்கு விஜயநகரத்தின் பிரதான மான தெருக்களொன்றில் ஒரு வாலிபன் தளர் நடையுடன் நடந்துகொண்டிருந்தான். அவனது வதனத்தில் மிகுந்த துயரமும், வருத்தமும், பரிதாபமும், குடிகொண்டிருந்தன. வாலிபன் நேராய் சென்று அத்தெருவின் கோடியிலிருந்த "விநயகம் பிரஸ்" என்று எழுதிக்கட்டப்பட்டிருந்த ஒரு வீட்டிற்குள் புகுந்தான். உள்ளே கூடத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்திருந்த கதிர்வேலு கவுண்டர் வாலிபன் வரவை நோக்கி ஆ! சுந்தரராஜா! நீ இங்குற்றது மிக்க ஆச்சரியம். இதோ இந்த நாற்காலியிலுட்கார். நோட்டீஸ்களாவது, புஸ்தகங்களாவது பிரசுரிக்க வேண்டிய ஆர்டர் ஏதாவதுண்டா? அவ்விதமிருப்பின் மிக்க ஒழுங்காகவும், அழகாகவும், கூடியவரை குறித்த காலத்திலும், செய்து கொடுக்கிறேன். உம்மைப்போன்ற தனவந்தர்களின் ஆர்டரை மிக்க அன்பாகவும் மரியாதையாகவும் ஏற்றுக்கொள்வதே எனது வழக்கம்; என்றார்

அவரது வார்த்தைகளைக்கேட்ட சுந்தரராஜா அதிக துக்கமும், அவமானமும், அடைந்தவனுகி வருத்தத்துடன்

ஐயா! தங்களுடைய உபசரிப்பையும் மரியாதையையும் ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையோனாக ஒரு காலத்தில் இருந்தது உண்மையே. தற்காலம் நான் அத்தகைய அந்தஸ்துடையேனல்லேன். ஆதலின் நீங்கள் கூறியபடி நான் எந்த ஆர்டரையும் கொடுக்க இங்குவரவில்லை. நான் தங்கள் ஆபீசில் வேலைக்கமர்ந்துகொள்ளும் உத்தேசத்துடனேயே இங்கு வந்தேன். தாங்கள் எனக்கு என்ன சம்பளம் கொடுத்தாலும் சரி. சந்தோஷமாய் அதைப்பெற்றுக்கொள்ளுகிறேன் என்று கண்களில் நீர் கலங்கக் கூறினான்.

சுந்தரராஜு கவுண்டனின் வார்த்தைகளையும் துயரமிகுந்த அவனது வதனத்தையும் நோக்கிய கதிர்வேலு கவுண்டர் மிகுந்த பரிதாபமுடையோராகி என்ன! சுந்தரராஜு! நீ கூறுவது எனக்கொன்றும் விளங்கவில்லை என்றார்.

சுந்தரராஜு கண்களில் நீரை வடித்துக்கொண்டே தான் கோகிலம்வீடு சென்றதுமுதல் அடிபட்டு வெளிப்போந்தவரை அவரிடம் விபரமாகக் கூறினான்.

சுந்தரராஜு ஏமாறி ஏழையாய்ப்போன விஷயத்தை உணர்ந்த கதிர்வேலு கவுண்டர் அதிக துயரமும், இரக்கமும், உடையவராகி சுந்தரராஜு! வறுமையுடையோனாக ஆகிவிட்டோமென்று வருந்தற்க. இதோ என்னருகிலிருக்கும் சிறுமியைத்தவிர எனக்கு வேறு குழந்தை யில்லை. ஆதலின் நீ எனது குமாரன்போலவே எனது வீட்டிலுள்ள ஆகாரத்தை எங்களுடனிருந்து புசித்துக்கொண்டு யாதொரு கவலையுமின்றிச்சுகமே இருக்கலாம். எனது வீடு முதல்

சகலமும் இன்று முதல் உன்னுடையதாகவே பாவிக்கவும். என்று அவனை பலவந்தமாக இழுத்துவந்து ஒரு நாற்காலியிலுட்காரும்படி செய்தார்.

சுந்தரராஜு தனது கண்களில் வடியும் நீரைத் துடைத்துக்கொண்டே கதிர்வேலு கவுண்டரை நோக்கி ஐயா! தாங்கள் கூறிய பரோபகாரமும், தயையும், கருணையும், நிறைந்த வார்த்தைகளுக்கு நான் மிகவும் நன்றியறிதலுள்ள வந்தனம் செய்யக்கடமைப்பட்டவனுயிருக்கிறேன்.

பெரியோர்கள் சம்பாதித்த புகழ்பெற்ற பூஸ்திதியை விலைமாதுக்குக் கொடுத்து விரயப்படுத்தியும்! விலைமகள் வீடே கதியென்று திரிந்து வேணதெல்லாம் கொடுத்தும்! தகப்பனுர் தேடிய மேலான தனத்தையெல்லாம் தருமத்திற்கியாது தாசிக்குக் கொடுத்தும் எனது பணத்தை பாழாக்கியதுமன்றி தங்கள் தனத்தையும் நான் தாராளமாய் அனுபவிப்பது தருமமல்ல. நான் உண்ணும் ஒவ்வொருபிடி அன்னமும் நான்பட்ட பிரயாசையின் பலனுக இருக்கவேண்டும். அதுதான் நான் செய்த அடாத தப்பிதத்திற்குத் தகுந்த தண்டனையாகும். எனது அபிப்பிராயம் தங்களுக்குச் சம்மதமாயின் எனக்கு ஓர் வேலைகொடுங்கள். இன்றேல் ஒரு தொழிலுமின்றி தங்கள் அன்னத்தை உண்ண நான் ஒருபோதும் ஒருப்படேன் என்று கூறினுன்.

கதிர்வேலு கவுண்டர்:—எவ்வளவு கூறியும் சுந்தரராஜு ஒப்புக்கொள்ளாமையால் மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகவும், தமது ஆபீசில் வேலை

செய்யும்படி கூறியதுமன்றி அன்றுமுதல் (Compositor) எழுத்துகள் எடுத்துச் சேர்க்கும் வேலையை, அவனுக்குக் கற்றுக்கொடுக்கும்படி ஆட்களுக்கு உத்தரவு செய்தார். சுந்தரராஜுவும் தக்ஷணமே தனது வேலைக்குப் பிரவேசித்தான்.

சுந்தரராஜு சென்றதும் சுவர்ணம்பாள் தன் தந்தையை நோக்கி தந்தையே! இவர் முன் துர்விஷயத்திலீடுபட்டிருப்பினும் தற்போது அவரது மனப்பான்மைமிக்க தூய்மையாகவும், தான் மதிப்புள்ளதாகவும், குற்றத்தை உணரக்கூடியதாகவுமிருக்கின்றது. ஆகலின் இவருக்கு அவசியம் உதவிசெய்ய வேண்டுவது நமது கடமை என்றாள். நிற்க.

சுந்தரராஜு கோகிலாம்பாளால் ஏமாற்றப்பட்டபின், முன் அவனிருந்த வீட்டைத்தவிர வேறு சொத்துக்கள் ஒன்றும் இல்லாமற் போய்விட்டது. ஒரு வேளை அன்னத்திற்கும் அவதிப்படும் நிலைமையிலிருந்தான். அப்படியிருந்தும் தன் முன்னோர் சம்பாதித்த பூஸ்திதியைத்தான் பாழாக்கியதே பெரிய தப்பிதமாயிருக்க அவர்கள் அரும்பாடுபட்டு அமைத்த வீட்டை விலைக்குக் கொடுப்பதாவது, குதுவை வைப்பதாவது கொஞ்சமும் சரியல்லவென்றும், தனது காலக்ஷேபத்திற்கு கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பது தான் தான் செய்த தப்பிதத்திற்கு தண்டனையென்றும் நினைத்து, முற்கூறிய வேலையை ஒப்புக்கொண்டு மிக்க ஒழுங்காகவும் உத்தமமாகவும் நடந்து வந்தான்.

குமரகுருபரன் துணை.

# நோட்டீஸ்.

ஓ சகோதர சகோதரிகளே!

உங்களுடைய அழகான உருவங்களைப் போட்டோ எடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஆவல் உங்களுக்கில்லையா? இப்பூவுலகில் மனித ஜென்ம மெடுத்த ஒவ்வொருவருக்கும் அத்தகைய ஆவல் தாகம் இல்லாமலிராது. உங்களது அழகான உருவத்தின் பிரதி பிம்பத்தைக்கண்டு ஆனந்தமடைய இதுவே ஏற்றதருணம், தற்கால நாகரீகத்துக்கு ஏற்றவாறு மிக்க அழகாகவும் சொகுசாகவும் போட்டோ எடுத்துக் கொடுக்கப்படும். போட்டோ எடுத்துக்கொள்ள வேண்டுமென்னும் விருப்பமுள்ளவர்கள் மிகவும் அவசரமானசமயம் தவிர எப்பொழுதும் நான்கு அல்லது இரண்டு நாட்களுக்கு முன் தகவல் கொடுப்பது நன்று. என்லார்ஜ் முதலானதும் மிக அழகாகச் செய்து கொடுக்கப்படும்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ¼ கால் சைஸ் | ... | 2 | 8 | 0 |
| ½ அரை சைஸ் | ... | 5 | 0 | 0 |
| 1 முழு சைஸ் | ... | 10 | 0 | 0 |

S. P. K. நஞ்சப்ப கவுண்டர்
ஹார்மோனியம் மேக்கர் & போட்டோகிராபர்,
பசுவேகவுண்டன் புதூர்.
கள்ளிபட்டி போஸ்டு
கோபிசெட்டிபாளையம் மார்க்கம்.

# SWARNA SUNDARAM

## AN ILLUSTRATED DETECTIVE TAMIL NOVEL.

## PART II.

# சுவர்ண சுந்தரம்

ஓர் துப்பு அறியும்

இனிய தமிழ் நாவல்

இரண்டாம் பாகம்

*By* S. P. K. NANJAPPA GOUNDER

Author of "RATHAI"

இஃது

பசுவேகவுண்டன்புதூர் 'ராதை'

— அல்லது —

'தைரியமுள்ள கன்னிகை' என்னும் நாவலை இயற்றிய

**S. P. K. நஞ்சப்ப கவுண்டர் அவர்களால்**

இயற்றப்பட்டது

கோபிசெட்டிபாளையம்

'மணியன்' அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

Rights Reserved] 1925 [விலை ரூ. **1-0-0**

Postage Extra.

21/5/35

ஓம்

வேலுமயிலன் துணை.

# சுவர்ண சுந்தரம்

## ஓர் துப்பு அறியும் இனிய தமிழ் நாவல்

## இரண்டாம் பாகம்.

---

இஃது

சத்தியமங்கலம்

தமிழ் பண்டிதர், S. A. பத்மனாபையர் அவர்கள்

மாணாக்கராகிய

---

பசுவேகவுண்டன்புதூர்

"ராதை" அல்லது "தைரியமுள்ள கன்னிகை"

என்னும் நாவலை இயற்றிய

**S. P. K. நஞ்சப்ப கவுண்டரால்**

**இயற்றப்பட்டது.**

---

கோபிசெட்டிபாளையம்

"மணியன்" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

காப்பிரைட் ரிஜிஸ்டர்ட்

விலை ரூ. 1-0-0]     1925     [தபால் சார்ஜ் வேறு

Printed at the

MANIAN PRESS,

Gobichettipalayam.

## 13-வது அத்தியாயம்.

# தொந்திவயிறனுக்குச் சோபன முகூர்த்தம்.

அதிகாலை 5 மணிக்கு ஐயங்காரர் அவசரமாக எழுந்து தமது ஆத்துக்காரி வீட்டுக்குத்தூரமானதால் சமையல் செய்ய ஆரம்பித்தார். அவர் சதா கோகிலாவின் பேரிலிருக்கும் தம்மனத்தை எவ்விஷயத்திலும் திருப்ப இயலாதவராய் உப்பைப் போடவேண்டிய சமயம் புளியைப்போட்டும், புளியைப் போடவேண்டிய சமயம் மிளகாயைப்போட்டும், சர்க்கரை சேர்த்தவேண்டிய பதார்த்தத்துக்குப் புளியைச் சேர்த்தும், புளியைச் சேர்த்தவேண்டிய பதார்த்தத்துக்கு சர்க்கரையைச்சேர்த்தும், ஆத்திரத்தால் கண்டபடி செய்து ஒன்றிரண்டாய்ச் சமைத்து முடித்தார். அப்போது கிட்டே இருந்த கலெக்டர் ஆபீசில் மணி பனிரண்டு அடித்தது. அட இழவே அதற்குள் மணி 12 ஆகிவிட்டதே என மிகுந்த அவசரமாகவும் ஆத்திரமாகவும் அம்பட்டன் கடைக்கு ஓடினார்; ஐயங்கார். அங்கு ஏழெட்டுப்பெயர்கள், தங்களுக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் மனிதர்களின் குடுமிகளை இடதுகைகளால் பற்றிக்கொண்டும் வலதுகைகளில் கத்திகளை வைத்துக்கொண்டும் பெரும்போர் புரிந்துகொண்டிருந்தார்கள். ஐயங்கார் தம்முடன் போர்செய்ய ஆளில்

லேயே எனத்தேடினார். அங்கோர் மூலையில் ஒருவன் தனியே இருக்கக்கண்டு அவனிடம் நெருங்கி அடே ஷோக்காகவும் சீக்கிரமாகவும் எனக்குச் க்ஷௌரம் செய்வாயா? கூலி என்ன கேட்கிறாய்? என்றார். அவன் சாமிகளே! பலே சொகுசா சவரம் பண்ணறேனுங்க. ஒரே நிமிசம் உக்காருங்க. சவரம் பண்ணப்பண்ண நீங்க குறட்டை விட்டுத் தூங்கணுங்க. உங்க இஸ்டம் என்ன குடுத்தாலும் சரிங்க; என்றான். ஐயங்கார் தமது தொந்தியைத் தட்விக்கொண்டு அவன்முன் உட்கார்ந்தார். அவரது சுவாசம் ஓடிவந்த வேகத்தால் கொல்லன் உலைத்துருத்திபோல் புஸ், புஸ் என்று ஊதிற்று. கும்பகர்னன் நித்திரை செய்கையில் அவனை எழுப்ப வந்த சேனைகள் அவன் மூச்சுக்காற்றின் வயப்பட்டு சுவாசத்துடன் நாசிக்குள் செல்வதும் வெளியே தள்ளப்படுவதும் மீண்டும் உள்ளே இழுத்துக்கொள்வதுமாக அச்சுவாசம் அச்சேனைகளை அல்லற்படுத்தியவாறு நம் ஐயங்காரரின் சுவாசமும் அவருக்கு முன்னால் இருந்த நாவிதச் சின்னானை முன்னும் பின்னும் இழுத்துத் தள்ளத் தலைப்பட்டது. ஆயினும் அவன் மிக்க தீரமாக உட்கார்ந்து தனக்கு ஆதாரவாக ஐயங்காரின் ஐந்தாறு மயிரையும் சுருட்டிப்பிடித்துக்கொண்டு தன் அருகில் கிண்ணத்திலிருந்த தண்ணீரை யெடுத்து அவர் தலையில் அபிஷேகம் செய்தான். பிறகு தன் பொத்தல் அடப்பத்திலிருந்த ஆறு மாதத்துக்கு முன் சாணைபிடித்த கத்தியை யெடுத்து துடையில் இரண்டு தட்டுத்தட்டி க்ஷௌரம் செய்ய யத்தனித்து மண்வெட்டியால் பயிர்களைச் சீவுவதுபோல் ஐயங்காரர் தலைமயிரைக் கத்தியால் எடுத்தான். அவன் முன் கூறிய வார்த்

தையை நம்பிய ஐயங்கார் குறட்டைவிட்டுத் தூங்குவதை விட்டு எரிச்சல் பொறுமல் அடே என் பிராணன் போகு தடாவென்று கூ! கூ! வெனக் கூவினர். அவர் கூச்சலைச் சிறிதும் மதியாமல் சாமிகளே! இப்போதா சாணெ புடிச் சேனுங்க. இன்னு மொளங்கு உதிரில்லேங்க. இருக்க இருக்க சரியாப்பூடுங்க. என்று சமாதானம் கூறிக்கொண்டே தன் வேலையை விடாமல் செய்து அவர் தலையில் அநேக இடங்களில் காயமுண்டாக்கி இரத்தப்பிரவாக மோடும்படி செய்தான். ஐயங்காருக்கு வேறுவிதியில்லா மையால் அவற்றைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தார். இவ்வளவு சம்பிரமத்துடன் க்ஷவரம் முடிந்தது. ஐயங்காரர் எழுந்து தம் இடுப்பிலிருந்த இரண்டணவை எடுத்து சின்னான் மேல் வீசி எறிந்துவிட்டு ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி ஓடினர். வழியிலுள்ள குளத்தைக்கண்டார். மளமளவெனக் குளத்திலிறங்கினர். முழுகி முழுகி ஸ்நானம் செய்தார். கரையேறி வீட்டை நோக்கி வேகமாக நடந்தார். வழியிற்காணும் சிநேகிதர்களும் பந்துக்களும் என்ன வார்த்தை கேட்பினும் சரியான விடையிறுக்காமல் கோகிலாவைக் கட்டிச்சுகிக்க வேணுமென்ற பேரவாவே அவரது பெருத்த ஜெபமாகையால் யாவருக்கும் ஆம் ஆம் என்றே பதிலளித்தார். வீட்டையடைந்ததும் மூன்று பைசா நாமக்கட்டியை முற்றிலும் உறைத்து நெற்றியில் பட்டை நாமம் பாக்கவைத்தார். சாப்பிட ஆரம்பித்து இலைபோட்டுப் பதார்த்தங்களைத் தாமே பரிமாறிக்கொண்டார். எதிரிலுட்கார்ந்து பதார்த்தங்களோடு போஜனம்செய்ய ஆரம்பித்து பக்கத்திலுள்ள ரசத்தையெடுத்து

வார்க்க மறந்து டம்ளரிலுள்ள ஜலத்தையெடுத்து வார்த்துக் கொண்டார். பிசைந்தார் உருட்டினர். எடுத்து எடுத்து வீசினர். வாய்திறந்து திறந்து மூடியது. கோகிலாவுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசவேணுமென்ற பேராவாவானது முன்னமே அவரது உள்ளத்திலும் வயிற்றிலும் நிரம்பியி ருந்தபடியால் சாதம் சென்று தங்க இடமில்லை. ஆதலின் வழக்கப்படி போஜனத்தில் நாலிலொருபாகமே உட்கொ ண்டு கையலம்பினர். அவரது அவசரத்தையும் படபடப் பையுங்கண்ட அவரது பத்தினி என்ன இன்று இவ்வளவு ஆத்திரம் என்ன ஆத்திரப்பட்டும் அமுதுக்கு வழியில்லை. விடிந்தால் திருவமுது சமைக்க ஒருபடி தண்டுலம் இல்லை யென்பது நேக்கன்று தெரியும். அந்தப்பாழும் முண்டை தாசி வீட்டில் தினம் முட்டிக்கொண்டழுகிறீர்; என்று தன் வாழ்க்கைக் கஷ்டங்களை வழவழ என்று பேசினள். அடி அறிவில்லா அசடே! நிறுத்து இன்னும் பேசினல் நேக்குக் கோபம் வந்துடும். எதாமொரு காரியத்திற்குப் போகும்போதுதான் என்னிடம் வாது செய்வது உன் வழக் கம். என்று கோபத்தோடு கூறிவிட்டுத் தமக்காகவே தறி யிட்டு நெய்யப்பட்ட 16 முழம் பட்டுக்கரை வேஷ்டியை யெடுத்து பஞ்சகச்சம் வைத்துக் கட்டினர். ஒருசாண் அகல சரிகையுள்ள அங்க வஸ்திரத்தை மேலே வல்ல வாட் டாக அணிந்துகொண்டார். எதிராத்து லக்ஷ்மி வீட்டில் அவர்கள் பாட்டன் நாளில் வாங்கிய பிஸ்வநாத ஆயிலில் சிறிது யாசகம் வாங்கித்தம் குடுமிக்குத் தடவிச் சிறு சுண் டைக்காய் பருமன் முடியிட்டுக்கொண்டார் முன்னமே தயார்செய்து வைத்திருந்த மூன்று முழம் மல்லிகைப்பூ

மாலையை எடுத்து அச்சிறு குடுமியில் இழுத்து இழுத்துச் சுற்றினார். தம் பாட்டன் காலத்தில் செய்த பளிங்குக் கல் விழைத்த கடுக்கன்களைப் புளியிட்டுத் தேய்த்துச் சுத்தி செய்து செவிகளிலணிந்துகொண்டார். அவரது சிங்காரம் பெரும்பாலும் முடியவும்மணி ஏழடிக்கவும் சரியாயிருந்தது

ஐயங்கார், அப்பாடா இனிப்பயமில்லை. குறித்த காலத்தில் கோகிலாம்பாளைச் சந்தித்துக் கட்டிக்கட்டி அணைத்து கன்னத்தில் முத்தியிடலாமெனக் கரைகடந்த சந்தோஷம் அடைந்தார். இதற்குமுன் அவர் உள்ளத்திலிருந்த அச்சமும் பீதியும் அப்பால் அகன்றன. அவரது உள்ளத்தில் அளவிலா ஆனந்தம் பொங்கிப்பெருகி வழிந்தது. உண்மையில் சில நிமிஷம் துள்ளித் துள்ளிக்குதித்தார். தாம் கோகிலாம்பாளைச் சந்திக்கக் குறிப்பிட்டகாலம் நெருங்க இன்னும் மூன்றுமணி சாவகாசமிருப்பதால், அதற்குள் தமது சிங்காரிப்பை இன்னும் நன்றாய்ச் சீர்ப்படுத்திக்கொள்ளலாமெனச் சிந்தையிலெண்ணினார். கூடத்திலிருந்த கண்ணாடியருகில் நெருங்கி முகத்தைத் திருப்பித் திருப்பிப்பார்த்தார். தம் அழகைத்தாமே மெச்சிக்கொண்டார். பல பிரபுக்கள் கோகிலாம்பாளுக்கு அநேக திரவியங்கொடுத்து அடையும் ஆனந்தத்தை தாம் அரைப்பைசா செலவின்றியே அனுபவிக்கப் போவதைக் குறித்து உள்ளூற மகிழ்ந்தார். அப்போது மணி எட்டடித்தது. இதுவரை அவருக்கு ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு நிமிடமாகக் கழித்த காலம், இப்போது ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு மணியாகப்பெருகிற்று. மணி ஏழு அடித்து நெடுநேரமாகியும் இப்போது எட்டுமணியே

அடித்திருப்பதால் மணி அடிப்பவன் ஒருவேளை ஏமாந்தி ருப்பானோவென எண்ணினர். கூடத்தில் அப்படியும் இப் படியும் உலாவினர். கோகிலாம்பாளைச் சீக்கிரம் காண வேண்டுமென்ற ஆவலினால் அவருக்கு ஒவ்வொரு நிமிட மும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றினது. தாம் கோகிலாம் பாளைச் சந்தித்ததும் முதலில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற விஷயத்தைக்குறித்து எண்ணமிட்டார். முதலில் அவளை அழுந்தத்தழுவிக் கன்னத்தில் முத்தியிட்டு அதரத்தைச் சுவைக்கவேண்டுமென்றும் பிறகு அவளை அப் படியே தூக்கித்தம் மடிமீது வைத்துக்கொண்டு அவளுடன் கொஞ்சிக்கொஞ்சிச் சம்பாஷிக்கவேண்டுமென்றும் எண்ணி னர். மணி ஒன்பது அடித்தது. சீ முட்டாள் கழுதை இவ்வளவு நேரம் சென்றும் ஒன்பது மணியா அடிப்பது? ஒன்று இரண்டு ஒழுங்காய் எண்ணத்தெரியாத உபயோக மற்ற பயலுக்கு உத்தியோகம் கொடுத்தவன் ஒரு முழு முட்டாள்; என்று கோபித்துக்கொண்டார். மணி அடித் தவனை வாயில் வந்தபடி திட்டினர். மனப்பூர்வமாய்ச் சபித் தார். தாம் எப்படியும் முயன்று கூடிய சீக்கிரம் அவன் வே லையைத் தொலைத்துவிடுவதாகச் சபதம் கூறினர். இவ்வாறு அவர் காலத்துடனும் மணி அடித்தவனுடனும் நெடு நேரம போராடிக்கொண்டிருக்கையில் மணிபத்து அடித்தது. மேலே, பத்து மணியென ஐயங்கார் ஒரு குதி குதித்தார். அவரது உள்ளத்தில் ஆனந்தம் நிரம்பியது. உடனே அவர் தமது வெள்ளிப்பூண்கட்டிய பிரம்பை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டார். வழியில் ஜன நடமாட்டம் பெரும்பாலும் நின் றிருந்தபடியால் ஐயங்கார் யாதொரு இடையூறுமின்றி வேக

மாய் நடந்தார். சிறிது நேரத்தில் வெங்கிடுபதி கவுண்டரின் மாளிகையருகில் நெருங்கி முன் வாசல் கேட்டண்டை சென்றார் இரட்டைக் கதவுகளில் ஒன்று மூடப்பட்டும் மற்றொன்று திறந்தும் இருந்தது. முன்வாசற் காவலனாகிய கந்தன் சமீபத்துள்ள திண்ணைமேல் படுத்து நித்திரை செய்து-கொண்டிருந்தான். அவன் தூங்குவது ஐயங்காருக்கு உட்செல்ல மிக்க சவுகரியத்தைக்கொடுத்தது ஓசைப்படாமல் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து நடந்தார். வெங்கிடுபதி கவுண்டரின் மாளிகை சுமார் அரை மைல் விஸ்தீரணத்தில் அமைத்துக் கட்டப்பட்டிருந்தமையால் இவர் அநேக முற்றங்களையும் அறைகளையும் கூடங்களையும் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. வேலைக்காரர்கள் யாவரும் அங்கங்கே படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தார்கள் விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டு இரண்டொரு விளக்குகள் மட்டும் மங்கலாக எரிந்துகொண்டிருந்தன. மாளிகை முற்றும் சப்தமின்றி நிச்சப்தமாயும் அமைதியாயும் இருந்தது. அங்கே உறங்குகிறவர்கள் மூச்சுவிடும் சப்தமும் குறட்டைவிடும் சப்தமும் மாத்திரம் ஐயங்கார் செவிகளில் விழுந்தன. வெங்கிடுபதி கவுண்டரின் மாளிகையில் எங்கும் அநேக செடிகள் தொட்டிகளில் வைத்து வளர்க்கப்பட்டிருந்தபடியால் மங்கலான வெளிச்சத்தில் அவைகளின் நிழல்கள் அசைந்தசைந்து ஆள் நிற்பதுபோல ஐயங்காரைப் பயமுறுத்தின. அவர் தம்மால் இயன்றவரை மெல்ல மெல்ல அடிவைத்து நடந்து கோகிலாம்பாள் குறிப்பிட்ட அறையருகில் வந்தார். இன்னும் சிலநிமிஷத்தில் தாம் கோகிலாம்பாளைக கட்டியணைத்துத் தம்மிஷ்டப்படி அனுபவிக்கப் போகிறோ

மென்கிற ஆசையினல் அவரது அவயவங்கள் பதறின. அப்போது அங்குள்ள கடியாரத்தில் மணி பதினென்று அடித்தது. கோகிலாம்பாள் அவ்வரையினுள் தான் இருப்பதாகக் கூறிய நேரமும் அதுவேயாதலால் அவள் அவசியம் உள்ளே இருப்பாளென அதிக ஆத்திரம் கொண்டார். கதவருகில் சென்று மெதுவாகக் கதவைத் தொட்டார். பூட்டிடப்படாமலிருந்தபடியால் அக்கதவுகள் உடனே திறந்து கொண்டன. அறை முற்றிலும் கற்றை கற்றையாய்த் திரட்டலாமென்னும்படி கங்குல் நிறைந்திருந்தது. ஐயங்கார் அவ்வறையின் அமைப்பை முன்னமே அறிந்திருந்தவராதலால் அவ்வறையில் போடப்பட்டிருக்கும் கட்டிலை நோக்கி மெதுவாக நடந்தார். அவரது நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது. ஸ்வாசம் தடுமாறியது. தாம் இரண்டொரு நிமிடங்களில் அனுபவிக்கப்போகும் எல்லையற்ற ஆனந்தத்தை நினைத்து மிக்க பரவசத்துடன் கட்டிலருகில் நெருங்கினர். ஆ கண்மணி! நீ கூறிய நேரத்திற்கே தவருமல் வந்துவிட்டேனென்று மெதுவாகக் கூறிக்கொண்டே கட்டிலின்மேல் உட்கார்ந்தார். அங்கு ஏற்கனவே சயனித்துக் கொண்டிருந்த பெண்மணி யாதுகாரணத்தாலோ பதில் கொடுக்கவில்லை. ஆதலால் ஐயங்காரர் மிகவும் மனங்கலங்கி, கண்ணே! கோகிலம்! என்மேலென்ன கோபமா? நான் உனக்குக் கோபம் வருமாறு இழைத்த குற்றமென்ன? என்று சொல்லிக்கொண்டே அம்மங்கையின்மீது சாய்ந்து முகத்தில் முத்தமிட்டார். கன்னத்தைக்கடித்தார். அதரத்தைச் சுவைத்தார். ஆனந்தம்பொங்கும் அன்பின் கடலே என அவளை அணைத்து இறுகத்தழுவினர். கண்மணி!

(188—ம் பக்கம் பார்க்க)



ஐயங்காரர் தம் ஆகத்திலுற்ற அவஸ்தையையும் பொருட்படுத்தாது
இரத்தத்தை ஒழுக்கிக்கொண்டே மேஜைகள் பேரிலும் நாற்
காலிகள் பேரிலும் விழுந்து விழுந்து—ஓடுகிறார்.

நின் அன்பின் பெருக்கால் என் ஜென்மம் இன்றே சாபல்ய மாயிற்றெனக் கொஞ்சிக்கொஞ்சிக் குலவினர். காதலி! நின் அழகிய வாயைத்திறந்து அமுதமன்ன மொழிகளை ஆடாம லும், அடியேனைக்கட்டித்தழுவி கன்னத்தில் முத்தியிட்டு என் காதலைத்தணிக்காமலும் மௌனம் சாதிப்பதென்ன மாயமோ? இதுஞாயமோ? அடி ஆசைப்பெருக்கே என அவளைக்கட்டியணைத்து அவளின் குன்றனைய பயோதரங் களைத் தம் கரங்களால் பற்றினர். அவைகள் இதற்குமுன் தம் ஆகத்தில்பட்டு அமுங்கிக்குழைந்து ஆனந்த பரவச முண்டாக்கினாற்போல் கடினமிருதுவாயின்றி கருங்கற்கள் போல் கைகளுக்கு உறுத்தின. அச்சம்பவம் ஐயங்காருக்கு அளவற்ற ஆச்சர்யமுண்டாகியது. ஆயினும் அவர்மனம் அதை முற்றும் நம்பவில்லை. மீண்டும் அப்பெண்மணியைத் தம் கரங்களால் இறுகத்தழுவினர். ஐயங்காரர் தழுவிய தட்சணமே அம்மடந்தையும் ஐயங்காரரைத் தன் இருகரங் களால் தழுவி இறுக்கினள். அது அவருக்கு அளவிலா ஆனந்தத்தை அளித்தது. ஆயினும் சிறிது நேரம் தாழத் தாழ அப்பெண்மணியின் கரங்கள் ஐயங்காரரை மிகவும் அழுந்த இறுக்கின. அப்பிடிப்பு அழகிய பெண்மணிகளின் மெல்லிய கரங்களின் பிடிப்புப்போலின்றி ஓர் தடித்த ஆட வனின் முறட்டுக்கரங்கள் போன்று தோன்றின. அதனல் ஐயங்காரருக்குச் சிறிது அச்சமுதித்தது. அவள் கைகளி லிருந்து விடுவித்துக்கொள்ள எழுந்தார். ஆயினும் அப் பெண்மணி பலமாய்ப்பற்றி ஐயங்காரை இறுக்கவே அவர் சரியாக மூச்சுவிடமுடியாமல் திணறினர். தேகத்தில் அதி கம் வலி உண்டாகியது. அவர் பாதை பொறுக்கமுடியா

மல் தம்மை விடுவித்துக்கொள்ள அவளோடு கட்டிப்புரண்டு யுத்தம் செய்தார். அவளும் அவரை விடாமல் இறுகப் பற்றி மீண்டும் ஐயங்காரை அல்லற்படுத்தினள். இருவரும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் கட்டிப்புரண்டு கட்டிலினின்றும் கீழே விழுந்தார்கள் அப்பெண்மயிலின் மார்பில் பருத்துப் புடைத்திருந்த ஸ்தனங்களின் முகடுகள் ஐயங்காரரின் மார்பில் அம்புபோல் தைத்து அதிக அவஸ்தைப் படுத்தின. அவர் வலி பொறுக்காமல் ஆ, ஊ வென மெது வாய்க் கூவினர். அவ்வாறு அவர்கள் இருவரும் அறை முழுதும் புரண்டார்கள். அங்குள்ள நாற்காலிகளும் பூந் தொட்டிகளும் அவர்களால் உருட்டப்பட்டு ஏகமாய்த் துவம் சமாயின. ஐயங்காரின் தொந்திசள் நன்றாய் நசுக்கப்பட்டு, ஏறக்குறையப் பாதிப்பிராணன் போன நிலைமையிலிருந்தார். இவ்வாறு அவர்கள் நெடுநேரம் போராடுகையில், அப்பெண் மணி யாது காரணத்தினலோ தனது கரங்களைக் கொஞ்சம் தளர்த்தினள்.

ஐயங்காரர், இதுவே தருணமென்றெண்ணி எழுந்து "தலைதப்பியது தம்பிரான் புண்ணிய" மென வெளியே ஓடினவர். வாசல் நிலை தடுக்கிக் கீழே வீழ்ந்தார். மீண்டும் எழுந்து ஓடுகிருர். அவரைக் கட்டிப்பிடித்துக் கஷ்டம் விளைவித்த பெண்பிள்ளையும் ஓ! ஓ! உன்னை விட்டேனு உனதுயிரைக் கொள்ளை கொள்ளுகிறேன் பார் என மெதுவாகக் கூவிக்கொண்டு பின் தொடர்ந்தாள். ஐயங்காரும பெண்ணுருக்கொண்ட பிசாசு தமது பிராணனைப் போக்கத் துரத்திவருகிறதெனப் பயந்து ஓடுகிருர். தாம் கோகி

லாம்பாளைக் கட்டிச்சுகிக்கவந்த விஷயம் வெங்கிடுபதி கவுண்டர் அறிந்தால் தம்மை ஊரைவிட்டுத் துரத்திவிடுவது நிச்சயம் என்ற பயமும், ஒரு வேளை வெங்கிடுபதி கவுண்டரும் கோகிலாவும் சேர்ந்தே தம்மை வேலைமுடிக்கத் தீர்மானித்திருப்பார்களோ என்ற எண்ணமும், அங்குள்ள ஆட்களிடம் தாம் அகப்பட்டுக்கொண்டால் திருடனென நினைத்து நைய நொருக்கித் துவையலாக்கி விடுவார்களென்ற பயமும், அவரை அரவமின்றி அதிகமாய் ஓடத்தூண்டின. அதனுல் தாண்டித்தாண்டித் தாவிக்குதித்து ஓடுகிருர். பாய்ந்து பாய்ந்து பயத்தால் பறக்கிருர்.

அப்பெண்ணும் இவரை விடாமல் அடே! நில்லு நில்லு கோகிலாம்பாளோடு கொஞ்சிக் குலாவலாம் என மெதுவாகக் கூறிக்கொண்டே பின்னுல் துரத்துகிருள். அங்குள்ள பணியாளர்களும் வேலைக்காரிகளும் நன்ருய்க் குறட்டை விட்டு உறங்கினுர்களாகையாலும் அவர்கள் சயனித்திருந்தது செய்கை நடந்த இடத்துக்கு அதிக தூரமாதலாலும் அவர்கள் ஒருவரும் எழுந்திருக்கவில்லை. ஐயங்காரும் அவள் துரத்தி வருவதைக்கண்டு அதிகம் பீதியடைந்தவராய் குடலறுகக் குண்டிக்காய் அறுக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடுகிருர். அவரது ஓட்டத்திற்குப் பெரும்பாலும் அவரது தொந்தி இடையூராயிருப்பினும் அதை இலட்சியம் செய்யாமல் ஓடுகிருர். அவரது சிறு குடுமியில் முடிந்துள்ள மல்லிகைப்புஷ்பம் அவிழ்ந்து பெண்களின் ஜடைபோல் பின்னுல் தொங்குகிறது. பஞ்ச கச்சம் கட்டிய பட்டுக்கரை வேஷ்டியவிழ அதை இரு கரங்களா

னும் சுருட்டிப்பிடித்துக்கொண்டு ஓடுகிருர். பின்னல் தொடர்ந்து வந்த பெண் பிள்ளையும் இதோ வந்து விட்டேன் இதோ வந்து விட்டேன் என்று கூறிக்கொண்டே தூரத்துகிருள்.

ஐயங்காரும் எப்படியும் அப்பிசாசின் கைக்கு அகப்படாமல் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தானும் பயத்தானும் அங்கு அலங்காரமாய் வைக்கப்பட்டிருக்கும் பூந்தொட்டிகளின்மேலும் மேஜை நாற்காலிகளின் மேலும் காலிடறி விழுந்து எழுந்து ஓடுகிருர். பூந்தொட்டிகள் ஐயங்காரின் பளுவைத் தாங்க முடியாமல் அப்பளங்களாய் மாறின. மேஜை நாற்காலிகள் தூள் தூளாய் ஓடிந்தன. உடைந்த ஓடுகளும் ஒடிந்த மாச்சாமான்களும் ஐயங்காரரின் ஆகத்தில் தைத்து இரத்தம் ஆருய்ப்பெருகிற்று. பின்னல் தூரத்தி வந்தவளும் சமீபித்து விட்டாள். அந்தோ! பரிதாபம் என் செய்வார் ஐயங்கார்? அப்பெண் பிசாசின் இரும்புக்கரங்களால் தமது விலா முறிய நசுக்கப்பட்டதை நினைக்க நினைக்க அவருக்கு இன்னும் பலமடங்கு பயம் அதிகரித்தது. தம் ஆகத்திலுற்ற அவஸ்தையையும் பொருட்படுத்தாது இரத்தத்தை ஒழுக்கிக்கொண்டே மேஜைகள் பேரிலும் நாற்காலிகள் பேரிலும் விழுந்து விழுந்து அநேக கூடங்களையும் முற்றங்களையும் கடந்து ஓடுகிருர்.

பின்னல் தூரத்துபவளும் அவரை விடாமல் பிடி பிடி என்று மெதுவாகக் கூவிக்கொண்டே தூரத்தினுள். ஐயங்காரும் அவளது ஓட்டத்திற்குச் சிறிதும் சளைக்காது அவ

ளின் கைக்கு அகப்படாமல் மாளிகை முற்றும் கடந்து முன் வாசல் நோக்கி ஓடுகிறார். முன்வாசல் முன் போல் திறந்திராமல் மூடிப்பூட்டப்பட்டிருந்தது. ஐயங்கார் அருகில் நெருங்கிக் கதவை இழுத்துப்பார்த்தார். திறக்க முடியவில்லை. அந்தோ! என் செய்வதென ஆயாசப்பட்டார். ஆயினும் அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது. மெது வாய் முன் வாசற் கதவின் மேலேறி அப்பால் குதித்து விடலாமென எண்ணிக் கதவின் கம்பிகளைக் கைகளால்பற்றி ஏறத்தொடங்கினார். தம் வாழ்நாளில் ஒரு நாளும் இப்படிப் பட்ட பிராணபத்தில் அகப்படாதவராதலாலும் மரம் முதலியவைகளில் ஏறி வழக்கமில்லாததாலும் அவரது பருத்த தொந்தி கருங்கல்லைப் போல் அவரைக்கீழே இழுத்தமையாலும் கதவின்மேல் ஏறமுடியாமல் தத்தளித்தார். இருந்தாலும் அவமானத்திற்கு அஞ்சி உயிரையும் லக்ஷியம்செய்யாமல் ஏறுகிறார். பின்னால் துரத்துபவளும் சமீபத்துவிட்டாள். அவள் நெருங்க நெருங்க தாந்தோணி ஐயங்காருக்குப் பீதியும் ஆத்திரமும் அதிகரித்தன. எப்படியோ முக்கால் பாகத்திற்கு ஏறிவிட்டார். அவளும் நெருங்கிவிட்டாள். ஐயங்காரர் கதவின் மறுபக்கம் ஒரு காலை வைத்துக் குதிக்க எத்தனித்து எம்பினார். அத்தருணம் ஐயங்காரின் பின் வந்தவள் அவரின் ஒருகாலைப் பலமாகப் பற்றிக்கொண்டாள். அத்தருணம் மீதி இருந்த பாதிப்பிராணனும் அகன்றவாறு ஐயங்கார் கதவோடு கட்டையாய் ஒட்டிக்கொண்டார். ஆயினும் அப்பெண்பிள்ளை அவரது காலைப்பற்றி பலமாய் இழுத்துக் கீழே தள்ளி தன் கைகளால் ஐயங்காரரை நையப்புடைத்தாள். அடியின் பலத்தாலும் பீதியா

லும் சிறிது நேரத்தில் ஐயங்கார் அசைவற்ற மரம்போலாகி விட்டார். அப்பெண் அவர் நாசியருகில் கைவைத்துப்பார்க்கச் சுவாசம் முற்றிலும் நின்றுவிட்டது. உடனே அப்பெண்பிள்ளை அங்கு சயனித்திருந்த முன் வாசற்காவலன் கந்தனை எழுப்பி அவன் செவியில் என்னவோகூறி அவனிடமிருந்த சாவியை வாங்கிக் கதவைத் திறந்து ஐயங்கார் சவத்தைக் காலைப்பிடித்து இழுத்துப்போய் பாதையில் போட்டுவிட்டு முன்போல் கதவைப்பூட்டி சாவியைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள்.

---

## 14-வது அத்தியாயம்.

# மனம்போல் மங்கிலியம்.

விஜய நகரத்தின் மத்தியில் கடலை நோக்கி ஓடும் ஒரு பெரிய ஆறு இருந்தது. அவ்வாற்றிற்கு ஒரு பெரிய பாலம் கட்டப்பட்டிருந்தது. ஒரு நாள் அப்பாலத்தின்மேல் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்ததுமன்றி பாலத்தின் இருமருங்கிலுமுள்ள கைபிடிச்சுவர்களில் சாய்ந்த வண்ணம் அநேக ஜனங்கள் நின்றுகொண்டும் புதுவெள்ளத்தின் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது அங்கிருந்த ஜனங்களில் சிலர் ஓ! ஓ!! ஆபத்து!!! அதோ யாரோ தண்ணீரில் விழுந்து

முழுகி முழுகி வருகிறார்கள். அதோ தலை தெரிகிறது. தன்னைக் காப்பாற்றும்படி கைகாட்டி சைகை செய்வதாகத் தோன்றுகிறது. யாரேனும் தைரிய புருஷர்கள் இருந்தால் உதவி செய்யுங்கள். உங்கள் சௌகரியத்தையும் பரோபகாரத்தையும் காட்ட இதுதான் ஏற்ற தருணம். சீக்கிரம் முந்துங்கள். முந்துங்கள் என்று கூவினார்கள். யார் என்ன கூவியும் ஒருவரும் உதவிக்குப்புறப்படவில்லை. அடே அப்பா இந்த நீரில் இறங்கினால் ஆற்றோடு போக வேண்டுமேயன்றி மீண்டுவரமுடியாது. என்று கூறிக்கொண்டு அனைவரும் ஆற்றைப்பார்த்த வண்ணம் இருந்தனர். அத்தருணம் அவ்வழியாக வந்த ஒரு வாலிபன் தனது தொப்பியையும் சட்டையையும் கழற்றித் தரையில் எறிந்து விட்டு திடீரென்று தண்ணீரில் குதித்தான். அங்கிருந்தவர்கள் ஓ. ஓ. இவனுக்கும் விதிகிழிந்தது போலிருக்கிறது. இவனாவது அவனை—அவளை—மீட்பதாவது; என்று தமக்குத் தோன்றியவாறு பல பல விதமாகப் பேசினார்கள். வாலிபன் தண்ணீரில் விழுந்ததும் நீந்தியும் முழுகியும் நெடுந்தூரம் சென்று நீரில் போய்க்கொண்டிருந்த உருவத்தின் மயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டு கரைப்பக்கம் நீந்தினான். சிறிது தூரம் போனதும் கைகால் ஓய்ந்து இவனும் ஆற்றோடு போகும் நிலைமையிலிருந்தான். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு தத்தித்தடுமாறி வெகு கஷ்டத்துடன் கரை சேர்ந்தான். உடனே அருகில் இருந்தவர்கள் நீரில் முழுகி பிரக்ஞை யற்றிருந்த பெண்ணைப் பார்த்து ஓ! ஓ! இவள் கதிர்வேலு சவுண்டர் குமார்த்தி சுவர்ணம்பாளல்லவா? அடடா இந்தப்பெண்ணுக்கு இக்கெதியா வரவேண்டும்.

மிகப்படித்தவள். மேன்மையான புத்தியுடையவள். மேலும் தாய் தந்தையருக்கு இவள் ஒரே பெண். இவளின் கோலத்தைக்கண்டால் பெற்றோர் உயிர் பிரிந்து விடுமே. அப்பா என்ன கோரம். என்று கூறிக்கொண்டே அவளுக்குப்பல வித சிகிச்சைகள் செய்தார்கள். அச்சமயம் அவளின் பெற்றோர்கள் ஓடிவந்து பலவாறு வருந்திப் புலம்பினார்கள். அதற்குள் சுவர்ணம்பாளுக்குச் சிறிது மயக்கம் நீங்கியது. கண்ணை விழித்துப்பார்த்து தனது பெற்றோரை அழவேண்டாமென்று கையால் சைகை செய்தாள். அவர்களும் மகள் பிழைத்ததைக்குறித்து மிகவும் பேருவகை பூத்துக்காப்பாற்றிய வாலிபனை நோக்கி அப்பா சுந்தரராஜு! உன் உயிரைத் திரணமாக மதித்து நீ செய்த உதவியால் எங்கள் குழந்தையன்றி எங்களுக்கும் பிராணதானம் செய்த பிரபுவாகிறாய். நீ செய்த இந்த அரிய உதவிக்குத்தக்க கைமாறு செய்ய நாங்கள் சக்தியற்றவர்களாயினும், உனக்குத் தீர்க்காயுளையும் போக பாக்கியங்களையும் மேன்மேலும் அளிக்குமாறு கடவுளைத் துதிக்கிறோம்; என்று கூறி அவனை வாயாறப் புகழ்ந்தனர்.

சுந்தரராஜு:—ஐயா! மனிதராய் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமையை நானும் செய்தேனேயன்றி, தாங்கள் இவ்வளவு தூரம் புகழும்படியான பிரமாத காரியம் ஒன்றும் செய்து விடவில்லை. தயவுசெய்து இனியும் இவ்வாறு புகழாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். என்று கூறியதுமன்றி ஒரு வண்டியில் சுவர்ணம்பாளை மெதுவாக எடுத்து படுக்கவிட்டு வீட்டிற்குப்போய்

தகுந்த சிகிச்சை செய்யும்படி கூறி அவர்களை வீட்டிற்க னுப்பினன்.

சற்று நேரத்திற்கு முன் தங்கள் வீட்டை அடுத்துள்ள தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்த சுவர்ணும்பாள் கொஞ்சதூரம் சென்று கடைசியில் அங்கு தோட்டத்தி னருகே ஓடிக்கொண்டிருந்த ஆற்றையணுகினள். அச்சம யம் அவளுக்கிருந்த தாக மிகுதியால் ஆற்றில் நீரருந்தச் சென்றவள், கால் வழுக்குண்டு வெள்ளத்திஞல் அடித்துக் கொண்டு போகப்பட்டாள். அப்போது பாலத்தின் மீதி ருந்து கண்டவர்கள் கூச்சலிட தற்செயலாய் அவ்வழிவந்த சுந்தரராஜனுல் காப்பாற்றப்பட்டாள். நிற்க.

*        *        *        *        *        *        *        *

இச்சம்பவம் நடந்த சிலநாட்களுக்குப் பின்பு ஒருநாள் மாலை சுவர்ணும்பாள் அச்சாபீசையடுத்த பூங்காவினுள் உல்லாசமாக இங்குமங்கும் உலாவிக்கொண்டே அங்குள்ள ஒரு கால்பாதையருகில் நெருங்கி யாருடைய வரவையோ எதிர்பார்ப்பவள் போல அடிக்கடி அவ்வழியைப் பார்த்த வண்ணம் நின்றிருந்தாள். சிறிது நேரத்துக்குப்பின் தனது வீட்டிற்குச் செல்லுமாறு அச்சாபீசிலிருந்து அவ்வழியாக வந்துகொண்டிருந்தான் சுந்தரராஜன். அவன் வரவைக் கண்டதும் சுவர்ணும்பாளின் உள்ளத்தில் நெடுநாளாய்ச் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்த காதல் ஜோதி துள்ளிக் குதித்துப் பிரகாசித்தது. அளப்பரிய ஆனந்தமும் மனோஹரமும் பொங்கிப் பெருகி வழிந்தது. அப்போதே இதழ்விரிந்த தாமரை மலரைப்போல அவள் வதனம் பிர

காசித்தது. மிகுந்த பிரேமையுடனும் வாத்ஸல்லியத்துட னும் சுந்தரராஜுலுவின் வருகையை எதிர்பார்த்தவளாய்க் கையேந்தி நின்ருள். சுந்தரராஜுலு தலைகுனிந்தவாறே அரு கில் நெருங்கியதும் சுவர்ணம்பாள் சிறிது நாணத்துடனும், இளமுறுவலுடனும் அவனை நோக்கி மெல்லிய குரலில் மிக்கதீரமும் சுகுமாரமும் நற்குணமுமுள்ள புருஷரத் தினமே! தங்கள் வரவு நல்வரவாகுக. சில விஷயங்களைக் குறித்துத் தங்களிடம் தனித்துறைந் துரையாடப் பலநாள் யோசனையிருந்தும் என்னைப்போன்ற யுவதி ஒரு யுவகரி டம் பாஷிக்க நாணுதலடையும் சில வார்த்தைகளாடவேண் டியதை முன்னிட்டு வெட்கத்தாலும், அச்சத்தாலும் அலை ந்த மனத்தினளாகி அறிவு தடுமாறி நின்றேன். இன்று எப்படியும் தங்களைச் சந்தித்து உரையாட உறுதிகொண்டு இங்குற்றேன். எண்ணப்படி கண்டேன். ஆனந்தம் கொண் டேன். இதோ அருகில் இருக்கும் மரத்தடியிலுள்ள ஆச னத்தில் அமர்ந்து சிறிது பாஷித்த பின்பு தங்கள் இல்லம் செல்லலாம். என சிறிது புன்னகையுடனும் புளகாங்கிதத் துடனும் புகன்ருள்.

சுவர்ணம்பாளின் வார்த்தையைக் கேட்ட சுந்தரராஜுலு மிக்க ஆச்சர்யமும் அச்சமும் பிரமிப்பும் அடைந்தவனாகி தயையும் கருணையும் தூய எண்ணங்களும் நிறைந்த கல்விக் களஞ்சியமாகிய சுவர்ணம்பாள்! உப்புக்கும் உதவாத சொத்தைச் சோகியான நான், நீ கூறும் புகழ் மொழிகளை ஏற்றுக்கொள்ளத் தகுந்த அருகனல்லேன். நீ கூறும் ஒவ் வொரு புகழ்மொழியும் ஒவ்வொரு பாணம்போல் என்

மனதில் தைக்கிறது. என்று கூறிக்கொண்டே அவளுடன் தொடர்ந்து மாத்தடியிலுள்ள ஆசனங்களில் உட்கார்ந்தார்கள்.

இனி தொடர்ந்து கூறும் வார்த்தைகளை எப்படிக் கூறுவதென்ற சங்கோஜத்தாலும் அச்சத்தாலும் கம்மியும் மங்கியும் பாஷிக்கப் பரிபக்குவமற்ற நிலைமையிலுள்ள தனது கண்டத்தைச்சற்று கனைத்துச் சரிப்படுத்திக்கொண்டு சுவர்ணம்பாள் சுந்தரராஜுவை நோக்கி ஜீவகாருண்யமும் சுகுணமும் தன்மதிப்புமுள்ள தன்யரே! நான் கூறும் மொழிக்குச் சிறிது செவி கொடுமின். சிறிது நாட்களாக எனக்கு விவாகம் செய்யவேண்டுமென்பது எனது பெற்றோர் கருத்து. அதற்காக இரண்டொரு வரன்களைப்பற்றியும் என்னிடம்கூறினர். அதிலும் எனதத்தானாகிய கனகாசலக் கவுண்டரே தம்மை மணந்துகொள்ளும்படி பல தடவைகளில் என்னைக் கேட்டார். அவரது நடக்கைகளும் குணங்களும் ஒழுங்கீனமாயிருப்பது பற்றி என் மனம் அவரைச் சிறிதும் விரும்பவில்லை. ஆகையால் என் மனதிற்கேற்ற —ஜீவகாருண்யமும், பொறுமையும் சற்குணமும் நிறைந்த புண்ணிய—புருஷரை பர்த்தாவாக அடையவேண்டுமென்று பல இடங்களிலும் தேடிக்கொண்டிருக்கையில் "தேடிப் போன மருந்து தெருவிலகப்பட்டது போல்" அச்சாபீசில் வேலைக்கமர்ந்து கொள்ளுமாறு எனதுபிதாவிடம் வார்த்தையாடிக்கொண்டிருந்த அன்று தங்கள் குணங்களைக் கண்டதும் என்னையுமறியாமல் என்மனம் தங்களிடம் லயித்தது. அதுமுதல் பிரேம பூர்வகமாய்த் தங்களைக் கணவனாக உள்

ளத்திற் கொண்டேன். தங்கள் அருமைத்திருவுள மிறங்கி அடியாளை மணந்து கொள்வதாக வாக்களிக்கவேண்டும்; என்று கூறி மீண்டும்

ஆருயிர்க்காதலரே! பெண்பாலாகிய நான் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் பெண் தன்மைக்குரிய குணங்களின்றி பலவந்தமாக என்னை மணந்து கொள்ளும் படி கூறுகிறேனென்று என்னைக்குறித்து ஏளனமாகவும், இழிவாகவும், அவமதிப்பாகவும், எண்ணற்க. ஒரு பெண்ணினுடைய அன்பையும், காதலையும், யார் கொள்ளை கொள்ளுகிறாரோ அவரே அக்கன்னிகைக்குக் கணவர். அவரை யன்றி அவள் வேறொருவரை மனதில் நினைத்தாலும் கற்பு நலம் குறைந்த காரிகையாகிறாள். ஒருவள் ஒரு ஆடவனைக் காதலித்தும் அவன், அவளை விரும்பாமற் போனாலும் அவள் மறுபடியும் வேறொருவரை மணக்க எண்ணவும் கூடாது. அதுவும் கற்புக்கிழிவாகும். ஆகவே அவள் தான் காதலித்த ஆடவன் தன்னை மணந்துகொள்ளப் பிறர்க்குக் கெடுதியில்லாத எவ்வித முயற்சி எடுத்துக்கொள்ளினும் அது சாஸ்திர சம்மதமேயன்றித் தப்பிதமாகவும், இழிவாகவும், கேவலமாகவும், கருதுதல் ஞாயமன்று. தெரிந்தவர்கள் தப்பிதமாகவும் கருதமாட்டார்கள் என்றாள்.

இவளின் எதிர்பாராத வார்த்தைகளைக் கேட்ட சுந்தரராஜன் மிக்க ஆச்சர்யமும், துக்கமும், ஆனந்தமும், ஒருங்கே உதித்தவனாகித் திகைத்து அப்படியே பிரமித்து நின்றான். இவ்வுலகமே முற்றும் சுழல்வதுபோல அவனுக்குத்

தோன்றியது. அவன் தான் விழித்துக்கொண்டிருப்பதை யும் உறங்குவதையும் கனவுகாண்கிறோமென்பதையும் உண ர முடியாத தன்னையறியா சன்னதங்கொண்டு தடுமாறினான். தற்சமயம் விலங்குகளும் பறவைகளும்கூட விரும்பப்பெறாத வறுமை நிலைமையிலிருக்கும் தன்னை, சுவர்ணாம்பாள் விவா கம் செய்துக்கொள்வதாகக் கூறுவது, ஒருவேளை தன்னைப் பரளி செய்வதாக விருக்குமோவென எண்ணினான். தற் போது தானிருக்கும் கேவலமான ஏழ்மை நிலைமையையும் தனது ஒழுக்கம் தவறிய நடக்கையையும் அறிந்த ஒவ்வொ ருவரும் தன்னை அலட்சியித்துத் திரஸ்கரிப்பதாயிருக்க, சுவர்ணாம்பாள் மட்டும் தன்னைப்புகழ்ந்து பேசுவது அவனு க்கு அடக்கொணா ஆச்சர்யமுண்டாக்கியது. அவள் கூறும் புகழ்ச்சியான மொழிகளைக்கேட்க அவனுக்கு அதிக நாணம் உதித்தது. இவ்வித நிலைமையில் ஒருகணம் மெய்மறந்து மௌனம் சாதித்துப் பின் தேறிய மனத்தனாகி மிக்க எழி லும், தூய்மையான எண்ணமுமுடைய பெண்மணியே! உன்னுடைய வார்த்தைகள் உன்னதமாகவும், மேன்மையா கவும், அலங்காரமாகவும், இருக்கின்றன. உனது குணங் கள் மிக்க உத்தமமானதாகவும், சிலாக்கினைக் குரியவையா யுமிருக்கின்றன. நினது பரந்த மதிக்கும், விரிந்த நோக்கத் திற்கும், என்னுடைய குறைந்த மதியும் தாழ்ந்த குணங் களும் ஒப்பாமோ? எனது தந்தை அரும்பாடுபட்டு உத் தம வழியில் ஈட்டிய அளவற்ற தனத்தையெல்லாம் உப யோகிக்கும் வழியறியாமல் வேசைக்கீந்து நான் வேசாறித் திரிகிறேன். நான் நல்ல நிலைமையிலிருக்கும்போது சதா என்னுடனிருந்து அறுசுவையன்னத்தை அதிதமாக அருந்

திய உற்ருர் உறவினர்கள், இப்போது என்னை அன்னிய ஞகப் பாவித்து அலட்சியிக்கின்ருர்கள். ஆ! அந்தமட்டுமா? அந்நாள் என்னிடம் கொஞ்சிக் கொஞ்சி சிரித்துச் சிரித்து உறவாடியவரும் என்பால் அநேக நன்மைகளை அடையப் பெற்றவர்களுமான நண்பர்கள், இந்நாள் நான் ஏதாவது உதவி கோருவேனென்ற எண்ணத்தால் என்னைப் பார்த்தும் பாராதவர்கள்போல் பக்குவமாய் நழுவி விடுகிருர்கள். பண மற்றபோதே நான் பிணமானேன். எனக்கு இவ்வுலகில் எவ்வித உற்ருருமில்லை: உறவினருமில்லை. பெற்ருரு மில்லை. பிரிய நேசர்களுமில்லை. சாதாரண நிலைமையிலிரு க்கும் ஏழை மனிதர்கள்கூட என்னை இழிவாக மதிக்கிருர் கள். ஏன், மரங்களும் கற்களும்கூட என்னைக் கேவலமாக மதித்து நகைப்பதுபோலத் தோன்றுகிறது. அறுசுவை யன்னத்தை ஆவலுடன் புசித்து ஆடையாபரணாலங்கிர்த ஞகி இங்குமங்கும் ஓடியுலாவி உல்லாசமாய்த் திரிந்த நான் அச்சுகங்களின்றி பசியால் மெலிந்து வெயிலால் உலர்ந்து மழையால் நனைந்து வாதைப்படும் வறுமையுடையோனுயி ருக்கின்றேன். ஆதலின் இத்தகைய நிர்ப்பாக்கியனுகிய நான் நினது காதலனுகப் பெறும் கண்யமுடையவனுவேனு? அப் படி நீ என்னைக் கணவனுக அடைந்தால் பணமும் குணமும் இல்லாத பாக்கிய ஹீனனைப் பாணிக் கிரகணம் செய்து கொண்டாயென்று பலரும் நின்னை தூஷிப்பார்கள். என் பொருட்டாக நீ பலரின் தூஷணைக் காளாகித் துயரமுற்று நிற்பதைப்பார்க்க என்மனம் சகிக்காது. ஆதலின் என்னைக் கணவனுக அடையும் கருத்தை ஒழித்து உனது உத்தம குணங்களுக்கேற்ற ஓர் பெருத்த பிரபுவை மணந்து உலக

சுகங்களை நீடூழியனுபவிப்பாய் பெண்மணியே என்றான். அவன் வாயிலிருந்து பல பரிதாப வார்த்தைகள் நழுவிய தைப் போலவே அவனது நயனங்களினின்றும் ஏராளமாக நீர் பெருகி நழுவி வழிந்துகொண்டிருந்தது.

சுந்தரராஜுலுவின் பரிதாபமான ஏழ்மை வார்த்தைகளையும் வாடிய தாமரைப் புஷ்பம் போன்ற அவனது ஒளியிழந்த வதனத்தையும் கண்ட சுவர்ணாம்பாளின் மனம் இளகி உருகி-நெகிழ்ந்து பாகாய்க்கரைந்தோடியது. அவன் தனது குற்றத்தை உணரும் தூய்மையான எண்ணத்தையும், மேன்மையான குணங்களையும் கம்பீரமான வார்த்தைகளையும் அவனது சுயநலம் கருதாத சுத்தமான மனப்போக்கையும் காணக்காண அவன்மீது சுவர்ணாம்பாளுக்கிருந்த பிரியமும் பிரேமையும் வாத்ஸல்லியமும் பல ஆயிரமடங்கு அதிகரித்தது. அவள் மிகுந்த பரிவோடும், கருணையோடும், கனிவோடும், சுந்தரராஜுலுவின் அருகில் நெருங்கி அவனது இரு கரங்களையும் தனது மென்மையும், இளமையும், வனப்பும், வாய்ந்த கரங்களால் பற்றி "எனதன்புறு உளமாம் கோவிலிலென்றுமமர்ந்திடும் ஆருயிர்த்தலைவா! சென்றுபோன சம்பவங்களை நினைந்து நினைந்து நைந்துருகல் வேண்டாம். செல்வம் நிலையற்றதென்பதையும், எப்பொழுதும் அது செல்வோம் என்னும் இயல்புடனிருப்பதென்பதையும், தங்களைப்போன்ற நூலொடு பழகிய நுண்ணறிவாளர்க்கு யான் கூறவேண்டுவதில்லை. மேலும், எத்தகைய ஏழ்மை நிலைமையுடையோராயிருப்பினும் குணமுடையோரை யான் விரும்புகிறேனேயன்றி அஃதில்லா பணக்காரர்களென்னும் பாஷாண்டிகளை யான் விரும்புகின்றேனில்லை. அவர்களில் பெரும்

பாலாரின் ஒழுக்கம் தவறிய நடக்கைகளும், வாய்மை தவறும் வார்த்தைகளும் எனக்குப்பிடிக்கவில்லை. தவிர நான் ஒரு பெருத்த பிரபுவை மணந்து உலகசுகங்களை அநுபவிக்கவேணுமென்று தாங்கள் கூறியது கொஞ்சமும் சரியன்று. எப்பொழுது தங்களைக் காதலனாக எனதுள்ளத்தில் கொண்டேனோ அப்போதே தாங்கள் எனக்குக் கணவராகிவிட்டீர். மேலும் அன்று ஆற்றில் விழுந்து ஆவிபிரியும் நிலைமையிலிருந்த அடியாளைத் தங்கள் அழகிய கரங்களால் பற்றிக்கரை சேர்த்துக் காத்தருளியபோதே எந்தன் கற்பைத் தங்களுக்கர்ப்பணமாக்கிவிட்டேன். தவிர உயிரைக்காப்பாற்றிய பேருபகாரியாகிய தங்களுக்குப் பிரதியுபகாரமாக அடியாளையே தங்களுக்கர்ப்பணம் செய்யக்கடமைப்பட்டவளாயிருக்கிறேன். அங்ஙனமிருக்க, மீண்டும் யான் வேறொருவரை மணப்பதும்—மணக்க நினைப்பதும்—எனது கற்பிற்கிழிவாகுமன்றோ? அங்ஙனம் யான் எனது கற்பைத் துறந்துகண்டோர் நகைப்புக்காளாகி நிற்பதைக் காட்டிலும், இன்றே இறந்து இறைவனடி சேர்தல் இகபர சாதகமன்றோ? ஆதலின் பிரேமபதி! எனது சுகதுக்கமும் இருப்பும் இறப்பும் தங்களின் ஓரே வார்த்தையிலடங்கியுள்ளன. தாங்கள் ஒருவேளை என்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளாது திரஸ்கரிப்பின், அக்கிநிமிடமே என்னுயிர் பிரிதல் நிச்சயம். சத்தியம். இதுவே உத்தமமாதர்களுக்கேற்ற நியதி. இக்கொள்கையே நம் பண்டைக்காலத்து கற்பரசிகள் கைக்கொண்ட அநுபவம். அவ்வாறு நான் இறப்பின் இப்பெண்பாவம் தங்களைப் பற்றாதிராது. என தத்தை மொழியைப்பழிக்கும் தித்திப்பான மதுர பாஷிதங்களை மிக்க கனிவோடும் கருணையோடும் கூறினாள் சுவர்ணாம்பாள்.

சுவர்ணம்பாளின் எழிலும் இளமையும் வாய்ந்த அழகிய கரங்களின் ஸ்பரிச உணர்ச்சி சுந்தரராஜுவின் ஆகத்தில் புகுந்து அவனது உடலைப் பிடித்து உலுக்கியது. தேகமாதியந்தம் ஒருவிதமான புளகாங்கிதமும், மனோஹரமும் பொங்கிப் பெருகி வழிந்தது. அவனது தேகமுழுவதும் வியர்வை கசிந்து ஊற்றுநீர்போல் ஓடத்தொடங்கியது. அவளின் அந்த மிருகாசரணாதி அவயவங்களின் உருட்சி திரட்சியையும் மழமழப்பையும் மென்மையையும் யௌவனாலங்கிர்த வனப்பையும் காணக்காண அவனது உள்ளமெல்லாம் நெக்குநெக்குருகிக் கரைந்து பாகாய் ஓடியது. ஒருவித மனோஹரம் வாய்ந்த இன்பவெறி அவன் சிரசுக்கேறியது. அதனால் அவன் சிரம் சுழன்றது. அம்மதிவதன மடமயிலாளினது நவயௌவன அவயவங்களின் அழகைக்கண்ட அவனது நயனங்கள் இமைக்கும் உணர்ச்சியற்று அப்படியே இன்பமயமாய் நின்றன. அழகிய அரம்பாஸ்திரிகள் ஆடிப்பாடி இன்பம் விளைத்திடும் இந்திர போகத்திலிருப்பவன்போன்று தன்னைமறந்து சந்தோஷ சாகரத்தில் அமிழ்ந்து அமிழ்ந்து மிதந்தவனாய், சுவர்ணம்பாளின் அழகிய வதனத்தை ஆவலுடன் நோக்கி அன்னநடை மின்னலிடைப் பெண்மணியே! உனது மேன்மையான குணங்களைப்புகழ என்னொருநாவால் இயலாது. பரம ஏழையாம் பாக்கிய ஹீனனாகிய என்னை பர்த்தாவாக அடையவேண்டுமென்று ஓரே உறுதியாக நிற்கும் உத்தமியே! உனதிஷ்டத்திற்கிடையூறாக நடந்து உனக்கின்னல் விளைக்க என் மனம் விரும்புகின்றதில்லை. நினதிஷ்டப்படியே நின்னைக் காதலியாகப்பெற்றுப் பேருவகையுற என்மனம் அவாவுறுகின்றது. இன்று முதல்

எனதாயுள்ளளவும் நினதிஷ்டத்திற் கிம்மியளவும் மாறுபடா மல் நடப்பேனென்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன். பிராணேஸ்வரி! நின்னைக் காதலியாகப்பெற நான் எத்தனை கோடி கற்பகாலம் கடுந்தவமிழைத்தேனே அறியேன். என்று தழுதழுத்த குரலில் கொஞ்சிக் கொஞ்சிக் கூறினான் சுந்தரராஜு.

சுந்தரராஜுவின் சுந்தரமொழிகளைக் கேட்ட சுவர்ணும்பாள் மிகுந்த பூரிப்பும் புளகாங்கிதமுமடைந்தவளாய் பிராணாதிப! என் பிராணரக்ஷக!! என் பிரியமனோஹர!!! இன்றே என் ஜென்மம் ஈடேரியது. என்று கூறியவண்ணம் முன்னமே தான் பற்றியிருந்த சுந்தரராஜுவின் கரங்களைப் பக்குவமாயிழுத்து மென்மையும் இளமையும் பொருந்திய தன் ஆகத்துள் சுந்தரராஜுவின் தேகம் அழுந்தப் புதையுமாறு தன் நெஞ்சோடு சேர்த்து அவனைத் தழுவி அவனது முகத்தோடு தன் அழகிய வதனத்தைப்பொருத்தி அப்படியே சொக்கிச்சோர்ந்து நின்றாள்.

சுவர்ணும்பாளின் தழுவுதலாகிய சுவர்க்கலோக போகத்தில் மூழ்கியிருக்கும் சுந்தரராஜுவின் கரங்கள் சும்மாவிருக்குமா? ஏன் சும்மா இருக்கும்? எப்படித்தான் சும்மா இருக்கும்? யாரால்தான் சும்மா இருக்கமுடியும்? அவனையுமறியாது அவனது கரங்கள் பத்தரைமாற்றுப் பசும்பொன் மேனியளான அம்மடவன்னத்தின் அழகிய ஆகத்தை அப்படியே தழுவி அவளது நெஞ்சோடு அழுத்தின. இவ்வாறு அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் அழுந்தத்தழுவி ஆனந்தமயமாம் இன்பசாகர நீர்ச்சுழலில் அமிழ்ந்து அமிழ்

ந்து மிதந்தவர்களாய் இருவர்மனமும் ஒன்றுபட்டுச் சொக்கிச் சோர்ந்து ஜோதிரூபமாய்க் கலந்து மன்மதனைக்குறித்து மதனயோகம் புரிந்தனர். இவ்விதம் அவர்கள் எவ்வளவு நேரம் அவ்வின்பப்பெருக்கை அருந்தினார்களென்று நமக்குத் தெரியாது. அவர்கள் அருந்திய இன்பப்பெருக்கின் இன்சுவை இத்தகையதென்று கூறவும் நம்மாலியலாது. அதை விவரிக்கப் போதுமான உபமானங்களும் இன்ப வாக்கியங்களும் எமக்குத் தோன்றிற்றில்லை. அவ்வித நிலைமையில் இருந்து அனுபவிப்பவர்களுக்கே அவ்வின்ப ஊற்றின் இன்சுவை தெரியுமாதலின் அச்சுவையின் ஆழத்தை அறியும் பொறுப்பை வாசகர்களுக்கே விடுக்கின்றனம். இவ்விதம் அவர்கள் நெடுநேரம் மதனயோகம் செய்து பின் நிஷ்டைகலைந்து மனதை நிலைப்படுத்திக்கொண்டு அப்பால் விலகி நின்றார்கள். ஆயினும் சுந்திரராஜுவின் மனத்திலுதித்த ஆவல் தாகம் அடங்காமல் அவனை அப்படியே தூக்கித் தூக்கிக் குலுங்கவைத்தது போலிருந்தது. அவன் மீண்டும் சுவர்ணம்பாளை ஒரு குழந்தைபோல அப்படியே தூக்கித்தன் மடிமீதிருத்திக்கொண்டான். அவளைத்தன் நெஞ்சோடு சேர்த்து அழுந்த அணைத்து அணைத்து அநேக முறை ஆலிங்கனம் செய்தான். அவளது அன்றலர்ந்த தாமரைப்புஷ்பம் போன்ற வதனத்தைப்பலமுறை முகர்ந்தான். அநேக முத்தங்களீந்தான். கன்னத்தை மெல்லெனக்கடித்துச் சுவைத்தான். அவளது அழகிய முகத்தோடு தனது வதனத்தைப் பொருந்திய வண்ணம் நெடுநேரம் சொக்கியிருந்து பல இன்ப லீலைகள் செய்தான். சுவர்ணம்பாளும் அவனது இன்ப லீலைகளுக்கு இடங்கொடுத்தவண்

ணம் தேனில் விழுந்த ஈயைப்போலத்திகைத்துச் சொக்கிச் சோர்ந்து கிடந்தாள். அவ்வித ஆனந்த சாகரத்தில் எவ்வளவு நேரம் அமிழ்ந்து அமிழ்ந்து மிதந்தோமென அவர்களுக்கே தெரியவில்லை. அச்சமயம் பக்கத்திலிருந்த பஞ்சாபீசில் எட்டுமணியடித்த சப்தம் இரைச்சலாய்க்கேட்டது. உடனே அவர்கள் திடுக்கிட்டு எழுந்து நின்றார்கள். தாங்கள் அங்குற்று நெடுநேரமாகியதென்று அப்போதுதான் அவர்களுக்குத் தெரிந்தது. சுவர்ணம்பாள் கொஞ்சிய குரலில் அன்பரே! நான் இங்குற்று நெடுநேரமாகியது என தன்னை என்னைத் தேடுவார்கள். நான் வீட்டிற்குச்செல்லத் தாங்கள் உத்தரவு தரவேண்டும். நான் கூடிய சீக்கிரம் நமது விவாகத்தை முடிக்கத்தகுந்த ஏற்பாடுகளைச் செய்கிறேன்; என்றாள்.

சுந்திரராஜு மீண்டும் சுவர்ணம்பாளைக் கட்டிக் காடாலிங்கனம்செய்து பிரியே! நின் இஷ்டப்படியேயாகுக, ஆயினும் நீ இவ்விருட்டில் இல்லிற்குத் தனித்துச் செல்வது தகுதியன்று நான் உன்னுடன் வீட்டுவரை வருகிறேனென்றான். அச்சமயம் பக்கத்துப் புதரில் யாரோ நடந்து செல்லும் காலடியோசையும் இலைகள் அசையும் சப்தமும் கேட்டன. அவர்கள் திடுக்குற்று ஒரு வேளை தங்களின் இன்ப விளையாட்டை யாராவது ஒளித்திருந்து பார்த்தார்களோவென அச்சமடைந்தனர். பின் அது பறவைகளால் நேர்ந்த சப்தங்களாயிருக்குமென எண்ணி சமாதானமடைந்து இருவரும் சுவர்ணம்பாளின் இல்லத்தை நோக்கி நடந்தனர். வீட்டிற்கு அருகில் சென்றதும் சுந்தரராஜு, கண்மணி! நான்

சென்று வருகிறேன் என்ருன். சுவர்ணும்பாள் மீண்டும் ஒருமுறை சுந்திரராஜனவை அழுந்தத்தழுவிப் பலமுறை முத்தங்கள் ஈந்து பிராணபதி! அடியாளைத் தாங்கள் மறந்துவிடக்கூடாது. சந்தோஷமாய்ச் சென்று வாருங்கள் என்ருள். பின் இருவரும் செல்லமனமில்லாமல் தயக்கத்துடன் பிரிந்தனர்.

---

## 15-வது அத்தியாயம்.

# பலபேரைக் கெடுத்தவனின் படுகொலை.

---

கொலை! கொலை!! படுகொலை!!! இரவு சுமார் 9 மணிக்கு விஜயநகரத்தின் பெரும்பாலான தெருக்களில் மின்சார விளக்குகள் பகல்போல் பிரகாசித்தன. ஜனங்கள் அங்கங்கே கும்பு கும்பாய்க்கூடி அந்தோ! அனியாயம். சிறிது நேரத்துக்குமுன் பேசிச்சிரித்து வேடிக்கையாயிருந்த வெங்கிடுபதி கவுண்டர் யாராலோ கொல்லப்பட்டுச் சவமாய்க் கிடக்கிருர். அப்பா மானிடவாழ்வு மாயம். இப்பொய்வாழ்வை மெய்யென்று நம்பி நாம் இறுமாந்து தொங்கித் தொப்பென்று வீழ்ந்து விடுகிருேம்; என்று அவரவர்களுக்குத் தோன்றியவாறு பலப்பல விதமாய்ப் பாஷித்துக் கொண்டிருந்தனர். இக்கொலை சமாச்

சாரம் காட்டுத்தீயைப்போல் சில நிமிடங்களில் நகர் முழுவதும் பரவியதுமன்றி நகரத்துப் பிரதான போலீஸ் ஸ்டேஷனிலுள்ள சப் இன்ஸ்பெக்டர் சாம்பமூர்த்தி ஐயருக்கும் எட்டிற்று. அவர் உடனே தம் ஆபீஸிலிருந்த டெலிபோன் மூலமாக, நகரத்திலுள்ள "வசந்த விலாசம்" என்னும் மாளிகையில் ஒரு கொலை நடந்துவிட்டிருப்பதாகவும் ஆகையால் தாம் உடனே அங்கு செல்வதாகவும் தயவு செய்து தாங்களும் வந்தால் நலமாயிருக்குமென்றும், அந்நகரத்திலுள்ள போலீஸ் கமிஷனர் கனம் ஸ்டோன் துரை அவர்களுக்குத் தகவல் கொடுத்துவிட்டுத் தாம் சில போலீஸ் வீரர்களுடனும் கொலை நடந்த இடத்திற்குச் சென்றார்.

அங்கு வசந்த விலாசத்தைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒன்றுகூடித் தம்தம் இஷ்டப்படி உரையாடி இரைந்து கொண்டிருந்தார்கள். போலீஸார் அவர்களைக் கலைந்து போகும்படி எவ்வளவு பிரயத்தனப் பட்டும் அவர்கள் முயற்சி பலியாமையால் மெதுவாக அவர்கள் மட்டும் கூட்டத்தை விலக்கிக்கொண்டு மாளிகையில் நுழைந்தார்கள் நுழைந்ததும் இரண்டு ஜவான்களை முன்வாயிலிலும் இரண்டுபேரைப் பின் வாயிலிலும் காவல் வைத்து போலீஸ் கமிஷனரைத்தவிர வேறுயாரையும் உள்ளே விடக்கூடாதென்றும், அவ்வாறே தம் அனுமதியின்றி வீட்டினின்றும் வெளியே செல்லவும் விடக்கூடாதென்றும் கண்டிப்பாய்க்கூறிவிட்டு, சப்இன்ஸ்பெக்டர் சிலபோலீஸாரோடு உள்ளே சென்று வெங்கிடுபதி கவுண்டர் கொலையுண்டிறந்த இடத்தையணுகினார். அங்கு அவரது சுபுத்திரனான கனகா

சலம் என்பவன், தன் அருமைத்தந்தையின் வலப்புறம் தரையில் உட்கார்ந்த வண்ணம், அவரின் அகால மரணத்திற்காக வயிற்றிலும் வாயிலும் அறைந்துகொண்டு கதறிக் கதறி அழுது கொண்டிருந்தான். சவத்தின் இடப்புறம் ஒரு தூணில் சாய்ந்த வண்ணம் கோகிலாம்பாள் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள், சவத்தின் கால்புறமாக அவரது வேலைக்காரர்கள் யாவரும் வருந்தி அழுதுகொண்டிருந்தார்கள். அழகிய பட்டினுல் தைத்த பஞ்சணையிட்ட தந்த வேலை செய்த கட்டிலின் மீது மல்லாந்து படுத்த வண்ணம் வெங்கிடுபதி கவுண்டர் கொலைபட்டிருந்தார். பிரேதத்தின் கால்முதல் சிரசுவரை ஒரு சால்வையால் மூடப்பட்டிருந்தது. நம் சப் இன்ஸ்பெக்டர் சாம்பமூர்த்தி ஐயருக்கு பிரேதத்தினிடம் செல்லவோ பரிசோதிக்கவோ அச்சமும் அருவருப்புமாயிருந்தாலும் சிறிது நேரத்திற்குப் பின் வரும போலீஸ் கமிஷனருக்கு தாம் அங்கு ஆராய்ச்சி செய்த விஷயத்தை அவரிடம் பாடம் ஒப்புவிக்கவேண்டிய வராகையால் வேறு விதியில்லாமல் சவத்தினருகில் நெருங்கி சவத்தின் மீதிருந்த துணியை விலக்கச் சொன்னர். அவ்வாறே ஒரு கானிஸ்டேபிள் துணியை விலக்கினன். ஹா! என்ன கோரம்! என்ன பயங்கரம்! சவத்தின் முகம் முற்றும் வெளுத்து இரத்தப் பசையற்றுப் பார்க்க பயங்கரமாயிருந்தது. வாய் ஆவெனத்திறக்கப் பட்டிருந்ததுமன்றி கண்களும் கூடத் திறந்தபடியேயிருந்தன. அவர் கழுத்தில் கத்தியால குத்தப்பட்ட காயம் தோன்றியது. கழுத்தின் இருபுறமிருந்த காயங்களிலிருந்து இரத்தம் ஊற்று நீர் போல ஓடி மெத்தையை முற்றும் நனைத்திருந்ததுமன்றி

கீழேயும் வழிந்திருந்தது. காயத்தினின்றும் பீரிட்டு வீசிய இரத்தப்பெருக்கால் பக்கத்துச் சுவர்களிலும் தரையிலும் ஏகமாய் இரத்தக் கறைகள் காணப்பட்டன. கீழே வழிந்திருந்த இரத்தத்தின் அருகில் இரத்தம் தோய்ந்த சுமார் 9 அங்குல நீளமுள்ள கத்தி ஒன்று கிடந்தது. இவர் இவ்வாறு தம் ஆராய்ச்சியை நடத்திக்கொண்டிருக்கையில் போலீஸ் கமிஷனர் இரண்டு மனிதர்களோடு அங்குவந்து சேர்ந்தார். அவருடன் கூடவந்த இருவரில் ஒருவர் டாக்டர். மற்றொருவர் அந்நகருக்கு முற்றும் புதியவராதலால் அவரை இன்னாரென்று அறியக்கூடவில்லை. அவர்கள் வந்ததும் சப் இன்ஸ்பெக்டர் போலீஸ் கமிஷனருக்கு வந்தனம் கூறி தாம் ஆராய்ச்சி செய்த விஷயத்தைச் சிறிதும் விடாமல் கூறினார். போலீஸ் கமிஷனர் தம்முடன் வந்திருந்த புதிய மனிதரை நோக்கி ஐயா! தாங்கள் எதிர்பாராத விதமாய் தற்சமயம் இந்நகரத்திலிருக்கும்படி நேர்ந்ததைக் குறித்து நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். கொலையுண்டிறந்தவர் ஒரு பெரிய பிரபுவாகையால் சீக்கிரம் ஆராய்ச்சி செய்து குற்றவாளியைக் கண்டுபிடிக்கவேண்டும். இன்றேல் பொதுஜனங்கள் பலவிதமாகப் புகார் செய்வதுமன்றி பத்திரிகைகளும்கூட போலீஸார் முற்றிலும் உறங்குகிறார்கள். என்ற கண்டன வியாஸத்தைத் தலையங்கமாகக் கொண்டு கதறுநிற்கும். ஆகையால் தாங்கள் எங்களுக்காக இவ்விஷயத்தில் பிரவர்த்திக்க கோருகிறேன்; என்றார்.

அதற்கு அம்மனிதர், ஐயா! நான் வந்தது மிகவும் அவசர காரியமாதலாலும், ஒரு சமயம் சீக்கிரம் ஊருக்குத்

திரும்பிப் போகும்படி நேரிடினும் நேரிடலாமாகையாலும் உடனே இச்சம்பவத்தில் தலையிட சௌகரியமற்றவனாயி ருக்கிறேன். ஆதலின், தாங்களே இவ்விஷயத்தில் முயன்று வேலை செய்யுங்கள். நான் எனது காரியங்களை முடித்துக் கொண்டு சில நாட்களில் வருகிறேன். அதற்குள் தாங்கள் குற்றவாளியைக் கண்டுபிடித்திருந்தால் சந்தோஷம். இன் றேல், அப்போது நான் இதில் அவசியம் பிரவேசிக்கிறேன்; என்றார். அதற்குப் போலீஸ் கமிஷனர், சரிதங்கள் இஷ் டப்படியே செய்யுங்கள்; என்று கூறிவிட்டுக் கொலை சம் பந்தமான உளவுகள் ஏதாவது கிடைக்குமாவென அவ்வி டத்து ஆராய்ந்து பார்த்தார்கள். அங்குள்ள மேஜை நாற் காலிகள் முன் வைக்கப்பட்டபடியே ஒழுங்காய் இருந்த துடன், அதன்மேலுள்ள சாமான்கள் புரளாமலும் கீழே விழாமலும அப்படியப்படியே இருந்தன. சவத்திற்குச் சுமார் ஐந்தாறு கஜ தூரத்திற்கு அப்பாலுள்ள ஓர் மேஜை யின்மேல் அழகிய ஒரு மரப்பெட்டி திறந்து கிடந்தது. அப்பெட்டியிலுள்ள அநேக கடிதங்கள் மேஜைமேல் இறை ந்து கிடந்ததுமன்றி நோட்டுகளும் சவரன்களுமாக சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நாணயங்கள் இறைந்து கிடந் தன. கமிஷனரும் அவருடன் வந்தவர்களும் அப்பெட் டியைச் சோதித்துப் பார்க்கையில் அங்கிருந்த லிஸ்டுப்படி எல்லாம் சரியாயிருக்க கதிர்வேலு கவுண்டர் எழுதிக்கொ டுத்திருந்த ஓர் 8000 ரூபாய் பாண்டுமட்டும் காணப்பட வில்லை. பிறகு இன்ஸ்பெக்டர் இரத்தம் தோய்ந்த கத்தி யைச் சுட்டிக்காட்டி இக்கத்தியாலேயே குத்தப்பட்டிருக்க வேணுமென்று எண்ணுகிறேன் என்றார். டாக்டர் அக்கத்

தியை எடுத்து நன்றாய்ப் பார்த்த பிறகு கமிஷனருடன் வந்த நூதன மனிதரும் அக்கத்தியை வாங்கி செவ்வையாய்ப் பார்த்தார். பின்பு டாக்டர் இன்ஸ்பெக்டரை நோக்கி சரி, இனி பிரேதத்தைச் சோதிக்கலாமென்றார். உடனே யாவரும் பிரேதத்தினிடம் சென்று பிரேதத்தைச் சுற்றிலும் நெருங்கி நின்றனர். டாக்டர் காயத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் கமிஷனருடன் வந்த புதுமனிதர் தாமும் அவர்களிடம் நெருங்கி பிரேதத்தின் காயங்களைக்கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் டாக்டர் சோதனையும் முடிந்து அவர், பிரேதத்தைத் தாம் அறுத்துப் பார்க்க வேணுமென்றும், அதன் பிறகு தான் தகனக்கிரியைகள் செய்ய வேணுமென்றும் கூறினர். பிறகு அவர்கள் யாவரும் வெளியே சென்றார்கள். பின்பு டாக்டர், பிரேதத்தை அறுத்துப் பார்ப்பதற்கெனப் பிரத்யேகமாய் அமைக்கப்பட்டிருக்கும் ஜாகைக்கு சவத்தை வரவழைத்து அறுத்துச் சோதித்த பின்பு அதை சொந்தக்காரர் வசம் கொடுத்து விட்டார். மறுநாள் காலை எட்டு மணிக்கு நியாயாதிபதிமுதல் யாவரும் ஒரு பொது இடத்தில் கூடி இக்கொலைக் கேசைப்பற்றிய மரண விசாரணையை ஆரம்பித்து வெங்கிடுபதி கவுண்டரின் குமாரனுகிய கனகாசலக் கவுண்டனை முதல் சாக்ஷியாக விசாரித்தார்கள்.

இன்ஸ்பெக்டர் :—கொலையுண்டிறந்த வெங்கிடுபதிக் கவுண்டர் தங்கள் தகப்பனர் தானு ?

கனகாசலம் :—ஆம். அவர் எனது தகப்பனர் தான்.

இன்ஸ்பெக்டர் :—தங்கள் தகப்பனர் கொலையுண்டிற

க்கு முன் கடைசியாய் அவரை தாங்கள் எப்போது கண்டீர்கள் ?

கனகாசலம் :—நேற்றிரவு எட்டு மணிக்கு இப்போது கொல்லப்பட்டுக்கிடக்கும் கூடத்தில் கோகிலாம்பாளுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கக் கண்டேன்.

இன்ஸ்பெக்டர் :—கொலை நடந்தது இத்தனை மணிக்கென்றாவது அல்லது இத்தனை மணிக்கு நடந்திருக்கலாமென்றாவது நீர் கூற முடியுமா ?

கனகாசலம் :—இத்தனை மணிக்கென்று நான் திட்டமாய் கூறமுடியாது. ஆனால் நான் எட்டு மணிக்கு வீட்டின் பின்புறத் தோட்டத்திற்கு உலாவச் சென்றவன் 8-45 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். அப்போது என் தகப்பனார் கோகிலாம்பாளுடன் முன்னம் பேசிக்கொண்டிருந்த கூடத்திலேயே கட்டிலின்மேல் கொல்லப்பட்டு இரத்தம் பெருகிப்போயிருக்கக் கண்டேன். ஆகையால் அவர் எட்டு மணிக்கும் 8-45 மணிக்கும் இடையில் தான் கொல்லப்பட்டு இருக்கவேண்டுமென்று திட்டமாய் கூறமுடியும்.

இன்ஸ்பெக்டர் :—சரி, உம்முடைய தகப்பனார் கொல்லப்பட்டிருந்ததை நீர் பார்த்தபோது நீர் ஒருவர் தான் இருந்தீரா ? அல்லது உம்முடன் இன்னும் யாராவது இருந்தார்களா ?

கனகாசலம் :—என்னுடன் எனதுவேலைக்காரர்களான குள்ளனும், முனியனும் வந்தார்களாதலால் அவர்களுக்கும் தெரியும் நாங்கள் மூவரும் அவ்விடம் வந்த இரண்டொரு

நிமிஷங்களுக்கெல்லாம் கோகிலாம்பாளும் அவ்விடம் வந்தாள்.

இன்ஸ்பெக்டர் :—தங்கள் தகப்பனரைக் கொலை செய்தவர் இன்னரென்று தங்களுக்குத் தெரியுமா?

கனகாசலம் :—நான் நேரில் பார்க்கவில்லையாகையால் இன்னரென்று தெரியாது.

இன்ஸ்பெக்டர் :—சரி. கொலை செய்தது இன்னரென்று திட்டமாய்க் கூறமுடியாவிட்டாலும் இன்னரால் தான் கொல்லப்பட்டிருக்கலாமென்று ஏதாவது சந்தேகமுண்டா?

கனகாசலம் :—உண்டு. சிங்காரவேலு கவுண்டர் குமாரன் சுந்தரராஜுலு கவுண்டன் பேரில் கொஞ்சம் சந்தேகமுண்டு.

இன்ஸ்பெக்டர் :— நீர் அவர் மேல் சந்தேகப்பட வேண்டிய காரணமென்ன?

கனகாசலம் .—அவன் சில மாதங்களுக்கு முன என் தகப்பனரிடம் நேரில், அவரைப் பழிவாங்குவதாகக் கூறியிருக்கிறன். ஆகையால் நான் சந்தேகப்படுகிறேன்.

இன்ஸ்பெக்டர்:—சுந்திரராஜுலுக் கவுண்டர் உங்கள் தகப்பனரைப் பழிவாங்குவதாய் கூறியதற்கு சாக்ஷிகளுண்டா?

கனகாசலம் :—உண்டு. கோகிலாம்பாளுக்கும் வாயிற்காவலனகிய சொக்கனுக்கும் தெரியும்.

பிறகு இரண்டாவது சாக்ஷியாக குள்ளன் கூப்பிடப்பட்டான்.

இன்ஸ்பெக்டர் :— அடே குள்ளா! இந்தக் கொலை நடந்ததைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? சத்தியமாய்ச் சொல்.

குள்ளன் :—சாமி நேற்று சாயந்திரம் விளக்கு வைத்த பின்பு சின்ன எஜமான் என்னையும் முனியனையும், அழைத்துக்கொண்டு பூங்காவிற்குச் சென்று அங்கே சிறிது நேரம் உலாவின பிறகு திரும்பி வந்து வீட்டிற்குள் போனோம். போகும்போது பெரிய எஜமான் கொல்லப்பட்டிருப்பதை எங்கள் முன்னால் சென்ற சின்ன எஜமான் கண்டு அலறிக் கூவினார். நாங்கள் என்ன ஆபத்தோவென்று விரைந்து சென்றுபார்க்க பெரிய எஜமான் கொல்லப்பட்டுக்கிடந்தார். இரத்தம் ஆறாய்ப் பெருகியோடியிருந்தது. அப்பா அனியாயக் கொலை யாரோ போக்கிரிப் பயல்கள் செய்துவிட்டிருக்கிறார்கள் என்றான்.

இன்ஸ்பெக்டர் :—அடே! நீங்கள் அங்கே போகும்போது பிரேதத்தருகில் யாராவது இருந்தார்களா?

குள்ளன் :—ஒருவரும் இல்லை.

இன்ஸ்பெக்டர் :—நீங்கள் அங்கே போனபிறகு யாராவது அங்கு வந்தார்களா?

குள்ளன் :—ஆம். நாங்கள் அங்கே போன கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கோகிலம்மாள் வந்தார்கள்.

மூன்றாவது சாக்ஷியாகிய மூனியனைக் கூப்பிட்டு விசாரிக்க அவனும் குள்ளன் சொல்லிய வாறே சொன்னான்.

பின்பு நான்காவது சாக்ஷியாக கோகிலாம்பாள் கூப்பிடப் பட்டாள்.

இன்ஸ்பெக்டர்:— இந்தக் கேசைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

**கோகிலாம்பாள்** :—நானும் வெங்கிடுபதி கவுண்டரும் நேற்றிரவு சுமார் 8 மணிக்குமேல் அவர் தற்போது கொல்லப்பட்டிருக்கும் கூடத்தில் கட்டிலின் மேல் உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தோம். அப்போது சுந்தர ராஜுலுக் கவுண்டன் பின்வாசல் வழியாக அங்கு வந்து வெங்கிடுபதிக் கவுண்டருடன், தன்னை அவர் முன்னமே மோசம் செய்து அடியோடு கெடுத்து விட்டிருப்பதுமன்றி, தன்னைப் பற்றி சில அவதூரான வார்த்தைகளைத் தான் வேலை செய்யும் அச்சாபீஸ் தலைவராகிய கதிர்வேலு கவுண்டரிடம் கூறி, தன்னை வேலையினின்றும் விலக்கி விடும்படியாக நிர்பந்தித்ததாகவும், இப்படி பல விதத்திலும் தனக்கு முற்றும் விரோதியாய் இருக்கும் அவரைக் கொன்று விட்டே மறு காரியம் பார்க்கிறேனென்றும் கூறி, கையில் இருந்த கத்தியைக் காட்டினான். நான் அதைக் கண்டு பயந்து அவ்விடத்திலிருப்பது அபாயமென்று எண்ணி விரைந்து சென்று ஒரு அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டேன்................அதற்குள்.

இன்ஸ்பெக்டர் :—சுந்திரராஜுலுக் கவுண்டர் வெங்கிடுபதி கவுண்டரோடு வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது நீ பயப்பட்டு அறைக்குள் போய் ஒளியவேண்டிய காரணமென்ன?

கோகிலாம்பாள் :— இந்தச் சுந்திரராஜுக் கவுண்டன் கொஞ்ச காலத்துக்கு முன்னால், நானும் வெங்குடுபதிக் கவுண்டரும் இப்போதைப்போல வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது இங்கு வந்து வெங்கிடுபதி கவுண்டரும் நானும் அவனை மோசம் செய்து விட்டதாகப் பல அவதூரான மொழிகளைப் பேசியதுமன்றி எங்களை ஒருநாளைக்குப் பழிவாங்குவதாகச் சபதம் கூறிப்போனான். ஆகையாலும் இப்போது கையிற் கத்தியுடன் சமீபித்து உன்னைக் கொல்லாமல் விடுவதில்லையென்று கூறினதாலும் நான் உயிருக்குப் பயந்து ஒளித்துக் கொண்டேன்.

இன்ஸ்பெக்டர்:—அப்போது மணி எவ்வளவிருக்கும்?

கோகிலாம்பாள் :—அப்போது இத்தனை மணியென்று திட்டமாய் எனக்குத் தெரியாது.

இன்ஸ்பெக்டர் :—சரி, மேலே நடந்தவைகளைக் கூறு.

சுந்தரராஜுக் கவுண்டன், அவ்வாறு கோபத்தோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போது வெங்கிடுபதி கவுண்டரும் கோபத்தோடு அடே, அயோக்கியப்பயலே உன்னால் ஒன்றும் அப்படிச் செய்ய முடியாது. இந்த விரட்டுதலுக்கெல்லாம் நான் பயப்படுகிறவனல்ல. நீ வெளியே போகாவிட்டால் உன் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன் என்று கோபத்தோடு சப்தமாய்ப் பேசினார் பிறகு இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் யாரோ வேறு மனிதர்கள் பேசிய அரவம் கேட்டது. ஆனால் அவர்கள் மெதுவாய்ப் பேசியதாலும் நான் இருக்கும் அறை அவர்

களிருக்குமிடத்திற்குச் சிறிது தூரமாகையாலும் அவர்கள் பேசியது தெளிவாக விளங்கவில்லை. மீண்டும் வெங்கிடுபதி கவுண்டர் உரத்த குரலில் அடா போக்கிரிப் பையல்களா, என்னிடமா உங்கள் கைவரிசையைக் காட்டுகிறீர்கள்? உங்களாலானதைச் செய்யுங்கள் பார்க்கலாம் என்று கூவினர். பிறகு சில நிமிஷநேரம் அமைதியாயிருந்தது. பிறகு மீண்டும் மனிதர்கள் நடக்கும் காலடியோசை கேட்டதுமன்றி கைகால்களை உதைத்துக்கொள்ளும் சப்தம் போலவும் கழுத்தைப் பிடித்து அமுக்குவதால் உண்டாகிற கர் கர் என்று உறுமுகிற சப்தம் போலவும் கேட்டது.

இன்ஸ்பெக்டர் :—நீ அவ்வறையிலிருந்த படியே கதவின் இடுக்கிலாவது பலகணியின் வழியாகவாவது வெளியில் நடந்த விஷயங்களைப் பார்த்திருக்கலாமல்லவா?

கோகிலாம்பாள் :—தாங்கள் கூறியவாறு பார்க்கக் கதவுகளில் எவ்விதமான சந்தும் இல்லாததாலும், அக்கூடத்திஞேரமாக உள்ள அவ்வறைச் சுவற்றில் பலகணிகளில்லாமையாலும் பார்க்க முடியவில்லை.

இன்ஸ்பெக்டர் :—சரி, மேலே நடந்தவைகளைக் கூறு.

கோகிலாம்பாள் :— பிறகு முன்போலவே அமைதியாய் விட்டது. பின்பு மீண்டும் சில நிமிஷத்திற்கெல்லாம் தொப்பென்று ஒரு சப்தமும் யாரோ ஓடுவது போன்ற காலடியோசையும் கேட்டது. பிறகு சில நிமிஷத்திற்கெல்லாம் கனகாசலக் கவுண்டர் அலறிய சப்தமும் அவரது வேலைக்காரர்கள் பேசும் அரவமும் கேட்டது. அதன்பிறகு

தான் நான் கதவைத் திறந்து கொண்டு அவர்களிருக்கு மிடம் சென்றேன். அங்கே வெங்கிடுபதி கவுண்டர் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டேன். என்று நீர் தாரை ஒழுகிற கண்களைத் துடைத்துக்கொண்டு சொன்னாள்.

இன்ஸ்பெக்டர் :—நீ நேரிற்கண்ட செய்கைகளாலும் கேட்ட வார்த்தைகளாலும் இன்னாால்தான் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்று நீ கூறமுடியுமா ?

கோகிலாம்பாள் :—நான் இன்னாரென்று திட்டமாய்க் கூறமுடியாது.

ஐந்தாவது சாக்ஷியாக முன் வாயிற்காவலன் சொக்கன் கூப்பிடப்பட்டான்.

இன்ஸ்பெக்டர் :—அடே சொக்கன்! இந்தக் கேசைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ?

சொக்கன் :—சாமி எனக்கு ஒன்னும் தெரியாதுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே! உனக்கு ஒன்றும் தெரியாவிடில் பாதகமில்லை. நேற்றிரவு 8 மணி முதல் 9 மணி வரை இவ்வீட்டிற்குள் யார் யார் வந்து போனார்கள் என்பதை மட்டும் தெரிவி.

சொக்கன் :—சாமீ கூடத்திலே இருக்கற கெடியாரத்தலே மணி எட்டடுச்சுதுங்க. பிறகு சித்தெ நேரங்கழிச்சி இரண்டு தடிச்ச ஆசாமிக வந்து எசமான் உள்ளே இருக்காங்களா என்னு கேட்டாங்க. எசமான் உள்ளேதானிருக்காருென்னு சொன்னேனுங்க. அவுங்க இரண்டு பேரும்

உள்ளே போயிட்டாங்க. அவங்கபோயி சித்த நேரங்கழிச்சி போன இரண்டுபேரும், திரும்ப வெளியே வந்தாங்க. அப்பறம் கொஞ்ச நேரம் பொருத்து இன்னொருத்தரும் வெளியே வந்தாங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே, முன்னால் இருவர் வெளியே வந்த நேரத்திற்கும், பின்னால் ஒருவர் வெளியே வந்த நேரத்திற்கும் இடையில் எவ்வளவு நேரம் இருக்கும் ?

சோக்கன் :—கொஞ்ச நேரம் இருக்குங்க.

இன்ஸ்பெக்டர் —அடே கொஞ்ச நேரமென்றால் இவ்வளவென்று வேண்டாமா ? $\frac{1}{4}$ மணியா $\frac{1}{2}$ மணியா எவ்வளவு ? கடியாரத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு நேரம் தெரியாதென்றால் யார் நம்புவார்கள் ?

சோக்கன் :—சாமி கடியாரம் மணி அடிச்சா இத்தனை மணியென்று எண்ணிச் சொல்லத்தெரியுமே அல்லாமல் $\frac{1}{4}$ மணி $\frac{1}{2}$ மணி யெல்லா எனக்குத் தெரியாதுங்க.

இன்ஸ்பெக்டர் :—சரி, அந்த மூன்றுபேரும் இன்னாரென்று தெரியுமா ?

சோக்கன் :—சாமி முன்னே இரண்டு பேர் வெளியே வந்தாங்களே அவங்க இன்னாருண்ணு தெரியாதுங்க. பிறகு உள்ளே இருந்து ஒருத்தர் வந்தாங்களே அவங்க தெரியுமுங்க.

இன்ஸ்பெக்டர் :—அவர் யாரடா ?

சோக்கன் :— அவுங்கதானுங்க. நம்ம கதிர்வேல

கவுண்டர் அச்சாபீசிலே இருக்காங்களே சிவத்தவர் அவுங்க தானுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடா மூட்டாள். யாரடா அது? அவர் பெயர் என்ன சொல்லடா?

சோக்கன் :—சாமி இருங்க வந்திட்டேனுங்க. அவர் சிங்காரவேலு கவுண்டர் மகனுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே! மகனுயிருந்தாலென்ன அப்பனுயிருந்தாலென்ன பெயரைச் சொல்லி தொலையடா?

சோக்கன் :—சாமி ஆமாங்க மறந்துட்டேனுங்க. அவங்க பேர் சுந்தராராசு கவுண்டருங்க.

இன்ஸ்பெக்டர் :— சரி, அவர்கள் வெளியே வரும் போது அவர்கள் கையில் கத்தி தடி முதலிய ஆயுதங்கள் ஏதாவது இருந்தனவா?

சோக்கன் :—சாமி அது நமக்கு தெரியாதுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே அவர்கள் கையில் ஏதாவது ஆயுதம் இருந்ததா இல்லையா? நிஜத்தைச் சொல்லாவிட்டால் உனக்குத் தகுந்த உதை சன்மானம் கிடைக்கும். ஜாக்கிரதை உள்ளதைச் சொல்லு.

சோக்கன் :—என்னங்க சாமி வம்பா இருக்குதுங்க. தெரியாதுண்ணு சொன்ணுக் கூட கட்டாயம் பண்ணுரீங்களே.

இன்ஸ்பெக்டர் :–அடா மூட்டாள் உனக்கு இப்போது

புத்தி கற்பிக்கிறேன். யார்டா அங்கே 247 இவனை இழுத்துக்கொண்டு போய் நன்ருய் உதைத்து கொட்டடியில் மூடிவை; என்ற உடனே ஒரு மலையாளி கானிஸ்டேபிள் சொக்கனிடம் நெருங்கினுன். சொக்கனும் அவனைக்கண்டு பயந்து சாமி அப்படிச் சேஞ்சுராதிங்க. புள்ளை குட்டிக் காரனுங்க. என்று சாஷ்டாங்கமாய் இன்ஸ்பெக்டர் காலில் விழுந்து கொண்டே அவங்க கையிலே ஒண்ணுமில்லிங்க. ஆனல், வீட்டுக்குள்ளே முதலில் இரண்டுபேரு போனுங் கண்ணு சொன்னேம் பாருங்க. அவங்க ஒருத்தர் சொக்காயிலே சோத்தாங்கைக்கிட்டே என்னமோ ரெத்தம்போல சிவப்பா இருந்ததுங்க.

இன்ஸ்பெக்டர் :—சரி, இன்னும் யார் வந்தார்கள்?

சொக்கன் :—அவங்க மூணு பேரும் போன பிறகு நம்ம அச்சாபீஸ் கதிர்வேலு கவுண்டர் உள்ளே போனுங்க. போயிட்டு கொஞ்ச நேரம் கழிச்சி கவுண்டரும் நம்ம தாங்தோணி ஐயங்காரும் ரொம்ப அவசர அவசரமாய் வெளியே ஓடியாந்தாங்க. என்ன சேதின்று கேக்கக் கேக்க ஒண்ணுஞ்சொல்லாமே ஓடிப்போயிட்டாங்க.

இன்ஸ்பெக்டர் :—அவர்கள் கையில் கத்தி முதலிய ஆயுதங்கள் ஏதாவது இருந்ததா?

சொக்கன் :—சாமி அது கிடக்குதுங்க. ஊர் வம்பெல்லா நமக்கெனத்துக்குங்க. மேலும் பாப்பானுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடா போக்கிரிப் பயலே உதைப் பூஜைருசி பார்க்க வேண்டியிருந்தால் இந்த சாகசம் பேசு.

இல்லாவிட்டால் உள்ளதை ஒளியாமல் சொல்லிவிடு.

சோக்கன் :—சாமி பொருங்க. கோபத்தை விடாதிங்க. நம்ம ஐயங்கார் இருக்கருரல்ல, அவங்க கையிலே ஒரு சாண் நீட்டம் ஒரு கத்தி இருந்துதுங்க. ஆ! பாவம்! பாவம்!!! அவர் வேட்டியெல்லாம் ரத்தமாயிருந்ததுங்க. தவிர நம்ம அச்சாபீஸ் கவுண்டர் வேட்டியிலே கூட ரத்த மிருந்துச்சுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே! அச்சாபீஸ் கவுண்டர் கையில் ஏதாவது கத்தி இருந்ததா?

சோக்கன் :—சாமி சத்தியமா இல்லீங்க.

இன்ஸ்பெக்டர் :—சரி இன்னும் யார் வந்தார்கள்?

சோக்கன் :— சாமி எங்கப்பாணே இன்னொருத்தரும் வர்லீங்க. ஐயங்காரும் கதிர்வேலு கவுண்டரும் வெளியே போனபிறகு நம்ம ஊட்டுக்கார சின்ன எசமானர் வந்து யாரோ கொலகாரப் பசங்க வந்து பெரிய எசமானைக் கொண்ணுவிட்டு போயிட்டாங்க எண்ணு அழுதாங்க. இவ்வளவு தானுங்க நமக்குத் தெரியும்.

ஆருவது சாக்ஷியாக வசந்த விலாசத்துப் பின்புறத் தோட்டக் காவலனுகிய திம்மன் கூப்பிடப்பட்டான்.

இன்ஸ்பெக்டர் :—அடே திம்மா! இந்தக் கேஸைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

திம்மன் :—எனக்குக் கொஞ்சங்கூட ஒன்னும் தெரியாதுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே! இந்தக் கேசைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் நேற்றிரவு 8 மணிமுதல் 9 மணி வரை இவ்வீட்டிற்குள் பின்புற வழியாக யார் யார் வந்து போனார்கள் என்பதை மட்டும் சொல்?

திம்மன் :—பொழுது விழுந்து பட்டியாள் நேரமிருந்திச்சுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே இரு. அப்போது மணி எவ்வளவு இருக்கும்?

திம்மன் :—மணி கிணி ஒண்ணும் எனக்குத் தெரியாதுங்க. கெடியாரமா வச்சிகிட்டு இருக்கேன் மணிக்கணக்குச் சொல்ல. பட்டியாள் நேரமிருக்குங்க. அப்போ நான் பாதையோரமுள்ள தோட்டத்து கேட்டருகில் இருக்கும் எங்குடிசை வாசலில் உக்கார்ந்திருந்தேனுங்க. எப்பவும் நான் படுத்துக்கப் போரபோது கதவு பூட்டர வழக்கங்க. ஆனதனாலே அப்போ கதவு தொறந்திருந்துச்சுங்க அப்பொ நம்மூர் சிங்காரவேலு கவுண்டர் மகன் சுந்தராஜுக் கவுண்டர் தோட்டத்து வளியா ஊட்டுக்குள்ளே போக வந்தாங்க. நான் இந்நேரத்திலே இந்த வளியா ஊட்டுக்குள்ளே போனக்க எஜமான் கோவிச்சிக்குவாங்க; எண்ணு சொன்னேன். அதுக்கு அவர் கோபத்தோடு போடா போ உங்கஎஜமானையும் கண்டிருக்கிறேன் அவங்க அப்பனையும் கண்டிருக்கிறேன். அந்தப் பயலுக்கு நான் பயப்படப்பட்டவனல்ல. என்னு சொல்லிகிட்டே ஊட்டுக்குள்ளே போயிட்டாங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே! சுந்தரராஜு கவுண்டர் கையில் கத்தி முதலிய ஆயுதங்கள் ஏதாவது இருந்ததா?

திம்மன் :—கையிலே என்னமோ இருந்தாப்பலேதா னிருந்துச்சுங்க. நிலாவெளிச்சமாயிருந்தாலும்கூட கருக்கலாயிருந்ததால் செவ்வையாத் தெரியிலீங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே என்னதான் மங்கலாய் இருந்தபோதிலும் கையில் கத்தி இருப்பது தெரியாதா?

திம்மன் :— என்னமோ கத்தியாட்டத் தான் இருந்துச்சுங்க.

இன்ஸ்பெக்டர் :—சரி உள்ளே போன சுந்தரராஜு கவுண்டர் திரும்பவும் எப்போது வெளியே வந்தார்?

திம்மன் :— அவர் அந்த வழியாத் திரும்பி வெளியே வரவேயில்லிங்க.

இன்ஸ்பெக்டர் :— சரி, இன்னும் யார் யார் வந்தார்கள்?

திம்மன் :— சுந்தரராஜு கவுண்டரு வந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நம்ம ஊர் தாந்தோணி ஐயங்கார் இல்லீங்க, ஆனக்குட்டியாட்டமா இருக்காங்களே அவர் வந்தாருங்க.

இன்பெக்டர் : — அடே! அவருடைய கையில் ஏதாவது ஆயுதம் இருந்ததா?

திம்மன் :—ஆமாங்க. ஒரு சாணு நீட்டம் ஒரு கத்தி

அவர் சோத்துங்கையிலே மின்னிகிட்டு இருந்துச்சுங்க.

இன்ஸ்பெக்டர் :—அவரிடம் நீ ஒன்றும் பேசவில்லையா?

திம்மன் :—அவர் குதரெ மதிரி ஓடியாந்தாங்க. நான் சாமி, சாமி, என்னு கூப்பிடக் கூப்பிடப் பேசாமலே போய் விட்டாங்க.

இன்ஸ்பெக்டர் :—திரும்பவும் அவர் எப்பொழுது வெளியே வந்தார் ?

திம்மன் :—அவர் திரும்பவும் அந்த வளியா வெளியே வரவே இல்லிங்க.

இன்ஸ்பெக்டர் :—அப்புறம் இன்னும் யாராவது வந் தார்களா ?

திம்மன் :—சாமி உள்ளபடியே நெசமா வேறு ஒருத் தரும் வல்லீங்க.

ஏழாவதாக சுந்தரராஜுலு கவுண்டன் கூப்பிடப்பட் டான்.

இன்ஸ்பெக்டர் :—சுந்தரராஜுலு கவுண்டரே ! இந்தக் கேஸைப்பற்றி உமக்கு என்ன தெரியும் ?

சுந்தரராஜுலு :—நான் நேற்றிரவு மணி எட்டு அடித்த பிறகு அச்சாபீசிலிருந்து புறப்பட்டு மறுநாள் அச்சிடப் படவேண்டிய கடிதங்களை அறுப்பதற்காக எனது கத்தியை எடுத்துக்கொண்டுவர வீட்டிற்குச் சென்று கத்தியை எடு த்து வருகையில் அங்கு என் வீட்டிற்குச் சமீபத்தில்

எங்கோ செல்வதற்காக வந்துகொண்டிருந்த கதிர்வேலு கவுண்டர் என்னைச் சந்தித்து எங்கே சென்ருய் என்று வினவினர். நான் வீட்டிற்குச்சென்ற காரணத்தைத் தெரிவித்தேன். பிறகு, அவர் அன்றுகாலை வெங்கிடுபதி கவுண்டர் அவரைச் சந்தித்து நான் மிக்க அயோக்கியனென்றும், போக்கிரியென்றும், செய்நன்றி மறக்கும் தீயகுணமுடையவனென்றும், ஆதலின் என்னை உடனே வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டுவதுமன்றி அவர், தமது குமார்த்தியை அவரது குமாரனுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்யத்தவறினல் தாம் அவரை ஒரு நாள் எப்படியாவது இக்கட்டில் மாட்டி விடுவதாகவும் கூறி பயமுறுத்தியதாகவும் கூறிவிட்டு, வெங்கிடுபதிகவுண்டர் என்மீது பொருமை கொண்டிருப்பதால் அன்று முதல் நான் மிகவும் ஜாக்கிறதையாய் இருக்கவேண்டுமென்றும் கூறினர். அவர் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் எனக்கு மிகவும் கோபமும் துயரமும் உதித்தன. என் சிறந்த வாழ்நாளின் அழிவிற்கு அவரே முதற்காரணமாய் இருந்ததுமன்றி நான் இந்த ஏழ்மை நிலைமையிலிருப்பதைக்கூடப் பார்க்கப்பிடிக்காமல் பொருமை கொண்டு, மீண்டும் அவர் என்னைக்கெடுக்க நினைத்ததுபற்றி எனக்கு அவர்மேல் மிக்க கோபாவேசமுண்டாகியது. உடனே 'நான் அவ்விடமிருந்து நேராய் வெங்கிடுபதி கவுண்டரின் வீட்டிற்குச் சென்று முன்னமே அவர் எனக்குச் செய்ததும் இப்போதுசெய்ய எத்தனித்ததுமான தீங்குகளை எடுத்துக்காட்டி சிறிது பயமுறுத்தினல் தான் அவர் என் ஜோலிக்கு வாராமலிருப்பாரென்றெண்ணி அவர் வீட்டிற்குச் சென்றேன்.

இன்ஸ்பெக்டர் :—நீர் வெங்கிடுபதி கவுண்டரின் வீட்டிற்குள் சென்றது முன்வாசல் வழியாகவா? பின்வாசல் வழியாகவா?

சுந்தரராஜு :—பின்வாசல் வழியாகச் சென்றேன்.

இன்ஸ்பெக்டர் :—நீர் நேராய் முன்வாசல் வழியாகச் செல்லாமல் பின் வாசல் வழியாய்ச் சென்ற காரணமென்ன?

சுந்தரராஜு :—பின் வாசல் வழி, நான் சென்ற தெரு வினோரமாயிருந்ததாலும், முன் வாசல் வழி நெடுந்தூரம் சுற்றிவர வேண்டியிருந்தமையாலும் பின் வாசல் வழியாக உள்ளே சென்றேன்.

இன்ஸ்பெக்டர் :-சரி, மேலே நடந்தவைகளைக் கூறும்.

சுந்தரராஜு :—நான் உள்ளே சென்றபோது கூடத்தில் வெங்கிடுபதி கவுண்டரும் கோகிலாம்பாளும் கட்டிலின் மேல் இருந்து வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள். அந்த நிலைமையில் அவர்களைக் காண ஏற்கெனவே எனக்கிருந்த கோபம் அநேக மடங்கு அதிகமாயிற்று. நான் கோபத்தோடும் அவர் எனக்குச் செய்த தீங்குகளை எடுத்துக்கூறி முதலிலேயே நீ என்னைக் கெடுத்தது மன்றி மீண்டும் என்னைக்கெடுக்க நினைக்கும் உன்னைக் கொன்றுவிட்டே மறு காரியம் பார்க்கிறேனென்றும், கூறினேன். அதற்கு அவர், அடா அயோக்கியப்பயலே உன்னால் ஒன்றும் அப்படிச் செய்ய முடியாது. உன்னுடைய மிரட்டல்களுக்கெல்லாம் நான் பயப்படுகிற பேர்வழியல்ல. உடனே வெளியே போகாவிட்டால் உன்னைக் கழுத்தைப்பிடித்து வெளியே

தள்ளச் சொல்லுவேன் என்றார்.

இன்ஸ்பெக்டர் :—நிறுத்தும். நீர் வெங்கிடுபதி கவுண் டரை நோக்கி உன்னைக் கொன்றுவிட்டே மறு காரியம் பார்க்கிறேனென்று கூறியதுமன்றி கத்தியைக் காட்டி பய முறுத்தியது உண்டா?

சுந்தரராஜு :—உண்டு.

இன்ஸ்பெக்டர் —நீர் பயமுறுத்தும்போது கோகிலாம் பாள் அவ்விடம் தானே இருந்தாள்?

சுந்தரராஜு :—ஆம். அவ்விடமிருந்தவள் நான் பய முறுத்துவதைக் கண்டு அப்பால் போய்விட்டாள்.

இன்ஸ்பெக்டர் :– சரி, மேல், நடந்தவைகளைக் கூறும்.

சுந்தரராஜு :— நாங்கள் இவ்வாறு வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது யாரோ மனிதர்கள் வரும் காலடி யோசை கேட்டது. நான் உடனே என் கத்தியை இடுப் பில் மறைத்துக்கொண்டேன். உடனே இரண்டு மனிதர்கள் அக்கூடத்தின் வாயிலருகில் வந்து நின்று வெங்கிடுபதி கவுண்டரை நோக்கி அவர் தம் சொந்த பூமியோடு புறம் போக்கு நிலங்களை ஏராளமாய்ச் சேர்த்து சாகுபடி செய் வதாயும் அந்த பூமிகளை உடனே விட்டுவிடவேணுமென் றும் இல்லாவிடில் ஏராளமான தண்டத்தீர்வை விதிக்கப் பட்டுப் போகுமென்றும் கணக்குப்பிள்ளை கூறியதாக அவ் வாட்கள் கூறினார்கள். அந்த ஆட்களின் மேல் வெங்கிடுபதி கவுண்டர் கோபித்துக்கொண்டார். ஆதலால் அந்த ஆட்கள்

வந்தவழியே திரும்பிச் சென்றார்கள். பிறகு நான் அவருடன் மீண்டும் பேசுவதா வேண்டாமா வெனச் சிறிதுநேரம் யோசித்துப் பின் அவருடன் பேசுவதை நிறுத்திவிட்டு அம்மனிதர்கள் சென்ற முன் வாயில் பக்கமாக வெளிவந்து எனதாபீஸுக்குச் சென்றேன்.

இன்ஸ்பெக்டர் :— அங்கிருந்த ஓர் ரத்தம் தோய்ந்த கத்தியை எடுத்து சுந்தரராஜுவின் கையில் கொடுத்து அதில் எழுதப்பட்டிருக்கும் இரண்டு எழுத்துக்களைச் சுட்டிக்காட்டி இக்கத்தி உம்முடையதா? என்றார்.

சுந்தரராஜு :— அக்கத்தியிலுள்ள எழுத்துகளைக் கவனித்ததும் ஆவென்றலறி இது என்னுடைய கத்திதான் ஆயினும், சில நாட்களுக்கு முன்பு ஆபீஸிலிருந்து இக்கத்தி திருட்டுப்போய் விட்டது என்றான்.

இன்ஸ்பெக்டர் :—உமக்கும் வெங்கிடுபதி கவுண்டருக்கும் நெடுநாளாய் விரோதம் உண்டா?

சுந்தரராஜு :—உண்டு.

இன்ஸ்பெக்டர் :—விரோதமுண்டாகக் காரணமென்ன?

சுந்தரராஜு :—வெங்கிடுபதி கவுண்டரின் அபிமான நாயகியாகிய கோகிலாம்பாள் சிறிது காலத்திற்கு முன் என் இஷ்டநாயகியாய் இருந்தாள். அப்போது அவளின் கபட நடிப்பை உண்மையென்று நம்பிய நான் அவளுக்கு ஐந்துவேலி நிலம் கொடுப்பதாயும் அக்கிரய பத்திரத்தைத் தாந்தோணி ஐயங்காரை எழுதும்படியும் சொன்

னேன். அவர், கோகிலாம்பாளுடனும் வெங்கிடுபதி கவுண்டருடனும் கலந்து யோசித்து எனக்குப் பாத்தியப்பட்ட ஐம்பதுவேலி நிலத்தையும் கிரயம் எழுதி எனக்கு தந்திரமாய் மதுபானத்தைக் கொடுத்து மயக்கி என்னிடம் கையெரப்பம் வாங்கியதுமன்றி ரிஜிஸ்தரையும் முடித்துக் கொண்டார்கள். இந்தப் படுமோசத்திற்கு வெங்கிடுபதி கவுண்டரே முக்கிய ஆதாரமாதலால் அதுவே எங்கள் விரோதத்திற்குக் காரணம்.

இன்ஸ்பெக்டர்:—உம்மை அவர்கள் மோசம் செய்து விட்டார்கள் என்று நீர் எப்படி அறிந்தீர்?

சுந்தரராஜு:— வெங்கிடுபதி கவுண்டரும் கோகிலாம்பாளும் ஒருநாள் இவ்விஷயத்தைப்பற்றி வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது நான் மறைந்திருந்து கேட்டதாலும், பிறகு கிரயசாசனத்தின் நகலை வாங்கி பார்த்ததாலும் அவர்கள் செய்த படுமோசம் வெளியாயிற்று.

இன்ஸ்பெக்டர்:—நீர் இதற்கு முன் வெங்கிடுபதி கவுண்டர் வீட்டில் அவரையும் கோகிலாம்பாளையும் சந்தித்து ஒரு நாளைக்கு 'உங்களை பழிவாங்குகிறே,னென்று கூறியதுண்டா?

சுந்தரராஜு:—ஆம். கூறியது உண்டு.

பிறகு கதிர்வேலு கவுண்டர் விசாரிக்கப்பட்டார்.

இன்ஸ்பெக்டர்:—நீர் வெங்கிடுபதி கவுண்டரின் வீட்டிற்கு நேற்றிரவு போனதுண்டா?

**கதிர்வேலு கவுண்டர் :—** ஆம்.

**இன்ஸ்பெக்டர் :—**எத்தனை மணிக்குச் சென்றீரென்பது ஞாபகமிருக்கிறதா ?

**கதிர்வேலு கவுண்டர் :—** எட்டடித்து நாற்பது நிமிஷத்திற்கு அங்கு போனேன்.

**இன்ஸ்பெக்டர் :—** 8–40 மணிக்கு என்று நீங்கள் திட்டமாய்க் கூறமுடியுமா ?

**கதிர்வேலு கவுண்டர் :—**என்னிடமிருந்த கைக் கெடியாரத்தில் அப்பொழுது நான் பார்த்ததால் உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

**இன்ஸ்பெக்டர் :—**தாங்கள் இரவு 8–40 மணிக்கு அங்கு செல்லவேண்டிய காரணமென்ன ?

**கதிர்வேலு கவுண்டர் :—** இறந்துபோன வெங்கிடுபதி கவுண்டர் நேற்றிரவு 8-40 மணிக்குத் தம்மைச் சந்திக்கும்படி எனக்குச்சொல்லியிருந்ததால் நான் அங்கு சென்றேன்

**இன்ஸ்பெக்டர் :—**தங்களை எதற்காக 8-40 மணிக்குச் சந்திக்கச் சொன்னாரென்ற விஷயம் தங்களுக்குத் தெரியுமா ? தெரிந்தால் சொல்லுங்கள்.

**கதிர்வேலு கவுண்டர் :—**தெரியும். வெங்கிடுபதி கவுண்டர் சிலநாளுக்கு முன்னமே தமது குமாரனுக்கு எனது குமார்த்தியை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டதற்கு நான் இதுவரை சரியான

பதில் கொடாது காலஹரணம் செய்ததால், இப்பொழுது அவசியம் விவாகத்தைச் செய்துமுடிக்க வேண்டியதுமன்றி நான் உடனே சுந்தரராஜுலுவை வேலையினின்றும் நீக்கிவிட வேண்டுமென்றும், இன்றேல் நான் அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகை (8000) ரூபாய்க்கும் உடனே என்பேரில் வாரண்டு பிரப்பித்து என்னை இக்கட்டில் மாட்டி விடப் போவதாயும், ஆதலின் இதுவிஷயமாக என் அபிப்பிராயத்தை நன்றாய் யோசித்து அன்று மாலை 8-40 மணிக்கு நான் அவரிடம் வந்து கூறவேண்டுமென்றும், சொல்லியிருந்தார். ஆகையால் 8-40 மணிக்கு அங்கு சென்றேன்.

இன்ஸ்பெக்டர் :—தங்களிடம் இவ்விஷயத்தை வெங்கிடுபதி கவுண்டரே நேரில் கூறினாரா? அல்லது கடிதமூலமாகத் தெரிவித்தாரா ?

கதிர்வேலு கவுண்டர் :—நேற்று காலை வெங்கிடுபதி கவுண்டரே அச்சாபீசுக்கு வந்து என்னிடம் நேரில் கூறினர்.

இன்ஸ்பெக்டர் :— அப்போது யாராவது அருகில் இருந்தார்களா ?

கதிர்வேலு கவுண்டர் :— ஒருவருமில்லை.

இன்ஸ்பெக்டர் :— அவர் விவாக விஷயமாய் கேட்ட கேள்விக்கு நீங்கள் சீக்கிரம் பதில் கொடாமல் காலஹரணம் செய்யக் காரணமென்ன ?

கதிர்வேலு கவுண்டர் ;— என் குமார்த்தி அவர் குமா

ரனை விவாகம் செய்துகொள்ள மறுத்ததால் நான் உடனே பதில்கூற முடியவில்லை.

**இன்ஸ்பெக்டர் :—** நீர் கொடுக்கவேண்டிய கடன் தொகை (8000) ரூபாயுக்கும் அடமானபத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறீரா ?

**கதிர்வேலு கவுண்டர் :—**இல்லை. பிராம்சரி எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

**இன்ஸ்பெக்டர் :—** சரி, தாங்கள் அங்கே சென்ற விபரத்தைக் கூறுங்கள்.

**கதிர்வேலு கவுண்டர் :—**நான் இரண்டு மூன்று அறைகளைக்கடந்து தற்போது வெங்கிடுபதி கவுண்டர் கொல்லப்பட்டிருக்கும் கூடத்தின் வாயிலண்டை நெருங்கினேன். அப்போது உள்ளே இருந்து தாந்தோணி ஐயங்கார் மிக்க பரபரப்போடும் வேகத்தோடும் ஓடி வந்தார். அவரது கையில் பளபளப்பான கத்தி இருந்தது. அக்கத்தியிலும் அவரது வஸ்திரங்களிலும் இரத்தக் கறைகள் ஏராளமாய் இருந்தன. அவர் ஓடிவந்த வேகத்தால் என்னை அறியாது என்மேல் படாலென்று மோதிக் கொண்டே வெளியே ஓடினார். அவரது பரபரப்பையும் இரத்தக்கறையையும் கண்ட நான் சிறிது கலவரமடைந்து உள்ளே எட்டிப்பார்த்தேன். வெங்கிடுபதி கவுண்டர் கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தார். அவரது கழுத்திலிருந்து ரத்தம் தாராளமாய் வடிந்திருந்தது. இச்சம்பவங்கள் அங்கிருந்த விளக்கு வெளிச்சத்தால் தெரிந்தது. நான் அதைக்கண்டு இங்கிருப்பது அபாயமென்றெண்ணி வந்தவழியே திரும்பி வீட்டிற்குச் சென்றேன்.

இன்ஸ்பெக்டர் :—உம்முடைய வேஷ்டியில் இரத்தக் கறைகளாகவேண்டிய காரணமென்ன ?

கதிர்வேலு கவுண்டர் :— ஒருவேளை ஐயங்கார் என் மேல் மோதியதால் அவரின் உடையிலிருந்த இரத்தம் என் மேல் பட்டிருக்கலாம்.

இன்ஸ்பெக்டர் :— ஐயங்கார் ஓடிவந்தபோது அங்கு இன்னும் யாராவது இருந்தார்களா ?

கதிர்வேலு கவுண்டர் :— ஒருவருமில்லை.

ஒன்பதாவதாக தாங்தோணி ஐயங்கார் கூப்பிடப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் :—நீர் நேற்றிரவு வெங்கிடுபதி கவுண்டரின் வீட்டிற்குச் சென்றதுண்டா ?

ஐயங்கார் :— ஆம். போயிருந்தேன்.

இன்ஸ்பெக்டர் :— எத்தனை மணிக்குப் போயிருந்தீரென்பது ஞாபகமிருக்கிறதா ?

ஐயங்கார் :— ஞாபகமிருக்கிறது. 8 மணி அடித்துக் கொஞ்ச நேரஞ் சென்றபிறகு போனேன்.

இன்ஸ்பெக்டர் :— சுமார் $8\frac{1}{2}$ மணி இருக்குமா ?

ஐயங்கார் :—மணி $8\frac{1}{2}$ என்றும் $8\frac{3}{4}$ என்றும் தெரியாது.

இன்ஸ்பெக்டர் :— சரி, இரவு 8 மணிக்குமேல் எதற்காக அங்கே போயிருந்தீர் ?

ஐயங்கார் :—நான் நேற்றிரவு 8 மணிக்குமேல் சாப்பி

டுவதற்காக இலைதைக்கும் பொருட்டு வாழைமட்டையைச் சீவிக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு ஆள் வந்து வெங்கிடுபதி கவுண்டர் என்னை 8 மணிக்குமேல் அழைத்து வரும்படி தன்னிடம் சாயந்திரம் சொன்னதாகவும் ஆத லின் நான் உடனே வரவேண்டுமென்றும் கூறினன். சில நாட்களாக எங்களுக்குள் நேர்ந்த சில மனஸ்தாபங்களை முன்னிட்டு நான் அவர் வீட்டுக்கு போகாமலிருந்தமையால் அவரால் பெரும்பாலும் போஷிக்கப்பட்டு வந்த என் குடும் பத்தில் தரித்திரம் தலைகாட்டியல்லல் படுத்தியது. ஆகவே மீண்டும் அவரது சினேகத்தை அடையவேண்டுமென்று நான் ஆவலாயிருந்தேன். அதற்கிணங்க கவுண்டர் அழைக் கிறுரென்று ஆள் வந்ததும் எனக்கு மிக்க ஆனந்தமுண்டா யிற்று. சந்தோஷ மிகுதியால் செய்வதின்னவென்று விளங் கவில்லை. மட்டையைத்தூக்கி அப்பாலெறிந்தேன் கத்தி னை வீட்டில வைப்பதுங்கூடக் காலதாமதமாகுமென்று கையிலிருந்த கத்தியுடனே கவுண்டர் வீட்டுக்கு ஓடினேன்

இன்ஸ்பெக்டர் :—நிறுத்தும். நீர் வீட்டிற்குள் சென் றது முன் வாசல் வழியாகவா பின் வாசல் வழியாகவா ?

ஐயங்கார் :—பின் வாசல் வழியாகச் சென்றேன்.

இன்ஸ்பெக்டர் :— நீர் சரியான வழியாகிய முன் வாசல் வழியாகச் செல்லாமல் பின்வாசல் வழியாகச் சென்ற காரணமென்ன ?

ஐயங்கார் :— நான் சென்ற தெருவினோரமே பின் வாசல் வழியிருந்ததாலும் முன் வாசல் வழிக்கு நெடுந்

தூரம் சுற்றிப்போகவேண்டுமாதலாலும் பின் வாசல் வழியாகச் சென்றேன்.

இன்ஸ்பெக்டர் :— பின்புறம் கேட்டருகிலிருந்த தோட்டக்காரனை நீர் சந்தித்ததுண்டா ?

ஐயங்கார் :— நான் மிக்க ஆவலோடும் அவசரத்தோடும் ஓடினதால் யார் இருந்தாரென்பது யார் இல்லையென்பதும் தெரியாது.

இன்ஸ்பெக்டர் :— சரி, மேல்நடந்த விஷயங்களைக் கூறும்.

ஐயங்கார் :— நான் வேகமாக வீட்டிற்குள் நுழைந்து இரண்டு மூன்று அறைகளையும் கூடங்களையும் கடந்து வெங்கிடுபதி கவுண்டர் கொல்லப்பட்டிருந்த கூடத்திற்கு வந்தேன். அங்கு கட்டிலின்மேல் கவுண்டர் மல்லாந்து படுத்திருந்தார். அவரது கழுத்தின் இருபக்கத்திலுமிருந்து இரத்தம் ஏராளமாக வடிந்து பஞ்சனை முற்றும் நனைத்துவிட்டிருந்ததுமன்றி கீழேயும் வடிந்திருந்தது. அவரது கண்கள் திறந்தபடியேயிருந்தன. வாய் ஆவெனத் திறந்த வண்ணமிருந்தது. பிரேதத்தின் கோரரூபத்தையும் இரத்தத்தையும் பார்க்க எனக்குப் பாதிப் பைத்யம் பிடித்தது போலிருந்தது. மூளை குழம்பியது. அறிவு தடுமாறியது. மெய் நடுங்கியது. தள்ளாடிக்கீழே விழுந்துவிட்டேன். மீண்டும் இரண்டொரு நிமிடத்தில் நினைவு பெற்றெழுந்தேன். எனது உடைகளிலும் தேகத்திலும் அங்கிருந்த இரத்தம் பட்டிருந்தது இந்த நிலைமையில் என்னை நோக்கிய எவரும்

நானே கொலையாளி என்றெண்ணச் சிறிதும் சந்தேகமில்லா மலிருந்தது. கத்தியும் கையிலிருந்தது. இவ்விடமிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் எனக்குப் பேராபத்தென்று தோன்றியதாகையால் உடனே அவ்விடமிருந்து ஓட்டம் பிடித்தேன்.

இன்ஸ்பெக்டர் :—நீர் ஓடியது முன்வாசல் வழியாகவா பின் வாசல் வழியாகவா ?

ஐயங்கார் :— நான் சுய அறிவு முற்றிலுமிழந்து பெரும் பைத்யம் பிடித்தவன்போலிருந்தமையால் எந்த வழியாக ஓடினேனென்பது ஞாபகமில்லை.

இன்ஸ்பெக்டர் :—நீர் வெளியே ஓடும்போது யாரை யாவது சந்தித்ததுண்டா ?

ஐயங்கார் :— அதுவும் ஞாபகமில்லை.

என்று சொன்னவுடனே அடுத்த சாக்ஷியாக டாக்டர் கூப்பிடப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் :— டாக்டர்! தாங்கள் பிரேதத்தை நன்ருய் சோதித்தீர்களா ?

டாக்டர் :—ஆம்.

இன்ஸ்பெக்டர் :— வெங்கிடுபதி கவுண்டருக்கு மரணம் எதனுல் சம்பவித்திருக்கலாமென்று நினைக்கிறீர்கள் ?

டாக்டர் :—கழுத்தில் கத்தியால் குத்தியதால் குரல் வளை அறுந்து உயிர் நீங்கியிருக்குமென்றெண்ணுகிறேன்.

இன்ஸ்பெக்டர் :—சவத்தின் கழுத்திலிருக்கும் காயம் அருகே கிடந்த கத்தியால் குத்தப்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறீரா? அல்லது வேறு ஆயுதங்களால் குத்தப்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறீரா?

டாக்டர் :—அருகே கிடந்த கத்தியாலேயே குத்தப்பட்டிருக்க வேண்டுமென எண்ணுகிறேன்.

இன்ஸ்பெக்டர் :—கொலையுண்டிறந்தவர் தாங்கள் பரிசோதித்த சமயத்துக்கு எவ்வளவு நேரத்திற்கு முன் கொல்லப்பட்டிருப்பார்?

டாக்டர் :—நான் பிரேதத்தை நேற்றிரவு 9-40 மணிக்கு அறுத்துப் பார்த்ததில் அச்சோதனைக்கு சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன் கொல்லப்பட்டிருக்கவேண்டும். அதாவது சுமார் $8\frac{1}{2}$ மணிக்கு.

இன்ஸ்பெக்டர் :—சரி, தாங்கள் போகலாம் என்று கூறியதும் அடுத்த சாக்ஷியாக வெட்டியான் வேலப்பனுயக்கன் கூப்பிடப்பட்டான்.

இன்ஸ்பெக்டர் :—அடே வேலப்பன்! நீ நேற்றிரவு எட்டு மணிக்குமேல் வெங்கிடுபதி கவுண்டரின் வீட்டுக்குப் போனதுண்டா?

வேலப்பன் :—சாமி போயிருந்தேனுங்க,

இன்ஸ்பெக்டர் :—எதற்காகடா அங்கே போனப்?

வேலப்பன் :—சாமி கணக்குப்பிள்ளை எஜமாங்க கவுண்டர் எஜமாங்க கிட்டப்போய் அவர் சாகுவளி சேஞ்சு

கிட்டிருக்கிற பொறம்போக்கு நிலத்தையெல்லாம் உட்டுட வேணுமென்றும் இல்லாவிட்டால் ரொம்ப ரொம்ப தண்டம் கட்டிப்போடுவேனென்றும் சொல்லச் சொன்னாங்க. அதுக்காகப் போயிருந்தேனுங்க.

இன்ஸ்பெக்டர் :—சரி, கவுண்டரிடம் சொன்னதற்கு அவர் என்ன சொன்னார் ?

வேலப்பன் :—கவுண்டரிடம் சொன்னேனுங்க. அதற்கு அவர் ரொம்ப ரொம்பக் கோவிச்சிட்டாங்க,

இன்ஸ்பெக்டர் :— அப்போது பக்கத்தில் யாராவது இருந்தார்களா ?

வேலப்பன் :—ஆமாங்க, நம்ம சுந்தரராஜு கவுண்டர் நம்ப கவுண்டர் கிட்டே நின்றுகிட்டிருந்தாங்க.

இன்ஸ்பெக்டர் :—அதே கிட்டே என்றால் எவ்வளவு தூரம் இருக்கும் ?

வேலப்பன் :—சாமி அம்பிட்டுத்தூரம் இருக்கும்.

இன்ஸ்பெக்டர் :—சீ முட்டாள் பயலே, எத்தனை அடி தூரம் இருக்குமென்று சொல்லடா ?

வேலப்பன் :— ஓ! அதுவா. இப்போ தெரிஞ்சிச்சுங்க. முன்னமே இப்படிக் கேட்டிருந்தாச் சரியாய்ச் சொல்லியிருப்பேனுங்க. சங்கிலி பிடுச்சி பிடுச்சி எனக்கு ரொம்ப வளக்கங்க. அவர் நின்றுகிட்டு இருந்தது சுமார் 10 அடி தூரம் இருக்குங்க.

இன்ஸ்பெக்டர் :— சுந்தரராஜு கவுண்டர் கையில் கத்தி முதலிய ஆயுதம் ஏதாவது இருந்ததா?

வேலப்பன் :— அதெல்லாமெனக்குத் தெரியாதுங்க.

இன்ஸ்பெக்டர் :—அடே ஜாக்கிரதை. உண்மையைச் சொல்லாவிட்டால் உதைப்பூஜை கொடுக்கச் சொல்லுவேன்

வேலப்பன் :—சாமி! சத்தியமா அவர் கையில் கத்தி இல்லே.

இன்ஸ்பெக்டர் :— சரி, அதிருக்கட்டும் உனது சொக்காயில் எப்படி இரத்தக்கறையாயிற்றென்று தெரியுமா?

வேலப்பன், :—தன்னுடைய சொக்காயின் ஒவ்வொரு பாகத்தையும் நன்றாய்ப் பார்த்து விட்டு கடைசியில் தன வலக்கைப்புறத்து விலாப்பக்கம் சட்டையின் மேலிருந்த ரத்தக்கறையைக்கண்டு, ஓ வென்று அலறி பசபச வென விழித்துக்கொண்டு சாமி இது எப்படியோ எனக்குத் தெரியாதே வந்திச்சிங்க. மன்னிக்கவேணுங்க. நான் சத்தியமாக் கொலையே செய்யலீங்க. என்று குப்புற விழுந்து கும்பிட்டான்.

இன்ஸ்பெக்டர், :— அவனை அப்பால் போயிருக்கச் சொல்லிவிட்டு மற்றொரு வெட்டியானாகிய இருளனைக் கூப்பிட்டு விசாரிக்க அவனும் வேலப்பனைப்போலவே பதில் சொன்னான். பிறகு கணக்குப்பிள்ளை கஜபதிராயரை அழைத்து விசாரித்ததில் அவர், தாம் வெட்டியான்களிடம் வெங்கிடுபதி கவுண்டருக்குச் சமாசாரம் சொல்லியனுப்பியது

வாஸ்தவமென்றும் ஆனால் தாம் சுமார் 15 நாட்களுக்கு முன்னமே கூறும்படி சொல்லியனுப்பியிருக்க அவர்கள் எக்காரணத்தாலோ இதுவரை கூறாமல் இருந்திருக்கிறார்களென்றும் கூறினார். ஆகையால் அத்துடன் விசாரணை முடிந்தது. இக்கொலைகேஸை விசாரணை செய்து குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை விதிக்க இக்கோர்ட்டுக்கு அதிகாரமில்லையாகையால் தற்போதைய விசாரணையில் குற்றவாளிகளெனக் கருதப்பட்ட சுந்தரராஜு கவுண்டனையும் தாங்தோணி ஐயங்காரரையும் வெட்டியான்கள் இருவரையும், இக்கேஸுக்குச் சம்பந்தப்பட்ட சகல ரிகார்டுகளையும் தகுந்த பந்தோபஸ்துடன் மேல் கோர்டார் வசத்துக்கு அனுப்பப்பட்டது.

---

## 16-வது அத்தியாயம்.

# ஸ்ரீநிவாசன் வரவு.

---

முன் அத்தியாயத்திற் கண்ட சம்பவங்கள் நடந்து இரண்டு வாரத்திற்குப் பின்பு ஒருநாள் கதிர்வேலு கவுண்டரும் அவரது குமாரத்தி சுவர்ணம்பாளும் அவர்கள் வீட்டிலுள்ள ஒரு கூடத்திலுட்கார்ந்து சுந்தரராஜுவின் சிறைச்சாலை வாசத்தைக் குறித்து மனம் நைந்துகொண்டிருந்தனர். சுந்தரராஜுவை ஜாமீன்பேரில் விடுவிக்க கதிர்வேலு கவுண்டர் எவ்வளவு

முயன்றும், கவர்ன்மெண்டார் மறுத்து விட்டனர். சுந்தர ராஜுவைச் சிறைச்சாலையில் அடைத்தது முதல் சுவர்ணு ம்பாள் சரியான போஜனம் உட்கொள்ளாமல் நாளுக்கு நாள் மெலிந்து வந்தாள். அவளது சுந்தரவதனம் மெலிந்து களையற்றிருந்தது. அவள் ஒவ்வொரு நிமிடமும் துப்பறி யும் ஸ்ரீனிவாசன் வரவையே எதிர்பார்த்திருந்தாள். அவ ளது தந்தை, அவர் சீக்கிரம் வந்துவிடுவாரென்று சமா தானம் கூறிக்கொண்டிருந்தார். அத்தருணம் வாயிற்காப்ப வன் உள்ளே வந்து யாரோ ஒரு பெரிய மனிதர் தங்களைக் காண வந்திருக்கிறாரென்று கூறி அவர் கொடுத்ததாக ஒரு கடிதத்தைக் கொடுத்தான், கதிர்வேலு கவுண்டர் அக்கார் டிலுள்ள விலாசத்தைக்கண்டதும் மிக்க சந்தோஷங்கொ ண்டு உடனே அவரை அழைத்து வரும்படி கூறிவிட்டு, குழந்தாய்! இதோ ஸ்ரீனிவாசன் வந்துவிட்டார் என்றார். அவ்வார்த்தையைக்கேட்ட சுவர்ணும்பாள் சற்று திருப்தியுற்றவளாய் தன் ஆசனத்தைவிட்டெழுந்து அக் கூடத்திற்கு அருகிலுள்ள ஒரு அறைக்குச் சென்றாள். சிறிது நேரத்தில் நாகரீகமான உடையணிந்த ஒரு பெரிய மனிதன் உள்ளே வந்தான். அவன் சுமார் $5\frac{1}{2}$ அடி உயர மும் சிவந்த நிறமும் உடையவனாயிருந்தான். அவனுடைய நாசி நீண்டு முனை வளைந்திருந்தது. அவனுடைய நெற்றி சற்று பரந்து புடைத்திருந்தானது அவனுடைய கூரிய அறிவின் வன்மையை விளக்கியது. அவனுடைய கண்கள் மிக்க பளபளப்பாயும் கூரிய பார்வையுடையதாயுமிருந்தன. இவனின் வரவைக்கண்ட கதிர்வேலு கவுண்டர் மிக்க சந் தோஷத்துடன் ஆ! வாருங்கள். வாருங்கள், தங்களின்

வருகையை நாங்கள் ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்த்தோம். தற்போது எங்கள் குடும்பத்தைப் பெரிய ஆபத்து சூழ்ந்திருக்கிறது. தாங்கள் மனம் வைத்தாலன்றி இவ்வாபத்திலிருந்து நாங்கள் மீண்டும் தலையெடுக்கப் போவதில்லை. குழந்தை சுவர்ணம்பாள், சுந்தரராஜு சிறைச்சாலை சென்றமுதல் இதுவரை சரியான ஆகாரம் உட்கொள்ளாமல் துரும்பாய் இளைத்துவிட்டாள். அவளின் பரிதாபமான முகத்தைப் பார்க்கப்பார்க்க என் மனம் பதைக்கிறது. போலீசார் முன் பின் யோசித்துப்பாராமல் கண்மூடித்தனமாய் சுந்தரராஜுவைச் சிறையிலடைத்ததுமன்றி என்மேலும் மோசூல் வைத்திருக்கிறார்கள். இத்தகைய நுண்ணறிவிலாப் பேதைகளைப் போலீஸ் இலாக்காவில் அதிகாரிகளாக நியமிக்கும் நியதி இருக்கும் வரை, சாதுக்களின் சங்கடங்கள் ஒருநாளும் தணியப்போவதில்லை. தாங்கள் அவசியம் இக்கேஸில் பிரவேசித்து சுந்தரராஜுவின் சிறைச்சாலை வாசத்தைத் தவிர்த்தல் வேண்டும். இதனால் தங்களுக்குப் பெரும் புண்ணியம் சித்திப்பதுடன், ஆபத்தில் அடியோடு முழுகிப் போகவிருக்கும் ஒரு குடும்பத்தைக் கைதூக்கிவிட்ட பெரும்புகழும் தங்களைச் சேரும். இதனால் ஏற்படும் சகல செலவுகளையும் நான் எப்படியும் தங்களுக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன் சுந்தரராஜு என்னவோ இக்கொலையில் கொஞ்சமும் சம்மந்தப்படவில்லையென்று நான் திட்டமாய் எண்ணுகிறேன். ஆனால், தாங்கள் விசாரணை சமயம் நேரில் இருந்து கேட்டிருந்தால் விஷயம் தங்களுக்கு நன்கு விளங்கியிருக்கும்; என்றார்.

ஸ்ரீனிவாசன் :—ஓ! தாங்கள் அதைப்பற்றிக் கவலைப்

படவேண்டாம். விசாரணையின்போது நான் அருகிருந்து ஒவ்வொரு சாக்ஷியங்களையும் நன்றாய்க் கேட்டிருக்கிறேன்; என்றான்.

கதிர்வேலு கவுண்டர்:—ஓ! தாங்கள் விசாரணையின் போது அருகில் இருந்தீர்களா? உண்மையாய் இருந்தீர்களா? என்னுடைய கண்கள் என்ன உறங்கிக்கொண்டா இருந்தது? என்று திகைத்தார்.

ஸ்ரீனிவாசன்:—தாங்கள் திகைப்படைவது ஆச்சரியமில்லை. நான் அப்போது நியாயாதிபதியருகில் வேறு வேடத்துடனிருந்தேனாகையால் ஒருவரும் என்னைக்கண்டு கொள்ளவில்லை. தவிர கொலை நடந்த அன்றிரவு நான் போலீஸ் கமிஷனர் அவர்களுடனிருந்து பிரேதத்தையும், கொலை நடந்த இடத்தையும், ஆராய்ந்து அநேக விஷயங்களை அறிந்துகொண்டிருக்கிறேன். அப்பொழுதே கமிஷனர் அவர்கள் என்னை இக்கேசில் பிரவேசித்து வேலை செய்யும்படி கேட்டுக்கொண்டார். ஆயினும் ஒரு காரணத்தை முன்னிட்டு, நான் சில அவசர ஜோலிகள் நிமித்தம் இந்நகரத்திற்கு வந்திருப்பதாகவும், ஒரு சமயம் உடனே ஊருக்குத் திரும்பிப்போகும்படி நேரிடினும் நேரிடலாமென்றும், ஆகையால் உடனே இக்கேசில் பிரவேசித்து வேலைசெய்ய எனக்கு சௌகர்யமில்லை என்றும், வேண்டுமானால் சிலநாட்களுக்குப்பிறகு இக்கேசில் பிரவேசித்து வேலை செய்வதாகவும், ஒரு போக்காக சமாதானம் கூறினேன். எனினும், எனது சொந்த அலுவலின் நிமித்தமாகவும் இக்கேசின் உண்மையான பாகத்தை ஒருவாறு அறியவேண்டுமென்று

எனக்கெழுந்த ஆவலினாலும் சொலை நடந்த தினம் முதல் 13 நாட்கள் வரை அதாவது—நேற்றைக்கு முந்திய நாள் வரை—இந்நகரத்திலேயே இருந்து வந்தேன். அதற்குள் இக்கொலைக்கேசுக்குச் சம்பந்தமான அநேக விஷயங்கள் எனது ஆராய்ச்சிக்குப் புலப்பட்டன. பிறகு நான் எனது ஆராய்ச்சியை அத்துடன் நிறுத்திவிட்டு எனது அவசர ஜோலியின் காரணமாக நேற்றுக்காலை வண்டியில் சிங்களபுரம் சென்றேன். அங்கு தாங்கள் சில நாட்களுக்கு முன்பு எழுதிய—சுந்தரராஜ௴ சிறைச்சாலையிலடைக்கப்பட்ட மறுநாளே நான் சிங்களபுரத்திலிருப்பதாக நினைத்து தாங்கள் எழுதிய-கடிதத்தை அங்கு கண்டு மீண்டும் இன்று காலை வண்டியில் திரும்பி இங்குவந்து தங்களைக் கண்டேன். இக்கேசில் பிரவேசித்து உண்மையைக் கண்டுபிடிக்கும்படி தாங்கள் கேட்டுக்கொள்வதற்கு முன்பே தற்செயலாக இக்கேசைப்பற்றிய அநேக விஷயங்களை நான் ஆராய்ந்து அறிந்துகொண்டிருக்கிறேன். ஆயினும் முற்றிலும் ஆராய்ந்தறியுமுன் எதையும் திட்டமாய்க்கூற என்னால் முடியாது; என்றான்.

கதிர்வேலுகவுண்டர்:— அடடா தாங்கள் இந்நகரத்தில் இருந்ததை நான் அறிந்துகொள்ளாமையால் தங்களூராகிய சிங்களபுரத்திற்குக் கடிதம் எழுதினேன். அதனால் தான் தங்களை உடனே காண முடியாமல் போய்விட்டது. மேலும் தங்களது வீரப்பிரதாபங்களை பலரால் நான் கேள்விப்பட்டிருக்கிறேனேயன்றி இதுவரை தங்களைச் சந்தித்து வார்த்தையாடியதில்லை. இன்று தங்களை சந்தித்து சம்பாஷிக்கும்படியான பாக்கியம் பெற்றேன்; என்று அன்பாகவும் உருக்கமாகவும் கூறிவிட்டு மீண்டும் ஸ்ரீநிவாசனை

நோக்கி ஐயா தாங்கள் உடனே இக்கேசில் பிரவேசித்து வேலை செய்யச் சௌகரியமில்லையென்று கமிஷனர் அவர்களிடம் கூறினீர்களல்லவா? அப்படித் தாங்கள் கூறுவதற்குக்காரணமென்னவென்பது எனக்கு விளங்கவில்லை. ஆகையால் அவ்விஷயத்தைத் தயவு செய்து கூறவேண்டுமென்றார்.

ஸ்ரீநிவாசன்:—நான் ஆரம்பத்திலேயே இக்கேசில் தலையிட்டிருப்பேன். ஆனால் போலீஸ் இன்ஸ்பெக்டர், அவர் அடையவேண்டிய புகழையெல்லாம் இடையிலிருந்து தடுத்து, நான் அடைவதாக எப்போதும் என்மேல்பெரும் பொறாமை கொண்டிருப்பவராதலால் இக்கேசில் நன்றாய் அவர் சளைத்துப்போகுமட்டும் இதில் பிரவேசிப்பதில்லையென்று உறுதிகொண்டிருந்தேன் ஆகையால் அவ்வாறு கூறினேன். ஆயினும், தங்கள் கடிதத்தைக் கண்டதும் எனது விரக்தி அடியோடு அப்பால் விலகியது. இந்த நிமிஷமுதல் இதில் வேலைசெய்ய வேண்டியவனாயிருக்கிறேன்; என்றான்,

கதிர்வேலு கவுண்டர்:—ஆம். தாங்கள் உண்மையாகவே இக்கேசில் பிரவேசித்து எங்கள் மானத்தைக் காப்பாற்றவேண்டியது அவசியம். என்று அவரது இருகரங்களையும் பிடித்துக்கொண்டு வருந்திக்கேட்டார்.

ஸ்ரீநிவாசன்:—நீங்கள் அதற்காக கவலைப்படவேண்டாம். நான் என்னால் இயன்றவரை உண்மையைக் கண்டுபிடிக்க முயலுகிறேன். சரி, அதிருக்கட்டும். நீங்கள் அச்

சாஹீப் வேலையைக்கவனித்து வருவதோடு ஒழிந்த நேரங்களில் சில தமிழ் புத்தகங்களை எழுதி வருவதாகவும் கேள்விப்பட்டேன். நீங்கள் இதற்குமுன் எழுதிய இரண்டொரு நாவல்களையும் பார்த்தேன. அவைகள் மிக்க உன்னதமாகவும் மானிடரின் ஜீவவாழ்க்கைக்கு அத்திபாவஸ்யமான சில நீதிகளைப் புகட்டக்கூடியதாயுமிருத்தல் ரொம்பவும் புகழத்தக்கதே. தாங்கள் இத்தகைய சத்விஷயங்களில் பிரவர்த்தித்திருப்பதுபற்றி நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். இதனால் தங்களுக்குப்பெரும் புண்ணியமும் புகழும் கிடைப்பதில் ஆட்சேபணையில்லை யென்றான்.

கதிர்வேலு கவுண்டர்:—ஆ! அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர்கள்?. தமிழில் பண்டிதர்—பாவலர் பட்டங்கள் பெற்றவர்களும் அவ்விதமே ஆங்கிலத்திலும் பிரபல பட்டங்கள் வகித்தவர்களும் ஒரு நூலை எவ்வளவு தாறுமாறாய் எழுதியபோதிலும் அதை ஏனென்று கேட்பாரில்லை. அவர்களுடைய பட்டப்பெயர்கள் அவர்களது ஊழல்களை மறைத்து நிற்கின்றன. அவ்வித பட்டம்பெறாத ஒருவர் எவ்வளவு ஒழுங்காய் எழுதியிருப்பினும் உண்மையிலேயே பிழையில்லாதவைகளையும்கூட பிழையுள்ளவைகளென்று தோஷாரோபணம் கற்பிக்கிறார்கள். மேலும ஒருவர் ஒரு காரியத்தைச்செய்து அதனால் லாபமோ கீர்த்தியோ அடைவதைக்கண்டு சந்தோஷித்து, அவர்களுக்கு மேலும் ஊக்கத்தை அளிக்காமல் பெரும் பொறாமை கொண்டு அவருடைய காரியங்களில் குற்றமற்றவைகளையும் குற்றமெனக்கூறி, மீண்டும் அவர் அத்தகைய காரியங்களில்

தலையிடாதிருக்கத் தங்களால் எவ்வளவு தாக்கமுடியுமோ அவ்வளவும் தாக்கி வாய்ப்பறைபடித்துப் போராடி, அவரைக் காலைப்பிடித்திழுத்துக்கீழே தள்ளப்பார்க்கிறார்கள். இது இந்துக்களில் பெரும்பான்மையோரது உடன் பிறப்பாய்ப் பிறந்த ஓர் இழிகுணம். இக்குணம் இருக்கும்வரை இவர்கள் ஒருபோதும் முன்னேறப்போவதில்லை. இத்தகைய துர்க்குணம் மேனாட்டார்களிடத்தில் பெரும்பாலும் காண்பதரிது. ஒருவன் ஒரு காரியத்தில் பிரவேசித்து முதலில் சற்றேறுமாறாகச் செய்திருப்பினும் மீண்டும் அதே விஷயத்தில் பிரவர்த்தித்துப் பிரபலமடையும்படி பலரும் தூண்டி உற்சாக மூட்டுவார்களேயன்றி, இவர்களைப்போல் காலைப்பிடித்திழுததுக் கீழே தள்ள எத்தனப்படமாட்டார்கள். அவர்களிடமுள்ள இத்தகைய பல நற்குணங்களை நம்மவர்கள் பின்பற்றாமல் அவர்களைப்போல் உடைதரித்துக்கொள்ளுதல், தலைமயிரைக் கத்தரித்துக்கொள்ளுதல், ஓயாமல் காபி அருந்துதல், முதலிய பல ஆவசியகமில்லாத விஷங்களைக் கற்றுக்கொண்டு அல்லற படுகிறார்கள்.

ஸ்ரீனிவாசன் :—ஆம் தாங்கள் கூறுவது முற்றும் உண்மையே. ஆயினும் நம இந்துக்களில் மேதாவிகளான சிலர், ஜனங்கள் பொறாமை முதலிய சகல துர்க்குணங்களையும் அறவே ஒழித்து, சமத்வ குணமாகிய சற்குணத்தைக் கடைப்பிடித்தொழுகல் சாலவும் சிறந்ததென்று ஆங்காங்கு போதித்து வருவதால், முன்னைவிடத் தற்போது இத்தீக் குணஙகள் குறைந்து வருகின்றன.

கதிர்வேலு கவுண்டர் :—ஆம். ஆம். அதனால் தான்

வாய்ப்போராட்டத்தோடு நிற்கின்றனர். இன்றேல், கைச் சண்டைக்குக்கூட கங்கணம்கட்டி வருவார்கள். மேலும், சில போலித்தமிழ் பண்டிதர்கள் வசன ரூபமான நூல்களை வாசித்தலும் எழுதுதலும் கௌரவக் குறைவென்றெண் ணித் தாங்கள் விரகமிருப்பதுமன்றி பிறருக்கும் அவ்வாறே போதிக்கின்றனர். இவர்களின் கூற்று எவ்வளவு வரையி லும் சரியென்று யோசிக்கவேண்டியிருக்கிறது. தமிழ்க் கடலுக்கே ஓர் தாயகம்போல் விளங்குவது செய்யுட்களா லாகிய சிறந்த நூல்களே என்பதை எவரும் மறுக்க முடி யாது. ஆயினும், இத்தகைய செய்யுட்களாலமைக்கப் பெற்ற நூல்களை, நன்கு கல்விப்பயிற்சி அடைந்தோரே யன்றி சொற்ப கல்வியுள்ளார் அதனைத் தீண்டுதற்கும் அரு கரல்லவென்பதை யோசித்தே, நம் முன்னோர்களான சிறந்த தமிழ் பண்டிதர்கள், சொற்ப கல்வியறிவுள்ளார் தங்கள் வாசிப்பை விர்த்திசெய்து கொள்ளவும், செய்யுள் ரூபமான சிறந்த நூல்களிலுள்ள உட்கருத்தை இன்னதென்றறிந்து கொள்ளவும் வசனரூபமாக அநேக நாவல்களையும்—கதை களையும்—எழுதியதுமன்றி செய்யுள் ரூபமான ஒவ்வொரு நூலுக்கும் சரியான வசன நூல்களையும் எழுதியிருக்கிறார் கள். எழுதிக்கொண்டுமிருக்கிறார்கள். இனி எழுதவும் போகிறார்கள். இவ்வித நிலைமையில் உலகமிருக்க, சில பண்டிதர்கள் வசனநடைப் புத்தகங்களை எழுதுவதும வாசி ப்பதும் கூடாதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பது, ஒருபுறம் ஆச்சர்யத்தையும் ஒருபுறம் துக்கத்தையும் உண் டாக்குகிறது. இதுதான் இவர்கள் பண்டிதர்—பாவலர்— பட்டங்கள் பெற்றதின் பயன் போலும்! இவர்களைப்போ

லவே மற்றுமுள்ள சிறந்த பண்டிதர்களும் வசன நூல்களை வாசித்தலும் எழுதுதலும் கேவலமென்றும்—இழிவென்றும் எண்ணியிருப்பாராயின், தற்போதுலவிவரும் அழகிய வசனநடை நூல்கள் பலயாங்கனம் வெளிவருதல் கூடும்? ஆகவே அவர்கள் வசன நூல்களை அலட்சியிப்பது அவர்களின் குறுகிய அறிவைக் காட்டுகிறதேயன்றி தமிழ் வித்பத்தியின் விளக்கத்தைக் காட்டவில்லை. இவர்கள் தங்கள் சிறுவயதில் வசனப்பாலையே அருந்தி வளர்ந்து தற்போது அதையே தூஷிப்பது உண்டவீட்டிற்கு இரண்டகம் செய்த தற்கொப்பாகுமென்பதையும் அவர்கள் அறியவில்லை. இது விஷயங்களை அவர்கள் யோசித்துப்பாராமலே முற்கூறிய அபசாரத்திற்கு ஆளாகின்றனர்.

ஸ்ரீநிவாசன்:—ஆம். இவ்வித அபிப்பிராயங்களைக் கொண்ட இரண்டொரு தமிழ்பண்டிதரையும் நான் சந்தித்திருப்பதுமன்றி இங்கிலீஷ் பாஷையே சாலச்சிறந்ததென்றும், தமிழ் என்பது உமிழ் என வெளியே தள்ளப்படத்தக்கதேயன்றி உட்கொள்ளத்தக்கதல்லவென்றும், கூறும் சில இங்கிலீஷ் பயின்ற இந்தியரையும்கூட நான் கண்டிருக்கிறேன். ஆயினும், அவர்களின் பிதற்றுதலைக் குறித்து நமக்கவசியமில்லை. "எதையும் ஈஸ்வரர் பார்க்கிறார்" என்று இவ்வித உலோகோபகாரமான காரியங்களைச் செய்தல் வேண்டும். அதனால் ஏற்படும் இகழ்ச்சியோ புகழ்ச்சியோ யாவும் சர்வலோக ரக்ஷகனாகிய ஜகதீசனைச் சேர்ந்ததேயன்றி நமக்கொன்றுமில்லை. என்ற எண்ணத்துடன் பிறவிப்பயனாகிய பொதுநலத்தைக் கருதி உழைப்பது மிகவும் அவசியம் என்றான்,

கதிர்வேலு கவுண்டர் :—ஆம். தங்களின் உயரிய அபிப்பிராயத்தைப் போலவே நானும் எண்ணியிருப்பதுமன்றி அவ்வாறே நடந்தும் வருகிறேன்; என்றார்.

ஸ்ரீனிவாசன் :—தங்களின் உன்னதமான குணங்களையும் தூய்மையான நடக்கைகளையும் மிஞ்சிய தெய்வ பக்தியையும் நான் முன்னமே வெகுவாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்களுக்கு எத்தகைய கஷ்டம் வரினும், அவைகள் கடவுள் கிருபையால் நீக்கப்பட்டு சுகமூறுவீர்கள் என்பது திண்ணம். நான் வந்து நெடுநேரமாகிறது. பல அவசர வேலைகளிருப்பதால் உடனே செல்லவேண்டும். ஆயினும் நான் தங்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்கிறேன். நான் நினைக்கிறபடி இக்கேஸ் நடப்பதாயிருந்தால் இக்கொலையோடுமட்டும் போகாது. இன்னும் சில குழப்பங்களும் நேர்ந்தே தீரும். ஆதலால் தாங்கள் எவ்விஷயத்திலும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அதிலும், சுவர்ணம்பாள் வெளிச்செல்வதிலும் மாலை நேரங்களில் பூங்காவில் உலாவும் விஷயத்திலும்கூட அதிக எச்சரிக்கை வேண்டும். தற்போது தாங்கள் சிறைப்படுத்தப்படாமலிருப்பது பெரும்பாலும் கடவுள் தயவால்தான். தாங்கள் இறந்துபோன வெங்கிடுபதி கவுண்டருக்கு (8000) ரூபாய் வரை கடன் கொடுக்க வேண்டும். தவிர, பலவருஷங்களாகியும் நாளதுவரை அதற்கு வட்டி செலுத்தப்படவில்லை. ஆகையால், தங்கள் கையில் பொருளில்லையென்பது திட்டமாய் தெரிகிறது. தங்கள் குமார்த்தியை அவர் குமாரனுக்குக் கொடுக்காவிடில் நீங்கள் கொடுக்கவேண்டிய தொகைக்குத் தங்கள் பேரில் வார

ண்டு எடுப்பதாக பயமுறுத்தியிருக்கிறார். தங்கள் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொடுக்கத் தங்களுக்கு இஷ்டமில்லை. கடனைக் கட்டவும் முடியவில்லை. அவர் கொல்லப்பட்ட சமயம் அங்கு சென்றிருக்கிறீர். அதற்கிணங்க நீங்கள் எழுதிக்கொடுத்த (8000) ரூபாய் பிராம்சரி காணாமல் போய்விட்டிருக்கிறது. தவிர, தங்கள் ஆடையில் இரத்தக் கறை பட்டிருக்கிறது. இச்சம்பவங்களை ஒழுங்காக அடுக்கிப்பார்த்தால் கொலை புரிந்தவர் தாங்களேயென்று வெகு சுலபமாய்க் கூறிவிடலாம். அல்லது கொலை நடந்தது தங்கள் தூண்டுதலினாலேயே என்றும் கூறலாம். போலீஸாருக்கு சுந்தரராஜுலு கவுண்டனும் தாந்தோணி ஐயங்காரும் வெட்டியான்களிருவரும் தகுந்த லக்ஷ்யமாகக் கிடைத்திருப்பதால் தங்களை மீதி விட்டிருக்கிறார்கள். இன்றேல், தங்களை முன்னமே சிறைப்படுத்தியிருப்பார்கள்.

கதிர்வேலு கவுண்டர் :—ஆம். தாங்கள் கூறுவது நிரம்பவும் சரி. என்னைக் குற்றவாளியென்றெண்ணத் தக்க ஆதாரங்கள் மிக்க அற்புதமாகப் பொருந்தியிருக்கின்றன. வெறும் வாயை மெல்லுகிற போலீஸாருக்கு இவ்வளவு ஆதாரங்கள் கிடைத்தால் கேட்கவேண்டுமா? எதற்கும் நான் தங்களையே நம்பியிருக்கிறேன். தாங்கள் தான் கரையேற்றவேண்டும்.

ஸ்ரீனிவாசன் :— என்னாலியன்றவரை பாடு படுகிறேன். தாங்கள் சஞ்சலப்படவேண்டாம்; என்று கூறிவிட்டுத் தான் விடைபெற்று வெளியே சென்றான்.

## 17-வது அத்தியாயம்.

# இந்திரஜாலக் கள்வர்கள்.

விஜய நகரத்தின் வடபாகத்திலுள்ள இடுக்கமான தெருவொன்றில் இருபுறமும் வீடுகள் நெருக்கமாயிருந்தன. அங்குள்ள ஒரு சிறிய வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது. அவ்வீட்டினுள் ஒரு கூடமும் இரண்டு சிறிய அறைகள் மட்டுமே இருந்தன. கூடத்தில் ஒரு மேஜையும் இரண்டு நாற்காலிகளும் ஒரு மெத்தை தைத்த சோபாவும் இருந்தன. சோபாவின் ஒரு புறம் ஒரு இளம் வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவன் உருவம் உடை முதலியவைகளை நோக்க மலையாளியைப்போல் தோன்றுகிறது. அவனுக்கு அருகில் சுந்தர மடமயிலாளாகிய ஒரு இளமடந்தை மிக்க ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கிறாள். அவளது கண்கள் அகன்று மை தோய்ந்து மருண்ட தோற்றத்தை காண்பித்தன. உதடுகள் சிவந்து பிரகாசித்தன. அழகிய வதனத்தில் புன்னகை தவழ்ந்தது. வாலிபன் அம்மடந்தையைத் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்து அவளின் தங்கத்தகடுபோல் பிரகாசிக்கும் அழகிய கன்னத்தில் முத்தமிட்டு கண்ணே! சாசரஞ்சனி! நின் உருவம் எத்தனை சோபிதமுடைத்தாய் ஒளிர்கின்றது. நின் உருவினை தற்சமயம் யாவர் நோக்கினும் ஏன் உனது பெற்றோர்களே காணினும்கூட உன்னை இன்

ணூர் என்று ஒரு சிறிதும் அறிந்து கொள்ளல் ஏலாது. என்று கூறிவிட்டு மீண்டும் அவளின் செவ்விய அதரத்தில் முத்தமிட்டு பிரியே! என்று ஆரம்பித்து ஏதோ கூறப் போகும்போது தெருக்கதவைத் திறந்துகொண்டு அவனது வேலைக்காரன் உள்ளே வந்து அன்று பிரசுரமான சமாசார பத்திரிகையொன்றை அவ்வாலிபன் கரத்திலளித்தான். வாலிபன் அப்பத்திரிகையை மிக்க ஆவலோடு பெற்று அதை விரித்துத் தன் துடைமீது வைத்துக்கொண்டு முக்கியமான தலையங்கங்களை மேற் பார்வையாக கவனித்து வந்தான்.

ஓரிடத்தில் "போதுஜனங்களின் ஆரவாரமும் போலீசாரின் நித்திரையும்"

என்ற தடித்த எழுத்திலுள்ள மகுடத்தைக் கண்டு அவற்றின் கீழுள்ள விஷயத்தை வாசித்துப் பார்க்க அடியிற் கண்டவாறு வரையப்பட்டிருந்தது.

வேங்கிடுபதி கவுண்டர் கொலை செய்யப்பட்டு சுமார் இரண்டு வாரங்களாகியும் இதுவரை போலீஸார் என்ன கண்டு பிடித்தார்கள்? ஒன்றுமில்லை. ஒரு பிரபுவினிட கொலை அவரது உயிர்—இவ்வாறு அலட்சியிக்கப்பட்டுப் போகுமானால் இனி ஒரு ஏழையினுடைய உயிரை எவ்வாறு மதிக்கப்போகிறார்கள்? நண்டு நத்தை முதலிய அற்ப ஜெந்துக்களின் ஜீவன்களைக் காட்டிலும் மிக்க தாழ்மையாகவே கவனிக்கப்படுமென்பதை நாம் கூறவும் வேண்டுமோ? பொது ஜனங்களால் கொடுக்கப்படும் அரசிறை வருமானத்

தின் பெரும் பகுதியையும் தங்கள் மூக்கின் கீழ் இழுக்து ஏப்பம் விடக் கற்றுக்கொண்டிருக்கிறார்களேயன்றி பொது ஜனங்களுக்கு எத்தகைய தீங்குகளும் அணுகா வண்ணம் அவர்களுடைய சகல உரிமைகளேயும் ஞாயப்படி பாதுகாக்கத்தக்கவே பொது ஜனங்களுடைய பாடிகார்டாக—தேக சம்ரக்ஷணர்களாக—நியமிக்கப்பட்டிருக்கிற தென்பதைப் போலீஸார் உணருவதில்லை. இப்போது சம்சயத்தின்பேரில் குற்றவாளிகளின் ஸ்தானத்திலிருக்கும் சுந்தரராஜ கவுண்டர், தாங்தோணி ஐயங்கார், மற்றும் இரு வெட்டியான்கள் ஆகிய நால்வரில் கொலே செய்தவர் இன்னார் என்பதை இனியாவது கூடிய சீக்கிரம் திட்டமாய்க் கண்டுபிடித்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை விதிப்பார்கள் என்று நம்புகிறோம்.

என்று எழுதப்பட்டிருந்ததை வாசித்து முடிந்ததும் அவற்றின் கீழ் "போது ஜனங்களுக்கு ஓர் சமாதானம்" என்ற மகுடம் அவ்வாலிபனது கண்களுக்குத் தென்பட்டது. உடனே அதையும் வாசிக்க ஆரம்பித்தான். அதில் அடியிற் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.

துப்பறிவதில் அதிக கியாதிபெற்றவரும் சூரத்கொலே, மதராஸ் பாங்கு, அமிர்தசரஸ்கொள்ளை, நாகை நாகேசாம் முதலிய அநேக அபூர்வமான கேசுகளில் பூர்ணஜெயம் பெற்றவரும் கவர்மெண்டாரால் பலமுறை புகழப்பட்டு சன்மானமளிக்கப் பெற்றவருமாகிய சிங்களபுரம் ஸ்ரீனிவாசன் என்பவர் இக்கேசில் துப்பு துலக்குவதற்காக நுழைந்திருப்பதால் கூடிய சீக்கிரம் உண்மைக்குற்றவாளி கண்டு

பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுப் போவதுமன்றி, நமது நகரத்தில் நெடுநாளாக வசித்துவரும் பெரும் கொள்ளைக் காரர்கள் பலரும் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுப் போவார்களென்பதை யாவரும் நிச்சயமாய் நம்பலாம்.

இப்படிக்கு,
உண்மை விளம்பி.

என்ற விசாசத்தை வாசித்ததும் வாலிபன் முகம் சவம் போல் வெளுத்தது. நெஞ்சில் ஆத்திரமும் படபடப்பும் அதிகரித்தன. மீண்டும் இரண்டொரு நிமிஷத்தில் அத் தோற்றம் மாறியது. கண்கள் சிவந்தன. வதனத்தில் கோப த்தணல் வீசியது. அதிக கோபத்தோடு அடே ஸ்ரீனி வாசா எங்களுடனு விளையாட வருகிறாய்? நீ கற்ற வித்தை யின சமர்த்தை எங்களிடமா காட்ட வருகிறாய்? கொலை யாளியைக் கண்டுபிடிப்பதோடு கொள்ளைக்காரர்களையும் கூடவா கண்டுபிடிக்கப் போகிறாய்? நன்று நன்று. ஏதோ சில கையால் ஆகாதபேரைக் கழுத்தைப்பிடித்தமுக்கி விட் டோமென்று கர்வம் பாராட்டுகிறாய். உன் ஜெபம் எங்களி டம் சாயாது. என்று கூறிவிட்டுத் தன் அருகிலிருக்கும் இளமடந்தையை நோக்கி ரமணீ! இந்தப்பயல் ஸ்ரீனிவா சன் இருக்கிறானே மிகவும் பொல்லாத துஷ்டப்பயல். நம் மைப்போல அநேகம் பேர்களை பாதளத்தில் அழுத்திவிட் டிருக்கிறான். ஆயினும் நம்மை ஏதும் செய்ய அவனால் இயலாது. இருப்பினும், அவன் இயற்கையிலேயே சிறிது மூளை வன்மையுடையவனாதலின் அவனிடம் மிகுந்த எச்ச ரிக்கையோடு போராடவேண்டும். இன்றேல், நம்மை எப்ப டியும் ஒழித்து விடுவான். ஆதலின், இனி நாம் வெளிச்

செல்லும் விஷயத்தில்கூட மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேணும். நான் இவற்றையெல்லாம் முன்னுடியே யோசித்துத் தான் மாறுவேடமணிந்து போலீஸாரின் உளவுகளையும்—அபிப்பிராயங்களையும்—இரகசியமாய் அவர்களுக்குத் தெரியாமல் கவனித்து வருகிறேன். உள்ளூர் போலீஸார் உபயோகமற்றவர்கள். அவர்களால் நமக்கொரு தீங்கும் நேரிடாது; என்றான்.

சரசரஞ்சனி:— ஓ! ஆம். உண்மையாகவே நான் மறந்து விட்டேன். இந்த இரண்டு நாட்களாக நாடோடிபோல் உடையணிந்த ஒரு மனிதன் அடிக்கடி இவ்வீதியில் உலாவுவதும், வீதியின் இருபுறங்களிலுமுள்ள வீடுகளைக் கூர்ந்து பார்ப்பதுமாக இருக்கிறான். அவன் நேற்று சாயந்திரம் நமது வீட்டருகில் வந்ததும் நமது வீட்டின் அமைப்பை நன்றாய் உற்று நோக்கினதுமன்றி, தனக்குள் ஏதோ சமாதானம் செய்துகொண்டவன் போலத்தனது சிரசைச் சற்று அசைத்துக்கொண்டு நம் வீட்டின் கதவருகில் வந்து கதவைத் தட்டினான். நான் கதவைத்திறவாமல் உள்ளே இருந்தபடியே யார் என்றேன். அதற்கு அவன், சங்கரமேனன் என்பவர் உள்ளே இருக்கிறாரா? நான் அவருடைய சிநேகன். கொஞ்சம் கதவைத்திறக்கவேண்டுமென்றான். அதற்கு நான் அப்பெயரையுடைய மனிதர் இவ்வீட்டிலேயே எவரும் இல்லை. என்று ஒரே முடிவாய்ப்பொய் கூறினேன். அவன் மறுபடி ஒன்றும் கேளாமலே போய்விட்டான்; என்றாள். அவள் வார்த்தையைக்கேட்ட சங்கரமேனன் என்ற வாலிபன் மிக்க சந்தோஷத்தோடு சரசரஞ்சனியைத்தன்

இருகரங்களாலும் அழுந்தத்தழுவிமுகத்தில் பலமுத்தமீந்து பிரியே! நின் புத்திசாதுர்யத்தின் ஒப்பற்ற வன்மையே வன்மை. அந்தத்திருட்டுப்பயல் கேட்ட வினாவிற்குத் தகுந் தவாறு சாதுர்யமாக பதில் உரைத்ததைக்குறித்து நான் மெச்சுகிறேன். ரமணீ! இதனிலும் மிக்க சாதுர்யமான காரியங்களை நீ செய்யும் காலமும் வரும். காதலி! உண்மை யாகவே அத்தகைய துஷ்டப்பயலைக்கண்டாயா? அவனை நீ கண்டது உண்மையானால் அவனும் உன்னைப்பார்த்திருப்பா னன்றோ; மேலும் அவனே ஸ்ரீனிவாசனென்பதில் சிறி தும் சந்தேகமில்லை என்றான் சங்கரமேனன்.

சரசரஞ்சனி :— இல்லை. இல்லை. அவன் என்னைக்கா ணவில்லை. நான் உள்ளே இருந்தபடியே அவன் என்னைக் காணாதவாறு சாதுர்யமாக மறைந்துகொண்டே பலகணி வழியாக அவன் செய்கைகளைக்கவனித்தேன்.

சங்கரமேனன் :— பேஷ்! அதுதான் புத்திசாலித்த னம். அந்தப்போக்கிரிப்பயல் நம் இருப்பிடத்தையறிந்து கொண்டதுமன்றி நமது காலை மிதிக்கவும் ஆரம்பித்து விட் டான். இனி நாம் இவ்விடம் விட்டு வேறிடம் போவது மன்றி ஒரு விநாடியும் தாமதியாமல் அவனை ஒழிக்கத் தகு ந்த வழியையும் தேடவேண்டும்; என்று கூறிக்கொண்டே மேஜைமீது சாய்ந்த வண்ணம் நெடுநேரம் யோசித்துப் பிறகு அங்கிருந்த ஒரு கடிதத்தை எடுத்து அதில் சில வரி களை வரைந்து அக்கடிதத்தை ஒரு காகித உறையில் போட்டு அதன் வாயினை ஒட்டி மேல்விலாசம் எழுதி அக்கடிதத் தைத் தனது ஆளிடம் கொடுத்துத் தபாற் பெட்டியில் போடும்படி கூறினான்.

## 18-வது அத்தியாயம்.

# நர சோரம்.

அமாவாசை தினம் அர்த்தராத்திரி ஆகாயம் மேகப்படலங்களால் மூடப்பெற்றுக் காரிருள் நிறைந்திருந்தது. காற்று பிசு பிசுவென வீசிக்கொண்டிருந்தது. கொசு கொசுவென மழைத்துளிகள் விழுந்த வண்ணமிருந்தன. குளிர் சகிக்க முடியவில்லை. இத்தகைய சம்பவங்கள் நிறைந்த அன்றிரவு விஜயநகரத்தின் முக்கியமான தெருவொன்றில் மூன்று மனிதர்கள் ஒருவர்பின் ஒருவராய்ச் சென்றார்கள். மூவரும் இடையில் சல்லடம் கட்டிக்கொண்டும் தங்களைப் பிறர் அறிந்து கொள்ளாவண்ணம் முகத்தை முக மூடியால் மறைத்துக்கொண்டும் இருந்தார்கள். ஒருவன் தனது தோளில் ஒரு நீண்ட ஏணியைத் தாங்கிக்கொண்டும், இன்னொருவன் துறப்பணம் கத்திரி முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டும், மற்றவன் ஒரு மருந்துப்புட்டியைக் கையில் பிடித்துக்கொண்டும், போனார்கள். மழையினாலும் குளிரினாலும் ஜனங்கள் எவரும் வெளிக் கிளம்பவேயில்லை. தெருத்திண்ணைகளிலும் கூட ஒருவரும் சயனித்திருக்கவில்லை. ஆகையால் அவர்கள் சிறிதும் அச்சமின்றிப் போய்க்கொண்டிருந்தார்கள். ஆயினும் அங்கு பகல்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் கியாஸ்

லேட்டுகள் அவர்களின் காரியங்களுக்குப் பெரிதும் இடையூறு செய்வதாக தோன்றின. அவர்களில் பின்னால் செல்லுகிறவன் முன்னம் செல்லுகிறவனை விளித்து அடே இந்த விளக்குகள் நமக்குப்பெரும் சனியனுயிருக்கின்றன. இதைத் தொலைப்பதெப்படி? என்றான். இடையில் செல்பவன் அடே அதைக் குறித்து அக்கரையில்லை. இதோ ஒரு நிமிஷத்தில் அதன் வேலையை முடித்துவிடுகிறேன்; என்று கூறிக்கொண்டே விளக்கெரியும் கம்பத்தருகில் சென்று தன் கையிலிருக்கும் கத்திரிக் கோலால் எண்ணை செல்லும் கம்பியைக் கத்தரித்து விட்டான். சில நிமிஷத்தில் விளக்கு அணைந்துவிட்டது. இவ்வாறே அவர்கள் செல்லும் வழி நெடுக விளக்குகளை அணைத்துக்கொண்டே சென்று கதிர்வேலு கவுண்டர் அச்சாபீஸண்டை நெருங்கினார்கள். விளக்குகள் முற்றும் அணைக்கப்பட்டுப் போனபடியால் கங்குல் கற்றை கற்றையாய்த் திரண்டிருந்தது. அவர்களில் ஒருவன் மற்றவனைப் பார்த்து அடே இருட்டு ரொம்பவும் அதிகமாயிருக்கிறது. வழி தெரிஞ்சு எப்பிடியடா உள்ளே போரது; என்று மெதுவாய்க் கூறினான். அவர்களில் தலைவனான இன்னொருவன் அடே மடசாம்பிராணிகளே சத்தம் செய்யாதேயுங்கள். என்று கூறிக்கொண்டே தன் இடையில் இருந்த ஒரு கருவியை எடுத்து அதிலுள்ள ஒரு பட்டனை—பொத்தானை அழுத்தினான். உடனே பளீரெனப் பிரகாசமான வெளிச்சம் தோன்றியது. உடனே பட்டனை விட இருட்டிவிட்டது. முன் கண்ட வெளிச்சத்தால் மனதில் வழி தெரிந்துகொண்டு மதிலருகில் சென்றார்கள். ஒருவன் கையில் இருந்த ஏணியைச் சுவற்றின் மீது சாய்த்து

வைத்தான். ஒவ்வொருவராக ஏணிமேல்ஏறி மூவரும் சுவற்றின்மேல் உட்கார்ந்தார்கள். பிறகு அவ்வேணியை மறுபக்கமெடுத்து வைத்து மூவரும் கீழேயிரங்கி கதிர்வேலு கவுண்டரின் வீட்டின் பின்புறக் கதவண்டை சென்றார்கள். கதவு மூடி தாளிடப்பட்டிருந்தது. திருடர்களின் தலைவன் மற்றவன் கையில் இருந்த துறப்பணத்தை வாங்கி கதவு தாளிடப்பட்டிருக்குமிடத்தில் கதவில் மெதுவாக ஒரு துளை செய்தான். பிறகு பக்குவமாகத் தன்விரலால் உள்ளே இருந்த தாளைத் தள்ளிக் கதவைத்திறந்து விட்டான். மூவரும் ஒருவர் பின் ஒருவராக உள்ளே சென்றார்கள். முதலில் சமையல் அறை இருந்தது. அதைத்தாண்டிச்செல்ல மற்றோர் அறை இருந்தது. அதன் கதவு பெரும்பாலும் மூடப்பட்டுச்சிறிது மட்டும் இடைவெளி இருந்தது. அதன் வழியாக உள்ளே எரிந்த தீபத்தினொளி சிறிது மங்கலாக வெளியே பிரகாசித்தது. மூவரும் கதவருகில் சென்றதும் தலைவன் மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே தலையை நீட்டிப்பார்த்தான். அங்கு கதிர்வேலு கவுண்டர் ஒரு கட்டிலின்மேல் சயனித்துக்கொண்டிருந்தார். உடனே அவன் கதவை மெதுவாய் மூடி அவர் வெளியே வாராதபடி சங்கிலி போட்டுவிட்டான். பிறகு அவர்கள் அவ்வறையைவிட்டு அதன் எதிர்ப்புரமிருந்த மற்றோர் அறையின் கதவண்டை சென்றார்கள். அவ்வறைக்கதவும் சிறிது இடைவெளி விட்டுச் சாத்தப்பட்டிருந்தது. ஒருவன் மெதுவாகக் கதவைத் திறந்தான். உள்ளே ஒரு கட்டிலின்மேல் அழகிய தந்தப் பதுமைபோலச் சுவர்ணம்பாள் சயனித்திருந்தாள். அவளின் ஒப்பற்ற அழகைக்கண்ட அம்மூவரும் திகைத்துச்

சிறிதசைவற்றிருந்தனர். பிறகு தலைவன் தன் மடியிலிரு ந்த ஒரு சிறு மருந்துப்புட்டியையும் ஒரு துணியையும் எடுத்து அம்மருந்தில் சிறிதளவு துணியில் ஊற்றி நனைத்து அத்துணியை விரித்து நித்திரை செய்து கொண்டிருந்த சுவர்ணும்பாளின் முகத்தின்மீது மூடினான். பின்பு சிறிது நேரம் சென்று அவன் மற்றிருவரையும் நோக்கி அடே இவள் தன் சுய அறிவை முற்றிலும் இழந்துவிட்டாள். ஆகையால், இனி நாம் தாராளமாய் எடுத்துச் செல்லலாம்; என்றான். உடனே மூவரும் சேர்ந்து மெதுவாக சுவர்ணும் பாளைத் தூக்கிக்கொண்டு சந்தடி செய்யாமல் வந்தவழியே சென்று சுவற்றண்டை சேர்ந்தார்கள். ஆயினும் மூவரும் அவளை எடுத்துக்கொண்டு ஒரு ஏணியில் ஏறிப்போவது சாத்யமில்லையாகையால் ஒருவன் சென்று அங்கு சமையல றையிலிருந்த வீட்டுக்காரரின் ஏணியை எடுத்து வந்து முன் னிருந்த ஏணிக்குச் சமீபமாகச் சுவற்றில் சாய்த்து வைத் தான். உடனே ஒருவன் சுவர்ணும்பாளின் தலைப்பக்கமாக வும் மற்றொருவன் கால்பக்கமாகவும் தாங்கிக்கொண்டு ஏக காலத்தில் இருவரும் இரண்டு ஏணிகளில் ஏறிச் சுவற்றின் மேல் சேர்ந்தார்கள். மற்றவனும் மேலே ஏறி இரண்டு ஏணிகளையும் மறுபக்கம் எடுத்து வைத்தான். மீண்டும் அவர்கள் இருவரும் சுவர்ணும்பாளைத் தாங்கிய வண்ணம் ஏணிகளில் இறங்கிப் பாட்டையை அணுகினார்கள். மற்ற வனும் கீழே இறங்கினான். பிறகு மூவரும் சேர்ந்து சுவர் ணும்பாளை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்.

## 19-வது அத்தியாயம்.

# அகப்பட்டுக்கொண்டான் தும்முட்டிக்காய் வீரன்.

காலை எட்டு மணிக்கு ஸ்ரீனிவாசன் தான் குடிக்கூலிக்குப் பெற்று வசித்து வரும் வீட்டிலுள்ள ஒரு அறையில் உட்கார்ந்திருந்தான். அவன் அதிகாலை கதிர்வேலு கவுண்டரது வீட்டிற்குப் போய் சுவர்ணம்பாள் காணமல் போன விஷயத்தைக் குறித்து அங்கு தன்னுடைய ஆராய்ச்சிகளையெல்லாம் முடித்துக்கொண்டு இப்பொழுதுதான் திரும்பி வந்தான். அவனுக்கு முன்னால் இருந்த மேஜைமேல் அன்றைய தபாலில் வந்த கடிதங்கள் ஒரு குவியலாய்க் கிடந்தன. அவன் ஒவ்வொரு கடிதமாக எடுத்து வாசித்துக்கொண்டிருந்தான். அதில் ஒரு கடிதம் அடியிற் கண்டவாறு வரையப்பட்டிருந்தது.

கோட்டை வீதி, **685** நே. வீடு.

மிக்க அவசரம்.

மகா-ா-ா-ஸ்ரீ ஐயா அவர்களுக்கு வந்தனம். தற்சமயம் என்னைச் சுற்றிலும் ஒரு பெரிய ஆபத்து சூழ்ந்திருக்கிறது. எந்த நிமிஷத்தில் அவ்வாபத்து பேரிடி போல் என் தலைமேல் விழுந்து விடுமோ வென்று நான் மிகவும்

பயந்துகொண்டிருக்கிறேன். நான் வெளிச்சென்று திரும்பி வரும் ஒவ்வொரு நிமிஷமும் எனக்குப் பேராபத்தென்று தோன்றுகிறதாகையால் நான் வெளிச்செல்வதேயில்லை. எனது எதிரிகள் என்மேல் மோசூல் இருந்த வண்ணம் சதா என் நடத்தைகளை கவனித்து வருவதுபோல் தோன்றுகிறது. அதற்காகவே நான் எனது சர்வ சுகங்களையும் இல்லத்தையும் துறந்து, ஒரு சாதாரண மனிதனைப்போல் ஒரு கேவலமான வீட்டில் தலைமறைவாய் வசித்து வருகிறேன். இச்சமயம் எனக்கு யோசனை கூறுவார் ஒருவரும் இல்லை. தாங்கள் இந்நகரத்திற்கு வந்திருக்கும் சங்கதி, நான் இப்போதே அறிந்திருந்தேனாகையாலும், இச்சமயம் தாங்கள் எனக்கு யோசனை சொல்லக்கூடும் என்ற உறுதியினாலும், தாங்களுக்கு இக்கடிதத்தை எழுதலானேன். தாங்கள் இவ்விஷயங்களை வெளியில் பிரஸ்தாபிக்க மாட்டீர்களென்றும், உடனே புறப்பட்டு வருவீர்களென்றும் நம்புகிறேன். எனது உயிரும் என் குடும்ப கௌரவமும் உங்கள் கையிலிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் தங்கள் வரவை எதிர்பார்க்கும் பாக்கிய ஹீனன்.

இப்படிக்கு,
பூபேந்திரம் பிரபு,

இக்கடிதத்தை வாசித்து முடிந்ததும் ஸ்ரீனிவாசன் அடடா ஒரு பெரிய மனிதர் எப்படியோ ஆபத்தில் மாட்டிக்கொண்டார்போலிருக்கிறது. நாம் அவசியம் போகத்தான் வேண்டும்; என்று எண்ணியவனாய் உடனே மற்றக் கடிதங்களையும் சீக்கிரம் வாசித்து விட்டு, ஒரு துண்டுக் கடிதத்

தில் சிலவரிகளை எழுதி அதை மேஜை மேல் வைத்து விட்டு சிறிது காலை ஆகாரம் உட்கொண்டு அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விலாசத்திற்குச் சென்று அப்பிரபுவைச் சந்திக்க வெளியே சென்றான்.

ஸ்ரீனிவாசன்:—வெளியே சென்ற சிறிது நேரத்தில் அக்கடிதத்தில் கண்ட கோட்டைத்தெருவை அடைந்தான். அவ்வீதி இடுக்கமானதாயும் நெருக்கமான சிறு சிறு வீடுகளையுடையதாயுமிருந்தது. அங்கு பெரும்பாலும் ஜன நடமாட்டம் இல்லவே இல்லை. அவ்வீதியில் குடியிருப்பவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் கூலியாட்கள். அவர்கள் காலை 6 மணிக்கு வெளிச்சென்று மாலை 6 மணிக்கே திரும்பி வருவார்களாகையால் பகற்பொழுதில் அவ்வீதியில் வேலை செய்ய சக்தியற்ற வயோதிகர்களும் சிறு குழந்தைகளுமே இருப்பார்கள். வீதியில் ஒவ்வொரு வீடாய் கவனித்துக்கொண்டு வந்த ஸ்ரீனிவாசன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த 685-நெ. வீட்டருகில் வந்து நின்றான். அப்போது வீதியிலாவது அண்டை வீடுகளிலாவது எவ்விதமான ஜன சந்தடியுமின்றி நிச்சப்தமாய் இருந்தது. ஆனால் எதிர்வரிசையில் இவ்வீட்டிற்கு நேரேயிருக்கும் வீட்டிற்கு இரண்டு வீட்டிற்கு அப்பாலுள்ள ஒரு வீட்டுத்திண்ணையின் மேல் ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான். ஸ்ரீனிவாசன் தான் குறிப்பிட்டு வந்த 685-நெ. வீட்டின் கதவருகில் சென்று கதவைத்தட்டினான். பதில் இல்லை. மீண்டும் மீண்டும் பலமுறை கதவை இடிக்க பிறகு உள்ளே இருந்து "யார் அது" என்று மெதுவாக ஓர் சப்தம் கிளம்பியது.

அதற்கு ஸ்ரீனிவாசன் தாங்கள் எதிர்பார்த்துக்கொண் டிருக்கும் மனிதனே நான்; என்று பதில் பகர்ந்தான். உடனே உள்ளே இருந்த மனிதர் கதவருகில் வந்து கதவிடுக்கில் இருக்கும் சந்தில் ஒரு கண்ணை வைத்து வெளியே இருக்கும் மனிதனைக் கூர்ந்து நோக்கிய பின் மெதுவாகக் கதவைத் திறந்தார். அம்மனிதர் சுமார் 5½ அடி உயரமும் சற்று சிவப்புநிறமும் உடையவனுயிருந்தார் அவரது செவிகளில் சீமைக்கமலங்கள் இழைத்த கடுக்கன் கள் சுடர்விட்டுப்பிரகாசித்தன. இருகரங்களிலும் பொற்காப் ப்புகளும் பத்துவிரல்களிலும் உயர்ந்தகற்கள் பதிந்த மோதி ரங்களும் மின்னின. இடையில் ஒரு வெண்பட்டு வேஷ்டி யும் சில்க்கோட்டும் அணிந்திருந்தார். அவர் சிரசில் அழ கிய சரிகைத் தலைப்பாகை இருந்தது. அவரது தோற்றத் தைக் கண்ட எவரும் அவரை ஓர் பெருத்த பிரபு என்று எண்ணச் சிறிதும் தடையில்லை. ஆகையால் நாமும் அவ ரைப் பிரபுவென்றே மரியாதையாக அழைக்க வேண்டும். அப்பிரபு வெளியே நின்ற நமது ஸ்ரீனிவாசனைக் கண்டதும் சந்தோஷத்தோடு ஆ! வாருங்கள் வாருங்கள் தங்களின் வருகையை நான் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்க்கிறேன். தயவு செய்து உள்ளே வாருங்கள்; என்று அவரை உள்ளே அழைத்துக்கொண்டு மீண்டும் பிரபு முன்போலக்கதவைத் தாளிட்டுவிட்டார். பிறகு, பிரபு ஸ்ரீனிவாசனை நோக்கி ஐயா பார்த்தீர்களா எனது கஷ்டத்தை? ஒரு நிமிஷம் கூடஇக் கதவைத் திறந்து வைக்கமுடியாத இக்கட்டில் சிக்கிக்கொண் டிருக்கிறேன்; தாங்கள் தான் என் கஷ்டத்தைத் தவிர்க்க வேண்டும். இன்னும் மற்ற விஷயங்களையும் நான் சவிஸ்தா

சமயக் கூறுகிறேன். வாருங்கள்; என்று அவரை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் கூடத்திலிருந்த மேஜைக்கிரு புறமுமுள்ள இரண்டு நாற்காலிகளில் எதிரெதிராக உட்கார்ந்தார்கள். அக்கூடத்தின் இருபுறங்களிலும் இரண்டு அறைகள் இருந்தன. அவ்வறையின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. ஸ்ரீனிவாசன் நாற்காலியில் அமர்ந்ததும பிரபுவை நோக்கி சரி; நேரமாகிறது. தாங்கள் சிக்கிரம் தங்கள் விஷயங்களைக் கூறலாம்; என்ருன்.

பிரபு:— ஆ, ஆ, அப்படியே செய்கிறேன்; என்று தனது சட்டைப்பையிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து ஸ்ரீனிவாசன் கரத்தில் கொடுத்து முதலில் இதை வாசித்துப்பாருங்கள் மற்ற விஷயங்களை நான் அப்புறம் கூறுகிறேன் என்ருன்.

ஸ்ரீனிவாசன்:— அக்கடிதத்தை விரித்து அதிலுள்ள விஷயங்களை ஆழ்ந்த கவனத்துடன் வாசித்துக்கொண்டிருந்தான். அப்போது பிரபு ஏதோ கூறுகிறவரைப்போலச் சிறிது கனைத்துத் தொண்டையைத்தீட்டினர். அத்தருணம் ஸ்ரீனிவாசனுக்குப் பின் பக்கமிருந்த அறையின் கதவு மெதுவாகச் சப்தமின்றி திறந்தது. உள்ளேயிருந்து இரண்டு தடித்த மனிதர்கள் காலடி சப்தம் கேளாசமல் பெருவிரல்களால் ஸ்ரீனிவாசனுக்குப் பின்னுல் நடந்து வந்தார்கள். அருகில் வந்ததும் ஒருவன் திடீரெனப்பாய்ந்து பின்னுலிருந்தபடியே ஸ்ரீனிவாசனை நாற்காலியோடு சேர்த்து இறுகப் பிடித்துக்கொண்டான். இச்சம்பவம் ஸ்ரீனிவாசனை மிகவும

திகைப்படையச் செய்தது. ஆயினும், சமாளித்துக்கொண்டு அடே கொலைகாரப்பயல்களா! மரியாதையோடு விட்டு விடுங்கள்; இன்றேல் தெருவில் திரியும் நாயைப்போல் உங்கள் ஒவ்வொருவரையும் சுட்டுத்தள்ளிவிடுவேன்; என்று கூவி அவனைத்திமிறிக்கொண்டு தன் சட்டைப்பையிலிருந்த துப்பாக்கியையெடுக்க ஆரம்பித்தான். அதற்குள்ளாக மற்றவனும் பாய்ந்து அவன் இருகரங்களையும் பலமாய்ப்பற்றிக் கொண்டான். உடனே பிரபு தனது சட்டைப்பையிலிருந்த ஒரு துணிப்பந்தை யெடுத்து ஸ்ரீனிவாசன் வாயில் நன்றாய்த்திணித்து விட்டு அடே துப்பறியும் நாயே! நீயா கொலைகாரர்களையும் கொள்ளைக்காரர்களையும் பிடித்துக்கொடுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறவன்? நீ, எங்களைப் பிடித்துக் கொடுக்கு முன்பே நாங்கள் உன்னை எமலோகத்திற்கு ஏணி வைத்து ஏற்றிவிடுகிறோம், என்று கூறிக்கொண்டே அருகே கிடந்த கயிற்றையெடுத்து அவனது கரங்களையும் கால்களையும் நன்றாய் இறுகப்பிணித்துவிட்டான். என்ன செய்வான் ஸ்ரீனிவாசன்? அவனது பேர் எங்கே? பிரக்யாதியெங்கே? ஆழ்ந்த நுண்ணறிவெங்கே? அனேக அற்புதமான கேசுகளில் பூர்ணஜெயம் பெற்ற அபூர்வமான மூளை வன்மை எங்கே? யாவும் அடங்கி ஒடுங்கிப் பொறியிற்பட்ட கேசரிபோல்கறுவிக்கொண்டிருந்தான் இதுவரைகண்டுபிடித்தஎத்தகையகேசுகளிலும்அபஜெயமேயடைந்திராத தான் தற்சமயம் அடைந்த தோல்வியைக் குறித்து அவனது மனம் பெரிதும் வெட்கினது. வெட்க மிகுதியால் அவன் தன் கண்களைத் திறக்கவும் சக்தியற்றிருந்தான். அவன் தன் உயிரைப்பற்றியும் பெரிதாக நினைக்கவில்லை. தோல்

வியை நினைந்து நினைந்தே அவனது மனம் நைந்துருகியது. கண்களில் அவனையறியாமலே நீர் பெருகின. அவன் அடைந்த தோல்வியே அவனது தைரியம், ஆழ்ந்த அறிவு, குதூகலம், முதலிய சகலத்தையும் கொள்ளை கொண்டது. அவன் மனதில் ஆயிரம் யோசனைகள் அடுக்கடுக்காய் கிளம்பின. இத்தகைய துன்பத்துடன் யாதும் செய்ய இயலாதவனாகி மனோவேதனைப் பட்டுக்கொண்டிருந்தான். அப்போது பிரபுவைப்போல் வேடமணிந்துகொண்டிருந்த மனிதன் அவர்களில் ஒருவனை நோக்கி அடே! ஏன் தாமதிக்கிறாய்? சீக்கிரம் அவன் மென்னியைப் பிடித்துக் கசக்கிக் கொன்றுவிடு. அதுவே துப்பறியும் பயல்களுக்குத் தகுந்த தண்டனையாகும்; என்றான். உடனே அருகிலிருந்த ஒருவன், ஸ்ரீனிவாசனது கழுத்தைப்பிடித்து நசுக்க ஆரம்பித்தான். ஆ! இச்சமயம் அவனது மனோவேதனையையும் அளவிட்டொண்ணாத துயரத்தையும் யாரேயறியவல்லார்? அனேக கேசுகளில் ஜெயம் பெற்றுப் பேரும் கீர்த்தியும் அடைந்த நான் கடைசியில் இந்த அற்பர்கள் கையிலா மடியவேண்டும்? என்று அவன் மனம்பதைத்தது. தனது சொந்த ஊரிலிருக்கும் அழகிய இளம் மனைவியையும் சிறு குழந்தையையும் தான் இனிப் பார்க்கப்போவதில்லை என்ற எண்ணத்தால் அவன் மனம் தவித்தது. பெண்டு பிள்ளை உற்றார் உறவினர் தன்னைச்சூழவிருக்க நிம்மதியாய்ப் பிராணனைவிடாமல் இப்படி அகாலமரணத்துக்கு ஆளாக வேண்டியிருந்ததேயென அவன்மனம் தத்தளித்தது. தனது ஆவியோடு காயமும் இன்றோடு அழிந்ததெனத் நிச்சயித்தான். கழுத்தைப்பிடித்த மனிதனோ பலமாயிருக்கிறான். நசுக்கு

கிறான். முழங்காலை நெஞ்சின்மேல்வைத்து அழுத்துகிறான். மூச்சு திணறுகிறது. நெஞ்சடைக்கிறது. உயிருக்கு மன்றாடுகிறான். அந்தோ! விழிகள் பிதுங்குகின்றன. வாய் ஆவெனத் திறக்கப்பட்டுப் போயிற்று. ஆச்சுது இரண்டொரு நிமிஷத்திற்கெல்லாம் எமன் உலகை எட்டிப்பார்க்கும் எத்தனத்திலிருக்கிறான் ஸ்ரீனிவாசன்.

---

## 20-வது அத்தியாயம்.

## உண்மைக் காதலின் ஒளிர்வு.

கடந்த அத்தியாயத்தில் கூறிய விஜய நகரத்தின் இடுக்கமான தெருவிற்கடுத்த தெருவில் தற்சமயம் நடக்கும் விஷயங்களை நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. இத்தெரு மற்ற தெருக்களைப்போல் நெருக்கமான வீடுகளையுடைத்தாயிராமல் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சற்று தூரதூரமாயமைந்த வீடுகளையுடைத்தாயிருந்தது. தெருவில் பெரும்பாலும் ஜன நடமாட்டமேயில்லை இத்தெருவில் பாதையோரம் கிழக்கு நோக்கிக்கட்டப்பட்ட ஒரு சிறு மாடியிருந்தது. இவ்வீட்டின் வெளிக்கதவு மூடப்பட்டிருந்தது. இவ்வீடு உள்ளே இரண்டு கூடங்களும் நான்கு அறைகளுமுள்ளதாயமைக்கப்பட்டிருந்தது அந்நான்கு அறைகளில் ஒன்றாகிய தென்

கிழக்கு மூலையிலிருக்கும் அறையில் ஒரு நாற்காலி மீது அழகிய தங்கப் பதுமைபோன்ற ஒரு இளமடந்தை தனது மோவாயைத் தன் இடக்கரத்தால் தாங்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தாள். இயற்கையிலேயே அன்றலர்ந்த தாமரைப் புஷ்பம்போல் ஜ்வலிக்கும் அம்மடமயிலாளினது சுந்தரவதனம், மிகுந்த துக்கத்தாலும் அச்சத்தாலும் வாடி வதங்கி ஒளியிழந்திருந்தது. அவளது கண்களில் அவளையறியாமலே ஜலம் பிரவகித்து ஊற்று நீரைப்போல் ஓடிக்கொண்டிருந்தது. அவள் அடிக்கடி விடும் பெருமூச்சினால் அவளது மார்பு விம்மி விம்மி அமுங்கியது. அவளுக்கு எதிரில் தரையின்மேல் அவ்விளமயிலைப் பார்த்த வண்ணம் ஓர் மூதாட்டி உட்கார்ந்திருந்தாள். நாற்காலியிலிருந்த வனிதை அம்மூதாட்டியை நோக்கி அம்மா! தாங்கள் யாவரென்பதையும், என்னை யார் எப்படி, எதற்காக, இங்கு கொண்டுவந்து வைத்திருக்கிறீர்கள் என்பதையும், தயவு செய்து கூறும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்; என்றாள்.

அம்மூதாட்டி :— குழந்தாய்! உனக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கவும், நீ தப்பி வெளியே போய்விடாமல் பார்த்துக்கொள்ளவும்; எனக்கு அனுமதியேயன்றி நீ கேட்கும் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்க எனக்கு அனுமதியில்லை. ஒரு வேளை நான் மீறி நடந்தால் உடனே என்னை எமலோகத்துக்கு அனுப்பி விடுவார்களென்பது நிச்சயம்; என்றாள்.

அம்மூதாட்டியின் வார்த்தையைக்கேட்ட கன்னிகை மிகுந்த மனவருத்தத்தோடும் துயரத்தோடும் அந்தோ கட

வுளே! என்போன்ற இளமடந்தைகள் பலர், தாம்காதலித்த கணவரையே யாதோரிடையூறுமின்றி யடைந்து, அவருடன் கொஞ்சிக் குலாவிச் சதா இன்பம் நுகருகிறார்களென்றோ? யானும் அவர்களைப்போன்ற ஒரு பெண் உருத்தானே? எனக்கும் அத்தகைய இன்ப நுகர்ச்சியின் ஆவல் தாகம் இல்லாமலா இருக்கும்? அங்கனமிருக்க நான் ஒருநாள் கண்டு காதலித்த என் அருமைக்காதலரையடைந்து இன்ப சாகரத்துள் நீந்தி அவ்வின்பத்தை—கஷ்டம் குறுக்கிடாத காதல்ரசத்தை—அருந்தி இன்புறுவண்ணம் பல இன்னல்களால் எனது காதல் மட்டும் இறந்துபடும் நிலைமையிலிருப்பது நீதியோ? அன்று பூங்காவில் எனது ஆர்வலரைக் கண்டு ஆனந்த பூரிதையாய் நின்ற அடியாள் மீண்டும் அவரைக்காணப் பெறும் பாக்கியம் பெற்றேனில்லை. அதிகாரிகள் அவரது உன்னத குணத்தை யுணராமல் அபாண்டமான குற்றத்தை அவர்மேல் சுமத்திச் சிறைப்படுத்தியிருக்கின்றனர். நானோ, என்பால் ஆர்வமிகுந்த அன்னை தந்தையரைப் பிரிந்து தனியளாய் இங்கு சிறைப்படுத்தப்பட்டிருக்கிறேன். ஆ! எனது பிரிவாற்றாமையால் அவர்கள் எவ்வளவு அவஸ்தைப்படுகின்றனரோ. இவ்வின்னல்களெல்லாம் அறவே யொழிந்து, எனது ஆதி நாள் காதலின் இன்சுவையைச் சுவைக்கும் பாக்கியம் பெறுவேனாகின் ஆ! என் ஜென்மம்—என் பிறவி—எத்துணை உத்கிருஷ்டமானதாயிருக்கும். எது, எது, அத்தகைய பெரும்பேற்றை யான் பெறுவேனெனும் நம்பிக்கையில்லை. ஆயினும், "தூய எண்ணங்களையுடைய உத்தம ஸ்திரீகளின் உண்மைக் காதல் ஒருநாளும் வீண் போகாது;" என்பது முதியோர்

வாக்கு. இவ்விதமே எனதுள்ளம் உத்தமமானதாகவும் எனது காதல் உத்கிருஷ்டமானதாகவும் இருப்பின், நான் ஆதிநாள் கொண்ட உண்மைக்காதலின் ஆவல்தாகம் தணிய ஓர் நன்னாள் வந்தேதீரும். ஆயினும் எனது உள்ளமும் காதலும் உத்தமமானவையென்றும், அதனால் நான் காரிய சித்தியடைவேனென்றும், எவ்வாறு நம்புதல் கூடும்? அதைப் போகப்போக நடக்கையிலன்றோ காணவேண்டும்? ஆயினும், இவற்றையெல்லாம் கடைசியில் எவ்வாறு முடித்துவைக்க—பூர்த்தி செய்ய—எம்பெருமான் திருவுளமோ யாரறிவார்? என்று பலப்பல விதமாக அவ்விளமடந்தை எண்ணியெண்ணி மனம் நைந்து கொண்டிருந்தாள். இக்கன்னிகையை இன்னாரென முன்னமே வாசகர்கள் ஊஹித்திருப்பார்கள். இவள் சுவர்ணம்பாள். சுவர்ணம்பாள் இவ்வாறு வருந்திக்கொண்டிருக்கும்போது அம்மூதாட்டி வெளிச்சென்று மீண்டும் சில நிமிடங்களில் போஜன பதார்த்தங்களுடனே உள்ளே வந்து அக்கன்னிகையை நோக்கி குழந்தாய்! வீண் எண்ணங்களெல்லாம் மனத்தில் எண்ணியெண்ணி நைந்துருகல் வேண்டாம். அதனால் நினது அழகிய வதனமும் அவயவங்களும் வாடுகின்றன. மேலும் நீ இவ்விடம் வந்தது முதல் இதுவரை உணவு உட்கொள்ளாமையால் அதிகம் களைத்துவிட்டாய். இப்பொழுதுதான் சமைத்த பதார்த்தங்களைச் சுடச்சுடக் கொண்டுவந்திருக்கிறேன். சிறிது புசித்துப் பசியாற்றிக்கொள் என்றாள்.

அம்மூதாட்டியின் வார்த்தையைக்கேட்ட சுவர்ணம்பாள் தாழ்த்தியிருந்த தன் சிரத்தைச் சற்று நிமிர்த்தி அம்

மூதாட்டியை நோக்கி அம்மா! ஆளனைப்பிரிந்து அவஸ்தை யுறும் அங்கனைகள் அன்னத்தால் அடையும் பிரயோஜனத் தைப் பெரிதாகக் கருதமாட்டார்கள். உயிரைத் துறக்க நேரினும் உத்தமஸ்திரீகள் தங்கள் தலைவனை விட்டுத் தனி த்துறையும் காலத்துத் தங்கள் தேகத்தைப் போஷித்துச் சிங்காரப்படுத்த விரும்பார்களன்றோ? ஆதலின், இன்று முதல் எனது அன்பிற் குரியவரை—நான் முதல் முதல் கண்டு காதலித்தகாதலரை காணும் வரைக்கும் இவ்வுயிரை த்தாங்கியிருக்க ஜலபானம் செய்வேனேயன்றி ஒருபோதும் நான் உணவை உட்கொள்ளமாட்டேன். இந்நிமிஷமுதல் என்காதலரைக்கண்டு பேருவகையுரும் வரையான் உண்ணு விரதத்தினைக் கைக்கொள்ளுகிறேன். இது நிச்சயம். சத் தியம். என்றாள்.

அவள் வார்த்தைகள் திடமுள்ளவைகளாயும் பிடிவாத மானவைகளாயும் தோன்றின. அவ்வார்த்தைகளைக்கேட்ட மூதாட்டி மிகுந்ததிகைப்பும் வியப்பும் அடைந்தவளாய்ச் சுவர்ணும்பாளை நோக்கி குழந்தாய்! வேண்டாம், நீ இத்த கைய கட்டுரையரான வார்த்தைகள் கழறல் நன்றன்று. நீ யாரைக்குறித்து இவ்வளவு அருந்தவமிருப்பதாகக் கூறுகி ன்றாயோ அவன் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுச் சிறைச்சா லையிலிருக்கிறான். அவன் கழுத்துக்குத் தூக்குக்கயிறு காத்துக்கொண்டிருக்கிறது. இன்னும் சிலநாட்களில் இறந் துபோகும் நிலைமையிலிருக்கும் ஒரு நிர்ப்பாக்கியனை மண ந்துகொண்டு கிடைத்தற்கரிய தனது ஒப்பற்ற நவ யௌவன த்தையும் அழகையும் மஞ்சள் குங்குமம் முதலிய சுமங்கிலி த்தன்மையையும் இழந்து, சர்வவிதத்திலும் தாழ்மையுடை-

யதாகிய விதவாஸ்தானத்தையடைய எந்த மூட்டாள் பெண் தான் முற்படுவாள்? மேலும், நீ அவனை விவாகம் செய்து கொள்ளலாமென்று எண்ணியிருப்பாயேயன்றி உண்மையில் விவாகம் செய்து கொள்ளவில்லை. அப்படியிருக்க அந்த அற்பாயுளைக்குறித்து அருந்தவமிருப்பானேன்? ஒருவேளை அவன் அக்குற்றஸ்தாபனையிலிருந்து மீண்டாலும், அத்தரித்திரத்தைக் கட்டிக்கொண்டு என்ன சுகமனுபவிக்கப்போகிறாய்? ''அஷ்ட தரித்திரம் ஆத்தாள் வீடு அதிலும் தரித்திரம் மாமியார் வீடு'' என்றபடி உன் தகப்பனாரோ பெரும்பாலும் ஏழைஸ்தானத்திலிருக்கிறார், சுந்தராராஜோ மூழுப்பாப்பர். இவ்விதநிலைமையில் என்ன விவாகம்? என்னபுருஷன் பெண் ஜாதி? என்னசுகம்? போ, போ, பைத்தியம்பிடித்த குழந்தை போயும் போயும் இந்த அஷ்டதரித்திரமா உன் கண்களுக்கு அகப்பட்டான்? ஏன் இவ்வளவு பெரிய நகரத்தில் உனக்கொரு செல்வந்தனாகிய சீமான் அகப்படாமலா போய் விட்டான்? அத்தகைய ஒரு பிரபுவை மணந்து அவனுடன் சதா கொஞ்சிக்குலாவி இன்பநுகருதலன்றோ நீ அழகில் ஒப்புயர்வற்ற பெண் ஜென்மமெடுப்பதற்குப்பயன் ஆகும் என்றாள். அவ்வார்த்தையைக்கேட்ட கன்னிகை அதிக வருத்தமும்கோபமும் அடைந்தவளாய் மூதாட்டியைநோக்கி அம்மா! போதும் போதும் உங்கள் புத்திமைக்கேட்டு நடந்தால் நான் ரொம்பவும் தலையெடுத்துப்போவேன். மேலும் என் காதலரைக்குறித்து நீங்கள் இதுவரை ஏளனமாகவும்—அவமதிப்பாகவும் கூறியவார்த்தைகளை அதிக பிழையுள்ளவைகளாகும். மீண்டும், நீங்கள் இத்தகைய வார்த்தைகள் கூறுவதாயின் அது உங்கள் யோக்கியதையை முற்றிலும்

குறைத்துவிடுமென்பது நிச்சயம். தவிர எத்தகைய நிலைமையிலிருப்போரேயாயினும் குணமுள்ளோரை நான் விரும்புகிறேனேயன்றி அஃதில்லாத பணமுள்ளோரை விரும்புகிறதில்லை. குணமில்லாத பணப்பேய்பிடித்த பாஷாண்டிகளின் வாய்மை தவறும் வார்த்தைகளும், நடக்கைகளும் எனக்குப்பிடிக்கவில்லை. ஆகவே அப்பணப்பை சாசங்களைக்குறித்து எனக்கக்கரையில்லை. இன்னும், நான் காதலித்தவரை விவாகம் செய்துகொள்ளாமையால் அவரைக் குறித்து அக்கரைப்படவேண்டியதில்லையென்றும், எனது காதலை வேறிடம் செலுத்தலாமென்றும், கூறுவது சரியல்ல இப்பரத கண்டத்தில், முன்னிருந்த கற்புடைய அனேக ஸ்திரீ ரத்னங்களுளொருவளாகிய சாவித்திரி என்பவள் தான் கண்டு காதலித்தவனையே—சத்தியவானையே—விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்ப, திரிகால ஞானியாகிய நாரதர், சத்தியவான் குறுகிய ஆயுளையுடையவனென்றும், ஆகவே அவன் சீக்கிரம் மறித்து விதவாஸ்தானத்தை உனக்குக் கொடுப்பானென்றும் கூறியதுமன்றி, தற்சமயம் அவன் சகல இராஜ செல்வங்களையும் இழந்து, வறுமையுடையோனாக வனத்தில் வாசம் செய்கிறானென்றும் கூறி, நீ அவனை விவாகம் செய்துகொள்வதால் எவ்விதமான சுகத்தையும் அடையமாட்டாய் என்றும் கூறினர். அவளது பெற்றோர்களும் அவ்வாறே அவனை விவாகம் செய்துகொள்ள வேண்டாமென்று மறுத்தனர். யார் என்ன கூறியும் அவள் விடாப் பிடியாய் தான் காதலித்தவனையே விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றும், அப்படியின்றித் தன் காதலை வேறிடம் செலுத்தினல் அது தன் கற்புக்

கிழிவாகுமென்றும் கூறி, தான் காதலித்த அச்சத்தியவா னையே மணந்து, தனது கற்பின் பிரபாவத்தால் தன் கண வனுக்கு நீடிய ஆயுளும், இழந்த ராஜ செல்வங்களும், கிடைக்கப்பெற்றனளன்றோ? ஏன் நானும் அவர்கள் ஜனி த்த இப்புண்ணிய பூமியாகிய இப்பாத கண்டத்தில்தானே ஜனித்திருக்கிறேன்? அவர்கள் தேகத்தில் ஓடிக்கொண்டி ருந்த பரிசுத்தமான இரத்தம் தானே என் தேசத்திலும் ஓடிக்கொண்டிருக்கிறது? அவ்விதமிருக்க, நான் மட்டும் அவர்கள் சென்ற தூய்மையான வழியைத் தொடர்ந்து செல்லாமல் நெறிபிசகி நிற்க நினைப்பது நீதியோ? என் உயிர் இருக்கும் வரை இந்த உத்தமமான கொள்கையை மாற்ற நான் ஒருபோதும் ஒருப்படேன். ஆகையால் தாங் கள் இவ்விஷயத்தைக் குறித்து இனியும் பாஷிப்பதை நிறு த்தி வேறு விஷயங்களைப் பேசுதல் நலம் என்றாள். அவ் வார்த்தையைக் கேட்ட மூதாட்டி மனத்தாங்கலோடு குழ ந்தாய்! நான் “சொல்வதைச் சொன்னேன். நீ படுவதைப் படு” என்று வெறுப்போடு கூறிவிட்டு வெளியே சென்று கதவைப் பூட்டிக்கொண்டு சென்றாள்.

## 21-வது அத்தியாயம்.

# ஆயுள் விருத்தி ஆபத்து விலகல்.

கழுத்தைப் பிடித்து நசுக்குவதால் ஸ்ரீனிவாசன் எமனுலகுக்குச்செல்லும்எத்தனத்திலிருக்கிறானென்று கூறினோமல்லவா, அச்சமயம்—அவனது உயிர் உடலைவிட்டு நீங்க எதிர்பார்க்கும் சமயம்—தெருக்கதவண்டை யாரோ மனிதர்கள் பேசும் சத்தமும், கதவைத்தட்டிக்கூப்பிடும் சப்தமும் கேட்டது. பிரபுவைப்போல் வேடமணிந்திருந்த மனிதன் மற்றவர்களை நோக்கி அடே யாரோ வந்துவிட்டார்கள் போலிருக்கிறது. சீக்கிரம் கொன்றுவிடு. சீக்கிரம் கொன்றுவிடு. உம் ஆகட்டும் என்று துரிதப்படுத்தினான். ஸ்ரீனிவாசனது கழுத்தைப்பிடித்திருந்த மனிதனோ தன் முழுபலத்தையும் சேர்த்துத்தன்னாலியன்றவரை ஸ்ரீனிவாசனது கழுத்தைப்பிசைந்தும் அவனை எமலோக தரிசனத்திற்குப் பிரயாணப் படுத்திக்கொண்டிருந்தான். அச்சமயம் மீண்டும் படீரெனக்கதவைப்பெயர்த்த சப்தம் கேட்டது. உடனே பிரபு வேடமணிந்த மனிதன் அடே ஆபத்து அபாயம் என்று கூறிக்கொண்டே அக்கூடத்தின் மற்றொரு புறமிருக்கும் அறையிலிருந்த ஒரு பெண்ணையும் அழைத்துக்கொண்டு பின் புற வழியாக ஓட்டம் பிடித்தான். ஸ்ரீனிவாசனைக்கழுத்தைப் பிடித்து அமுக்கிக்கொண்டிருந்தவனும் இன்னொருவனும்

அவர்கள் தலைவன் ஓடிய வழியாகவே தாங்களும் ஒருவன் மேலொருவன் விழுந்தடித்துக்கொண்டு ஓடினார்கள். இதற்குள் கதவைப்பெயர்த்த மனிதர்கள் சீக்கிரம் கதவையப்பால் தள்ளிவிட்டு ஓட்டமாக கூடத்திற்குள் ஓடிவந்து ஸ்ரீனிவாசன் கட்டுண்டு கிடப்பதைக்கண்டு ஆ! கொலைகாரப்பயல்கள் கொன்றேவிட்டார்கள் போலிருக்கிறது. என்று கூறிக்கொண்டே சீக்கிரம் ஸ்ரீனிவாசனது கட்டுகளை அவிழ்த்து வாயில் அடைக்கப்பட்டிருந்த துணியையும் எடுத்து அங்கொரு மூலையில் பாத்திரத்திலிருந்த ஜலத்தைக்கொண்டு வந்து முகத்தில் கொஞ்சம்தெளித்து வாயிலும் சிறிது ஊற்றிக்களையாற்றினார்கள். சில நிமிஷங்களில் பெரும்பாலும் அடங்கிப்போயிருந்த ஸ்ரீனிவாசனது சுவாசம் அசைந்தாடத் தொடங்கியது. பிறகு சில நிமிஷங்களுக்கெல்லாம் அவனது தேகத்தில் உணர்ச்சியுண்டாகி கைகால்களையசைத்துக்கொண்டு மெதுவாகக் கண் விழித்துப்பார்த்தான். அப்போது அருகிலிருந்த தன் மனிதர்களைக்கண்டதும் தனது அபஜெயத்தின் ஞாபகம் அவனுக்குதித்தது. உடனே வெட்கத்தால் கண்களையிறுக மூடிக்கொண்டான். மறுபடியும் சில நிமிஷங்களுக்குப்பிறகு கண்களைத் திறந்து மெதுவாக ஆ! கண்ணப்பா! கிருஷ்ணு! நீங்கள் இருவரும் சமயத்தில் வந்திருக்கிறீர்கள். இன்றேல் இன்றுடனே எனது ஆவியும் காயமும் அழிந்தே போயிருக்கும். அந்தப்பாவிகள் பெரும்பாலும் என்னை நன்கு கொன்றுவிட்டார்கள். என்று கூறிக்கொண்டே மெதுவாக எழுந்துஉட்கார்ந்தான். அதற்கு கண்ணப்பன் ஐயா! தாங்கள் கோட்டைவீதி 685. நெ வீட்டிலுள்ள ஒரு பிரபுவின் அவசரமான வேண்டுகோ

ளின்படிக்கு அவர் வீட்டிற்குச் செல்வதாகவும் நமது தொழில் முறையில் மிகவும் முக்கியமானதாகவும் அவசரமானதுமான ஒரு கட்டளையை எங்களுக்கிட வேண்டியிருப்பதால் தாங்கள் அங்குள்ள காரியங்களைப் பார்த்துக்கொண்டு சீக்கிரம் 9 மணிக்குள் திரும்பி வந்து விடுவதாகவும், ஒரு வேளை ஏதாவது அசந்தர்ப்பத்தால் அப்படி 9 மணிக்குள் தாங்கள் திரும்பி வீட்டுக்கு வராவிடில் உடனே நாங்கள் புறப்பட்டு மேற்கண்ட விலாசமுள்ள ஜாகைக்கு வந்து அக்கட்டளையை இன்னதெனத் தங்களிடம் அறிந்துகொள்ளவேணுமென்றும், தாங்கள் ஒரு துண்டுச் சீட்டில் எழுதிவைத்திருந்தபடியால், 9 மணிவரையில் தங்கள் வருகையை எதிர்பார்த்தோம், தாங்கள் அக்கால வரைக்குள் வராததால் நாங்களே புறப்பட்டு இங்கு வந்துபார்க்க; தாங்கள் கூறிய விலாசமுள்ள இவ்வீட்டின் கதவு மூடித்தாளிடப்பட்டிருந்தது. இரண்டு முறைக் கதவைத் தட்டிக் கூப்பிட்டோம், ஒருவரும் பேசவில்லை. ஆகையால் ஒரு வேளை தாங்கள் வேறுவழியால் நமது வீட்டிற்குப் போயிருப்பீர்களோ என்ற சந்தேகம் உதித்தது. அச்சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ள பாதையிலாவது அண்டைவீட்டுத் திண்ணையிலாவது இருக்கும் மனிதர்களைக்கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்ற உத்தேசத்துடன் பாதையின் இருபுறமும் நோக்க, அங்கு மனிதர் நடமாட்டமே காணப்படாதது மன்றி, அண்டை வீடுகளிலும் கூட மனித சஞ்சாரமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இவ்வீட்டிற்கு எதிர்பக்கமுள்ள வரிசையில், 2-வது வீட்டுத்திண்ணையின் மேல் ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான் நாங்கள் அவனிடம் நெருங்கி தங்களின்

உடைகள் முதலிய அடையாளங்களைக் கூறி அத்தகைய மனிதர் இவ்வீட்டினின்றும் வெளியே வந்ததைக் கண்டாயா வென்று கேட்டேன். அதற்கவன் நாங்கள் கூறும் அடையாளமுள்ள மனிதர், கொஞ்ச நேரத்திற்கு முன் இவ்வீட்டிற்குள் புகுந்ததாகவும், பிறகு சில நிமிஷங்களுக்கெல்லாம் "அடே கொலைகாரப் பயல்களா மரியாதையோடு விட்டு விடுங்கள் இன்றேல் தெருவில் திரியும் நாயைப்போல உங்களெவ்வொருவரையும் சுட்டுத் தள்ளி விடுவேன், என்று கோபத்துடன் யாரோ கூவிய அரவம் தனக்குக் கேட்டதாகவும், பிறகு எவ்விதமான சந்தடியும் தனக்குக் கேட்காததுமன்றி, உள்ளே சென்ற மனிதர் மீண்டும் வெளியே வரவில்லையென்றும் கூறினன். அவன் வார்த்தைகளால் தங்களுக்கு ஏதோ பெருத்த ஆபத்து நேர்ந்து விட்டிருக்கிறதென்று நிச்சயித்து உடனே கதவைப் பெயர்த்துவிட்டு உள்ளே ஓடிவந்து பார்க்க, எங்கள் உத்தேசப்படியே அபாயத்தில் சிக்கியிருக்கும் தங்களைக் கண்டோம். தாங்கள் அவ்வாறு எழுதி வைத்து வந்ததினுல் தான் நாங்கள் சமயத்திற்கு இங்கு வரும்படி நேரிட்டது; என்றுன்.

கண்ணப்பன் கூறி முடிந்ததும், ஸ்ரீனிவாசன் மெள்ள எழுந்து நின்று இப்படியும் அப்படியும்சிறிது உலாவினுன். பிறகு கண்ணப்பனையும் கிருஷ்ணனையும் நோக்கி, நீங்களிருவரும் பின்புறவாயிலாக வெளியே செல்லுங்கள். நான் முன்புற வழியாக வீட்டிற்குச் செல்லுகிறேன்; என்று கூறிவிட்டு மெதுவாக வெளிச் சென்றுன். சிறிது நேரத்தில் ஸ்ரீனிவாசன் வீடு சேர்ந்ததும், தனது ஆபீஸ் அறை

யிலுள்ள நாற்காலியிலுட்கார்ந்து தனது வாழ்நாளில் இது வரை அடைந்திராத பெரும் தோல்வியைத் தான் இப்போது அடைந்ததை எண்ணியெண்ணி மனம்வருந்தினான். அவன் மனம் வருத்தத்தாலும் வெட்கத்தாலும் வதைபட்டது. அவன் தான் என்ன செய்யவேண்டுமென்பதையும் உணராதவனாய்ப் பெரும் பைத்தியம் பிடித்தவன் போல் மௌனமாயிருந்தான். பகல் 3 மணியாகியும் போஜனம் உட்கொள்ளவேண்டுமென்னும் எண்ணம் அவனுக்குதிக்கவில்லை. இவ்வாறு அவன் தனது அபஜெயத்தை எண்ணி யெண்ணி மனம் நைந்துகொண்டிருக்கும்போது, தபால்காரன் அன்றைய தபாலில் வந்த சில கடிதங்களை கொண்டு வந்து மேஜைமேல் வைத்துச் சென்றான். ஸ்ரீனிவாசன் உறங்கி விழித்தவன்போல் உணர்வுபெற்று அக்கடிதங்களை ஒவ்வொன்றாக வாசிக்க ஆரம்பித்தான். அவன் வாசிக்க ஆரம்பித்த முதல் கடிதத்தில் அடியிற் கண்டவாறு வரையப்பட்டிருந்தது.

கோட்டை வீதி
685 நே வீடு.

பிரியமுள்ள ஐயா! தங்களின் துப்பறியும் வேலையின் பாண்டித்தியம் மிகவும் கொண்டாடத்தக்கது! தங்களின் ஆழ்ந்த ஞானமும் நுண்ணறிவும் எவ்விதச் சிக்கலான விஷயங்களையும் நொடியில் ஆராய்ந்தறியும் மூளை வன்மையும் மிக்க சிலாக்கினைக்குரியன! ஆ! ஆ! இன்று காலை சுமார் 9-மணிக்கு மேற்கண்ட விலாசம் உள்ள வீட்டில் தாம் கை கால்கள் கட்டப்பட்டு கருடனைக்கண்ட எலிபோல் விழித்த போதே தமது ஒப்பற்ற துப்பறியும் பாண்டித்யத்தின் பண்

டவாளம் விளங்கி விட்டது. தூ வெட்கம். வெட்கம். சற்றும் மூளையில்லா முண்டங்களாகிய உம்மைப் போன்றவர்கள் துப்பறிகிறவர்களெனப் பேர்வைத்துக்கொண்டு பலரை ஏமாற்றிப் பொருள் பறித்து வயிறுவளர்ப்பது மெத்தவும் நகைப்புக்கிடமானது. இவ்விதம் வயிறுவளர்ப்பதைக்காட்டிலும் இரந்துண்பது மேலல்லவா? போகட்டும். இனியாவது இதுவரை துப்பறிபவனெனக் கொண்டாடப்பட்டுவந்த போலி கௌரவத்தையும், உனது உயிரையும், காப்பாற்றிக்கொள்ளவேண்டுமானால் இன்றே இந்நகரத்தைவிட்டு ஓடிப்போவது நல்லது. இன்றேல், கூடியசிக்கிரம் உமக்கு எமலோக தரிசனம் காட்டப்படுமென்றசங்கதி இக்கடிதமூலம் தெரிவித்திருக்கிறேன்.

இப்படிக்கு
உமது பரிதாபகரமான நிலைமைக்கிரங்கும்.
கஜேந்திர வீரன்.

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை வாசித்ததும்—அதிலிருந்த ஏளனவார்த்தைகளால்—ஸ்ரீனிவாசன் மனம் வெட்கி முகம் வெளுத்தது. கண்களில் நீர் ததும்பின. தான் அடைந்த அபஜெயத்தால் ஏற்கனவே வருந்தி நைந்துகொண்டிருந்த அவன் மீண்டும், பரிகாசமொழிகள் நிறைந்த அக்கடிதத்தைக் கண்டதால் "வேந்த புண்ணில் வேல் உருவினது" போலப்பலமடங்கு துயரமும் வருத்தமும் வெட்கமும் அடைந்தான். அதனால் அவனது உள்ளம் அளவிறந்த வருத்தத்துள் ஆழ்ந்தது. இவ்வாறு சிலநிமிடம் கழிந்ததும், அவனது தோற்றங்கள் மாறின. முகத்தில் குபீரென இரத்தம் ஏறியது. கண்களில் கோபத்தனல் வீசின.

கோபத்தால் அக்கடிதத்தை நசுக்கித்தூர எறிந்தான். எப்படியும் இக்கோலைகாரப்பயல்களைக்கண்டு பிடித்து தக்க தண்டனையடையச் செய்யாமல் விடுவதில்லையென மனத்துள் சபதம் செய்துகொண்டு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் யோசனையில் இருந்தான்.

---

## 22-வது அத்தியாயம்.

# கதிர்வேலு கவுண்டரின் கலக்கம்.

இதமது குமார்த்தி சுவர்ணம்பாள் காணமல் போனதைக்குறித்துக் கதிர்வேலு கவுண்டர் அளவில்லாத துயரமும் வருத்தமும் அடைந்தவராய் ஒரு வேலையையும் கவனியாமல் சதா துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார். அவரது மனைவி பத்மாவதியோ "சுவர்ணம்பாள் காணமல் போய் விட்டாள்,, என்ற வார்த்தையைக் காதில் கேட்டது முதல் சித்தஸ்வாதீனமின்றிப் பயித்தியம் பிடித்தவள் போலிருக்கிறாள். வேலைக்காரரும் கூடச்சிறிதும் சுறுசுறுப்பின்றித்துயரம் கொண்டவர்களாய் வாடியிருந்தார்கள். எஜமானர்கள் ஏதாமொரு கஷ்டத்தில் அகப்பட்டுத் துயருறும்போது உத்தம வேலைக்காரர்கள் அத்துயரைத் தாமும் பங்கிட்டுக்கொண்டு துயருறுவது இயற்கை வழக்கமல்லவா? நமது கதிர்வேலு கவுண்டரது வேலைக்காரரும் உத்தமர்

களாகையால் தமது எஜமானர் துயருறுவதைக்கண்டு தாங்களும் துக்கமடைந்தது ஆச்சரியமல்ல. கதிர்வேலு கவுண்டர் இவ்வாறு துயரத்துடன் உட்கார்ந்திருக்கையில் அவரைக்காணவந்த ஸ்ரீனிவாசன் அவரது எதிரில் வந்து நின்றான். கதிர்வேலு கவுண்டரது கண்கள் திறந்திருந்தனவாயினும், அவர் மனம் வெவ்வேறு இடங்களில் வேலை செய்துகொண்டிருந்தது ஆகையால், ஸ்ரீனிவாசன் நிற்பதை அவர் உணர்ந்தாரில்லை. அவரது நிலைமையைக்கண்ட ஸ்ரீனிவாசன் ஆச்சரியமும் இரக்கமும் உடையோனாகி கவுண்டரே! என்ன யோசனை பலமாயிருக்கிறது? என்றான். கதிர்வேலு கவுண்டர் திடீரென உணர்வுபெற்று ஆ! வாருங்கள். வாருங்கள். உட்காருங்கள். என்ன யோசனை? எல்லாம் பயித்தியகார யோசனைதான். எங்கள் குடும்பமே பெரும்பாலும் அடியோடு முழுகிப்போனபிறகு யோசனை என்ன இருக்கிறது? தாங்கள் கூறியபடி அக்கொலையோடு மட்டும் நில்லாமல் மீண்டும் இக்குழப்பம் நடந்துவிட்டிருக்கிறது. குழந்தை சுவர்ணம்பாள் காணமற்போன அன்றே தங்களை வரும்படிக்குச் சொல்லியனுப்பியிருந்தேன். தாங்கள் வீட்டில் இல்லையென சமாசாரம் கிடைத்தது. மீண்டும் இரண்டொருமுறை ஆள் அனுப்பியும் தாங்கள் கிடைக்கவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் தங்கள் வருகையை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். என் உயிருக்குயிராயுள்ள ஒரே பெண்மகளான சுவர்ணம்பாளையிழந்து விட்டேன். இனி இவ்வுலகில் நான் எதற்காக இருக்கவேண்டும்? தாங்கள் என் மகளைக் கண்டுபிடிக்க முடியும் முடியாதென்ற வார்த்தையைத் தங்களால் அறிந்தபிறகு உயிரைவிட நிச்ச

யித்திருக்கிறேன். என்று கூறி ஸ்ரீனிவாசனது இருகரங்களையும் பற்றிக்கொண்டு கண்களில் நீரை வடியவிட்டார்.

கதிர்வேலுகவுண்டரது பரிதாபகரமான நிலைமையைக் கண்ட ஸ்ரீனிவாசனது உள்ளம் உருகியது. கண்களில் நீர்ததும்பின. அவன் மனவருத்தத்தோடு கதிர்வேலுகவுண்டரை நோக்கி கவுண்டரே? தாங்கள், மனத்தைத் தளரவிடாதேயுங்கள். சுவர்ணம்பாள் காணமற்போன விஷயம் எனக்கு அப்பொழுதே தெரியும். தாங்கள் சுவர்ணம்பாளைக் கண்டு பிடிக்கும்படி என்னிடம் கூற சாவகாசப்படா விடினும், நான் அந்நிமிஷமுதல் சுவர்ணம்பாளைக் கண்டு பிடிக்கும் முயற்சியிலிருக்கிறேன். சுவர்ணம்பாள் காணமற்போன அன்றுமாலை நான் இங்குவந்து வேலைக்காரர்களால் ஒவ்வொரு விஷயத்தையும் செவ்வையாய் அறிந்து கொண்டது மன்றி நேரில் பார்க்கவேண்டியவைகளையும் நன்றாய் ஆராய்ந்திருக்கிறேன். அப்போது நான் மாறுவேடமணிந்திருந்தால் தங்கள் வேலைக்காரர்கள் என்னை அறிந்து கொள்ள முடியவில்லை. தவிர எனக்கிருந்த பல அவசர ஜோலிகள் நிமித்தம் நான் உடனே திரும்பிப்போகவேண்டியிருந்ததாலும், தாங்கள் அச்சமயம் சோகத்துடன் படுக்கையிலிருந்ததாலும் தங்களைச் சந்தித்து வார்த்தையாட சௌகர்யப்படவில்லை மேலும் இதுவரை சுவர்ணம்பாளைக் குறித்து எவ்விதமான தகவலும் கிடைக்கவில்லை. இருந்தாலும் சுவர்ணம்பாள் இதுவரை சௌக்கியமாகவே இருக்கிறாள்? என்று மட்டும் நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். தற்போது இதைவிட நான் ஒன்றும் அதிகமாய் கூறமுடி

யாது. என்னால் இயன்றவரை முயற்சிசெய்து தங்கள் குழந்தையைக்கண்டுபிடித்துத் தங்களிடம் ஒப்புவிக்கிறேன். தாங்கள் அதுவரை சற்று பொறுமையோடு இருக்கவேண்டும்; என்றான். இச்சமயம் யாரோவரும் காலடியோசை கேட்டது சிறிது நேரத்தில் இறந்துபோன வெங்கிடுபதிக்கவுண்டரின் குமாரனான கனகாசலம் அங்கு வந்தான். அவன் வரவைக்கண்ட கதிர்வேலு கவுண்டர் தம்பீ! இப்படிவா இதோ இந்த நாற்காலியில் உட்கார் என்று உபசரித்தார். கனகாசலம் அவ்வாறே நாற்காலியில் உட்கார்ந்ததும் கதிர்வேலு கவுண்டரை நோக்கி மாமா! நமது சுவர்ணம்பாளை நேற்றைக்கு முந்தியநாள் யாரோ பாவிகள் களவாடிக்கொண்டுபோய் விட்டதாக நான் இப்பொழுது தான் சமாசாரம் கேள்விப் பட்டேன். நான் இரண்டு நாளுக்கு முன்னமே நகரத்திற்குப் பக்கத்திலுள்ள கிராமத்திற்குச் சென்றவன் இப்பொழுது தான் திரும்பிவந்தேன். ஆகையால், இச்சமாசாரம் எனக்கு முன்னமே தெரியவில்லை. சுவர்ணம்பாள் காணாமல் போனதால் எனது மனம் ரொம்பவும் வேதனைப்படுகிறது; நான் தான் என் அருமைத் தகப்பனாரை இழந்து அளவிறந்த துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறேனென்றிருக்க, தாங்களும் அத்தகைய துக்கசாகரத்தில் மூழ்கித் துயருறும்படி நேரிட்டதைக் குறித்து நான் ரொம்பவும் விசனிக்கிறேன். இருந்தாலும் என்ன செய்யலாம்? எது எது எக்காலத்தில் வருமோ அது அது அக்காலத்தில் வந்துதான் தீரும். நம்மால் ஆவது ஒன்றுமில்லை. நாம் சுவர்ணம்பாளைக் கண்டுபிடிக்க துப்பறிபவர்களைக்கொண்டு ஏதாவது முயற்சி செய்யலாம் என்றான்.

அவ்விருவர்களின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீனிவாசன் கனகாசலத்தை நோக்கி, ஆம் தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மையே. அடுத்த நிமிடம் என்ன நடக்கப்போகிறதென்பதை அறிய நம்மால் இயலாது என்றான். ஸ்ரீனிவாசன் வார்த்தை முடிந்ததும் கதிர்வேலு கவுண்டர் கனகாசலத்தை நோக்கி தம்பீ! என்று கூவி ஸ்ரீனிவாசனைச் சுட்டிக்காட்டி இவரையாரென்று உனக்குத் தெரியுமா? என்றார். கனகாசலம் ஸ்ரீனிவாசனைக்கூர்ந்து நோக்கி மாமா! இவரை இன்னாரென்று எனக்குத் தெரியாது என்றான். அதற்கு கதிர்வேலு கவுண்டர், இவர் துப்பறிவதில் மிக்கப் பிரக்யாதி பெற்றவரும் கவர்மெண்டாரால் சன்மானிக்கப்பெற்ற சாமர்த்தியமும் உடையவர். இவருடைய சாமர்த்தியம் பெரும்பாலும் ஒவ்வொருவரும் அறிந்ததே. இவரது பெயர் ஸ்ரீனிவாசன் என்று கூறுவார்கள் என்றார். இதைக்கேட்ட கனகாசலம் ஆச்சரியமுடையோனாகி தனது கண்களை மலர விழித்து ஓ! நிச்சயமாகவா! உண்மையாகவே துப்பறியும் ஸ்ரீனிவாசன் என்பது இவர்தானா! என்றான்.

கதிர்வேலு கவுண்டர்:— ஆம். சந்தேகமே வேண்டாம் துப்பறியும் ஸ்ரீனிவாசன் என்பது இவர்தான்; என்றார்.

கனகாசலம்:— மாமா! அப்படியானால் நமது சுவர்ணாம்பாளைத் தேடும் விஷயத்தில் இவரை நியமிக்கலாமே. மேலும் இவர் யாரால் இந்த வரவழைக்கப்பட்டார்? என்று கேட்டான்.

கதிர்வேலு கவுண்டர்:— ஆம் நானும் அப்படித்தான் ஏற்பாடு செய்திருக்கிறேன். இக்கொலைக்கேசில் குற்றவாளியெனச் சந்தேகத்தின் பேரில் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் சுந்தரராஜு உண்மையில் குற்றவாளியா அல்லவா என்பதைக் கண்டுபிடிக்க நானே சிங்களபுரத்துக்குக் கடிதமெழுதி இவரை இங்கு வரவழைத்தேன். அத்துடன் சுவர்ணாம்பாளைக் கண்டுபிடிக்கத் தகுந்த முயற்சியையும் செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேனென்றார்.

கனகாசலம்:— மாமா! உண்மையில் சுந்தரராஜு என்னவோ நிரபராதி என்று தான் எனக்குத் தோன்றுகிறது. இனிமற்ற விஷயம் தெய்வத்திற்குத்தான் தெரியும். மேலும் எனது தகப்பனாரைக் கொன்ற கொலைப்பாதகனைக் கண்டுபிடிக்கத் தாங்கள் முயற்சியெடுத்துக் கொண்டதற்கும், துப்பறிபவர் குற்றவாளியைக் கண்டுபிடிக்க ஒப்புக்கொண்டதற்கும் நான் மிக்க நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன். தவிர இவ்விஷயத்துக்காக ஏற்படும் சிலவு முழுமையும் கொடுக்க நான் தயாராகவுமிருக்கிறேன்; என்றான்.

ஸ்ரீனிவாசன்:—சந்தோஷம். ஐயா! தாங்கள் இப்பொழுதேதாவது கொடுக்கவேண்டுமென்ற சிரமமே வேண்டாம். எல்லாம் பின்னால் பார்த்துக்கொள்வோம் என்றான்.

கனகாசலம்:— இவ்வாறு பின்னும் சில நிமிஷம் வார்த்தையாடிக்கொண்டிருந்து பின்பு வீட்டிற்குச் சென்றான். அவன் சென்றதும் ஸ்ரீனிவாசன் கதிர்வேலு கவுண்டரை நோக்கி கவுண்டரே! இவரென்ன பெரும்பாலும் ஐரோப்பி

யரைப்போலவே உடையணிந்திருக்கிறார்? என்று கேட்டான்.

கதிர்வேலு கவுண்டர் :— ஆம். அவன் எப்பொழுதும் அப்படித்தான்; பெரும்பாலும் நவீன நாகரீகமென்னும் படுகுழியில் வீழ்ந்து விட்டிருக்கிறான். பையனென்னவோ புத்திசாலிதான். இண்டர்மீடியேட் வகுப்புவரை வாசித்திருக்கிறான்; என்றார்.

ஸ்ரீனிவாசன் :— இக்காலத்து வாலிபர்கள் பெரும்பாலும் அப்படித்தான் நாகரீக படுகுழியில் வீழ்ந்திருக்கிறார்கள்; என்று கூறிவிட்டு தமக்கு அவசரமான சில வேலைகளிருப்பதாகவும், தாம் இனி அடிக்கடி அங்குவர ஸௌகர்யப்படாதென்றும் கூறிவிட்டு கவுண்டரிடம் விடைபெற்று வீட்டிற்குச் சென்றான்.

## 23-வது அத்தியாயம்.

# குள்ளனுக்கேற்ற கள்ளன்.

---

இந்த விஜய நகரத்தின் தென்பாகத்திலுள்ள ஓர் வீதியில் மேற்கு முகமாகக் கட்டப்பட்ட ஓர் மாடியிருந்தது. அவ்வீதியில் ஜன நடமாட்டம் அதிகமாயும் வீடுகள் ஒன்றுக்கொன்று நெருக்கமானதாயுமிருந்தன. அவ் வீட்டின் கதவு சாத்தப்பெற்றிருந்தது. அவ் வீட்டிலுள்ள ஒரு அறையில், ஒரு மேஜையும் இரண்டு நாற்காலிகளும் இருந்தன. ஒரு நாற்காலியில் மாலுமியைப் போன்ற உடையணிந்த ஒரு மனிதனும் மற்றொரு நாற்காலியில் ஒரு யௌவன இளமடந்தையும் உட்கார்ந்திருந்தார்கள் அம்மடமயிலாள் சற்று சருமை நிறமாயும் அழகு சுமந்திலைத்த ஆகத்தினளாயுமிருந்தாள். அக்கன்னிகையின் சுந்தரவதனத்தில் புன்னகை தவழ்ந்து விளையாடியது. அவளது லாவண்யத்தில் ஈடுபட்ட அம்மனிதன், தனது நாற்காலியை அம்மடைந்தையினருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு கண்மணீ! அத்துஷ்டப் பயல் ஸ்ரீனிவாசனால் நமக்கு எவ்வளவு இன்னல்கள் விளைந்தது பார்த்தாயா? நாம் மாறுவேடமணிந்து இருப்பதை அந்தத் திருட்டுப் பயல் எப்படியோ அறிந்து சந்தேகம் கொண்டு அன்று நாமிருந்த வீட்டிற்கு வந்து கதவையிடித்து சங்கரமேனன்

வீட்டிலிருக்கிறாரா என்று கேட்டானன்றோ? அதனால் நாம் அவ் வேடத்தையும் அவ் வீட்டையும் துறந்து வேறு வேடத்துடனும் வேறு இல்லத்திலும் வசிக்கும்படி நேர்ந்தது. ஆயினும் நீ அவனுக்குப் பிடிகொடாமல் சாமர்த்தியமாய் நடந்து கொண்டது ரொம்பவும் மெச்சத்தக்கது; என்றான்.

ஸரஸ ரஞ்சனி :— அம்மனிதனைத் தழுவி முத்தமீந்து தலைவா! நாம் அன்று பிரபுவேடம் பூண்டது மிக்க உன்னதமாயிருந்தது. அன்று நமது முன் யோசனைப்படியே சகல காரியங்களும் நடை பெற்றன. ஆயினும், அந்தக் கள்ளப்பயலை அப்பொழுதே கொன்று விடாமல் விட்டது பெரும் முட்டாள்தனம்; என்றாள்.

சங்கர மேனன் :— பிரியே! அந்தப் போக்கிரிப்பயல் இறங்குந் தருணத்தில் அவனது நற்காலத்தின் பயனாக யாரோ வந்து விட்டார்கள். அதனால் தான் நான் உன்னை யழைத்துக்கொண்டு ஓட நேர்ந்தது. இன்றேல் அவன் அப்போதே எமலோகத்தை எட்டிப்பார்த்திருப்பான். இருந்தாலும் அவனை விட்டுவிடப் போவதில்லை; என்றான்.

ஸரஸ ரஞ்சனி :— ஆம். அவனை அவசியம் ஒழித்து விட்டே மறுவேலை பார்க்கவேண்டும். ஏன் நாம் நேற்று இராத்திரி யோசித்த ஏற்பாடு மிகவும் மேலானதல்லவா? என்றாள்.

சங்கர மேனன் :— ஆம், கண்மணீ! அவ்வாறே செய்யவேண்டும். மேலும், நாம் முன்னமே வைத்துக்கொண்டி

ருக்கிற ஸரஸரஞ்சனி சங்கரமேனன் என்ற மாறுபெயர் களை அந்த ஸ்ரீனிவாசப்பயல் அறிந்துகொண்டதால் இனி அப்பெயரை விட்டு வேறு பெயரிட்டழைக்கவேண்டும். ஒரு வேளை நீ என்னை அழைப்பதாயிருந்தால் நேற்று நான் சொல்லிக்கொடுத்த பெயரிட்டழைக்கவேண்டும். பெயர் ஞாபகமிருக்கிறதா ?

ஸரஸ ரஞ்சனி :— ஆ ! ஆ ! நன்றாய் ஞாபகமிருக் கிறது. தங்களை பரசுராம பிள்ளை யென்று அழைப்பேன். எனது மாறு பெயர் தங்களுக்கு ஞாபகமிருக்கிறதா ?

சங்கரமேனன்:— ஏன் உன் பெயர்தான் விஜயலக்ஷ்மி யாச்சுதே. நான் இதைக் கூட மறந்துவிடும்படியான மூட மாயிருந்தால் இந்தத் தொழிலில் இறங்குவேனா ? என்று கூறிவிட்டு அங்கிருந்த ஒரு அறைக்குள் புகுந்து சிறிது நேரம் சென்று வெளியே வந்து ரமணீ! இப்போது எனது உருவம் எவ்விதமிருக்கிறது பார்த்தனையா? இந்நிலைமையில் என்னை யாராவது அறிந்து கொள்ள முடியுமா ? என்றான்.

ஸரஸரஞ்சனி:— ஒரே தாவாய்த் தாவி அவனைத் தழு விப் பிடித்துக்கொண்டு துரையே ! தங்களின் ஒப்பற்ற வன்மையே வன்மை. தங்களோடு சதா பழகும் நானே அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை என்றால், பிறர் அறிந்து கொள்வது எங்ஙனம் ? இப்போது தங்களைப் பார்த்தால் வீதிகளில் அலைந்து திரியும் அசல் நாடோடி யைப்போல் தோன்றுகிற தென்றாள்.

சங்கரமேனன்:— பேஷ்! அப்படித்தானிருக்கவேண்டும் என்று கூறிவிட்டு உடனே அப்பெண்ணுக்கும் தன் வேடத்திற்குத் தகுந்தவாறு ஒரு பிச்சைக்காரி போல வேடம் போட்டான். பிறகு இருவரும் வெளியே சென்றூர்கள். அப்போது சுமார் இரவு 9—மணியிருக்கும். தெருக்களில் அதிகமான ஜனங்கள் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். அங்கங்கே விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. பிச்சைக்கார வேடமணிந்த மனிதன் அப்பெண்ணருகில் நெருங்கி, அவள் செவியண்டை தன் வாயை வைத்து மெதுவாகப் பெண்ணே! அந்தத் திருட்டுப் பயல் ஸ்ரீனிவாசன் இவ் வழியாகத்தான் வருவான். நாம் அவனைப் பின் தொடர்வோம்; என்று கூறிவிட்டு தெரு வழியே முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டு மெதுவாகப் போய்க் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் ஸ்ரீனிவாசன் வேகமாக இவர்களுக்குப் பின்னுல் வந்து கொண்டிருந்தான். அவன் வருவதைக்கண்ட வேடமணிந்த மனிதன், அப்பெண்ணினிடம் கண்மணீ! அதோ வருகிறுன் பார். அவன் தான் அந்தப் போக்கிரிப் பயல் ஸ்ரீனிவாசன். ஆயினும், அவன் தற்போது தன் உண்மை உருவத்தோடிராமல் வேறு வேடமணிந்திருக்கிறுன். இருப்பினும் நீ அவனது கூரிய வளைவான நாசியை அடையாளம் வைத்துக்கொள். நன்றுய்க் கவனித்துப் பார்; என்றுன். அப்பெண் ஸ்ரீனிவாசனைச் சிறிதுநேரம் கூர்ந்து நோக்கிய பிறகு ஓ! பேஷ்! இனி எத்தனை வருடங்களானபோதிலும், எவ்வித உருவத்தோடிருப்பினும் இவனைக் கண்டுகொள்ள என்னுல் இயலும்; என்றுள். இதற்குள்

ளாக ஸ்ரீனிவாசன் இவர்களைக் கடந்து சென்றான். நாடோடிபோல் வேடமணிந்த மனிதன் பெண்ணே! சீக்கிரம் வா. துஷ்டப்பயல் நம்மை ஏமாற்றிவிட்டுப் போய் விடுவான். நாம் அவனை விடாமல் பின்தொடரவேண்டும்; என்று கூறி இருவரும் ஸ்ரீனிவாசனை விடாமல் தொடர்ந்து சென்று, அவன் நின்றால் தாங்களும் பக்கத்திலுள்ள வீடுகளில் பிச்சைச்சாதம் வாங்குகிறவர்களைப்போல் அபிநயித்து நிற்பதும் ஸ்ரீனிவாசன் சென்றால் அவனைத் தொடர்ந்து நடப்பதுமாக அவனைப் பின்பற்றிச் சென்றார்கள். ஸ்ரீனிவாசன், இவர்கள் தன்னைத் தொடர்ந்து வருவதைக் குறித்து சந்தேகித்து அதை நன்றாய்ப் பரீட்சிக்கும் பொருட்டு வேண்டுமென்றே நான்கைந்து இடங்களில் நின்று நின்று சென்றான். பிச்சைக்காரர்போல் வேடமணிந்த மனிதனும் பெண்ணும் ஸ்ரீனிவாசன் நிற்கும்போதெல்லாம் தாங்களும் நின்று பிச்சை கேட்பதாய்ப் பாவனைகாட்டி அவனைப் பின்பற்றிச் சென்றார்கள்.

இதனைக்கண்ட ஸ்ரீனிவாசன் தனது விரோதிகள் தனது இருப்பிடம் முதலியவைகளை யறிந்து கொள்ளவே தன்னைப் பின்பற்றி வருவதாக நிச்சயித்துக்கொண்டு அவர்களை ஏமாற்றிவிட நினைத்து நேராய் தனது வீட்டுக்குச் செல்லாமல் தனது வீட்டிற்கு முன்னாலேயிருக்கும் தனது சிநேகிதன் வீட்டில் நுழைந்துகொண்டால், தனது விரோதிகள் அதையே தனது வீடென்றெண்ணித் திரும்பிப்போய் விடுவார்கள் என்று யோசித்துக்கொண்டு அவ்விதமே ஒரு வீட்டில் நுழைந்துவிட்டான். அதனைக் கண்ட வேடமணிந்த மனிதன் ஆ! திருட்டுப்பயல்! என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்?

உனது தகப்பனும் பாட்டனும் ஒருங்கே சேர்ந்து வந்தாலும் நான் ஏமாறுகிற பேர்வழியல்ல. உனது வீட்டை நான் முன்னுடியே அறிந்திருக்கிறேன். என்று தனக்குத் தானே கூறிவிட்டு தன் அருகில் இருக்கும் கன்னிகையைப் பார்த்து பெண்ணே! பார்த்தாயா அந்தப் போக்கிரிப்பயல் நம்மை முழுதும் ஏமாற்றி முட்டாளாக்கப் பார்க்கிருன். அவன் நுழைந்த வீடு உண்மையில் அவனுடையதல்ல. நாம் பின் தொடர்ந்து வருவதை அவன் எப்படியோ அறிந்துகொண்டு, நம்மை ஏமாற்றவே வேறு வீட்டில் நுழைந்திருக்கிருன். அவனது வீடு முன்னமே எனக்குத் தெரியும். எதற்கும் நாம் அந்த வீட்டண்டை சென்று பதுங்கியிருந்தால் அவனது பண்டவாளம் வெளிப்பட்டுப் போகிறது. என்று கூறிக்கொண்டே அப்பெண்ணையும் அழைத்துக் கொண்டு சிறிது தூரத்துக்கு அப்பாலுள்ள ஸ்ரீனிவாசன் வீட்டண்டை சென்று, அவன் வீட்டுக்கு எதிர் வீட்டுத்திண்ணையில் சற்று இருட்டானவிடத்தில் பதுங்கிக்கொண்டு ஸ்ரீனிவாசன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இங்கே சினேகிதன் வீட்டில் நுழைந்த ஸ்ரீனிவாசன் சிறிது நேரத்துக்குப்பிறகு வெளியே வந்து வீதியின் இருபுறமும் நன்ருய்ப் பார்த்து ஆ! நமது உளவை அறிய வந்த திருட்டுப்பயல்கள் முற்றிலும் ஏமாற்றப் பட்டுப்போய் விட்டார்கள். என்று தனக்குள் நினைத்துத் திருப்தியடைந்தவனுய் தனது வீட்டை நோக்கிச் சென்று கதவைத் தட்டினுன். அதைக்கண்ட பிச்சைக்கார வேடமணிந்த மனிதன்

பெண்ணே! அதோ பார் அந்தப் பக்கரப் பயல் வந்து கத வைத் தட்டுகிறுன். நம்மை முற்றிலும் ஏமாற்றி விட்டோ மென எண்ணி அவன் மனப்பால் குடித்துக்கொண்டிருப் பான். இப்படிப்பட்ட தப்பறியும் எருமைகளை எவ்வளவு வேண்டுமானுலும் மேய்க்கலாம், என்று கூறிவிட்டு கண் மணி! அந்தத் திருட்டுப்பயல் நாம் முன்னிருந்த கோட்டை வீதி 685 நெம்பர் வீட்டுப் பக்கம் சென்று, அங்கு நம்மைப் பற்றி ஏதாவது உளவகப்படுமாவென்று பார்த்திருக்கிறுன். அவன் இவ்வழியாக அவ் வீட்டுப் பக்கம் சென்றதை நான் சாயந்திரமே பார்த்தேன்; என்றுன்.

* * * * * * * *

இச்சம்பவம் நடந்த மறுநாள் காலை லாயர்போல உடை யணிந்த ஒரு மனிதர் தெருவழியே போய்க்கொண்டிருந் தார். அவர் தெருவின் இருபுறங்களிலுமுள்ள வீடுகளில் அங்கங்கே கட்டப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகளைப் பார்த்த வண்ணம் சென்றுர். அவர் இவ்வாறு சிறிது தூரம் போனதும் தா—து—பெ—கொ—செட்டியார் பேங் என்ற விளம்பரப் பலகையைக் கண்டதும் மீண்டும் தெருவழியே செல்லுவதை நிறுத்தி அந்தப் பாங்கிக்குள் நுழைந்து உள் ளே சென்றுர். அங்கு கூடத்தில் ஒரு சிறிய பஞ்சு மெத் தைமேல் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரது உடப்பு நன்றுய்ப் பழுத்த வெள்ளரிப் பழம்போல் சிவப்பாயிருந் தது. தலை மழுங்க மொட்டையிடப்பட்டிருந்தது. தேக மெங்கும் கட்டுக்கட்டாய் விபூதியணிந்திருந்தார். அவருக் குப் பக்கத்தில் ஒரு பெரிய இரும்புப் பெட்டியும் முன்னுல் ஐந்தாறு பெரிய புஸ்தகங்களும் கட்டப்பட்ட ஐந்தாறு

பெரிய புஸ்தகங்களும் கட்டப்பட்ட ஐந்தாறு ஏட்டுப்பிரதிகளும் இருந்தன. அவரது இடது புறத்தில் இரண்டு பேர் உட்கார்ந்து என்னவோ எழுதிக்கொண்டிருந்தனர். அந்தப் பாங்கிக்குச் சொந்தக்காரரான மெத்தைமேல் உட்கார்ந்திருந்த செட்டியார், லாயர் வருகையைக் கண்டதும் அவரை உபசரித்து நாற்காலியில்உட்காரும்படி செய்து அவரை யார் என்றும், எதற்காக வந்திருக்கிறாரென்றும் வினவினார். அதற்கு லாயர் ஐயா செட்டியாரே! நான் கவர்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் உத்தியோகஸ்தன். இந்நகரத்திலுள்ள ஒவ்வொரு பாங்கிக்காரர்களும் எவ்வளவு லேவாதேவி செய்திருக்கிறார்களென்றும் கணக்குகள் சரியாய் வைக்கப்பட்டிருக்கின்றனவா வென்றும், சோதித்தறிந்து கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட்டு செய்ய என்னை நியமிக்கப்பட்டிருக்கிறது. நான் உங்கள் கணக்குகளைப் பரிசோதிக்கவேணுமென்றான். அதற்கு செட்டியார் தங்கள் இஷ்டப்படியே செய்வதில் தடையில்லை; என்று புஸ்தகங்களை யெடுத்து அவர் முன்னால் வைத்தார். லாயர் அப்புஸ்தகங்கள் ஒவ்வொன்றையும் முதல் இருந்து கடைசிவரை சோதித்துப் பார்த்து தமக்கு வேண்டிய சில முக்கிய விஷயங்களைத் தமது சட்டைப்பையிலிருந்த நோட்டுப் புஸ்தகத்தில் குறித்துக்கொண்டு ஐயா செட்டியாரே! நான் பார்க்கவேண்டியவைகளை யெல்லாம்பார்த்தாய் விட்டது. போய் வருகிறேன். என்று கூறிக்கொண்டு வெளியே சென்றார். அவர் அவ்வாறே அந்நகரத்திலுள்ள ஒவ்வொரு பாங்கியையும் சோதித்துத் தமக்கு வேண்டியவற்றைக் குறித்துக்கொண்டார்.

## 24-வது அத்தியாயம்.

# ஸ்திரீசக்திப் பிரபாவம்.

———(o)———

காலை சுமார் 9 மணிக்கு மலேயா தேசத்தவளான ஒரு சீமாட்டி விஜய நகரத்தின் பிரதானமான தெருவொன்றில் போய்க்கொண்டிருந்தாள். அவள் உருக்கிவார்த்த பசும்பொன் பிரதிமைபோன்ற அழகு வாய்ந்தவளாயிருந்தாள். அவளது உடைகள் உயர்ந்தவைகளாயும் நாகரீகமானவைகளாயும் இருந்தன. அவளது இடதுகையில் பணம் நிறைந்த பட்டுப்பையொன்றிருந்தது. பாதையில் சென்ற அச்சீமாட்டி அங்குள்ள ஒரு கடையில் நுழைந்து தனக்குவேண்டிய சாமான்களைப் பார்த்துக்கொண்டும், அவற்றின் விலையைக் கேட்டுக்கொண்டும், அடிக்கடி தெருவைப் பார்த்தவண்ணமுமாயிருந்தாள். அப்போது அவள் இருந்த கடைக்கு எதிர்வீட்டில் இருக்கும் ஸ்ரீனிவாசன் கதவை மூடிக்கொண்டு எங்கோ வெளியில் சென்றான். அச் சீமாட்டியும் தனக்குவேண்டிய இரண்டொரு சாமான்களை வாங்கிக்கொண்டு தெருவழியே சென்றாள். அப்போது பாதையில் மோட்டார் வண்டிகளும் குதிரை வண்டிகளும் மாட்டுவண்டிகளும் ஏராளமாய் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருந்தன. அதனால் ஜனநடமாட்டத்திற்கு மிக்க இடைஞ்சலாயிருந்தது.

ஆகையால் அச்சீமாட்டி பாதையின் ஒரு ஓரமாகவே மெதுவாய்ச் செல்லவேண்டியிருந்தது. இவ்வாறு அவள் சிறிதுதூரம் சென்றதும், எதிரே ஒரு குதிரைவண்டி வந்துகொண்டிருந்தது. அதில் கட்டப்பட்ட குதிரை, ஓட்டுகிறவன் கைக்கு அடங்காமல் மிக்க வேகமாகவும் தாறுமாறாகவும் பின்னால் தள்ளி இடக்கு செய்த வண்ணமும் வந்து கொண்டிருந்தது. ஓட்டுகிறவன் தன்னால் ஆனவரை அதைச் சரியாய் ஓட்ட முயன்றும் முடியவில்லை. அப்போது அவ்வண்டியின் ஓரமாக வந்துகொண்டிருந்த ஒரு மாட்டுவண்டியில் கட்டப்பட்ட எருதுகள், வெருண்டு அச்சீமாட்டி வந்த ஓரமாகவே ஓடிவந்தன. அச்சமயம் சீமாட்டியும் ஞாபகப்பிசகாகச் சற்று பின்னால் திரும்பி எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது இவள் ஓரமாக வந்துகொண்டிருந்த மாட்டு வண்டியின் நுகத்தடி முனை அச்சீமாட்டியின்பேரில் பட்டது. அதனால் அவள் வெட்டுண்ட மரம்போல் கீழே சாய்ந்தாள். அவள் உன்னதமான உடைகளுடனும் அழகிய பல அணிகளுடனும் புழுதி நிறைந்த பூமியில் கிடந்த நிலைமை மிக்க பரிதாபகரமாயிருந்தது. அச்சமயம் அவளுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த நமது ஸ்ரீனிவாசன், அச்சீமாட்டியின் நிலைமையைக் கண்டு பெரிதும் இரக்கமும் தயையும் உடையவனாய் சீமாட்டி அருகில் நெருங்கி கைலாகு கொடுத்து மெதுவாக அவளை எடுத்து நிறுத்தி அம்மா! ஏதாவது அடி பலமாய்ப் பட்டுவிட்டதா? என்று கேட்டான்.

அச்சீமாட்டியும் சிறிதுநேரத்தில் தான் கீழேவிழுந்ததினால் ஏற்பட்ட திகைப்பு நீங்கியவுடன் ஸ்ரீனிவாசனை

நோக்கி, ஐயா! வந்தனம். தங்களால் இன்று என் உயிர் காப்பாற்றப்பட்டது. இந்த உபகாரத்தை நான் என்றும் மறக்கமாட்டேன். பரோபகாரியாகிய தங்களைக்கடவுள் ஆசீர்வதிப்பார். எனக்கு விலாவிலும் புஜத்திலும் நன்றாய் அடிபட்டுவிட்டதால் என்னால் நடக்கமுடியவில்லை. தயவு செய்து ஒரு வண்டி அமர்த்தி என்னை வீட்டில் கொண்டு போய்ச்சேர்த்தால் தங்களுக்குப் பெரும்புண்ணியம் கிடைக்கும். நான் ஒருவர் துணையுமின்றி ஒண்டியாய் வந்ததின் பலனை அனுபவித்துவிட்டேன். எனக்குச் செய்யும் இந்த உபகாரத்தினிமித்தம் தங்களுக்கு அநேக வேலைக்கெடுதல்கள் ஏற்படலாம். இருந்தாலும், எனக்காகத்தயவுசெய்ய வேண்டும்; என்றாள்.

இயற்கையிலேயே இரக்கமும் பரோபகாரமுமுடையவனான ஸ்ரீநிவாசனிடம் தனது கஷ்டத்தை நிவர்த்திக்கும்படி ஒருவள் கேட்டுக்கொள்ள—அதிலும் யௌவன லாவண்ய சுகுமாரி ஒருவள் தனது தீஞ்சுவையுள்ள கிள்ளைமொழிகளால் கொஞ்சிக் கொஞ்சித்தன் கஷ்டத்தை நிவர்த்திக்கும்படி கேட்டுக்கொள்ள அவன் அவளுக்குதவி புரியாமலிருப்பானா? அவளுக்குதவி புரியாமலிருக்கத்தான் அவனால் முடியுமா? அல்லது வேறு எந்த மனிதனால் தான் இயலும்? அப்படி இயலுமென கூறுபவர்கள் தங்கள் உள்ளத்தை மறைத்துக்கூறும் கள்ளத்தனமுடையவர்களேயன்றி வேறல்லர். எத்தகைய கன்னெஞ்சர்களும் கூட கஞ்சமலர் மேனியரான இளமடந்தைகளின் கொஞ்சு மொழிக்கிரங்குவார்களென்பதற்கையமுண்டோ? தங்கள்

வாணுளில் உபகாரமென்பதையே செய்தரியாத கன்னெஞ்சர்களையும் பரமலோபிகளையுங்கூட ஒப்பற்ற வனப்புவாய்ந்த இளமடந்தைகள் தங்கள் இங்கித வார்த்தைகள் ததும்பிய வேண்டுகோளால்—தங்களது ஸ்திரீ சக்திப்பிரபாவத்தால்—மயக்கித் தமக்குத் தொண்டுபுரியச் செய்தல் சாத்தியமாகும். ஆனல் சில போலி வைராக்கிய சீலர்கள் என் தங்கைபோல் பாவித்து உபகாரம் செய்தேன் என்பர் இதுமுற்றிலும் பொய்யென்பது நிச்சயம். ஒரு ஆடவன் ஒரு அன்னிய கன்னிகையை என்னதான் தங்கைபோலப் பாவித்தாலும் அது தன்னுடன்பிறந்த—ஒரு தாய் வயற்றிற்பிறந்த—தன் தங்கையிடத்துப் பழகும் களங்கமற்ற உள்ளம்போல் உத்தமமானதாக —பரிசுத்தமானதாக—ஒருபோதும் இருக்கமாட்டாது.

ஆயினும் சில உண்மை வைராக்கியசீலர்களுமிருக்கலாம். இருப்பினும், அவர்களின் உள்ளமும் ஸ்திரீ சக்திப்பிரபாவத்தால் பல சமயங்களில் தாக்கப்பட்டும் பிறகு அவர்களின் திடச்சித்தத்தால் முறியடிக்கப்பட்டிருக்க வேண்டுமேயொழிய அச்சக்தியால் தாக்கப்படாத உள்ளமுடையவர்கள் தரணியில் அரிது. பொதுவாக ஆடவர்களிடத்தும் வயது முதிர்ந்த—கிழப்பருவமடைந்த—மங்கையர்களிடத்தும் நாம் காட்டும் அன்பையும் அபிமானத்தையும், அவர்களுக்குச் செய்யும் உதவியையும் விட சிங்கார ரமணீ ரத்நங்களாகிய இளமடந்தைகளிடத்துக் காட்டும் அன்பும் கருணையும் அவர்களுக்குச் செய்யும் உபகாரமும் பலமடங்கு அதிகப்பட்டிருக்குமென்பது அனுபவத்தில் யாவருமறிந்த விஷயம். ஆகவே நமது ஸ்ரீனிவாசன் மிகு சுந்தராலங்

கிர்தமுடைய அச்சீமாட்டியின் வேண்டுகோளுக்கிணங்கிஞனென்பதை நாம் கூறவேண்டியதில்லை. நிற்க.

ஸ்ரீநிவாசன்,—சீமாட்டியின் வேண்டுகோளின் படி உடனே ஒரு குதிரை வண்டியை வாடகைக்கு அமர்த்திச் சீமாட்டியை ஏற்றுவித்துத் தானும் பின்னுல் ஏறிக்கொண்டான். வண்டிக்காரன் சீமாட்டியை நோக்கி அம்மா! வண்டியை எந்தத் தெருவுக்கு ஓட்டவேணுமென்ருன், அதற்குச் சீமாட்டி அப்பா! மேட்டுத்தெரு 157 நெ. கதவிலக்கமுள்ள வீட்டிற்கு விடு என்ருள். உடனே வண்டி புறப்பட்டு 15 நிமிஷத்தில் அவ்வீட்டருகேநின்றது. ஸ்ரீனிவாசன் கீழேயிறங்கிக் கைலாகு கொடுத்து சீமாட்டியை மெதுவாய் இறக்கினுன். சீமாட்டி வண்டிக் காரனுக்கு வாடகை கொடுத்தனுப்பினுள். ஸ்ரீனிவாசன் சீமாட்டியை நோக்கி அம்மா! நீங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள். நான் போய் வருகிறேனென்ருன். அதற்குள் சீமாட்டி ஐயா! கொஞ்சம் பொறுங்கள்' எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த உத்தமராகிய தாங்கள் என் வீட்டருகில் வந்தும் உள்ளே வந்து சிறிது சிரமபரிகாரம் செய்துகொள்ளாமலும், நானும் எனதுகணவரும் செய்யும் உபசாரத்தை ஏற்றுக் 'கொள்ளாமலும் போவதென்ருல், அது கொஞ்சமும் சரியல்ல; என்ருள். ஸ்ரீனிவாசன் அம்மா; மனிதர் ஒருவர்க்கொருவர் செய்யவேண்டிய கடமையை நானும் செய்தேனேயன்றி அதிகமாய் ஒன்றும் செய்துவிடவில்லை. ஆயினும், தங்கள் இஷ்டத்தை நான் மறுக்கவில்லை, நடவுங்கள் உள்ளேபோகலாமென்ருன். உடனே இருவரும் அவ்வீட்

டின்கதவருகில் சென்றதும் சீமாட்டி கதவைத்தட்டினுள். உடனே கதவு திறக்கப்பட்டது. இருவரும் உள்ளேயிருந்த கூடத்திற்குச் சென்றார்கள். பிறகு வெளிக்கதவு முன் போல் தாளிடப்பட்டது. அச்சீமாட்டி சற்று நொண்டி நொண்டி நடப்பதைக் கூடத்தில் நாற்காலியிலிருந்த சீமாட்டியின் கணவன் பார்த்து பெண்ணே! என்ன சம்பவித்தது; என்றார். சீமாட்டி தான் வெளியே சென்றதுமுதல் வீடுவந்து சேர்ந்தது வரை கூறி, இவரே எனக்கு இன்று பிராணதானம் செய்த கர்த்தா என்றாள். அதைக்கேட்ட பிரபு முதலில் அதிக வருத்தமும் பிறகு சந்தோஷமும் அடைந்தவராகி ஐயா! தங்களின் பரோபகாரகுணம் மிக்க மேலானது. இன்று தங்களால் என் மனைவி உயிர்கொடுக்கப்பெற்றாள். தயவுசெய்து நாற்காலியிலுட்காருங்கள் என்று உபசரித்துத்தமது சமையல் காரர்களைக்கூவி சாமிகளே சீக்கிரம் பலகார்மும் காபியும் கொண்டுவந்து மேஜைமேல் வையுங்கள் என்றார். உடனே ஒருவர் காபியும் மற்றவர் சிற்றுண்டியும் கொண்டுவந்து மேஜைமேல் வைத்தார்கள். பிரபு ஸ்ரீனிவாசனை நோக்கி ஐயா! நீங்கள் ஒன்றும் சந்தேகப்படவேண்டாம். நாங்கள் சைவ வேளாளர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இப்பதார்த்தங்கள் யாவும் பிராமணர்களால் தயாரிக்கப் பட்டவை. இதோ இவர்களிருவரும் அசல் சைவ பிராமணர்கள் என்று கூறி, ஸ்ரீனிவாசனை காபி அருந்தும்படி ரொம்பவும் கேட்டுக்கொண்டார். சீமாட்டியும் வேண்டிக்கொண்டாள். ஸ்ரீனிவாசன், அவர்களது இஷ்டத்திற்கிணங்கி காபியை யருந்தினுன். அச்சமயம் அவனுக்கு இருபக்கத்திலு மிருந்த பிராமண வேடம

ணிந்த ஆட்களில் ஒருவன் ஸ்ரீனிவாசன் மேல் பாய்ந்து நாற்காலியோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டான். மற்றவன் அவனது இருகரங்களையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். அச்சம்பவம் ஸ்ரீனிவாசனுக்கு மிகுந்த திகிலை யுண்டாக்கியது. ஓ நாம் மறுமுறையும் ஏமாற்றப்பட்டுப் போய்விட்டோம். இன்று இந்தப் பாவிகள் நிச்சயம் நம்மைக்கொன்றே விடப் போகிறார்கள். இனிப் பிழைத்து நமது பெண்சாதியையும் பிள்ளையையும் பார்க்கப் போவதில்லை. ஆகையால் நம்முயிர் இருக்கும்வரை இவர்களுடன் போராடவேண்டுமென்று நிச்சயித்துப் பலமாய்த் திமிறிக்கொண்டு எழுந்தான். அதனால் அவ்விருவருடைய பிடிப்பும் ஏகதேசம் நழுவிவிட்டது. இதைக்கண்ட பிரபு ஓ! ஓ! மோசம் வந்துவிட்டது. என்று கூறிக் கொண்டே ஸ்ரீனிவாசன்மேல் பாய்ந்து பலமாகப் பிடித்துக் கொண்டான். ஆட்கள் இருவரும் மீண்டும் ஸ்ரீனிவாசனது கால் கரங்களைப் பலமாகப் பற்றிக்கொண்டார்கள். சீமாட்டி வீட்டிற்குள் ஓடி ஒரு கயிற்றை யெடுத்துவந்து ஆட்களிடத்தில் கொடுத்து ஸ்ரீனிவாசனது கால் கரங்களைக் கட்டச்சொல்லி அடா துப்பறியும் நாயே! நீயா எங்களைப் பிடித்துக் கொடுப்பவன்? கேவலம் ஒரு பெண்ணின் சாகசத்தை உணர முடியாத மூளையற்ற நீயா எங்களைப் பிடித்துக் கொடுப்பவன்? என்று கூறிக்கொண்டே தனது கையிலிருந்த துணிப்பந்தை ஸ்ரீனிவாசன் வாயில் நன்றாய்த் திணித்துவிட்டதுமன்றி ஒரு துணியால் அவனது கண்களையும் இறுகக்கட்டிவிட்டாள். பிரபு வேடமணிந்தவன் ஸ்ரீனிவாசனை நோக்கி அடே துப்பறியும் பேயே! முன் தப்பிப்போனபடி இந்தத்

தடவை தப்பமுடியாது. வெங்கிடுபதி கவுண்டரைக் கொன்றவர்களைக் கண்டு பிடித்துத் தண்டனையடையச் செய்விக்கிறவன் நீயா? நீ அப்படிச் செய்யுமுன் நாங்கள் உன்னையே எமதண்டனைக்குள்ளாகச் செய்கிறோம். இப்போது உனக்கு ஐந்து நிமிஷம் சாவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் உனது இஷ்டதெய்வத்தை ஸ்தோத்திரம் செய்துகொள். என்று கூறிவிட்டு ஆட்களை நோக்கி அடே இவனைத்தூக்கிக் கொண்டு நடவுங்கள் என்றான்.

அவ்வாறே ஆட்கள் ஸ்ரீனிவாசனைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். ஸ்ரீனிவாசனது கண்கள் கட்டப்பட்டிருப்பினும் தன்னை அவ்வீட்டின் பின்புற வழியாக எங்கோ கொண்டு போகிறார்களென்று அறிந்து கொண்டான். ஒருவேளை தன்னை அப்படியே கிணற்றில் போட்டு விடுவார்களோவென அவன் மனம் நடுங்கியது. கூச்சலிடலாமென்றாலும் வாயில் துணி அடைக்கப்பட்டிருக்கிறது. கண்களோ கட்டப்பட்டிருக்கின்றன. அவன் மனதில் உதிக்கும் அளவற்ற யோசனைகளையும் துக்கங்களையும் வெளியிட முடியாதவனாகி வேதனையிலாழ்ந் திருந்தான். அந்தோ! கடவுளே! அன்றாவது நான் வாத்தாமததமானால் உடனே அடியிற் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேரவேண்டும்; என்று எழுதி வைத்து வந்ததினால் கண்ணப்பன் வந்து என் உயிரைக் காத்தான். இன்று தெய்வத்தையன்றி எனக்குத் துணை செய்வாராருமில்லை. அச்சோ! இப்படிப் பட்ட அகால மரணத்திற்கா நான் ஆளாயினேன்? என்று எண்ணிஎண்ணி மனம் நைந்துருகினான். இதற்குள் அவ

னைத் தூக்கிக்கொண்டு போனவர்கள் நின்று கதவைத் திறந்ததுபோன்ற சத்தம் கேட்டது. ஸ்ரீனிவாசன், நம்மை இந்த வீட்டிற்குள் போட்டுக் கதவைப் பூட்டிவிடுவார்கள் போலிருக்கிறது; என்றெண்ணினான். உடனே தன்னைத் தூக்கிக்கொண்டு இருப்பவர்கள் அவ்வீட்டினுள் நுழைந்து தன்னைத் தரையில் வைப்பதாக உணர்ந்தான். அத்தருணம் அவர்கள் கூடவே வந்த பிரபு அடே கதவை மூடி சங்கிலி போடு என்றான். ஆட்கள் வெளியே வந்து கதவை மூடிச் சங்கிலி போட்டார்கள். பிரபு ஏன் தாமதிக்கிறீர்கள்? சீக்கிரம் ஆகட்டும் என்றான். சிறிது நேரத்தில் ஸ்ரீனிவாசன் இருந்த வீட்டிற்குள் புகை சூழ்ந்தது. மூச்சுவிட முடியாமல் தத்தளித்தான். ஐயோ! தெய்வமே! வீட்டைச் சுற்றிலும் நெருப்பு வைத்துவிட்டார்கள் போலிருக்கிறதே. இனி நான் இறப்பது நிச்சயம் என்று நினைத்துத் துடிதுடித்தான். சிறிது நேரத்தில் மேற்கூரைகள் வெந்து நெருப்புப் பொறிகள் அவன் மேல் விழுந்தவண்ணமிருந்தன. நெருப்பின் வேகத்தாலும் புகைச்சூழலாலும் ஸ்ரீனிவாசன் எமனுலகுக்குச் செல்லும் பாதையில் போய்க் கொண்டிருக்கிறான். நிற்க.

## 25-வது அத்தியாயம்.

# தவஸ தப்பியது தம்பிரான் புண்ணியம்.

நெருப்பு எரியும் வீட்டிற்குள் ஸ்ரீனிவாசன் அகப்பட்டுக்கொண்டு இறக்குந் தருவாயிலிருக்கிறானென்று மேலே கூறினோமல்லவா? இதற்குள் அவன் இறந்து விட்டிருந்தாலும் இருக்கலாம். எரியும் இல்லத்தைச் சூழப் பக்கத்து வீட்டுப் பிரஜைகள் பலர் கும்புகூடிக் கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரது கரங்களிலும் தடிகளும் தண்ணீர்த் தொட்டிகளும் தவராமலிருந்தன. அவர்கள் எரியும் வீட்டைச் சூழவிருக்கும் தமது இல்லங்களைப் பாதுகாப்பதில் முனைந்திருந்தார்களேயொழிய நெருப்பையணைக்க முற்படவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் நெருப்பு எப்படிப்பற்றியது? எப்போது பற்றியது? யார் வைத்திருப்பார்கள்? என்ற வினாக்களைக்கேட்டுக்கொண்டேயிருந்தனர். ஆயினும், அவர்களின் வினாக்களுக்குத் தக்க விடையிறுப்பாராருமில்லை. இவ்வித அல்லோல கல்லோலத்தினிடையில், ஒரு மனிதன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வேகமாக ஓடிவந்து எரியும்வீட்டின் வாயில் முன்

னின்றான். அப்போது கதவிலும் நிலையிலுங்கூடச் சிற்சில விடங்களில் நெருப்புப்பற்றியெரிந்தது. இருப்பினும் அவன் அதை லக்ஷியம் செய்யாமல் சீக்கிரம் கதவின் சங்கிலியைக் கழற்றிக் கதவைக் காலாலுதைத்தான், அவ்வுதையால் கதவு படீரெனத் திறந்துகொண்டது. அறைக்குள் புகை ஏக மாய் நிறைந்திருந்தது. அம்மனிதன் புகைச் சூழலை இரண்டொரு நிமிஷம் உற்று நோக்கினான். பிறகு திடீரென்று உள்ளேபுகுந்து மூட்டைபோல் சட்டித்தள்ளப்பட்ட ஸ்ரீனிவாசனைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடிவந்தான். அவனது உடையிலும் சிகையிலுங்கூட நெருப்புப் பற்றிக்கொண்டது. ஆயினும் அவன் அதை லக்ஷியம் செய்யாமல் ஜனங்களை விலக்கிக்கொண்டே சிறிதுதூரம் சென்று அங்கு நின்றிருந்த குதிரை வண்டியில் ஸ்ரீனிவாசனைப் படுக்க வைத்து தன்மேல் பற்றிய நெருப்பை தாமதமின்றித் தேய்த்தணைத்து விட்டுத் தானும் வண்டியில் ஏறினான். உடனே வண்டி வேகமாய் ஓடியது. அம்மனிதன் ஸ்ரீனிவாசனது கட்டுகளை அவிழ்த்து விட்டதுமன்றி, வாயில் அடைக்கப்பட்டிருந்த துணியையும் எடுத்து சுவாசம் திரும்பும்படியான சிகிச்சைகள் செய்து கொண்டே போனான். அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கு அம்மனிதனை யார் என்றும், யாரை எடுத்துக்கொண்டு போகிறானென்றும் தெரியாமையால் ஜனங்கள் அதை அறிந்துகொள்ளும் பொருட்டு, அவனைப் பின்தொடர்ந்து வண்டிவரை சென்றும், அம்மனிதன் எவ்விதமான பதிலும் கொடாமல் வண்டியை விட்டுக்கொண்டு வேகமாய்ப் போய்விட்டபடியால், ஜனங்கள் மீண்டும் அவனைத் தொடர்ந்து செல்லமுடியாதவர்களாகி நின்று

விட்டனர். சிறிது நேரத்தில் அம்மனிதன் ஏறிச்சென்ற வண்டி ஸ்ரீனிவாசன் வீட்டு வாயிலில் வந்து நின்றது. அம் மனிதன் வண்டியினின்றும் கீழே இறங்கி ஸ்ரீனிவாசனை மெதுவாய் எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் சென்று ஒரு படுக்கையில் படுக்கவிட்டுத் தன்னால் இயன்றவரை சைத்தி யோபசாரங்கள் செய்தான். நெடு நேரத்திற்குப் பிறகு சுமார் 5 மணிக்கு, பெரும்பாலும் ஒடுங்கிப் போயிருந்த அவனது சுவாசம் மெதுவாக வந்துகொண்டிருந்தது. மீண் டும் சில நிமிஷங்களில் சுவாசம தாராளமாக ஓடியாடியது. கண்களை மெதுவாகத் திறந்து பார்த்தான். ஆயினும் பேசு ம்படியான சக்தி ஏற்படவில்லை. பின்னும் சில நிமிஷங் களுக்குப் பிறகு தன் அருகிலிருந்த மனிதனை நோக்கி மெதுவாக, கண்ணப்பா! இப்போது நாம் எங்கேயிருக்கி ரோம் என்றான். அதற்கு கண்ணப்பன் நாம் இப்போது நமது வீட்டிலேயே இருக்கிறோம்; என்றான்.

ஸ்ரீனிவாசன்:—அக்கொலைகாரப் பயல்கள் எனது கை கால்களைக் கட்டி ஒரு வீட்டில் போட்டு நெருப்பிட்டு விட் டார்களே. அப்படியிருக்க யாரால் எப்படி நான் இங்கு கொண்டுவரப் பட்டேன்? என்றான்.

கண்ணப்பன்:—நெருப்பெரியும் வீட்டில் அகப்பட்டி ருந்த தங்களை நானே இங்கு கொண்டு வந்து சேர்த்தேன்; என்றான்.

ஸ்ரீனிவாசன்:— சந்தோஷத்தோடு கண்ணப்பனைத் தழுவிக் கண்ணப்பா! இரண்டாமுறையும் நீ என் உயிரைக்

காப்பாற்றினாய். நீ வெறக்குறைய இத்தொழிலில் பூரணபாண்டித்தியம் பெற்று விட்டாய் என்று நம்புகிறேன். நான் எரியும் வீட்டிற்குள் அகப்பட்டிருக்கிறேன் என்பதை நீ எவ்வாறு அறிந்து கொண்டாய்? என்றான்.

கண்ணப்பன் :— ஐயா! தங்களாலேயே நான் இத்தொழிலில் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்திருக்கிறேனென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. மேலும், தாங்கள் இதுவரை செய்திருக்கும் அநேக அபாரமான காரியங்களுக்கு நான் செய்த இக்காரியம் ஒரு தினைத்துணையும் ஈடாகாது. தங்களை அழைத்துக்கொண்டு போன ஸ்திரீயை நமது வீட்டிற்கு நெடுந்தூரத்திலேயே நான் சந்தித்தேன். அவளது உடையும் முக வசீகரமும் ஓர் சீமாட்டியென நம்பும்படியாகவே இருந்தது. ஆயினும், அவளது நடக்கையும் பார்வையும் எனக்குச் சரிப்படவில்லை. ஆகையால், அவள் மேல் எனக்குச் சந்தேகம் உதித்தது. எப்படியும் அவளைத் தொடர்ந்து போய் அவளது அந்தரங்கத்தை அறியவேண்டுமென்னும் ஆவல் உதித்தது. அவ்வாறே தொடர்ந்து போனேன். அவள் தெருவின் இருபுறங்களையும் பார்த்த வண்ணம் எங்கும் நில்லாமல் நமது வீட்டுவரை வந்தாள். வந்ததும் நமது வீட்டை ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு நமது வீட்டிற்கு எதிரிலிருக்கும் கடைக்குள் நுழைந்தாள். நானும் அதற்கடுத்த மற்றொரு கடையில் நின்று சாமான் வாங்குபவனைப் போல அபிநயித்துக் கொண்டே அவளது செய்கைகளைக் கவனித்தேன். அவள் ஒவ்வொரு சாமானையும் எடுப்பதும் அவற்றின் விலையைக் கேட்பதும்,

அடிக்கடி நமது வீட்டைத் திரும்பிப் பார்ப்பதுமாக வீண் கால ஹரணம் செய்துகொண்டிருந்தாளே ஒழிய சாமா னொன்றும் வாங்கினளில்லை. சிறிது நேரம் சென்றதும் தாங்கள் எங்கோ செல்லுமாறு வெளிப்புறப்பட்டுச் சென் றீர்கள். அப்போது அந்த ஸ்திரி தங்களைப் பார்த்தாள். உடனே அவள் இரண்டொருசாமான்களை வாங்கிக்கொண்டு கடையினின்றும் திரும்பித் தங்களைத் தொடர்ந்து வந்தாள். நானும் அவளைத் தொடர்ந்து வந்தேன். நான் அப்போது மாறுவேட மணிந்திருந்தபடியால் தாங்களும்கூட என்னைக் கவனிக்கவில்லை. குதிரையைக்கண்டு வெருண்டுவந்த மாட்டு வண்டி தன் ஓரமாக வருவதை அறிந்தும் விலகாமல் அவள் வேண்டுமென்றே பின்னல் திரும்பிப்பார்த்ததாக எனக்குத் தோன்றியது. ஏனெனில் அப்படிப்பட்ட ஆபத்தான சம யத்தில் அவள் பின்னல் திரும்பிப் பார்க்கும்படியான அப் படிப்பட்ட விசேஷமான சம்பவமொன்றும் அங்கு நடை பெறவில்லை. மேலும் வண்டியின் நுகத்தடிமுளை மெதுவாக மேலே பட்டிருக்க அதனல் அப்படி அலங்கோலமாய்க் கீழே வீழ்ந்ததும், நடக்கமுடியாதவாறு அடிபட்டதென்று கூறியதும் பெரும்பாலும் பாசாங்காயிருக்குமென்று எண் ணினேன். தாங்கள் அவள் கீழே விழுந்த பிறகே பார்த்தீ ராகையால் அவள் பாசாங்கைக் கவனிக்கவில்லை. தாங்கள் அவளை உபசரித்து வண்டிவைத்து அழைத்துக்கொண்டு போவதைக்கண்டு நானும் தொடர்ந்து வர எண்ணினேன். ஆனல் அங்கு அச்சமயம் வண்டி ஒன்றும் கிடைக்கவில்லை. வேறிடம் சென்று வண்டி அமர்த்தவும் சாவகாசம் கிடைக் கவில்லை. வழியில் ஒரு சமயம் வண்டி அகப்படலாமென்ற

உத்தேசத்தோடு தங்கள் வண்டியைத் தொடர்ந்து நடந்து வந்தேன். நான் எவ்வளவு வேகமாய் நடந்து வந்தும் சிறிது நேரத்தில் தங்கள் வண்டி என் கட்புலனுக்கு மறைந்தது. ஆயினும் எனக்கு வண்டியின் அடையாளமும் நம்பரும் தெரியுமாகையால் ஜனங்களை விசாரித்துக்கொண்டே பல வீதிகளைக் கடந்து வந்தேன். அப்போது தாங்கள் ஏறிச் சென்ற வண்டி எதிரே வந்துகொண்டிருந்தது. அதில் ஏறிக்கொண்டு போனவர்களை எங்கு கொண்டுபோய் விட்டாய் என்று நான் வண்டிக்காரனைக் கேட்டேன். அவன், மேட்டுத்தெரு 157 நெ. வீடு என்றான். நான், அவர்களை அவசியம் பார்க்கவேண்டியிருப்பதால் நான் அங்கு செல்ல வேண்டும்; நீ கேட்ட வாடகை கொடுக்கிறேன்; வண்டியைத் திருப்பென்றேன். அவன் ஒப்புக்கொள்ளவே சில நிமிஷங்களில் வண்டி மேட்டுத்தெரு 157 நெ. வீட்டின் முன் வந்து நின்றது. நான் கீழேயிறங்கி அவ்வீட்டு வாயிலண்டை சென்று கதவைத் தட்டினேன். பதில் இல்லை. மீண்டும் பலமுறை பலமாய்த் தட்டியும் பதிலில்லை. வண்டிக்காரன் ஐயா! சிறிது நேரத்திற்கு முன்புதான் வண்டியில் வந்த ஐயாவும் அந்த அம்மாளும் வீட்டிற்குள் சென்றதை நான் நன்றாய்ப் பார்த்தேன்; என்றான். எனக்குப் பெரிய சந்தேகம் உதித்தது. என்னமோ ஆபத்து நேர்ந்துவிட்டிருக்கிறதென்று எண்ணினேன். கதவு பலமாயிருந்தபடியால் கதவைப் பெயர்க்க என்னால் முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். அப்போது அவ் வீட்டின் பின்புறம் சென்று பார்க்கலாமென ஒரு யோசனை உதித்தது உடனே வண்டியில் ஏறிக்கொண்டு

அவ்வீட்டின் பின்பக்கத்திற்கு ஓட்டென்றேன். வண்டிக்காரன் ஓ! அதுவும் தூரமில்லை சமீபமே; என்று கூறிக்கொண்டே சிறிது நேரத்தில் வண்டியை அங்கு கொண்டு போய் நிறுத்தினான். அவ்வீட்டின் பின்புறத்திலிருந்த ஒரு சிறிய கூரைவீடு நெருப்புப் பற்றியெரிந்துகொண்டிருந்தது. ஜனங்கள் சுற்றிலும் கூட்டமாயிருந்தார்கள். நான் கூட்டத்தில் நுழையாமல் ஓரமாகவே சென்று அம்மாடியின் பின்புற கதவு திறந்திருந்தபடியால் வீட்டினுள்ளேசென்று பார்த்தேன். அங்கு ஒருவரையும் காணும். கூடத்தில் இரண்டு நாற்காலிகளும் ஒரு மேஜையும் இருந்தன. அதன்மேல் இருந்த சாமான்கள் எல்லாம் புரண்டு கீழேவிழுந்திருந்தன. சிற்றுண்டிகளும்கூடச் சிதறிக்கிடந்தன. இந்த சம்பவங்களைக்கண்டு என்னமோ பெரிய சண்டை நடந்திருக்கிறதென்று தீர்மானித்தவனாய் ஒரு வேளை முன் போலவே தங்களைக் கட்டி அக்கூரை வீட்டிற்குள் போட்டு நெருப்பிட்டிருப்பார்களோ என்றெண்ணினேன். உடனே சிறிதும் காலஹரணமின்றி ஓடி ஜனங்களை விலக்கிக்கொண்டு எரியும் வீட்டின் கதவைத் திறந்து உள்ளே பார்த்தேன். என் உத்தேசப்படியே அங்கு தங்களைக் கண்டேன். உடனே உள்ளே புகுந்து தங்களை எடுத்துக் கொண்டு வந்தேன் என்றான்.

ஸ்ரீனிவாசன், கண்ணப்பனின் சாமர்த்தியமான செய்கைகளைக் குறித்து உள்ளுற மகிழ்ந்தும், தான் அத்திருடர்களால் மறுமுறையும் ஏமாற்றப்பட்டதைக் குறித்து மிகுந்த வெட்கமும் வருத்தமும் உடையவனாய் படுக்கையை

விட்டெழுந்து நாற்காலியில் உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். அப்போது வழக்கப்படி கடிதம் கொண்டு வரும் தபாற்காரன் அன்று வந்த கடிதங்களைக் கொண்டு வந்து கொடுத்தான்; ஸ்ரீனிவாசன் வருந்திய மனத்தோடு ஒவ்வொரு கடிதமாக வாசித்துப் பார்த்தான். அதில் ஒரு கடிதம் அடியிற் கண்டவாறு வரையப்பட்டிருந்தது.

மேட்டுத்தெரு,
157. நெ. வீடு.

ஐயா! துப்பறியும் சிங்கமே! தங்களின் சாமர்த்தியத்திற்கும் ஆழ்ந்த அறிவிற்கும் அநேக வந்தனம்! உம்மைப் போலும் துப்பறிவதில் திறமை வாய்ந்தார் எவரும் இரார்! நான் முதல் தடவை ஊரைவிட்டோடிப்போகும்படி உன்னை எச்சரித்திருந்தும் கேளாமலிருந்தது உன்னுடைய முழு முட்டாள் தனத்தைக் காட்டுகிறதல்லவா? முதல் தடவை தவறிப் போனதை எப்படியும் இரண்டாம் தடவை செய்து முடித்துவிடுவதே என் வழக்கம். ஆனால் எப்படியோ இரண்டாம் தடவையும் தப்பிவிட்டாய். ஆயினும் உனது சாமர்த்தியத்தால் பிழைத்துக் கொண்டாயென்று எண்ண வேண்டாம். இக்கடல் சூழ்ந்த [illegible]சினியில் நீ இன்னும் சில காலம் கழிக்க வேண்டுமென்பது கடவுளின் கற்பனையாகையால் நீ பிழைத்தாய். முடிவாக ஒன்று கூறுகிறேன். இக்கடிதம் கிடைத்த 24-மணி நேரத்திற்குள்ளாக நீ இந்நகரத்தை விட்டு ஓடிவிட வேண்டும். இன்றேல், உனக்காக மும்மூர்த்திகளே முன்வந்து நின்றாலும் உன்னை முதற் பலியிடுவது நிச்சயம்.

இப்படிக்கு
**கஜேந்திரவீரன்.**

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை வாசிக்க வாசிக்கச் சொல்லொணா வெட்கமும், துயரமும், கோபமும் மாறி மாறி உதித்தன. சிறிது நேரம் அக் கடிதத்தைக் கையில் பற்றிய வண்ணம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்துவிட்டு, திடீரென்று எழுந்து கண்ணப்பா! ஒரு அவசர காரியமாக நான் சிங்களபுரம் செல்ல வேண்டும். வர சில நாள் தாமதமாகும். அதுவரை நீயும் கிருஷ்ணனும் நமது விரோதியைக் கண்டுபிடிக்கும் முயற்சியிலிருங்கள். என்று கூறிவிட்டுத் தனக்கு வேண்டிய இரண்டொரு சாமான்களை எடுத்துக் கொண்டு மாலை 6-மணி ரயிலில் ஊருக்குச் சென்றான்.

---

## 26-வது அத்தியாயம்.

---

# பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளை அருமை.

மேற்கண்ட அத்தியாயத்தில் கூறிய [illegible] நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஒரு நாள் விஜய நகரத்தின் தென் கோடியிலிருக்கும் கள்ளுக் கடை ஒன்றில் அநேக ஜனங்கள் கூடியிருந்தனர். அங்குள்ளவர்கள் பெரும்பாலும் குடித்து

வெறிகொண்டிருந்ததினால் ஜாதி வித்தியாசமின்றி நெருங்கிச் சல்லாபித்துக் கொண்டிருந்தனர். சிலர் ஒருவருக்கொருவர் சண்டை விளைவித்துக் கொண்டிருந்தனர். அதிகம் வெறியேறிய சிலர் வாயிலூற்றிய மத்யத்தை உள்ளே விழுங்க உணர்ச்சியற்றவர்களாய் எதிரேயுள்ளவர்களின் மேல் துப்பி ஏடாகூடம் செய்தனர். சிலர் காசு விளையாட்டு விளையாடிக் கலகம் விளைவித்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு அங்குள்ள ஜனங்கள் அல்லோலகல்லோலமாயிருக்கும் போது தெருவிலிருந்து கள்ளுக் கடையை நோக்கி அங்குள்ளவர்களை யெல்லாம் பார்த்துக் கொண்டே ஒரு வாலிபன் வந்தான் அவன் சிரசில் குட்டையான செம்பட்டை ரோமங்கள் ஏராளமாய் வளர்ந்திருந்தன. முகத்தில் அப்போது தான் மீசை தாடி சற்று வளர்ந்திருந்தது. அவனது உடைகள் சற்று பழையதாயும் அழுக்கடைந்ததாயும் இருந்தன. அவனது பார்வை சிறிது முரட்டுத் தனமுடையதாயிருந்தது. அவனது வார்த்தைகளும் நடையுடை பாவனைகளும் பார்க்க அவன் அன்னிய நாட்டில் நெடு நாள் வசித்தவனாகக் காணப்பட்டது. அவனுக்குச் சுமார் இருபது வயது இருக்கலாம். அவ்வாலிபன் அங்குள்ள ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டே வந்து கடைசியில் அப்போது தான் குடித்துவிட்டுக் குடுவையைக் கீழே வைத்த ஒருவனிடம் நெருங்கி சற்று குனிந்து நன்றாய் உற்றுப் பார்த்து ஆ! தந்தையே! இத்தனை நாட்களுக்குப் பிறகு நான் உங்களைச் சந்திக்கும்படியான பாக்கியம் பெற்றது எனது பெரும் புண்ணியம் என்று கூறி அம்மனிதனைக் கட்டித் தழுவிக் கண்களில் நீர் வடியக் கதறி அழுதான்.

அம்மனிதன் சிறிது நேரம் திகைத்துப்போய் யாரடா அது? எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே; என்றான். அதற்கு அவ்வாலிபன், தந்தையே! நான் உமது புத்திரனல்லவா? எனக்கு மண்டையன் என்று பெயர் வைத்து மகா செல்வமாய் வளர்க்க வில்லையா? உம்முடைய பெயர் மொரந்தையயல்லவா? எனது தாயார் இராமாயி அல்லவா? சுமார் பத்து வருடங்களுக்கு முன் ஒரு நாள் ஏதோ சச்சரவின் நிமித்தம் உங்களோடு கோபித்துக் கொண்டு நான் ஊரை விட்டு ஓடிப்போகவில்லையா? நான் அப்போது நமது ஊரில் பினங்குக்கு ஆள் சேர்த்துக் கொண்டிருந்த கங்காணியோடு சேர்ந்து அங்கே போய் இத்தனை வருஷகாலமாகத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அங்கே நான் பட்ட கஷ்டங்கள் அனந்தம். கடைசியில் ஒரு நாள் உங்களைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவல் உதித்தது. உடனே நான் துரையிடம் சென்று லீவ் வாங்கிக்கொண்டு புறப்பட்டு வந்தேன். வரும் வழியில் விசாரித்துக் கொண்டுவர நீர் கடையில் இருப்பதாகத் தெரிந்து இவ்விடம் வந்தேன். எனது அருமை தந்தையாகிய உம்மைக் கண்டேன். ஆனந்தம் கொண்டேன். என்றான்.

வாலிபன் வார்த்தையைக் கேட்ட அம்மனிதன் சந்தோஷத்தின் மேல் சந்தோஷம் கொண்டு ஓ! ஆம். சரியாய்ப் பத்து வருஷங்களுக்கு முன்— அதாவது விரோதி இருது வருஷமன்று குழந்தாய் நீ எங்களிடம் விரோதப் பட்டுக் கொண்டு ஓடிவிட்டாய். அடா கண்மணி! பெற்று

வளர்த்துப்பிரியமாய் வைத்திருந்த எங்களைப்பிரிந்து செல்ல உனக்கு மனம் வந்ததா? நாங்கள் அன்று முதல் இன்றளவும் உனது பிரிவாற்றுமையால் மனம் புண்பட்டு வருந்தி வாடுகிறோம், என்று கூறிக்கொண்டே அவ்வாலியனைத் தன் இரு கரங்களாலும் தழுவி உச்சி முகந்து முத்தமிட்டான். வாலிபன் ஆம். தந்தையே! அந்தப் பாழும் விரோதிகிருது வருஷம் தான் நமக்குள் விரோதத்தை மூட்டிவிட்டது. இனியும் அந்த இடருற்ற வருஷத்தை நினைக்க வேண்டாம். நான் சிறு பிள்ளைத் தனத்தால் செய்த இச்சிறு பிழையைத் தாங்கள் மன்னிக்க வேண்டும். என் உயிர் இருக்கும் வரை இனி ஒருபோதும் தங்களை விட்டுப்பிரியேன்; என்று சமாதானப்படுத்தினுன்.

இச்சம்பவத்தைக் கண்ட மொந்தையனின் குடிகாரச் சிநேகிதர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு அடே மொந்தை! நெடுநாளைக்கு முன் ஓடிப்போன உனது குமாரன் வந்து கூடிக்கொண்டானல்லவா. அச்சந்தோஷத்திற்காக எங்களுக்கெல்லாம் ஆளுக்கொரு மொந்தை கள் வாங்கிக் கொடுக்க வேணுமென்று ஆர்ப்பரித்தார்கள். வாலிபன் தன் சட்டைப் பையில் கைவைத்து கொஞ்சம் பணத்தை யெடுத்து மதுக் கடைக்காரனிடமீந்து ஐயா! இவர்களுக்கெல்லாம் தலைக்கொரு மொந்தை விழுக்காடு ஊற்றிவிடும், என்றுன். அதைக்கண்ட அங்குள்ள குடிகாரரெல்லாம் பேஷ்! பேஷ்!! பலே பையனென்று பகர்ந்தார்கள். மொந்தையன் குழந்தாய்! நீ நெடு நேரமாய் ஆகாரமில்லாமலிருக்கிறுய்; எனத் தோன்றுகிறது. வா நாம் வீட்டிற்குச் செல்வோம். என்று இருவரும் அவ்விடம் விட்டுச்

சென்றார்கள். அவர்கள் வழியில் போகும் போது, மொரங்கையன் தன் குமாரனை நோக்கி குழந்தாய்! நான் உனது அன்னையிடம் உன்னைப் பற்றிக் கூறும் வரையில் நீ மௌனமாகவே இரு; என்று கூறி அழைத்துக்கொண்டு சென்றான். அவர்கள் வீட்டிற்குச் சென்றதும், மொரங்கையனின் வரவைக் கண்ட அவனது பெண்ஜாதியாகிய இராமாயி மிக்க கோபங்கொண்டு காலையில் கடைக்குச் சென்ற கழிசடை மாலையில்த் திரும்பி மனைக்கு வந்தான். இவனைப் போன்ற இரண்டும் கெட்ட இளிச்சவாயர்கள் எப்படிப் பிழைப்பார்களோ தெரியவில்லை. என்னதான் குடித்தாலும் அதற்கோரளவில்லையா? இப்படிப் பெருங்குடி குடித்துப் பேயாய்த் திரிபவர்கள், ஓர் காலம் மானமிழந்து மண்ணிழந்து மல்லாடித் திரிவதில்லையமில்லை. என்று முணுமுணுத்தாள். அவள் வார்த்தையைக் கேட்ட மொரங்கையன் கண்ணே! இன்றொன்றும் இரைந்து பேசாதே. இதோ என்னருகில் நிற்கும் வாலிபனை நன்றாய் உற்றுப் பார்த்து இவனை இன்னாரென்று கூறு பார்ப்போம்? இதில்தான் உனது சமர்த்தைக் காணவேண்டும். எங்கே கண்டுபிடி பார்க்கலாம்? என்றான். மொரங்கையனின் குளிர்ந்த வார்த்தையைக் கேட்ட இராமாயி கோபம் தணிந்து சிறிது சாந்தமாய் வாலிபன் அருகில் நெருங்கி சற்று குனிந்து நெடுநேரம் அவனை நன்றாய் உற்றுப் பார்த்துப் பிறகு தன் கணவனை நோக்கி இவ்வாலிபனை இன்னாரென்று கண்டுகொள்ள என்னால் முடியவில்லை; என்றாள்.

மோரங்கையன்.— போடி போ மூடமே. இவ்வளவுதானா உன் சமர்த்து? எங்கே இன்னொரு முறை நன்றாய்ப் பார்த்துச் சொல்லு பார்க்கலாம்? என்றான்.

இராமாயி, மீண்டும் வாலிபன் அருகில் சென்று அவனது அவயவங்களையும் சிகையையும் நன்றாய் உற்றுப் பார்த்து இவனை இன்னாரென்று கண்டு கொள்ள என்னால் முடியவில்லை. ஆயினும் சில வருஷங்களுக்குமுன் ஓடிப் போன நமது குமாரனிருந்தால் இப்போது பெரும்பாலும் இவனைப் போலவேதான் இருப்பான். என்று கூறிக் கண்களில் நீரை வடிய விட்டாள்.

மொங்கையன் :—பேஷ்! கண்ணே! நீ கண் கலங்க வேண்டாம். இவனே நமது குமாரன்; தெய்வ அருளால் மீண்டும் திரும்பி வந்து சேர்ந்தான்; என்றான். மொங்கையன் இவ்வார்த்தையைக் கூறி முடிந்ததும் வாலிபன் இராமாயின் பாதத்தில் வீழ்ந்து அன்னையே! அடியேன் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். இனி யெக்காலத்தும் உங்களை விட்டுப் பிரிவதில்லை யென்று நமஸ்கரித்தான். இராமாயி தன் குமாரனை இரு கரங்களாலும் தழுவி யெடுத்து அன்புடன் உச்சி முகர்ந்து அனேக முத்தங் கொடுத்து அடா குழந்தாய்! எங்களை இப்படி அலைய விட்டு நீ அகன்று விடலாமா? இத்தனை நாளும் எங்களைப் பிரிந்திருக்க எப்படி மனந் துணிந்தாய்? அடா கண்மணி! இனியாகிலும் எங்களை விட்டுப் பிரியாமல் முதிர் வயதடைந்த எங்களை முற்றிலும் காப்பாற்றடா; என்று பலவாறு சொல்லி மனங் கலங்கினாள். மொங்கையன் அவளுக்குச் சமாதானங் கூறி மண்டையனுக்கு அன்னமிடும் படி கூறினான். போஜனமான பிறகு அவர்கள் சந்தோஷமாகத் தங்கள் குடும்ப விஷயங்களைப் பற்றி பாஷித்துக்

கொண்டிருந்தார்கள். கடைசியில் இராமாயி தன் கணவனைப்பார்த்து சரி, நீ இத்தனை நாளாய்ப் பிழைத்த பிழைப்பு இன்று இரா போஜனத்திற்குக் கூட இல்லத்திலில்லை. என்று முணுமுணுத்தாள். அவ்வார்த்தையைக் கேட்ட வாலிபன் அம்மா! கோபியாதே. கால வித்தியாசம் எப்படியும் இருக்கத்தான் செய்யும். என்னிடம் கொஞ்சம் பணமிருக்கிறது. அதைக் கொண்டு சில நாள் தாட்டினால் பிறகு பார்த்துக் கொள்வோம். என்று தன்னிடமிருந்த கொஞ்சம் பணத்தை யெடுத்து அவளிடம் கொடுத்தான். பிறகு மூன்று நாள் சந்தோஷமாகவே கழிந்தது. நான்காம் நாள் பழையபடி "வேதாளம் முருக்க மரம் ஏறிக்கொண்ட கதை போல" இராமாயி ஆகாரத்திற்கு ஒன்றுமில்லை யெனக் கோபித்தாள். வாலிபன் மொந்தையனை நோக்கித் தந்தையே! தாங்கள் இப்போது என்ன தொழில் செய்து கொண்டிருக்கிறீர்கள்; என்றான்.

**மொந்தையன் :—** அடா குழந்தாய்! நான் முன்னே செய்துகொண்டிருந்த களவாடும் தொழிலையே தான் இப்போதும் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதைவிட்டால் நமக்கு வேறு விதியில்லை, என்றான்.

**மண்டையன் :—** பேஷ்! என் சமர்த்தைக் காட்ட இது தான் ஏற்ற தருணம். எப்படிப்பட்ட கற்கோட்டையாயினும் உட் புகுந்து காணாமல் திருடிக் கொண்டு வர என்னால் முடியும். அப்படி யிருக்க நாமேன் அன்னத்திற்கில்லை யென்று அவதிப்பட வேண்டும். நான் இன்

றிரவே வெளிச்சென்று வரலாமென யோசிக்கிறேன்; என்றான்.

மோங்கையன் :— பலே! பேஷ்; அப்படிச் சொல்லடா என் கற்கண்டுக் கட்டியே. இப்போது தான் நீ என் குமாரன் என்பது வெட்ட வெளிச்சமாயிற்று. புலிக்குப் பிறந்து நகமில்லாமற் போகுமா? ஆயினும் நமக்கு இன்று நாளைக்குள் ஒரு மனிதனால் கொஞ்சம் பணம் வரவேண்டியிருக்கிறது. அது தீர்ந்த பிறகு வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம்; என்றான். பிறகு போஜன முடிந்ததும் யாவரும் சயனித்துக் கொண்டார்கள். இரவு சுமார் 12-மணிக்கு அவர்கள் வீட்டுத் தெருக் கதவை யாரோ தட்டினார்கள். மொங்கையன் எழுந்து தன் பெண்சாதியை மெதுவாய்க் கூவிப் பெண்ணே! யாரோ கதவைத் தட்டுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் நமது மனிதர்களாய்த் தானிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்; என்றான்.

இராமாயி :— ஆம்! ஆம்! அவர்களாய்த்தானிருக்க வேண்டும். அவர்களைத் தவிர வேறு யார் நமது வீட்டிற்கு வரப் போகிறார்கள்? என்றாள்.

மோங்கையன் :— சரி, நான் போய் கதவைத் திறக்கிறேன். நீ முதலில் நமது குமாரன் தூங்கிவிட்டானாவென்று பார்; என்றான்.

இராமாயி :— என்ன நமது குமாரன் பேரிலேயும் கூடவா இவ்வளவு சந்தேகம்?

மோங்கைதயன் :— போடி பைத்தியக்காரி. நமது குமாரனாயிருந்தாலும் கூட இப்படிப்பட்ட இரகசியங்களை இவ்வளவு சீக்கிரத்தில் அவனுக்குத் தெரியும்படி விடக் கூடாது ; என்றான்.

இராமாயி :— ஒருவாறு ஒப்புக்கொண்டவள் போலத் தன் குமாரன் சமீபத்தில் சென்று பார்த்துவிட்டு, ஐயோ பாவம் ! அவன் நன்றாய்க் குறட்டை விட்டு நித்திரை செய்கிறான், என்றாள்.

மோங்கைதயன் :— உடனே எழுந்துபோய் கதவைத் திறந்தான். வெளியே போர்வையால் தங்கள் தேகங்களைப் பெரும்பாலும் மறைத்துக் கொண்டு நின்ற மூன்று உருவங்கள் உள்ளே வந்தன. மொங்கைதயன் மீண்டும் முன்போலக் கதவைத் தாளிட்டுவிட்டு நால்வருமாக அங்குள்ள கூடத்திற்குச் சென்றார்கள். அங்கு சென்றதும் இரண்டு பேர்கள் தங்கள் மேலுள்ள போர்வையை எடுத்து அப்பால் போட்டுவிட்டு அங்குள்ள விசிப்பலகையின் மேல் உட்கார்ந்தார்கள். அவர்களில் ஒருவன் இளம் பிராயமுள்ள மனிதனாகவும் மற்றொருத்தி நவயௌவன நாரீமணியாகவும் இருந்தார்கள். இன்னொரு உருவம் மொங்கைதயனின் சிநேகிதனாகிய கட்டையனென்பவனே. அவனும் தன் மேல் இருந்த போர்வையை எடுத்துவிட்டு அங்குள்ள ஒரு தூணில்சாய்ந்து நின்றான். மொங்கைதயனும் மற்றொரு தூணில் சாய்ந்த வண்ணம் நின்றிருந்தான். விசிப்பலகையின் மேல் உட்கார்ந்திருந்த மனிதன் மொங்கைதயனை நோக்கி

ஏன் விஷயங்கள் என்ன நிலைமையில் இருக்கின்றன. அப் பெண் ஏதாவது வழிக்குவந்தாளா ? என்று கேட்டான்.

மோங்தையன் :— விஷயங்களெல்லாம் அதே நிலைமையில்தான் இருக்கின்றன. ஆனால் ஸ்ரீனிவாசன் மட்டும் நமக்குப் பயந்து ஊரைவிட்டு ஓடிப்போனான். அப்பெண் நமது வார்த்தைக்கிணங்காமல் ஓரே பிடியாய் ஆகாரமில்லாமலிருக்கிறாள். அவள் இறந்துவிட்டால் பெண் பாவம் நம்மைப் பற்றிக்கொள்ளுமே என்று, அன்னமுண்ணாவிடினும் பாலாவது அருந்தும்படி தினமும் பாலைக் கொடுத்து வருகிறேன் ; என்றான்.

அம்மனிதன் :— அவள் எப்போது நமது வார்த்தைக் கிணங்கவில்லையோ அப்படிப்பட்டவள் இறந்தால் இறந்து போகட்டுமே. அவளுக்கேன் பாலைக் கொடுக்கிறாய் ? என்றான்.

அவ்வார்த்தையைக் கேட்ட அருகிலிருந்த இளமடந்தை ஐயோ பாவம். அதிலும் பெண் பாபம். ஆகாரமின்றி ஒரு பெண்ணைக் கொல்லுதல் மிக்க அனியாயம். அவள் அவ்வாறு உங்கள் இஷ்டத்திற்கு இணங்காமலிருப்பது எனக்கு மிகவும் சந்தோஷமே யாகும். இன்றேல், ஒருவேளை நீங்கள் அப்பெண்ணை விவாகம் செய்துகொண்டாலும் செய்து கொள்ளலாமல்லவா ? அப்போது நான் அனாதியாய் கைவிடப்பட்டு அவஸ்தையுறுவேனன்றோ ? என்றாள். அம்மனிதன் அவளை நோக்கிக் கண்மணி ! ஆயிரம் பெண்கள் அடுத்தடுத்து வந்தாலும் உன்னை ஒருபோ

தும் ஒதுக்கிடேன் என்பதை உறுதியாய்க் கூறுகிறேன், மேலும் நான் ஒருவேளை உன்னைக் கைவிட்டாலும் உனக்கு ஏராளமான சொத்துக்களிருப்பதால நீ கஷ்டப்படக் காரண மில்லை; என்றான். தூணில் சாய்ந்து கொண்டிருந்த மொந்தையன் அம்மனிதனை நோக்கி ஐயா! நாங்கள் ஆகாரத்திற் கில்லாமல் சில நாட்களாய் மிக்க அவதிப்படுகிறோம். தாங் கள் எங்களுக்குக் கொடுப்பதாகச் சொன்ன தொகையில் முன் கொடுத்தது போக பாக்கியை இப்போது கொடுக்க வேண்டும்; என்றான்.

அம்மனிதன் :— ஓ! நீங்கள் வாக்குத்தத்தத்தை மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது. முதலில் பாதி ரூபா யும் ஸ்ரீனிவாசனை ஒழித்த பிறகு பாதி ரூபாயும் கொடுப்ப தாகவன்றோ நான் கூறினேன். அப்படியிருக்க அவன் உயிரோடிருக்கையிலேயே மற்ற பாதி ரூபாயையும் கேட் பது அக்கிரமம். என்றான்.

மொந்தையன் :— ஏன் அவன் நமக்குப் பயந்து எப் போது ஊரை விட்டோடினானோ அப்போதே அவன் இறந்த மாதிரியல்லவா? என்றான்.

அம்மனிதன் :— அது ஒருபோதும் முடியாது. எத் தனை நாட்களானாலும் — எத்தனை மாதங்களானாலும்—அவன் கொல்லப்பட்டாலொழிய பாக்கி ரூபாய் உங்களுக்குக் கிட் டாதென்றான்.

**மோங்கைதயன் :—** சற்று கோபங் கொண்டு ஐயா! இதனால் என்னவந்தாலும் சரி. கடைசியில் நாங்களும் அகப்பட்டுக்கொள்வதானாலும் சரி. பணம் கொடுக்காவிடில் உம்மைக் காட்டிக்கொடுத்து விடுவது நிச்சயம்; என்று பயமுறுத்தினான். மொங்கைதயன் வார்த்தையைக் கேட்ட அம்மனிதன் சிறிது தடுமாற்றமடைந்தவனாகி சற்று யோசித்து அப்படி வேண்டாம். நம்பிக்கை துரோகம் செய்வது நன்றன்று. ஆயினும் சில நாட்களில் உங்களுக்குச் சேர வேண்டிய தொகையைக் கொடுத்து விடுகிறேன். அது வரையில் நீங்கள் பொறுமையோடு காரியத்தை நடத்திவர வேண்டும். நமது ரகசியங்களை எவருக்கும் எட்டவிடுதல் கூடாது. என்று சாந்தமாய்க்கூறி எச்சரிக்கை செய்து விட்டு மூவரும் வெளியே சென்றார்கள். அவர்கள் வெளிச் சென்றதும் மொங்கைதயன் கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தான். இராமாயி ஆச்சரியத்துடன் கணவனை நோக்கி தணிவான குரலில் என்ன வெகு முறுக்கத்துடன் முதலில் வார்த்தையாடிய அம்மனிதன் கடைசியில் உம்முடைய ஒரே வார்த்தையில் பெட்டிப் பாம்புபோல அடங்கிப் போய் விட்டானே. உம்முடைய சமர்த்து உள்ளபடி மிகவும் மெச்சத்தக்கதே என்றாள்.

**மோங்கைதயன் :—** ஏன் அவனுடைய குடுமி என் கையில் பூராவாய்ச் சிக்கியிருக்கும்வரை அவன் என் வார்த்தைக்கிணங்கி நடக்கத்தான் வேண்டும். அஃதெல்லாம் இருக்கட்டும் இச்சம்பவங்கள் முழுவதும் நடந்தேறும் வரை நமது குமாரன் நித்திரை செய்து கொண்டிருந்ததைக் குறித்து நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன்;

என்றான். அப்போது நித்திரை செய்து கொண்டிருந்த மண்டையன் கொட்டாவி விட்டுக்கொண்டே மெதுவாக எழுந்து உட்கார்ந்து கண்களைத் தேய்த்துக் கொண்டே தந்தையே! சில நிமிஷங்களுக்கு முன்பு யாரோ சில மனிதர்கள் வந்து பேசிக்கொண்டிருந்து விட்டுச் சென்றார்களே அவர்கள் யார்? என்றான். தனது குமாரன் கேள்வி மொரந்தையனுக்கு மிகுந்த அச்சத்தையும் திகைப்பையும் உண்டாக்கியது. அவன் தனது மனைவி முகத்தையும் குமாரன் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே இருந்தான், தனது தந்தையின் உளப்பான்மையை ஒருவாறு அவனது பார்வையால் அறிந்துகொண்ட மண்டையன் தந்தையே! தங்களுடைய இரகசியத்தை நான் அறிந்து கொண்டதற்காகத் தாங்கள் அச்சமுறுவதுபோல் தோன்றுகிறது. என் பிரியமுள்ள தந்தையே! தங்கள் அன்பிற்குரிய குமாரன் நானல்லவா? தங்களுடைய சுக துக்கங்களுக்கும் லாப நஷ்டங்களுக்கும் நான் பாத்தியப்பட்டவனன்றோ? தங்களின் இரகசியத்தை வெளிவிட்டு அதனால் தாங்கள் பல இன்னல்களை அடையுமாறு நான் ஒருபோதும் நடந்து கொள்ளமாட்டேன். அப்படி என்னால் தாங்கள் கஷ்டமுறுவதைக் காட்டிலும் என்னுயிரை நானே மாய்த்துக் கொள்ளுதல் சிலாக்கியமல்லவா? நான் இவ்வளவு விஷயங்களைக் கூறியும், தாங்கள் என்னை முற்றிலும் நம்பாதிருப்பது துண்மையானால் நான் இப்போதே இவ்வூரைவிட்டு முன்னம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பிணுங்கிற்கே ஓடிப்போகிறேன்: என மிக்க வருத்தத்துடன் கூறி கண்களில் சிறிது நீர் விட்டுக் கலங்கினான்.

தனது குமாரன் வருந்துவதைக் கண்ட இராமாயி மனம் நைந்தவளாகி அந்தோ குழந்தாய்! வேண்டாம். உன்னைப் பிரிந்து நாங்கள் இதுவரை மிக்க இன்னலுற்றிருக்க, மீண்டும் நீ எங்களை விட்டுப் பிரிய நினைப்பது சரியன்று. எனக் கூறிவிட்டு கணவனை நோக்கி நாம் இன்னமும் நமது குமாரன் விஷயத்தில் இவ்வளவு அவநம்பிக்கைப் படுதல் அடாது; என்றாள். மொரந்தையன் தன் குமாரனை நோக்கி அடா என் பிரியமுள்ள குழந்தாய்! உன் விஷயத்தில் நான் அவநம்பிக்கைப் படுகிறேனென்றெண்ண வேண்டாம். எனது எஜமானன் இவ்விஷயத்தைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்று கண்டிப்பாய்க் கூறியிருப்பதால் நான் அவ்விதம் நடந்து கொண்டேனே யன்றி வேறன்று. அதைக் குறித்து நீ ஆயாசமுறல் வேண்டாம். நானுன்னை முற்றிலும் நம்புகிறேன். எங்களைப் பிரிந்து செல்ல வேண்டுமென்னும் தீயநினைவை இனியும் உனதுள்ளத்தில் கொள்ள வேண்டாமென்று சமாதானப் படுத்தினான்.

மறு நாள் காலை மொரந்தையன் போஜன பதார்த்தங்களை ஒரு கூடையில் வைத்து எடுத்துக் கொண்டு எங்கோ செல்ல எத்தனிக்கையில் அவனது குமாரன் அவனைக் குறுக்கிட்டுத் தந்தையே! தனையன் நானிருக்கத் தாங்கள் இவ்வேலையைச் செய்வது தகுதியன்று. இதை எங்கு கொண்டு சேர்க்க வேண்டுமோ அவ்விடத்தைக்குறிப்பிட்டால் நானே கொண்டு போய்ச் சேர்க்கிறேனென்று கூறினான்.

மொங்கையன் :— குழந்தாய்! வேண்டாம். இவ் விஷயம் மிகவும் முக்கியமானது. ஒரு வேளை நீ அஜாக் கிறதையினுல் காரியத்தை ஒன்றிரண்டாய் முடித்து உளறு படி செய்து விட்டால், அதனுல் கடைசியில் எங்கள் தலை போவதில் சந்தேகமில்லை. ஆகையால், இக்காரியத்தை நானே செய்ய உத்தேசிக்கிறேன்; என்றுன்.

மண்டையன் :— என் பிரியமுள்ள தந்தையே! தாங்கள் என் விஷயத்தில் இவ்வளவு அவநம்பிக்கைப் படுதல் சரியன்று, எவ்வளவோ சாமர்த்தியமும் யுக்தியு முள்ள உமது குமாரனுகிய நான் அப்படி ஒருபோதும் முட்டாள் தனமாக நடந்து கொள்ள மாட்டேன். இவ் வொரு விஷயத்தில் எனது சமர்த்தைப் பாருங்கள். இதை நானே எடுத்துக் கொண்டு போகிறேன். என போஜன பதார்த்தங்கள் நிறைந்த கூடையை வாங்கித் தன் தலை மேல் வைத்துக்கொண்டான். தன் குமாரன் வார்த்தைக்கு மாறு சொல்ல வகையறியாத மொங்கையன், சற்று தயக் கத்தோடு குழந்தாய்! உனது பிடிவாதத்தை மாற்ற என் னுல் முடியவில்லை. ஆகையால் நீ இந்நகரத்திலுள்ள பவழக் காரத் தெருவு 265 நெ. வீட்டுக்குச் சென்று மெதுவாகக் கதவைத் தட்டினுல் ஒரு மூதாட்டி வந்து கதவைத் திறப் பாள். நீ உள்ளே சென்றதும் கூடையைக் கொடுத்தால் அவள் அதிலுள்ள பதார்த்தங்களை எடுத்துக் கொள்வாள். நீ மீண்டும் காலியான கூடையை எடுத்து வந்துவிட வேண்டும். இதைத் தவிர வேறு எவ்விதமான கேள்வி யும் அவளைக் கேட்கக் கூடாது. இவ்வளவுதான் விஷயம்

இந்த விஷயத்தை உன் உயிர் இருக்கும் வரை வெளிப்படுத்தக் கூடாது. ஜாக்கிரதை. போய்விட்டு வா. நான் சொல்லிய தெருவும் நம்பரும் ஞாபகம் இருக்கிறதா? என்றான்.

மண்டையன் :— ஆ, ஆ, நன்றாய் ஞாபகம் இருக்கிறது. பவழக்காரத் தெருவு 265 நெ. வீடு, இதையும் கூட நான் மறந்துவிடும்படியான முட்டாளாயிருந்தால் இக்காரியத்தில் பிரவேசிக்க முன்வருவேனா? தாங்கள் சிறிதும் சந்தேகப்பட வேண்டாம். நான் ஜயத்துடன் திரும்பி வருகிறேன். என்று கூறிவிட்டு அவ்விடமிருந்து நீங்கிச் சில நிமிஷங்களில் தனது தந்தை குறிப்பிட்ட தெருவிலுள்ள வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினான் உடனே கதவு திறக்கப்பட்டது. உள்ளே ஒரு வயோதிக ஸ்திரீ நின்றாள். மண்டையன் சிறிதும் தயங்காமல் உள்ளே சென்று அங்குள்ள கூடத்தில் கூடையைக் கீழே வைத்தான். அங்கிருந்த மூதாட்டி வழக்கப்படி யல்லாத புதிய ஆள் இன்று வந்திருப்பதைக் குறித்துச் சற்று யோசித்துப் பின் தேறுதலடைந்து கூடையிலுள்ள பதார்த்தங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டுபோய் ஒரு வீட்டில் வைத்துக் கொண்டிருந்தாள். அப்போது மண்டையன் அம் மூதாட்டியின் பின்னால் மெதுவாகச் சென்று அவ்வறையினுள் எட்டிப் பார்த்தான். அங்கே ஒரு மஞ்சத்தின் மேல் நவயௌவன நாரீமணி யொருவள் உட்கார்ந்திருந்தாள். அவளின் ஒப்பற்ற அழகைக் கண்ட மண்டையன் மிகுந்த திகைப்பும் வியப்பும் உடையவனாய் அம் மூதாட்டி தன்னைத் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாகச் சீக்

கிரமாய்த் தான் முன்னிருந்த இடத்திற்கு வந்து ஒன்றும் அறியாதவன் போல் நின்றிருந்தான்.

மூதாட்டி அக்கூடையிலுள்ள பதார்த்தங்களை யெல்லாம் எடுத்துக் கொண்டதும் மண்டையன் காலியான கூடையை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். அவன் அன்று ஒழுங்காய் நடந்து கொண்ட விஷயத்தைக் கண்ட மொரந்தையன் மிகவும் சந்தோஷ மடைந்தான். மற்றொரு நாள் மொரந்தையன் தன் குமாரனைப் பார்த்துக் குழந்தாய்! நான் இன்னொரு முக்கியமான காரியமாக நமது எஜமானனைப் போய்ப் பார்த்துவிட்டுச் சீக்கிரம் வந்துவிடுகிறேன். நீ இங்கேயே இரு; என்றான்.

மண்டையன் :— தந்தையே! தாங்களிதுவரை எஜமான ரென்று கூறியதை மட்டும் கேட்டிருக்கிறேனே ஒழிய, அவரை நான் நேரில் தரிசித்து வார்த்தையாடும் பாக்கியம் பெற்றேனில்லை. அன்றிரவு அவர் நமது வீட்டிற்கு வந்திருந்தும், நான் அவரைப் பார்க்காமல் போய்விட்டேன், ஆகையால் நான் இன்று தங்களுடன் வருகிறேன் என்றான்.

மொரந்தையன் :—அந்தோ குழந்தாய் அது ஒருபோதும் முடியவே முடியாது. இது விஷயத்தில் அவர் மிகவும் கண்டிப்பான உத்தரவிட்டிருக்கிறார். என்னையும் கட்டையனையும் தவிர யாரும் அவரைக் காண முடியாது; என்றான்.

மண்டையன் :— தந்தையே! அவரது உத்தரவு அவ்வளவு கண்டிப்பாய் இருக்கும் பட்சத்தில் நாம் அவரைக் கேளாமல் இப்பொழுதே சென்று அவரைப் பார்க்க வேண்டாம். முதலில் நாம் இருவரும் அவர் வீட்டண்டை சென்றதும் நான் வெளியே பாதையில் நின்று கொள்ளுகிறேன். நீங்கள் மட்டும் உள்ளே சென்று அவருடன் சிறிது பாஷித்துவிட்டுப் பிறகு எனது குமாரன் தங்களைத் தரிசிக்க மிகவும் ஆவலுடையவனு யிருக்கிறான், அவனை அழைத்துக் கொண்டுவர உத்தரவாக வேணுமென்று கேளுங்கள். அவர் சம்மதப்பட்டால் நீங்கள் வெளியே வந்து சிறிது நேரத்திற்குப் பின் என்னை அழைத்துக் கொண்டு போகலாம். இன்றேல், எனக்கு ஜாடை காண்பித்துவிட்டால் நான் அப்படியே வீட்டிற்குத் திரும்பி விடுகிறேன் என்றான். மண்டையன் வார்த்தை ஒரு விதத்தில் ஒப்புக்கொள்ளக் கூடியதாயிருந்தபடியால் மொந்தையன் சம்மதித்தான். உடனே இருவரும் புறப்பட்டு சுடலைத் தெரு 1325 நெ. வீட்டிற்கு முன் போய் நின்றார்கள். மொந்தையன் தன் குமாரனை அங்கேயே நிற்கும்படி சொல்லிவிட்டுத் தான் மாத்திரம் உள்ளே சென்றான். உள்ளே சென்ற மொந்தையன் சிறிது நேரத்திற்குப்பின் மீண்டும் வெளியே வந்து தன் குமாரனிடம் கையை விரித்துக் காட்டி வீட்டுக்குப் போகும்படி ஜாடை செய்தான். உடனே மண்டையனும் தன் இஷ்டம் நிறைவேறாததினால் அதிருப்தியுற்றவனாய் வீட்டுக்குத் திரும்பினான்.

---

# 27-வது அத்தியாயம்.

## மறு விசாரணை.

---

வெங்கிடுபதி கவுண்டரின் கொலைக் கேஸ் மீண்டும் விசாரணை செய்யப்பட வேண்டிய தினம் வந்தது. அக்கேஸின் முடிவைக் காண நெடு நாளாய் ஆவலுற்ற அனேக ஜனங்கள் காலை 10-மணிக்கே கோர்ட்டில் எள் விழ இடமின்றிக் கூட்டம் கூடி விட்டார்கள். முக்கிய பிராசிகியூட்டரான போலீஸ் இன்ஸ்பெக்டர் சாம்பமூர்த்தி ஐயரும், அத்தரப்பு சாக்ஷிகளான கனகாசலக் கவுண்டனும், அவனது வேலைக்காரர் இருவரும், முன்வாயிற் காவலன் சொக்கனும், பின்புறத் தோட்டக் காவலனாகிய திம்மனும், ஆஜராயிருந்தார்கள் கோகிலாம்பாள் மட்டும் தனக்கு உடம்பு சௌக்கிய மில்லை யென்றும், ஆகையால் தனது வாக்கு மூலத்தை வீட்டிலேயே ஒரு வக்கீல் முன்னிலையில் எழுதிவைத்து அத்துடன் தனக்கு உடம்பு சௌக்கிய மில்லை யென்பதை நிரூபிக்க டாக்டர் சர்டிபிகேட்டையும் சேர்த்துக் கோர்ட்டில் ஆஜர் செய்யும்படி அனுப்பியிருந்தாள். கதிர்வேலு கவுண்டரும் அவரால் சுந்தர ராஜுவின் கட்சியில் வாதிக்க நியமிக்கப்பட்ட வக்கீல் மகாதேவய்யரும், ஆஜராயிருந்தார்கள். மணி 11 அடித்தது. உடனே நியாயாதிபதியும் கோர்ட்டுக்கு வந்தார். அன்று போடப்பட்டிருந்த கேஸு

களில் வெங்கிடுபதி கவுண்டரின் கொலைக் கேஸை மிக முக்கியமானதாகவும், பெரியதாகவும் இருந்தமையால் அதை யே முதல் முதலாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. இக்கேசில் குற்றவாளிகளெனச் சந்தேகித்து ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சுந்தர ராஜு கவுண்டனை யும், தாந்தோணி ஐயங்காரரையும், மற்றும் வெட்டியான் கள் இருவரையும், போலீஸார் அழைத்துக் கொண்டுவந்து குற்றவாளிகளின் கூண்டில் நிறுத்தினார்கள். கேஸின் சாராம்சங்களை முதலில் இருந்து கவனிக்கும்படி நியமிக்கப் பட்டிருந்த ஜூரர்கள் ஐந்து பேர்கள் வந்து நியாயாதிபதி யின் வலப்புறத்திலிருந்த ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். உடனே விசாரணை ஆரம்பமாயிற்று. பிராசிகியூஷன் தரப் பில் இன்ஸ்பெக்டரும் சாக்ஷிகள் ஐவரும் ஒரே மாதிரி யாக முன் மரண விசாரணையில் சாக்ஷியம் கூறியது போல வே இப்பொழுதும் சாக்ஷியம் கூறினார்கள். கோகிலாம் பாள் சாக்ஷியமும் ஏற்கெனவே நியாயாதிபதியின் மேஜை மேல் வைக்கப்பட்டிருந்தது. அதை நியாயாதிபதியின் உத்திரவின் பேரில் கோர்ட்டு லிகிதர் அனைவருக்கும் விளங் கும்படி வாசித்துக் காட்டினார். பிராசிகியூஷன் தரப்பு விசாரணை முடிந்ததும் நியாயாதிபதி சுந்தர ராஜுவை நோக்கி இதுவரை கூறிய சாக்ஷியங்களால் நான் உன்னைக் குற்றவாளியென நம்புகிறேன். நீ குற்றவாளியா அல்லவா? என்று கேட்டார்.

சுந்தரராஜு:— நீதியும் கருணையும் நிரம்பிய நியா யாதிபதியவர்களே! உண்மையில் சாக்ஷிகள் கூறியபடி

நான் வெங்கிடுபதி கவுண்டரை பயமுறுத்தினேனே யன்றி அவரைக் கொலை செய்யவில்லை யென்பதைச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். ஆகையால் நான் ஒருபோதும் குற்ற வாளியல்ல, ஆயினும், நான் குற்றவாளியல்ல வென்பதை நிரூபிக்க எனக்குச் சாக்ஷியங்களில்லை. என்று கூறித் தனது வாக்கு மூலத்தை முன் விசாரணையில் கூறியது போலவே கூறினான். தாந்தோணி ஐயங்காரும் வெட்டி கள் இருவரும் தங்கள் வாக்கு மூலங்களையும் முன் போல வே தெரிவித்தார்கள். பிறகு பிராசிகியூஷன் தரப்பு வக்கீல் தன் ஆசனத்தினின்றும் எழுந்து நின்று பெருந் தன்மையும் கண்ணியமும் நிறைந்த நியாயாதிபதி யவர்களே! ஜூரிமார்களே! நீங்களிதுவரை விசாரணையான சாக்ஷியங்களின் வாக்குமூலங்களையும், குற்றவாளிகளினது வாக்கு மூலங்களையும் நன்றாய்க் கேட்டிருக்கிறீர்களாதலின், நான் அதிகம் கூறவேண்டுவதில்லை. ஆயினும் இரண்டொரு விஷயங்களை மட்டும் எடுத்துச் சொல்லுகிறேன். சுந்தர ராஜு கவுண்டனுக்கும் வெங்கிடுபதி கவுண்டருக்கும் நெடுநாளாக விரோதமிருந்த தென்பது குற்றவாளியின் வாக்குமூலத்தாலும் பிராசிகியூஷன் தரப்பு 1-வது 4-வது சாக்ஷியங்களாலும் நன்றாய் விளங்குகிறது. தவிர வெங்கிடுபதி கவுண்டரைச் சுந்தரராஜு முன்னமே ஒரு முறை பழிவாங்குவதாகக் கூறி பயமுறுத்தினதாகவும் தெரிகிறது. மேலும் சுந்தரராஜு தான் விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்த சுவர்ணம்பாளை வெங்கிடுபதி கவுண்டர் தனது குமாரனுக்குக் கொடுக்க வேணுமென்று கதிர்வேலு கவுண்டரைக் கட்டாயப்படுத்

திய வகையில் சுந்தரராஜுலுவுக்கு ஏற்பட்ட விரோதத்தினு லோ, அல்லது கதிர்வேலு கவுண்டர் தன் குமாரத்தியைக் கனகரசலக் கவுண்டனுக்குக் கொடுக்காவிடின் வெங்கிடுபதி கவுண்டரால் தனது மானம் அடியோடு அழிந்துபோகு மென்பதை முன்னிட்டுத் தான் வெங்கிடுபதி கவுண்டருக் குப் பயப்பட வேண்டிய மூலகாரணமாகிய 8000 ரூபாய் பிராம்சரியைக் களவாடுவதின் நிமித்தம் கதிர்வேலு கவுண் டரின் தூண்டுதலின் பேரிலோ சுந்தரராஜுலு வெங்கிடுபதி கவுண்டரைக் கொலை செய்திருக்க வேண்டுமென்று நன் ருய்த் தெரிகிறது. மேலும் கதிர்வேலு கவுண்டர் எழுதிக் கொடுத்த 8000 ரூபாய் பிராம்சரி காணுமற் போயிருப்ப தே அவர் தூண்டுதலின் பேரில் கொலை நடந்திருக்கிற தென்று கூறத் தகுந்த காரணமாயிருக்கிறது. தவிர கொலை செய்ய உபயோகப் படுத்திய கத்தி சுந்தரராஜுலுவினுடைய தென்று திட்டமாய்த் தெரிகிறது. அவன் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டு ஓங்கிய வண்ணம் இப்போது உன்னைக் கொல்லாமல் விடுவதில்லை யென்று கூறிய வார்த் தைகளும் சாக்ஷிகள் மூலமாய் நன்ருய் ருஜுவாயிருக்கி றது. தவிர கொலை நடப்பதற்கு முன் வெங்கிடுபதி கவுண் டரும் சுந்தரராஜுலுவும் வார்த்தையாடிக் கொண்டிருக்கும் போது, மீண்டும் வேறு மனிதர்கள் பேசும் அரவம் கேட் டது. பிறகு யாவும் அமைதியாயிருந்தது. பின்பு மறு படியும் மனிதர் நடப்பது போலவும் கை கால்களை யுதைத் துக்கொள்வது போலவும் கழுத்தைப் பிடித்த முக்குவதால் ஏற்படுகிற சத்தம் போலவும் கேட்டது. பிறகு அமைதி யாயிருந்தது. மறுபடி தொப்பென்று விழுந்த சப்தமும்

மனிதர் ஓடும் காலடி யோசையும் கேட்டது. என்று கோகிலாம்பாள் கூறிய சாக்ஷியத்தை ஆழ்ந்து கவனிக்கின் தொப்பென்று விழுந்ததாகவும் பிறகு ஓடியதாகவும் கோகிலம் கூறியது ஐயங்காரர் என்று நமக்கு நன்ருகத் தெரிகிறது. ஐயங்காரரும் கதிர்வேலு கவுண்டரும் அங்கு ஏககாலத்தில் சந்தித்திருக்கிறார்கள். அச்சமயம் வெங்கிடுபதி கவுண்டர் கொல்லப்பட்டிருக்கிறார். ஆகவே கொலை நடந்தது அவர்கள் இருவரும் வருவதற்கு முன்னென்று நன்ருகத் தெரிகிறது. அவர்களுக்கு முன் அங்கு வந்தவர்கள் சுந்தரராஜனும் வெட்டியான்களுமே என்றும் அவர்களைத் தவிர வேறு யாரும் அப்போது அங்குவரவில்லையென்றும் சாக்ஷியங்களால் நன்ருகத் தெரிகிறது. ஆகையால் இத்தியாதி காரணங்களையெல்லாம் கவனிக்குமிடத்து சுந்தரராஜனே வெங்கிடுபதி கவுண்டரைக் கொலை செய்திருக்கிறானென்றும் அவன் கொலைபுரிந்ததை வெட்டியான்களிருவரும் கண்டும், எவ்வித லாபத்தைக் கருதியோ அவர்கள் சுந்தரராஜனுக்கு உடந்தையாயிருந்து உண்மையைக் கூருது மறைத்துக் கூறுகிருர்களென்றும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறது. ஆதலின் கனம் பொருந்திய நியாயாதிபதியவர்கள் குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை விதித்து நியாயத்தைப் பாதுகாக்கவேணுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன் என்று கூறியதும் தனது ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார்.

பிறகு சுந்தரராஜனின் வக்கீலாகிய மகாதேவய்யர் எழுந்து மேன்மை தங்கிய கோர்ட்டார் அவர்களே! ஜூரி

மார்களே! தாங்களிதுவரை விசாரணை செய்யப்பட்ட ஒவ் வொருவருடைய வாக்குமூலங்களையும் பிராசிகியூஷன் தரப்பு வக்கீலாகிய மிஸ்டர் தேவராஜ ஐயர் அவர்களின் வாதங்களை யும் நன்றாய்க் கேட்டிருக்கிறீர்கள். மேலும் தற்சமயம் குற்றவாளிகளாகக் கருதப்பட்ட மனிதர்களுடைய உயிர்கள் உங்கள் கையிலிருக்கிறது. ஆகையால் நீங்கள் ஒவ்வொரு விஷயத்தையும் அமரிக்கையாகவும் தீர்க்கமாகவும் யோசித் துத் தீர்ப்புச் சொல்லவேண்டுமென்பதை நான் கூறவேண்டு வதில்லை. இறந்துபோன வெங்கிடுபதி கவுண்டரை சுந்தர ராஜு கையில் கத்தியுடன் பயமுறுத்தியதாக நான்காவது சாக்ஷியத்தால் ருஜுவாகிறது உண்மையாயினும், வெங்கிடு பதி கவுண்டரைக் குற்றவாளி கத்தியால் குத்தும்போது பார்த்ததாக எந்தச் சாக்ஷியங்களும் கூறவில்லை. மேலும் குற்றவாளி பயமுறுத்திப் போனபிறகு இறந்துபோனவரு க்கு விரோதியான மற்றொருவரால் கொலை செய்யப்பட்டிருப் பினும் இருக்கலாம். தவிர இறந்துபோனவருடைய சமீ பத்தில் கிடந்த கத்தி சுந்தரராஜுவினுடையதேயாயினும், சில நாட்களுக்கு முன்பு அச்சாபீசிலிருந்த தனது கத்தி எப்படியோ காணமல்ப் போய்விட்டதென சுந்தரராஜு கூறுவதை யோசிக்கின் கொலைசெய்தவன் தன்னை மறைத்து சுந்தரராஜுவைக் குற்றவாளியெனக் காட்டிக் கொடுப்பதற் காகவே முன் யோசனையுடன் அக்கத்தியைக் களவாடிக் கொண்டு போயிருக்கிறனென ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. ஆகையால் இந்தக் காரணங்களை முன்னிட்டு சுந்தரராஜு ஒருபோதும் குற்றவாளியல்லவென்பது திட்டமாய்த் தெரி கிறபடியாலும், பயமுறுத்தினன் என்பதையும், கத்தி அவ

னுடையதென்பதையும் முன்னிட்டு, ஒருவனைக் கொலையாளி என்று தீர்மானிப்பது முற்றிலும் சட்டவிரோதமானதாகை யாலும், தற்காலம் குற்றவாளியெனக் கருதப்படும் சுந்தர ராஜுவை நிரபராதியெனத் தீர்மானித்துக் கேசை அடி யோடு தள்ளவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். தவிர இக்கேசின் உண்மையான விஷயங்களைக் கண்டறிந்து துப்பு த்துலக்க முயற்சி செய்துகொண்டிருக்கும் ஸ்ரீனிவாசனென் பவர் என்ன அசந்தர்ப்பத்தாலோ தற்சமயம் இங்கு ஆஜரா கக்கூடாமல் போய்விட்டது. ஆதலின் கனம் பொருந்திய கோர்ட்டாரவர்கள் இன்றைய நடவடிக்கையை இத்துடன் நிறுத்தி, மற்ற விஷயங்களை அடுத்த வாய்தாவில் பூர்த்தி செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்று கூறிவிட்டு உட்கார்ந்தார். உடனே பிராசிகியூஷன் தரப்பு வக்கீல் தேவ ராஜ ஐயர் எழுந்து பெரும்பாலும் முடிவடைந்து போன கேசை இனியும் பாக்கி வைப்பது சரியல்லவென்றும், ஒவ் வொருவருடைய சௌகரியத்தைக் குறித்தும் நடப்பதானது கோர்ட்டு நடவடிக்கைகளுக்கு மிக்க அசௌகரியத்தைக் கொடுக்கக்கூடியதென்றும், ஆதலின் கேசை இப்பொழுதே முடிவு செய்துவிட வேணுமென்றும் வாசித்தார். நியாயாதி பதியும் தேவராஜ ஐயரது வார்த்தைக் கிணங்கியவராய் ஜூரர்களை நோக்கி சுந்தரராஜு குற்றவாளியா அல்லவா என்ற உங்கள் அபிப்பிராயத்தைக் கூறுங்கள்? என்றார். இதுவரை நாற்காலிகளில் முற்றும் தூங்கித் தூங்கி விழுந்து கொண்டிருந்த மூன்று ஜூரர்களும், அரைத் தூக்கத்தோடு சற்று கண்ணை விழிப்பதும் மூடுவதுமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த ஜூரர்களிருவரும் ஆக ஐவரும் எழுந்து தங்

கள் சோபன அறையாகிய ரூமிற்குச் சென்று சிறிது நேரம் தாழ்த்து மீண்டும் வெளியே வந்து தங்கள் ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். நியாயாதிபதி அவர்களை நோக்கி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்றார். அச்சமயம் அங்குள்ள ஜனங்கள் அனைவரும் சிறிதும் சந்தடிசெய்யாமல் அமரிக்கையாய் அவர்கள் கூறுவதைக் கேட்க மிக்க ஆவலாயிருந்தார்கள். அச்சமயம் ஜூரிமார்களெல்லாம் ஒரே விதமாய் சுந்தரராஜு குற்றவாளி தான் என்று கூறினார்கள். உடனே நியாயாதிபதி சுந்திரராஜுவுக்கு 20 வருஷம் தீபாந்தர சிட்சையும் மற்ற வெட்டியான்களிருவரும் சுந்தரராஜுவுக்கு உடந்தையாயிருந்தார்களென்ற அபிப்பிராயத்தால் அவர்களுக்குத் தலைக்கு 5 வருஷம் கடினகாவலும் விதித்து, ஐயங்காரை விடுதலை செய்தார். இச்சம்பவம் அங்கு கூடியிருந்த ஜனக் கூட்டத்திற்கு மிகுந்த மனக்குழப்பத்தை யுண்டாக்கியது. கதிர்வேலு கவுண்டர் கண்களில் நீர்விட்டுக் கோவெனக் கதறினார். எப்படியும் சுந்தரராஜுவைக் காப்பாற்றுகிறேன் என்று கூறிய ஸ்ரீனிவாசன் இதுவரை எட்டிப்பாராமல் எங்கேயோ மறைந்துபோனதைக் குறித்து மனம் நைந்துருகினார். சிறிது நேரத்தில் சுந்தரராஜுவின் சொந்த உடைகள் களையப்பட்டு ஜெயில்உடைகள் கொடுக்கப்பட்டன. சுந்தரராஜு மனவாட்டமுடையவனாய்த் தன்னை மறந்து பாதிப்பயித்தியம் பிடித்தவன்போல் இருந்தான். வெட்டியான்களுக்கும் ஜெயில் உடை கொடுக்கப்பட்டது. சில நிமிஷங்களில் உருவிய கத்திகளுடன் வெண்ணை வெட்டிகளாகிய சில போலீஸ் காரர்கள் குற்றவாளிகளை அழைத்துக் கொண்டு சென்றார்கள். இச்சமயம் கனகாசலக் கவுண்டனும் அவனது

சிநேகர்களும் இச்சம்பவங்களைக்கண்டு மிக்க ஆனந்த முற்றார்கள். கொலைகாரப் பயலுக்குக் கடவுள் தகுந்த தண்டனை விதித்தார்; என் அருமைப் பிதாவைப் பழிவாங்கிய பாதகனைக் கடவுள் பாதாளத்தில் அழுத்திவிட்டார். என்று கனகாசலம் தன் நேயர்களுடன் கூறிய வண்ணம் கோர்ட்டை விட்டுச் சிறிது தூரம் சென்று அங்கு யாவரும் உல்லாசமாக உலாவிக் கொண்டிருந்தார்கள். இத்தருணம் கோர்ட்டை நோக்கி இரண்டு குதிரைகள் பூட்டிய மூடு வண்டி ஒன்று வாயுவேகம் மனோவேகமாய் ஓடிவந்து கோர்ட்டினருகே நின்றது. உடனே வண்டியின் கதவைத் திறந்து கொண்டு ஒரு மனிதன் கீழே குதித்தான் மீண்டும் வண்டியிலிருந்து ஓர் இளமடந்தை கீழே இறங்கினாள் இதற்குள்ளாக அங்கிருந்த ஜனங்கள் அவ்வண்டியைச் சுற்றிலும் கூட்டங் கூடினர். உடனே அம்மனிதன் வண்டியின் கதவை மூடிவிட்டு அப்பெண்ணை அழைத்துக் கொண்டு கோர்ட்டுக்குள் சென்று வக்கீல் மகாதேவையரின் செவியில் மெதுவாய் என்னவோ கூறினான். உடனே மகாதேவையர் எழுந்து கனம் கோர்ட்டார் அவர்களே! இக்கேசின் உண்மையான வரலாறுகளெல்லாம் பிரக்யாதி பெற்ற துப்பறியும் ஸ்ரீனிவாசனால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறபடியால் அவரால் அனுப்பப்பட்ட இந்த ஒரு சாக்ஷியைமட்டும் விசாரித்துப் பிறகு தங்கள் ஜட்ஜிமெண்டை நிறைவேற்றக் கேட்டுக்கொள்ளுகிறேன்; என்றார். அவ்வார்த்தையைக் கேட்ட பிராஸிக்யூஷன் தரப்பு வக்கீல் தேவராஜ ஐயரும் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவர்களும் எழுந்து நின்று முடிந்துபோன கேஸை மீண்டும் விசாரணை செய்

வது முற்றும் சட்ட விரோதமென்றும் ஆகையால் ஒரு போதும் விசாரணை செய்யக் கூடாதென்றும் ஸ்ரீனிவாசன் ஏதோ தப்பும் தாறுமான சாக்ஷியங்களைத் தன் இஷ்டப்படி சொல்லிவைத்துக் கோர்ட்டுக்கு அழைத்து வந்து சல்லியப்படுத்துகிற வழக்கமுடையவனென்றும், இப்போதும் அப்படியே யாராவது பேரில் பொய்ச் சாக்ஷியம் கற்பித்துக் கொண்டு வந்திருப்பானென்றும் கூறினார்கள். ஆயினும் நியாயாதிபதி அந்தச் சாக்ஷியை விசாரணை செய்ய அனுமதி கொடுத்தார். உடனே அப்பெண் சாக்ஷிக் கூண்டில் நிறுத்தப்பட்டாள். இந்தச் சம்பவத்தைக் கண்ட அங்குள்ள ஜனங்கள் அவள் எவ்வாறு சாக்ஷியம் கூறப்போகிறாள் என்பதை அறிய ஆவலுற்று நெருக்கித் தள்ளிக்கொண்டிருந்தார்கள்.

நியாயாதிபதி :— சாக்ஷிக் கூண்டில் நிற்கும் பெண்ணை நோக்கிப் பெண்ணே ! உன் பெயர் என்ன ? என்றார்.

அப்பெண் .—என் பெயர் கோகிலாம்பாள் ; என்றாள்.

நியாயாதிபதி :— இந்தக் கேஸைப்பற்றி உனக்குத் தெரிந்தவைகளை விபரமாய்க் கூறு ?

கோகிலாம்பாள் :— நான் சில மாதங்களுக்கு முன்பு இறந்துபோன வெங்கிடுபதிக் கவுண்டருக்கு அபிமான நாயகியாக இருந்து வந்தேன். அப்படி யிருக்கும்போது ஒரு நாள்—வெங்கிடுபதி கவுண்டர் கொல்லப்பட்ட நாள்—இரவு 8-மணிக்கு மேல் நானும் அவரும் ஒரு இடத்தில் உட்

சார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தோம். அப்போது சுந்தரராஜ கவுண்டர் அக்குற்று தன்னை முன்னமே ஒரு முறை கெடுத்ததுமன்றி இப்போதும் கெடுக்க வெங்கிடு பதி கவுண்டர் முயற்சி செய்ததாகவும் ஆகையால் அவ ரைக் கொன்றுவிடுவதாகவும் பயமுறுத்தினர். நானும் முன்னமே ஒரு முறை சுந்தரராஜ கவுண்டரால் பய முறுத்தப்பட்டிருப்பதால் என்னையும் ஒரு வேளை அவர் கொன்றுவிடுவார் என்கிற பயத்தால் பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டேன் சுந்தரராஜ கவுண்டரின் பயமுறுத்தலைக் கேட்ட வெங்கிடு பதி கவுண்டர் மிகுந்த கோபத்தோடு அடா அயோக் கியப் பயலே உன்னால் ஒன்றும் அப்படிச் செய்ய முடி யாது, உன்னுடைய விரட்டுதலுக் கெல்லாம் நான் பயப் படுகிற பேர்வழியல்ல, உடனே வெளியே போகாவிட்டால் உன்னைக் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளச் சொல்லு வேன்; என்றார். அச்சமயம வெட்டியான்கள் இருவரும் வந்து கவுண்டரிடம் ஏதோ கூறினர்கள். அதற்கு கவுண் டர் ரொம்பவும் கோபித்துக் கொண்டார். அதனால் வெட் டியான்களிருவரும் வெளியே சென்றார்கள். பிறகு சிறிது நேரம் தாழ்த்து சுந்தரராஜ கவுண்டர் வெளியே சென் றார். பின்பு கவுண்டர் மெதுவாகப் பஞ்சணையில் சாய்ந்து படுத்தார். நான் அச்சம்பவங்களையெல்லாம் கதவிடுக்கி லிருந்த துவாரத்தின் வழியாய் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

நியாயாதிபதி:— நிறுத்து. நீ முன்னம் கொடுத்த சாக்ஷி

யத்தில் கதவிடுக்கில் இவாரமில்லையென்றும் ஆகையால் வெளியே நடந்த சம்பவங்கள் ஒன்றும் தெரியாதென்றும் கூறினது ஞாபகமிருக்கிறதா?

கோகிலாம்பாள்:— ஆம். நன்றாய் ஞாபகமிருக்கிறது. அது ஒரு மனிதனுடைய நிர்ப்பந்தத்திற்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொய் கூறினேன். வேண்டுமானால் தாங்கள் ஒரு ஆளை அனுப்பிக் கதவைச் சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

நியாயாதிபதி:— சரி. மேலே நடந்த விஷயத்தைச் சொல்லு.

கோகிலாம்பாள்:— சுந்தரராஜன் கவுண்டர் வெளிச்சென்றதை நான் பார்த்ததும் கவுண்டரிடம் போகலாமென எத்தனித்தேன். அப்போது மீண்டும் யாரோ நடந்து வரும் காலடி யோசை கேட்டுச் சந்தேகித்துக் கதவைத் திறவாமல் கதவிடுக்கின் வழியே பார்த்தேன். அப்போது திடு திடுவென மூன்று மனிதர்கள் வேகமாய் வந்து ஒருவன் கவுண்டரது சிகையையும் ஒருவன் அவாது கால்களையும் மற்றவன் அவர் நெஞ்சின்மீது பாய்ந்து அவரது இரு கரங்களையும் நெஞ்சோடு சேர்த்து அழுத்தியும் பிடித்துக்கொண்டார்கள். அவர்களை யாரென்று கவனித்துப் பார்க்கும்போது கவுண்டர் சிகையை பற்றிக்கொண்டிருந்தவன் கனகாசலமென்றும் கால் காங்களைப் பற்றியிருந்தவர்கள் அவர்களது வேலைக்காரர்களான குள்ளன் முனியனென்றும் தெரியவந்தது. இச்சம்பவம் ஏககாலத்

தில் ஒரே நிமிஷத்தில் நடந்ததாகையால் அவர்களைத் திமிறிக்கொள்ள கவுண்டரால் ஆகவில்லை. ஆகையால் அவர் சப்தமிட வாயைத் திறந்தார். அப்போது இடக்கரத்தால் சிகையை பற்றியிருந்த கனகாசலம் தன் வலக்கையில் தயாராய் வைத்திருந்த துணிப் பந்தைக் கவுண்டரின் வாயில் அடைத்துவிட்டு தன் இடுப்பிலிருந்த கத்தியை யெடுத்து வெங்கிடுபதி கவுண்டரின் கழுத்தின் வலப்புறத்தில் ஓங்கிக் குத்திக் கத்தியை இப்படியும் அப்படியும் ஆட்டினான். அப்போது கர் முர் என்று கொலையுண்டவரிடமிருந்து சப்தம் கிளம்பியது. அவயவங்கள் பதைத்தன. இச்சம்பவத்தைக் கண்ட நான் ஆவென அலறி அப்படியே மூர்ச்சையாய் விழுந்துவிட்டேன். சில நிமிஷங் கழித்து நான் மூர்ச்சை நீங்கி எழுந்து கதவிடுக்கில் பார்த்த போது கனகாசலம் முதலானவர்கள் இல்லை. கவுண்டரின் பிரேதம் மட்டும் இருந்தது. அச்சமயம் மீண்டும் யாரோ நடந்து வரும் காலடி யோசை கேட்டது. நான் சந்தேகத்துடன் கதவிடுக்கில் கவனித்துப் பார்த்தேன். அப்போது ஐயங்கார் மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க வேகமாய் வந்து கவுண்டரிடம் நெருங்கினார். நெருங்கியதும் கவுண்டரின் பிரேதத்தையும் அங்கு நிறைந்திருந்த இரத்தப் பிரவாகத்தையும் கண்டதனாலோ அல்லது வேறு எதனாலோ அவர் தேகம் நடுங்கியது. அவ்விடமே தொப்பென்று விழுந்துவிட்டார். விழுந்தவர் மீண்டும் இரண்டொரு நிமிஷத்தில் எழுந்தார் அவரது தேகமும் ஆடையும் ரத்தத்தால் நனைந்திருந்தது. அதைக் கண்ட ஐயங்கார் முன்னும் பின்னும் திரும்பிப் பார்த்த வண்ணம் தலை கால் தெரியாது முன் வாசல் வழி

யாக ஓடினர். அவர் சென்ற சில நிமிஷங்களுக்குப் பிறகு இன்னும் யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. நான் பின்னும் சந்தேகித்துக் கதவிடுக்கின் வழியாகப் பார்த்தேன் அப்போது கனகாசலக் கவுண்டன், நான் இருக்கும் அறையை நோக்கி வருவதைக் கண்டேன். அவன் கதவருகில் வந்ததும் கோகிலம், கோகிலம், என்று என்னை அழைத்தான். நான் உள்ளிருந்தவாறே ஏன் என்றேன். அவன் பெண்ணே இங்கு நடந்த கொலை விஷயத்தை ஒருவரும் அறியமாட்டார்களென்றும் நீயும் கூட வீட்டிற்குச் சென்றிருப்பாயென்றும் நான் எண்ணியிருந்தேன். ஆனால் தற்செயலாய் நீ கண்டுவிட்டாய். ஆயினும் பாதகமில்லை. தற்சமயம் உன் கைவசமிருக்கும் சுந்தரராஜுவின் சொத்துடன் என்னுடைய சொத்துகளையும் நீ உன்னிஷ்டப்படி சர்வாதிகாரியாய் அனுபவித்து ஒரு பெரிய சீமாட்டி போலவும், சிற்றரசி போலவும், எனது அபிமான நாயகியாக என்னுடனிருக்கலாம். ஆயின் அதற்குப் பிரதியாக நீ இக்கொலை விஷயத்தைப் பற்றி எவரிடமும் உண்மையைக் கூறலாகாது. இவ்வித என் வேண்டுகோளுக்கு நீ இணங்காது ஒரு வேளை உண்மையை கூற உத்தேசிப்பாயாயின், தற்சமயம் என் தகப்பனுருக்குக் கிடைத்த தண்டனையே உனக்கும் கிடைக்கும். என்று என்னை பயமுறுத்தினன். நான் அவனுடைய விரட்டுதலுக்கு அஞ்சி, அவன் இஷ்டப்படியே நடப்பதாக ஒப்புக்கொண்டேன். பிறகு அவன் என்னை கதவைத் திறக்கும்படி கட்டளையிட நான் மறுக்க முடியாது பயந்து கொண்டே கதவைத் திறந்தேன். உடனே அவன் உள்ளே வந்து என்னைக் கட்டித் தழுவிக்

கன்னத்தில் முத்தமிட்டு, கண்ணே! நான் சொன்ன சொல் தவறமாட்டேன். ஆகையால் நீ பயப்படவேண்டுவதில்லை. ஆயினும் நீ வாக்குத் தத்தத்தை மறந்து ஒரு வேளை உண்மை உரைத்தால் எப்படிப்பட்ட சுற் கோட்டையிலிருப்பினும் உன் தலை இரவல் தலைதான்; என்று பயமுறுத்தியதுமன்றி, சுந்தரராஜ கவுண்டரே கொலை செய்ததாய் நான் கூற வேண்டுமென்றும், தான் அதற்கனுகூலமாக சுந்தரராஜ கவுண்டரின் மேல் சந்தேக முண்டென்று கூறுவதாகவும் புகன்று, பிறகு வெளியே வந்து மேஜைமீதிருந்த பெட்டியைத் திறந்து அதிலுள்ள கடிதங்களையும் சவரன்களையும் வெளியில் எடுத்து மேஜை மீது சுற்றிலும் தாறுமாருய் பரப்பி வைத்துவிட்டு ஒரு கடிதத்தை மட்டும் எடுத்துத் தனது சட்டைப் பையில் வைத்துக்கொண்டு, பின்பு தமது தகப்பனுரை யாரோ விரோதிகள் கொன்றுவிட்டார்களென்று வேலைக்காரருக் கெல்லாம் கூறிவிட்டு ஒன்றும் அறியாத உத்தமனைப் போல விசனப்பட்டான். நானும் அங்கிருந்த ஒரு தூணில் சாய்ந்தவண்ணம் நின்றிருந்தேன். அப்போது கவுண்டரது சவத்தின் வாய் திறந்திருந்தது. கொல்லும் போது வாயில் அடைத்த துணிப்பந்தைக் காணேம். பிறகு வேலைக்காரரும் அங்கு வந்து நின்று பரிதபித்தார்கள். அச்சமயந்தான் போலீஸ் இன்ஸ்பெக்டரும் வந்தது. என்று கூறி முடித்தாள்.

நியாயாதிபதி:— நீ இதுவரை கனகாசலத்துக்கு அனுகூலமாக இருந்தவள் அவனிஷ்டத்திற் கிணங்க சுந்தரராஜனே கொலை செய்தா னென்று முன் விசாரணையில் திட்டமாய் கூருமல் வேறுவிதமாகக் கூறியதின் தாத்பர்யமென்ன?

கோகிலாம்பாள்:—நானும் அவனிஷ்டபடி கூறலாமென்றுதான் இருந்தேன். ஆனால் எல்லாவற்றிற்கும் பொதுவாக தெய்வ எத்தனம் ஒன்றிருக்கிறதல்லவா? அச்சமயம் சரஸ்வதி தேவி என் நாவிலிருந்து என் இஷ்டத்திற்கும் கனகாசலத்தின் இஷ்டத்திற்கும் விரோதமாக வேறு விதம் கூறும்படி செய்து விட்டாள்; என்றாள்.

கோகிலாம்பாளின் சாக்ஷியம் முடிந்ததும் நியாயாதிபதி போலீஸாரை அனுப்பி சற்று தூரத்தில் உலாவிக்கொண்டிருந்த கனகாசல கவுண்டனையும் அவனது வேலைக்காரரையும் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். சிறிது நேரத்தில் அவர்கள் அழைத்துக் கொண்டு வரப்பட்டார்கள். கனகாசல கவுண்டன் கோர்ட்டினுள் வந்ததும் சாக்ஷிக் கூண்டில் நின்ற கோகிலாம்பாளைப் பார்த்து திடுக்கிட்டவனாய் ஆ, கோகிலம்! நீ எதற்காக எப்போது இங்கே வந்தாய்? என்று தடுமாற்றத்துடன் கேட்டான். அதற்கு கோகிலாம்பாள் தங்கள் தகப்பனாரைத் தாங்கள் கொலை செய்த விஷயத்தை நடந்தபடியே உண்மையைக் கூற நான் இப்போதுதான் வந்தேன். அதுவும் கூறி முடிந்தது என்றாள்.

அவ்வார்த்தையைக் கேட்ட கனகாசல கவுண்டன் இடியோசை கேட்ட சர்ப்பம் போல் நடுங்கி அடி சண்டாளி என்று அலறிக் கீழே மூர்ச்சையாய் விழுந்தான். அங்கிருந்த ஜனங்கள் யாவரும் அவனே குற்றவாளி அவனே குற்றவாளியெனக் கூவினார்கள். பிறகு அவனது வேலைக்காரர் இருவரையும் குற்றவாளியின் கூண்டில் நிறுத்தப்

பட்டது. நியாயாதிபதி அவர்களை நோக்கி அடே உண்மையைக் கூறினால் தண்டனை சிறிது குறையும். இன்றேல், உங்களுக்குத் தூக்குத் தண்டனையே பிராப்தம் என்று பயமுறுத்தினர். அவர்கள் நியாயாதிபதியின் வார்த்தைக்குப் பயந்து, கனம் பொருந்திய நியாயாதிபதி அவர்களே! நாங்கள் உண்மையைக் கூறி விடுகிறோம். தயவு செய்து எங்களை மன்னித்துத் தண்டியாமல் விடவேணுமென்று கேட்டுக்கொண்டு குள்ளன் உண்மையான விஷயங்களைக் கூற ஆரம்பித்தான்.

நியாயாதிபதி அவர்களே! வெங்கிடுபதி கவுண்டரின் கொலை நடந்த தினத்திற்குச் சுமார் பதினைந்து நாளுக்கு முன் ஒரு நாள் கனகாசல கவுண்டர் என்னையும் முனியனையும் ஓர் தனியிடத்திற் கழைத்துக்கொண்டுபோய் தமக்கு தற்சமயம் ஓர் (50000) ரூபாய் வேண்டுமென்றும், அத்தொகை இப்போது கிடைக்காவிடில் தன் மானமே அடியோடு அழிந்து போகுமென்றும், அப்படித் தன் மானம் அழிவதைக் காட்டிலும் தன் பிராணனைப் பலவந்தமாகப் போக்கிக் கொள்வது சிலாக்கியமென்றும் கூறியதுமன்றி, நாங்கள் மட்டும் முழு மனம் வைத்து உதவி செய்ய முற்படுவோமாயின் தற்சமயம் அவருக் கேற்பட்டிருக்கும் பேராபத்து முற்றிலும் நீங்கிப் போகுமென்றும், தவிர நாங்கள் செய்யும் உதவிக்கு பிரதியாக எங்களொவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபாய் கொடுப்பதாகவும் கூறியதுமன்றி எங்களுக் கொரு கெடுதியும் நேரிடாமல் பார்த்துக் கொள்வதாகவும் கூறினர். நாங்கள் எங்கள் வாழ் நாளிலேயே

இதுவரையிலும் ஒரே தடவையில் கண்டறியாத அவ்வளவு பெருந்தொகையான ரூபாய் வருகிறதென்ற பேராசையினால் எத்தகைய காரியமாயிருப்பினும் செய்யத் தயாராயிருப்ப தாகவும், செய்ய வேண்டிய காரியத்தை விளங்க உரைக்க வேண்டுமென்றும் கேட்டோம். அதற்கவர், தமக்கு வேண்டிய தொகையை ஞாயமான மார்க்கங்களில் தாமடைய ஒரு போதும் முடியாதென்றும் ஆதலின் தமது தந்தையை எப்படியாவது வேலை முடித்தால் அவரது சொத்துகள் முழுவதும் தமக்குக் கிடைக்குமென்றும், அதனால் தமது கஷ்டமே அன்றுடன் அடியோடு அகன்று விடுமென்றும் கூறியதுமன்றி, தம்மை விவாகம் செய்து கொள்ளும்படி அவர் சுவர்ணம்பாளைப் பலதரம் கேட்டும் அவள் ஒப்புக் கொள்ளாததுமன்றி ஒரு நாள் பூங்காவில் அவளும் சுந்தர ராஜனும் சந்தித்ததாகவும், அப்போது அவள் தம்மைப் பற்றிக் கேவலமாகவும் அவமதிப்பாகவும் வார்த்தையாடிய தோடு, சுந்தர ராஜனுவை மணந்து கொள்வதாக ஒப்புக் கொண்டதாகவும், அதை தாம் தற்செயலாக அவ்வழியாகப் போனபோது ஒளித்திருந்து கேட்டதாகவும், அவ்வாறு தம் அந்தஸ்தைச் சிறிதும் மதியாமல் தம்மை அலக்ஷியித்துத் திரஸ்கரித்த அகங்காரப் பேய் பிடித்த அப்பெண்ணைத் தாம் எப்படியாவது மணந்து பிறகு அவளுக்குத் தகுந்த தண்டனை செய்ய வேண்டுமென்றும், அப்படி அவள் தம் மிஷ்டத்திற் கிணங்கித் தம்மை விவாகம் செய்து கொள்ளும் படி செய்ய வேண்டுமானல் சுந்தர ராஜனுவை எப்படியாவது தொலைக்க வேண்டுமென்றும், அப்படி அவனைத் தொலைக்க வேண்டுமானல் தந்திரமாக அவனை இக் கேஸில்

மாட்டிவிட வேண்டுமென்றும், அப்படி மாட்டிவிட்டால் தமது தந்தையின் கொலையோடு காரியம் ஒழுங்கு பட்டுப் போவதன்றி சுந்தர ராஜுவையும் கொலை செய்ய வேண்டிய தொந்தரவில்லாமற் போகு மென்றும், சுந்தர ராஜு தொலைந்த பிறகு அவள் அவசியம் தம்மை விரும்புவாளென்றும், ஒரு வேளை அப்போதும் தம்மீது அவளிஷ்டப்படாமலிருந்தால் அதற்குத் தகுந்த வேலை செய்யத் தமக்குத் தெரியுமென்றும் கூறினர். அதற்கு நாங்கள், நாம் கொலை செய்துவிட்டு அவரை எப்படி இதில் சிக்கவைப்பதென்றோம். அதற்கவர், எப்படியாவது தந்திரம் செய்து ஒரு நாளைக்கு சுந்தர ராஜுவை தமது வீட்டிற் கழைத்து வந்து சிறிது நேரம் பாஷித்த பிறகு அவரை அனுப்பிவிட்டு உடனே ஒருவருக்கும் தெரியாமல் வெங்கிடுபதி கவுண்டரைக் கொலை செய்துவிட வேண்டுமென்றும், பிறகு கவுண்டரின் நெடு நாளைய விரோதியாகிய சுந்தர ராஜு வந்து கவுண்டரைக் கொலை செய்துவிட்டுப் போய்விட்டானென்றும் கூறி கதை கட்டி விடுவதுமன்றி நாம் மூவரும் அவ்விதமாகவே சாக்ஷியம் கூற வேண்டுமென்றும், நாம் அவ்வாறு ஒழுங்காய் நடந்து கொண்டால் சுந்தர ராஜுவின் கழுத்தில் தூக்குக் கயிறு விழுவது நிச்சய மென்றும், தவிர சுந்தரராஜு இங்கு வந்து போனதைக் கண்ட நமது மற்ற வேலைக்காரர்களெல்லாம் நாம் கூறும் கதையை உண்மையென்று நம்புவது மன்றி நமக்கனுசரணையாகச் சாக்ஷியம் கூட கூறுவார்களென்றும், அதற்காகவே தாம் சில நாளைக்கு முன் சுந்தர ராஜுவின் கத்தியைக் காணுமல் எடுத்து வந்து வைத்திருப்பதாகவும், அக்கத்தியாலேயே தமது

தந்தையைக் கொலை செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

நாங்கள் பணத்தாசையாலும், ஏராளமான பணப் பெருக்குடையவர்கள் தங்கள் பணத்திமிரால் எத்தகைய கொலைக் குற்றங்களையும் மறைத்து உத்தமர்களென வெளி வருதல் தற்காலத்தில் நடந்து வரும் சாதாரண வழக்கமாதலாலும், அவ்வாறே கனகாசல கவுண்டரும் ஏராளமான சொத்துக் கதிபதியாய்ப் போவதால் எங்களுக் கொருவித மான கெடுதியும் நேராதென்ற தைரியத்தாலும், இடங் கொண்டு ஒரு வாறு அவரிஷ்டத்திற் கிணங்கி இடத்தையும் காலத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அப்படி யிருக்க ஓர்நாள்—வெங்கிடுபதிகவுண்டர் கொலையுண்ட நாள் —நாங்கள் மூவரும் மேல் மாடியிலிருந்து இது விஷயமாய் மந்திராலோசனை செய்து கொண்டிருந்தோம். அப்போது கீழ்மாடியிலிருந்த கூடத்தில் யாரோ சண்டையிடும் சத்தம் கேட்டது. மேல் மாடியிலிருந்தவாறே கீழ்மாடியில் நடக்கும் விஷயங்களை யறியச் சாதகமாய் வைக்கப் பட்டிருந்த ஒரு பலகணி வழியாக நாங்கள் அச்சண்டை என்னவென்பதைக் கவனித்துப் பார்த்தோம், அப்போது சுந்தரராஜனு கையில் கத்தியுடன் வெங்கிடுபதி கவுண்டரின் அருகில் நின்று உன்னைக் கொல்லாமல் விடுவதில்லையெனக் கூறினர். அச்சம்பவத்தைக் கண்ட அங்கிருந்த கோகிலாம்பாள் அவ் விடமிருந்து அப்பால் சென்றாள். சுந்தரராஜனுக் கவுண்டரின் பயமுறுத்தலைக் கேட்ட வெங்கிடுபதி கவுண்டர் மிகுந்த கோபத்தோடு “அடா அயோக்கியப் பயலே உன்னாலொன் றும் அப்படிச் செய்ய முடியாது. உன்னுடைய விரட்டு

தலுக்கெல்லாம் நான் பயப்படுகிற பேர்வழியல்ல, உடனே வெளியே போகாவிட்டால் உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன் என்றார்." பிறகு இரண்டொரு நிமிஷங் கழித்து இரண்டு வெட்டியான்கள் வந்தார்கள். அவர்கள் மேல் கவுண்டர் கோபித்துக்கொண்டார். உடனே அவர்களும் வெளிச் சென்றார்கள். அச்சமயம் கனகாசல கவுண்டர் எங்களை நோக்கி அடேடே இதுதான் தகுந்த சமயம், நீங்கள் தயாராயிருங்கள் - சுந்தரராஜனே எனது தந்தையைக் கொலை புரிந்துவிட்டால் நமக்குச் சிறிதும் தொந்தரவில்லாமல் போய்விடும். ஒருவேளை அவன் கொலை புரியாது விட்டால் அவன் வெளிச் சென்றதும் உடனே நாம் வேலையை முடித்து விடுவோமென்றார். அவ்வாறே சில நிமிஷத்தில் சுந்தரராஜனும் சாந்தமாய் வெளிச் சென்றார். கவுண்டர் தாம் இதுவரை சண்டையிட்ட சிரமத்தால் பஞ்சணையிற் சிறிது சாய்ந்து படுத்தார். உடனே நாங்கள் மாடியை விட்டு வேகமாய்க் கீழே சென்று மூவரும் ஏக காலத்தில் கவுண்டரின் மீது பாய்ந்தோம். என்று அது முதல் கோகிலாம்பாள் கூறியபடி அவரைக் கத்தியால் குத்திக் கொன்றது வரை விபரமாகக் கூறியதுமன்றி செய்கை நடக்கும்போது பக்கத்தறையில் கோகிலாம்பாள் அலறியதாகவும், அதைக் கேட்ட தாங்கள் பயப்பட்டதாகவும், கனகாசலம் அவளை தான் சமாதானப்படுத்த முடியுமென்றும், ஆதலின் தாங்கள் பயப்பட வேண்டிய தில்லை யென்று சமாதானங் கூறியதாகவும் பிறகு தங்கள் மேலும் தங்களது ஆடைகள் மேலும் உள்ள இரத்தக் கறைகளைச் சுத்தி செய்யச் சென்றிருந்த போது தான் ஐயங்கார் அங்கு வந்த

23

தாகவும், அதன் பிறகு கனகாசலம் கோகிலாம்பாளை சமா தானப் படுத்தியதாகவும், பிறகு கவுண்டரின் பிரேதத்தைச் சூழத் தாங்களிருந்து விசனித்துக் கொண்டிருந்ததாகவும் கூறினான், பிறகு முனியனை விசாரிக்க அவனும் குள்ளனைப் போலவே முற்றும் உண்மையைக் கூறினான்.

உடனே நியாயாதிபதி ஜூரிகளுடன் யோசித்து கன காசல கவுண்டனுக்குத் தூக்கு தண்டனையும், அவனுக்கு உடந்தையாயிருந்த குள்ளன் முனியன் என்ற அவனது வேலைக்காரர்கள் இருவருக்கும் தலைக்கு இருபது வருஷம் தீபாந்திர சிக்ஷையும் விதித்து சுந்தரராஜு கவுண்டனையும் வெட்டியான்கள் இருவரையும் விடுதலை செய்தார். கோகி லாம்பாள் பெண்பாலாகையாலும், முதலில் அவள் குற்றவா ளிக்கு உடந்தையாயிருந்தது அவனது பயமுறுத்துதலாலா கையாலும், முடிவில் உண்மையைக்கூறியதற்காகவும் நியாயா திபதி அவளை மன்னித்தார். பிறகு மூர்ச்சை நீங்கி எழுந்த கனகாசல கவுண்டனையும் அவனது வேலைக்காரர் இருவரை யும் போலீஸார் அப்பால் அழைத்துக்கொண்டு சென்றார்கள். இச்சம்பவத்தைக் கண்ட அங்கு கூடியிருந்த ஜனங்கள் மிகுந்த ஆச்சரியமும் வியப்பும் அடைந்தார்கள். கதிர்வேலு கவுண்டரின் உள்ளம் சுந்தரராஜுவின் விடுதலையால் மிகுந்த ஆனந்தம் அடைந்தது. அவரது நயனங்களும் முகமும் பிரகாசித்தன. தேகம் புளகிதமுற்றது. கண்களில் ஆன ந்த பாஷ்பம் சொரிந்தது. இந்த ஆனந்தத்தைத் தம்முட னிருந்து அநுபவிக்கத் தமது செல்வக் குமார்த்தி சுவர் ணம்பாள் இல்லாததைக் குறித்து மனம் வருந்தினார். ஆ!

என் மகளே! நீ எவ்விடத்தில் கஷ்டப்படுகிறாயோ என ஏங்கித் தன்னை மறந்து நின்றார். கனகாசலத்தின் வேலைக் காரர் கூறிய சாக்ஷியத்திலிருந்து ஒருவேளை துஷ்டப்பயலாகிய கனகாசலமே தன் குமார்த்தியைக் களவாடிக்கொண்டு போயிருப்பானெனக் கருதினார். எதற்கும் ஸ்ரீனிவாசனைக் கண்டால் தமது குமார்த்தியின் சங்கதி தெரியுமென்றெண்ணி அவரைக்காண ஆத்திரம் கொண்டு நின்றார். அச்சமயம் கோகிலாம்பாளை அழைத்துக்கொண்டு வந்த மனிதன் கதிர்வேலு கவுண்டரின் அருகில் வந்து ஐயா! கோர்ட்டு கலைந்து விட்டது. நாம் வீட்டுக்குச் செல்வோம் வாருங்கள் என்றான். அப்போது கதிர்வேலு கவுண்டர் அம்மனிதனின் கரங்களைப் பற்றிக்கொண்டு ஐயா! தங்களை இன்னாரென்று தெரியவில்லை. ஆயினும் தாங்கள் ஸ்ரீனிவாசனால் அனுப்பப்பட்டவராய் இருக்கலாமென்று அனுமானிக்கிறேன். தயவு செய்து தாங்கள் சமயத்தில் வந்து உதவி சுந்தரராஜுவிற்குப் பிராணப் பிரதிஷ்டாபனம் செய்து வைத்தீர். தயவு செய்து ஸ்ரீனிவாசனிருக்குமிடத்தை நீர் கூறவேண்டுமென்றார். அதற்கு அம்மனிதன் ஐயா! தாங்கள் நாளைக் காலை 8 மணிக்கு ஸ்ரீனிவாசனைக் காணுவது நிச்சயம். என்று கூறிவிட்டு சுந்தரராஜுவையும் கதிர்வேலு கவுண்டரையும் அழைத்துக்கொண்டு வண்டியருகில் சென்று வண்டியின் கதவைத் திறந்தான். வண்டியினுள்ளிருந்து முதலில் ஓர் மூதாட்டியும் அவளுக்குப்பின் மெலிந்த தோற்றத்தையுடைய ஓர் இள மடந்தையும் இறங்கினார்கள். அவ்விளங்கன்னிகையைக் கண்ட கதிர்வேலு கவுண்டர் ஆ! என் செல்வக் குமார்த்தியே! என்று அருகில் ஓடி

அப்பெண்ணை இருகத் தழுவினர். உச்சி முகந்தார். முத்தமிட்டார். உள்ளபடியே சில நிமிஷம் துள்ளித் துள்ளிக் குதித்தார். கோகிலாம்பாளை அழைத்து வந்த அம்மணி தரின் கரங்களைப் பற்றிக் கொண்டு ஐயா! தாங்கள் செய்த உபகாரம் எல்லையற்றது. சிறிது நேரத்திற்கு முன் சுந்தரராஜுலுக்கு உயிர் கொடுத்த தாங்கள் இப்பவோ பின்னையோ செல்லும் ஸ்திதியிலிருந்த என் உயிரையும் நிலை நாட்டினீர்கள். இதற்குத் தகுந்த கைமாறு செய்ய நான் அசக்தன். அம்மஹானுபாவராகிய ஸ்ரீனிவாசனுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவியுங்கள். என்று மிகவும் கொண்டாடிப் புகழ்ந்து பேசினர். சுந்தரராஜுலுவும் சுவர்ணம்பாளும் சிறிது லஜ்ஜையுடையவர்களாய் தங்கள் சிரத்தைத் தாழ்த்தியிருந்தும் கள்ளத்தனமாய் தங்கள் அழகிய நயனங்களை அன்புற விழித்து ஒருவரை ஒருவர் இன்புற நோக்கி இறும்பூதுற்று உளமகிழ்ந்தார்கள். பிறகு அப்பெண்கள் மூவரும் ஒரு வண்டியிலும் கதிர்வேலு கவுண்டரும் சுந்தரராஜுலுவும் வக்கீல் மகாதேவையரும் அந்நூதன மனிதரும் ஒரு வண்டியிலுமாக வீட்டிற்குச் சென்றார்கள்.

## 28-வது அத்தியாயம்.

# இரகசிய விளக்கம்.

விசாரணை நடந்த மறுநாள் காலை 9 மணிக்கு கதிர்வேலு கவுண்டரின் வீட்டிலுள்ள கூடத்தில் போலீஸ் கமிஷனர் ஸ்டோன் துரையவர்களும், போலீஸ் இன்ஸ்பெக்டர் சாம்பமூர்த்தி ஐயரும், ஸ்ரீனிவாசனும், கதிர்வேலு கவுண்டரும், சுந்தரராஜு கவுண்டனும், உட்கார்ந்திருந்தார்கள். கூடத்திற்குப் பக்கத்திலுள்ள ஓர் அறையில் கதிர்வேலு கவுண்டரின் பார்யை பத்மாவதியும், சுவர்ணும்பாளும், கோகிலாம்பாளும், உட்கார்ந்திருந்தார்கள். அப்போது கதிர்வேலு கவுண்டர் ஸ்ரீனிவாசனை நோக்கி ஐயா! நேற்று விசாரணையில் சுந்தரராஜு குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு (20) வருஷம் தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டதும், பிறகு தாங்கள் அனுப்பி வைத்த சாக்ஷியால் உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனையடைந்ததும், சுந்தரராஜு நிரபராதியென விடுதலையடைந்ததும் எங்களுக்குத் தெரியுமேயன்றி இதற்கு முன் நீங்கள் குற்றவாளியைக் கண்டு பிடிக்கச் செய்த முயற்சிகளும், அவ்வாறே சுவர்ணும்பாளைக் கண்டுபிடிக்கச் செய்த சாகசங்களும் எங்களுக்குத் தெரியவில்லை. மேலும் நேற்று சுவர்ணும்பாளையும் கோகிலாம்பாளையும் வேறொரு மனிதர் மூலமாய்க் கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டுத் தாங்கள்

வராமலிருந்ததின் காரணமும் தெரியவில்லை. ஆகையால் தாங்கள் தயவு செய்து அவ்விஷயங்களை விவரித்துக் கூறும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்; என்றார். பிறகு போலீஸ் கமிஷனரும் அவ்விஷயங்களை அறியத் தமக்கும் மிகுந்த ஆவலிருப்பதாகவும் ஆகையால் அவ்விஷயங்களை விளங்க உரைக்கும்படியும் கூறினர்.

ஸ்ரீநிவாசன் :— உங்களெல்லோருடைய இஷ்டப்படிக்கே நான் விஷயங்களைக் கூறிக்கொண்டு வருகிறேன். உங்களுக்கு அவகாஸப்படாத விடத்தில் என்னைக் கேளுங்கள். நேற்று கோகிலாம்பாளுடனும் சுவர்ணாம்பாளுடனும் கோர்ட்டுக்கு வந்த மனிதன் நானே. அப்போது நான் வேறு வேடம் அணிந்திருந்ததால் என்னை யாரும் அறிந்துகொள்ளவில்லை. கோர்ட்டாரும் என்னைப்பற்றி ஒன்றும் கேட்காமையால் நானும் வேடத்திற் கிணங்க வேறு மனிதன் போலவே கடைசிவரை உங்களோடு வார்த்தையாடினேன். நிற்க நான் மரண விசாரணையின்போதும் பிரேத பரிசோதனையின் போதும் கூடவே இருந்தபடியால் ஒவ்வொருவரின் சாக்ஷியங்களையும் மற்றும் அறியவேண்டிய பல விஷயங்களையும் தெரிந்துகொண்டேன். கொலை நடந்த விஷயத்தை யூகித்ததில் வெங்கிடபதிக் கவுண்டரின் மரணத்தினால் யாருக்கு லாபமாவது பழிவாங்கினோமென்ற சந்தோஷமாவது ஏற்படுகிறதோ அவர்களே பெரும்பாலும் இக்கொலைக்கு முக்கிய காரணஸ்தர்களென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆகவே அதை முன்னிட்டு சுந்தரராஜனின் வாக்குமூலத்தையும் மற்றவர்களின் சாக்ஷியங்களையும் ஆதாரமாகவைத்து

ஒரு வேளை சுந்தரராஜுவால் கொலை நடந்திருக்குமாவென்றும் அப்படி நடந்திருந்தால் என்னென்ன காரணங்களை முன்னிட்டிருக்கலாமெனவும் யோசித்துப் பார்த்தேன். அதில் வெங்கிடுபதி கவுண்டர் கோகிலாம்பாளோடு சேர்ந்து சுந்தரராஜுவை அடியோடு கெடுத்த விரோதத்தை முன்னிட்டாவது, அல்லது தான் விவாகம் செய்துகொள்ளவேணுமென்றெண்ணியிருந்த சுவர்ணும்பாளை வெங்கிடுபதி கவுண்டர் தன் குமாரனுக்குக் கொடுக்கவேணுமென்று கட்டாயப் படுத்திய விரோதத்தை முன்னிட்டாவது, அல்லது பெருங் கடனின் தொந்தரவால் வெங்கிடுபதி கவுண்டரிடம் சிக்கிக் கொண்டிருக்கும் கதிர்வேலு கவுண்டரது தூண்டுதலையாலாவது சுந்தரராஜு வெங்கிடுபதி கவுண்டரைக் கொலை செய்திருக்கவேண்டுமேயன்றி வேறு காரணங்களொன்றுமில்லை.

இன்ஸ்பெக்டர் :— ஐயா! சற்று பொறுங்கள். மிக்க உத்தமமான நடக்கையுள்ளவரும் போலீஸராகிய எங்களாலும் கூட சந்தேகிக்கப்படாத நடக்கையுடையவருமான கதிர்வேலு கவுண்டர் மீது தாங்கள் சந்தேகித்ததைக் குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன்; என்றார்.

ஸ்ரீனிவாசன் :— ஐயா! இப்படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் உத்தமரென்றும் அதமரென்றும் எண்ணி ஆராய்ந்து பாராமலிருப்பது அநேக ஆபத்துகளுக்கிடமாகும். இது இப்படியிருக்குமா அது அப்படியிருக்குமா என்று ஒவ்வொரு விஷயத்தையும் அடுக்கிப் பார்த்துக் கடைசியில் அவை ஒழுங்குபட்டு வராவிடில் தள்ளிவிடவேண்டுமேயன்றி

முதலிலேயே யோசியாமல் விட்டு விடுவது பெரும் பிசகு. ஆகையால் என் வழக்கப்படி அவரை எனது ஆராய்ச்சியில் கொண்டுவந்தேன் என்றான்.

இன்ஸ்பேக்டர் :— சரி மேலே நடந்த விஷயத்தைக் கூறுங்கள்.

ஸ்ரீனிவாசன் :— கொலை செய்வதற்குரிய காரணங்களிருப்பதினாலேயே ஒருவரைக் கொலையாளியென்றெண்ணுவது சரியல்ல. ஆகவே அது விஷயமாய் யோசித்ததில் சுந்தரராஜு ஒருவனே வெங்கிடுபதி கவுண்டரைக் கொல்லுதல் சாத்தியமில்லையென்றேற்பட்டது.

இன்ஸ்பேக்டர் :— ஐயா! கொஞ்சம் பொறுங்கள். சுந்தரராஜு ஒருவனாலேயே கொலை செய்தல் முடியாதென்பதற்குத் தகுந்த காரணத்தைக் கூறவேண்டும்; என்றார்.

ஸ்ரீனிவாசன் :— வெங்கிடுபதி கவுண்டர் தகுந்த பலசாலியாதலால் ஒருவர் கைக்கு அடங்கி லகுவில் கொலையுண்ணமாட்டாராதலாலும், ஒருவேளை ஏதாவது சதிப்பாட்டில் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்று வைத்துக்கொண்டாலும் பொதுவாய்க் கொலையுண்டு பிராணன் போகும் போது, கொலையுண்டவரின் அவயவங்கள் சாதுவாயிராமல் பேசியின் விரைப்பால் முறுக்கப்பட்டு அலங்கோலமாகவும். தாறுமாறாகவும் இருக்குமாதலாலும், அப்படி வெங்கிடுபதி கவுண்டரின் அவயவங்கள் தாறுமாறின்றி மிக்க ஒழுங்காயிருந்தாலும், அவ்வாறு ஒழுங்காயிருப்பதற்கு அவரைக்

கொன்றவர்கள் அவருடைய பிராணன் நீங்கி தேகத்தின் பதைப்பு அடங்கும் வரையில்—சில நிமிஷங்கள்—ஒரே பிடியாய் அவயவங்களை அமுக்கிப் பிடித்திருக்க வேண்டுமென்று நன்ருகத் தெரிகிறபடியாலும், ஒரு வேளை சுந்தரராஜனே அவ்வாறு அமுக்கிப்பிடித்திருப்பானென்று வைத்துக் கொள்வதாயிருந்தால், அவர் கொலையுண்டு உயிர் போகும் தருணத்தில் அவரது அவயவங்களை சுந்தரராஜன் ஒருவனுல் அடக்கிப் பிடித்தல் சாத்தியமில்லை யாகையாலும், கொன்றவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசாமிகளென்றும் ஒருவனுல் கொலை செய்யப்பட வில்லையென்றும் தடையின்றிக் கூறலாம்; என்ருன்.

இன்ஸ்பெக்டர் :— சரி, சுந்தரராஜன் ஒருவனுகவே கொலை செய்தல் சாத்யமில்லை என்பதற்குத்தான் ஏதோ சமாதானம் கூறினீர்கள். ஒரு வேளை சுந்தரராஜனும் வெட்டியான்களும் ஆக மூவரும் சேர்ந்து கொலை செய்திருந்தா லாகாதா ?

ஸ்ரீனிவாசன் :— ஆம். அப்படியும் யோசிக்கலாம் நானும் அவ்வாறே சந்தேகித்து ஒருவேளை சுந்தரராஜனுக்கு ஒத்தாசையாக வெட்டியான்களிருவரும் இருந்திருக்கலாமென அவர்களைக் குறித்து விசாரித்ததில் அவர்கள் மிகுந்த யோக்கியர்களென்றும், இதுவரை எவ்விதமான குற்றச் சாட்டுகளையும் உடையவர்களல்லவென்றும் நன்ருய்த் தெரிந்தது. ஆயினும் ஒரு வெட்டியானின் சட்டையில் கழுத்தக் கருகில் இரத்தக்கறை இருக்க வேண்டிய காரண

மென்னவென்று சந்தேகித்து அதை அறிய அவனது சட்டையிலுள்ள இரத்தக்கறையை இரசாயனப் பரிசோதனை செய்து பார்த்ததில் அது மனிதரத்தமல்லவென்றும், ஒரு விதமான பக்ஷிரத்தமென்றும் தெரிய வந்தது. மனிதரத்தமல்லவென்று தெரிந்தவுடனே அவ்விஷயத்தை நான் விட்டு விட வேண்டியவனாயிருந்தும், விடாமல் மீண்டும் விசாரித்ததில் அவன் கோழிச்சண்டை விடுபவனென்றும், செய்கை நடந்த அன்று மாலை நாலு மணிக்குத் தனது கோழியைச் சண்டைக்கு விட்டதாகவும், அதில் அவனதுகோழி அநேக காயங்களடைந்தும் கடைசியில் ஜெயித்து விட்டதாகவும், பிறகு காயமடைந்த தனது கோழியைப் பக்குவமாய் கக்ஷத்தில் எடுத்துக்கொண்டு வந்ததாகவும், சங்கதி தெரிந்தது. ஆதலால் அவனது சட்டையில் இரத்தக்கறை பட்டிருந்ததின் சந்தேகம் தீர்ந்தது. ஆகவே அந்த இரத்தம் மனிதரத்தமல்லவாகையாலும் உண்மையில் அவர்கள் கொலையில் சம்பந்தப்பட்டிருந்தால் அங்கு பீறிட்டுச் சுவற்றிலும் மற்ற இடங்களிலும் ஏராளமாய்ச் சிதறியிருக்கும் இரத்தத் துளிகள் அவர்கள் ஒவ்வொருவரது ஆடைகளிலும் தேகத்திலும் பட்டிருக்குமாகையாலும், வாயிற்காவலன் தற்போது நான் பரிசோதனை செய்த இரத்தக்கறையைத் தவிர வேறு இரத்தக் குறிகள் அவர்கள் மூவரின் ஆடைகளிலும் இல்லையென்று விசாரணையின்போது திட்டமாய்கூறியதாலும், தவிர நானே அந்த உடையை நேரில் பார்த்ததாலும், அவர்கள் மூவரும் கொலையில் சம்பந்தப்படவில்லையெனத் திட்டமாய்த் தெரிந்தது. ஆகையால் இவர்களை விட்டு ஐயங்காரரைப் பற்றி விசாரித்ததில், அவருக்கும் இறந்துபோன வெங்கிடுபதி

கவுண்டருக்கும் சிறிது மனஸ்தாபம் இருந்ததாகத் தெரிந்த தேயன்றி எக்காரணத்தால் என்றும் எவ்வளவுக்கு அதிக விரோதமென்றும் தெரியவில்லை. ஆதலால் நான் ஒரு ஐயங்காரர் வேடம்பூண்டு தாந்தோணி ஐயங்காரரின் வீட்டுக்குச் சென்றேன். அங்கு அவரது கிழச்சம்சாரம் மிக்க மனவாட்டத்துடன் படுத்திருந்தாள். அவள் என்னை யார் என்று கேட்க, நான் தாந்தோணி ஐயங்காரரின் பாலிய நேசனென்றும், நெடுநாளாய் எனக்கும் அவருக்கும் சந்திப்பு ஏற்படவில்லையென்றும், ஆனால் கடிதப் போக்குவரவு மட்டும் உண்டென்றும், கூறியதுமன்றி சில நாட்களுக்கு முன் அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்ததாகவும் அதில் அவர் ஒரு பெரிய தனவந்தரை அடுத்திருப்பதாகவும்; அத்தனவந்தரால் அவருக்கு ஏராளமான பொருள் கிடைக்கப்போவதாகவும், அச்சந்தோஷத்தை நானும் அவருடனிருந்து அனுபவிக்க என்னை உடனே புறப்பட்டு வர வேண்டுமென்று எழுதப்பட்டிருந்ததாகவும், ஒரு முழுப் பொய்யை முதலில் கூறினேன். அதற்குஅவள் கண்களில் நீரைப்பெருக்கிக்கொண்டும் மூக்கைச்சிந்திக்கொண்டும் சுவாமிகளே! அந்தப் பணக்காரன் பாழாய்ப்போக. அவன் பணத்தில் இடிவிழ அந்த அல்பாயுசை அடுத்து நேசிக்கத்தான் எங்களையருக்கு ஆபத்து வந்துவிட்டது. அவரின் கழுத்துக்குத் தூக்குக் கயிறு காத்துக்கொண்டிருக்கிறது. என்று தன் குறைகளைக் கூறிக்கொண்டு புலம்பினாள். நான் அவளைச் சமாதானப்படுத்தி அவருக்கு நேர்ந்த ஆபத்தை விபரமாய்க் கூறும்படி கேட்டேன்.

அதற்கு அவள் சில நாட்களுக்கு முன் தமது கணவர் என்றுமில்லாத விதமாய்த் தம்மை சிங்காரித்துக்கொண்டு இரவு சுமார் பத்து மணிக்கு வெளியே சென்றவர், மீண்டும் அன்று விடியற்காலம் நான்கு மணிக்கு வீட்டிற்கு வந்தாராம். அவரது தேகமாதியந்தம் காயங்களாகி இரத்தம் வடிந்திருந்ததாம். அவர் மிகுந்த களைப்பும் சோர்வும் அடைந்தவராய்த் தொப்பென்று படுக்கையில் வந்து வீழ்ந்தவர் அதே படுக்கையாய் பதினைந்து நாட்கள் கஷ்டப்பட்டுப் பிறகு தேறி எழுந்ததாகவும், பின்னும் சில நாட்கள் சென்ற பின்பு ஒரு தினம் இரவு எட்டு மணிக்கு வெங்கிடுபதிகவுண்டர் அழைத்துக் கொண்டுவரச் சொன்னதாக ஒரு ஆள் வந்து தமது கணவரை அழைத்ததாகவும், தான் அந்நேரத்தில் அங்கு போகவேண்டாமெனப் பலதரம் சொல்லியும் கேளாமல் வாழை மட்டை சீவிக்கொண்டிருந்தவர் அதை எறிந்துவிட்டுக் கையிலிருந்த கத்தியோடு வேகமாகச் சென்றதாகவும், மீண்டும் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு வஸ்திரத்தில் இரத்தக் கறைகளுடனும் இரத்தக் கறைபட்ட கத்தியுடனும் வீட்டிற்கு ஓடி வந்ததாகவும், தான் அதைக் குறித்து விசாரிக்க அவர் வெங்கிடுபதி கவுண்டரை யாரோ கொன்று விட்டதாகவும் அவரின் சவத்தைக் கண்டு பயந்து தாம் கீழே விழுந்ததாகவும், அங்கிருந்த இரத்தம் தமது ஆடையிலாய்விட்ட தென்றும், கூறினாராம். பிறகு மறுநாள் விசாரணை நடந்தபோது தனது கணவரையும் குற்றவாளி யெனச் சிறைச்சாலையில் அடைத்து விட்டதாகவும் கூறிப் பிரலாபித்தாள். நான் அவளுக்குச் சமாதானம் கூறிவிட்டு அப்பால் சென்றேன். நான் இவ்வளவு பிரயாசைப்

பட்டும் ஐயங்காரருக்கும் வெங்கிடுபதி கவுண்டருக்கும் இருந்த விரோதம் இத்தன்மைத்தென அறியமுடியவில்லை. ஆயினும் நான் அவ்வளவோடு நிற்காமல் வெங்கிடுபதிகவுண்டரின் வீட்டிலுள்ள வேலைக்காரரில் ஒருவரை சிநேகித்து இந்த விஷயத்தை அறிய வேண்டுமென்று அங்கு அடிக்கடி போய்த் திரிந்ததில் அங்கிருந்த கேட்டுக்காரனான கந்தனைச் சினேகித்தேன். அவன் மிகவும் ஏழையெனவும் பத்துப் பதினைந்து குழந்தைகளை யுடையவனென்றும் தெரியவந்தது. ஆகையால் நான் அவனிடம் ஓர் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்து அண்ணா! இதை நீ உன் இஷ்டம்போல் செலவழித்துக்கொள் என்றேன். அவன் அதை மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டதுடன், எனக்கு நன்றிமிக்க வந்தனமும் செய்தான். அன்று முதல் எங்கள் நேசம் பெருகியது. ஒரு நாள் நான் அவனை நோக்கி அண்ணா! தற்போது சிறையிலிருக்கும் காரந்தோணி ஐயங்காரர் கொஞ்ச நாட்களுக்கு முன் என்னிடம், வெங்கிடுபதி கவுண்டரும் அவரது வேலைக்காரர்களும் மிகுந்த அயோக்கியர்களென்றும் போக்கிரிகளென்றும் தூஷித்துக் கூறினார். அப்படி அவர் உங்களை தூஷிப்பதற்கு நீங்கள் அவருக்குச் செய்த தீமை என்னவென்றேன். அதற்குக் கந்தன் அவன் கிடக்கிறான் அடிமுட்டாள் பயல் அன்று மாரப்ப நாயுடுவிடம் அடிபட்டு மல்லாந்து கிடந்ததை மறந்து விட்டான். இனி என்னால் ஒரு தரமும் இடிபட வேணுமென்று எண்ணியிருக்கிறான் போலிருக்கிறது. என்று கோபமாகக் கூறினான். நான் ஆம் அண்ணா நானும் கூட அவரை ஒரு அயோக்கியர் என்று தான் நினைத்தேன். அது கிடக்கட்

மேம். மாரப்ப நாயுடு எதற்காக அவரை அடித்தான்; என்றேன். அதற்கவன்,

மாரப்ப நாயுடு அடியிற் கண்ட விஷயத்தைத் தன்னுடன் கூறியதாகச் சொன்னான். அதாவது.

ஒரு நாள் வெங்கிடுபதி கவுண்டர் மாரப்ப நாயுடுவை அழைத்து, தாந்தோணி ஐயங்கார் தமதபிமான நாயகியாகிய கோகிலாம்பாளைக் கூடிச் சுகிக்க வேணுமென்று பலதரமும் அவளைக் கேட்டு நிர்ப்பந்தித்து வருவதாகக் கோகிலாம்பாள் தம்மிடம்கூறி மிக வருந்தி அழுததாகவும், ஐயங்கார், தமது அந்தஸ்தையும் சிநேகத்தையும் கொஞ்சமும் மதியாது தமது மனைவிக்குச் சமமாயிருக்கும் கோகிலாம்பாளை அவர் இச்சித்ததற்காக அவரைத் தக்கபடி தண்டிக்க வேண்டுமென்றும், அதற்காக தாம் கோகிலாம்பாளுக்கு ஒரு தந்திரம் கற்பித்திருக்கிறதாகவும், அதாவது அன்றைக்கு — வெங்கிடுபதி கவுண்டரும் மாரப்ப நாயுடுவும் வார்த்தையாடிய தினத்துக்கு—மூன்றும் நாள் தாம் ஊரிலிருக்க மாட்டாரென்றும், அன்றிரவு 11-மணிக்கு கோகிலாம்பாளே வந்து கவுண்டரது சயன அறையில் ஐயங்காரரின் வரவை எதிர் பார்த்திருப்பதாகவும், ஐயங்காரரும் தவறாமல் சரியாய் 11-மணிக்கு அங்கு வரவேண்டுமென்றும், பிறகு அங்கு தான் அவரது இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதில் யாதும் தடையில்லை என்றும், கோகிலாம்பாளைத் தந்திரமாக ஐயங்காரருக்குச் சொல்லும்படியாக ஏற்பாடு செய்திருப்பதாகவும், ஆகையால் அன்றிரவு கோகிலாம்பாளுக்கு பதிலாக மாரப்ப நாயுடு பெண்வேடமணிந்து

கொண்டு தமது சயன அறையில் வந்து இருக்கவேண்டு மென்றும் ஐயங்காரர் வந்து அவளைக் கோகிலாம்பாளென்று கட்டித் தழுவும்போது, அவனும் அவரை நன்றாகக் கட்டிப் பிடித்து அவர் விலா வெலும்பு முறிய இறுக்க வேண்டியது மன்றி, முட்டியும் கொட்டியும் அடித்தும் இடித்தும் இனி எக்காலத்தும் அவர் கோகிலாம்பாளைக் கனவிலும் கருதா திருக்கும்படி நன்றாய் இம்சித்துவிட வேண்டுமென்றும், ஆனால் அவர் உயிருக்குத் தீங்கு செய்யக் கூடாதென்றும், இவ்விஷயங்கள் தமது வேலைக்காரர்களுக்கும் கூடத் தெரி யாமல் சப்தமின்றி நடத்த வேண்டு மென்றும், ஐயங்கார ரும் திருட்டுப் புணர்ச்சிக்கு வருபவராதலால் அவரும் சப்தமிட மாட்டாரென்றும் கூறியதாகவும், அதற்கு மாரப்ப நாயுடு ஒப்புக்கொண்டதாகவும், பிறகு மறுநாள் கோகிலாம பாள் மாரப்ப நாயுடுவை அழைத்து கவுண்டர் அவனுக்குக் கூறிய விஷயங்களெல்லாம் தனக்குத் தெரியு மென்றும், ஆகையால் அக்காரியத்தில் அவன் தனக்குப் பிரத்தியேக மாக ஒரு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்ட தாகவும், அதாவது கவுண்டரின் இஷ்டப்படியே ஐயங்கார ரை இம்சிப்ப தென்ற வியாஜத்தை முன்னிட்டுக்கொண்டே அடியோடு அடியாய் நன்றாய் அடித்து ஐயங்காரரை நெடுக நீட்டி எழுந்திராத நித்திரையில் சேர்த்துவிட வேண்டு மென்றும், அதற்காகத் தான் (1000) ரூபாய் கொடுப்பதாக வும், கவுண்டர் ஐயங்காரரை ஏன் கொன்றாய் என்று கேட் டால், பயத்தாலும் ஆத்திரத்தாலும் ஓடிக் கீழே விழுந்து அடிபட்டு இறந்து போய்விட்டா ரென்று நீ கூறிவிடலா மென்றும், மேலும் பணக்காரர்களுக்குக் கொலை விஷயம்

பிரமாதமல்லவென்றும், அதிலும் ஏழைகளைக் கொலை செய்தல் பணக்காரர்களுக்குக் கொசுவை நசுக்குதலைப் போன்றதென்றும், அவர்கள் எப்படிப்பட்ட குற்றங்களையும் தங்கள் பணப் பெருக்கால் அமுக்கிவிட முடியுமென்றும், ஆதலின் அது விஷயமாய் அவன் பயப்பட வேண்டியதில்லையென்றும் கூறினதாகவும், பிறகு மாரப்ப நாயுடு அவள் இஷ்டப்படி நடக்கச் சம்மதப் பட்டதாகவும், ஆனல் இவ்விஷயங்களை யெல்லாம் மாரப்ப நாயுடு அன்றைய தினமே தன்னிடம் கூறி அவன் காரியங்களுக்குத் தன்னை உடந்தையா யிருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டதாகவும், பின்பு மறுநாள் இரவு மாரப்ப நாயுடு பெண் வேடமணிந்து வெங்கிடுபதி கவுண்டரின் சயன அறைக்குப் போய் அங்குள்ள விளக்கை அணைத்து விட்டுக் கட்டிலின் மேல் சயனித்துக் கொண்டதாகவும், பிறகு கோகிலா குறிப்பிட்ட நேரத்திற்கு ஐயங்காரர் அங்கு வந்து மாரப்ப நாயுடுவைக் கோகிலாம்பாள் என்று கட்டித் தழுவியதாகவும், மற்றும் நாம் 13-ம் அத்தியாயத்தில் கூறியிருக்கிறபடி ஐயங்காரர் அடைந்த பல அவதிகளையும், கடைசியில் ஐயங்காரரை அடித்துக் கீழே தள்ளியபிறகு மாரப்ப நாயுடு தன்னை எழுப்பித் தனது செவியில் மெதுவாக ஐயங்காரரின் கொலை விஷயத்தை எக்காரணத்தைக் கொண்டும் வெளியில் பிரஸ்தாபிக்கக் கூடாதென்றும், ஒரு வேளை அவன் வார்த்தையை அலட்சியித்து இரகசியத்தை வெளிப்படுத்தினல் ஐயங்காரருக்கு நேர்ந்த கதியே தனக்கும் நேருமென்று மாரப்ப நாயுடு தன்னை பயமுறுத்தியதுமன்றி, தன்னிடம் இருந்த சாவியை வாங்கி கேட்டைத் திறந்து ஐயங்கார் சவத்தைப்

பாட்டையில் இழுத்தெறிந்த விஷயங்களையும் கந்தன் தன்னிடம் விபரமாகக் கூறியதாக ஸ்ரீனிவாசன் கூறியதுமன்றி அடியிற்கண்ட விஷயங்களையும் கந்தன் தன்னிடம் கூறியதாக ஸ்ரீனிவாசன் கூறத் தொடங்கினான்.

ஐயங்காரரை அடித் தெறிந்த மறுநாள் காலை மாரப்ப நாயுடு கோகிலாவிடம்சென்று தான் ஐயங்காரரைக்கொன்று விட்டதாகவும், ஆகையால் அவள் முன் செய்த வாக்குத் தத்தப்படி ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் கேட்க, கோகிலாம்பாள் ஐயங்கார் வீட்டிற்கு ஓர் ஆள் அனுப்பிப் பார்த்ததில், அவர் உயிருடன் படுக்கையிலிருப்பதாகத் தெரிந்து, பணத்திற்குப் பிரதியாக கோகிலாம்பாள் மாரப்ப நாயுடுவின் நெற்றியில் நாமமிட்டு விட்டதாகவும், அதனால் இவ்விஷயங்களுக் கெல்லாம் தன்னை ஒற்றுமையாயிருக்கும்படியும், காரிய முடிவில் மாரப்ப நாயுடுவுக்குக் கிடைக்கும் சன்மானத்தில் தனக்கு ஒரு (50) ரூபாய் கொடுப்பதாக அவன் கூறியிருந்ததுவும் அடியோடு தொலைந்த தென்றும் கந்தன் கூறியது மன்றி, அடிபட்டு இறந்த ஐயங்கார் மீண்டும் எப்படிப் பிழைத்தா ரென்ற சந்தேகம் தங்களுக்குதித்து வேறு ஆள் மூலமாய் ஐயங்காரரை விசாரித்துப் பார்த்ததில், அவர் தாம் அப்பெண் பிசாசினால் துரத்தப்பட்டு வேகமாய் ஓடிக கேட்டின் மேல் ஏற, அப்பெண் தமது காலைப் பற்றிக் கீழே இழுத்துத் தள்ளியவரை தமக்கு ஞாபகமிருந்த தென்றும், அதற்கு மேல் நடந்த விஷயம் ஒன்றும் தெரியா தென்றும், பிறகு தமக்கு ஞாபகம் வந்து பார்த்தபோது தாம் பாதையில் படுத்திருப்பதாக உணர்ந்ததாகவும்; தமது தேகமும் ஆடையும் நனைந்

திருந்ததுமன்றி தமது உடல் முழுதும் ஒருவித பாதை யால் பதறியதாகவும், இருப்பினும் மெதுவாக எழுந்து மெள்ள மெள்ளக் கஷ்டத்துடன் வீடு போய்ச் சேர்ந்ததாக வும் கூறினாராம். அதைக் குறித்துத் தாங்கள் யோசித் துப் பார்த்ததில் ஐயங்காரர் தமது வாழ் நாளில் இதுவரை அடைந்திராத பெருந் திகிலையும், மன அதிர்ச்சியையும், உதை சன்மானத்தையும், ஏக காலத்தி லடைந்ததால் அவர் மரண மூர்ச்சை யடைந்திருப்பாரே யன்றி, உண்மையில் இறந்திருக்க மாட்டாரென்றும், அப்படி மூர்ச்சை யடைந் தவர் எவ்வித அலட்டுதலும் சலனமும் இன்றி அமைதி யோடு நெடு நேரம் பாதையில் சயனித்திருந்ததாலும், அன் றிரவு பெய்த மழையினால் அவர் தேகம் நனைந்ததாலும், இரவு நேரம் ஆக ஆக இயற்கையாக வீசும் குளிர் காற் றினாலும் மூர்ச்சை நீங்கி ஐயங்கார் எழுந்திருக்கலா மென்று தங்களுக்குத் தோன்றியதாகவும், தவிர அன்று உதைப் பூஜை பெற்றது முதல் ஐயங்கார் கவுண்டரின் வீட்டிற்கு வராம லிருந்தது தனக்குத் தெரியு மென்றும், ஆனால் கடைசியில் கவுண்டர் கொலை செய்யப்பட்ட அன்றுதான் ஐயங்கார் அங்கு வந்ததாக கேட்டுக் காவலனான திம்மன் கூறியதாகவும், தவிர கவுண்டர் கொலை செய்யப்பட்ட அன்று தான் ஊரிலில்லை யென்றும் கூறினான். அதனால் ஐயங்காரருக்கும் வெங்கிடுபதி கவுண்டருக்கும் இருந்த மனஸ்தாபம் இத்தன்மைத் தென எனக்குத் தெரிந்தது. அதைப் பற்றி யோசித்ததில் விரோதம் மிகவும் சாதாரண மான தென்றும், கொலை செய்யும்படியான அவ்வளவு கோ பத்தை யுண்டாக்கும் குரூரமான விரோதமல்ல வென்றும்

அப்படிக் குரூரமான விரோதமா யிருப்பினும் மிகுந்த வாத தேகியும் மிக்க தளர் வயதுடையவருமான ஐயங்கார் மிகுந்த பலசாலியாகிய வெங்கிடுபதி கவுண்டரைக் கொல்லுதல் சிறிதும் சாத்தியமல்ல வாகையாலும், அவர் கையிலிருந்த இரத்தம் தோய்ந்த கத்தியைத் தேர்ந்த டாக்டரைக்கொண்டு இரசாயனப் பரிசோதனை செய்து பார்த்ததில் அந்தக்கத்தி இதுவரை எந்த மனித தேகத்துள்ளும் நுழையவில்லை யெனத்தெரிந்ததாலும், அவர் கொன்றிருக்க மாட்டாரென எனக்குத்தோன்றியது. ஆகையால் அவரை விட்டு வெங்கிடுபதி கவுண்டரின் மரணத்திற்குப் பிறகு லாபத்தை அடையக் கூடியவர்கள் யார் என்றும், கொடியவிரோதிகள் இன்னும் யாராவது இருக்கலாமோ வென்றும் விசாரித்துப் பார்த்ததில், அச்சமயம் அப்படிப்பட்ட விரோதிகளில்லை யென்றும், வெங்கிடுபதி கவுண்டரின் மரணத்திற்குப் பிறகு லாபத்தை அடையக் கூடியவர்கள் அவர் குமாரனைத் தவிர வேறு ஒருவருமில்லை யென்றும் தெரிய வந்தது. ஆகையால் கனகாசல கவுண்டனைக் குறித்து விசாரித்ததில் அவன் மிக்க டாம்பீக நடக்கை யுள்ளவனென்றும், துஷ்ட சிநேகிதரை யுடையவனென்றும், குதிரைப் பந்தயம், கோழிப் பந்தயம், முதலிய தகாத விஷயங்களில் கனகாசலம் ஏராளமான பொருளைச் சிலவழித் திருப்பதாகவும் தெரிந்தது. ஆகவின் அவ்விஷயமாய்ச் சிறிது யோசித்ததில் அநேகம் பேர் தலையில் கல்லைப் போட்டுச் சம்பாதித்த திரவியத்தைத் தமது குமாரன் ஆற்றில் வாரிக் கொட்டுவதைப் போல அனியாயச் சிலவு செய்வதைக் கண்டும் வெங்கிடுபதி கவுண்டர் தடுக்காமலிருக்க மாட்டாரென்றும், ஆகையால் அவன்,

அவரைத் தெரியாமலே எங்கேயாவது கடன் வாங்கிச் சிலவு செய்திருப்பா னென்றும் நிச்சயித்தேன். ஆதலின் அவன் மேல் எனக்குச் சந்தேக முதித்தது.

இன்ஸ்பெக்டர் :— ஐயா! தயவு செய்து கொஞ்சம் பொறுங்கள். தகப்பனின் அந்திய காலத்திற்குப் பிறகு அவனது சொத்துகள் குமாரனுக்குச் சொந்த மென்பது யாவருமறிந்த விஷயமே, அவ்வாறே வெங்கிடுபதி கவுண் டருக்குப் பிறகு அவரது சொத்துக்களை கனகாசலம் அடை வதில யாதும் ஆச்சரிய மில்லை. மேலும் வெங்கிடுபதி கவுண்டருக்குப் பிறகு கனகாசலம் அடையும் லாபம் எத் தனை வருஷங்களாயினும் கிடைக்கக் கூடியதே யன்றி அவர் சீக்கிரம் இறந்தால் தான் கிடைக்குமென்றும், இன்றேல் கிடையா தெனவும் கூற யாதுங் காரணமில்லை. அப்படி யிருக்க வெங்கிடுபதி கவுண்டரின் மரணத்திற்குப் பிறகு லாபமடையக் கூடியவன் கனகாசல மென்பதைக் கொண்டும் அவன் தனது பால்யாவஸ்தையால் சிறிது பொருள் சிலவு செய்ததைக் குறித்தும் அவன் மேல் சந்தேகிக்க வேண்டிய காரண மென்ன ?

ஸ்ரீனிவாசன் :— ஐயா தாங்கள் கூறியது முற்றும் சரியே. ஆனால் வெங்கிடுபதி கவுண்டரின் சொத்துகள் அவ ருடைய சுயார்ஜிதமே யன்றி பிதுரார்ஜிதமல்ல. ஆகவின் அவர் தமது சொத்துக்களை தனது குமாரனுக்கு வைக்கவே ண்டுமென்று வைத்தால் உண்டு. இன்றேல் அவரிஷ்டப்படி எப்படியேனும் சிலவு செய்யலாம் — யாருக்கு வேண்டு மாயினும் கொடுக்கலாம். மேலும் கனகாசலம் அச்சொத்

துக்களை அடைய வேண்டுமாயின் தன் தகப்பனாரிஷ்டப்படி நடந்து அவருக்குத் திருப்தியை உண்டாக்கினால் அவரின் அந்திய காலத்திற்குப் பிறகு அச்சம்பத்துகள் அவனைச் சேரும். ஆனால் அப்படிக் கிடைக்க எத்தனை வருஷங்கள் செல்லுமோ யார் கண்டார்? கனகாசலத்தின் நடக்கை ஒழுங்கீனம். ஏராளமான சிலவு செய்திருக்கிறான். அத்தகைய தகாத விஷயத்திற்கோ தந்தை பணம் கொடுத்திருக்க மாட்டார். ஆதலின் அவன் அவசியம் கடன் வாங்கியே தான் இருப்பான். நாளானதால் கடன்காரர்கள் பணத்தைக் கொடுக்கும்படி நிர்ப்பந்தித் திருக்கலாம். தவிர தனக்கும் சிலவுக்குப் பணம் வேண்டும், என்ன செய்வது? தகப்பனாரிறந்தால் சொத்துகள் தனக்குச் சேரும். அப்போது கடனும் கட்டலாம், சிலவும் செய்யலாம். தகப்பனார் சீக்கிரம் இறக்க என்ன வழி? ஏதாவதொரு வகையில் கொலை செய்வதுதான். இவ்வளவும் நான் முன்னாடியே யோசித்துத் தான் கனகாசலத்தின் மேல் சந்தேகப் பட்டேன்.

இன்ஸ்பெக்டர்:— சரி மேலே கூறுங்கள்.

ஸ்ரீனிவாசன்:— நான் கனகாசலத்தின் மேல் சந்தேகப்பட்டு அது விஷயமாய் ஆராய்ச்சி செய்ய எத்தனித்திருக்கும் போது ஒரு நாள் தெருவில் ஒரு மலையாளி வாலிபனும் ஒரு பெண்ணும் போய்க் கொண்டிருந்தார்கள். நானும் தற்செயலாய் அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தவன், அவர்கள் வார்த்தையிலும் நடக்கையிலும் சிறிது சந்தேகித்து அவர்களை நன்கு கவனித்தேன். பெண் அவனைச்

சங்கர மேனன் என்றும், அவன் பெண்ணைச் சாசரஞ்சனி யென்றும் அழைத்துச் சம்பாஷித்துக் கொண்டும், அடிக் கடி தெருவில் இப்புறமும் அப்புறமும் பார்த்துக் கொண் டும் சென்றார்கள். நான் அப்போது பிச்சைக்காரன் போல் வேடமணிந்திருந்ததால் அவர்கள் என்னைச் சந்தேகிக்க வில்லை. நான் அவர்களிடம் பிச்சை கேட்கும் பாவனையாய் அருகில் நெருங்கிப் பிச்சை கேட்டுக் கொண்டே நன்றாய்க் கவனித்ததில் அவர்கள் மாறு வேட மணிந்திருக்கிறார்க ளென்று தெரிந்தது. ஆகையால் அவர்களை எப்படியும் யாரென்று கண்டு பிடிக்க வேணுமென்ற நோக்கத்துடன், அவன் கொடுத்த காலணாவைப் பெற்றுக் கொண்டது மன்றி அவர்களைத் தொடர்ந்து போய் அவர்கள் வீட்டையும் அறி ந்து கொண்டேன். பின்பு நான் அடிக்கடி மாறு வேடத் துடன் அங்கு போய். அவர்கள் நடக்கைகளை கவனிக்க ஆரம்பித்தது மன்றி, சங்கரமேனன் வீட்டிலில்லாத போது அப்பெண்ணிடம் தந்திரமாய்ப் பேசி எப்படியாவது அவர் களின் இரகசியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு நாள் அவனில்லாத சமயம் அறிந்து கதவைத் தட்டி சங்கரமேனன் வீட்டில் இருக்கிறாரா? நான் அவருடைய சிநேகன் அவருக்கு ஒரு முக்கியமான கடிதம் கொண்டு வந்திருக்கிறேன். ஆகையால் கொஞ்சம் கதவைத் திறக்க வேண்டுமென்றேன். அதற்கு அந்தத் திருட்டுப் பெண், அப்பெயரையுடைய மனிதர் இவ்வீட்டிலேயே எவரும் இல்லை. என்று கதவைத் திறவாமலே ஒரே அடி யாய் கூறிவிட்டாள். அவள் என் தந்திரத்தில் ஏமாறாத தால் நான் வந்த வழியே திரும்ப நேரிட்டது. ஆயினும்

நான் மறு நாள் மாலை அங்கு சென்று பார்த்ததில் அவ்வீட்டின் கதவு மட்டும் திறந்திருந்தது. ஆனால் உள்ளே யாரும் இல்லை. அவர்கள் எங்கோ ஓடிப் போய் விட்டார்கள். நான் அவர்களைக் குறித்தும் அவர்கள் குடியிருந்த வீடு யாருடையதென்பதைப் பற்றியும், அண்டை வீட்டார்களிடம் விசாரிக்க, அவ்வீடு அந்நகரத்திலுள்ள வேதாசல முதலியாருக்குச் சொந்தமென்றும், முதலியாரிடம் குடி கூலிக்குப் பெற்று சில நாட்களாக அவர்கள் இருந்து வந்தது தங்களுக்குத் தெரியுமென்றும், ஆனால் அவர்கள் எப்போது வீட்டைக் காலி செய்து போனார்களென்ற விஷயம் தங்களுக்குத் தெரியாதென்றும் கூறினார்கள். ஆகையால் நான் அவர்களைப் பின் பற்றுவதை விட்டு கனகாசலத்தைக் குறித்து விசாரிக்க எத்தனித்தேன். இதற்கிடையில் மறு நாட் காலை "சுவர்ணாம்பாள் காணமற் போய் விட்டாள்." என்ற சமாசாரம் கிடைத்தது. நான் உடனே கதிர்வேலு கவுண்டர் வீட்டிற்குச் சென்று அங்கு என் ஆராய்ச்சியை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தேன். பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம் அன்றைய தபாலில் எனக்கோர் கடிதம வந்தது. அதில் ஒரு பிரபு அதிக அபாயத்தில் சிக்கிக் கொண்டிருப்பதாகவும், அது விஷயமாய் யோசனை சொல்ல நான் உடனே புறப்பட்டு வர வேண்டுமென்றும் வரையப்பட்டிருந்தது.

என்று அது முதல் உடனே தானங்குசென்றதும், பிரபுவைப் போன்று வேடமணிந்த மனிதனும் இன்னும் இரண்டு மனிதர்களும் தன்னைக் கட்டித் தள்ளிக் கூடத்தைப்

பிடித்து நசுக்கிக் கொல்ல எத்தனித்ததையும், பிறகு தனது ஆட்கள் வந்து தன்னைத் தப்புவித்ததையும், தான் வீடு வந்து சேர்ந்ததும், பிறகு தனது விரோதிகள் எழுதி யனுப்பிய ஏளனக்கடித விஷயத்தையும், பின்பு ஒருநாள் இரவு 9மணிக்குத் தனது விரோதிகள் தன்னைப் பின் பற்றி வந்ததும், தான் அவர்களை ஏமாற்றியதும் விபரமாகக் கூறி விட்டு,

அதுமுதல் கனகாசல கவுண்டனின் அந்தரங்கங்களை அறியும் படியான வேலையினோடு, இப்போது எனக்குப் புதிதாய் ஏற்பட்ட விரோதிகள் யாரென்றும், அவர்கள் எதற்காக என்னைக் கொல்லப் பிரயத்தினப்பட வேணுமென்றும், தவிர சுவர்ணம்பாளைக் களவாடிக் கொண்டு போனவர்கள் யார் என்பதையும் கண்டு பிடிக்க வேண்டிய வேலைகளு மேற்பட்டது.

ஆயினும், எனது புது விரோதியைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் வேலையை எனது வேலைக்காரர்கள் வசம் ஒப்படைத்து விட்டு நான்; கனகாசலக் கவுண்டனைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தேன்.

என்று அது முதல் தான் ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தனைப் போல வேடமணிந்து இந்நகரத்திலுள்ள ஒவ்வொரு பாங்கிக்கும் சென்று அவர்களது கணக்குகளைப் பரிசோதித்த விஷயத்தை விபரமாகக் கூறி

அப்படிப் பரிசோதித்ததில், ஒவ்வொரு பாங்கிகளிலும் மூவாயிரம் நாலாயிரமாக எல்லா பாங்கிகளிலும் சேர்ந்து

சுமார் முப்பதாயிரம் ரூபாய் வரை கனகாசலத்துக்குக் கட னிருந்தது. தவிர பாங்கிகளிலுள்ள வேலைக்காரர்கள் சில ரை ரகசியமாய் விசாரித்ததில், கனகாசலம் வாங்கிய கடன் களை உடனே வட்டியுடன் திருப்பிக்கொடுத்துவிட வேண்டு மென்றும், இல்லாவிடில் வாரண்டில் பிடித்து அவனை ஜெயிலில் வைப்பதாக பாங்கிக்காரர்கள் கொஞ்ச காலத்துக் குமுன் பயமுறுத்தியதாகவும் தெரிய வந்தது. ஆகையால் எனக்கு அவன் பேரில் ஏற்பட்ட சந்தேகம் பலப்பட்டது. ஆதலின் மீண்டும் நான் அவனைக் குறித்து விசாரித்ததில், அவனும் கோகிலாம்பாளும் வீட்டை விட்டு அடிக்கடி வெ ளிச்செல்வதாகவும், ஒரு வேளை மூன்று நாள் நான்கு நா ளுங்கூட வீட்டிற்குத்திரும்பாமலே இருந்து விடுவதாகவும், அவ்வாறே அவனது வேலைக்காரர்களான குள்ளனும் முனி யனும் கூட கனகாசலத்துடன் அடிக்கடி வெளிச் செல்வ தாகவும் சங்கதி தெரிய வந்தது. நான் கனகாசலமும் கோகிலாம்பாளும் எங்கு செல்லுகிறார்களென்றும், எங்கு தங்குகிறார்களென்றும், அவ்விதமே அவனது வேலைக்காரர் களைப் பற்றியும் அறிய ஆரம்பித்தேன். இதற்கிடையில் ஒரு நாள் நான் தெருவில் போய்க்கொண்டிருக்கும் போது யௌ வனலங்கிர்த சீமாட்டியொருவள் வண்டியினால் தள்ளப்பட் டுக் கீழே கிடந்தாள்.

என்று அது முதல் தான் அவளை வீடு சேர்த்ததும் அங்குள்ளவர்கள் தன்னைக்கட்டி ஒரு வீட்டில் போட்டு நெருப்பு வைத்ததும், கண்ணப்பனால் தான் தப்புவிக்கப் பட்டு வீடு சேர்ந்ததும், அன்று மாலை தன் எதிரிகளிட

மிருந்து இரண்டாந்தடவையாக வந்த ஏளனக் கடிதவிஷயத்தையும் விபரமாகக் கூறிவிட்டு

முதலில் என்னைக் கொல்ல எத்தனித்த ஆசாமிகளே இப்பொழுதும்—இரண்டாம் முறையும்—என்னைக் கொல்ல எத்தனித்திருப்பதாலும், இனியும் கொல்லத் தயாராயிருப்பதாலும், அவர்கள் எனது இருப்பிடத்தையும் ஒருவாறு என்னையும் அறிந்துகொண்டதால் எப்படியும் என்னைக் கொல்லுவதற்கே வழி தேடுவார்களாகையாலும், அவர்களை ஏமாற்ற வேண்டுமென ஒரு யோசனை செய்து நான் சிங்களபுரம் செல்வதாகவும், திரும்பிவரச் சிறிது நாள் செல்லுமென்றும், கண்ணப்பனிடம் கூறிவிட்டு மாலை இரயிலில் சென்றவன், வேறு வேடத்துடன் அன்றிரவே 12-மணி இரயிலில் திரும்பி இங்குவந்து வேறு தெருவில் ஜாகை வைத்துக்கொண்டு கனகாசலத்தின் அந்தரங்கத்தை அறிய முதலில் அவனது வேலைக்காரர்களைப் பின்பற்ற வேணுமென்று யோசித்து, அவர்களைப்பற்றிச் சற்று ஆழ்ந்து விசாரித்ததில், முறையே சுள்ளன் முனியன் என்பது அவர்கள் உண்மைப் பெயரென்றும், மொங்தையன் கட்டையன் என்பது அவர்களது அழைப்புப்பெயரென்றும், அறிந்ததுமன்றி, அவர்களில் ஒருவனுக்கு ஒரு குமாரன் இருந்ததாகவும் அவன் சுமார் பத்து வருஷங்களுக்கு முன் தனது பத்தாவது வயதில் பெற்றோருடன் சச்சரவிட்டுக்கொண்டு ஓடிவிட்டானென்றும் தெரியவந்தது. பிறகு நான் அவனது பெயர் ஜாதி அங்க லக்ஷண முதலியனவும் அவர்கள் குடும்ப விஷயங்களையும் அறிந்துகொண்டு அவனது குமாரனைப்

போல வேடமணிந்து மதுக்கடையில் மொந்தையனைச் சந்தித்தேன்.

என்று அதுமுதல் தான் அவர்கள் வீடு சேர்ந்து வசித்ததும், ஒரு நாள் இரவு இரண்டு மனிதர்களும் ஒரு பெண்ணும் அங்கு வந்து வார்த்தையாடியதும், அவர்கள் வார்த்தையிலிருந்து அவர்களே தன்னைக் கொல்ல எத்தனித்த விரோதிகளென்று தான் அறிந்ததுமன்றி, ஒரு பெண்ணைப் பலவந்தமாகக் கொண்டுவந்து அவர்கள் வைத்திருப்பதாகத் தனக்குத் தோன்றியதென்றும், ஒரு வேளை அவள் காணாமற்போன சுவர்ணும்பாளாயிருக்கக் கூடுமென்று தான் யோசித்ததாகவும், மறு நாள் காலை மொந்தையன் போஜன பதார்த்தங்களை எடுத்துக் கொண்டுபோக எத்தனிக்கையில் அவன் செல்லும் இடங்களிலுள்ள இரகசியங்களை தான் அறிந்து கொள்ளவே அவனிடமிருந்து கூடையைப் பெற்றுக் கொண்டுபோய் அவன் குறிப்பிட்ட விலாசமுள்ள வீட்டிற் சேர்த்ததும், அங்குள்ள ஓர் அறையிலிருந்த பெண்ணைக்கண்டு அவளைச் சுவர்ணும்பாளென்று தான் நிச்சயித்ததாகவும், அப்படி நிச்சயிக்க சுவர்ணும்பாளின் போட்டோவைத் தான் முன்னம் பார்த்திருந்ததே காரணமென்றும், பிறகு மொந்தையனிடம் தந்திரமாகப் பேசி அவர்கள் தலைவன் தங்கியிருக்கும் இடத்தைத் தான் தெரிந்து கொண்டதும் விபரமாகக்கூறி,

பின்பு நான் எனது வேடத்தந்தையாகிய மொந்தையனிடம் பிணங்கில் என்னுடன் வேலை செய்த என் சிநேகிதன் பக்கத்து கிராமத்திலிருப்பதாகவும், அவனை நான் பார்த்து

வருவதாகவும், நான் திரும்பிவரப் பத்து நாள் செல்லு மென்றும் கூறி வெளிப்பட்டு, எனது ஜாகைக்கு வந்து சேர்ந்து ஒரு கூலிக்காரன் போல வேடம் பூண்டு, அவர்கள் தலைவன் தங்கியிருக்கும் வீட்டெதிரில் இங்குமங்கும் நடமாடிய வண்ணம் அவன் எங்கு செல்லுகிறானென்றும் யார் என்றும் அறிய எத்தனப்பட்டேன்.

கதிர்வேலு கவுண்டர் :— ஐயா ! ஒரு சந்தேகம். சுவர்ணாம்பாள் களவாடப்படுவதற்கு முன் நாம் சந்தித்து வார்த்தையாடிய போது " நான் நினைக்கிறபடி இக்கேஸ் நடப்பதாயிருந்தால் இக்கொலையோடு மட்டும் போகாதென்றும் இன்னும் சில குழப்பங்கள் நடந்தே தீருமென்றும்" ஆகவின் சுவர்ணாம்பாளும் நானும் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேணுமென்றும் தாங்கள் எந்த சந்தேகத்தின் பேரில் கூறினீர்கள் ?

ஸ்ரீனிவாசன் :— வெங்கிடுபதி கவுண்டரின் கொலை நடந்த பின் சுமார் 15 நாளுக்குப் பிறகு நான் தங்களைச் சந்தித்து முதன் முதலாக வார்த்தையாடினேன். அதற்குள் சுந்தரராஜ கவுண்டனும், வெட்டியான்களிருவரும், ஐயங்காரரும் கொலை புரிந்தவர்களல்லவென்று எனக்குத் திட்டமாய்த்தெரிந்ததுமன்றி, கனகாசலத்தைக்குறித்து விசாரித்ததில் அவன் மேல் எனக்கு அதிக சந்தேகமுதித்தது. ஆகவின் அத்தகைய தீய குணமுடையவன் தன்னை விவாகம் செய்துகொள்ள மாட்டேனென்று கண்டிப்பாய்க்கூறிய சுவர்ணாம்பாளுக்கு ஒரு வேளை தீங்கு செய்யக் கூடுமென்று

எனக்குத் தோன்றியதால் நான் அவ்வாறு கூறினேன்; என்றான்.

கதிர்வேலு கவுண்டர் :— சரி. மேல் நடந்தவைகளைக் கூறுங்கள்.

ஸ்ரீனிவாசன் :— ஒரு நாள் அவ்வீட்டண்டை நான் உலாவிக் கொண்டிருந்த போது இரண்டு குதிரைகள் பூட்டிய மூடு பெட்டி வண்டியொன்று வந்து அவ்வீட்டெதிரில் நின்றது. நான் வண்டியருகில் சென்று சாரதியை விசாரித்ததில் அவன் நான் மோகூவிருந்த வீட்டைச் சுட்டிக்காட்டி அவ்வீட்டெஜமானுக்காகத் தான் வண்டி கொண்டுவந்திருப்பதாகவும், அவர் கொஞ்சகாலமாக அடிக்கடி தன்னைத்தான் வாடகைக்கு அழைப்பது வழக்கமென்றும் கூறினான். நான் ஆனால் வண்டி எதுவரைக்கும் செல்லுகிறதென்றேன். அதற்கவன் இந்நகரத்திற்கு தெற்கே மூன்று மைல் தூரமுள்ள ஒரு பங்களாவரைக்கும் செல்லுமென்றான். நான் அவனை நோக்கி ஐயா! நீர் கூறிய பங்களாவுக்கு அருகிலேயே நான் வசிக்கும் கிராமமிருப்பதால் தயவு செய்து பங்களாவரை நான் வண்டியிலேறிவர அனுமதிக்க வேண்டுமென்று கூறி அவன் கையில் ஒரு ரூபாயை வைத்தேன். அவன் ரூபாயைக் கண்டதும் மிகவும் சந்தோஷமுடையவனாகி ஒ அதைப்பற்றி ஒன்றும் கஷ்டமில்லை நான் உட்காருமிடத்திலேயே எனக்குப் பின்னால் நீ உட்கார்ந்து கொள்ளலாம்; ஒரு வேளை அவ்வீட்டு மனிதன் உன்னைப்பற்றி விசாரித்தாலும் கூட பயமில்லை, எனது

பெரிய தகப்பன் குமாரன் என்றும் பொழுது போக்குக்காக வந்திருக்கிறனென்றும் கூறிவிடுகிறேன்; என்றான். நான் சந்தோஷத்துடன் வண்டியேறி அவன் கூறியவிடத்தில் உட்கார்ந்துகொண்டேன், சிறிது நேரத்தில் நான் மோரு விருந்த வீட்டிலிருந்து சற்று கறுமை நிறமான பர்மா தேசத்தவனைப் போன்ற சாயலுடைய ஒரு யௌவன வாலிபனும் அழகுக்கோர் பொக்கிஷமாய் விளங்கும் கறுமை நிறம் வாய்ந்த பிடியிடை மடந்தை யொருவளும் வெளி வந்தார்கள், அவர்கள் வனப்பிலும், அமைப்பிலும் ஒரு ஜோடி மாடப்புறாக்கள் போன்று விளங்கினார்கள். அவர்களைக் கண்டதும் சாரதி வண்டியின் பின்புறக் கதவைத் திறந்துவைக்க, அவர்கள் இருவரும் வண்டியிமேலறிக்கொண்டார்கள், சாரதி கதவை மூடிவிட்டு அவனது ஸ்தானத்தி லுட்கார்ந்து குதிரையை நடக்க ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் வண்டியும் முன்கூறிய பங்களாவண்டை சென்று பாதையில் நின்றது. வண்டியிலிருந்தவர்கள் கீழேயிறங்கி வண்டிக்காரனிடம் அதே நாளை மாலை 6—மணிக்கு வண்டியை ஓட்டி வந்து இங்கே நிறுத்திவை என்று எச்சரித்து விட்டு என்னை கவனியாமலே பங்களாவை நோக்கி நடந்து பங்களாவிற்குள் நுழைந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு நானும் கீழேயிறங்கி வண்டிக்காரனைப் பார்த்து ஐயா! எனது இஷ்டத்தை நிறைவேற்றியதைப் பற்றி மிகவும் சந்தோஷிக்கிறேன். நான் இதோ பக்கத்திலிருக்கும் கிராமத்திலுள்ள வீட்டிற்குச் செல்லுகிறேன். நீர் வண்டியை ஓட்டிக்கொண்டு செல்லலாம் என்றேன். அவனும் வண்டியை ஓட்டிக்கொண்டு திரும்பினான். நான் பாதையோர

மிருந்த வேலியைத் தாண்டி அங்குள்ள செடிகளினூடே மறைந்தவண்ணம் பங்களாவருகில் சென்று பதுங்கியிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு பங்களாவிலிருந்து கனகாசல கவுண்டனும் கோகிலாம்பாளும் வெளியே வந்து இரண்டு சைகில் வண்டிகளில் இருவரும் ஏறிக்கொண்டு நகரத்தை நோக்கிச் சென்றார்கள். நான் சிறிதும் எதிர் பாராத சமயத்தில் அங்கு அவர்களைக்காண எனக்கு மிகுந்த ஆச்சர்யமுண்டாகியது, நான், முன்னம் மூடுவண்டியில் வந்த வாலிபனும் பெண்ணும் கனகாசலத்துக்கு உடந்தையாயிருந்து வேலை செய்வோர்களென்றும், அவர்கள் இன்னும் பங்களாவிலேயே தங்கியிருப்பார்களென்றும், அவர்களை மீண்டும் காண வேண்டுமென்றும் எண்ணி நெடு நேரம் அங்கு பதுங்கியிருந்தேன். நான் எவ்வளவு நேரம் பதுங்கியிருந்தும் மூடுபெட்டி வண்டியில் வந்த வாலிபனும் பெண்ணும் திரும்பவும் வெளியே வராமலிருந்ததுமன்றி, அவர்கள் உள்ளேயிருப்பதற்கு அறிகுறியான எவ்வகை யரவமும் கேட்கப் படவில்லை. தவிர அப்பங்களாவைச் சுற்றிலும் நெடுந்தூரம் வரை மனிதர் சஞ்சாரமேயில்லாமலிருந்தது, பங்களாவினுள் எவ்வகையரவமும் இல்லாமலிருக்கவே நான் சந்தேகமுற்றுச் செடிகளில் பதுங்கியவாறே முன் வாயிற் பக்கம் சென்று கதவை நோக்கினேன். கதவு மூடப்பட்டிருந்தது. செடிகளில் மறைந்திருந்த நான் எழுந்து மெதுவாக அடிமேல் அடிவைத்து நடந்து கதவருகில் நெருங்கி மெதுவாகக் கதவைத் தள்ளினேன். அது பூட்டியிருப்பதாகத் தெரிந்தது. மூடு வண்டியில் வந்த வாலிபனையும் பெண்ணையும் ஒரு வேளை வீட்டிற்குள் இருக்கும்படி கூறி

கனகாசலம் கதவைப் பூட்டிக்கொண்டு சென்றிருக்கலாமோ வென்றும், அல்லது மூடுவண்டியில் வந்த வாலிபனும் பெண்ணும் கனகாசலமும் கோகிலாம்பாளுமாகவே இருக்கலாமோ வென்றும் சந்தேகமுதித்தது. ஆகையால் அச்சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்ளும்பொருட்டு கதவைத்திறக்க உத்தேசித்து, என் சட்டைப் பையிலிருந்த மெழுக்கை யெடுத்து, கதவிலிருந்த சாவி போடும் துவாரத்தில் அழுத்தி, ஒரு அடையாளம் எடுத்துக்கொண்டு நகரத்திற்குச் சென்று அவ்வடையாளத்திற்கிணங்க சாவி தயாரித்துக் கொண்டு மீண்டும் திரும்பி பங்களாவிற்கு வந்து, அச்சாவியால் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தேன். உள்ளபடி அங்கு ஒருவருமேயில்லை. நான் அப்பங்களாவிலுள்ள ஒவ்வொரு அறையையும் உற்றுப் பார்த்ததில், ஒருவரும் தென்படவில்லை. ஆனால், ஒரு அறையிலுள்ள மேஜை மேல் வேடமணிவதற்குறிய பொய் சிகை, உடை, ரப்பரால் செய்த மெல்லிய முக மூடி, முதலான சாமான்களும் தோலின் வர்ணத்தை மாற்றக்கூடிய இரஸாயன மருந்துகள் கலந்த பலவித சாயங்களும் வைக்கப்பட்டிருந்தன. அதைக் கண்டதும், கனகாசலமும் கோகிலாம்பாளுமே மாறுவேடமணிந்து வண்டியில் வந்தவர்களென்றும், மாறு வேடமணிவதற்குரிய சாமான்களை அவ்வாறு அலட்சியமாய் எறியப்பட்டிருப்பதிலிருந்து நான் அவர்களின் பயமுறுத்தலால் ஊரை விட்டேயோடிவிட்டேனென்றெண்ணி அவர்கள் அஜாக்கிரதையாய் இருந்திருக்கிறார்களென்றும், தவிர என்னைத் தந்திரமாய் அழைத்துப் போய் கைகால்களைக் கட்டிக் கொல்லப் பிரயத்தனப்பட்ட போது அவர்கள் கூறிய வார்த்தைகளாலும்,

மொந்தையன் வீட்டில் அவர்கள் பேசிக்கொண்ட வார்த்தைகளாலும், வெங்கிடுபதி கவுண்டரைக் கொன்றவர்களும், என்னையும் இரண்டு முறை கொல்லப் பிரயத்தனப் பட்டவர்களும் அவ்விருவரும் அவர்கள் வேலைக்காரர்களுமே யென்றும் எனக்கு ஐயமறத் தெரிந்தது.

ஆயினும், அவர்களைத் தண்டனை யடையச் செய்யப் போதுமான சாக்ஷியங்கள் எனக்குக் கிடைக்கவில்லை, ஆகையால் நான் அது விஷயமாய் யோசித்துக் கொண்டிருக்கையில், மறு விசாரணை தினமும் வந்தது. நான் மிகுந்த மனோ வேதனையுடன் அவர்கள் மாறு வேடமணிந்து தங்கியிருந்த வீட்டிற்கெதிரே உலாவிக்கொண்டிருந்தேன். அப்போது மாறு வேடமணிந்த கனகாசலக் கவுண்டன் மட்டும் வீட்டினின்றும் வெளியில் வந்து வழக்கமாய் ஏறிக்கொண்டு சென்ற வண்டியிலேயே இப்போதும் ஏறிக்கொண்டு சென்றான். நான் அணிந்திருந்த வேடத்தால் அவன் என்னை யறியவில்லை. அங்கு என் உத்தரவிற்கு எதிர் பார்த்தவண்ணம் மாறு வேடத்துடன் திரிந்து கொண்டிருந்த கண்ணப்பனை யழைத்து வண்டியில் செல்லும் மனிதன் எதுவரை செல்லுகிறானெனக் கடைசிவரை அறிந்து, அதையுடனே எனக்குத் தகவல் கொடுக்கும்படி கூறிவிட்டு அங்கேயே இருந்தேன். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு வண்டியில் சென்ற மனிதன் நகரத்திற்குத் தெற்கே மூன்று மைல் தூரத்திலுள்ள பங்களாவண்டை சென்று வண்டியினின்றும் இறங்கி பங்களாவுக்குள் போய்விட்டதாகவும், வண்டி மீண்டும் திரும்பி வந்துவிட்டதாகவும், பிறகு கொஞ்ச நேரம்

சென்று அம்மனிதன் பங்களாவினின்றும் வெளியே வந்து ஏற்கனவே வண்டியுடன் அங்கு தயாராய்க் காத்துக் கொண்டிருந்த தன் மனிதர்களோடு வண்டியிலேறிக் கொண்டு பாதைக்கு வந்ததாகவும், அப்போது பாதையில் நின்றிருந்த தான் அவர்களைக் கவனித்துப் பார்க்க, அவர்கள் கனகாசலமும் அவனது வேலைக்காரரான குள்ளன் முனியன் என்றும் தெரியவந்ததாகவும், பிறகு அவ்வண்டி கோர்ட்டை நோக்கிச் சென்றதாகவும், அவர்கள் பேசிக்கொண்ட வார்த்தைகளிலிருந்து வெங்கிடுபதி கவுண்டரின் கொலைக் கேஸ் விசாரணை நிமித்தம் அவர்கள் கோர்ட்டுக்குச் செல்லுகிறார்களென்று தனக்குத் தோன்றியதாகவும் கண்ணப்பன் வந்து கூறினான். அவர்களெல்லாம் விசாரணையின் பொருட்டுக் கோர்ட்டுக்குப் போயிருக்க, கோகிலாம்பாள் மட்டும் கோர்ட்டுக்குச் செல்லாமல் வீட்டில் தங்கியதின் காரணம் எனக்குப் புலப்படவில்லை. அவள் கோர்ட்டுக்குச் செல்லாமல் தனித்திருக்கும்படியான சந்தர்ப்பம் நேர்ந்ததைக் குறித்து நான் மிகவும் சந்தோஷித்தவனாய் அவ்வீட்டினருகே சென்று கதவைத் தட்டினேன். சிறிது நேரத்தில் "யார் அது" என்று உள்ளேயிருந்து சப்தம் கிளம்பியது. நான் உடனே குரலை மாற்றிக் கொண்டு நான் தான் மொந்தையன் என்றேன். மீண்டும் "கோர்ட்டுக்குச் சென்றவன் இவ்வளவு சீக்கிரத்தில் ஏன் திரும்பிவிட்டாய், விசாரணை முடிந்து விட்டதா?" என்று மெதுவாக உள்ளேயிருந்து சப்தம் கிளம்பியது. நான் இன்னும் விசாரணை முடியவில்லை ஒரு அவசரமான சங்கதியை எஜமான் தங்களிடம் சொல்லிவிட்டு வரும்படி கூறினார்; என்றேன். உடனே கதவு

திறக்கப்பட்டது. நான் திடீரென்று உள்ளே புகுந்து கதவைத் தாளிட்டுவிட்டு அவளை நோக்கினேன். அவள் அப்போதும் கறுத்த பர்மா தேசத்துப் பெண்ணைப் போலவே வேடமணிந்திருந்தாள். அவள் நினைத்தபடி நான் மொரங்கையன் அல்லாதிருத்தலைக் கண்டு அவள் மிகுந்த திகைப்பும் கோபமும் அடைந்தவளாய், ஓ! நீ சுத்த மோசக்காரன். மேலும் சுத்த அயோக்கியன். ஒரே வார்த்தையில் நீ யார் என்பதைச் சீக்கிரம் கூறிவிடு; என்றாள். நான் பெண்ணே அவசரப்படாதே. நாம் பேசவேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன. நாம் இங்கு நின்று வார்த்தைபாடுவதைக் காட்டிலும் கூடத்திற்குச் சென்று வார்த்தையாடுவது நன்று. நான் இவ்வளவும் உனது க்ஷேமத்தை யுத்தேசித்தே கூறுகிறேனேயன்றி வேறொன்றுமில்லை யென்றேன்.

அதற்கவள், உன்னுடைய தந்திரமெல்லாம் என்னிடம் பலியாது. உன்னாலும் உனது பாட்டனாலும் என்னை ஏமாற்ற முடியாது. ஆயினும் நீ கூற உத்தேசித்த வார்த்தைகளையெல்லாம் தாராளமாய்க் கூறலாம் அதற்கு நான் பயப்படப் பட்டவளல்ல. என்று கூறியவண்ணம் கோபத்தோடு கூடத்திற்குச் சென்று அங்குள்ள நாற்காலியிலுட்கார்ந்தாள் நானும் கூடவே சென்று மற்றொரு நாற்காலியிலுட்கார்ந்து கொண்டு, பெண்ணே கவனித்துக் கேள். நீ கோகிலாம்பாளென்பதையும், நீயும் கனகாசலக் கவுண்டனும் உங்கள் வேலைக்காரர்களும் சேர்ந்து கொண்டு, வெங்கிடுபதி கவுண்டரைக் கொன்றதுமன்றி, ஸ்ரீனிவாசனையும் இரண்டு முறை கொல்ல எத்தனித்ததையும், நான் உணர்ந்திருக்கிறேன்.

இன்று விசாரணையிலும் கூடத் தருந்த சாக்ஷியங்களால் நீங்கள் நால்வரும் குற்றவாளிகளெனத் தீர்மானிக்கப்பட்டுப் போயிற்று. அவர்கள் மூவரும் கோர்ட்டிலேயே யிருந்த தால் அப்போதே பிடிக்கப்பட்டுப்போய் விட்டார்கள். நீ அங்கு வராததால் உடனே உன்னைப்பிடித்துக் கொண்டுவர வாரண்டு பிறந்திருக்கிறது, என்று கூறிக்கொண்டே என் சட்டைப் பையிலிருந்த ஒரு வாரண்டை எடுத்துக் காட்டி மிரட்டினேன். அதைக் கண்டு அவள் மிகுந்த திகைப்பும் கலவரமும் அடைந்தாளெனினும், அதை வெளிக் குக் காட்டிக் கொள்ளாமல் சமத்காரமாய் ஓ! அப்படி யொன்றுமில்லை. நீ கூறுவது முற்றும் முழுப்பொய், எல் லாம் வெறுங் கட்டுக் கதைகள். உண்மையில் நாங்கள், நீ சந்தேகித்துக் கூறிய மனிதர்கள் அல்ல. எங்களுக் கும் நீகூறிய கேசுக்கும் எவ்விதமான சம்பந்தமும் ஒற் றுமையும் இல்லை; என்றாள். அதற்கு நான், பெண்ணே உன்னுடைய இந்திரஜால வித்தையெல்லாம் என்னிடம் காட்டவேண்டாம். உன்னுடைய சாகசத்தால் என்னை ஏமாற்ற முடியாது. சுந்தரராஜுலுவையும் வெங்கிடுபதிகவுண் டரையும் ஐயங்காரரையும் ஏமாற்றியதைப் போல என்னை யும் ஏமாற்ற நினைக்க வேண்டாம். வெங்கிடுபதி கவுண்ட ரைக் கொன்றவர்கள் நீங்களே என்று எனக்கு நிச்சய மாகத் தெரியும், தவிர அன்றொரு நாள் நீயும் கனகாசல மும், கட்டையனும், மொந்தையன் வீட்டிற்கு வந்திருந்ததும் சுவர்ணம்பாள் கனகாசலத்தின் இஷ்டத்திற்கிணங்காதிருக் கிறாளென்று பேசிக்கொண்டதையும் மேலும் அவளைப் பட் டினி போட்டு இம்சிக்க வேணுமென்று பேசிக்கொண்டதை

யும், நீ அவளுக்காகப் பரிந்து பேசியதையும், நான் அருகி லிருந்து செவ்வையாய்க் கேட்டிருக்கிறேன். தவிர நீயும் கனகாசலமும் மாறுவேடத்துடன் மூடுபெட்டி வண்டியில் புறப்பட்டு நகரத்திற்குத் தெற்கே மூன்று மைல் தூரமுள்ள பங்களாவுக்குப் போவதும். அங்கே மாறு வேடங்களைக் களைந்துவிட்டு உண்மையான கோகிலாம்பாளாகவும் கனகா சலக் கவுண்டனுகவும் மாறி உங்கள் இல்லங்களுக்குச் செல் லுவதையும், நான் அறியாமலில்லை. ஆகையால் உன்னு டைய சாகச விளையாட்டை என்னிடம் காட்டவேண்டாம். நான் முன்னமே உன்னால் ஏமாற்றப்பட்ட ஸ்ரீனிவாசன் தான். ஆயினும் இனியும் என்னை ஏமாற்ற முடியாது. இப் பவும் நீ முற்றிலும் உண்மையைக் கூறுவதாயிருந்தால் இக்கேசில் உன்னை ஓர் சாக்ஷியாக எடுத்துக் கொண்டு உனக் குத் தண்டனை கிடைக்காமலிருக்கச் செய்கிறேன். இன் றேல் நீ வெங்கிடுபதி கவுண்டரின் கொலைக்கு உடந்தையா யிருந்ததற்காகவும், தவிர என்னைத் தந்திரமாயழைத்துவந்து கைகால்களைக் கட்டி வீட்டிவிட்டு நெருப்புவைத்துக் கொல்ல முயன்றதற்கும், சுந்தரராஜுவுக்கு மதுவைக் குடிப்பாட்டி அவனது பூஸ்திதிகளை முற்றும் நீ கிரயம் எழுதி வாங்கிக் கொண்ட மோசடிக்காகவும், ஐயங்காரரைக் கொல்ல ஏற் பாடு செய்ததற்காகவும் உனக்குப் பூரண தண்டனை கிடைக்கச் செய்ய என்னால் முடியும். என்று ஒவ்வொரு விஷயத்தையும் நேரில் பார்த்தவனைப் போல மிக்க சாகச மாய்க் கூறி விரட்டியதுமன்றி, என் சட்டைப்பையிலிருந்த விலங்கை யெடுத்து அதைச் சல சலவென ஆட்டிக் காண் பித்து பெண்ணே இவ்விலங்கை உன் கைகளுக்கிட்டு உன்

ளைப் பாதசாரியாகவே கோர்ட்டுக்கு அழைத்துக்கொண்டு போகப் போகிறேன்; உன் கைகளை நீட்டென்று கூறிக் கொண்டு அவளிடம் நெருங்கினேன். அவள் மிகுந்த அச்சமும் கலக்கமுமடைந்து அயர்ந்துபோய், மிகவும் சாதுவாய் தணிவான குரலில், ஐயா! தாங்கள் எங்கள் விஷயங்களை இவ்வளவு தூரம் அறிந்திருந்தும் மீண்டும் தங்களை நான் ஏமாற்றப் பார்ப்பது முட்டாள்தனம். எனது தேக அசௌக்கியத்தினிமித்தம் நான் கோர்ட்டுக்குப் போகாமலிருந்தது எனக்கே நன்மையாய் முடிந்தது. இனி தங்களிஷ்டப்படியே முற்றிலும் நான் உண்மையைக் கூறிவிடுகிறேன். கனகாசலமும் அவனது வேலைக்காரர்களும் சேர்ந்தே வெங்கிடுபதி கவுண்டரைக் கொன்றார்களென்பதில் யாதும் சந்தேகமில்லை. ஆனால் இக்கொலையில் நான் சிறிதும் சம்பந்தப்படவில்லை. ஆகையால் தாங்கள் என்னைச் சிறைவாசத்திற்கு ஆளாக்காமல் காப்பாற்றுகிறேனென்று அபயஸ்தம் கொடுக்க வேண்டுமென்றாள். அதற்கு நான் பெண்ணே கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டாம். உனது பாதுகாப்பின் பொருட்டே என்னைக் கொல்ல எத்தனித்த சங்கதிகளைக் கோர்ட்டில் பிரஸ்தாபிப்பதில்லை, நீயும் அதைப்பற்றி ஒன்றும் கூறவேண்டாம். அவ்விதமே சுவர்ணம்பாளைக் களவாடின விஷயத்தைக் கூடக் கோர்ட்டில் பிரஸ்தாபிக்கக் கூடாதென்றிருக்கிறேன். ஏனெனில் வயது வந்த பெண்ணை அவ்வளவு ஜனக் கூட்டங்களுக்கிடையில் அழைத்துப்போய் சாக்ஷியம் கூறும்படி செய்விப்பது அவ்வளவு சிலாக்கியமானதல்ல. மேலும் அவள் சாக்ஷியமில்லாவிடில் ஒருவேளை கேஸ் கெட்டுப்போவதாயிருந்தால் மட்டும் அவ

ளைச் சாக்ஷி கூறவேண்டுவது அவசியம். ஆனால் கேஸின் தற்போதிய நிலைமை அப்படியில்லை. வெங்கிடுபெதி கவுண்டரின் கொலைக் குற்றமே கனகாசலக் கவுண்டனின் கழுத்துக்கும், அவனது வேலைக்காரர்களது கழுத்துக்கும், தூக்குக் கயிறு கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கும் போது சுவர்ணாம்பாளைக் களவாடின குற்றத்தையும், என்னைக் கொல்ல முயன்ற குற்றத்தையும் விவரிப்பது அனாவசியம்; என்று கூறினேன். அவள் உடனே என்னுடைய இஷ்டப்படி உண்மையைக் கூறுவதாக ஒப்புக்கொண்டாள். உடனே நான் அவள் தற்போது தரித்துள்ள மாறுவேடத்தைக் களைந்து விடும்படி கூறினேன். அவள் அவ்வாறே களைந்துவிட்டு உண்மையுருவத்தோடு வந்தாள். பிறகு நான் ஒரு மூடுபெட்டி வண்டியை வாடகைக்கு அமர்த்தி அதில் கோகிலாம்பாளை ஏற்றிக்கொண்டு சுவர்ணாம்பாளை மறைத்து வைத்திருந்த வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து கதவைத் தட்டினேன். உள்ளேயிருந்த கிழவி "யார்" என்றாள். நான் குரலை மாற்றிக்கொண்டு மொரந்தையன் என்றேன். அவள் உடனே கதவைத் திறக்க நான் உள்ளே புகுந்தேன். அவள் என்னைக்கண்டதும் ஓ! நீ சுத்தப் பொய்யன். என்று கூறி மேலே என்னவோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் நான் ஏ கிழவி! சற்று நிதானித்துப் பேசு. கனகாசலக் கவுண்டன் சுவர்ணாம்பாளை மறைத்துவைத்த விஷயத்தில் நீ உடந்தையாயிருந்ததாகவும், அதற்காக உன்னைப் பிடித்துக்கொண்டு வரும்படியும், வாரண்டு பிறந்திருக்கிறது; என்று கூறி என்னிடமிருந்த போலி வாரண்டை எடுத்துக் காட்டி பயமுறுத்தியதுமன்றி, அவள் என் இஷ்டப்படி

நடப்பதாயிருந்தால் அவள் தண்டனையடையாமலிருக்க நான் பார்த்துக்கொள்வதாயும், இல்லாவிடில் அதிகம் தண்டனை கிடைக்கும்படியான ஏற்பாடு செய்வதாயும் கூறினேன். அவள் மிகவும் பயந்து என் இஷ்டப்படி நடப்பதாக ஒப்புக்கொண்டதுமன்றி, கனகாசலமும் அவனது வேலைக்காரர்களும் சேர்ந்தே சுவர்ணம்பாளைக் களவாடிக்கொண்டு வந்தார்களென்றும் கூறினாள். உடனே நான் அவளையும் சுவர்ணம்பாளையும் வண்டியில் ஏற்றுவித்து நானும் ஏறிக்கொண்டு நேராகக் கோர்ட்டுக்கு வந்துசேர்ந்தேன், மற்ற விஷயங்களெல்லாம் ஏற்கெனவே நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; என்று கூறி முடித்தான்.

கதிர்வேலு கவுண்டர்:—ஐயா! தாங்கள் தயவு செய்து மீண்டும் எனக்கேற்பட்ட இரண்டொரு சந்தேகங்களை நிவர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தங்களைக் கட்டித்தள்ளிக் கழுத்தைப்பிடித்து நசுக்கிக் கொல்ல நினைத்த குள்ளன் முனியன் என்ற வேலைக்காரர்களைத் தாங்கள் முன்னமே மரண விசாரணையின்போது அறிந்திருக்கிறபடியால் அவர்களை நீங்கள் சுலபத்தில் இன்னாரென்று அறிந்து கொண்டிருக்கலாமல்லவா?

ஸ்ரீனிவாசன்:— அடே அப்பா! அவ்வளவு சுலபத்தில் இன்னாரென்று அறிந்து கொள்ளும் உருவத்தோடா அப்போது இருந்தார்கள்? நெடுநாள் பழகியவர்களுங்கூட அறிந்துகொள்ளாவிதமாய் முற்றிலும் அன்னிய நாட்டு மனிதர்கள் போலல்லவா காணப்பட்டார்கள். இவ்வளவு சாகசங்களுக்கும் காரணம் அந்தக் கனகாசலக் கவுண்டனே.

அவன் நாடகங்களில் பற்பல வேடங்களணிந்து நடித்த வழக்கத்தாலும் அவன் தனக்குற்ற இரஸாயன சாஸ்திரப் பயிற்சியால், மனிதர்களின் இயற்கையான தேக நிறங்களைப் போலவே சமயத்திற்குத் தகுந்தவாறு தேக நிறங்களை மாற்றிக் கொள்ளக் கூடியதும் இயற்கையான தோலின் வர்ணத்தைப் போல பளபளப்பைக் காட்டக் கூடியதுமான விதமாய் தயாரிக்கப்பட்ட இரஸாயன மருந்துகள் கலந்த சாய வகைகளாலும் சமயத்திற்குத்தகுந்தவாறு வேடமணிந்து நான் கண்டு கொள்ளாவிதம் சாகஸமாய் நடித்ததுமன்றி கோகிலாம்பாளுக்கும் வேலைக்காரர்களுக்குங்கூட அவ்வாறே வேடமணிவித்து நடிக்கும்படி செய்திருக்கிறான்.

கதிர்வேலு கவுண்டர் :—ஆ! என்ன ஆச்சர்யம்! இருந்தாலும் இந்தப் பையன் இவ்வளவு சாமர்த்தியமும் துணிகரமுமான காரியங்களில் இறங்குவானென்று நான் சிறிதும் எண்ணவேயில்லை; என்றார்.

ஸ்ரீனிவாசன் :—ஆம். நானும்கூட முதலில் அப்படித்தான் யோசித்தேன். ஆனல் போகப் போக விஷயங்கள் மாறி விட்டன. மேலும் இதுவரை வேலை செய்த அனேக கேஸுகளில் தோல்வியின் வாசனையே இன்னதென்றறியாத என்னை இரண்டுமுறை பெருந் தோல்வியை யடையச்செய்த அவனுடைய ஒப்பற்ற மூளை வன்மையையும் சாகஸத்தையும் நான் மிகவும் கொண்டாடுகிறேன். அவன் தனது கூரிய அறிவின் வன்மையையும், சாஸ்திரப் பயிற்சியையும் உத்தம வழியில் செலுத்தியிருப்பனேல் இப்பூவுலகிலுள்ள

துப்பறிபவர்களெல்லாம் கொண்டாடும் படியான எவ்வளவோ மேப்பாட்டையும் புகழையும் அடைந்திருப்பான். அதைவிட்டுத் தீயவழியில் செலுத்தியதால் அவனது ஜென்மம் பயனற்றுப் போனதுமன்றி மாறாத அபகீர்த்தியையும் தீராத பாபத்தையும் ஏற்றுக்கொண்டானென்றான்.

கதிர்வேலு கவுண்டர்:—ஐயா! வெங்கிடுபதி கவுண்டரின் கொலைக்கு உடந்தையாயிருந்த குள்ளன் மூனியன் என்ற வேலைக்காரர்கள் இருவரும் நியாயாதிபதியிடம் கொலை விஷயத்தின் உண்மையை மட்டும் கூறிவிட்டு சுவர்ணம்பாளைக் களவாடிய விஷயத்தின் உண்மையை மட்டும் ஏன் கூறாது விட்டு விட்டனர்?

ஸ்ரீனிவாசன்:— வெங்கிடுபதி கவுண்டர் கொலையின் உண்மையான சங்கதிகளை ஏற்கெனவே கோகிலாம்பாள் கூறிவிட்டமையாலும், கனகாசலம் தனது கோழைத்தனத்தால் கோகிலாம்பாளின் வார்த்தைகளை மெய்யென்று நிரூபித்து விட்டதாலும், தாங்கள் இனி எவ்வளவு மறைத்துக் கூறினும் பிரயோசனப்படாமல் போவதுமன்றி பொய் கூறுவதற்காக ஒருவேளை தண்டனை அதிகப்படலாமென்ற பயத்தாலும், நிர்ப்பந்தத்தின்பேரில் உண்மையைக் கூறினார்களேயன்றி கழிவிரக்கத்தாலன்று. அப்படியிருக்க ஒருவரும் பிரஸ்தாபியாத தங்களுடைய வேறொரு குற்றத்தைப் பலவந்தமாகத் தாங்களே எடுத்துக்கூறி தண்டனையை அதிகப்படுத்திக்கொள்ள அவர்கள் அவ்வளவு முட்டாள்களல்ல; என்றான்.

ஸ்ரீனிவாசனது சாமர்த்தியமான நடக்கைகளையும் சாகஸங்களையும் கேட்ட அவர்கள் ஸ்ரீனிவாசனை மிகவும் பூஷித்தும் புகழ்ந்தும் கொண்டாடினர். பிறகு போலீஸ் கமிஷனரும் இன்ஸ்பெக்டரும் கதிர்வேலு கவுண்டரால் மிகவும் உபசரிக்கப்பட்டு அவர்கள் இல்லங்களுக்குச் சென்றனர். அவர்கள் சென்றபிறகு கோகிலாம்பாள், கதிர்வேலு கவுண்டர் முதலியோர்கள் உட்கார்ந்திருந்த கூடத்திற்கு வந்து சுந்தரராஜுலு கவுண்டரைத் தான் முற்றிலும் மோசம் செய்து, அவரைப் பல இன்னல்களுக்கு ஆளாக்கியதாகவும், தான் அவருக்குச் செய்தது மன்னிக்கப்படாத பெருங்குற்றமாயிருப்பினும், தயவு செய்து தன்னை மன்னிக்கும்படியாய் சுந்தரராஜுலு கவுண்டருக்குத் தாங்கள் கூறவேண்டுமென்றும், தன்பேரில் கிரயம் எழுதப்பட்டிருக்கும் சுந்தரராஜுலு கவுண்டரின் பூமி முழுவதையும், சுந்தரராஜுலு கவுண்டருக்கே திரும்பவும் தான் எழுதிக்கொடுத்து விடுவதாகவும், ஆதலின் அதைக் குறித்துத் தன்மேல் எவ்விதமான பிராதுவையாவும் செய்யாது விட்டுத் தன்னை மன்னிப்பதுமன்றி, தனது ஜீவியகாலம்வரை அன்னவஸ்திரத்துக்கு ஏதாவது உதவி செய்யவேண்டுமென்றும், கைகூப்பி நமஸ்கரித்துக் கதிர்வேலு கவுண்டரைக் கேட்டுக் கொண்டாள். உடனே ஸ்ரீனிவாசன் முயற்சியால் சுந்தரராஜுலுவின் பேருக்குக் கோகிலாம்பாளால் கிரயப் பத்திரமொன்று எழுதுவித்து ரிஜிஸ்தரும் செய்து முடிக்கப்பட்டது.

விலைமாதராம் வேசியர்களாகிய சகோதரிகளே! உங்களுக்கும் கூட இவ்விடத்தில் ஒரு நீதி கூறவேண்டிய அவசி

யமேற்பட்டிருக்கிறது. நீங்கள் அதை அங்கீகரிப்பினும் அலட்சியிப்பினும் நமக்கக்கரையில்லை. உத்தம வேசையர்கள் தங்களையடுத்துள்ள அபிமான நாயகரின் அந்தஸ்துக்கும் யோக்கியதைக்கும் வருவாய்க்கும் தகுந்தவாறு தமது ஜீவவாழ்க்கைக்கு அத்தியாவசியமான அன்னவஸ்திராதிகளுக்குப் போதுமான சொற்பதனம் மட்டும் பெற்று, அவனும் கெடாது தானும் கஷ்டமுறாது களிப்போடு கலந்துறவாடுவார்கள். இவ்வித நடக்கையே மிகவும் கண்ணியம். இதுவே உத்தம தாசிகளுக்கேற்ற நியதி. இத்தகைய உத்தம வேசையரத்தினங்கள் பலர் பண்டைக்காலத்திலிருந்ததாகச் சரித்திரவாயிலாக நாம் உணருகிறோம். அவர்களது புகழ்—மேன்மையான குணம்—இன்றும் பரிமளித்து வீசுகின்றது. மேலும் ஒரு வேளை தனது அபிமான நாயகன் காலகதியால் வறுமையாளனாகி வாட, அதனால் தன் ஜீவவாழ்க்கைக்கு வேறு வருவாயின்றிக் கஷ்டம் வந்துற, அக்கஷ்டத்தை நிவர்த்திக்கும் பொருட்டுத் தான் ஒரு அன்னிய நாயகனை அடுத்திருக்க வேண்டியகாலம் நேரிடினும் அக்காலத்தும் தன் ஆதிநாள் நாயகனிடத்துத் தான் கொண்ட அன்பைச் சிறிதும் தவறவிடாது அவனது மனது திருப்தியடைய எவ்வித தந்திரத்தாலாவது மன்மதக்கிரீடையியற்றி அவனை மகிழ்வுறச் செய்வதே உத்தம மறுமாதர்களின் மாண்பு. இவர்களின் மோசம் கலவாத உத்தம ஹிருதயத்தின் உறுதிக்கேற்றபடி கடவுளும் இவர்களைக் காப்பாற்றுவார். இவர்களின் பரிசுத்தமான குணங்களைக் கண்டவர்களும் கேட்டவர்களும் கொண்டாடுவர். இவ்விதமின்றி எட்டியவரைக்கும் கிட்டித்தட்டிப் பறிப்பதே தாசிகளாகிய

தங்களின் குலவழக்கமென்றெண்ணி, தீபாவளிக்காக 200 ரூபாயில் ஒரு சேலை வேண்டுமென்றும், 50 ரூபாயில் ஒரு இரவிக்கை வேண்டுமென்றும், காசுமாலை வேண்டுமென்றும், சிமைக்கமலங்களிழைத்த ஓலை வேண்டுமென்றும், இன்னும் இதுபோன்ற பல ஆவசியகமில்லாத ஆபாச விஷயங்களில் அவனது தனம் அழிந்துபோகும்படி செய்து, கூடிய சீக்கிரத்தில் அவனை பொட்டையடித்துக் குட்டிச் சுவராக்கிக் கோவணத்தோடு குளிர்காயத் துரத்திவிடும் கொடுமைக் குணம் வாய்ந்த கெட்ட தப்பிலித் தாசிகள் தங்கள் தந்திர சாகசத்தாலும் ஏமாற்றுகளாலும், தளுக்குகளாலும், எத்தனை திரவியங்கள் சம்பாதிப்பினும் கடைசியில், ஓர் காலம் நமது கோகிலாம்பாளைப் போலவே "பழைய கருப்பனே கருப்பன்" என்று பலரும் இகழத் தகுந்த ஸ்திதிக்கு வந்து கஷ்டப்படுவார்களென்பதற்கையமில்லை.

---

## 29-வது அத்தியாயம்.

## விவாகம்.

முற்கூறிய அத்தியாயத்தில் கண்ட சம்பவங்கள் நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு கதிர்வேலுக்கவுண்டரது மாளிகையையும் சுந்தரராஜ கவுண்டரது மாளிகையையும் நன்றாக அலங்கரிக்கப்பட்டதுமன்றி, ஆங்காங்கு பந்தல்களிட்டு பந்தலுக்கலங்காரமாக ஏராளமான வாழைகமுகுகளையும் நாட்டி நன்றாயலங்

கரித்தார்கள். அவீர விவாகத்திற்கு வேண்டிய ஏராளமான சாமான்கள் தயாரிக்கப் பட்டு நல்ல சுபவேளையில் சுந்தர ராஜு கவுண்டருக்கும் சுவர்ணும்பாளுக்கும் வெகு சிறப்பாய் விவாகம் நடந்தேறியது. அவ்விவாகத்தில் நமது ஸ்ரீனிவாசனும் ஒரு விருந்தாளியாயிருந்தானென்று நாம் கூறவேண்டுவதில்லை. விவாகம் முடிந்ததும் ஸ்ரீனிவாசனுக்கு 25,000 ரூபாய் நோட்டுகளை ஒரு பொற்றட்டில் தாம்பூலத்துடன் வைத்து அவற்றை ஸ்ரீனிவாசன் அங்கீகரிக்கவேண்டுமென்று கதிர்வேலு கவுண்டரும் சுந்தரராஜு கவுண்டரும் கேட்டுக்கொண்டதின் பேரில், அவற்றை ஸ்ரீனிவாசன் ஏற்றுக்கொண்டான். விவாக தம்பதிகளான சுவர்ணும்பாளும் சுந்தரராஜு கவுண்டரும் மிக்க சந்தோஷகரமாகவே காலங்கழித்தார்களென்று நாம் கூறவேண்டுவதில்லை. சுந்தரராஜு கவுண்டர் தமது பூஸ்திதிகளை முற்றும் பராமரிக்கும் விஷயத்தைக் கதிர்வேலு கவுண்டர் வசமே ஒப்படைத்துவிட்டுத் தான் யாதொரு விசாரமுமற்றவனாய் தத்தை மொழியெனத் தித்திக்கும் மதுரபாஷித மடமயிலாளாகிய சுவர்ணும்பாளுடன் கொஞ்சிக் குலாவிச் சதா இருவரும் இன்ப நீர்ச்சுழலில் அமிழ்ந்து அமிழ்ந்து மிதந்தவர்களாய், ஆனந்த காலக்ஷேபம் செய்து கொண்டிருந்தனர். கதிர்வேலு கவுண்டரும் அவரது பார்யை பத்மாவதியும் தங்களது கஷ்டங்கள் முற்றும் நீங்கப்பெற்று தங்கள் குமார்த்தியும் சுந்தரராஜு கவுண்டரும் சந்தோஷமாய் காலங்கழிப்பதைக் கண்டு உள்ளம் பூரித்தவர்களாய் இருந்தார்கள். கதிர்வேலு கவுண்டர் தமது அச்சாபீஸை அனேக மடங்கு விர்த்தி செய்து ஆனந்தமாகக் காலங்கழித்துவந்தார். கோகி

லாம்பாள், சுந்தரராஜு கவுண்டரால் கொடுக்கப்படும் அன்னவஸ்திராதிகளை அன்புடன் ஏற்று, அவளும் அவளது அன்னையும் யாதொரு கஷ்டமின்றிக் காலம் கழித்து வந்தனர். ஐயங்காரரும் சுந்தரராஜு கவுண்டரை அடைந்து, அவருக்குத் தான் பல இன்னல்களை இயற்றியதாகவும், அதற்குப் பிரதியாகக் கடவுளே தமக்கு அநேக கஷ்டங்களைக் கொடுத்துத் தம்மைத் தக்கபடி தண்டித்ததாகவும், ஆதலின் தம்மை மன்னித்துத் தமது குடும்பத்தைச் சம்ரட்சிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதின் பேரில், சுந்தரராஜு கவுண்டர் ஐயங்காரருக்கு அன்னவஸ்திரத்துக்குத் தேவையான திரவியமளித்தார். அதுமுதல் ஐயங்காரரும் தமது டாபர் மாமாத்தொழிலை விட்டு நாராயணனை ஸ்தோத்தரித்த வண்ணம் நல்வழியில் காலங்கழித்தார். கனகாசலக் கவுண்டனோ தன்னுடைய போக்கிரித் தனத்திற்கும், துஷ்டத்தனத்திற்கும், பொறாமைக் குணத்திற்கும், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ மென்ற மூதோர் வார்த்தையை மறந்து தனது தந்தையைக் கேவலம் ஒரு அற்ப மிருகத்தைப்போல் பாவித்துக் கொலை செய்த கொடூர குணத்திற்கும் ஏற்றவாறு, அவனது ஆவி பதற அவயவங்கள் துடிக்கத் தூக்கிலிட்டாட்டித் தொலைக்கப்பட்டான். வேலைக்காரர்களாகிய குள்ளன் முனியன் என்ற இருவரும் செய்த எஜமான துரோகத்துக்கும், கொலைக்கு உடந்தையாயிருந்த கெட்ட நடக்கைக்குப, தீவாந்தர சிட்சை விதிக்கப்பட்டு அங்குபோய்த் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். கனகாசலத்துக்கு இதுவரை கடன் கொடுத்திருந்த கடன்காரர்கள் யாவரும், தங்கள் தொகைகளுக்கு வட்டியுடன் கோர்ட்டில்

தீர்ப்புப் பெற்று, அவைகளுக்காக வெங்கிடுபதி கவுண்டரின் பூஸ்திதிகளை முற்றும் பங்கிட்டுக் கொண்டார்கள். அக்கிரம வழியில் ஈட்டிய தனம் எத்தனை காலமிருப்பினும் கடைசியில் அவை அக்கிரமச் செலவுகளிலேயே அழிக்கப்பட்டுப் போகுமேயன்றி நற்கருமத்திற்குச் சிறிதும் பயன்படாது; என்பதை யாவரும் இதனால் நன்குணர்ந்துகொள்ளக் கிடக்கிறது. நற்குணங்களும் நற்செய்கைகளும் பரிசுத்தமான உள்ளமும் உடையவர்களான சுவர்ணம்பாளும் சுந்தரராஜுலு கவுண்டரும் முதலில் கஷ்டமுறினும் பின் கடவுளருளால் அவைகள் நீங்கப்பெற்று மிக்க மனோகாத்தோடும், பூரிப்போடும், பெருவகையோடும், பாரில் பலரும் கொண்டாடப் பரந்தாமனின் பாதபத்மங்களைத் தியானித்த வண்ணம் சதா இன்புற்றிருந்தார்கள்.

சுவர்ணம்பாள் என்பதின் முற்பகுதியையும் சுந்தராஜுலு என்பதின் முற்பகுதியையும் சேர்த்து சுவர்ணசுந்தரம் என இந்நூலுக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது.

நண்பர்களின் அன்பு நீடூழி வாழ்க.

சுபம் சுபம் சுபம்.

முற்றிற்று.

# பிரபஞ்ச விலாசம்.

ஏனப்பா இவ்வளவு கஷ்டம் :—

நீ வியாதியால் பாயும் படுக்கையுமாய் கிடக்கும்போது உன் மனைவி உத்தம ஸ்திரீயாய் இருந்தால் உள்ளன்புடன் உபசரிப்பாள். மத்திம ஸ்திரீயாயிருந்தால் உலகத்திற் கஞ்சி சற்று மாறுபட்டொழுகுவள். அதம ஸ்திரீயாயிருந்தால் அவனிறந்தால் நமக்கென்னவென்று அலட்சியமாயிருப்பாள். அவன் சாவுக்கே வழியும் தேடுவாள். பிள்ளைகளுமப்படியே. உத்தம மனைவியும் பிள்ளைகளும் ஆயிரத்துக்கு ஒன்று கிடைப்பது கூட மிகவும் அருமை. இத்தகைய நன்றியற்ற குடும்பத்திற்குத் தானே நீ நாள் தோறும் எருமை மாடு போல் உழைக்கிறாய் ?

தலை விதி :—நீ பிறருக்குப் பலவிதத்தும் உதவி செய்கிறாய். அதனால் அவர்கள் சுகம் அடைகிறார்கள். கடைசியில் நீ அவர்களை வஞ்சித்ததாகவோ ஏமாற்றியதாகவோ உன்மேல் அவதூறு ஏற்படுகிறது. என்ன செய்யலாம்? அது உன் தலைவிதி.

ஆத்திரம் :—சிலர் தங்களை பூஷிப்பும் மரியாதையுமான வார்த்தைகளால் உபசரிக்கப்படவில்லை யென்று—அவ்வாறு கடிதமெழுதப்படவில்லையென்று—மிக்க ஆத்திரப்படுகிறார்கள். தாங்களும் அவ்வாறு மரியாதை வார்த்தை சொல்லியிருந்தால் தானே—கடிதமெழுதியிருந்தால்தானே—அப்படிப்பட்ட மரியாதையை எதிர்பார்க்கலாம்.

ஏற்ற சமயம் :—நீ பெரிய ஆபத்திலகப்பட்டுக்கொண்டு பிறருதவியை நாடும்போது தான் உனது உறவினர்களு

டையவும் சினேகிதர்களுடையவும் உளப்பான்மையை உணர ஏற்ற சமயம். இச்சமயம் உதவாதவர்கள் எப்போதும் உதவார்களென்று எண்ணு.

வரவு மிஞ்சிய செலவு:—மாதவரும்படி—வருஷ வரும்படி—எவ்வளவென்றும். மாதச் செலவு—வருஷ செலவு—நீக்கி மீதி என்னவென்பதையும் ஆழ்ந்து கவனித்துப்பார். வரவுக்கு செலவு அதிகப்பட்டால் உடனே செலவை குறைக்க வழி தேடு. தூங்கினையோ குடியே அடியோடு முழுகிப் போம். ஜாக்கிரதை!

விரோதமே மேலானது:—எவ்விதத்திலாயினும் பொருள் தேடுவதே பிரதானமாகக் கொண்டுள்ள எவருடனும் நீ நெருங்கிப் பழகாதே. மேற்கூறிய எண்ணமுள்ளவன் உன்னுடன் ஒரே பள்ளியில் வாசித்த உயிர் தோழனுயிருப்பினும் கூட, உன்னை ஏமாற்றவோ, வஞ்சிக்கவோ, உன்னுடைய வீட்டிலேயே களவு செய்யவோ, லஞ்சம் வாங்கிக்கொண்டு உன் எதிரிகளிடம் உன்னைக் காட்டிக்கொடுக்கவோ, சமயம் வந்தபோது உன் கழுத்தை அறுக்கவோ, ஒருபோதும் பின்வாங்க மாட்டான். இத்தகைய பணத்திலேயே பெரும் நோக்கம் வைத்துள்ள பரம சண்டாளர்களின் நேசத்தை அறவே ஒழி. அவர்களின் நேசத்தைக் காட்டிலும் விரோதமே மேலானது.

கடன்:—கடனே பெரிய சத்துரு என்று கவனத்தில் வை. பிரதி வருஷமும் தவறாமல் வட்டி செலுத்துவதோடு, அசலையும் கொஞ்சம் கொஞ்சமாக அடைக்க வழிபார். அலட்சியித்து கையை வீசிக்கொண்டு அலங்காரமாய் திரிந்தால் பின் கடனென்னும் சத்துரு உன்னை கரைகாணா துக்க சாகரத்தில் ஆழ்த்தி விடுவான். எச்சரிக்கை!

**வஞ்சக சினேகிதர் :**—உன் நேரில் உனக்கு அனுகூலமாகவும், உன்னை காணாக விடத்து உன் எதிரிகளுக்கு அனுகூலமாகவும் வார்த்தையாடுகிற வஞ்சக சினேகிதனை நீ ஒருபோதும் நம்பாதே. அத்துரோகிகளுக்கு உனது ரகசியங்கள் எட்டாமலிருக்கும்படி ஜாக்கிரதையாக நடந்துகொள். ஆனால் அவர்களைப் போலவே நீயும் உதட்டில் உறவும் நெஞ்சில் பகையுமாக அவர்களிடம் நேசம் வைத்திரு.

**உன் கையே உனக்கு உதவி :**—பிறரால் உன் காரியங்களை அனுகூலப்படுத்திக் கொள்ளலாமென்று நீ எண்ணுகிறாய். அதற்காகவே உன்னால் இயன்ற உதவியையும்கூட அவர்களுக்குச் செய்கிறாய். என்ன செய்தாலும் உன் இஷ்டம்போல் உனது காரியங்கள் பிறரால் ஒழுங்காய் நடைபெற மாட்டாது. உனக்கு சௌகரியமும் பலமும் இருக்கும் வரைதான் உன் காரியங்கள் ஒழுங்காய் நடைபெறும். ஆகவே சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடந்துகொள். உன் கையே உனக்கு உதவி

**எவருக்கும் செய் :**— பிற்காலத்தில் உதவி செய்வார்கள்—ஆதரிப்பார்கள்—என்று நம்பி, எவருக்கும்—உனது பிள்ளைகளுக்கும் கூட—நீ உதவி செய்யாதே. அவ்வாறு நம்பிச் செய்தால் பெரும்பாலும் பின்னால் ஏமாற்றமடைந்து ஏங்கி நிற்பாய். நம்பால் இயன்ற உதவியை பிறருக்குச் செய்ய வேண்டுவதே மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமை என்பதை எண்ணி உன்னாலியன்ற உதவியை எவருக்கும் செய்.

**இதுவும் ஒரு பிழைப்பா :**—திக்கற்ற சிறு குழந்தையாயிருக்கும்போது தேடிப் பாதுகாக்க எவரும் முன் வருகிறதில்லை. ஸ்வதந்திரமாய் வாழும் வயது வந்த காலத்தில் அவன் பொருள்களைக் கொள்ளையிட அவனுக்கு

அதிக லாபகரப்படுத்தும் பாவனையாய் துர்ப் போதனை கள் செய்து அரும் பாடுபட்டு ஆளாக்கியவரின் போஷணையிலிருந்து பிரித்துவிட முயற்சி செய்கின்றனர். இதுவுங்கூட ஒரு பிழைப்பா! ஆளாக்கியவரின் வார்த்தை வாழும் வயதை அடைந்த பின் கசப்பாய் விடுகிறது. போதிப்பவரின் வார்த்தையே மெத்த ருசிகரமாயிருக்கிறது. என் செய்க!

நூதன தாசிகள் :—குல ஸ்திரிகளிற் பலர் தாசிகளைக் காட்டிலும் பன்மடங்கு வாலிபர்களை தாஜாப்படுத்தி தட்டிப் பொருள் பறிக்கின்றனர். இந்நூதன தாசிகள் தோன்றி நாளடைவில் விர்த்தியடைய பண்டைக்கால தாசிகளின் பிழைப்பு பெரும்பாலும் பறந்துபோய் விட்டது.

சீர் திருத்து :—உன் மனைவியின் நடக்கையை முதலிலேயே கவனித்துச் சீர் திருத்து. இன்றேல் பிற் காலத்தில் அவளே உனக்கு எதிரியாகவும், ஒரு சமயம் எமனாகவும்கூடத் தோன்றுவள். நான் சொல்வதைச் சொன்னேன் நீ படுவதைப் படு.

உன்னிடமே இருக்கட்டும் :—உன் மனைவிக்கு சகல சுதந்திரமும் கொடுத்து—குடும்ப மானேஜராயிருந்து அவளிஷ்டம்போல் நடக்க—விட்டு நீ வெறும் சாப்பாட்டுராமனாய் இராதே. தவறினால் பின் கஷ்டமெனும் சமுத்திரத்தில் மூழ்கி விடுவாய். குடும்பத்தைச் சீராய் நடத்தும் உத்தம குணமுள்ள பெண் ஆயிரத்துக்கு ஒன்று கிடைப்பது அருமை. உன் ஆயுள் உள்ளளவும் பெட்டிச்சாவி—குடும்ப எஜமானத்துவம்—உன்னிடமே இருக்கட்டும்.

ஜாக்கிரதை :—மோசம்செய்வதில் முதல் தாம்பூலம் பெற்ற ஒருவன் உன்னிடம் உத்தமன்போல் நடிப்பதெல்லாம், நீ அஜாக்கிரதையாயிருக்கும் சமயம் பார்த்து உன்னை நன்றாய் ஏமாற்றுவதற்கே என்பதை மறந்து விடாதே. ஜாக்கிரதை.

தாமரைச் பல்கலைக்கழக
அவ்வை

# விளம்பரம்,

# ‘ராதை’

## அல்லது

## தைரியமுள்ள கன்னிகை.

நண்பர்களே !

இந்நாவலின் குண விசேஷத்தைக் குறித்து அதிக மாகக் கூறவேண்டுமென்னும் அபிப்பிராயம் எனக்கில்லையாயினும், இதனிற் பொதிந்துள்ள குணங்களிற்சிலவற்றைக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இதனுள், குழந்தைகளுக்குக் கொடுமை செய்யும் மாற்றாந்தாய்களின் மா[illegible] ஆணியும், பொறாமைக்காரர்கள் பிறருக்குத் தாம் வெட்டிய குழியில் தற்செயலாய் தாமே வீழ்ந்து தத்தளிப்பதும் குமாரிடம் கொஞ்சி உறவாடும் பிறர் கடைசியில் மோசம்[illegible] தம் போடும் சிங்காரமும், [illegible] கள் நாசமடைந்த சோகமும், களவுத் தொழிலைக் கைப் பிடித் தொழுகுபவர் கடைசியில் எப்படியும் காவிற்றனை பூண்டு கல்விக் கழகத்திற்குச் செல்வதும், கற்பு நலம், கல்வி பரோபகாரம் முதலிய சற்குணம் நிறைந்த ஸ்திரீ பூமா[illegible] கள் கஷ்டமுறினும் கடைசியில் அற்புதானந்த மடைவதும் மிக்க நவநவமாய்க் கூறப்பட்டிருப்பதுடன், கதையினூ[illegible] ஆங்காங்கு அநேக உலகாநுபவ ஆராய்ச்சிகளும் ஸ்திரீ [illegible] ஷர்களுக்கு அவசியமான பல நீதிகளும், கூறப்பட்டுள். இதிலுள்ள ஒவ்வொரு விஷயமும் ரசம் நிறைந்த கற்கண்டுகள் வாசிக்க மிகு ருசிகரம். தவிர பிரபஞ்ச வி[illegible] மென்னும் 143 குறிப்புகளும் அடங்கியதாய், எளிய ந[illegible] யில் உன்னதமான கடிதத்தில் அச்சிடப்பட்டு ஆசிரியர் த்துடன் தயாராயிருக்கிறது. உடனே அடியிற்கண்ட சத்திற்கு எழுதுங்கள். புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 1 வி. பி. சார்ஜ் வேறு.

**S. P. K. தஞ்சப்ப கவுண்டர்,**
ஹார்மோனியம் மேக்கர் & ரிப்பேரர்,
கள்ளிப்பட்டி போஸ்ட்,
கோபிசெட்டிபாளையம் [illegible]